

மோகினி
கோட்டயம் புஷ்பநாத்
தமிழில் : சிவன்



**கோட்டயம் புஷ்பநாத் :** இவர் தன்னுடைய 12வது வயதிலேயே முதல் சிறுகதையை எழுதினார். தனது 19வது வயதில் பள்ளி ஆசிரியராக வாழ்க்கையை ஆரம்பித்தார். 1991 முதல் முழு நேர எழுத்தாளராக மாறினார். கதை எழுதுவதைத் தவிர விவசாயம் செய்வதும் இவருக்கு பிடித்த பொழுதுபோக்கு. இவர் பள்ளி மாணவராக இருந்த போது, இவருடைய ஆசிரியர் கோவூர் என்பவர், விறுவிறுப்பான துப்பறியும் கதைகளை மாணவர்களுக்குச் சொல்வாராம். இந்தத் தாக்கம்தான் பின்னாளில் இவரை எழுத வைத்தது. இவர் தனது 26வது வயதில் முதல் நாவலான 'சிகப்பு மனிதன்' என்னும் தொடரை 'மனோ ராஜ்யம்' என்ற பத்திரிகையில் எழுத ஆரம்பித்து பெரும் வெற்றி கண்டார். இவர் துப்பறியும் கதைகள், மாந்த்ரீக நாவல்கள் என 350க்கும் மேற்பட்ட நாவல்களை எழுதியுள்ளார். இவற்றில் பல தமிழ், குஜராத்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. இவரது இரண்டு நாவல்கள் திரைப்படமாகவும் வெளி வந்துள்ளன. புகழ்பெற்ற மலையாளப் பத்திரிகைகளிலும் இவரது கதைகள் வெளிவந்து, தற்போது லட்சக் கணக்கான வாசகர் உள்ளங்களில் கோவில் கொண்டிருப்பவர் கோட்டயம் புஷ்பநாத். (முகவரி : கோட்டயம் - 686 041, கேரளா (தொலைபேசி : 0481-567899, 561999).

**சிவன் :** P.B. சிவசுப்ரமண்யம் என்ற சிவன் 22-6-55ல் பிறந்தார். இவர் மதுரை, செங்கை, சென்னை ஆகிய இடங்களில் தன்னுடைய படிப்பைத் தொடர்ந்தவர். 1980-ஆம் ஆண்டு 'பேசும் படம்' பத்திரிகையில் தன்னுடைய வாழ்க்கையைத் துவக்கி, பிறகு ஜெமினி சினிமா, தினசரி, வெற்றி மாலை எனப் பல பத்திரிகைகளில் பணி புரிந்து, தற்போது பிரபல வாரப் பத்திரிகை ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இவர் மலையாளம், ஆங்கிலம் ஆகிய மூல நூல்களிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட கதைகளை தமிழில் மொழி பெயர்த்து, 70 நூல்கள் வரை வெளி வந்துள்ளன.



30233
A666159

# மோகினி



## 1

அன்றும் வழக்கம் போலவே கதகளி நடனப் பயிற்சியை முடித்து திரும்பிக் கொண்டிருந்தான் விஷ்ணுதேவன். நேரம் நள்ளிரவைத் தாண்டி யிருந்தது. அன்றைய வரவிற்கு ஒரு பிரத்தியேகமான மகிழ்ச்சியும் காரணம். அவனுடைய வீட்டிற்குப் போகிற வழியில் தான் ஓமல்லூர் பகவதி கோயில் இருந்தது. அங்கு இன்று திருவிழா.

அன்று, விடியவிடிய காலை ஆறு மணிவரை கதகளி நிகழ்ச்சி ஏற்பாடாகியிருந்தது. அன்றைய கதகளிக் கதை 'கல்யாண சௌகந்திகம்'. வெகு நாளாகக் காண வேண்டுமென்று விரும்பிய கதை! இன்று எப்படியும் உட்கார்ந்து முழுவதுமாகப் பார்த்து விடுவது என்று விஷ்ணுதேவன் தீர்மானித்துக் கொண்டான்.

கிராமத்தின் ஒற்றையடிப்பாதை வழியாகத் தனியாக நடந்து கோயிலின் சுற்றுப்புறத்தை அடைந்தான். ஜன நடமாட்டம் இல்லை. இன்னும் சற்று முன்புறமாக நடந்தபோது, கதகளி மேடையின் பின்புறம் தெரிந்தது. பீமன்தான் மேடையில் இருந்தான். ஆட்டம், சூடு பிடித்திருந்தது.

8 விஷ்ணுதேவன் முன்புறமாக நடந்து, சுற்றுமுற்றும் பார்த்து

விட்டு, சற்றுத் தூரத்தில் பெயர்ந்து விழுந்திருந்த ஒரு கருங்கல் தூண் மீது உட்கார்ந்தான். அங்கிருந்து மேடையின் முன் பகுதி நன்றாகத் தெரிந்தது.

மிகப் பழமையான கோயில் அது. காலம் அந்தக் கோயிலின் சுற்றுப்புற மதில்களையும், சுற்றுப் பிராகாரக் கோயில்களையும் சிதைத்து விட்டிருந்தது. பழைய தீவிரமெல்லாம் குறைந்துபோய் விட்டிருந்ததால், கோயிலைப் புனருத்தாரணம் செய்யக்கூட யாரும் முயலவில்லை.

இப்பொழுது அந்தக் கோயில், சென்னாங்கேரி மனை தானவேதன் நம்பூதிரிப்பாட்டுக் குடும்பத்திற்குச் சொந்தம். அந்த மனையும் இப்பொழுது மிகவும் மோசமான நிலையில்தான் இருந்தது. எனவே, உற்சவம் நடத்தும் பொறுப்பை ஊராரிடமே விட்டிருந்தனர்.

ஒரு காலத்தில் சக்தி உக்கிரமாக ஜொலித்துக் கொண்டிருந்த கோயில் அது. இப்பொழுது பறவைகள்கூட அந்தக் கோயிலைப் பார்த்தால் தூரத்திலேயே வழிமாறிப் பறந்து செல்கின்றன. ஆனால், இப்பொழுதும் அந்தத் தேவியின் முன்பாக வந்து நின்று அணுகி வேண்டுபவர்களை அவள் கைவிடுவதில்லை!

விஷ்ணுதேவன் அங்கிருந்தபடியே சுற்றிவரப் பார்த்தான். ஆட்டம் பார்க்க வந்திருந்த ஆட்கள் மிகவும் குறைவுதான்.

கதகளியின் தீவிர ரசிகர்களான சிலரும், வயதானவர்கள் சிலரும் தென்பட்டனர். சிலர் கவனமாக ஆட்டத்தில் லயித்திருந்தார்கள். வேறு சிலர் வேடம் கட்டி ஆடும் பீமனின் திறமையைப் பற்றி பரஸ்பரம் விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

மேடையிலிருந்து வந்த வெளிச்சம் வெகு தூரம் வரை பாய முடியவில்லை. இருந்தாலும், வலது புறமிருந்த கருவறைக்கு முன்பாக வெளிச்சமும், இருட்டும் கலந்தே தெரிந்தது.

சட்டென்று விஷ்ணுதேவனின் கண்கள் கருவறையின் வாசலிலேயே தங்கிவிட்டன. அங்கு ஏதோ ஒரு விபரீதம் நிகழ்வதாக அவனுக்குத் தோன்றியது. வாசலைச் சுற்றி எண்ணெய் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. எண்ணெய் தீர்ந்துபோனதால் சில



விளக்குகள் கண்சிமிட்டின.

விஷ்ணுதேவன் கண்களைக் கசக்கிக்கொண்டு மறுபடியும் அங்கே பார்த்தான். கனவுதான் காண்கிறோமா என்கிற சந்தேகம் எழ, தன்னுடைய தொடையில் மெல்லியதாகக் கிள்ளிப் பார்த்துக் கொண்டான். கனவில்லை. நிஜம்!

கருவறையின் வலது புறத்தில் பேரழகியாக ஓர் இளம்பெண் நின்றிருந்தாள். அசப்பில் அவள் ஒரு தேவதையாகவே தெரிந்தாள்.

அவள் பார்வை விஷ்ணுவின் மீதே நிலைத்திருந்தது.

எவ்வளவு அழகான கண்கள்! கண்களின் மேற்புறம் வரைந்து வைத்தது போன்ற புருவங்கள், இளஞ்சிவப்பு படர்ந்து நிற்கும் கன்னக்கதுப்புகள், உதடுகள் முத்தமிட வேண்டும் என்ற ஆவேசத்தை ஏற்படுத்தின.

வைடூரியம் பதித்த ஆபரணங்கள் அவளது அழகை மேலும் அதிகப்படுத்தின. அப்படிப்பட்ட ஆபரணங்களைப் பழைய கோவில் சிலைகளில்தான் காணமுடியும். அவளது உடைகள் தங்க இழைகளால் நெய்தது போல் தெரிந்தன. புடவையின் மேற்பகுதியில் மெல்லிய கச்சை அணிந்திருந்தாள்.

ஆடை மறைக்காத அவளது தோள்களின் இருபுறமும் உருண்டு திரண்டு கடைந்தெடுத்ததுபோல் இருந்தன. தாமரைப் பூ இதழ்களின் உட்புறம்போல் வெண்மை கலந்த ஒரு நிறம். கைகள் பளிங்குக் கல்லில் வடித்தெடுத்தது போல்...

'இவள் யார் ?' விஷ்ணுதேவன் யோசித்தான்.

அவனையே கவனித்துக் கொண்டிருந்த அவள், அங்கிருந்து மெதுவாக அவனை நோக்கி நகர்ந்தாள். அவனது பின்புறமாக அவள் நெருங்கி வந்தபோது, தாமரைப் பூவின் வாசனை அவனது மூக்கைத் துளைத்தது.

அந்த மணம் அவனைப் பித்தனாக்கியது. பின்புறம் திரும்பிப் பார்த்தான். அவள், அவனுக்கு மிக அருகில் நின்றிருந்தாள்.

"விஷ்ணு ... விஷ்ணு...!" அவள் சற்றுக் குனிந்து அவன் காதில் கிசுகிசுப்பாக அழைத்தாள்.

விஷ்ணுதேவன் முகத்தைத் திருப்பினான்.

"அருகில் வாருங்களேன்!" என்றாள் தேன் சொட்டும் குரலில்.

அந்த அழைப்பு அவனது இதயத்தை ஊடுருவியது. ஆனாலும், அவன் அப்படியே உட்கார்ந்திருந்தான். தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்தான். யாரும் கவனிக்கவில்லை. எல்லோரது கண்களும் மேடையையே பார்த்துக் கொண்டிருந்தன. சிலரது தலைகள் தாளத்திற்கேற்றவாறு ஆடிக் கொண்டிருந்தன.

"உங்களுக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன்!" அவள் மந்திரம் போல் உச்சரித்தாள்.

விஷ்ணுதேவன் தவித்தான். அவனுடைய வாழ்க்கையில் இதுவரை எந்தப் பெண்ணையும் இவ்வளவு நெருங்கியதில்லை. அவன் எந்தப் பெண்ணிடமாவது பேசியிருந்தால், அது வேலைக்காரி பார்வதியிடம் மட்டும்தான். அவளுக்கு வயது ஐம்பதுக்கு மேல். அவனுடைய அம்மாவின் ஒரே துணையும் பார்வதிதான். வேறு யாரும் அந்தக் குடும்பத்துடன் நிரந்தரமான தொடர்பு கொண்டிருக்கவில்லை!

அபூர்வமாக எப்போதாவது மாமா மகள் இந்து, வீட்டிற்கு வருவாள். கல்லூரியில் படிக்கும் அவள், ஒருபோதும் அந்த வீட்டில் தொடர்ந்து ஒரு மணி நேரத்திற்கு மேல் தங்கியதில்லை. விடுமுறை நாட்களாக இருந்தால், காலையில் வந்து மாலையில் திரும்பி விடுவாள். எனவே, விஷ்ணுதேவனைப் பொறுத்தவரை பெண் என்பவள் ஒரு புரியாத புதிர்!

அதனால்தான் கோயில் பகுதியில் அவனுக்கு மிக அருகில் நெருங்கி நின்றிருந்த பெண்ணுடன் பேசுவதற்குக் கூட அவனால் முடியவில்லை. அவனது தொண்டை உலர்ந்தது.

"வாருங்கள், போகலாம்!" அவள் அவனை இன்னும் நெருங்கி கிறக்கமாகப் பேசினாள்.

அதற்குள் அவன் ஓரளவு சுதாரித்துக்கொண்டு தைரியம் பெற்றவனாக அவளிடம் கேட்டான் :

"யாரென்று தெரியவில்லையே?"



"அங்கு போனபிறகு எல்லாவற்றையும் விவரமாகச் சொல்கிறேன்!"

"எங்கு போனபிறகு?"

"உங்கள் வீட்டுக்குத்தான்!"

"என்னது!... என் வீட்டுக்கா?"

"ஆமாம்!"

"சரிதான்! முன்பின் தெரியாத உன்னை நான் எப்படி என் வீட்டுக்குக் கொண்டுபோவது?"

"என்னை உங்களுக்குத் தெரியும். கொஞ்சம் ஞாபகப்படுத்திப் பாருங்கள்..." அவள் அவனுக்குத் தெரியாமல் தன் வலது கையை உயர்த்தி அவனது தலைக்கு மேலாகப் பிடித்தாள்.

"உங்களுக்கு என்னை நன்றாகவே தெரியும். தெரிகிறதல்லவா? வாருங்கள், போகலாம்..." அவள் மீண்டும் வற்புறுத்தினாள்.

விஷ்ணுதேவன் கனவில் ஆழ்ந்தவன் போல் எழுந்தான். கதகளியைப் பார்க்க வேண்டும் என்கிற ஆசை சுத்தமாக அவனது மனத்தைவிட்டு மறைந்திருந்தது.

"நீங்கள் முன்னால் நடந்து செல்லுங்கள். நான் உங்களுக்குப் பின்னால் வருகிறேன்" - சொல்லியபடி அவனுக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றாள் அவள். அவன் நடக்கத் தொடங்கினான்.

"நீங்கள் கதகளி கற்றுக்கொள்ளச் செல்வதை நான் தினமும் வேடிக்கை பார்ப்பதுண்டு"- பின்னால் நடந்தபடியே பேசினாள்.

"எப்படி? எங்கிருந்து பார்த்தாய்?"

"கோயிலுக்கு முன்னால் ... நான் அந்த நேரம் அங்குதான் இருப்பேன்."

"நான் கதகளி கற்றுக்கொள்ளத்தான் போகிறேனென்று உனக்கெப்படித் தெரிந்தது?"

"எனக்குத் தெரியும்! தினமும் உங்களைப் பார்த்துக் கொண்டிருப்பேன். இன்று கோயிலுக்கு வருவீர்கள் என்றும் யூகித்தேன்."

"எப்படி யூகித்தாய்?"

"கதகளி என்றால் உங்களுக்கு உயிர்."

விஷ்ணுதேவன் நடந்தபடியே கேட்டான்: "இவ்வளவெல்லாம் தெரிந்திருந்தும் நீ யாரென்று இன்னும் சொல்லவில்லையே?"

"அதையெல்லாம் நான் உங்களது வீட்டிற்குச் சென்ற பிறகு சொல்கிறேன் என்றேனே!"

அவனுக்கு மனதில் ஒரு சந்தேகம் எழுந்தது.

'யார் இவள்? எதற்காக என்னைத் தேடி, எனக்காகக் காத்திருந்து, என்னுடன் என் வீட்டிற்கு வருகிறாள்? இதில் ஏதாவது சூழ்ச்சி இருக்குமா? இவள் பெண்தானா? இல்லை மோகினியா? நான் ஏதாவது விபரீதத்தில் சிக்கிக்கொள்ளப் போகிறேனா?' விஷ்ணு தேவன் கலக்கமுற்றான்.

அவன் வீட்டுக் கதவு அந்த நள்ளிரவிலும் 'ஹா' வென்று விரியத் திறந்தே கிடந்தது. அவள் அவனை இப்போது முழுவதுமாக நெருங்கி, "உங்கள் படுக்கை அறை எங்கே இருக்கிறது?" என்று கேட்டாள்.



## 2

தன்னுடைய அறைக்குள் நுழைந்த விஷ்ணுதேவன் நடுங்கத் தொடங்கினான். பயத்தில் அவனது சப்தநாடிகளும் ஒடுங்கின.

"என்ன இது... குழந்தை மாதிரி? தைரியமாக இருங்கள்" - தேவப்ரியா என்கிற அந்த மோகினி அவனுக்கு ஆறுதலளிக்க முயன்றாள்.

பின்பு, கட்டிலிலிருந்து எழுந்து மேஜை மீது இருந்த கூஜாவிலிருந்து ஒரு வெண்கல தம்ளரில் நீரை ஊற்றி, அவனிடம் நீட்டினாள்: "இதைக் குடியுங்கள்!"

விருப்பமின்றி அதை வாங்கி ஒரே மூச்சில் குடித்தான் விஷ்ணு. மூச்சு வாங்கியது.



விஷ்ணுதேவனின் படுக்கை அறை கொஞ்சம் விசாலமானது. மரப்பலகைகளால் எழுப்பப்பட்டிருந்த சுவர்களில் கதகளி நாட்டியத்தின் பலவித முத்திரைகள் படங்களாகத் தொங்கிக் கொண்டிருந்தன. அத்தனையும் விஷ்ணுதேவனே வரைந்த படங்கள். தேவப்ரியா எல்லாவற்றையும் பார்த்தாள். பிறகு கேட்டாள்: "கதகளி நாட்டியம் என்றால் உங்களுக்கு உயிர், இல்லையா?"

"ஆ... மா... ம்..." - திணறியபடியே அவன் பதில் சொன்னான்.

"இனி நான் உங்களிடம் எல்லாவற்றையும் சொல்லப் போகிறேன். பயப்படாமல் இருங்கள். நான் உங்களைத் தொல்லைப் படுத்துவதற்காக வரவில்லை என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள்." படுக்கையில் சரிந்தபோது விலகியிருந்த முந்தானையைச் சரிசெய்து கொண்டாள்.

விஷ்ணு கண்களைக் கைகளால் பொத்திக் கொண்டான்.

"ஏன் நிற்கிறீர்கள்? அந்த நாற்காலியில் உட்காருங்கள்!" - அவள் கூறியதும், அவன் அப்படியே செய்தான்.

"கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள். இந்த இல்லத்தைச் சேர்ந்த மூதாதையரில் ஒருவர் ஒரு மோகினியைக் காதலித்தார். அவளுடன் நீண்ட நாள் வாழ்ந்தார். அதாவது, அவர் அவளுடன் உடலுறவு கொண்டிருந்தார்..."

விஷ்ணுதேவன் கேட்டுக் கொண்டிருந்தான். 'எப்படிப்பட்ட அழகி இவள்!' - அவன் மனம் மீண்டும் மீண்டும் அவளழகை வியந்தது. கடைந்தெடுத்த பளிங்குச் சிலை மாதிரி முழங்காலுக்குக் கீழே துணிகளால் மறைக்கப்படாத கால் பகுதிகள் பளபளத்தன.

"அந்த மோகினி இந்த இல்லத்திற்குப் பல நன்மைகளைச் செய்தாள். அப்போது இந்த வீட்டில் செல்வம் செழித்துக் கொழித்திருந்தது. ஒருநாள் அந்த மனிதர் இறந்து போனார். அவரை எரித்த சிதையிலேயே அந்த மோகினியும் விழுந்து தன்னை மாய்த்துக் கொண்டாள். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இந்த வீடு நலிவடையத் தொடங்கியது..."

விஷ்ணுதேவனின் நெற்றியிலும், கண்களிலும், சுருக்கங்கள் ஏற்பட்டன. இந்தக் கதையை இதற்கு முன்பே வேறு யாரோ சொல்லி

அவன் கேட்டிருக்கிறான். யார் சொன்னது? யோசித்துப் பார்த்தான். பாட்டிதான் சொல்லியிருக்கிறாள்! அப்பாவைப் பெற்ற பாட்டி. அவள் ரொம்பக்காலம் உயிரோடிருந்தாள்.

"நீங்கள் இந்தக் கதையை ஏற்கெனவே கேட்டிருக்கிறீர்கள், இல்லையா?" மோகினி கேட்டாள்.

"ம்..." - அவன் முனகிச் சம்மதித்தான்.

"இப்பொழுது தெரிகிறதா... நான் உங்களைத் தொல்லைப் படுத்த வரவில்லையென்று? உங்களுடன் படுக்கையைப் பகிர்ந்து கொள்ளத்தான் வந்திருக்கிறேன். சீக்கிரமாக வாருங்கள். நேரம் அதிகமாகிவிட்டது. நான் திரும்பிச் செல்வதற்கு இன்னும் கொஞ்ச நேரம்தான் இருக்கிறது!" - பேசியபடியே அவள் எழுந்தாள்.

அவளது மேலாடையும், கச்சையும் தரையில் விழுந்தன. விஷ்ணுதேவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

கோயில் சுவர்களில் கல்விளக்கு ஏந்தியபடி நின்று கொண்டிருக்கும் தேவதைபோல் தெரிந்தாள்.

அவளது மார்புப் பகுதி எப்பொழுதோ ஒருமுறை ஏதோ ஒரு குகையில் பார்த்த பிரமாண்ட சிலையை நினைவூட்டியது.

அவளது நாபி, காமனுடைய பூ அம்பு பாய்ந்ததால் ஏற்பட்ட குழிபோல் தெரிந்தது. அவள் அவனை நெருங்கினாள். அவனது தோள்களில் கைகளைப் பதித்தாள். உடம்பில் ஏதோ பட்டுநூல் பட்டது போல் மென்மையாக இருந்தது.

விஷ்ணுவின் ரத்த நாளங்களில் ஒரு வெப்பப் பிரவாகம் பாய்ந்தது. மனதின் மூலையில், வெண்ணாம்பல் பூவின் இதழ்கள் உரசி உரசி விலகின. ரோமக்கால்கள் நிமிர்ந்தெழுந்தன.

சாவி கொடுத்த பொம்மை போல் விஷ்ணு, அவளுடன் கட்டிலை நெருங்கினான். அவனது பின்தலை தலையணையில் பதிந்தது.

தேவப்ரியாவின் கைவிரல்கள் விஷ்ணுதேவனின் மார்புப் பகுதி ரோமங்களின் ஊடாக இழைந்தன. அவனது உடம்பிலிருந்த உயிரணுக்கள் ஒட்டுமொத்தமாகத் துடித்தன.

அவளது இதழ்கள் அவன் முகத்தை நெருங்கின. அவன் உதடுகளின் மீது, தேன் தடவிய இரண்டு பூவிதழ்கள் பதிந்தன. ஓர்



அழுத்தமான நெடிய முத்தத்தில் அவனுடைய ரத்தத் தமனிகள் சிலிர்த்துப் பாய்ந்தன. அவளது தலைமுடியில் தாழம்பூவின் அடர்ந்த மணம். அந்தப் பரிமளம் அவனுடைய உடம்பில் ஊர்ந்தது.

தேவப்ரியா ஒரு முல்லைக் கொடிபோல் அவன் மீது படர்ந்தாள். அந்தக் கொடியின் மெல்லிய வேர்கள் அவனுடைய எலும்புகளை ஊடுருவித் துளைத்து உட்புகுந்தன. அதுவரை தோன்றாத ஒரு புதிய உணர்வு அவனது மனத்திலும், மூளையிலும் வலுவாகப் பாய்ந்தது. அவன் ஒரு புதிய உலகத்தில் இருந்தான்.

வானகத்துத் தேவதைகள் நடனமிடும் இந்திர சபையின் தாளம், அவனுடைய காதுகளில் அலையடித்தது. வெண்ணிற மேகங்கள் அவன் உடலை உரசியபடி மிதந்தன.

தேவப்ரியாவின் படபடப்பான இதயத்துடிப்பை,தனது நெஞ்சின் நெருக்கத்தால் உணர்ந்தான் விஷ்ணு.

ஒரு நீண்ட கனவிலிருந்து அவன் விழித்து எழுந்தபோது, அவள் கட்டிலின் ஓர் ஓரத்தில் உட்கார்ந்திருந்தாள். ஏனோ இப்பொழுது அவளை ஏறிட்டுப் பார்க்க அவனுக்கு வெட்கமாக இருந்தது!

விஷ்ணுதேவன் அறையை விட்டு வெளியே சென்று சற்று நேரத்தில் திரும்பி வந்தபோதும், அவள் அப்படியேதான் உட்கார்ந் திருந்தாள்.

"நான் வந்ததை யாரிடமும் சொல்ல வேண்டாம். இதை வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் விரும்பினால் இதை விற்கவும் செய்யலாம். இனிமேல் தொடர்ந்து நான் வருவேன்." அவனது உள்ளங்கைக்குள் எதையோ வைத்து மூடிவிட்டு, அவள் எழுந்து வாசலை நோக்கி நடந்தாள். அவன் இயந்திரமாக அவளைப் பின்தொடர்ந்தான்.

வெளிப்புற வாசலைக் கடந்த அவள் இருளில் கலந்து கண்ணிமைப்பதற்குள் மறைந்தாள். அத்தனை சீக்கிரம் அவள் பார்வையிலிருந்து மறைந்தது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. எதையோ இழந்துவிட்டது போல் தோன்றியது.

மீண்டும் வந்து கட்டிலில் உட்கார்ந்தான். படுக்கையைப் பார்த்தான். ஒருவித வெறுமை தோன்றியது. சற்று நேரத்திற்கு முன்புவரை தெரியாதிருந்த ஒருவித ஏகாந்தம் - தனிமை அவனை வேட்டையாடியது.

கட்டிலில் வழக்கம் போல் படுத்த பிறகும் உறக்கம் வரவில்லை. மூடிய கைக்குள் அவள் தந்துவிட்டுப் போன பொருள் என்னவாக இருக்கும் என்று பார்ப்பதற்காக விளக்கை நெருங்கி, கையைத் திறந்து பார்த்தான். அது ஒரு தங்கப் பாக்கு!

'என்ன... தங்கத்தாலான பாக்கா!' - ஒரு விநாடி யோசித்தான்.

இது போன்ற தங்கப் பாக்குக் குலையைப் பற்றி அவன் ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்தான். ஏற்றுமானூர் மகாதேவன் கோயிலில் தங்க ரதத்தில் எழுந்தருளிய கடவுளுக்கு முன்பாக, மன்னன் தரிசனத்திற்கு வந்தபோது இதே போன்ற தங்கப்பாக்குகள் நிறைந்த குலையையும், வாழைக் கூம்புகளையும் பரிசளித்திருந்ததாகக் கேள்விப்பட்டிருந்தான். அந்தப் பரிசுகள் இன்னும் அந்தக் கோயிலில் தான் இருக்க வேண்டும்.

அப்படியானால் இப்படிப்பட்ட திரவியங்கள் தங்கத்திலும் உண்டு என்பது உண்மைதான் போலும். அவளிடமிருந்து தனக்குக் கிடைத்த ஒரு

நினைவுச்சின்னமாக அதை பத்திரமாகக் கையில் வைத்து மூடியபடியே அவன் உறங்கினான்.

விடியற்காலையில் சேவல் கூவியபோது வழக்கம்போல் கண்விழித்தான். பாக்கு அப்பொழுதும் அவன் கையில் இருந்தது. காலைக்கடன், குளியல் எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு காலைப் பலகாரத்திற்காகச் சமையல்கட்டை நெருங்கும்போது வேலைக்காரி பார்வதியும், அவனுடைய அம்மாவும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"என்ன செய்வது பார்வதி... வரவர நிலைமை இந்த அளவிற்கு ஆகிவிட்டது. ஒரு நேரச் சாப்பாட்டிற்குக் கூட வழியில்லாமல் ஆகிவிட்டது! இல்லத்தில் நெல் என்பதே சுத்தமாக இல்லாமல் போய்விட்டது. விஷ்ணு சாப்பிட வந்தால் என்ன கொடுப்பது என்றே தெரியவில்லை!" - அவனது அம்மாவின் குரல்.

"இது எப்படி இருந்த இல்லம்! ஹூம்... இதையெல்லாம் யாரிடம் சொல்வது? நீங்கள் தவறாக நினைக்கவில்லையென்றால், நான் கொஞ்சம் அரிசி கொண்டுவந்து தருகிறேன்" - பார்வதி பதில்



சொல்வதையும் அவன் கேட்டான்.

இருபத்தைந்து வயதான விஷ்ணுதேவன் ஆரோக்கியமான இளைஞன். நல்ல உயரம். அதற்கேற்ற உடம்பு. களை ததும்பும் கம்பீரமான முகம். கதகளி மீதிருந்த ஆர்வத்தால் படிப்பு 'வித்வான்' பட்டத்துடன் நின்றது. இல்லத்தின் நிலை அவனுக்கும் தெரிந்தே இருந்தது. ஆனால், என்ன செய்வது?

இருந்த சொத்துக்களை எல்லாம், அவனுடைய முன்னோர்கள் உடல் சுகத்திற்காகப் பலருக்கும் தானமாக வழங்கிவிட்டிருந்தார்கள். இன்று எல்லாமே சுருங்கி விட்டிருந்தது. இறுதியாக மிஞ்சியது பாசி பிடித்த ஒரு பாம்புக் கோயிலும், ஒன்றரை ஏக்கர் பரப்புள்ள இடமும், அதற்குள் இருந்த பாழடைந்த வீடும்தான். எப்பொழுதோ ஒரு கிறிஸ்தவக் குடும்பத்திற்குக் குத்தகைக்கு விட்டிருந்த வயலிலிருந்து மிகக் கொஞ்சமாக வந்து கொண்டிருந்த நெல் மட்டுமே அந்தக் குடும்பத்தின் வருமானம். அது எத்தனை காலத்திற்கு கட்டியாண்டு வரும்?

பெரும்பாலான நேரங்களில் உதவுவது பரம்பரையாக இந்த இல்லத்தின் காரியஸ்தர்களாக இருந்த சங்குண்ணி நாயரின் குடும்பத்தினர்தான். அவரது மனைவிதான் பார்வதி என்கிற பாறுக்குட்டி!

விஷ்ணுதேவன் அவர்களுடைய பேச்சைத் தொடர்ந்து கேட்க அங்கே இருக்கவில்லை. திரும்பத் திரும்ப இதைக் கேட்பது அவனுக்கு எரிச்சலாக இருந்தது. உடனே அவனது மனத்தில் தேவப்ரியா தந்துவிட்டுச் சென்ற தங்கப்பாக்கு மேலெழுந்தது.

"அம்மா, இதோ வந்துவிடுகிறேன்" - சொல்லியபடியே அவன் படுக்கை அறைக்குள் மறுபடி நுழைந்தான்.

தலையணைக்கு அடியில் வைத்திருந்த தங்கப் பாக்கை எடுத்து மடியில் செருகிக்கொண்டு விஷ்ணு வெளியேறினான். அங்கிருந்து குறைந்தது முக்கால் மைல் நடக்கவேண்டும், கிருஷ்ணவாரியாரின் வீட்டிற்கு.

கொஞ்சம் பசையுள்ள குடும்பம். அந்தச் சுற்று வட்டாரத் திலுள்ளவர்கள் பண உதவிக்காகச் செல்வது அவரிடம்தான்.

உலகத்திலுள்ள எந்தப் பொருளையும் அடகு வைத்து அவரிடம் பணம் பெற்றுக் கொள்ளலாம். அந்த ஊரின் பாங்க் அவர்தான்.

விஷ்ணு அவரது வீட்டை அடைந்தபோது காலைப் பலகாரத்தை ஒரு பிடி பிடித்துவிட்டுத் திண்ணையில் உட்கார்ந்து சாவகாசமாக வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார் கிருஷ்ணவாரியார்.

வெளிவாசலைத் தாண்டி வந்த விஷ்ணுதேவனைப் பார்த்ததும் அவருடைய கண்கள் சுருங்கின. 'ஏதோ உதவி கேட்டு வருகிறான் போலிருக்கிறது' என்றுதான் நினைத்தார். விஷ்ணுதேவனின் வீடான குருக்ஷேத்ரமனையால் பரம்பரை பரம்பரையாக ஆதரிக்கப்பட்டவர்கள்தான் இந்த வாரியாரின் முன்னோர்கள். இந்த வீடு, அவர்களுடைய தோட்டம், வயல் எல்லாமே விஷ்ணுவின் ஏதோ ஒரு முன்னோர் அவர்களுக்குத் தானமாக வழங்கியதுதான்.

"என்ன திருமேனி, (தன்னைவிட உயர்ந்த குலத்தவரை மதிப்புடன் அழைக்கும் வார்த்தை)இவ்வளவு காலையிலேயே வந்திருக்கிறீர்க்ள்?" - வாரியார் கேட்டார்.

"கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது "- விஷ்ணு சொன்னான்.

"இன்னும் பணமா? இது வரையிலுமே கடன் நூற்றைந்து ரூபாய்! பல தவணையாகச் சிறுகச் சிறுக வாங்கியே இப்படிச் சேர்ந்துவிட்டிருக்கிறது. வட்டியைச் சேர்த்தால் இருநூறைத் தாண்டிவிடும்" வேண்டா வெறுப்புடன் பேசினார் வாரியார்.

"கடனாக வேண்டாம். இந்தாருங்கள், இதை வைத்துக் கொண்டு, அதற்கு என்ன தர முடியுமோ அதைக் கொடுங்கள், போதும். அதில் உங்களுக்குத் தரவேண்டியதையும் எடுத்துக் கொள்ளுங்கள்." - தன் மடியிலிருந்த தங்கப்பாக்கை வெளியே எடுத்து அவருடைய வெற்றிலைச் செல்லத்தின் மீது வைத்தான் விஷ்ணு.

"என்ன இது... எங்கிருந்து கிடைத்தது?" - வாரியார் அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். அவரது முகத்தில் சந்தேகம் நிழலாடியது. "கடைசியாகத் திருட்டுத் தொழிலையும் ஆரம்பித்துவிட்டீர்களா?" - வாரியார் மிகவும் அலட்சியமாகக் கேட்டார்.

விஷ்ணு திடுக்கிட்டான்!

"இருந்தாலும் பரவாயில்லை. திருட்டுப் பொருளின் விலையும்



குறைவாகத்தான் இருக்கும்" - சொல்லியபடியே அந்தத் தங்கப்பாக்கை அவரது வெற்றிலைப் பெட்டிக்குள் வைத்தார். அடுத்த கணம் திடுக்கிட்டவராகப் பின்புறம் சாய்ந்தார். வெற்றிலைப் பெட்டியின் மீது ஒரு முரட்டுக் கை படிந்திருந்தது. அந்தக் கையில் அந்தத் தங்கப் பாக்கு இருந்தது!

கிருஷ்ண வாரியாரின் கண்கள் அந்தக் கை வழியாக மேலுயர்ந்து எதிரே நின்ற உருவத்தின் முகத்தில் நிலைத்தன. உடனே அவரது உடம்பு பயத்தால் கிடுகிடுவென நடுங்கத் தொடங்கியது!



## 3

கிருஷ்ணவாரியார் தனக்கு முன்பாக நின்று கொண்டிருந்த பயங்கரமான உருவத்தைப் பார்த்தபடியே இருந்தார்.

அவர் கண்ணுக்கு முன்பாக அவரைப் பயமுறுத்திக் கொண்டிருந்தது, மோகினி தேவப்ரியாவின் உண்மையான வடிவம்தான்.

"என்ன வாரியர்... ஏன் என்னவோ போல் இருக்கிறீர்கள்? என்னை நீங்கள் நம்பவில்லையா?" விஷ்ணு கேட்டான்.

கிருஷ்ணவாரியாரின்... கண்களுக்குத் தெரிந்த எதவும் விஷ்ணுவுக்குத் தெரியவில்லை. மோகினியின் கையும், பயப்படுத்துகிற வடிவமும் வாரியாருக்கு மட்டுமே தெரிந்தது.

"உங்களுக்கு எவ்வளவு தேவை? " வாரியார் மிரட்சியுடன் அவனிடம் கேட்டார்.

"உங்களுக்குத் தரவேண்டியதை எடுத்துக்கொண்டு மீதியுள்ளதைக் கொடுங்கள், போதும்!"

"இப்பொழுது என்னிடம் ரூபாய் பத்தாயிரம்தான் இருக்கிறது. தற்சமயத்திற்கு அது போதுமா?" - வாரியார் கேட்டார்.

விஷ்ணுதேவன் மலைத்துப்போய் நின்றான். இதுவரை நூறு

ரூபாய் நோட்டைக்கூட அவன் மொத்தமாகப் பார்த்ததில்லை. ஆனால், பத்தாயிரம் ரூபாய் இப்பொழுது கையில் கிடைக்கப் போகிறது. அவனால் அந்த நினைப்பையே நம்ப முடியவில்லை!

கிருஷ்ணவாரியார் தங்கத்தின் உண்மையான மதிப்பின்படி பணம் தருவதாகக் கூறியவுடன் தேவப்ரியா அங்கிருந்து மறைந்தாள். அப்பொழுதுதான் அவருக்குச் சற்று நிம்மதி தோன்றியது.

"திருமேனி..... அப்படியே உட்கார்ந்திருங்கள். இதோ பணத்துடன் வந்து விடுகிறேன்." கிருஷ்ணவாரியார் தங்கப் பாக்குடன் வீட்டிற்குள் போனார். மனைவியை ரகசியமாகப் படுக்கை அறைக்கு அழைத்து வந்து காதோடு காதாக அவளிடம் விஷயத்தைக் கூறினார்.

"இது சுத்தத் தங்கம்தான்! இதை அந்தப் பையனிடம் திருப்பித் தரவே வேண்டாம், நாம்!" - வாரியாரின் மனைவி கூறினாள்.

"முழுத் தொகையையும் நம்மால் இப்பொழுது கொடுக்க முடியாதே!" வாரியார் வருத்தப்பட்டார்.

"எவ்வளவு விலை சொல்லியிருக்கிறீர்கள்?"

"குறைந்தது பத்தாயிரமாவது கொடுக்க வேண்டும்."

"அந்தப் பையனுக்கு இந்த அளவு மதிப்புத் தெரியுமா என்ன? நாம் எவ்வளவு கொடுத்தாலும் வாங்கிக்கொண்டு போக மாட்டானா?"

கிருஷ்ணவாரியார் மனத்தில் மோகினியை நினைத்தபடி சொன்னார்: "சரிதான்... நான் கொஞ்ச நாளாவது உயிருடன் இருக்க வேண்டாமா?"

"இப்பொழுது மட்டும் என்ன இந்த திடீர் ஞானோதயம்? இதுவரை உங்களுக்கு இப்படித் தோன்றியதில்லையே!"

தான் பார்த்த காட்சியை மனைவியிடம் விளக்க அவர் விரும்பவில்லை. சொன்னால் அவளும் பயந்து நடுங்கத் தொடங் குவாள். எனவே வேறுவிதமாகக் கூறினார்: "அந்தப் பையனுக்கு வஞ்சகம் செய்ய என் மனம் இடம் தரவில்லை. எதற்காக வீணாக அந்த நம்பூதிரியின் சாபம் நமக்கு ?"

"நீங்கள் அப்படி நினைத்தால் சரி. எல்லாவற்றையும் சலித்துப்



பொறுக்கி எடுத்தால் தாராளமாகப் பத்தாயிரம் இருக்கும். நான் தரத் தயார்."

"முதலில் அதைச் செய்!" - வாரியார் அவசரப்படுத்தினார்.

ஒருவகையாக அங்கங்கே சேகரித்து வைத்திருந்த பணத்தை எடுத்து மொத்தமாக எண்ணினார். பதினோராயிரத்து ஐந்நூறு ரூபாய் தேறியது. விஷ்ணுதேவனுக்கு முன்பாக அதைக் கொண்டு வந்து வைத்தார்.

விஷ்ணுவினால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. தனக்கு முன்புறம் குவித்து வைத்திருந்த பலவகையான நோட்டுக் கற்றைகளைப் பார்த்ததும் பிரமித்துப் போனான்.

"தற்சமயத்திற்கு இதை வைத்துக்கொள்ளுங்கள். பணம் எனக்கு வருவதைக் கணக்கிட்டு அவ்வப்போது உங்கள் வீட்டிலேயே வந்து மீதமுள்ளதைத் தருகிறேன்!"

ஓர் இயந்திரம் மாதிரி எழுந்த விஷ்ணுதேவன் அந்தப் பணத்தைத் தன்னுடைய துண்டில் மூட்டை கட்டிக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினான்.

வழியிலிருந்த மளிகைக் கடையில் ஐந்நூறு ரூபாய்க்கு வீட்டிற்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் வாங்கினான். அதை வீட்டில் சேர்த்துவிடும்படி சொல்லிவிட்டுப் போனான்.

அவன் வீட்டை அடைந்தபோது அமர்க்களமான சமையலின் வாசனை அவனைத் தாக்கி வரவேற்றது.

"இதெல்லாம் ஏது விஷ்ணு?" அம்மா கேட்டாள்.

"எல்லாம் பிறகு சொல்கிறேன் அம்மா!"

வெகு நாட்களுக்குப் பிறகு அந்த இல்லத்தில் வீட்டுப் பண்டங்கள் புழங்கும் சத்தம் வெளியில் கேட்டது. இரவுச் சாப்பாட்டை முடித்துவிட்டு அம்மா சீக்கிரமே படுக்கப்போய் விட்டாள்.

"அம்மா தூங்கி விட்டீர்களா ?" விஷ்ணு கூப்பிட்டான்.

"வெகு நாளைக்குப் பிறகு இன்றுதான் படுத்தவுடன் தூங்கிப் போய்விட்டேன்!"

அம்மாவை நெருங்கிய விஷ்ணு கூறினான்.

"இந்தாருங்கள் இந்தப் பணத்தை எடுத்துப் பத்திரமாக வையுங்கள்!"

தனக்கு முன்னால் அவிழ்த்து வைக்கப்பட்டிருந்த துண்டில் நோட்டுக் கற்றைகளைப் பார்த்ததும் அவளும் மலைத்தே போனாள்.

"இதெல்லாம் உனக்கு எப்படிக் கிடைத்தது விஷ்ணு?"

"நீங்கள் இந்த ரகசியத்தை இப்பொழுது தெரிந்து கொள்ளாமல் இருப்பது நல்லது. போகப் போக நீங்களே புரிந்து கொள்வீர்கள். தயவு செய்து என்னிடம் வேறு எதையும் கேட்காதீர்கள்!" - விஷ்ணு பவ்வியமாகக் கூறினான்.

அம்மா பணத்தை எடுத்துக்கொண்டு நடந்தாள். சற்று நேரத்தில் அவள் பெட்டியை மூடிப் பூட்டும் ஓசை கேட்டது.

மறுநாள் சரஸ்வதி அந்தர்ஜனமும் (விஷ்ணுவின் அம்மா) விஷ்ணுதேவனும் வீட்டின் மோசமான நிலையைப் பற்றிப் பேசினார்கள்.

"இந்த வீட்டைக் கொஞ்சம் சீர்ப்படுத்தினால் நல்லது. நீ என்ன நினைக்கிறாய் விஷ்ணு?"

"அதெல்லாம் உங்களது சௌகரியம். உங்கள் விருப்பப்படி என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்."

அன்றே அம்மா பாறுக்குட்டி மூலமாகக் காரியஸ்தரான ராமன்நாயரை வரவழைத்து வீட்டைச் சீர்ப்படுத்தும் முழுப் பொறுப்பையும் அவரிடம் ஒப்படைத்தாள்.

ஒருவாரத்தில் குருக்ஷேத்ர மனை புது வடிவம் பெற்றது. மரச்சுவர்களில் வார்னீஷ் பூசப்பட்டது. பித்தளைக் குமிழ்கள், தாழ்ப்பாள்கள் எல்லாம் தங்கம் போல் பளபளப்பாக்கப்பட்டு, வீடு ஜொலித்தது.

திடுமென்று அந்த இல்லத்திற்கு ஏற்பட்ட அதிர்ஷ்டத்தைக் குறித்து ராமன் நாயர் வாய் ஓயாமல் எல்லோரிடமும் பேசினார். விரைவிலேயே இந்த விஷயம் ஊரெல்லாம் பரவியது. ஊரார் பலவிதமாகப் பேசிக் கொண்டார்கள்.

"அதிர்ஷ்டமிருந்தவனுக்குக் கிடைத்திருக்கிறது. அதுதான் விஷயம்."

"அப்படியென்றால்..."



"புதையல் ஏதாவது கிடைத்திருக்கும். ரொம்பப் பழமையான வீடல்லவா?"

"இருக்கலாம்."

"என்ன இருந்தாலும் இளைய திருமேனி அதிர்ஷ்டக்காரன் தான்."

"விஷ்ணு, பணமெல்லாம் தீர்ந்து விட்டது. அந்த சுற்றுமதில் சுவரையும் சரி செய்திருக்கலாம்." - சரஸ்வதி அந்தர்ஜனத்தின் ஆசை, வார்த்தைகளாக வெளிப்பட்டன.

விஷ்ணு அதற்கு பதில் எதுவும் கூறவில்லை.

அன்று பௌர்ணமி நாள். ஒரு தங்கத் தகடு போல் நிலவு, கிராமத்தின் கிழக்குப் பகுதி மலையிலிருந்து மேலெழும்பியது. அந்தப் பகுதி முழுவதும் நிலவொளியால் நனைந்தது. குன்றின் சரிவுகளில் மகரந்தத்தைத் தூவியதுபோல் நிலவொளி படர்ந்தது.

தனியாக நின்றிருந்த மரங்கள் கருமையான நிழற்படம் போல் அசைவற்றிருந்தன. மெல்லிய தென்றல் மேற்குப் புறமிருந்து வீசியது. இல்லத்தின் வெளிவாசலுக்கு எதிர்ப்புறம் சற்றுத் தள்ளி, படர்ந்து பந்தல் போல் நின்றிருந்த ஆலமரத்தின் இலைகள் ரகசியமாக முணுமுணுத்தன. அமைதியை அது மட்டுமே சிதைத்துக் கொண்டிருந்தன.

அம்மா தூங்கிவிட்டிருந்தாள். சுற்றுப்புறமே அமைதியாக இருந்தது. காரியஸ்தர் ராமன்நாயரின் மனைவி, பாறுக்குட்டியின் அம்மா - விஷ்ணுவின் அம்மாவிற்குத் துணையாக இல்லத்தில்தான் படுத்துக் கொண்டிருந்தாள். அவளும் நல்ல தூக்கத்தில் ஆழ்ந்து விட்டிருந்தாள்.

அம்மா கூறிய வார்த்தைகளை நினைத்தபடி ஆகாயத்தையே பார்த்துக்கொண்டு விஷ்ணுதேவன் திண்ணையில் உட்கார்ந்திருந்தான். நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது.

வெளிப்புற வாசலைக் கடந்து ஓர் உருவம் உள்ளே நுழைந்தது. அவனை நெருங்கியது.

"என்னைப் ப்ற்றியா நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" - நெருங்கி வந்து கேட்டபோதுதான் அவனால் அடையாளம் தெரிந்து கொள்ள முடிந்தது.

தேவப்ரியா!

“ஏன் உங்களுக்கு என் நினைவு வரவில்லை?” அவள் திரும்பவும் கேட்டாள்.

“நான் உன்னைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். உன்னை நினைக்காமல் இருக்க முடியுமா?” அவன் திருப்பிக் கேட்டான்.

அவள், அவனது பாதத்திற்கு அருகில் கீழே உட்கார்ந்தாள். அவனது இரு முழங்கால்களிலும் கைகளை ஊன்றிக்கொண்டு அவனது முகத்தையே உற்றுக் கவனித்தாள்.

“நான் எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருப்பேன். ஆனால், என்னால் நினைத்தபோதெல்லாம் வரமுடியாதே. நான் துவாரபாலிகையல்லவா?” - ஒரு குழந்தை மாதிரி அவனது கண்களைப் பார்த்தபடியே பேசினாள் அவள்.

“இன்று மட்டும் எப்படி வர முடிந்தது?” விஷ்ணு அவளது தலைமுடியை வருடியபடி கேட்டான்.

“இன்று பௌர்ணமி அல்லவா? இயற்கையே மகிழ்ந்திருக்கும் நாள். அதனால்தான்!”

“அப்படியானால் தேவிக்குத் தெரியாமலா வந்திருக்கிறாய்?”

“தேவிக்குத் தெரியும். அவரது சம்மதத்துடன்தான் வந்திருக்கிறேன்.”

குளிர்ந்த காற்று வீசியது. தாமரைப் பூவின் வாசனை அவளிடமிருந்து புறப்பட்டு அவனைத் தழுவியது. அவன் அவளது முகத்தைத் தாங்கி உயர்த்தினான். ஒரு பூ மலர்ந்திருப்பதைப் போல் அவளுடைய முகம் அவனது கைகளுக்குள் தெரிந்தது.

“உண்மையைச் சொல்லட்டுமா? உன்னை இப்பொழுதுதான் சரியாகப் பார்க்கிறேன். நீ எப்படிப்பட்ட அழகி தெரியுமா?” விஷ்ணு சொன்னான்.

“நீங்கள் கூடத்தான் ஒரு கந்தர்வனைப் போல் இருக்கிறீர்கள்?” - அவள் எழுந்து அவனுக்கு அருகில் அமர்ந்தாள். அவனது தோள்மீது கை வைத்து, தன் முகத்தை அவனுடைய முகத்தை நோக்கி நெருக்கினாள்.

அவர்களுடைய உதடுகள் ஒன்று சேர்ந்தன. ஒரு நீண்ட முத்தத்தில்



பூமியையும், ஆகாயத்தையும் மறந்து அவர்கள் ஒன்றிப் போனார்கள்.

“வீட்டுக்குள் போகலாம் வா!” விஷ்ணு அழைத்தான். அவள் எழுந்தாள். நடந்தபோது அவளது கையிலிருந்த வளையல்களும், கால் சிலம்புகளும் குலுங்கின. அந்தக் குலுக்கல் மரச் சுவர்களில் சன்னமாக மோதிப் பிரதிபலித்தது.

அறைக்குள் வந்தவுடன் கட்டிலில் ஏறிப் படுத்துக் கொண்டாள்.

“நடந்து வந்ததால் களைப்புத் தெரிகிறதா?”

“ம்... இருக்காதா...? எவ்வளவு தூரம்... நடந்து வர வேண்டாமா?” - வளையோசை போல் இருந்தது அந்தக் குரல். அவள் சிரித்தாள்.

“ஏன் சிரிக்கிறாய்?” - கேட்டபடி விஷ்ணு அவளது சிவந்த கன்னக் கதுப்புகளில் சுண்டு விரலால் கோலம் போட்டான்.

“ஒன்றுமில்லை!” என்றபடி அவள், அவனுடைய நெற்றியில் விழுந்து கிடந்த தலைமுடியை விரலால் விலக்கினாள்.

“நான் எதற்காக இப்படி அவசர அவசரமாக வந்திருக்கிறேன் தெரியுமா?”

“தெரியுமே!” என்றவாறு அவன் அவளை இறுக்கி அணைத்தான்.

விஷ்ணுதேவனின் உடம்பில், அவளது உடம்பு வியர்வையின் பரிமளம் படிந்தது.

“ஏதோ ஒரு ஜென்மத்தில் நாம் ஒன்றாகவே வாழ்ந்திருந்தோம் என்றே எனக்குத் தோன்றுகிறது!” - அவள் பேசினாள்.

“அது எப்படி முடியும்?”

“தேவர்களும், மோகினிகளும் மனிதர்களாகப் பிறப்பெடுப்பதுண்டு. ஜன்மங்கள் மாறி மாறி வரலாம்.”

“நான் ஒரு கேள்வி கேட்கலாமா? இதற்கு முன் நீ யாரையும் விரும்பியதில்லையா?”

“இல்லை. ஒருபோதும் இல்லை! எத்தனையோ காலமாக நான் அங்குதான் இருக்கிறேன். லட்சக்கணக்கானவர்கள் தேவியை வணங்குவதற்காக வந்து போகிறார்கள். ஏனோ இதுவரை அவர்களில் யாரையுமே எனக்குப் பிடிக்கவில்லை.”

“என்னை மட்டும் பிடித்ததற்கு என்ன காரணம்?”

"நட்சத்திரத்தால் நமக்குப் பொருத்தமுண்டு. இது தவிர, நமக்குள் பதினெட்டுப் பொருத்தங்கள் பொருந்தி உள்ளன. நம் இருவருக்கும் இடையே உள்ள இந்தப் பொருத்தம் வேறு யாருக்கும் நிச்சயமாக இருக்காது."

"அதனால்தான் இவ்வளவு நிறைவு தோன்றுகிறதா."

"ஆமாம்... நிச்சயமாக! நான் தந்துவிட்டுச் சென்ற பாக்கு எங்கே?" - அவள் கேட்டாள்.

"நான் அதை வாரியாரிடம் விற்று விட்டேன்."

"எவ்வளவு பணம் கிடைத்தது?"

"பதினோராயிரத்து ஐந்நூறு ரூபாய்!"

"அந்தப் பணம் உங்களுக்குப் போதாது என்று நினைக்கிறேன்."

"வீட்டையே புதியதாக மாற்றிவிட்டேன்."

"இப்பொழுதுதான் நன்றாக உள்ளது. இருந்தாலும் இதெல்லாம் போதாது. இன்னும் நிறைய மாற்றமடைய வேண்டும். இந்தத் தடவை நான் உங்களுக்கு வேறு ஒரு பரிசு தருகிறேன்." - தேவப்ரியா தன்னுடைய வலது காலின் தண்டையைக் கழற்றி விஷ்ணுதேவனின் கையில் கொடுத்தாள்.

அவன் அதை வாங்கினான்.

"இது சொக்கத் தங்கம். விலை மதிப்பிட முடியாதது" - அவள் கூறினாள்.

"இதை எனக்குத் தந்துவிட்டால் இந்தக் கால்களின் அழகே போய் விட்டது போல் இருக்குமே!"

"ஏன், இது இல்லாவிட்டால் அழகாக இல்லையா?"

விஷ்ணு அவளது கணுக்காலில் கை விரல்களை அளைய விட்டான்.

அச்சமயம், சேவல் கூவியது. தேவப்ரியா திடுக்கிட்டு எழுந்தாள்.

"நான் புறப்படுகிறேன்" என்று அவசரமாக நடந்து வாசலைக் கடந்தாள்.

குருக்ஷேத்ர மனையின் தோற்றமே அடியோடு மாறி விட்டதைக் கண்டு கிராமத்திலிருந்தவர்கள் ஆச்சரியத்தில் வாய் பிளந்தார்கள். யாருக்கும் விஷயம் பிடிபடவில்லை.



இப்படிப்பட்ட சூழலில், ஒருநாள் கோயில் பூசாரி வாசுதேவன் திருமேனி நள்ளிரவில் எதேச்சையாகக் கோயிலுக்கு வந்தார்.

கோயில் வாசலை அடைந்த அவர் கருவறையைப் பார்த்துத் திகைத்தே போனார்!



## 4

வாசுதேவன் நம்பூதிரி கண்களைக் கசக்கிக்கொண்டு, மீண்டும் விழித்துப் பார்த்தார்.

"என்ன அதிசயம்!" என்று தனக்குத்தானே முனகிக் கொண்டார். அப்படியும் சந்தேகம் தீராதவராக மீண்டும் ஒரு தடவை அதைத் தடவிப் பார்த்தார். "இல்லை சுத்தமாகவே காணவில்லை!" - அவரது வார்த்தைக்கு அழுத்தம் கூடியிருந்தது.

தேவி பகவதிக்குக் காவலாக வலப்புறம் நின்றுகொண்டிருக்கும் மோகினி சிலையின் வலதுகாலில் தண்டைச் சிலம்பு இல்லை. ஒரு வேளை, ஆரம்பத்திலிருந்தே இந்தச் சிலை இப்படித்தான் இருக்கிறதோ என்ற சந்தேகம் எழுந்தது. பக்கத்திலிருந்த மற்ற மோகினி சிலைகளின் கால்களைத் தடவிப் பார்த்தார். எல்லாச் சிலைகளிலும் - எல்லாக் கால்களிலும் சிலம்புகள் இருந்தன. எப்படி இந்த ஒரு சிலையில் மட்டும் விடுபட்டுப் போயிற்று ?

அவருடைய சந்தேகம் நியாயமானதுதான் என்பதை நிரூபிக்கும் வகையில் மற்றொரு காட்சி தெரிந்தது. அது, அந்தக் காலில் ஒரு சிலம்பு இருந்ததற்கான அடையாளம். கைக் கடிகாரத்தையோ, செருப்பையோ கழற்றினால் அதை அத்தனை நாள் அணிந்ததற்கான அடையாளம்· தோலின் நிறம் சற்று மாறுபட்டுத் தெரியுமே, அதுபோல் இருந்தது அந்த அடையாளம். அதை அப்பொழுதே வேறு யாரிடமாவது சொல்லா விட்டால் தலை வெடித்துவிடும் போல் இருந்தது அவருக்கு. இரவெல்லாம் உறக்கம் வராமல் தவித்தார்.

இரண்டு நாட்களுக்குப் பின் விஷ்ணு தனக்குக் கிடைத்த கால்

சிலம்பை எடுத்துக்கொண்டு கிருஷ்ணவாரியாரை அணுகினான்.

அன்று வாரியாருக்கு ஓர் அதிர்ஷ்டமான நாள் என்றுதான் கூற வேண்டும். வெகு நாளாக வராமலிருந்த பெரிய தொகையொன்று அன்று வந்து சேர்ந்திருந்தது.

எனவே, விஷ்ணுதேவனைக் கண்டதும் வாரியார் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றார். இப்பொழுதெல்லாம் வாரியாருக்கு விஷ்ணுவின் மீது ஒருவகையான பயமும், மரியாதையும் ஏற்பட்டிருந்தது.

"வாருங்கள்.... வாருங்கள். சுகம்தானே ? உட்காருங்கள். வீட்டைப் புதுப்பித்து விட்டதாகக் கேள்விப்பட்டேன்" - வாரியார் கேட்டார்.

"ஆமாம். சில சில்லறை வேலைகள் செய்ய வேண்டி இருந்ததையெல்லாம் செய்தாகிவிட்டது." - விஷ்ணு தன்னுடைய மடியைத் தடவியபடியே பதில் சொன்னான்.

"இன்றைய வருகைக்கு ஏதாவது காரணம் உள்ளதா?" - வாரியார் பவ்வியமாகக் கேட்டார்.

"எல்லாம் ஒரு நல்ல விஷயத்திற்காகத்தான்!" - விஷ்ணு மடியிலிருந்த காகிதப் பொட்டலத்தை எடுத்து வாரியாரின் கையில் கொடுத்தான்.

அவர் அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தார். அவரது கண்கள் வியப்பால் விரிந்து வெளியே பிதுங்கி விழுந்து விடும் போல் தோன்றியது. அவர் மீண்டும் மீண்டும் அந்தக் கால் தண்டையையே பார்த்துக் கொண்டிருந்தார். அவருள் சந்தேகம் மெதுவாக முளைவிடத் தொடங்கியது.

"திருமேனி, இது எங்கிருந்து உங்களுக்குக் கிடைத்தது ?"

"கட்டாயம் உங்களுக்கு அதைச் சொல்லித்தான் ஆக வேண்டுமா?" விஷ்ணுதேவன் திருப்பிக் கேட்டான்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. இவ்வளவு நல்ல பொருளைப் பார்த்ததும் கேட்கத் தோன்றியது. அவ்வளவுதான்" - முதல் தடவை அதைப் பார்த்தபோதே, அவருக்கு விஷயம் விளங்கிவிட்டது.



பூசாரி வாசுதேவ நம்பூதிரி, மோகினி சிலையின் காலிலிருந்த தண்டை காணாமல் போயிருந்த விவரத்தை ஏற்கெனவே வாரியாரிடம் கூறியிருந்தார். வாசுதேவன் அதை ஓர் அற்புதமான நிகழ்ச்சி என்பது போல் வர்ணித்திருந்தார். தனக்குக் கிடைத்த தங்கப் பாக்கைப் பற்றி வாய்தவறிக் கூட அவரிடம் சொல்லவில்லை வாரியார்.

விஷ்ணுதேவன் மோகினியின் ஆபரணத்தைக் கொண்டு வந்ததை அறிந்தபோது ஒரே சமயத்தில் அளவற்ற வியப்படையவும், சந்தேகப் படவும் செய்தார்.

"நான் சும்மா ஒரு பேச்சுக்காகக் கேட்டேன். இதற்குப் பதிலாக உங்களுக்கு எவ்வளவு பணம் வேண்டும்?" - வாரியார் விசாரித்தார்.

"நான் என்னத்தைச் சொல்வது? இதைப் பற்றியெல்லாம் உங்களுக்குத்தானே தெரியும்?"

வாரியார் யோசித்தார். 'இது மோகினியினுடையது தான் என்பதில் சந்தேகமே இல்லை. இது நம்மிடம் இருந்தால் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதைத் தவிர, வேறு எதுவும் செய்ய முடியாது.' சாதாரணமாகத் தன்னிடம் அடகு வரும் பொருள்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு, நகரத்திலுள்ள ஒரு தங்கக் கடையில் விற்பனை செய்வது வழக்கம். இனிமேல் அப்படிச் செய்யாமல், அந்தத் தங்கத்தைத் தனது வீட்டிலேயே ஒரு ஆசாரியை வைத்து உருக்கிப் புது நகைகளாகச் செய்வதென்று தீர்மானித் திருந்தார். நகரத்திலிருந்த வியாபாரியிடம் தங்கப் பாக்கைக் கொண்டு போய் நீட்டினால், அது ஏதாவது சந்தேகங்களைக் கிளப்பி விடலாம்.

இந்த மாதிரி சமயத்தில்தான் கால் தண்டையுடன் நம்பூதிரி வந்திருக்கிறார். இது மிகவும் பழங்காலத்துப் பொருள் என்று எவருமே சொல்லி விடுவார்கள். பூசாரி வேறு, தண்டை காணாமல் போன விஷயத்தை ஊராருக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார். ஆனால், இந்தத் தண்டையை விட்டுவிடவும் வாரியாருக்குச் சம்மதமில்லை.

"திருமேனி, கொஞ்சநேரம் அப்படியே உட்கார்ந்திருங்கள். நான் இதை என் மனைவியிடம் காட்டிவிட்டு வந்துவிடுகிறேன்."

"தாராளமாகச் செய்யுங்கள்!"

வாரியாரின் மனைவி கதவருகிலேயே உட்புறம் நின்றிருந்தாள்.

"இந்தா. இதைப் பார். எப்படி இருக்கிறது?" என்று அவள் கையில் கொடுத்தார். அவள் அதை வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்தாள்.

"ஒன்றும் யோசிக்க வேண்டாம். இதற்குண்டான சரியான விலையைக் கொடுத்து அவரை அனுப்புங்கள்" - வாரியாரிடம் திருப்பிக் கொடுத்தபடி அவள் சொன்னாள்.

"அப்படியானால் சாவியை இப்படித் தா?"

"சாவியை உங்கள் மனைவியிடம் கேளுங்கள்." - திடுமென்று இந்தக் குரலைக் கேட்ட வாரியார் ஒரு கணம் நடுங்கிவிட்டார்.

அவருக்கு முன்பாக அப்சரஸ் போல ஒரு தேவகன்னிகை நின்றிருந்தாள். அன்று கண்டது போன்ற பயங்கரமான உருவம் இல்லை. விநாடி நேரத்திற்குள் அந்த உருவம் மறைந்துவிட்டது.

வாரியார் மனைவியைச் சத்தம் போட்டு அழைத்தார்.

"வந்து கொண்டே இருக்கிறேன். ஏன்தான் இப்படிக் கத்துகிறீர்களோ?" என்றாள் அவள் சலிப்புடன்.

"கொஞ்ச நேரத்திற்கு முன்னால் கூப்பிட்டேனே!"

"தோட்டத்திலிருந்தேன்!"

"இந்தத் தண்டையைக் கொஞ்சம் கவனி!"

வியப்பு அவளது விழிகளிலும் விரிந்தது. "ஆமாம், இது ஏது உங்களுக்கு?"

"வேறு யார்? திருமேனிதான் கொண்டு வந்திருக்கிறார்."

"நல்ல பொருள். பழைய காலத் தங்கம். பத்தரை மாற்று என்பதில் சந்தேகமே இல்லை!"

"நாம் இப்படிப்பட்ட பொருள்களை வாங்குவதை வேறு யாராவது பார்த்தால் சந்தேகப்பட மாட்டார்களா?"

"நமக்கு நான்குமே பெண் குழந்தைகள். இதை உருக்கி அவர்களுக்கெல்லாம் நகை செய்து போட்டால் தீர்ந்தது பிரச்சனை. மற்ற சாதாரணப் பொருள்கள் மாதிரியா இதெல்லாம்?"

"சரி" - என்றபடி கிருஷ்ணவாரியார் பணப்பெட்டியை நெருங்கித் திறந்தார். தங்கத்தை எடைபோடும் தராசு அதற்குள்தான் இருந்தது.



எடை பார்த்தார். பதினைந்து பவுனும், ஏழரைப்பணம் எடையும் இருந்தது. கணக்கிட்டார். பதினைந்தாயிரத்துச் சொச்சம் ரூபாய். பணத்தை எண்ணி விஷ்ணுதேவனின் கையில் கொடுத்தார். பணத்தை வாங்கிக் கொண்ட விஷ்ணு எழுந்தான்.

"சரி, நான் வரட்டுமா?"

"திருமேனி தவறாக நினைக்கக்கூடாது. இனிமேல் உங்களுக்கு ஏதாவது பணம் தேவைப்பட்டால் தாராளமாக இங்கு வரலாம்" - வாரியார் பவ்வியமாக விடை கொடுத்தார்.

தனக்கு வாய்த்த அதிர்ஷ்டத்தை எண்ணி வியந்தவனாக, விஷ்ணு தன் வீட்டை நோக்கி நடந்தான்.

வீட்டிற்குள் நுழைந்ததும் அம்மாவை அழைத்தான்.

"விஷ்ணு, இது என்ன மூட்டை?"

"நீங்களே திறந்து பாருங்கள்!"

பார்த்த அம்மா பிரமிப்பில் மலைத்தாள். புத்தம் புதிய நோட்டுக் கற்றைகள்!

"இதெல்லாம் உனக்கு எங்கிருந்து கிடைத்தது விஷ்ணு? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!"

இந்த வீட்டிற்கு ஏற்பட்டுள்ள மாற்றம் ஏற்கெனவே பலரைச் சந்தேகப்பட வைத்திருந்தது. எங்கிருந்து பணம் கிடைக்கிறது என்பதையும் விஷ்ணு சொல்லவில்லை. தவறான வழியில் வருகிற பணமோ, ஒருவேளை எங்காவது வகையாகச் சிக்கிக் கொண்டானோ என்று கூட கவலைப்பட்டாள் அவனது அம்மா.

நாட்டில் கள்ள நோட்டு பற்றிய செய்திகள் அடிக்கடி வெளியாகிக் கொண்டிருந்தன. ஒருவேளை விஷ்ணு அப்படிப்பட்ட கூட்டத்தில் அகப்பட்டுக் கொண்டானோ என்பதுதான் அவளது முதல் சந்தேகம்.

"நீங்கள் பயப்படும்படி இதில் எந்தவித மர்மமும் இல்லை அம்மா. தற்சமயம் இதைப்பற்றி என்னிடம் வேறு எதையும் கேட்காதீர்கள்."

"இந்தப் பணம் எங்கிருந்து கிடைத்தது என்பதை மட்டும் சொல்லிவிடு. அது போதும். அப்போதுதான் என் மனம் ஆறுதலடையும்!"

"கிருஷ்ணவாரியாரிடமிருந்து வாங்கினேன்."

"அவர் எதற்காக இவ்வளவு பணத்தை உனக்குக் கொடுத்தார்."

"அதையெல்லாம்தான் பிறகு சொல்கிறேன் என்றேனே."

"ரத்தம் வரும் கைக்கு உப்புத் தேய்க்காத கஞ்சன் வாரியார். உன் அப்பாவையே அவர் நிறைய ஏமாற்றியிருக்கிறார். என்னிடம் எவ்வளவு நகை இருந்தது தெரியுமா? அதெல்லாம் இப்போது அவர் வீட்டில்தான் இருக்கவேண்டும். அவர் என்ன கொடுத்தாலும் மறுபேச்சு பேசாமல் அப்பா அதை வாங்கி வருவார்."

"அப்போது தராமல் ஏமாற்றியதைத்தான் இப்போது தருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்களேன்!"

"என்னமோ எனக்கு ஒன்றும் புரியவில்லை!"

"அம்மா, உங்கள் பிள்ளையை நீங்கள் நம்பவில்லையா? நீங்கள் பயப்படுவதற்கு இதில் எதுவுமே இல்லை. எல்லாமே நல்லதற்குத்தான் என்று நினைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு என்னவெல்லாம் செய்வது அவசியம் என்று தோன்றுகிறதோ, அதையெல்லாம் செய்து கொள்ளுங்கள்."

சரஸ்வதி அந்தர்ஜனம் தனது காரியஸ்தர் ராமன்நாயரை வரவழைத்தாள். மறுபடியும் வேலைகள் ஆரம்பமாயின.

இப்போது அந்த வீடே முழுக்க முழுக்க மாறிவிட்டது. பழங்காலத்தின் மிடுக்கும், கம்பீரமும் இப்பொழுது திரும்பி வந்திருப்பதாக ஊரார் பேசிக் கொண்டனர். விஷ்ணுதேவனை எல்லோரும் மரியாதையுடன் பார்த்தார்கள்.

மீண்டும் பௌர்ணமி வந்தது.

வழக்கம் போல் நள்ளிரவு தாண்டி, ஜாமக் கோழி கூவிய பிறகு அவள் வந்தாள்.

"எனக்காகக் காத்திருந்து எரிச்சலடைந்திருப்பீர்கள், இல்லையா?" திண்ணையிலிருந்த அவனை நெருங்கியபடி அவள் கேட்டாள்.

"உண்மையைச் சொல்வதானால் நான் நினைத்துப் பார்க்க, நீ ஒருத்தி மட்டும்தான் இருக்கிறாய்!"

"உண்மை. நான் இப்பொழுது உங்கள் மனைவி மாதிரிதானே?"

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது!"



"நீங்கள் வேறு ஒரு கல்யாணம் செய்து கொள்வீர்களா?"

"என்னால் இனி எப்படி அது முடியும்?"

"உங்களிடம் ஒரு ரகசியத்தைச் சொல்லி விடுகிறேன். நீங்கள் என்னைவிட்டு வேறு ஒருத்தியைக் கல்யாணம் செய்துகொண்டால், என்னுடைய தோற்றமே வேறாகிவிடும்."

"எதற்காகத் தேவையில்லாததையெல்லாம் பேசுகிறாய்?" விஷ்ணு அவளது உடையற்ற தோள் பகுதியை வருடியபடியே பேசினான்.

"உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? கோயில் பூசாரி, ஜோதிடரைத் தேடிப் போயிருக்கிறார்."

"ஏன்... எதற்கு?"

"மோகினி சிலையின் கால்தண்டை காணாமல் போனது எப்படி என்பதைக் கண்டுபிடிப்பதற்காக!"

"உண்மையாகவா!" - விஷ்ணு அதிர்ந்தான்.



5

"ஆமாம்! அவரால் அதைப் பற்றி விசாரிக்காமல் இருக்க முடியுமா?" - தேவப்ரியா குலுங்கிச் சிரித்தபடியே கேட்டாள்.

அவளுடைய சிரிப்பு, வளையல்கள் குலுங்குவது போலிருந்தது.

"அப்படியானால் நான் திருடனாகி விடமாட்டேனா?" - விஷ்ணு திடுக்கிட்டபடி கேட்டான்.

அவன் ஒரு நம்பூதிரி. அதுவும் புகழ்பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவன். ஒரு காலத்தில் அந்தக் கிராமத்தையே நிர்வகித்து நடத்தியது அந்தக் குடும்பம்தான். அவனது முன்னோர்கள் கீர்த்தி பெற்றவர்கள். அவர்களுடைய வார்த்தைகளுக்கு, மறுவார்த்தை என்பதே கிடையாது.

நாடாளும் மன்னர்கள் கூட இந்த நம்பூதிரிகளுக்கு முன்னால் உட்கார மாட்டார்கள். அந்த அளவுக்கு அவர்களது செல்வாக்கு அந்நாளில் ஓங்கியிருந்தது. அந்தப் பழைய மதிப்பெல்லாம் இப்போது போய்விட்டிருந்தாலும், குடும்ப கௌரவம் மட்டும் இன்னமும் நிலைத்து நின்றிருந்தது. ஆகவே, ஜோதிடம் பார்க்கப் போகிறார்கள் என்பதை அறிந்தபோது, விஷ்ணுதேவன் நிம்மதியிழந்தான்.

"ஏன் என்னவோ போலிருக்கிறீர்கள்? இதோ பாருங்கள்..." -அவள் அவனது முகத்தைத் தன் பக்கமாகத் திருப்பினாள்.

"ஏன் உங்கள் முகம் இப்படி வாடி விட்டது? பயமா? "- சிரித்தபடி கேட்டாள்.

"எதற்காகச் சிரிக்கிறாய்?"

"நல்லதற்குத்தான். பூசாரி ஜோதிடம் பார்க்கப்போவதை நினைத்ததால் சிரிப்பு வந்தது. ஆனால், நான் உங்களிடம் தந்தது என்னுடைய ஆபரணங்களையல்லவா?"

"ஆனால், இப்போது அப்படியல்ல விஷயம்!"

"அது என்ன நியாயம்? புரியும்படி சொல்லுங்களேன்!" - விஷ்ணுவின் தோளில் தன் முகத்தைப் பதித்தாள். அவளது கன்னம் அவனது கழுத்தில் பதிந்திருந்தது.

"கோயிலில் இருப்பதெல்லாம் கோயிலின் சொத்து. கோயிலைக் கட்டியவர்கள் அவர்கள். அப்படியிருக்க சிலையின் மீதுள்ள நகைகளும் அவர்களுடையதுதானே?"

"இதோ பாருங்கள், நாங்களும் தேவியும் சுயம்புவானவர்கள். யாரும் எங்களைப் படைக்கவில்லை. மோகினிகளையும், தேவியையும் மனிதர்கள் படைப்பதா... இது என்ன கூத்து?"

"அவர்களது வாதம் அதுதானே?"

"பார்க்கலாம். அவர்கள் ஜோதிடம் பார்க்கட்டும். நான் உங்களிடம் ஒன்று சொல்லலாமா? நீங்கள் என்னை நம்புகிறீர்களா?" - அவனது கண்களைப் பார்த்தபடியே அவள் கேட்டாள்.

அவளது கண்களில் களங்கமற்ற தன்மை சுடர் விட்டது. ஒரு குழந்தையின் கண்களைப் போல் அவை பளபளத்தன.



"சந்தேகம் என்ன? நான் உன்னை மனபூர்வமாக நம்புகிறேன்!"

"அப்படியானால் அந்தப் பிரச்சனையை என்னிடம் விட்டு விடுங்கள். நாம் வேறு ஏதாவது விஷயங்களைப் பற்றிப் பேசுவோமே." - அவளது கைகள் அவனது தோள்களைத் தழுவின. பட்டுப் போன்ற மிருதுவான அவளது விரல்கள் அவனது உடலில் இழைந்தன. தேவப்ரியாவின் உடம்பு மந்திர சங்கீதமாக அவனுள் புகுந்தது.

அவள் புறப்படும் நேரம் நெருங்கியது.

"நான் புறப்படட்டுமா? எதைப் பற்றியும் நீங்கள் கவலைப்படக் கூடாது. வரட்டுமா?" அவனுக்கு தைரிய மூட்டிவிட்டு, அவள் விடை பெற்றாள்.

மறுநாள் காலையில் விஷ்ணுதேவன் ஒமல்லூர் காவு தேவி கோயிலை அடைந்தான். வாசு நம்பூதிரி எதையாவது சொல்வார் என்று எதிர்பார்த்தான். விஷ்ணு சாதாரணமாக அந்தக் கோயிலுக்குச் செல்வது வழக்கமில்லை.

"யாரது, குருக்ஷேத்திரமனை விஷ்ணுவா?" - வாசு நம்பூதிரி வியப்புடன் கேட்டார். அவர் அப்பொழுதுதான் முதல் முறையாக அவனை அந்தக் கோயிலில் சந்திக்கிறார்.

"ஆமாம்... பார்த்துவிட்டுப் போகலாமென்று..."

"போன திருவிழாவின்போது இங்கு வந்திருந்ததாக ஞாபகம்."

"ஆமாம், அதற்கு முன்புகூட கதகளி நடக்கும் பொழுதெல்லாம் நான் இங்கு வருவதுண்டு. கதகளி என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும்."- பேசியபடியே விஷ்ணு, மோகினி சிலையைக் கவனித்தான். வலது காலில் தண்டை இருக்க வேண்டிய இடத்தில், அதை அணிந்திருந்த அடையாளம் மட்டும் தெரிந்தது.

"இந்தக் கோயிலில் இப்பொழுது ஒரு மாதிரியான நிலை. என்னவென்றே தெரியவில்லை. நல்லதற்கா, கெட்டதற்கா என்பதும் புரியவில்லை "- வாசு நம்பூதிரி அந்த மோகினி சிலையையும், விஷ்ணுவின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தபடியே பேசினார்.

"இப்படிப் பேசுகிற அளவுக்கு இங்கு என்ன நடந்து விட்டது?"

"இதோ, நீங்களே பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே... இது என்ன

சாதாரணமான விஷயமா? கால்தண்டையே களவு போயிருக்கிறது. இன்னும் எவ்வளவு நகைகள் இங்கு உள்ளன? மோகினி சிலை மட்டும் தானா? உள்ளேயும் சிலைகள் இல்லையா? எல்லாம் கல்லாலான வைதானே என்று தோன்றலாம். ஆனால், அது உண்மையல்ல. அவை எல்லாம் நமது மனத்தின் கணிப்பு. தங்கமென்றால் சொக்கத் தங்கம். ரத்தினங்கள்!"

"அப்படியானால் இதையெல்லாம் அவர்களாகவே விருப்பப்பட்டுக் கழற்றிக் கொடுக்காமல், மனிதர் யாராவது இவற்றைத் திருட முடியுமா என்ன?"

"அதுதானே அற்புதம்! இந்த மோகினியை மோக வலையில் உட்படுத்தியது யார்? அது எந்தக் கந்தர்வன்? நிச்சயம் அவன் மனிதனாக இருக்க முடியாது!"

"பிறகு ஏன் இதற்காக இவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள்?" - விஷ்ணு கேட்டான்.

"ஒரு வகையில் நீங்கள் சொல்வது சரிதான். நிலைமை இப்படியே தொடர்ந்தால்...? பிறகு இந்த துவாரபாலிகைகளே காணாமல் போய்விடலாமல்லவா? என்னதான் நடந்திருந்தாலும் விஷயம் அதிசயமானதுதானே!"

அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது கோயிலின் உரிமையாளரான தானவேதன் நம்பூதிரி அங்கு வந்து சேர்ந்தார்.

எழுபதைத் தாண்டிய முதியவர் அவர். எப்பொழுதாவதுதான் கோயில் பக்கம் வருவார். காரணம், வயதும் தள்ளாமையும்தான். கோயிலின் வருமானம் மிகமிகக் குறைந்து போயிருந்ததும் மற்றொரு காரணம்.

கோயிலில் நம்ப முடியாத அற்புதம் நடந்திருக்கிறது என்பதைக் கேள்விப்பட்டுத்தான் அவர் வந்தார். அவருடன் அவரது மகள் வயிற்றுப் பேரனும் இருந்தான். நடந்து வந்த ஆயாசம் தீர்வதற்காக அருகிலிருந்த ஆலமரத்தடியில் கொஞ்ச நேரம் உட்கார்ந்தார்.

பூசாரி வாசுதேவன் நம்பூதிரி அவரருகில் சென்று வணங்கி, வெற்றிலை பாக்கை அவர் பக்கமாக நகர்த்தி வைத்தார்.

"விஷயத்தை நானும் கேள்விப்பட்டேன். என்ன நடந்ததென்று



சொல்லுங்களேன்." - திருமேனி, வாசுதேவன் நம்பூதிரியை விசாரித்தார். அப்பொழுதுதான் அவருக்கு அருகில் நின்றிருந்த விஷ்ணுதேவனை அவர் கவனித்தார். "இது யார்? புதிய நபராகத் தெரிகிறாரே?"

"நான் குருக்ஷேத்ர மனை விஷ்ணு."

"ஓகோ... கேள்விப்பட்டிருக்கிறேன். கொஞ்சம் கஷ்டப்படுவதாகவும் தகவல். அப்படித்தானே?"

"ஆமாம் திருமேனி."

"இப்பொழுது நிலைமை பரவாயில்லையா?"

"ஓரளவிற்குப் பரவாயில்லை. எப்படியோ, நாள்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன."

"உட்காருங்கள் தம்பி. இங்கு சில விசேஷமான சம்பவங்கள் நிகழ்ந்திருக்கிறதாம். என்னவென்று தெரிந்து கொள்ளலாமென்றுதான் வந்தேன்."

விஷ்ணுதேவன் அவர் அருகில் அமர்ந்துகொண்டான். வாசுதேவன் நம்பூதிரி நடந்த விஷயங்களைக் கொஞ்சம் கண்ணும், காதும் ஒட்ட வைத்துக் கூறினார்.

"இவ்வளவுதானா விஷயம்? வேறு ஏதாவது உண்டா?"

திருமேனி யோசனையில் ஆழ்ந்தார். பின்பு விஷ்ணுதேவன் பக்கமாகத் திரும்பிக் கேட்டார்:

"இதைச் சாதாரண விஷயம் என்று நினைக்கிறீர்களா தம்பி?"

விஷ்ணுதேவன் பதில் சொல்லவில்லை.

"இப்படியே போய்க் கொண்டிருந்தால் ஒரு நாள் எதுவுமே இருக்காது. அதனால் பிரஸ்னம் (ஒருவகை சோழி சோதிடம்) வைத்துப் பார்ப்பது என்று தீர்மானித்து விட்டேன். அப்பொழுது தெரிந்துவிடும், இங்கே என்ன நடக்கிறது என்று!"

விஷ்ணு அப்போதும் மௌனமாக இருந்தான்.

"இப்படியெல்லாம் வாரிக் கொடுப்பதற்கு நான் ஒருக்காலும் சம்மதிக்க மாட்டேன். இதெல்லாம் என்னுடைய சொத்து. காலாகாலத்தில் இந்தக் கோயிலுக்குத் தேவையானதை என்னால் எதுவும் செய்ய முடியவில்லை என்பது உண்மை. ஆனால், அது

என்னுடைய தவறு அல்ல."

"பிறகு?" - விஷ்ணு குறுக்கிட்டான்.

"அதையெல்லாம் இங்கிருக்கும் சக்தியும் செய்ய வேண்டும். ஒவ்வொரு கோயிலும் சிறப்படைவது எதனால் தெரியுமா? ஏதாவது அதிசயம் நிகழ்ந்தாக வேண்டும். சக்தி இருந்தால் போதுமா? செயலில் காட்டினால்தானே மக்களுக்குப் புரியும்?"

திருமேனியின் பேச்சு எல்லை கடந்து போய்க் கொண்டிருக்கிறது என்று விஷ்ணுவிற்குப் புரிந்தது. அதனால் எந்தவிதமான மறுமொழியும் பேசாமல் மௌனமாக இருந்தான். அவர் தொடர்ந்தார்:

"கோயிலுக்கு வருமானம் இருந்தால்தானே கோயிலும் நன்றாக இருக்கும்? கோயிலின் சொந்தக்காரனான நானும் நன்றாக இருப்பேன்? வெளியே யாரெல்லாமோ, என்னவெல்லாமோ பேசிக்கொள்கிறார்கள். அதனால் நான் ஒரு தீர்மானத்துக்கு வந்து விட்டேன்."

"என்ன சொல்லுங்கள்!" - வாசுதேவன் நம்பூதிரி பரபரத்தார்.

"இன்று மாலை கிளம்புகிறேன். நீங்களும் வாருங்கள். விஸ்வமங்கலம் வரை சென்று வருவோம். அங்கு போனால் உண்மை என்னவென்று தெளிவாகத் தெரிந்துவிடும்."

விஸ்வமங்கலம் வீட்டைச் சேர்ந்த நம்பூதிரிகளைப் பற்றி விஷ்ணுதேவனும் கேள்விப்பட்டிருந்தான். ஜோதிடத்தில் கெட்டிக் காரர்கள் ; புகழ் பெற்றவர்கள். மந்திரதந்திரங்களில் கை தேர்ந்த வர்கள்.

பல ஆண்டுகளுக்கு முன், அந்த வீட்டில் ஒரு மாந்திரீகன் இருந்தார். மகத்தான சக்தி வாய்ந்தவர். அழிவுக்கான - சூனிய மந்திரங்கள் தான் அவருக்கு முக்கியம். அவரைப் பற்றிப் பல கதைகள் இப்போதும் சொல்லப்படுவதுண்டு. நம்பூதிரியாக இருந்தாலும் அவர் ஒழுங்காகக் குளிப்பதில்லை. வேட்டியைத் துவைப்பதில்லை. அவரை நெருங்கினாலே துர்நாற்றம் வீசும். பெண் பித்தர் என்றும் சொல்வார்கள்.

ஒருநாள் 'கோவிலகம் மனை' யின் இளம்பெண் குளித்துவிட்டு,



ஈரத்துணியுடன் வந்து கொண்டிருந்தாளாம். இந்த மந்திரவாதி அவளைப் பார்த்து விட்டார்.

சந்தன மரத்தில் கடைந்தெடுத்த சிற்பம் போலிருந்த அந்த இளம் தம்புராட்டி (தம்புரான், தம்புராட்டி, திருமேனி போன்ற பெயர்கள் மேல் குலத்தைச் சேர்ந்த பெரிய வீட்டுக்காரர்கள் என்னும் மரியாதையான பொருளைக் குறிக்கும்) யின் உடலிலும், சந்தன மணம் வீசியது.

தம்புராட்டி செல்லும் வழியில் இந்த மாந்திரீக நம்பூதிரி மறைந்திருந்தார். அந்த வழியாக வந்த அந்த இளம்பெண் தனக்குள் முனகிக் கொண்டாள் : "என்ன ஒரு துர்நாற்றம்!... பிண நாற்றம் போல..."

கோவிலகம் மாளிகைக்குள் நுழைந்து நாமம் ஜபித்து, சிற்றுண்டி அருந்தி, படுக்கை அறையை அடைந்த தம்புராட்டி, அங்கே இருந்தவற்றைப் பார்த்துப் பயந்து வீறிட்டு அலறினாள்!



## 6

தம்புராட்டியின் படுக்கை அறையில் ஒரு பிணம் கட்டித் தொங்க விடப்பட்டிருந்தது. அது காற்றில் ஊஞ்சலைப்போல் ஆடிக் கொண் டிருந்தது.

பயந்து அலறியடித்து வெளியே ஓட முயன்றாள். வாசலின் குறுக்கே ஒரு தடை. அங்கும் மற்றொரு பிணம். ஒரு குழந்தையினுடையது. நிர்வாண உடம்புடன் இருந்தது. மீண்டும் அறைக்குள் பார்த்தபோது கட்டிலில் இன்னொரு பிணம். அந்த அறையே பிண நாற்றத்தால் நிறைந்திருந்தது. வேறு ஒன்றும் செய்யத் தோன்றாத தம்புராட்டி தன்னுடைய முழுச் சக்தியையும் பயன்படுத்தி அலறினாள்.

அவளது அலறலைக் கேட்டுக் கோவிலகம் மாளிகையிலிருந்த

அத்தனை பேரும் ஓடி வந்தனர்.

"என்னம்மா... என்ன நடந்தது?" - அவளிடம் விசாரித்தனர்.

"பிணம்... இதோ பாருங்கள் இங்கே..." அவள் விரலால் சுட்டிக்காட்டினாள்.

"பிணமா, எங்கே?" - அவர்களுக்கு எதுவும் தெரியவில்லை.

"என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? ஒன்று அதோ வாசலில்!... இதோ இன்னொன்று கட்டிலில்..." - அவள் பயந்து நடுங்கியபடியே பேசினாள்.

தம்புராட்டிக்கு ஏதோ நேர்ந்துவிட்டது என்பதைத் தெரிந்து, காரணவர் உடனே ஜோதிடரை வரவழைத்தார். வந்த ஜோதிடர் சோழிகளைப் பரப்பிக் கணக்கிட்டுக் கூறினார்: "இது நம்பூதிரியின் கோபத்தினால் தான் ஏற்பட்டுள்ளது."

"யாரந்த நம்பூதிரி?" - பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

கடைசியாகத் தம்புராட்டி வெளியே போனபோது, உடன் சென்ற பெண்களைக் கண்டுபிடித்தனர். அதில் ஒருத்தி நடுவழியில் தம்புராட்டி ஓர் இடத்தில் "இது என்ன பிணநாற்றம்?" என்று கேட்டதாகக் கூறினாள்.

விஷயம் விளங்கிவிட்டது. ஜோதிடர்தான் அதையும் விளக்கினார்: "இதற்குப் பரிகாரம் காண, அவரையே சென்று சந்திப்பது ஒன்றுதான் வழி!"

தம்புராட்டி மாந்திரீகனைச் சந்திக்கச் சென்றாள். அவரிடம் அவள் மன்னிப்புக் கோரவும் செய்தாள். ஆனால், திரும்ப வரும்பொழுது அவளது கன்னித்தன்மை பறிபோயிருந்தது. அவளது பயம் விலகியி ருந்தது. அப்படிப்பட்டவர்தான் விஸ்வ மங்கலத்து சூரிய நாராயணப் பட்டத்திரிப்பாடு.

எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த அவர் சமாதியடைந்தது, பரம்பரை வீட்டின் அருகே உள்ள நிலவறை ஒன்றில்தான். குங்கிலியத்தைப் பரப்பி உடலை அதன் நடுவே வைத்துச் சமாதியை எழுப்பியிருந்தனர். அதன் பிறகு அந்தப் பகுதியிலிருந்து வசிப்பிடத்தைச் சற்றுத் தள்ளி மாற்றிக் கொண்டனர்.



அதுதான் இப்போதைய விஸ்வமங்கலத்து மனை.

அந்தக் குடும்பத்தினருக்கு மட்டுமே தெரிந்த ஒரு பரமரகசியம் உள்ளது. எப்பொழுதோ இறந்துபோனதாகக் கருதப்படும் சூரிய நாராயண பட்டத்திரி உண்மையில் இன்னும் இறக்கவில்லை. அதாவது அவரை அழைத்தால் வருவார். பிரச்சனைகளுக்குப் பரிகாரம் சொல்வார்.

கொஞ்சம் சிக்கலான விஷயமாக இருந்தால் அதை அவரே நேரிட்டு மேற்கொள்வார். அப்படி அவர் ஏற்றுக் கொண்டுவிட்டால், அதன்பிறகு எதிராளிகளுக்கு வேறு வழியே இருக்காது. பூண்டோடு அழிய வேண்டியதுதான்!

சென்னாங்கேரி மனை தானவேதன் நம்பூதிரி ஓமல்லூர் கோவில் பூசாரியையும் அழைத்துக்கொண்டு விஸ்வமங்கலத்து வீட்டை அடைந்தார். அப்பொழுது அந்த வீட்டின் காரணவரான ஜயந்தன் நம்பூதிரி இருந்தார். அவரும் அப்படி ஒன்றும் மோசமானவரல்ல!

உடல் மெலிந்திருந்தாலும் முகம் பயங்கரமாக இருந்தது. கண்களில் கழுகுப் பார்வை. நீண்டு வளைந்த மூக்கு. முக்கோண வடிவமான முகம். கழுத்தில் ருத்திராக்ஷம். அதில் ஒரு தங்கப் பதக்கம். பதக்கத்தில் சிங்க முகம் செதுக்கப்பட்டிருந்தது.

பூணூல் அழுக்கேறியிருந்தது. மார்புப் பகுதியில் தேங்காய் நார் போன்ற ரோமங்கள் பின்னிப் பிணைந்திருந்தன. கை விரல்களில் மோதிரங்கள் மின்னின. மோதிரமென்றால் பாம்பு வடிவத்திலான வளையங்கள். சின்னச் சின்னப் பாம்புகள் விரல்களில் சுற்றிக் கொண்டிருப்பது போல் தெரிந்தன. அழகான சிவப்பு வைரக்கற்கள் அவற்றின் கண்களைப்போல் மின்னின.

அவரது கைகளில் வேர்களைப்போல் நரம்புகள் புடைந்திருந்தன.

"தென்கிழக்கிலிருந்து வருகிறீர்கள் இல்லையா?" - வந்தவர்களைப் பார்த்து மாந்திரீகர் கேட்டார்.

"ஆமாம்!" - வியப்பை அடக்கமாட்டாதவராக தானவேதன் கூறினார்.

"தானம் செய்த குடும்பம். வேதங்களில் தேர்ந்தவர்கள் உங்கள்

வீட்டில் இருந்திருக்கிறார்கள்.!"

"எல்லாம் சரிதான்!"

"அப்படியானால் உங்கள் பெயரை நான் சொல்ல வேண்டாமே?" - ஜயந்தன் நம்பூதிரி கேட்டார்.

"வேண்டாம்!" - கைதொழுதபடியே தானவேதன் கூறினார்.

"உடன் வாசுகி..."

"ஆமாம், பெயர் வாசுதேவன்!" - பூசாரியைப் பார்த்துக் கூறினார்.

"விஷயமெல்லாம் எனக்குத் தெரியும். அப்படி உட்காருங்கள்!" - ஜெயந்தன் நம்பூதிரி மணைப் பலகைகளைச் சுட்டிக்காட்டினார்.

இருவரும் உட்கார்ந்தார்கள். அவரிடம் மேற்கொண்டு என்ன பேசுவதென்று தெரியாமல் இருவரும் அவரையே பார்த்தபடி அமர்ந்திருந்தனர். வந்த நோக்கத்தையும், இடத்தையும் அவரே கூறிவிட்டார்.

"நீங்கள் வந்திருக்கும் விஷயத்தையும் நானே பார்த்துச் சொல்லி விடவா?"

"வேண்டுமானால் நானே சொல்லிவிடுகிறேன்."

"சொல்லுங்கள். அதற்காக நான் நேரத்தைச் செலவிட வேண்டியதில்லை. தெரிந்துவிட்டால் நேரடியாகப் பரிகாரத்திற்குப் போய்விடலாம்" - ஜயந்தன் பேசினார்.

'எப்படித் தொடங்குவது? எங்கிருந்து தொடங்குவது?' என்று ஒருகணம் யோசித்த தானவேதன் "ஓமல்லூர் கோயிலைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்..." என்று தொடங்கினார்.

ஆமோதிப்பதுபோல் தலையசைத்தார் ஜயந்தன் நம்பூதிரி. "கேள்விப்பட்டிருக்கிறேன். எத்தனையோ கோயில்கள். தேவிதானே அவ்விடத்துப் பிரதிஷ்டை?"

"ஆமாம்!"

"நீங்கள் சொல்லிக் கொண்டே போங்கள்!"

"ஒரு காலத்தில் ஓகோவென்றிருந்த கோயில். இப்பொழுது அதெல்லாம் பழங்கதையாகிவிட்டது. ஒரு வகையில் சொன்னால் கோயிலின் கதை முடிந்துவிட்து என்றே சொல்லலாம்."

"பிறகு ஏன் இந்தப் பயணம்? சக்தியை மீட்டெடுக்கவா?"



"அதெல்லாமில்லை. ஒரு அதிசய நிகழ்ச்சி !"

"அதிசயமா?"

"கேட்ட பிறகு உங்களுக்கே வியப்புத் தோன்றும்!"

"சொல்லுங்கள்" - என்றபடி விஸ்வமங்கலத்தார் தன்னுடைய வெற்றிலைப் பெட்டியைத் திறந்து ஒரு விள்ளல் புகையிலையைக் கிள்ளி வாயில் போட்டுக்கொண்டார். பிறகு, வெற்றிலைப் பெட்டியை விருந்தினர்களை நோக்கி நகர்த்தினார்.

தானவேதன் நம்பூதிரியும் கொஞ்சம் புகையிலையை எடுத்து அணைப்பல் ஓரமாக அதக்கிக் கொண்டு, நடந்த சம்பவங்களை விவரித்தார். நடுநடுவே வாசுதேவன் நம்பூதிரி அங்கங்கே கொஞ்சம் வர்ணனைகளைச் சேர்த்தார்.

ஜயந்தன் நம்பூதிரி எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டார். நடுநடுவே அவரது கண்விழிகள் மேற்புறம் உயர்ந்தன. பின்பு ஆழமான யோசனையில் மூழ்கியது போல் தோன்றின. இப்படி ஒரு சில நிமிடங்கள்.

பிறகு ராசிப் பலகையை எடுத்து முன்புறம் வைத்தார். தன்னுடைய சோழிப் பையிலிருந்து ஒரு கைப்பிடி சோழிகளை எடுத்து தியானித்தபடியே பலகையில் வைத்தார். கவிழ்ந்திருந்த சோழிகளை எண்ணினார். மற்றவற்றை எடுத்தார். யோசித்தார். மந்திரம் உச்சரித்தார்.

எதிரே இருந்த இருவரும் கண்களை மூடியபடி தியானத்தில் ஆழ்ந்திருந்தனர்.

சட்டென்று ராசிப்பலகை மேற்புறமாக உயர்ந்து, அவர்களுடைய தலையைக் கடந்து வெளிப்புறம் சென்றது.

தியானம் முடிந்து ஜயந்தன் நம்பூதிரி கண்ணிமைகளை விலக்கித் திறந்தபோது ராசிப் பலகையைக் காணவில்லை. மற்றவர்களும் கண்களைத் திறந்தனர். எல்லோரும் அதிசயப்பட்டனர்.

"ராசிப் பலகை எங்கே?" - ஜயந்தன் நம்பூதிரி கேட்டார்.

"நாங்களும் தியானத்திலிருந்தோம்" - வந்தவர்கள் பதில் சொன்னார்கள்.

"இது எப்படி நடந்தது?" என்று கேட்ட ஜயந்தன் நம்பூதிரி

என்னமோ போலாகிவிட்டார். "இதுவரை விஸ்வமங்கலம் வீட்டில் நடைபெறாத ஒன்று நடைபெற்றிருக்கிறதே!" என்று வியந்தார். தான் வணங்கும் பரதேவதைகளை மனதிற்குள் வரவழைத்து 'என்ன இது?' என்று காரணம் கேட்டார். அவையும் பதில் சொல்லவில்லை.

எத்தனையோ பிரேதப் பிசாசுகளை அங்கு வரவழைத்து எட்டி மரத்தில் ஆணி அறைந்திருக்கிறார் அவர். விஸ்வமங்கலம் பழைய வீட்டின் தென் பகுதியில் சமாதிக்கடுத்து ஒரு பெரிய எட்டி மரம் நிற்கிறது. பட்டப் பகலில்கூட யாரும் அதை நெருங்கப் பயப்படுவார்கள். பிரமாண்டமான மரம் அது.

பரவிப் படர்ந்து நிற்கும் அந்த எட்டி மரத்தின் விழுதுகள் ஏராளமாக வளர்ந்து இறங்கி அந்தப் பகுதியையே இருட்டாக்கியிருந்தன. அந்த இருட்டுக்குள் ரத்தம் குடிக்கும் பைசாசிக வௌவால்களும், ஆந்தைகளும் பகலில் உறங்கும். அந்த மரம் முழுவதும் ஒரு சாண் நீளமுள்ள ஆணிகள் அடித்து நிரப்பப்பட்டிருந்தன. தன் உடம்பிலிருக்கும் பிரேதத்தை விரட்டித் தொலைக்க வருகிறவர்கள், தங்களது தலையாலேயே அந்த ஆணிகளை அடித்து மரத்தில் இறக்கியிருந்தனர்.

ஆயிரக்கணக்கான பிரேத ஆத்மாக்கள், அந்த எட்டி மரத்தில் இணைந்து கலந்துவிட்டிருந்தன. அதில் ஏதாவது ஓர் ஆணியை உருவினாலும், அந்த ஆத்மாவுக்கு அப்போதே விடுதலை கிடைத்துவிடும். உடனேயே அது தன்னுடைய விளையாட்டைத் தொடங்கி விடும்.

இப்படித்தான் ஒருமுறை ஒரு சின்னப் பெண் விறகு பொறுக்குவதற்காக அந்தப் பக்கம் வந்தாள். களைத்து வந்ததால் சற்று ஓய்வெடுக்க விரும்பினாள். மரத்திற்கு அருகில் தன் சிநேகிதியுடன் உட்கார்ந்தாள். அப்பொழுது அந்த மரத்தில் ஏதோ மின்னுவதுபோல் தெரியவும், அது என்னவென்று பார்ப்பதற்காக எழுந்தாள். பென்சில் மாதிரி தெரிந்தது. அதுவும், புதுப் பென்சில் போல் இருந்தது. வெள்ளி மாதிரி மினுமினுத்தது. அதைக் கஷ்டப்பட்டு மரத்திலிருந்து உருவியெடுத்தாள். எழுதிப் பார்த்தபோதுதான் அது ஒரு ஆணி என்று தெரிந்தது. அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை!



மறுநாள் காலை பொழுது விடிந்தபோது அடித்துச் சிதைத்துப் போட்டதுபோல் கிடந்தது அவளது உடம்பு. அவளது கையில் அந்தப் பெரிய ஆணியும் இருந்தது.

தான் பிரஸ்னம் (ஜோதிடம்) பார்க்கும் பலகை எவ்வளவோ காலமாக அங்கு இருப்பது. தலைமுறை தலைமுறையாக வந்து தன் கைக்குக் கிடைத்த ராசியான ராசிப்பலகையும் கூட! இந்தப் பலகையைத் தொடுவதற்கு இதுவரை எப்படிப்பட்ட தேவதைக்கும் தைரியம் ஏற்பட்டதில்லை. இப்பொழுது என்னவென்றால் எது நடக்கக் கூடாதோ, அது நடந்திருக்கிறது!

வேறு ஒரு ராசிப்பலகையைப் பயன்படுத்துவதைப் பற்றி அவரால் யோசித்துப் பார்க்கக்கூட முடியவில்லை. "ஒன்று செய்யுங்கள். இன்று நீங்கள் புறப்பட வேண்டாம். இங்கேயே தங்கலாம். நான் ஒரு மாற்று ஏற்பாடு செய்கிறேன்" - ஜயந்தன் ஆறுதல் கூறினார்.

அன்று அவர்கள் அங்கேயே தங்கினர்.

அன்று நள்ளிரவில் ஜயந்தன் நம்பூதிரி விஸ்வமங்கலம் பழைய வீட்டை அடைந்தார். சமாதியருகே நின்று தியானித்தார்.

"ஜயந்தா என்ன செய்தி?" - சமாதியிலிருந்து பயப்படுத்தும் ஒரு குரல் உயர்ந்தது!



## 7

நிலவறைச் சமாதியிலிருந்து, எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பு இறந்துபோன பிதாமகனான சூர்யநாராயணனின் குரலைக் கேட்டவுடன் ஜயந்தன் நம்பூதிரி ஒருகணம் நடுங்கவே செய்தார்.

அவர் அன்றுதான் தன்னுடைய வாழ்க்கையில் முதன் முறையாக சமாதியிலிருந்து அந்தக் குரலைக் கேட்டார். வேறு வழியே இல்லாத போது மட்டுமே அவரை நெருங்கி உதவி கோரவேண்டுமென்று

சொல்லியிருந்தார்கள். ராசிப்பலகையே பறந்துபோன பிறகு வேறு என்ன செய்வது?

விஸ்வமங்கலக் குடும்பத்தின் முதல் ஜோதிடனும், மாந்திரீகனுமான சூரியநாராயணன் நம்பூதிரிதான் அகில் மரத்தால் இந்த ராசிப் பலகையை உருவாக்கினார். அதன் பிறகு அந்தக் குடும்பத்தினரின் தலைமுறைகள் எல்லாம் இந்தப் பலகையையே இதுவரை பயன்படுத்தி வந்துள்ளனர். எத்தனையோ முறை அதன் வழியாக அஷ்டதிக்குப் பாலகர்கள், அஸ்வினி தேவதைகள் போன்றவர்களின் இருப்பிடத்தைக் கண்டறிந்துள்ளனர்.

அதே போல் பிரேதங்களையும்(ஆவிகள்), பூதங்களையும், மோகினிகளையும், கந்தர்வர்களையும், தேவதைகளையும் எங்கெங்கு வசிக்கின்றனர் என்று கணக்கிடவும், தூரத்தைத் துல்லியமாக அளந்து இடத்தைக் குறிப்பிடவும், அந்தப் பலகை இதுவரை எத்தனை முறை உதவியுள்ளது!

அப்படிப்பட்ட ராசிப்பலகைதான் சிறகு முளைத்தது போல், அந்த இல்லத்தின் ஜோதிட அறையிலிருந்து பறந்து போயிருக்கிறது!

உயரமான காம்பௌண்டுச் சுவரைத் தாண்டியல்லவா பறந்திருக்கிறது! அந்தப் பலகை இல்லாமல் ஜயந்தன் நம்பூதிரியால் ஒன்றுமே செய்ய முடியாது. எனவேதான் அவர் தனது முன்னோரை அணுகினார். அங்கிருந்து குரல் கிடைத்ததும் விவரத்தைக் கூறினார்.

“என்ன செய்ய வேண்டுமென்று சொன்னால் போதும். நான் அப்படியே செய்து கொள்கிறேன்” என்று பணிவுடன் பேசினார்.

சமாதியடைந்த பிறகும் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பதாகக் கருதப்படும் சக்திவாய்ந்த முன்னோரான சூரியநாராயணனை நேரிடுவது என்பதே ஜயந்தனுக்கு முடியாத விஷயம் போல் தெரிந்தது.

அவருடைய உருவம் எப்படி இருக்கும்?

பயங்கரமாக இருக்குமா? பயப்படுத்துவது போல் இருக்குமா? ஒருவேளை வெறும் எலும்புக்கூடாக இருக்குமோ? எப்படி இருந்தாலும் அதைச் சோதித்துப் பார்க்க வேண்டாமென்று கருதினார்.

“ராசிப் பலகை காணாமல் போய்விட்டது. இல்லையா?”



சமாதிக்குரல் கேட்டது.

“ஆமாம்!”

“அதைச் சரி செய்துகொள்ளலாம். ஒரு காரியம் செய். இந்த வீட்டின் வடமேற்குப் பகுதி மூலையில் ஒரு முள் முருங்கை இருக்கிறது, இல்லையா?”

ஜயந்தன் யோசித்துப் பார்த்தார். ஆமாம், இருக்கிறது. யார் பார்த்தாலும் பயந்து போய்விடக்கூடிய மரம். அதில் இலைகளுக்குப் பதிலாக முள்கள்தான் அதிகமிருந்தது. இரவில் அதைப் பார்த்தால் ஏதோ பெரிய பிசாசு ஒன்று நின்று கொண்டிருப்பது போல் தோன்றும். ஏதாவது பெரிய மிருகம் அந்த மரத்திமேல் உரசினால் கூடப்போதும், அந்த மரத்தின்முட்கள் மிருகத்தின் உடலுக்குள் ஆழமாக இறங்கி அதைப் பிடித்து வைத்துக் கொள்ளும். அதற்கும் ஒரு கதை உண்டு.

அந்த வீட்டில் ஒரு காலத்தில் அழகான இளம்பெண் ஒருத்தி இருந்தாள். நங்கேமக்குட்டி என்பது அவளது பெயர். கல்யாண வயதைத் தாண்டிய பிறகும் அவளைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டியதைப் பற்றி அந்த வீட்டின் காரணவர் (குடும்பத்தலைவர், தாய்மாமா) நினைத்ததே இல்லை.

வானுலகத் தேவர்கள் நங்கேமையைக் கண்டிருந்தால் தங்கள் கையிலுள்ள அமுதக் கலசங்களைத் தூக்கி எறிந்திருப்பார்கள். அவளிடமும் அமுதமிருந்தது. வெண்ணெயும், நீர் கலக்காத பாலையும் சாப்பிட்டு வளர்ந்த உடம்பு. அவளுக்குள் பருவத்தின் உணர்வுகள் முகிழ்க்கத் தொடங்கின. ஓர் ஆடவனின் அன்பு அணைப்பிற்காக ஏங்கினாள். அப்பொழுதைய காரியஸ்தன் சேகரன் நாயர் இறந்த போது, அவருடைய மகன் சங்கரன் குட்டி காரியஸ்தனானான். அவனும் இளைஞன். அழகன். ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் ஒரு தடவையாவது அங்கு வர நேர்ந்த காரியஸ்தன் சங்கரன் குட்டியை, நங்கேமா வைத்த கண் வாங்காமல் பார்த்துப் பெருமூச்செறிவது வழக்கம். அவனும் ஒருநாள் அவளைப் பார்த்தான். அவளைப் பார்த்தால் யார்தான் ஆசைப்பட மாட்டார்கள்?

மற்றவர்கள் உறங்கிய பிறகு இந்த இருவரும் நெல் குத்தும் தானிய அறையில் இரவில் சந்தித்துக் கொள்ளத் தொடங்கினர். அங்கு,

நங்கேமையின் உடலிலிருந்த சந்தனத்தின் மணமும், மஞ்சளின் நிறமும் சங்கரன் குட்டியில் கலந்தன.

ஒரு தடவை நங்கேமா, சாதாரணமாக வாந்தியெடுத்தாள். காரணவருக்கு இந்த விவரம் தெரிந்தது. உடனே, அவர் அவளை அழைத்து விசாரித்தார்.

தன்னைக் கொன்றாலும் ஆள் யாரென்பதைச் சொல்ல மாட்டேன் என்று அவள் வயிற்றைத் தொட்டுச் சத்தியம் செய்தாள். பலன் விபரீதமாக இருந்தது.

கோபாவேசம் கொண்ட ருத்ரன் நம்பூதிரி, நங்கேமையைக் காலைப் பிடித்துச் சுழற்றி வெளியே வீசியெறிந்தார். நிர்வாணமான நங்கேமா சென்று விழுந்தது இந்த முள் மரத்தின் மையத்தில்தான். நங்கேமா வலியால் உடலை நெளித்தபோது முட்கள் மேலும் ஆழமாக உடலில் இறங்கின. அன்று அவளைக் காப்பாற்ற யாரும் முற்படவில்லை.

பின்பு, மூங்கில் கழியால் நங்கேமாவின் உடம்பை மரத்திலிருந்து தட்டிவிட்டுச் சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று எரித்தனர். இப்பொழுதும் அந்த மரத்தில் நங்கேமா வசிப்பதாகச் சொல்லப்படுகிறது. வெறும் நங்கேமாவாக அல்ல, பிரம்மரக்ஷஸான நங்கேமா. வாழ்க்கையிலிருந்து விமோசனம் பெறாத நங்கேமா!

நள்ளிரவில், சில யாமங்களில் அந்த முள் முருங்கையின் மேற்புறத்தில் அவிழ்த்துப் போட்ட தலைமுடியுடன், ரத்தத்தில் குளித்தெழுந்த கோர ரூபிணியாக நிற்கும் நங்கேமையைக் கண்ட பயத்திலேயே இறந்துபோனவர்கள் உண்டு. அந்த முள் முருங்கையைப் பற்றித்தான் சூரிய நாராயணன் நம்பூதிரி கூறுகிறார். ஜயந்தன் மூச்சை அடக்கிப்பிடித்தபடி அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"அந்த முள் முருங்கையின் மேற்புறத்தில் கிளைகள் பிரியும் சந்திப்பில் ஒரு பொந்து உள்ளது. அதில் ஓர் ஆந்தை உண்டு. அதைப் பிடித்து வந்து, எட்டி மரத்தின் வேர்களால் எரியூட்டப்பட்ட ஹோமத்தில் உயிருடன் ஹோமித்துவிடு. பலகையை யார் எடுத்துக்கொண்டு போயிருந்தாலும் பயந்து மிரண்டு உன் முன்பாகக்



கொண்டு வந்து வைத்துவிடுவார்கள். உன் அடிமைபோல நீ அழைக்கும்போது வரவும் செய்வார்கள்!" - நிலவறைச் சமாதியிலிருந்து பரிகாரம் கிடைத்தது.

ஜயந்தன் கைகூப்பியபடியே நின்று அதைக் கேட்டுக் கொண்டிருந்தார். பதில் எதையும் கூறவில்லை. மேற்கொண்டு கேட்பதற்கு எதுவும் இல்லையென்று அவருக்குத் தோன்றியது. சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லியாகி விட்டது. இனிமேல் எதையும் கேட்பதில் பயனில்லை. சொன்னபடி செய்யவேண்டியதுதான். ஜயந்தன் அங்கிருந்து நகர்ந்தார்.

"விஷயம் பெரிய சிக்கலாகிவிட்டது!" என்றார் ஜயந்தன் தானவேதன் நம்பூதிரியிடம்.

"என்ன, அசுபச் செய்தி ஏதாவதா?"

"அப்படியொரு பெரிய சிக்கல்."

"என்னதான் செய்யப் போகிறீர்கள்?"

"எதையாவது செய்யத்தானே வேண்டும்!"

"அதுவரை நாங்கள் என்ன செய்வது?"

"இரண்டிலொன்று தெரியாமல் நீங்கள் இங்கிருந்து போகவேண்டாம். சொல்லியிருக்கிறபடி நான் ஹோமம் நடத்த வேண்டுமென்றால், இரவில்தான் செய்யவேண்டும். விஷயம் மோசமான மந்திர வகையைச் சேர்ந்தது. வந்து விழப் போவது தேவனோ, தேவியோ, மோகினியோ, பூதமோ யாராக வேண்டுமானாலும் இருக்கலாம்."

அன்று அமாவாசை தாண்டி நாலாம் நாள். தேய்ந்துபோன அரிவாள் மாதிரி நிலா ஆகாயத்தில் தெரிந்தது. மிக மெல்லிய வெளிச்சம் பூமியைத் தொட்டுக் கொண்டிருந்தது. சிலந்தி வலை படிந்திருப்பது போன்ற வெளிச்சம்.

ஜயந்தன், முள்முருங்கை மரத்தை நெருங்கினார். எப்படி மரத்தில் ஏறுவது என்று யோசித்தார். ஓர் ஏணியையாவது எடுத்து வந்திருக்கலாம். எப்படியும் அங்கிருக்கிற ஆந்தையை எடுக்க வேண்டும். இதில் வேறு யாரும் தலையிடக் கூடாது. நாமேதான் செய்ய வேண்டும். மரமேற வேண்டியதுதான்.

நங்கேமா பிரம்மராக்ஷஸ் அந்தக் கிளை பிரியும் இடத்தில் இருக்கலாம். அவளது உடம்பிலிருந்து பீறிட்ட ரத்தம் மரத்தின் மீது வடிந்து ஒழுகியிருந்தது.

ஜயந்தன் ஒரு தீர்மானத்திற்கு வந்தவராக கூடுவிட்டுக் கூடு பாயும் மந்திரம் ஜபித்து உடம்பில் பாதியை இறக்கி வைத்தார். பிறகு, ரத்த மோகினியை ஆவாஹனம் செய்து பக்கத்திலேயே நிறுத்தி வைத்தார். தான் மரம் ஏறுவதற்கு உதவும்படி அதற்கு உத்தரவிடவும் செய்தார்.

தனது ஏற்பாடுகள் எல்லாம் சரியாக உள்ளதா என்று ஒருமுறை சரிபார்த்துவிட்டு, வலதுகாலை ரத்தமோகினியின் கை மீது வைத்தார். முள் முருங்கையின் முள்களைக் கையால் பிடித்தபடி மேலேறத் தொடங்கினார். அவர் உயர்வதற்கு ஏற்றாற்போல் ரத்தமோகினியின் கைப்பகுதியும் உயர்ந்து உதவியது. விரைவிலேயே பொந்தை அடைந்தார். உச்சியில் யாரோ வாய்விட்டுப் பெரிதாகச் சிரிப்பது கேட்டது.

“எதற்காக வந்திருக்கிறாய்?” என்று ஒரு பெண் குரல் கேட்டது.

“ஆந்தையை எடுக்க வேண்டும்!”

“யார் சொல்லி அனுப்பினார்கள்?”

“சமாதியிலிருக்கும் பூர்வ பிதாமகன்தான் சொல்லியனுப்பினார்.”

மறுபடியும் சிரிப்பு பெரிதாகக் கேட்டது. அது நங்கேமாவின் சிரிப்புதான். ஒரு சாண் நீளமுள்ள முட்கள், துடிக்கும் உடம்பில் துளைத்ததால் துடிதுடித்து உடம்பை இழந்த, கர்ப்பிணியான நங்கேமாவின் சிரிப்புதான் அது.

மகாமாந்திரிகனான ஜயந்தனே அந்தச் சிரிப்பைக் கேட்டு ஒரு கணம் நடுங்கிப் போனார்.

“எடுத்துக்கொள்... எடுத்துக் கொள்...! வந்த காரியத்தை முடித்துக் கொள். ஆனால், இப்படி ஒருத்தி இங்கே இருக்கிறேன் என்பது ஞாபகத்தில் இருந்தால் நல்லது.”

“நான் என்ன செய்து விட்டேன்?”

“நீ ஒன்றும் செய்யவில்லை. ஆனால், என்னை இந்த மரத்தின் மீது



வீசியெறிந்த அந்த குலத் துரோகியின் வாரிசல்லவா நீ?”

ஜயந்தன் மௌனமாக இருந்தார். பிறகு பொந்து எங்கே என்று பார்த்தார். வாசுகி மந்திரம் ஜபித்துவிட்டுப் பொந்திற்குள் கை விட்டார். அதற்குள் பாம்பு ஏதாவது இருந்தால் ஒதுங்கிப் போவதற்குத்தான் அந்த மந்திரம். கை எதன் அருகிலோ சென்றபோது இரண்டு கண்கள் மின்னின. தைரியத்துடன் தடவிப் பார்த்தார். அதன் இறக்கைகள் கையில் பட்டன. கடைசியில் அதன் கழுத்தைப் பிடித்துக்கொண்டு, கீழ்ப்புறமாக இறங்கத் தொடங்கினார்.

ரத்தமோகினியின் கைகள் படிப்படியாக அவரைக் கீழே இறக்கிவிட்டன. உடம்பைப் பிடித்திருந்த மோகினியின் கை மறைந்தது. நிறுத்தி வைத்திருந்த பாதி உடம்பை மீண்டும் தன் உடலுடன் சேர்த்துக்கொண்டு, இல்லத்தை நோக்கி நடந்தார் ஜயந்தன்.

அப்போது இரவின் மூன்றாவது யாமம் பாதி தாண்டி விட்டிருந்தது. ஹோமத்திற்குத் தேவையான பொருள்களுடன், தென்புறமிருந்த எட்டி மரத்தின் கீழ் குடியிருக்கும் மாடன் தளத்தை அடைந்தார். அங்குதான் ஹோமகுண்டம் இருந்தது. ஹோம குண்டத்திற்குப் பின்புறம் சென்று அமர்ந்தார் ஜயந்தன். அக்கினி பூஜை செய்தார்.

தன்னுடைய மந்திர சக்தியால், ஆந்தையை உயிரில்லாத ஒரு பொருள் போல் அசைவில்லாமல் நிறுத்தி வைத்திருந்த ஜயந்தன், அதை மெதுவாக அக்கினி குண்டத்திற்குள் எடுத்து வைத்தார். பிறகு அதன் மீது இலையால் நெய்யெடுத்து ஊற்றினார்.

ஊற்றிய நெய் எரிந்து, மணம் பரவியது.

அந்த ஆந்தையின் இறக்கைகள் எரிவதைப் பார்ப்பதற்காகக் காத்திருந்தார் ஜயந்தன். திடுமென்று-

“என்ன... என்ன இது!” என்று அலறியபடி பயந்து நடுங்கிப் பின்புறமாகச் சரிந்தார்.



# 8

ஹோமகுண்டத்திற்குள் ஆயிரம் நாக்குகள் போல் உயர்ந்து எழுந்த அக்கினி ஜுவாலைகளின் மேற்புறமாக அந்த ஆந்தை பறந்து உயரத் தொடங்கியது. அதன் உருவம் பெரியதாகி, பயங்கரமான ஒரு ஜடாயுவைப்போல் வளர்ந்துகொண்டே இருந்தது. அதனுடைய கண்கள் தீப்பந்தங்கள் போல் ஜொலித்தன.

சட்டென்று அந்த உருவம் கீழ்ப்புறமாக இறங்கியது. அதனுடைய கால்களில் இருந்த கூர்மையான நீண்டு வளைந்த நகங்கள் ஜயந்தனின் கண்களுக்குத் தெரிந்தன. தன்னைக் கால்களால் கவ்வி எடுத்துப் பறக்க அது முயற்சிப்பது போல் அவருக்குத் தோன்றியது.

ஒரு விநாடி திரும்பிச் சட்டென்று பின்வாங்கி, கதவைத் திறந்துகொண்டு வீட்டின் தென்பகுதியில் தஞ்சமடைந்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த தானவேதன் நம்பூதிரிப்பாடும், வாசு நம்பூதிரியும் பயத்தால் நடுங்கத் தொடங்கினர்.

பயங்கர உருவம் படைத்த அந்தப் பறவை பிரமாண்டமான தன்னுடைய சிறகுகளை அடித்து அசைத்தபொழுது சூறைக் காற்றுபோல் ஓசையெழுந்தது. அந்தக் காற்றின் வேகத்தில் ஹோமத்திலிருந்து நெருப்பு அணைந்தது. சாம்பல் நான்கு புறமும் வீசியெறிந்தது போல் பரவியது. அங்கிருந்தவற்றை எல்லாம் அலங்கோலப் படுத்திவிட்டு அது எங்கோ பறந்து சென்றது.

சத்தமெல்லாம் அடங்கிய பிறகு ஜயந்தன் வெளியே வந்தார்: "இப்படியொரு சம்பவம் இந்த இடத்தில் இதுவரை நடந்ததில்லை" என்று ஆகாயத்தைப் பார்த்தபடி முணுமுணுத்தார்.

"இங்கே வந்தால் எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு காணலாம் என்றுதான் வந்தோம். இப்படியெல்லாம் நடக்க என்ன காரணமோ?" - தானவேதன் கேட்டார்.

"எனக்கும் ஒன்றும் புரியவில்லை. ஆனால், ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது. எதிராளி மோசமானவர் அல்ல!" - ஏதோ யோசித்தபடி



30233
A666159

பேசினார் ஜயந்தன்.

"இனி என்ன செய்யலாம்?"

"எல்லாவற்றையும் சரிப்படுத்திவிடலாம். நீங்கள் இங்கு வந்தபிறகு முடியாதது என்று ஒன்றும் கிடையாது. அதற்கு நான் உறுதியளிக்கிறேன்."

"அப்படியானால் நாங்கள் கிளம்பலாமா?" - தானவேதன் கேட்டார்.

"அவசரப்படாதீர்கள். இன்னும் ஒருதடவை நான் முயற்சி செய்து பார்க்கிறேன்."

"அப்படியானால் நாங்கள் தங்கியிருக்கிறோம்!"

எல்லோருமாகப் புதிய வீட்டிற்குச் சென்றார்கள். மறுநாள் குளியல், ஜபமெல்லாம் முடிந்த பிறகு தானவேதனும், ஜயந்தனும் பழைய கதைகளைப் பேசினர். வாசு நம்பூதிரி அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்.

ஓமல்லூர் கோயிலில் என்னமோ நடந்திருக்கிறதென்று சிலர் தெரிந்து கொண்டனர். ஆனாலும் விஷயம் இன்னதென்று தெளிவாக அவர்களுக்குத் தெரியவில்லை. காலை நேரத்தில் தினமும் தவறாமல் கோயிலுக்கு வரும் சிலர், தங்களுக்குள் பேசிய விஷயம் எப்படியோ வெளியிலும் ப்ரவியது. என்னவென்று சரியாகத் தெரியாததால் பேசிக் கொள்பவர்களிடம் ஒரே பரபரப்பு. எல்லாமே வதந்திகள்!

விஷ்ணுதேவன், தன் அம்மாவிடம் வெகு நேரமாகப் பேசிக் கொண்டிருந்தான். நேரம் பதினொன்றைத் தாண்டிவிட்டிருந்தது. வீட்டைப் புதுப்பித்தாகிவிட்டது. மராமத்துப் பணிகள் எல்லாமே செய்தாகிவிட்டது. காம்பௌண்டுச் சுவர் கம்பீரமாக நின்றிருந்தது. வெளிவாசல் புதியதாக இருந்தது.

காரியஸ்தர் ராமன்நாயர் தினமும் வரத் தொடங்கிவிட்டார். இதற்குள் ஏற்கெனவே கைவிட்டுப் போயிருந்த வயலும் திரும்பக் கிடைத்துவிட்டது. இந்தக் குடும்பத்திற்குச் சொந்தமான வயற் காட்டை வைத்திருந்தவர் சாக்கோ மாப்பிளை. (இங்கு மாப்பிளை என்பது, இந்துகள் அல்லாத கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்களைக் குறிக்கும்) அவர்தான் இதுவரை ஏகபோகமாக அனுபவித்து வந்தார்.

அந்த ஊரில் இருபோகம் விளைகிற வயலே அது ஒன்றுதான்.

கிழக்குப்புற மலையிலிருந்து விழும் நீர்வீழ்ச்சி அந்த வயலின் ஊடாகத்தான் ஆறாக நகர்ந்து கொண்டிருந்தது. ஆறு சிறியதானாலும் ஒருபோதும் வற்றாதது. கரையில் நின்று நீர் இறைத்தால் பயிர் சிரிக்கும்.

மிகவும் குறைவான பணத்தைத்தான் சாக்கோ மாப்பிளை குத்தகைக்காகக் கொடுத்திருந்தார். அதுவும் கொஞ்ச நாட்களுக்கு மட்டும். அதன் பிறகு அதுவும் நின்று போனது. இப்பொழுது அந்த வயற்காடு ஏறத்தாழ அவருடைய சொந்தம் போலவே ஆகிவிட்டிருந்தது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் சாக்கோ ஒருநாள் விடியற்காலையில் விஷ்ணுதேவனின் வீட்டிற்கு வந்தார். அவருடன் இரண்டு கூலிக்காரர்களும் இருந்தனர். அவர்களது தலையில் இருந்த கூடைகளில் பச்சைக் காய்கறிகளும், நேந்திரம் வாழைக் குலைகளும் இருந்தன. வெளி முற்றத்திலேயே கூடைகளை இறக்கி வைத்துவிட்டுக் கூலிக்காரர்கள் நகர்ந்து நின்றுகொண்டனர்.

சாக்கோ மாப்பிளையும், ராமன்நாயரும் அந்தக் கூடைகளை எடுத்து வெளிப்புறத்திலிருந்த திண்ணையில் வைத்தனர்.

"இதெல்லாம் என்ன?" - விஷ்ணுதேவனின் அம்மா சரஸ்வதி அந்தர்ஜனம் (அந்தர்ஜனம் என்றால் வீட்டை விட்டு வெளியேறாதவர் என்று பொருள். நம்பூதிரி வீட்டுப் பெண்கள் வீட்டுக்குள்ளேயே இருப்பதால் இந்தப் பெயர்)கேட்டார்.

"இதெல்லாம் உங்களுக்காகத்தான் தம்புராட்டி!" - சாக்கோ விநயமாகக் கூறினார்.

"உங்களைப் பார்த்து எத்தனையோ வருடங்களாகி விட்டன. என்னுடைய சிறுவயதில் பார்த்த ஞாபகம்... இப்பொழுதும் உங்களிடம் பெரிய மாற்றம் எதுவும் இல்லையே!"

"எழுபது வயதாகிவிட்டது தம்புராட்டி. உங்களுக்கு ஐம்பது வயதுக்கு மேல் இருக்குமே?" - சாக்கோ கேட்டார்.

"உண்மைதான். அவ்வளவும் சரி... அன்று அப்பாவும் உயிருடன் இருந்தார்." - சரஸ்வதி அந்தர்ஜனம் பழைய நினைவுகளில் மூழ்கினார்.



"அதற்குப் பிறகு உங்களது கல்யாணத்திற்கும் வந்திருந்தேன். சாதாரணக் கல்யாணமா! அது ஊர்த் திருவிழா மாதிரியல்லவா நடந்தது!"

"ம்... அதெல்லாம் ஒருகாலம்..."

"இனிமேலும் அதெல்லாம் வர முடியாதா என்ன!"

"என்ன சாக்கோ, புதிர்மாதிரி பேசுகிறீர்கள்?" சரஸ்வதி அந்தர்ஜனம் சந்தேகத்துடன் அவரைப் பார்த்தார்.

"இந்தாருங்கள்... இதை அப்படியே கைகளில் வாங்கிக் கொள்ளுங்கள். ஒருகாலத்தில் பெரிய திருமேனி எழுதித் தந்த பத்திரம். வெறும் நூறு ரூபாய்க்கு வயற்காட்டை எழுதித் தந்திருந்தார். இது உங்களிடமே இருக்கட்டும்" - சாக்கோ ஒரு கவரை நீட்டினார்.

"ராமன் நாயரே, என்ன இதெல்லாம்?" - தம்புராட்டி கேட்டார்.

"அன்று குத்தகைக்குக் கொடுத்திருந்த பத்திரம். அதை இப்பொழுது திருப்பித் தருகிறார்!" - ராமன்நாயர் விளக்கிக் கூறினார்.

"ஐயோ, இப்பொழுது எதற்கு அதெல்லாம்? எப்பொழுதோ முடிந்துபோன விஷயங்கள். இனி எதற்கு அதைப் பற்றிப் பேச வேண்டும்?"

"நீங்கள் இப்படியெல்லாம் சொல்லக்கூடாது. இதை வாங்கிக் கொண்டால்தான் என் மனதுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும்."

"அப்படியானால் அதை வாங்கிக்கொள்ளுங்கள் ராமன் நாயரே!" - தம்புராட்டி கூறினார்.

விஷ்ணுதேவன் வாசற்படியைத் தாண்டி வந்து கொண்டிருந்தான் அப்போது.

"அவரிடமே கொடுத்து விடுங்கள். அவருக்குச் சேர வேண்டிய பொருள்தானே அது!" - ராமன்நாயர், விஷ்ணுதேவனைக் கை காட்டினார்.

விஷ்ணுதேவன் அதை வாங்கிக் கொண்டான்.

"என்ன, திடீரென்று...?"

"என்னிடம் வேறு எதுவும் கேட்காதீர்கள். எல்லாவற்றையும் பிறகு சொல்கிறேன்."

"அப்படியானால் ராமன் நாயர் இனிமேல் பழைய ராமன்

நாயராகிறார் என்று அர்த்தம்" - விஷ்ணு கண்களைச் சிமிட்டியபடி கூறினான். அவரது முகம் தெளிவடைந்தது. "ஆமாம், அந்த வயற்காடு மொத்தம் எவ்வளவு வரும்?"

"ஐம்பது ஏக்கருக்கு மேல் இருக்கும். தங்கம் விளையும் பூமி. எப்படி அவ்வளவையும் திடுமென்று விவசாயத்திற்குத் தயார் படுத்துவது என்பதுதான் புரியவில்லை" - ராமன்நாயர் மலைத்துப் போய் நின்றார்.

"விதை நெல்லை நான் தருகிறேன். அந்த கவலையே உங்களுக்கு வேண்டாம்" - சாக்கோ கூறினார்.

"அப்படியானால் பிரச்சனையில்லை. நாம் சமாளித்துக் கொள்ளலாம்!" - ராமன் நாயர் நிம்மதியடைந்தார்.

சாக்கோ விடைபெற்றார். புறப்படும்போது அவரது முகத்தில் ஒருவகையான நிம்மதி தெரிந்தது. தலையில் சுமந்து கொண்டிருந்த பெரிய பாரத்தை இறக்கி வைத்தது போன்ற ஆறுதல். அவர் போன பிறகு மூன்று பேரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடியே நின்றிருந்தனர்.

"ராமன் நாயரே, இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?" - தம்புராட்டி கேட்டார்.

"என்னவோ, எனக்கு ஒன்றும் புரியவில்லை!" - அவர் கையைப் பிசைந்து கொண்டார்.

ராமன் நாயர் வெளியேறும்போது ஒரு பெரிய காரியஸ்தருடைய பெருமை அவரது நடையில் தெரிந்தது. 'நான் குருக்ஷேத்ர மனையின் காரியஸ்தன் என்று எங்கு வேண்டுமானாலும் நெஞ்சை உயர்த்திச் சொல்லலாமே!'

வெளியேறியவர், நேராக டீக்கடைக்குத்தான் சென்றார். அங்கிருந்தவர்களிடம் நடந்த விஷயங்களை அப்படியே ஒப்பித்தார்.

செய்தியைக் கேட்டவர்கள் வியப்பால் விழிகளை விரித்தார்கள்.

"இப்பொழுதைய சின்னத் திருமேனியின் அதிர்ஷ்டம்தான் எல்லாவற்றுக்கும் காரணம்..." என்றார் ஒருவர்.

"உண்மைதான்! அவரைப் பார்த்தாலே ஐஸ்வர்யம் உள்ளவராகத்தான் தெரிகிறார். பழைய ஆசாரம் தவறாத, நல்ல



குணங்கள் எல்லாமே அவரிடம் உண்டு. இது எனக்கு நன்றாகவே தெரியும்" என்றார் மற்றொருவர்.

"அது மட்டும்தானா? அவர் சிறந்த பக்தரும் கூட. அவருக்கு பகவதியின் அருள் எப்பொழுதும் உண்டு."

இதையெல்லாம் கேட்டபடி ராமன் நாயர் அங்கிருந்து புறப்பட்டார்.

அதேசமயம், வீட்டை அடைந்த சாக்கோ நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

"என்னங்க... அவங்க ஒப்புக்கொண்டாங்களா?" - அவரது மனைவி விசாரித்தாள்.

"ஒப்படைத்து விட்டேன்."

"என்ன விஷயம் திடீரென்று... இப்படி ஏதாவது கேட்டார்களா?"

"கேட்கவுமில்லை. நான் சொல்லவுமில்லை."

"நல்ல வேலை செய்தீர்கள்!"

முந்தையநாள் நள்ளிரவு நேரம் தாண்டிய பிறகுதான் சாக்கோவுக்கு இப்படித் திடுமென்று ஒரு யோசனை தோன்றியது. அதற்குக் காரணமும் இருந்தது.

தூக்கம் வராமல் வராந்தாவில் உட்கார்ந்திருந்தார். என்னவோ தெரியவில்லை, இரண்டு மூன்று நாள்களாக ஒருவிதமான மன உளைச்சல் அவருக்கு இருந்து கொண்டே இருந்தது. எதைச் செய்தால் இது தீரும் என்பது புரியாத நிலை. சும்மா உட்கார்ந்து பீடியை ஒன்றன் பின் ஒன்றாகக் கொளுத்திப் புகைத்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது யாரோ தன்னை நோக்கி நடந்து வருவது போல் தெரிந்தது. உற்றுக் கவனித்தார். நெருங்கிய பிறகுதான் அது ஒரு பெண் உருவமென்று புரிந்தது. அப்படியொரு அழகி!

"யாரென்று தெரியவில்லையே?" சாக்கோ வியப்புடன் கேட்டார்.

"பெயர் தேவப்ரியா. உங்களைப் பார்ப்பதற்காகத்தான் வந்திருக்கிறேன்" - வந்தவள் பேசினாள்.

"இந்த நேரத்திலா?"

"ஆமாம். ஒவ்வொருவருக்கென்று ஒரு நேரம் உண்டல்லவா?"

"நீங்கள் சொல்வது புரியவில்லையே!"

தனக்கு முன்பாக நின்று கொண்டிருக்கும் பெண்ணைப் பார்த்தால் இந்தக் காலத்துப் பெண்ணாகத் தெரியவில்லை. சரிகை வேலைப் பாடமைந்த உடைகள். சந்தன நிற உடம்பு.

"நீங்கள் உடனே கற்பனை செய்கிற மாதிரி பெண்ணல்ல நான். வந்த விஷயத்தைச் சட்டென்று சொல்லி விடுகிறேன். குருக்ஷேத்ர மனைக்குச் சொந்தமான வயல் ஒன்று உங்களிடம் இருக்கிறதே, அதாவது வெறும் நூறு ரூபாய்க்கு நீங்கள் குத்தகைக்கு எடுத்த வயல்! அதுவும் ஒருவிதமான பொய்க்கணக்கால் வந்த நூறு ரூபாய். நான் சொல்லாமலேயே உங்களுக்குத் தெரிய வேண்டும். ஒருதடவை ஓணம் பண்டிகைக்காக நீங்கள் கொஞ்சம் நெல், காய்கறிகளைக் கொண்டுபோய்க் கொடுத்தீர்கள். பிறகு அதையெல்லாம் ஒரு கணக்கில் நூறு ரூபாயாக்கி... ரொம்பக் கெட்டிக்காரர்தான். ஞாபகமிருக்கிறதா?"

வார்த்தைகள் ஒவ்வொன்றும் காய்ச்சிய ஈயம் போல் அவர் காதில் பாய்ந்தன. அவர் உடல் நடுங்கத் தொடங்கிற்று.

"இன்னும் அதிகமாக நான் எதையும் சொல்ல வேண்டாமென்று நினைக்கிறேன். நாளைக் காலையில் முதல் வேலையாக நீங்கள் அந்தக் குத்தகைப் பத்திரத்தைக் கொண்டுபோய் அவர்களிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். புரிகிறதா? நான் இப்பொழுது வந்துவிட்டுப் போனதற்கான அடையாளம் ஏதாவது வேண்டுமா? காலையில் இதே இடத்தில் பாருங்கள் புரியும்" - பேசியபடியே அந்த உருவம் வளர்ந்து பிரமாண்டமாக உயர்ந்தது.

சாக்கோவின் உடம்பு நடுங்கிற்று. வியர்வை வெள்ளம் பெருக்கெடுத்தது. அந்த உருவம் மெதுவாகச் சுழலத் தொடங்கி, பின் சட்டென்று மறைந்தது.

காலையில் சாக்கோ மாப்பிளை முற்றத்திற்கு வந்து பார்த்த போது, வட்டப் பரப்பில் புதிய ரத்தம் குட்டை போல் தேங்கியிருந்தது. அதன் அருகிலேயே ஒரு காட்டுப் பூனையின் தலை அறுபட்டுக் கிடந்திருந்தது!



## 9

கிழக்குப்புற வயல் திரும்பக் கிடைத்த அன்று இரவு சாஸ்வதி அந்தர்ஜனம் சீக்கிரமாகவே படுத்துவிட்டாள். விஷ்ணுதேவன் வீட்டு வராந்தாவில் உட்கார்ந்திருந்தான். ஜாமக் கோழி கூவிய பிறகு சற்று நேரத்தில் தேவப்ரியா வந்தாள்.

வந்தவள் அவனை நெருங்கி, அவனது மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டாள்.

"இப்பொழுது நிலைமை எப்படி உள்ளது?" என்று கேட்டான்.

"எந்த நிலைமை."

"வயற்காடு திரும்பக் கிடைத்து விட்டதில்லையா?"

"ஓகோ, அது உன் வேலைதானா?"

"ஆமாம். நான் இன்னும் ஒரு விஷயத்தையும் சொல்கிறேன்."

"என்ன?"

"கொஞ்சம் கஷ்டமான விஷயம்தான்!"

"பரவாயில்லை, சொல்!"

"நான் சொல்வது நம்ப முடியாதது போல் தோன்றலாம்" - பேசியபடியே அவள் அவனை நெருங்கிப் படுத்தாள். உடையற்ற அவளது தோள் பகுதிகள் அவனது மார்பில் உராய்ந்தன. அவளது உடல் இதமான வெப்பத்துடன் இருந்தது. அவள் பேசியபோது காட்டில் வளரும் பிச்சிப்பூவின் மொட்டுகள் தோன்றி மறைந்தன.

"இப்போதைய நிலைமையிலேயே நான் உள்ளதைச் சொன்னால் யாராவது நம்புவார்களா என்ன?" விஷ்ணு கேட்டான்.

"உண்மை! அப்படித்தான் இருக்கவேண்டும். இதையெல்லாம் அவர்கள் நம்பத் தொடங்கினால், பிறகு என்னால் இப்படியெல்லாம் உலாவ முடியுமா என்ன?"

"உன்னிடம் நான் ஒன்று கேட்கலாமா?" - ஏதோ யோசனையில் ஆழ்ந்தபடி விஷ்ணு கேட்டான்.

"என்ன கேட்கப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும்."

"அப்படியானால் நீயே அதைச் சொல். கேட்டுக் கொள்கிறேன்.!"

"கோயிலில் உள்ள துவாரபாலிகை சிலையைப் பற்றியதுதான் உங்கள் சந்தேகம், இல்லையா? அதாவது கருவறையை ஒட்டியுள்ள வாசற்படியின் வலது புறத்திலுள்ள தேவப்ரியாவின் சிலையைக் குறித்து யோசிக்கிறீர்கள். அப்படித்தானே?"

"மீதியையும் கூறினால்தானே விளங்கும்!"

"நான் இங்கு வந்திருக்கும்போது, சிலை கோயிலில் இருக்குமா, இருக்காதா என்று சந்தேகப்படுகிறீர்கள்."

"விஷயம் அதேதான்!" - வியப்புடன் பேசினான் விஷ்ணுதேவன்.

"இங்கிருந்து கோயில் அதிக தூரமில்லை. நான் உங்களை அங்கேயே கொண்டு போகிறேன். எழுந்திருங்கள்... என் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள்."

விஷ்ணு எழுந்து அவளது கையைப் பிடித்துக் கொண்டான்.

"கண்களை மூடிக் கொள்ளுங்கள்."

கண்களை மூடிக்கொண்டான். தன்னுடைய கால்கள் நிலத்திலிருந்து உயர்வதுபோல் தோன்றியது. கொஞ்ச நேரத்திற்கு அவனுக்கு எதுவுமே நினைவில் இருக்கவில்லை.

"நாம் குறிப்பிட்ட இடத்தை வந்தடைந்திருக்கிறோம். கண்ணைத் திறக்கலாம் நீங்கள் "- தேவப்ரியா கூறினாள்.

கண்களைத் திறந்த விஷ்ணுதேவன், கருவறைக்கு முன்பாக நின்று கொண்டிருப்பதை உணர்ந்தான்.

"உங்கள் சந்தேகத்தை நீங்களே, உங்கள் கண்களால் பார்த்துப் போக்கிக் கொள்ளுங்கள்."

விஷ்ணு, சிலை இருந்த இடத்தை உற்றுக் கவனித்தான். அங்கிருந்த கற்சிலை மாயமாக மறைந்து விட்டிருந்தது. ஒரு சிலை அங்கு இருந்தது என்பதற்கான அடையாளம் மட்டுமே தெரிந்தது. அருகிலேயே தேவப்ரியா நின்று கொண்டிருந்தாள். 'என்ன ஒரு அதிசயம் இது !'- அவன் வியந்தான்.

"பார்த்து விட்டீர்களா? இவ்வளவு தூரம் வரையில் வந்தது வந்துவிட்டோம். வாருங்கள், சற்று நேரம் ஆலமரத்தடியில் உட்கார்ந்து விட்டுப் போகலாம். யாரும் நம்மைப் பார்க்காமலும் இருப்பார்கள்."



இருவரும் ஆலமரத்தடித் திண்ணையில் அமர்ந்தனர். மிகவும் வயதான ஆலமரம் அது. அதன் அடிவேர்கள் பலவித வடிவங்களில் வளைந்தும் நெளிந்தும் உயர்ந்தும் படர்ந்திருந்தன. அந்த வேரைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த திண்ணை அங்கங்கே பெயர்ந்திருந்தது.

கோயிலைப் பற்றிப் பலவகையான ஐதீகங்கள் வழங்கி வந்தன. எல்லாமே தலைமுறை தலைமுறையாகச் சொல்லிச் சொல்லிக் கேள்விப்பட்டவை மட்டும்தான்.

ஒரு காலத்தில் மிகவும் சக்தி வாய்ந்ததாக விளங்கிய கோயில் அது. இப்பொழுது பழைய பூஜை, சடங்குகள் எதையும் சரியான நேரத்திற்குச் செய்ய ஆட்கள் இல்லாததால், கருவறைக்கு வெளிப்புறத்தில்கூடச் செடிகொடிகள் மண்டி வளர்ந்திருந்தன. வருடத்திற்கு ஒரு தடவை யாராவது கோயிலைச் சுத்தம் செய்தால் உண்டு.

நிலவு அந்தப் பகுதியையே மஞ்சள் நிறமாக்கியிருந்தது. குன்றுக்கு மேற்புறம் தெரிந்த சந்திரன், பூமியின் மேற்பரப்பிலும், மர உச்சிகளிலும் தனது சாயத்தைக் கலக்கி ஊற்றி விட்டிருந்ததுபோல் இருந்தது.

"நான் உங்களை இங்கு அழைத்துக்கொண்டு வந்தது வேடிக்கைக்காக மட்டும் அல்ல. அதைக் காண்பிக்கவும் தான்" - தேவப்ரியா மதிலைச் சுட்டிக்காட்டியபடி பேசினாள்: "நம்மை இப்படியே யாராவது பார்த்து விட்டால் முதலில் சந்தேகம் வரும். பிறகு விசாரித்துத் தெரிந்துகொண்டால் மொத்தத்தில் சிக்கலாகிவிடும்."

"என்ன மாதிரியான சிக்கல்?" விஷ்ணு கேட்டான்.

"எல்லா மந்திரவாதிகளும் ஒரே மாதிரியாக இருக்கமாட்டார்கள். சிலர் கெட்டிக்காரர்களாகவும் இருப்பார்கள்."

"சொல்வது புரியவில்லை!"

"புரியும்படி சொல்கிறேன். தேவதைகளைக்கூடத் தங்கள் சொற்படி ஆட்டி வைக்கிற மந்திரவாதிகள் இருக்கிறார்கள். நம்மைப் பற்றிய விவரம் அவர்களுக்குத் தெரிந்துவிட்டால், அவர்கள் தங்கள் விருப்பப்படி நம்மை மாற்றி விடுவார்கள்."

"ஐயோ, அப்படி ஏதாவது நடந்து விட்டால்...?"

"அதற்குப் பிறகு நம்மால் எதுவும் செய்ய முடியாது. அதன் பிறகு ஒரு போதும் நான் உங்களைப் பார்க்கவே முடியாது."

"உண்மையாகவா? அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" விஷ்ணுதேவன் திடுக்கிடலுடன் கேட்டான்.

"கொஞ்சம் சிக்கலான விஷயம்தான்."

"பரவாயில்லை, என்ன செய்ய வேண்டுமென்று சொன்னால் நான் முயற்சி செய்கிறேன்" - விஷ்ணு உறுதியுடன் பேசினான்.

"அப்படியானால் கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள். நான் தேவியைப் பிரார்த்தித்து ஒரு வரம் வாங்கியிருக்கிறேன். எத்தனையோ வருடங்களுக்கு முன் வாங்கிய வரம் அது. இன்றுவரை அப்படிப்பட்ட வரத்தை தேவி வேறு யாருக்கும் வழங்கியதே இல்லை" - தேவப்ரியா கோயிலுக்குள் இருக்கும் கருவறையைப் பார்த்தபடியே பேசினாள். அவளது மனதில் பலவகையான திட்டங்கள் மாறி மாறித் தோன்றுவது முகத்தில் தெளிவாகத் தெரிந்தது.

"நான் கடுமையான தவமிருந்து தேவியிடம் அந்த வரத்தைப் பெற்றிருக்கிறேன். எங்களது கூட்டத்தாரில் யாரும் இதுவரையில் இதே போல் பெற்றிருக்கிறார்களோ என்னவோ, தெரியவில்லை!"

தேவப்ரியா என்ன சொல்கிறாள் என்பதைப் புரிந்துகொள்ளும் ஆவலுடன் விஷ்ணு அவள் முகத்தையே பார்த்தபடி இருந்தான். கோயிலும், சுற்றுப்புறமும் அமைதியாக இருந்தன. நிழல் பகுதிகளிலிருந்து கூட எந்த ஜீவராசியும் குரல் கொடுக்கவில்லை. அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து கிழக்குப் பகுதியிலுள்ள குன்று தெளிவாகத் தெரிந்தது. பசும்புல்லைப் போர்த்தி வைத்தது போல் அடுக்கடுக்காகத் தெரியும் அந்தக் குன்றின் சரிவு படிப்படியாக இறங்கி சமதளத்தில் கலப்பது வயல்களின் அருகில்தான். கோயில் இடம் பெற்றிருந்ததும், வயல்களுக்கு நடுவிலிருந்த ஒரு குன்றின் மேல்தான். அந்தக் கோயிலிலிருந்து நான்கு புறமும் சரிவாகக் குன்று இறங்கிக் கொண்டிருந்தது.

அங்கிருந்தபடியே பார்த்தபோது குன்றிலிருந்து பிரிந்து செல்லும் பாதைகள் தெளிவாகத் தெரிந்தன. அதில் மனிதர்கள் நடந்தால் கூடத்



தெரியும் போலிருந்தது.

கோயிலுக்கு அருகிலிருந்த பரந்தவெளியில்தான் உற்சவ காலங்களில் கொண்டாட்டமெல்லாம் நடைபெறும். உற்சவத்திற்கென்றே செடிகளை எல்லாம் வெட்டித் தள்ளி மைதானத்தைச் சுத்தம் செய்வார்கள். சமீபத்தில்தான் உற்சவம் நடந்திருந்ததால் மைதானம் சுத்தமாக இருந்தது.

"இவ்வளவு கஷ்டப்பட்டு நான் தேவியிடமிருந்து வாங்கியுள்ள வரம் என்னவென்று தெரிந்தால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்."

"முதலில் அதைச் சொல். அது என்னவென்று தெரிந்துகொள்ளும் ஆவலுடன் காத்திருக்கிறேன்." - விஷ்ணுதேவன் அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"அதைத்தானே சொல்லி வருகிறேன். ஒரு ஜென்மம் முழுவதும் நான் மனிதப் பெண்ணாக வாழ்வதற்குள்ள வரத்தைத்தான் தேவி எனக்குத் தந்திருக்கிறார்."

"என்ன ... உண்மையாகவா? என்னால் இதை நம்பவே முடியவில்லையே" - விஷ்ணு அதிக வியப்புடன் கேட்டான்.

"நான்தான் ஆரம்பத்திலேயே சொன்னேனே, நீங்கள் நம்ப மாட்டீர்கள் என்று."

"நான் மட்டுமல்ல, யாராலும் இதை நம்ப முடியாது. இப்படியெல்லாம் நடந்துள்ளது என்று புராணங்களில் மட்டும்தான் நான் படித்திருக்கிறேன்."

"அப்படியானால் அது தவறு. நீங்கள் உங்கள் அம்மாவிடம் கேட்டுப் பார்த்தால் தெரியும். பழங்காலத்தில் - அதாவது வெகு பழங்காலத்தில் உங்களது இல்லத்தைச் சேர்ந்த ஒரு அந்தர்ஜனத்தை ஒரு கந்தர்வன் காதலித்தான். அவள் கந்தர்வனுடன் மிக நெருங்கிய தொடர்பு வைத்திருந்தாள்..."

"நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். என்னுடைய பாட்டி என் சின்ன வயதில் இந்தக் கதையைக் கூறியிருக்கிறாள். இப்பொழுது ஞாபகம் வருகிறது."

"நிலா வெளிச்சமுள்ள இரவுகளில் அந்தக் கந்தர்வன் அந்தர் ஜனத்தைப் பார்க்க வருவது வழக்கம். அவர்கள் முதன்முதலாகச்

சந்தித்துக் கொண்டதே ஒரு பௌர்ணமி நாளில்தான். அதுவும் வேடிக்கையான கதை. ஒரு தடவை கந்தர்வ யாமத்தின்போது சட்டென்று அறையை விட்டு வெளியே வந்த அந்தர்ஜனம், சந்தித்தது கந்தர்வனைத்தான். அந்த முதல் சந்திப்பே மிகவும் 'வலுவானது. இருவரும் ஒன்றிவிட்டார்கள்."

விஷ்ணுதேவன் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"அன்று முதல் எல்லா பௌர்ணமி நாட்களிலும் கந்தர்வன் அவளைக் காண வருவான். இருவரும் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிப்பார்கள். கடைசியில் அவள் கர்ப்பவதியானாள். மூன்று மாத காலம் வரை கர்ப்பத்தை வெளியே தெரியாமல் வைத்திருந்தாள். ஒருநாள் வெளிப்பட்டுவிட்டது அந்த ரகசியம். தன்னுடைய வயிற்றில் வளரும் குழந்தையின் அப்பா ஒரு கந்தர்வன் என்று கூறினால் யாராவது நம்புவார்களா என்ன?"

"பிறகு என்ன நடந்தது?" - விஷ்ணுதேவன் அடக்கமாட்டாத ஆவலுடன் கேட்டான்.

"அதைக் கூறினால் வருத்தப்படக் கூடாது."

"வருத்தப்பட மாட்டேன்."

"வேண்டாம். அதை நீங்கள் தெரிந்து கொள்ளாமல் இருப்பதுதான் நல்லது" - அவளும் அவனுடைய பாட்டி மாதிரியே பாதியில் நிறுத்தி ஆவலை வளர்த்தாள்.

"நான் வற்புறுத்த மாட்டேன். இருந்தாலும் தெரிந்தால் நல்லதென்று நினைக்கிறேன்."

"அன்றைக்கு இருந்த வீட்டின் காரணவர், அந்த அந்தர்ஜனத்தை மண்ணுக்கடியில் உயிருடன் புதைத்துவிட்டார். எங்கே என்று கேட்காதீர்கள். அந்தச் சம்பவத்துக்குப் பின்னர்தான் உங்களது இல்லம் சீரழியத் தொடங்கிவிட்டது. இல்லத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் சாபத்துடன் இறந்தனர். அந்தத் தொடர் சாபத்திலிருந்து இன்னும் உங்களது குடும்பம் விமோசனம் பெறவில்லை."

"அதற்கு என்ன வழி?"

"ஒரு கந்தர்வனது உயிரிலிருந்து உருவான குழந்தைதான் அங்கு உயிருடன் மூச்சுத் திணறி இறந்து போனது. அதற்குப் பரிகாரமாக ஒரு



மோகினி கர்ப்பம் தரித்து, உங்களுடைய இல்லத்தில் பிரசவிக்க வேண்டும். அப்படி ஒன்று நிகழ்ந்தால்தான் அந்தச் சாபம் நிவர்த்தியாகும்" - அவள் கூறினாள்.

"நீ சொல்வது உண்மையா?"

"ஆமாம்... ஆனால், மோகினி மனிதப் பெண்ணாக மாற வேண்டும். அதற்கும் சில நடைமுறைகள் உள்ளன."

"என்ன செய்ய வேண்டும்?"

"அதைச் சொல்லித் தருவதற்குத்தான் நான் உங்களை இங்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன்."

தேவப்ரியா சொல்லி நிறுத்திய அதே சமயம், கருவறைக் கோயிலின் கதவுத் தாழ்ப்பாள் கழன்று விலகும் சத்தம் கேட்டது!



## 10

கோயில் கருவறையின் தாழ்ப்பாள் விலகுவதைக் கண்ட விஷ்ணுதேவன் திடுக்கிட்டான்.

'வெளிப்புறமாகத் தாழ்போட்டுக் கதவு பூட்டப்பட்டிருந்தது. யாரும் தொடாமலே அந்தப் பூட்டு திறந்துகொண்டு, தாழ்ப்பாள் விலகுகிறது. உட்புறமிருந்து இந்த வேலையைச் செய்வது யாராக இருக்கும்? யாரால் அது முடியும்? தேவிதானே உள்ளே இருப்பது? தேவியை மீறிக்கொண்டு இந்தக் கதவை இந்த நேரத்தில் திறப்பது யார்?' விஷ்ணு யோசித்தான்.

தேவப்ரியாவும் ஒரு கணம் அசைவற்று நின்றுவிட்டாள். அவளது முகம் பயத்தால் வெளுத்துவிட்டது. அவளுக்குக் கூடத் தெரியாத ரகசியமா அது!

இருவரும் மூச்சைப் பிடித்தபடி அந்தக் கதவையே உற்றுப் பார்த்தனர். வாசற்படியை மிதித்தபடி ஓர் உருவம் இறங்கி வந்தது. யார் அது? கடவுளே... ஓமல்லூர் கோயில் பகவதிதான் அது.

தாமரை இதழ் போன்ற பாதங்களில் தங்கக் காப்புகள். பளிங்கு போன்ற விரல்களில் நாகமோதிரங்கள். இடுப்பிலிருந்த ஒட்டியாணத்தில் வைரங்கள் கண்ணைப் பறித்தன. கழுத்திலிருந்து உடலை மறைத்துக் கொண்டிருக்கும் மரகத, பத்மராக, கோமேதகக் கற்கள் பதித்த தங்கச் சங்கிலிகள், காக மாலைகள், மணிக்கட்டுகளில் தங்க வளையல்கள், தோளில் சுற்றிக் கிடக்கும் பாம்பு வளையங்கள், காதுகளில் நட்சத்திரங்களைக் கட்டித் தொங்கவிட்டது போன்ற வளையங்கள். தேவி... தேவி... தேவி...

"மகாமாயே..." - விஷ்ணுதேவனின் உதடுகள் அசைந்தன. கண்களும் மனதும் ஒரே சமயத்தில் தேவியை வணங்கின. தேவப்ரியா நடுநடுங்கினாள்.

துவாரபாலிகையான தன்னை வலதுபுறம் காணவில்லை என்றால் தேவி என்ன செய்வாரோ? இப்படி வெளியேறுவது அவள் வழக்கமல்ல. இது போன்ற உண்மையான வடிவத்தில் தேவி இதுவரை வெளியேறியதும் இல்லை.

இந்தக் கோயிலுக்கு எத்தனையோ நூற்றாண்டு வயதிருக்கும். அன்றிலிருந்து இன்றுவரை தான் அங்கு காவல் இருக்கிறோம். ஒருவேளை தேவி அங்கு குடியிருக்கத் தொடங்கிய காலத்திலிருந்து கூட இருக்கலாம்.

தேவி படியில் நின்றபடியே வலதுபுறமும் இடது புறமும் பார்தார். சட்டென்று அவரது கண்களில் ஒரு ஒளி தட்டுப்பட்டது.

"மந்தாகினி" தேவி இடது புறத்திலிருந்த துவாரபாலிகையை அழைத்தார்.

"தேவி என்னவோ பேசுகிறார் போலிருக்கிறது. எனக்கு ஒன்றும் கேட்கவில்லையே?" விஷ்ணுதேவன் கேட்டான்.

"என்னைத் தொட்டுக் கொண்டிருந்தால் கேட்கும்" என்றாள் தேவப்ரியா. விஷ்ணு அவளது தோளைத் தொட்டபடியே கவனித்தான்.

"மந்தாகினி, தேவப்ரியா எங்கே போனாள்?" - தேவியின் குரல்.

"மன்னிக்க வேண்டும் தேவி. உங்களுக்குத் தெரியாத எதுவும் எனக்கும் தெரியாது" மந்தாகினி சிலை பதிலளித்தது.



தேவி அங்கேயே சற்று நேரம் நின்றிருந்தார். அவரது பார்வை எங்கெங்கோ பாய்ந்தது.

"அவளுடைய தவம்..." தேவியின் உதடு உச்சரித்தன.

சட்டென்று அந்த இடம் ஒளி மயமானது. சூரியனின் மையப் பகுதி போன்று கண்கூசும் ஒளிப்பிழம்பு. அந்தத் திசையையே பார்க்க முடியாதபடி இருவரும் அமர்ந்திருந்தனர். விநாடி நேரத்தில் அவர்களது கண்களிலிருந்து அந்தக் கோயில், சுற்றுப்புறம் எல்லாமே மறைந்து போனதுபோல் தெரிந்தது.

"வாருங்கள் போகலாம்... எனக்கென்னவோ பயமாக உள்ளது" விஷ்ணுதேவனின் கையைப் பிடித்தபடி தேவப்ரியா எழுந்தாள். அங்கிருந்து புறப்பட்டார்கள். தேவப்ரியா பறந்து கொண்டிருக்கிறாள் என்று அவனுக்குத் தோன்றியது. கடைசியாக ஒரு மண்டபத்தின் முன் அவர்கள் வந்து நின்றார்கள்.

"இது நாகமோகினியின் கோயில். இங்கு நாம் அபயம் கோரலாம். கோபத்தில் உள்ள தேவியை ஆறுதல்படுத்த மோகினி தேவியால் தான் முடியும்." - தேவப்ரியா "விஷ்ணுதேவனின் கையைப் பிடித்தவாறு, மோகினி யோயிலைப் பார்த்தபடியே பிரார்த்தனையில் மூழ்கினாள்."

"தேவி... அம்மா! உன் மகளிடம் கருணை காட்ட வேண்டும். என்னுடைய மனம் ஒரு கணம் பதறித்தடுமாறி நான் ஒரு நரனை மோகித்துவிட்டேன். நாங்கள் ஒன்றாகிப் போனோம். தேவ அம்சமுள்ள இந்த இளைஞர்தான் என்னுடைய உயிர். எங்களைப் பிரித்துவிடாதே. எங்களுக்கு ஒரு ஜன்மம் தாருங்கள். வரும் பௌர்ணமி நாட்களிலும், நாக பஞ்சமி நாட்களிலும் உங்களுக்கு மஞ்சள் தூளையும், பாலையும் நிவேதனம் செய்கிறோம்..."

நாகமோகினியின் கோயிலுக்குள் மணி ஒலித்தது. மிகச் சன்னமான சத்தத்துடன் அந்த மணியோசை கேட்டது.

"மோகினி தேவி வரம் தந்துவிட்டார்" என்றாள் தேவப்ரியா.

"இனி நாம் வீட்டிற்குப் போகலாமா?" விஷ்ணு கேட்டான்.

"போகலாம்... கந்தர்வயாமம் முடிந்த பிறகு நான் கோயிலுக்குச் செல்ல வேண்டும். அதற்குள் தேவியின் கோபம் தீர்ந்திருக்கும்."

"தேவப்ரியா, நீதான் என்னுடைய எல்லாமே. இந்த உலகத்தில் எந்த ஒரு மனிதனும் பார்க்காததையும், கேட்காததையும் நீ எனக்குக் காட்டித் தந்திருக்கிறாய். நீதான் என்னுடைய வாழ்க்கை... நம்பிக்கை... எல்லாமே" - விஷ்ணுதேவன் அவள் தோள்களைப் பிடித்துத் தன்னோடு நெருக்கி அணைத்து, அவளது நெற்றியில் முத்தமிட்டான். அவளது மேலாடை நழுவி விழுந்தது. அவள் அவனது நெஞ்சோடு நெஞ்சாக ஒன்றினாள்.

கனவு அவர்களைத் தாலாட்டியது. ராகங்களின் ஸ்வர இழைகள் அவர்களுக்குள் கீதம் இசைத்தன. படுக்கையில், மனோரஞ்சிதத்தின் பரிமள வாசனையில் படுத்துக் கிடந்தபோது,இந்திர சபையின் நடன மணிகளின் நாட்டிய லயத்தில் அமிழ்ந்து போனவன் போலிருந்தான் விஷ்ணு.

எரிந்து கொண்டிருந்த எண்ணெய் விளக்கின் வெளிச்சத்தில் ஒரு பளிங்குச் சிலை போல் படுத்திருந்தாள் தேவப்ரியா. மோகாவேசத்தில் உழன்ற தேவலோகச் சிற்பி வடித்தெடுத்த சுத்தமான உடல். நெஞ்சுப்பகுதி சுவாசத்திற்கு ஏற்றவாறு மேலும் கீழுமாக அசைந்து கொண்டிருந்தது.

"தேவப்ரியா, எழுந்திரு. மூன்றாம் ஜாமம் முடியப் போகிறது. நீ என்னிடம் எதையோ சொல்ல விரும்பினாயே" என்று அவளை எழுப்பினான் விஷ்ணு.

"ஆமாம். நல்லவேளை, ஞாபகப்படுத்தினீர்கள்" - கலைந்து கிடந்த ஆடைகளைச் சரிப்படுத்தியபடி அவள் எழுந்தாள்.

"தேவிக்கு இது தெரிந்துவிட்டதால் இனி என்ன ஆகும்?" - விஷ்ணு கேட்டான்.

"இதுவரை இந்தப் பிரபஞ்சத்தில் நடக்காத ஒரு விஷயமல்லவா இப்போது நடந்திருக்கிறது. எனவே, தேவி எப்படி நடந்து கொள்ளக் கூடுமென்று யாருக்குத் தெரியும்?"

உண்மைதான். இதுவரை தேவியைக் காவல் காத்து வந்த யாரும் மனிதர்களுடன் உறவுகொண்டு படுக்கையைப் பகிர்ந்து கொண்டதில்லை. இதுவே முதல் தடவை!

"இன்னும் நீ சொல்ல வேண்டியதைச் சொல்லவில்லை" - விஷ்ணு.



"நான் சொல்லிக் கொண்டுவந்த போதுதான் தேவி வெளியே வந்தார். இருந்தாலும் நான் விரும்பியது இதைத்தான். என்னைப் போன்ற ஒரு சிலை கிடைத்தால் தற்காலத்திற்கு அதை அங்கே வைத்துவிடலாம். அதாவது சந்தேகப்படுகிற மற்றவர்களின் கண் பார்வைக்காக. தேவிக்கு என்றைக்கு நான் தேவைப்படுகிறேனோ, அன்று நான் அவர்களிடம் சென்றால் போதும்."

"ஏன் அப்படி?"

"துர்க்கா அஷ்டமி நாளிலும், ஒவ்வொரு மாதக் கார்த்திகை நாளிலும் நான் அங்கு இருந்தே தீரவேண்டும்!"

"சரி அப்படிப்பட்ட சிலை எங்கே கிடைக்கும்?"

"சற்றுத் தொலைவில் வடக்குப் புறத்தில் பாழடைந்த கோயில் ஒன்று உள்ளது. கோயில் உள்பட அந்த நிலத்தையும் அதையொட்டி உள்ள வயல்களையும் ஒரு வடக்கத்திக்காரர் விலைக்கு வாங்கியிருக்கிறார். வாங்கியவர் இந்து மதக்காரரல்ல. இருந்தாலும் கடவுள் பக்தியுள்ள அவர், அந்தக் கோயிலின் சக்தியை மற்றொரு கோயிலுக்கு மாற்றிப் பிரதிஷ்டை செய்தார். அதையும் நமது சாத்திரப்படியே செய்தார். அந்தக் கோயிலிலுள்ள பொருள்களில் என்னைப் போன்ற வடிவத்திலேயே ஒரு சிலையும் உள்ளது. அதை வீணாகப் போட்டு வைத்திருக்கிறார்கள். அதை எடுத்துக் கொண்டு வந்து கருவறையின் வலதுபுறத்தில் நிற்க வைத்து விட்டால் சாதாரண ஜனங்கள் திருப்தியடைந்து விடுவார்கள்."

"இப்போதைய நிலைமை எப்படி?"

"அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாமே!"

விஷ்ணுதேவனும், தேவப்ரியாவும் பேசிக் கொண்டிருந்த அதே இரவில் - அதே நேரத்தில் விஸ்வமங்கலம் பழைய வீட்டில் சில சம்பவங்கள் நடந்து கொண்டிருந்தன.

முள் முருங்கை மரத்திலிருந்து பிடித்துக்கொண்டு வந்த ஆந்தை ஹோம குண்டத்திலிருந்து பறந்து உயர்ந்ததும், ஜயந்தன் நம்பூதிரி கிடுகிடுத்துப் போனார்.

'எத்தனையோ மைல்கள் தாண்டி வந்திருக்கிறவர்களிடம் என்ன பதில் சொல்வது? தன்னுடைய வீட்டின் மங்காத மாந்திரீகப் புகழ் மங்கி வருகிறதா? மண்ணிற்குள் மறைந்தாலும் இன்னும் காலத்தை

வென்று உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிற சூரிய நாராயணன் என்கிற மேதாவியின் சக்தி குறைந்துவிட்டதா?'

'இல்லை. ஒருபோதும் அப்படி நடக்கவிடக்கூடாது. கண்டிப்பாக இதற்கு ஏதாவது ஒரு மாற்றுச் செய்தே தீர வேண்டும்!' ஜயந்தன் சபதம் செய்தார்.

மீண்டும் தன்னுடைய பிதாமகனைக் கண்டு உபதேசம் பெறுவதென்று தீர்மானித்தவராக பழைய வீட்டிற்குச் சென்றார். நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது. ஜாமக்கோழி கூவி சற்று நேரமாகியிருந்தது.

சமாதிக்கு முன் நின்றபடி மனதால் அழைத்தார்.

"தோற்றுவிட்டாயா?" சமாதியிலிருந்து குரல் எழும்பிற்று.

"ஆமாம். முள் முருங்கையின் மேல் இருந்த ஆந்தை சட்டென்று வளர்ந்து பெரிதாகி என்னைத் தாக்க வந்தது. ஒருவேளை, அது நங்கேமையின் ஆவியாக இருக்குமோ என்று நான் சந்தேகப் படுகிறேன்" - ஜயந்தன் பவ்வியமாக விஷயத்தை வெளியிட்டார்.

"யோசிக்கலாம்!" என்றது நிலவறைக் குரல்.

"நான் காத்திருக்கிறேன்!" ஜயந்தன் பழைய துளசி மாடத்தின் அருகிலேயே நின்று கொண்டிருந்தார். அதிலிருந்த துளசி இன்றும் பசுமை மாறாமல் இருந்தது. அதற்குக்கூட ஏதாவது ஒரு கதையிருக்கலாம்.

"குரல் கேட்கிறதா?" - சமாதி கேட்டது.

"காத்திருக்கிறேன், சொல்லுங்கள்" ஜயந்தன் பதிலளித்தார்.

"நங்கேமை பிரம்மரக்ஷஸாக மாறிவிட்டிருக்கிறாள். அதுமட்டுமல்ல, நமது குடும்பத்துடன் தீராத பகையும் கொண்டிருக்கிறாள். அவளை மகிழ்ச்சிப் படுத்த உன்னால் முடியுமா?"

"என்ன செய்யவேண்டும், சொல்லுங்கள்!"

"நங்கேமா கர்ப்பிணியாக இருந்தபோது, அந்த முள் முருங்கை மரத்தின் மீது வீசி எறியப்பட்டாள். அவளுக்குத் தேவை இப்போது ஓர் ஆணின் உயிர் - அதுவும் ஒரு நம்பூதிரியின் உயிர்."

"பலியாகவா...?"

"ஆமாம்... அவளதுமோகம் இன்னும் தீரவில்லை. அதை நாம்



சரி செய்ய வேண்டும்."

"அதற்கு என்ன வழி?"

"அழகானவனும், உடல் வலு உள்ளவனுமான ஓர் இளைஞனை அந்த முள் முருங்கையின் கீழே படுக்க வைத்துவிடு. மறக்காமல் அவனை பந்தனம் செய்யவேண்டும். அவனுடைய மரணத்துடன் நங்கேமையின் ஆசை பூர்த்தியடைந்துவிடும். நங்கேமா மோட்சம் பெற்றுவிடுவாள். அத்துடன் அவள் தொடர்பான நமது சிக்கல்களும் தீர்ந்துவிடும்!"

"அப்படியே செய்து விடுகிறேன். மற்றொரு விஷயம். தெற்குப் பகுதியிலிருந்து இருவர் வந்திருக்கிறார்கள். ஓமல்லூர் கோயிலில் உண்மையில் நடந்துள்ள ரகசிய சம்பவத்தை அறிய விரும்புகிறார்கள். தேவியின் துவாரபாலிகையரில் ஒருத்தியின் கால் தண்டை காணாமல் போயிருக்கிறது. அதற்கு என்ன அர்த்தம் என்று கேட்கிறார்கள்? எனக்கு ஒன்றும் புலப்படவில்லை."

"எல்லாவற்றுக்கும் வழி பிறக்கும். முதலில் நான் சொன்னபடி செய்!" - சூரியநாராயணன் அத்துடன் தமது பேச்சை முடித்துக் கொண்டார்.

ஜயந்தன் ஏதோ ஒரு தீர்மானத்துடன் திரும்பினார். இனி எப்படி அவர் சொன்னதை நிறைவேற்றுவது? நமக்குத் தேவையான, தாத்தா கூறியது போன்ற ஓர் இளைஞனை எங்கிருந்து தேடிக் கண்டுபிடிப்பது?

ஜயந்தன் திரும்பிக் கொண்டிருந்த அதே .நேரத்தில் தேவப்ரியாவும், குருக்ஷேத்ர மனையிலிருந்து புறப்பட்டாள். மிகுந்த பயத்துடன், படபடக்கும் மனத்துடன் கோயிலை நெருங்கினாள்.

அங்கே அவள் கண்ட காட்சி...



# 11

கருவறை வாசலின் வலது புறமாக அவள் கண்ட காட்சி வியப்பூட்டுவதாக இருந்தது.

ஒரு மோகினி என்ற நிலையில் அதைப் பார்த்தபோது அவளுக்கு அப்படி ஓர் உணர்வு தோன்றியிருக்கக் கூடாது தான். ஆனால், பகவதியின் ஆஸ்தானக் கருவறைக்கு முன்பாகத் தென்பட்ட அந்தக் காட்சி, தேவப்ரியாவை வியப்படையவே வைத்தது. சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக மீண்டும் ஒரு தடவை பார்த்தாள். உடல் வியர்த்தது. அங்கு-

அவளுக்குப் பதிலாக துவாரபாலிகையாக வேறு ஒரு சிலை இருந்தது. அவளது சிலை இருந்த இடத்தில், அதே அடையாளத்தில் அவள் நின்றிருந்தது போலவே இருந்தது. இதில் வேடிக்கை என்னவென்றால், அந்தச் சிலையின் வடிவமும் அவளைப் போலவே இருந்தது. நெருங்கிச் சென்று கவனித்தாள். எந்த விதமான மாற்றமும், குறைவுமில்லாமல் அச்சாக அது அவளுடைய சிலையேதான். வலது காலில் கால் தண்டை கிடந்த பகுதிகூட அதேபோன்ற அடையாளத்துடன் இருந்தது. தன்னை கர்ப்பக்கிருக வாசலிலிருந்து தேவி முற்றிலுமாக ஒதுக்கி விட்டிருக்கிறார் என்ற விஷயம் அப்பொழுதுதான் அவளுக்குப் புரிந்தது.

இனி என்ன செய்வது?

அவள் கை கூப்பியபடியே கர்ப்பக்கிருகத்தை நோக்கிப் பிரார்த்தித்தாள். "தேவி... மகாமாயே... என்னை நீங்கள் கைவிட்டு விட்டீர்களா? நான் இனிமேல் எங்கு செல்வது? எனக்கு வேறு போக்கிடம் எது? இந்தத் தடவை என்னை மன்னித்தருளுங்கள். அல்லது உங்களது கண்களாலேயே என்னைப் பொசுக்கி எரித்து விடுங்கள்!"

கருவறைக்குள் மணியோசை முழங்கியது. அவள் காதைத் தீட்டிக் கொண்டு கவனித்தாள்.

"தேவப்ரியா, உன்னுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டேன். நீ விரும்பியபடியே நடக்கிறது. இன்றிலிருந்து இனி



வருகிற பன்னிரண்டு பௌர்ணமி வரையில் உனக்கு மனித வடிவம் தந்திருக்கிறேன். அது முடிந்தபிறகு, நீ மீண்டும் என்னுடைய துவாரபாலிகையாகவே உன் பணியைத் தொடரலாம்."

தேவியின் அனுக்கிரகம் கிடைத்தவுடன் தேவப்ரியா மகிழ்ந்து போனாள். தனது விருப்பத்தை தேவி அங்கீகரித்திருக்கிறார். இனிமேல் தைரியமாக விஷ்ணுதேவனுடன் வாழலாம் என்று நினைத்தாள்.

"ஆனால், ஒரு நிபந்தனை" - தேவி மீண்டும் பேசினார். "சூரியன் உதித்து மறைவது வரைதான் நீ மனித உருவில் இருப்பாய். சூரியன் மறைந்து விட்டால் நீ உன்னுடைய சொந்த உருவில் - இப்பொழுது இருப்பது போலவே இருப்பாய். அத்தகைய சந்தர்ப்பங்களில் உன் கணவனைத் தவிர வேறு யார் கண்ணிலும் படாமல் கவனத்துடன் இருக்க வேண்டும். நீ யார் என்பதை ஒரு போதும் மற்றவர்கள் அறிந்து கொள்ள இடம் தரக் கூடாது!"

"அப்படியே செய்கிறேன் தாயே..."

தேவப்ரியா தேவியைத் தாழ்ந்து வணங்கித் தொழுதாள்.

"தனக்குக் கிடைத்த இந்த அதிர்ஷ்டகரமான வாய்ப்பைப் பற்றி உடனே விஷ்ணுதேவனிடம் கூற வேண்டுமென்று விரும்பினாள். அதனால் உடனே அவள் குருகேஷத்ர மனையை நோக்கி விரைந்தாள்."

"என்ன, நல்ல தூக்கமா?" - தேவப்ரியா விஷ்ணு, தேவனைத் தட்டி எழுப்பினாள்.

அவன் திடுக்கிட்டுக் கண்விழித்த போது தன்னுடைய கட்டிலில் தேவப்ரியா உட்கார்ந்திருப்பதைக் கண்டான். நடந்த சம்பவங்களை ஒன்றுவிடாமல் கூறினாள். எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்ட விஷ்ணுதேவன் இறுதியாக அவளை இழுத்துப் பிடித்து அணைத்தான்.

"அதிகம் மகிழ்ச்சியடையக் கூடாது. காலையில் பொழுது விடியும் போது நான் ஒரு மனிதப் பெண்தான்."

இந்த வார்த்தையைக் கேட்ட விஷ்ணு ஒரு கணம் திடுக்கிட்டான். இதுவரையில் நடந்ததெல்லாம் தன்னைத் தவிர, வேறு யாருக்கும் தெரியாது. மற்ற மனிதர்களுக்குத் தெரியாமல் ஒரு கனவு மாதிரித்தான்

ஒவ்வொரு நாள் பொழுதும் விடிந்து கொண்டிருந்தது. தனக்குக் கிடைத்திருக்கிற இந்த வசதியான வாழ்வு கூட எப்படி வந்தது என்று தன்னுடைய சொந்தத் தாய்க்கே தெரியாது.

இதையெல்லாம் எப்படி தன் அம்மாவிடம் கூறுவது? தன்னுடைய வாழ்க்கைத் துணைவி ஒரு மோகினி என்று தெரிந்துகொண்டால் அம்மா எப்படி மாறுவார்களோ? நிச்சயம் அம்மா பயப்படுவார். பொதுவாக மோகினிகள் மனிதர்களைத் தின்றுவிட்டு, அவர்களுடைய நகங்களையும், தலைமுடியையும் மட்டும் பனை மரத்தடியில் கொண்டு போய்ப் போட்டுவிடுவார்கள் என்றுதான் அம்மா சொல்லித் தந்திருக் கிறார். அதேபோல், மாட்டு வண்டி ஓட்டிக் கொண்டு வந்த ஒருவனிடம் ஒரு தடவை மோகினி ஒருத்தி சுண்ணாம்பு கேட்டாளாம். தன்னுடைய சுண்ணாம்பு டப்பியிலிருந்து ஆள்காட்டி விரலால் அவன் எடுத்துக் கொடுக்க, அந்த விரலைப் பிடித்தபடியே அந்த மோகினி அவனை எங்கோ அழைத்துக் கொண்டு போனாளாம். மறுநாள் காலையில் அவனது தலைமுடியும், நகங்களும் ஒரு பனைமரத்தடியில் கிடந்ததாம். இந்தக் கதையையும் அம்மாதான் சொல்லியிருந்தார்.

அப்படிப்பட்ட ஒரு மோகினியாகத்தான் அம்மா இவளையும் நினைத்துக் கொள்வார். அது உறுதி. அப்படியில்லாமல் இவளைப் பற்றிய உண்மையை அம்மா மட்டுமல்ல, வேறு யாருமேகூட நம்ப மாட்டார்கள். எனவே, இப்படிப்பட்ட சிக்கலிலிருந்து எப்படி விடுபடுவது என்று யோசித்தான் விஷ்ணு.

எழுந்து உட்கார்ந்தான். தேவப்ரியா அவனது மடியில் தலை வைத்துப் படுத்திருந்தாள். அவளுக்கு வேறு எதைப் பற்றியும் யோசிக்க வேண்டியிருக்கவில்லை. எனவே, அவள் கேட்டாள்: "ஏதோ பலமான யோசனைபோல் தெரிகிறதே? காலையில் என்னைப் பார்க்கும் உங்கள் அம்மாவிடம் என்ன கூறுவது, எப்படி அறிமுகப்படுத்தி வைப்பது என்றுதானே யோசிக்கிறீர்கள்?"

"ஆமாம்."

"அதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். அதற்கான வழியை நான் சொல்லித் தருகிறேன்." - தேவப்ரியா அவனது மார்பில் விரல்களால் அளைந்தபடி பேசினாள்.



அவன் எழுந்து கூஜாவிலிருந்து தண்ணீர் எடுத்துக் குடித்தான். வெளியில் அப்பொழுதும் நிலவு காய்ந்து கொண்டிருந்தது.

"நான் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லித் தருகிறேன். நாம் கொஞ்ச நேரம் வெளியில் காற்று வாங்கியபடி பேசலாம்."

இருவரும் வராந்தாவிற்கு வந்தார்கள்.

"நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள்" - திண்ணையில் உட்கார்ந்திருந்த அவனது முழங்காலில் தனது கையைப் பதித்துக் கொண்டு அவனுடைய கண்களைப் பார்த்தபடியே பேசினாள் மோகினி.

"இந்த இரவில் நாம் இங்கிருந்து போக வேண்டும். நான் உங்களை அழைத்துப் போகிறேன். இங்கிருந்து புறப்பட்டு ஒமல்லூர் கோயிலுக்குக் கிழக்குப் புறத்திலுள்ள மோகினி கோயிலை அடைய வேண்டும். அங்கு ஒரு கல்விளக்கு உள்ளது. நான் எங்கு இருக்கிறேனோ அங்கு அந்த விளக்கும் இருக்க வேண்டும். அந்த விளக்கு எரிந்து கொண்டிருக்கும் இடத்தில் எந்த எதிரியின் சக்தியும் வேலை செய்யாது..."

"அது பெரிய விளக்கா?"

"நீங்கள்தான் நேரிலேயே பார்க்கப் போகிறீர்களே. முதலில் அதைக் கொண்டு வருவோம். சூரியன் உதிக்கும் நேரத்தில் நாம் இங்கு இருக்க வேண்டும்."

"அப்படியானால்...?" - விஷ்ணுதேவன் அவளையும் அறியாமல் அவனது அம்மா படுத்திருந்த அறைப்பக்கம் பார்த்தான்.

"இங்கே வந்தபிறகு உங்கள் அம்மாவிடம் சொல்லுங்கள். இவள் என்னுடைய மனைவி. ஓர் இல்லத்திலிருந்து இவளைக் கூட்டிக் கொண்டு வருகிறேன். இவளிடம் வேறு எதையும் கேட்காதீர்கள் என்று சொல்லுங்கள்."

"அப்படிச் சொன்னால் அம்மா சந்தேகப்பட மாட்டார்களா?"

"சந்தேகமேற்படாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்."

"அம்மா தோண்டித் துருவி விசாரித்தால்...?"

"அதை என்னிடம் விட்டுவிடுங்கள். நான் பார்த்துக்

கொள்கிறேன்." - தேவப்ரியா உறுதியுடன் பேசினாள்.

"என்னவோ? நீ சொன்னபடியே செய்கிறேன்."

"அப்படியானால் என் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள்" - அவள் எழுந்து அவனை நோக்கிக் கையை நீட்டினாள். விஷ்ணுவும் எழுந்து அவள் கையைப் பற்றினான். அவர்கள் மிதந்தபடி பயணமானார்கள்.

அவளது நீண்ட தலைமுடி விஷ்ணுவின் உடம்பில் உரசிக் கொண்டிருந்தது. ஒரு மண்டபத்திற்கு முன்பாக வந்து நின்றார்கள்.

"இதுதான் நான் சொன்ன கோயில். அதோ தெரிவதுதான் நான் சொன்ன கல்விளக்கு." - தேவப்ரியா சுட்டிக் காட்டினாள்.

கோயிலுக்குள் ஒரு நீலப் பொட்டு மாதிரி அந்த விளக்கு எரிந்து கொண்டிருந்தது. விஷ்ணுதேவன் அதைக் கைநீட்டி எடுத்தபோது தன்னுடைய கையிலிருந்து ஏதோ வழுக்கிக் கீழ்ப்புறமாகச் சென்றதுபோல் தோன்றியது. விளக்கும் அணைந்தது. உற்றுக் கவனித்தபோது அதில் திரியே இல்லை.

"விளக்கில் இருந்த திரியைக் காணோமே?" - விஷ்ணு கேட்டான்.

"அது திரியல்ல. தங்கநாகம்தான் அது. அதனுடைய வாயிலிருந்த மாணிக்கக்கல் தான் இதுவரையில் திரி போல் தோன்றியது!" அவள் பதில் கூறினாள்.

"உண்மையாகவா!" - அவன் வியப்புடன் கேட்டான்.

"உங்களுக்கு எதுவும் நேராமல் இருப்பதற்கும் நான் விளக்கு வைப்பதற்காகவும்தான் இந்த விளக்கை எடுத்துச் செல்கிறோம். நாம் இங்கேயே நேரத்தைச் செலவழிப்போம். சூரியன் உதிக்கும்போது உங்கள் வீட்டிற்குப் போகலாம்."

அவர்கள் கோயிலுக்கு முன்னாலிருந்த கருங்கல் மண்டபத்தில் அமர்ந்தனர்.

தாமரைப் பூக்களைத் தழுவிய காற்று, கிழக்குப்புற மலைப் பகுதியிலிருந்து வீசியது. நல்ல குளிர்ந்த காற்று. அந்தக் காற்று அவர்களது உடம்பை இதமாக வருடிச் சென்றது. அவளது கரங்கள் விஷ்ணுவைத் தழுவின.

"நேரம் நிறைய இருக்கிறது" - அவள் விஷ்ணுவின்



நெற்றியிலிருந்து சுண்டு விரலை கீழ்ப்புறமாக நகர்த்தினாள். அவனது மூக்கு, உதடுகள், தாடை, நெஞ்சு ஒவ்வொன்றும் அவளுடைய வருடலில் திளைத்தன. அவனது ரத்த நாளங்களில் மின்சாரம் பாய்ந்ததுபோல் தோன்றியது. மண்டபத்தில் இரண்டு உடலும் ஒன்றாகி இணைந்தன. விஷ்ணு விரைவிலேயே உறங்கினான்.

விஷ்ணு கண் விழித்தபோது அவர்களது வாசற்படியை அடைந்து விட்டிருப்பதை உணர்ந்தான்.

"நாம் உங்களது இல்லத்தை அடைந்து விட்டோம். இனிமேல்தான் உங்களது சாமார்த்தியம் வேலை செய்ய வேண்டும். நான் வெறும் ஒரு வேடதாரி மட்டும் தான். ஞாபகமிருக்கட்டும்."

பாறுக்குட்டி அம்மா முற்றத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தாள். தண்ணீர் தெளித்து முடித்தபோது இருவரும் முற்றத்தில் கால் வைத்தனர். பாறு அவர்களைப் பார்த்தாள். அவளது கண்கள் வியப்பால் மலர்ந்தன. அந்தக் காட்சியை அவளால் நம்பவே முடியவில்லை. ஒரு தடவை கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள். உண்மைதான்! தனக்கு முன்பாக விஷ்ணுதேவனுடன் ஓர் இளம் பெண்ணும் நிற்கிறாள்.

இவ்வளவு அழகான ஒரு பெண்ணை தான் பார்ப்பது, தன்னுடைய வாழ்க்கையிலேயே இதுதான் முதல் தடவை!

"விஷ்ணு, இந்தப் பெண் யார்?" - அவனது பதிலைக்கூட எதிர்பார்க்காமல் விறுவிறுவென்று உட்புறமாக ஓடினாள். "தம்புராட்டி, இங்கு வந்து பாருங்கள். யார் வந்திருக்கிறார்கள் தெரியுமா?" - அவளது குரல் தெளிவாக அவர்களுக்கே கேட்டது.

விஷயம் இன்னதென்று விளங்காமல் சரஸ்வதி அந்தர்ஜனம் வெளியே வந்தார். விஷ்ணுவுடன் நின்றிருக்கும் பெண்ணைப் பார்த்து அவருக்கும் வியப்புத் தோன்றியது.

"இது யார் விஷ்ணு?" - அம்மா கேட்டாள்.

"இவள் தேவப்ரியா. வடபாகத்திலுள்ள ஓர் இல்லத்திலிருந்து அழைத்து வந்திருக்கிறேன்." - விஷ்ணு பதட்டப்படாமல் பேசினான்.

"கல்யாணம் செய்யாமலேவா?"

"அதையெல்லாம் விவரமாகச் சொல்கிறேன். முதலில் எங்களை

ஆசீர்வாதம் செய்யுங்கள் அம்மா. இவளை உள்ளே அழைத்துச் செல்லுங்கள்."

அதன் பிறகு சரஸ்வதி அந்தர்ஜனம் எதையும் பேசவில்லை. இருப்பினும் அவருடைய மனத்தில் சந்தேகச் சிலந்தி, வலை பின்ன ஆரம்பித்திருந்தது.

தேவப்ரியா வலது காலை எடுத்து வைத்து வாசற் படியைக் கடந்தாள். சரஸ்வதி அம்மாவுடன் அவளும் சமையல் கட்டிற்குச் சென்றாள். விஷ்ணுதேவன் தனது கையிலிருந்த கல்விளக்குடன் தனது அறைக்குள் நுழைந்தான். விஷ்ணு எச்சரித்திருந்ததால் அம்மா அவளிடம் எதையும் கேட்கவில்லை.

ஆனாலும் பாறுக்குட்டி மூலமாகச் சில தகவல்கள் அவனது அம்மாவுக்குத் தெரியவே செய்தது.



## 12

தேவப்ரியா கல்விளக்கில் திரியிட்டு விளக்கேற்றினாள். சரஸ்வதி அந்தர்ஜனம் மருமகளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அறைவாசலில் அவள் விளக்கு ஏற்றிக் கொண்டிருந்தபோது விளக்கின் அருகே மற்றொரு விளக்குபோல் தேவப்ரியா தெரிந்தாள். அவளுக்கு என்ன ஒரு நிறம்... தீக்கொழுந்து போல!

விளக்கேற்றிய பிறகு அவள் அதிலிருந்து ஏற்றிய மற்றொரு குத்துவிளக்குடன் துளசி மாடத்தை அடைந்தாள். அங்கு விளக்கை வைத்தாள். துளசி மாடத்தை வலம் வந்தாள். அந்தர்ஜனம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். தேவப்ரியாவின் மீதிருந்து கண்களை அகற்ற அவரால் முடியவில்லை. அப்படி ஓர் அழகு!

பார்த்துக் கொண்டே இருந்தபோது அவரது கண்கள் சடாரென்று ஒரு விஷயத்தைக் கவனித்துவிட்டன. ஒருவேளை அப்படித் தோன்றியது பிரமையோ, என்னவோ? தேவப்ரியா விளக்கு வைத்து



துளசி மாடத்தைச் சுற்றி வந்தபோது விளக்கு பார்வையிலிருந்து மறையவில்லை. விளக்கை அவள் மறைத்தபடி நின்றபோது விளக்கின் வெளிச்சம் கண்ணுக்குத் தெரிந்தது. இது எப்படி சாத்தியம்?

"மாமி... தீபம்..." - அவள் நெருங்கி வந்தாள். சரஸ்வதி, விளக்கைத் தொட்டு வணங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டார்.

'தன்னுடைய மருமகள் எப்படிப்பட்ட அழகு!' அப்பொழுதும் அவர் மனம் வியப்பிலேயே மூழ்கியிருந்தது. அது மட்டுமா, அவளது உடம்பிலிருந்து ஒருவிதப் பரிமள வாசனை ... ஏதோ ஒரு பூவின் வாசனை போல... அது என்ன பூ... பாரிஜாதப் பூவா? நிசாகந்தி என்ற இரவில் மலரும் மல்லிகையா? தேவப்ரியா வீட்டிற்குள் போய்விட்டிருந்தாள்.

சரஸ்வதி அந்தர்ஜனத்தின் மனத்தில் காரணமற்ற சந்தேகம் ஒன்று எழுந்தது.

தானவேதன் நம்பூதிரியும் வாசு நம்பூதிரியும் விஸ்வமங்கலத்து வீட்டிலேயே தங்கியிருந்தனர். இரண்டில் ஒன்றைத் தெரிந்து கொண்டே புறப்படுவது என்று தீர்மானித்திருந்தனர். ஜயந்தன் அன்று தானவேதனிடம் ஒரு நம்பூதிரி இளைஞனைப் பற்றிக் கோடிகாட்டியிருந்தார். நங்கேமையைத் திருப்தி செய்துவிட்டால், காரியம் முடிந்துவிடும் என்று அவர்களுக்கு உறுதியாகத் தோன்றியது. தானவேதன் இதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு வாசு நம்பூதிரியை ஒருமுறை பார்த்தார். ஆனால், வாசுவிற்கு இதன் அர்த்தம் புரியவில்லை!

"வாசு ஒரு வேலை செய்யட்டுமே!" ஜயந்தன் ஒரு பட்டியலை நீட்டியபடி பேசினார். "இதிலுள்ள பொருள்களை வாங்கி வாருங்கள். இன்று காளி பூஜை செய்ய வேண்டி உள்ளது."

"எங்களால் எந்த பூஜையையும் நிறுத்த வேண்டாம். அப்படியே செய்யுங்கள்" என்றபடி தானவேதன் ஐம்பது ரூபாய் நோட்டு ஒன்றை வாசுவிடம் கொடுத்தார்.

"அவ்வளவெல்லாம் தேவையில்லை. வெறும் பத்து ரூபாய் போதும்" ஜயந்தன் கூறினார்.

"மிச்சமிருந்தால் கொண்டு வரட்டுமே."

வாசு பணத்துடன் புறப்பட்டார்.

"நான் வேண்டுமென்றேதான் வாசுவை இங்கிருந்து அனுப்பி வைத்தேன்... உங்களுக்கு விஷயம் புரிந்திருக்குமே" - ஜயந்தன் தாழ்ந்த குரலில் கூறினார்.

"புரிந்தது.!"

"நமது நங்கேமாவுக்கு வாசுவைக் கொடுத்து விடலாமா?" - ஜயந்தன் கேட்டார்.

"ஏதாவது விபரீதம் நடந்து விடுமோ?"

"எதையும் உறுதியாகச் சொல்ல முடியாது."

"எப்படி வேண்டுமானாலும் நடக்கட்டும். நமது காரியம் முதலில் நிறைவேற வேண்டும். அப்படியே ஏதாவது நிகழ்ந்தால் அங்கு போனபிறகு அதற்கு ஏதாவது சமாதானம் சொல்லி விடலாம்."

தானவேதன் சம்மதித்தார்.

"வாசுவிற்குத் தெரியாமல்தான் இதைச் செய்ய வேண்டும். அந்த மந்திரத்தையும் அவரிடமே உச்சரிக்கச் சொன்னால் போகிறது" - ஜயந்தன் யோசனை கூறினார்.

"அது எப்படி முடியும்?"

"அதற்கெல்லாம் வழி இருக்கிறது. நீங்களும் தெரிந்து வைத்திருப்பது நல்லது. ஒரு கன்னிப் பெண்ணைப் பலியிட்டு, அவளது தலைமுடியைக் கருக்கி, அதைத் தேனில் குழைத்து புருவங்களில் தேய்த்துவிட்டு மந்திரம் சொல்லவேண்டும். மந்திரத்தை உச்சரிக்கும்போது நங்கேமையைப் பற்றியே நினைக்க வேண்டும் என்றும் சொல்லவேண்டும். அவள் வெளிபட்டுவிட்டால் மீதியை அவளே பார்த்துக் கொள்வாள்."

இந்த வார்த்தையைக் கேட்டதும் தானவேதன் ஒரு கணம் அதிர்ந்தார். "இப்பொழுது நீங்கள் சொன்ன பொருள்கள் எல்லாம் உங்களிடம் இருக்கிறதா?"

"எல்லாம் தயாராக உள்ளன. இன்றிரவு நாம் அதையும் நேரிலேயே சோதித்துப் பார்த்து விடலாமே" ஜயந்தன் உறுதியுடன் பேசினார்.

இரவுச் சாப்பாடு முடிந்தது.



பழைய வீட்டில் ஹோமம் நடந்தது.

ஹோம குண்டத்திற்கு முன்பாக வாசு நம்பூதிரியை உட்கார வைத்தனர். அவரது புருவங்களில் ஜயந்தன் மை தடவினார். பிறகு உச்சரிக்க வேண்டிய மந்திரத்தையும் சொல்லித் தந்தார்.

"க்ளிம் ப்ரேத யக்ஷிண்யாய நமஹ..."

வாசு நம்பூதிரி மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஒன்று... இரண்டு... மூன்று... முப்பது... என்று மந்திர உச்சரிப்பு விரைவாகத் தொடர்ந்தது.

கண்ணை மூடியபடி தியானத்தில் அமர்ந்து வாசு மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தபோது ஜயந்தனும் தானவேதனும் மெதுவாக அங்கிருந்து நகர்ந்து இடிந்து சிதிலமாகிக் கிடந்த ஒரு திண்ணையில் அமர்ந்து கொண்டனர்.

அங்கிருந்து பார்த்தபோது ஏழு திரிகளைக் கொண்டு ஒளி சிந்திய விளக்கு வெளிச்சத்தில் மந்திர உச்சாடனம் செய்யும் வாசு நம்பூதிரி தெளிவாகத் தெரிந்தார்.

தொள்ளாயிரத்து ஒன்று... இரண்டு...

ஜயந்தன் கழுத்திலிருந்த ருத்திராக்ஷ மாலையைப் பிடித்தபடி மந்திர எண்ணிக்கையைச் சரிபார்த்துக் கொண்டிருந்தார். ஆயிரத்தொரு தடவை மந்திரம் பூர்த்தியானால்தான் பிரம்ம ராக்ஷஸான நங்கேமை வருவாள்.

அத்துடன் நங்கேமாவின் பகை உணர்வு அற்றுப் போகும். அதன் பிறகு அவளைத் தங்களது பிடிக்குள் கொண்டுவந்து, விருப்பம் போல் செயல்பட வைக்கலாம். ஜயந்தன் வெற்றியைக் கணக்கிட்டபடி உட்கார்ந்திருந்தார்.

திடுமென்று அந்தப் பகுதியில் கும்மென்ற இருள் சூழ்ந்தது. ஒரு மலை அந்தப் பகுதியின் மேற்புறத்தை மறைத்தது போல் இருந்தது. மந்திரம் சொல்லியபடி அமர்ந்திருந்த வாசு நம்பூதிரி அவர்களது கண்களிலிருந்து மறைந்தார். தானவேதன் வியப்புடன் அந்தத் திசையையே பார்த்துக் கொண்டிருந்தார். அதுவரை கேட்டுக் கொண்டிருந்த வாசு நம்பூதிரியின் குரலும் சட்டென்று நின்று போயிற்று.

வாசு ஆயிரத்தொரு தடவை மந்திர உச்சாடனத்தைப் பூர்த்தி செய்திருந்தார். க்ளீம் ப்ரேத யக்ஷண்யாய நமஹ... தேவலோக மங்கை போன்ற ஒரு பெண். அவளது இடுப்பில் தொப்புளுக்குக் கீழே உடை உடுத்திருந்தாள். கருமையான அடர்ந்த கூந்தலின் ஒரு பகுதி உடைகளற்ற மேல் மார்பில் பரவியிருந்தது. தாமரைப் பூவிதழின் அடிப்பகுதி போன்ற நிறத்தில் அவளது அடிவயிறு தெரிந்தது. காலில் வெள்ளிக் கொலுசுகள். கைகளில் தங்கக் காப்பு. கழுத்தில் பெரிய காசுமாலை. இப்படிப்பட்ட உருவம் தன்னை நோக்கி நெருங்கி வருவதைப் பார்த்தபடியே வாசு நம்பூதிரி உட்கார்ந்திருந்தார்.

"எதற்காக என்னைக் கூப்பிட்டீர்கள்?" - நங்கேமா கேட்டாள்.

"நானா... ஆமாம்... நான்தான் கூப்பிட்டேன்..." - வாசு நம்பூதிரி அவளது அழகைப் பருகியபடி பேசினார்.

"உங்கள் பெயர்?"

"வாசு நம்பூதிரி"

"யார் சொல்லி இங்கு வந்திருக்கிறீர்கள்?"

"ஜயந்தன் நம்பூதிரி சொல்லியனுப்பினார்."

"பார்வைக்கு நான் எப்படி இருக்கிறேன்?" - கேட்டபடியே நங்கேமா ஹோமகுண்டத்திற்கு அருகே வந்தாள்.

ஹோமகுண்டத்தின் ஜுவாலைகள் அவளுடைய உடம்பில் ஒன்றி இழைவது போல் வாசு நம்பூதிரிக்குத் தோன்றியது. இரண்டுக்குமே ஒரே நிறம்!

"என்னை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?" - நங்கேமா தனது முன்புறத் தோளில் கிடந்த தலை முடியைத் தட்டிப் பின்புறம் ஒதுக்கியபடியே கேட்டாள்.

"ஆமாம்... பிடித்திருக்கிறது" - வாசு நம்பூதிரி தொண்டையில் உமிழ்நீரை இறக்கியபடி பேசினார்.

"இதற்கு முன் நீங்கள் பெண்களை அணுகியதே இல்லையா?"

வாசு நம்பூதிரி பதில் சொல்லவில்லை. தர்மசங்கடத்தில் ஆழ்ந்தார். அவரது நாக்கு வறண்டது.

"உண்மையைச் சொல்லுங்கள். ஓமல்லூர் கோயில் பூசாரிதானே நீங்கள்? கோயிலுக்கு வந்திருந்த சில பெண்களை மறைவிடத்திற்கு



கூட்டிப் போவது உண்டல்லவா?"

அந்தக் கேள்வி அவரை நடுக்கிட வைத்தது. 'தான் இரண்டு பெண்களைப் பல முறை பயன்படுத்தியுள்ளதை வந்திருப்பவள் எப்படியோ தெரிந்து வைத்திருக்கிறாளே!' - மனதிற்குள் வியந்தார்.

"அந்தப் பெண்களில் இளையவளான இந்திராணி மிகவும் அழகியல்லவா?"

'உண்மைதான்! இந்திராணி மனங்கவரும் அழகிதான். அவளுடன் கழித்த நேரங்களை வாழ்க்கையில் ஒருபோதும் மறக்க முடியாது. அவள், அவளது வீட்டின் செல்லப் பெண்ணும்கூட' - வாசு நம்பூதிரி மனதிற்குள் சொல்லிக் கொண்டார்.

"இப்பொழுது என்னுடன் வருகிறீர்களா?"

"எங்கு வரவேண்டும்?"

"பக்கத்தில் தான்!"

தனக்கு முன்னால் நின்று கொண்டிருக்கும் பெண்தான் நங்கேமா என்பது வாசு நம்பூதிரிக்குத் தெரியவில்லை. ஜயந்தன் சொல்லிக் கொடுத்த மந்திரத்தை உச்சரித்ததும், தனக்கு முன்பாக ஏதோ ஒரு தேவதை பிரசன்னமாகியிருப்பதாகவே தோன்றியது.

பேரழகிகளான தேவகன்னிகையரும், மோகினிகளும் மனிதர்களுடன் சல்லாபித்துள்ள எத்தனையோ கதைகளை அவரும் கேள்விப்பட்டிருந்தார். அப்படிப்பட்ட ஒரு தேவதைதான் தனக்கு முன்னால் நிற்கிறாள் போலும் என்றுதான் அவர் நினைத்தார்.

மோகினிகளுடன் இன்பமாகப் பொழுதைக் கழித்த பலரும் பலவித செல்வங்களைப் பெற்று ஐஸ்வரியங்களுடன் வாழ்ந்த கதைகளை அவரும் கேள்விப்பட்டிருந்தார்.

"என்னை அழைத்த விரதத்தில் நீங்கள் என்னுடன் வராமல் இருக்க முடியாது. வாருங்கள் போகலாம்" - நங்கேமா தனது கையை அவரை நோக்கி நீட்டினாள்.

மோகாவேசத்தில் மூழ்கியிருந்த வாசு நம்பூதிரி, அவளது விரல்களைப் பற்றிக்கொண்டு எழுந்தார். அவள் அவருடன் பறந்து உயரத் தொடங்கினாள். ஹோமகுண்டத்தின் மேற்புறமாக ஆகாய மார்க்கமாக, அவர்கள் அந்தப் பழைய வீட்டைத் தாண்டிச் சென்றனர்.

இவ்வளவுக்குப் பிறகுதான் தானவேதனுக்கும், ஜயந்தனுக்கும் முன்பாகத் திரைபோல் நின்றிருந்த இருட்டு விலகியது.

இருவரும் வாசு நம்பூதிரி இருந்த இடத்தைப் பார்த்து வியந்தனர். நம்ப முடியாமல் இருவரும் கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தனர். அங்கு யாரையுமே காணோம்.

"அப்படியானால் நாம் வெற்றி பெற்றுவிட்டோம்" - ஜயந்தன் பேசினார்.

ஆனால், தானவேதன் திகைப்பில் ஆழ்ந்திருந்தார். 'மந்திர விஷயத்திற்காக, தான் நாடி வந்துள்ள இந்த விஸ்வமங்கலம் வீடு சக்தி வாய்ந்ததுதான்' - மனதிற்குள் சிலாகித்துக் கொள்ளவும் செய்தார். எப்படியும் ஓமல்லூர் கோயிலின் ரகசியத்தை நாம் தெரிந்து கொள்வது உறுதி.

கோயிலில் பாதுகாவலாக நிற்கும் மோகினியின் திருட்டுத்தனம் இத்துடன் முற்றுப் பெறப் போகிறது.

"வாருங்கள், நாம் போகலாம். வாசு பின்னால் மெதுவாக வந்து சேருவார்" - ஜயந்தன் கூறினார்.

தானவேதன் எழுந்து நடக்கத் தொடங்கினார்.

விடியும்வரை அவர்கள் பழங்கதைகளைப் பேசிக் கொண்டிருந்தனர். வாசு திரும்பி வந்துவிட்டால் நாளையே அந்தத் திருட்டு மோகினியை அடையாளம் கண்டு கொள்ளலாம். அவளது ஆணவத்தை ஒடுக்கவேண்டும்.

'ராசிப்பலகையை அபகரித்தவள் அவள்தானே? அவளை வரவழைத்து ஹோமத்தில் எரித்துவிட வேண்டியதுதான்' - ஜயந்தன் மனதிற்குள் சபதம் செய்து கொண்டார்.

ஆனால், பொழுது விடிந்து சேவல் கூவிய பிறகும், வாசு நம்பூதிரி திரும்பி வரவே இல்லை!

"வாசு அவளிடம் வசமாகச் சிக்கிக் கொண்டிருக்கிறான் என்றே தோன்றுகிறது!" என்றார் ஜயந்தன் மிகுந்த சந்தோஷத்துடன்.



## 13

கிழக்குப் பகுதி மலையிலிருந்து சூரியன் தலையை உயர்த்திய பின்பும் வாசு நம்பூதிரி வரவே இல்லை. தானவேதன் நம்பூதிரி பரபரப்படைந்தார். ஊருக்குத் திரும்பும்போது, தன்னுடன் துணையாக வந்த கோயில் பூசாரியான வாசுதேவன் இல்லாமல், தான் மட்டும் எப்படித் திரும்புவது? ஓமல்லூர் கோயிலிலுள்ள மற்ற ஊழியர் களிடமும், வாசுதேவனின் சகோதரியிடமும் என்ன பதிலைச் சொல்வது? வாசுதேவனுக்கு அம்மாவோ அப்பாவோ கிடையாது. இருப்பது ஒரே ஒரு சகோதரி மட்டும்தான்.

உண்மையில் வாசுவிற்கு என்னதான் நடந்தது? ஒன்றுமே புரியவில்லை. தானவேதனின் மனம் பதிலைத் தேடி தவியாகத் தவித்தது.

"என்ன, வாசுவை இன்னும் காணவில்லையே?" - தானவேதன், ஜயந்தனிடம் விசாரிக்கும் தொனியில் கேட்டார்.

"நானும் அதைத்தான் யோசிக்கிறேன். ஒருவேளை அவள் வாசுவை அப்படியே முழுங்கிவிட்டிருப்பாளோ?" - ஜயந்தன் வருத்தமில்லாத குரலில் பேசினார்.

அந்தப் பதிலைக் கேட்டால், இதற்கு முன்பும் இதே போல் பலரை அந்த இடத்திற்கு அனுப்பியிருப்பது போலவும், அத்தனை பேரும் நங்கேமாவுக்கு இரையாகியிருக்கிறார்கள் என்றும் தோன்றியது.

"வாசு திரும்பி வராதிருந்தால் நாம் என்ன செய்வது?"

தானவேதனின் குரல் இடறியது. ஒருவேளை நாம் இதற்காக வென்று வந்திருக்க வேண்டாமோ என்றுகூடத் தோன்றியது. கற்சிலையில் இருந்த தண்டை காணாமல் போனால் என்ன? அந்தக் கற்சிலையே காணாமல் போயிருந்தால்தான் நமக்கென்ன நஷ்டம்? நாம் ஏன் இதில் தலை கொடுத்தோம்? காவலிருந்ததில் ஒருத்தி காணாமல் போனால், தேவிக்கும் எந்தவிதமான பாதுகாப்புக்

குறைவும் ஏற்படப் போவதில்லை.

"வாசு வராவிட்டால் அவனை வரவழைக்கும் வழி எனக்குத் தெரியும். எதற்கும் நாம் கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாம்" என்றார் ஜயந்தன்.

நேரம் கடந்தது. எதுவும் நடக்கவில்லை!

"என்னதான் நடந்தது என்று போய்ப் பார்த்துவிட வேண்டியதுதான் - பேசியபடியே ஜயந்தன் எழுந்தார். தானவேதனும் அவருடன் நடந்தார்.

"திருமேனி, நீங்கள் இங்கேயே இருங்கள்" என்றவர் உட்புறம் பார்த்துக் கொண்டே, "தேவகி..." என்று அழைத்தார் ஜயந்தன்.

"என்ன அண்ணா?" என்று உள்ளிருந்து ஒரு குரல் வந்தது.

"இவருக்குக் காலைப் பலகாரத்தைக் கொடுத்துக் கவனி. நான் வருவதற்குக் கொஞ்ச நேரமாகும்" என்று சொல்லிவிட்டு ஜயந்தன் தன்னுடைய பழைய - பாழடைந்த வீட்டின் பக்கமாகச் சென்றார்.

தேவகி அந்தர்ஜனம் ஆவி பறக்கும் சூடான இட்லியையும் சாம்பாரையும் தானவேதனுக்குப் பரிமாறினாள். கூடவே ஒரு கிளாஸில் தண்ணீர் கலக்காமல் சுண்டக்காய்ச்சப்பட்ட பால்.

தேவகி திருமணமாகாதவள். ஏன் திருமணம் நடக்கவில்லை என்று கேட்டால்... ஏனோ நடக்கவில்லை. வேறு என்ன சொல்ல ? ஒரு வேளை மாந்திரீகக் குடும்பமாக இருந்ததால் மற்றவர்கள் முயலவில்லையோ என்னவோ? நல்ல வருமானமுள்ள குடும்பமாக இருந்ததால் பணத்தட்டுப்பாடு என்பது ஒரு பிரச்னையாகவே இருக்கவில்லை. பால்,வெண்ணெய், நெய் போன்றவற்றை ஏராளமாகச் சாப்பிட்டு அவளது உடம்பும் நெய்யின் நிறம் பெற்றிருந்தது. புஷ்டியான-தடித்த, சதைப்பிடிப்பான உடல். துடிப்பான கன்னக் கதுப்புகள். பூரண கும்பம் போன்ற மார்புகள். அசையாத நீர் நிலையில் ஒரு சிறிய கல்லைப் போட்டால் ஒரு விநாடி தோன்றி மறையும் நீர்ச்சுழிபோன்ற அழகான தொப்புள் கொடிப்பகுதி. விசாலமான இடுப்பின் கீழப்பகுதி உடுத்திருக்கும் உடையையும் மீறித் ததும்பும் உடம்பின் சதைத் திரட்சி. உருண்டு திரண்ட கை கால்கள். சிறிய அழகான கண்கள். அழகான மூக்கு -



இதெல்லாம் தேவகியின் சிறப்பு அம்சங்கள்.

மார்பின் மேற்பரப்பை மறைக்கத் திணறும் மேற்புற முண்டு வேட்டி. தலைமுடியை முடிந்து இடதுபுறமாகச் சரித்துப் போட்டிருக்கும் கடத்தநாடன் கொண்டை. அறுபதைத் தாண்டிய தானவேதன், தேவகியைக் கண்டவுடன் தன்னுடைய பழைய இருபதுகளுக்கு விரைவாகத் திரும்பினார்.

'தன்னுடைய இளமைப்பொழுதுகளில் கதகளி நாட்டியம் எங்கு நடந்தாலும் விடாமல் தேடி விசாரித்து காரியஸ்தருடன் சென்று வந்தபோது இந்த வீட்டிற்கு எப்படி வராமல் போனோம்?' என்று தீவிரமாக யோசித்தார் தானவேதன். அந்தக் காலத்தில் தேவகி அந்தர்ஜனம் இந்த ஊரிலேயே இல்லை. 'இந்த வயதில் இவள் இப்படித் தோற்றமளித்தால், அந்தக் காலத்தில் எப்படி இருந்திருப்பாள்!' என்று அவர் மனம் ஆராய்ச்சியிலிறங்கியது. வெள்ளரிப்பிஞ்சு போல் அல்லவா இருந்திருப்பாள்.

இட்லியைத் தட்டில் வைத்துச் சாம்பார் ஊற்றியபோது தானவேதன் தன்னையறியாமல் நிமிர்ந்து பார்த்தார். 'என்ன இது ? இந்த பிரபஞ்சமும் அண்டசராசரங்களும் தனக்கு முன் நிற்கும் தேவகி அந்தர் ஜனத்திற்குள் அடங்கி ஒடுங்கிப் போய்விட்டதா?'

"சாப்பிடுங்கள்" - தேவகி குனிந்த நிலையிலேயே அவரைப் பார்த்துக் கூறினாள்.

தானவேதன் இட்லியை சாம்பாரில் தோய்த்து தொண்டைக்குள் இறக்கினார். அது கரைந்து இறங்கியது. இதற்கு முன்பு இரண்டு நாள் இங்கு தங்கியிருந்தோம். அப்பொழுதெல்லாம் இவள் எங்கே போய் இருந்தாள்? பார்வையில் பட வேண்டாமென்று மறைந்திருந்தாளோ? சே... இரண்டு இரவுகள்... பாழாகிப் போன நாட்கள்!

இட்லி ஒவ்வொன்றையும் இரண்டு துண்டுகளாகப் பிட்டு சாம்பாரிலும், நெய் ஊறிய மிளகாய்ப் பொடியிலும் தொட்டுத்தொட்டு உதடுகளுக்குள் அனுப்பிய போது தென்பட்ட ருசியில் மறுபடியும் தானவேதன் கனவுகளுக்குள் அமிழ்ந்தார்.

மூலிகைகளைக் குழைத்தெடுத்த குழம்பில், நாட்டுச்செக்கில் ஆட்டியெடுத்த தேங்காய்எண்ணெய் சேர்த்து சுண்டக் காய்ச்சிய

எண்ணெயைத் தடவிய கன்னங்கறுத்த முடி தேவகியினுடையது. அந்தத் தைல மணமும், சந்தனத்தையும் மஞ்சளையும் சேர்த்து அரைத்து உடம்பில் தேய்த்துக் குளித்த பரிமளப்பொடியின் வாசனையும் தேவகியிடமிருந்து புறப்பட்டு தானவேதனின் மூக்கைக் கடுமையாகத் தாக்கியது.

"இதுவரை பார்க்கமுடியவில்லையே..." ஆறேழு இட்லிகளைச் சாப்பிட்ட பிறகு தானவேதன் பேசத் தொடங்கினார்.

"அண்ணா கூப்பிடாமல் வரமுடியுமா?" - தேவகி பதில் சொன்னாள்.

"கல்யாணம்...?"

"நடக்கவில்லை..."

"ஏன் ? கல்யாணம் பிடிக்கவில்லையா ?"

"யாரும் கேட்டு வரவுமில்லை, யாரையும் நான் பார்த்ததுமில்லை."

"ஏன் அப்படி ?"

"வந்தவர்கள் எல்லோரும் மந்திர தந்திரத்திற்கு மட்டுமே இங்கு வந்தார்கள். இங்கிருந்தவர்கள் அவர்கள் கேட்டதை மட்டுமே செய்து அனுப்பினார்கள்."

"தேவகி கெட்டிக்காரிதான்!"

"இப்பொழுதுதான் என் காதால் இப்படி ஒரு வார்த்தையைக் கேட்கிறேன்..."

"அப்படியானால் முழுமையாகவே சொல்லிவிடுகிறேனே. கெட்டிக்காரி மட்டுமல்ல, எதையும் செய்யும் திறமையுள்ளவள்..."

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் அவளது கண்களில் மெல்லியதாக நாணம் படர்ந்தது.

"இன்றைக்குப் புறப்படமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். அப்படித்தானே" - முகத்தைச் சரித்து ஓரக்கண்களால் தானவேதனின் மனதைத் தூண்டிலில் இழுப்பதைப் போல் கேட்டாள்.

"ஆமாம்! உடனடியாகப் புறப்பட முடியாது. நிறைய விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது. எல்லாம் தெரிந்தபிறகுதான் பயணம்."



"இனிமேல் எனக்கு அனுமதி வேண்டியதில்லை. நான் வரட்டுமா?" - பாத்திரங்களை எடுத்துக்கொண்டு நடந்தவள், ஒரு கணம் திரும்பி நின்று பேசிவிட்டுப் போனாள். அவள் நடந்தபோது இடுப்புப் பகுதியின் சதை அழகாக அதிர்ந்தது. அந்தச் சதைப் பகுதிகள் கீழே விழுந்துவிடப் போவதைப் போலும், ஓடிச்சென்று அதைத் தாங்க வேண்டுமென்றும் தானவேதனுக்குத் தோன்றியது.

ஓமல்லூர் கோயிலையும், வாக நம்பூதிரியையும் சுத்தமாக மறந்து தானவேதன் சுகமாக உட்கார்ந்து வெற்றிலை போட்டார்.

ஜயந்தன் பழைய வீட்டை அடைந்தார். மேற்குப் புறமாக நடந்தார். சற்றுத் தொலைவில் ஆங்காங்கு பட்டை வெடித்துச் செதில்கள் போல் உரிந்திருந்த முள் முருங்கை மரத்தருகே சென்றார். அங்குதானே நங்கேமா இருக்கிறாள்? ஒருவேளை இரவுமுழுவதும் உறக்கமில்லாததால் வாக எங்காவது படுத்து உறங்கிக் கொண்டிருக்கிறானோ?

முள் முருங்கையின் அடிப்புறத்தை நெருங்கி நின்றார். அந்த மரத்தின் மேற்புறத்திலிருந்து ரத்தம் கீழ்ப்புறமாகக் கோடு போட்டாற்போல் சுற்றிலும் வடிந்திருந்தது. கருஞ்சிவப்பான ரத்தக் கோடுகள். கண்களை உயர்த்தி மேற்புறமாகப் பார்த்தார். வேறு ஒன்றுமே தெரியவில்லை.

'இந்த ரத்தம் ஏது ? வாசு என்னவானான்?' - ஜயந்தன் நிம்மதியற்றுத் தவித்தார். திரும்ப வேண்டியதுதான் என்று தோன்றினாலும் உண்மை என்னவென்று அறிய வேண்டுமே என்றும் தோன்றியது. இரண்டு தடவை "வாக... வாசு..." என்று அழைத்துப் பார்த்தார். எந்த விதமான பதிலும் கிடைக்கவில்லை.

என்னதான் நடந்ததென்பதைத் தெரிந்துகொண்டே தீருவது என்ற பிடிவாதம் அவருள் தோன்றியது. மனதில் பிறந்த அந்தச் சபதத்துடன் மீண்டும் பழைய வீட்டை அடைந்தார். தானிய அறையின் கதவில் பஞ்ச உலோகங்களால் செய்யப்பட்ட ஏழடுக்கு விளக்கின் மேற்பகுதியில் அந்த அறையின் சாவி தொங்கிக் கொண்டிருந்தது.

அந்த அறையைத் திறந்தால் அதற்குள் எல்லாவற்றிற்குமான ஒரு பதில் இருந்தது. பிரஸ்ன ஜோதிடத்தில்கூடத் தெரியாத

விஷயங்களைக் காட்டித்தரும் மாயக் கண்ணாடி. வேறு வழியே இல்லையென்றால் மட்டுமே அதைப் பயன்படுத்துவது வழக்கம்.

ஓர் அங்குல கனத்தில் பதினான்கு அங்குல நீளம், பத்து அங்குல அகலம் உள்ள கண்ணாடி.செப்புத் தகட்டில் அறுபத்து நான்கு மூலிகைச் சாற்றைக் கலந்து, மந்திரம் உருவிட்டு, வடித்தெடுத்த கண்ணாடி. அதை எந்தக் காலத்தில் யார் செய்தனர் என்பது தெரியாது. வெகு நாளாக இருந்துவரும் குடும்பச் சொத்துக்களில் அதுவும் ஒன்று. வேறு எந்த வழியும் இல்லாத போது மட்டுமே இதைப் பயன்படுத்த வேண்டுமென்கிற கண்டிப்பான நிபந்தனையும் உண்டு. அதுவும் ஒரு காரியத்திற்காக ஒரே ஒரு தடவை மட்டும் தான் பயன்படுத்தலாம்.

இதுவரை ஜயந்தன் அந்தக் கண்ணாடியை ஒரே ஒரு முறைதான் பயன்படுத்தியிருக்கிறார். அந்தச்சோதனையும் வெற்றிகரமானது தான்.

தென்பகுதியிலுள்ள ஓர் ஊரில், புராதனமான கோயிலிலிருந்த தேவி சிலையொன்று ஒரு முறை திருடு போனது. அதைக் கண்டுபிடிப்பதற்கான எல்லா முயற்சிகளும் பலனளிக்காமற் போகவே, சூரிய நாராயணனின் அனுமதியுடன் ஜயந்தன் கண்ணாடியை அணுகிக் கண்டுபிடிக்கவும் செய்தார்.

தான் சொல்லியனுப்பிய நபரைக் காணவில்லை என்றபோது, அதுவும் அந்த நபருக்குப் பதிலாக ரத்தத் துளிகளைப் பார்த்ததும் ஜயந்தனுக்கு இதைத் தவிர வேறு வழி ஏதும் தெரியவில்லை. எனவேதான் மாயக் கண்ணாடி இருந்த அறையை நெருங்கினார்.

அவர் அறையைத் திறந்தபோது ஏழு மணிகளும் குலுங்கி அதிர்ந்தன. மணிப்பூட்டின் ஒலி!

கதவை உட்புறமாகத் தள்ளித் திறந்தார். விளக்கைச் சற்று நகர்த்தி, வலக்கையை உள்ளே செலுத்தி எதையோ துழாவினார். உள்ளே நல்ல இருட்டு. வெட்டி எடுக்கலாம் போன்ற கட்டி இருட்டு.

மாந்திரீகக் கண்ணாடியின் முன்புறம் ஒரு சிறிய விளக்கு இருந்தது. வெளியிலிருந்த தூண்டாமணி விளக்கிலிருந்து உள் விளக்கை ஏற்றினார். பின்பு விளக்கை பழைய இடத்தில் வைத்து விட்டு வார்த்தாளி மந்திரத்தை ஜபித்தார்.



'மனிதத் தலைகளாலான மாலையைக் கழுத்தில் அணிந்த, செந்தாமரைப் பூவிலுள்ள இந்திர நீலக்கல்போல் ஒளி படைத்த உடல் கொண்டவளே, இரும்பு உலக்கை, யானை, அபயம், வரதம் போன்றவை தரித்த நான்கு கைகள் கொண்டவளே... அழகான ஸ்தனங்கள், சிவப்புப் பட்டாடை, மூன்று கண்கள், பன்றி முகம் போன்றவற்றுடன் தோற்றமளிக்கும் வார்த்தாளி தேவியே நான் உன்னை வணங்குகிறேன்.'

"ஓமல்லூர் கோயிலிலிருந்து இங்கு வந்து சேர்ந்த வாசு நம்பூதிரிக்கு என்ன நேர்ந்தது என்பதை எனக்குக் காட்டித்தா" - ஜயந்தன் வேண்டினார்.

கண்ணாடிக்கு முன்புறமிருந்த சிறிய விளக்கின் மஞ்சள் நிற ஜுவாலை வரவரப் பெரியதாக வளர்ந்து, மலர்ந்தது. கண்ணாடி முழுவதும் மஞ்சளின் தகதகப்பு படர்ந்தது.

வாசு நம்பூதிரி அப்பொழுதும் உட்கார்ந்தபடி மந்திரம் ஜபித்துக் கொண்டிருந்தார். அவருக்கு முன்னால் ஒரு சிறிய ஹோமகுண்டம் இருந்தது. சற்று நேரத்திற்குள் கண்ணாடியில் முக்கால் நிர்வாணமான நங்கேமா தெரிந்தாள்.

அன்றுதான் வாழ்க்கையில் முதன்முறையாக, அந்தக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து வாலிபத்தில் அகால மரணமடைந்து, பிரம்ம ரக்ஷஸாக மாறிவிட்டிருந்த நங்கேமாவை பார்த்தார் ஜயந்தன்.



## 14

தேவகி அந்தர்ஜனம் நீர் நிறைந்த கூஜா, வெண்கல தம்ளர் சகிதம் வீட்டின் முன்னறைக்கு வந்தாள். அப்பொழுதுதான் இரவு உணவை முடித்த தானவேதன் வெற்றிலை பாக்கு போட்டுக் கொண்டிருந்தார்.

எரிந்துகொண்டிருந்த கோல்விளக்கின் வெளிச்சத்தில் தேவகியின் இளமை துள்ளும் உடம்பை தானவேதன் கவனித்தார். அவள்

அறைக்குள் நுழைந்தவுடன் தலையில் தேய்த்திருந்த காய்ச்சிய எண்ணெயின் மணம் குப்பென்று வீசியது.

"வெற்றிலை போடும் பழக்கம் உண்டா?" - தானவேதன் கேட்டார்.

"போட்டால் போகிறது." - சொல்லியபடியே அவன் அவருக்கு முன்பாகச் சப்பணமிட்டு உட்கார்ந்தாள். உட்கார்ந்தபோது மேல் முண்டு விலகி இடுப்புப் பகுதியிலிருந்த சதைப்பகுதிகள் இசைவாக அசைந்தன.

தேவகி வெற்றிலையை எடுத்துப் பக்குவமாக நரம்புகளைக் கீறி, காம்பைக் கிள்ளி, வெண்ணெய் போல் சுண்ணாம்பைத் தடவினாள்.

"இதோ வாசனைப் பாக்கு." - தானவேதன் அவளுக்கு முன்னால் நகர்த்தி வைத்தார். பின்பு அதில் கொஞ்சத்தை எடுத்து அவள் உள்ளங்கையில் போட்டார். "புகையிலை போடுவதுண்டா?"

"இல்லை. எனக்குத் தலைசுற்றும்" பாக்கை மென்றபடியே பேசினாள்.

"வெற்றிலை போடுவதே ஒரு சுகம் இல்லையா?" - நம்பூதிரி கேட்டார்.

"இதையெல்லாம் யார் கண்டுபிடித்தார்களோ?"

"புராண காலத்திலிருந்தே இந்தத் தாம்பூலப் பழக்கம் இருப்பதாகக் கேள்விப்பட்டதில்லையா? ஜராசந்தனுடன் யுத்தம் செய்து பீமன் தோல்வியடையப் போகிறான் என்ற நிலை வந்தவுடன், வெற்றிலையை எடுத்து இரண்டாகக் கீறி திருப்பித் திருப்பிக் காட்டவில்லையா கிருஷ்ணன்? அதைப் புரிந்து கொண்டுதானே பீமன் ஜராசந்தனை இரண்டாகக் கிழித்து திருப்பியும் புரட்டியும் போட்டான். அப்படியென்றால் அந்த நாளிலிருந்தே வெற்றிலை போடும் பித்து தொடங்கியிருக்கிறது என்றுதானே அர்த்தம்?" - சற்று நிறுத்திய பிறகு தொடர்ந்தார்: "ஒரு விஷயம் எனக்குப் பிடிபடவில்லை. ஒரு காலத்தில் நான் போகாத இடமே இல்லை. தேவகியைப் பார்த்தபோது தான் இந்த இடத்திற்கு எப்படி வராமல் போனேன் என்று தோன்றுகிறது!"

"இப்பொழுதாவது பார்த்தீர்களே. அது போதும்!"



"அண்ணா படுத்துவிட்டாரா?"

"என்னிடம் சொன்னார் - உங்களுக்குத் தண்ணீர் கொண்டு வந்து தரும்படி..."

"அப்படியொரு பழக்கமே எனக்குக் கிடையாது. அவ்வப்போது தேவைப்பட்டால் மட்டுந்தான். நிர்ப்பந்தம் ஒன்றும் இல்லை."

இதைக் கேட்டவுடன் தேவகி சிரித்தாள்.

"உன் சிரிப்பு மயக்கம் தருகிறது."

"நான் சிரித்து வெகுநாளாகிவிட்டது. இப்படியொரு வேடிக்கைப் பேச்சை இதுவரை கேட்டதுமில்லை."

"என்னுடைய வேடிக்கைப் பேச்சு இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறது. நிறையப் பேச வேண்டியுள்ளது."

வெளியிலிருந்து பறந்துவந்த ஒரு பட்டாம்பூச்சி, அறைக்குள்ளிருந்த விளக்கை அணைத்தது. இருந்தாலும் ஜன்னல் வழியாக மெல்லிய வெளிச்சம் இழைந்து கொண்டிருந்தது. அந்தர்ஜனம் எழுந்து வாசல் கதவை மூடித் தாழ்ப்பாள் போட்ட பிறகு திரும்பி வந்து ஜன்னலையும் மூடினாள். அறைக்குள் இருள் நிறைந்தது.

தேவகி அந்தர்ஜனம் தன்னுடைய வாழ்க்கையில் முதல் முதலாக ஓர் ஆடவனை உணர்ந்துகொண்டாள். மறுநாள் காலையில் இட்லியையும், காபியையும் தானவேதனுக்கு முன்னால் வைத்த போது ஒரு கள்ளச் சிரிப்புடன் அவள் தானவேதனைப் பார்த்தாள்.

வாக நம்பூதிரியைத் தானவேதன் மறந்தே போய்விட்டார். இருப்பினும் தானவேதன் கேட்டால் சொல்வதற்கான ஒரு பதிலை ஜயந்தன் மண்டையைக் குடைந்து யோசித்துக் கொண்டிருந்தார். இறுதியில் வாக நம்பூதிரி தொலைந்து போனதாகவே இருக்கட்டும் என்று நினைத்தார். இருப்பினும், விஷயம் அத்துடன் முடியவில்லை. தானவேதன் எதற்காக வந்திருக்கிறாரோ, அந்த வேலையை முடிக்க வேண்டுமே. தேவி கோவிலிலுள்ள காவல்காரியின் தண்டை எப்படிக் காணாமல் போனது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டுமே!

அது அவ்வளவு சுலபத்தில் முடிகிற காரியமாகத் தோன்றவில்லை. அதைத் தெரிந்து கொள்வதற்காக ராசிப் பலகையை எடுத்தபோதுதான் அது பறந்துபோனது. அது எதனால் என்பதும்

மற்றொரு மர்மம். இத்தனைக்கும் நடுவில் புதியதொரு மடத்தனத்தை வேறு செய்து விட்டோம். மாயக்கண்ணாடி முன்பு நின்று வாக நம்பூதிரி என்ன ஆனான் என்பதைத் தெரிந்த கொள்ள முயன்றதைவிட, ராசிப்பலகை என்ன ஆனது என்று தெரிந்து கொண்டிருக்கலாம். இப்பொழுது அதற்கும் வழியில்லாமல் போனது. நிலைமை இப்படியே தொடர்ந்தால் மாந்திரீகத்தில் தொடர்ந்து தோல்வியையே சந்திக்க வேண்டியிருக்கும். என்ன செய்யலாம்?

அடிக்கடி பிதாமகனை அழைத்துக் கொண்டிருந்தால் அவருக்குக் கோபம் வந்து சபிக்கலாம். ஜயந்தன் நிம்மதி இழந்தார். இருப்பினும் வேறுவழி இல்லை. மறுமுறையும் சோதித்துப் பார்த்துவிட வேண்டியதுதான். ஜாமக்கோழி கூவியபோது ஜயந்தன் பழைய வீட்டிற்குப் போனார். அவரது கையில் இன்னும் கூவத் தொடங்காத சேவல் ஒன்று இருந்தது. அந்தச் சேவலின் ரத்தம் பலிக் கல்லில் விழுந்தால் தன்னுடைய மாந்திரீகத் தாத்தா விழித்துக் கொள்வார் என்பது உறுதி.

அவர் உயிருடனிருந்த காலத்தில் கோழியை ஒரு கையால் பிடித்து, கழுத்தை அறுத்து அந்த ரத்தத்தை அப்படியே குடிப்பாராம். ஒரு தடவை பகவதி கோயிலுக்குச் சென்றபோது ஆவேசத்துடன் சாமி வந்து அங்கிருந்த கோயில் ஆடு ஒன்றைப் பல்லால் கடித்தே தூக்கிவாராம். ரத்தத்தை முழுவதும் குடித்த பிறகு, அந்த ஆட்டு உடம்பை சக்கையைப்போல் தூக்கி எறிந்தாராம். கோயில் ஆடு என்றால் கொழுத்து, தடித்த ஓர் அசாதாரணப் பிறவி.

எப்படிப்பட்ட மாடனையும், சுடலையையும் கூப்பிட்ட குரலுக்கு வரவழைப்பார். அதன் பிறகு அவர்கள் அசைய வேண்டுமானால் தாத்தா வாய்திறக்க வேண்டும். இதுபோல் தாத்தாவைப் பற்றி பயங்கரமான கதைகள் இன்னும் எத்தனையோ உண்டு.

தன்னுடைய தாத்தா சமாதியடைந்திருக்கிற நிலவறைக்கு மேற்புறமிருக்கிற பலிக்கல்லில், சேவலின் ரத்தத்தைச் சிந்தினார். பிறகு தாழ்ந்த குரலில் தாத்தாவை அழைத்தார்:

"தாத்தா, நான் தோல்வியடைந்திருக்கிறேன்." - ஜயந்தனின்



வார்த்தைகளைக் கேட்டு மகா மாந்திரீகனான தாத்தா கண்விழித்தார். பலிக்கல்லில் சிந்திய ரத்தம் முழுவதுமாக மறைந்த பிறகு ஒரு குரல் கேட்டது.

"என்ன நடந்தது?"

"ஒன்றும் சரியாகவில்லை. நான் சொல்லியனுப்பிய வாகவை அவன் சதைக்கூடாக வீசியெறிந்துவிட்டான். அதற்கும் நான் பதில் சொல்ல வேண்டும். இப்போது நான் என்ன செய்வது? சொல்லுங்கள் செய்கிறேன்."

"அப்படியானால் ஒரே ஒரு வழிதான் உள்ளது."

"எப்படிப்பட்ட வழியாக இருந்தாலும் சொல்லுங்கள்..."

"நங்கேமா நமக்கு எதிராக உள்ளாள். அவளுக்குத் தேவையானதை உங்களால் கொடுக்க முடியாது. அதற்குத் தகுந்த ஆள் யாரென்று தெரிந்துகொண்டால், அவனை உடனே இங்கு கொண்டு வரவேண்டும்."

"அதை தான் எப்படித் தெரிந்து கொள்வது?" - ஜயந்தன் கையைப் பிசைந்தபடி கேட்டார்.

"அறைக்குள் கண்ணாடி இருக்கிறதல்லவா?"

"அதை இந்த விஷயத்திற்காக ஒரு தடவை உபயோகித்து விட்டேனே. மறுபடியும் எப்படிப் பயன்படுத்துவது?"

"வழியுள்ளது."

"எப்படி?"

"கண்ணாடியைப் பாதுகாப்பது ஒரு ரக்ஷஸ்தான். அதற்கு ஒரு பலி கொடுத்தால் நல்லது. நல்ல கொழுத்த ஆடாக இருந்தாலும் போதும்."

"அப்படிச் செய்தால் திரும்பவும் அதில் காணமுடியும் என்றா கூறுகிறீர்கள்?"

"ஆமாம்!"

"பிறகு...?"

"முதலில் அதைச் செய். மற்றதைப் பிறகு கூறுகிறேன்."

"கண்ணாடியில் தெரியும் மனிதன் எங்கே இருக்கிறான் என்பதை எப்படித் தெரிந்து கொள்வது?"

"அவனைச் சுற்றியுள்ள இடங்களைக் கவனி. அவனுடன் வேறு

யார் யார் இருக்கிறார்கள் என்பதைக் கவனி. சுலபமாகப் புரிந்து விடும்."

ஜயந்தன் திரும்பினார். சற்று விலகி நின்று மந்திரம் ஜபித்து ஒரு மூர்த்தியை வரவழைத்தார். தெளிவற்ற வடிவத்தில் ஒரு பூதம் ஜயந்தனுக்கு முன்னால் வெளிப்பட்டது.

"நிறைய ரத்தமுள்ள ஓர் ஆண் ஆடு எனக்குத் தேவை. எங்கிருந்தாவது அதை உடனடியாகக் கொண்டு வா" - அவர் கட்டளையிட்டவுடன் அந்த உருவம் மறைந்தது. சில நிமிடங்களில் அந்த இடத்தில் ஓர் ஆட்டின் 'மே' என்ற குரல் கேட்டது. தடித்துக் கொழுத்த ஒரு வெள்ளாடு.

கண்ணாடியைப் பாதுகாக்கும் ரக்ஷஸின் முன்புறமிருந்த வாளை எடுத்து வீசினார். ஒரே வெட்டில் அதன் கழுத்து துண்டாகியது.

"உனக்கு என்ன வேண்டும்?" இருளிலிருந்து ஒரு குரல் கேட்டது.

"இன்னுமொரு தடவை நான் மாயக்கண்ணாடியைப் பார்க்க வேண்டும்."

"அடிக்கடி பார்க்க வேண்டுமென்று கேட்கக் கூடாது. தொடர்ந்து பார்த்தால் அதன் வலிமை குன்றிவிடும். அந்தக் கண்ணாடி அதன் ஆயுளில் நூற்று ஒரு தடவை மட்டுமே காட்டித் தரும். இதுவரையில் எத்தனை தடவை பார்த்திருக்கிறார்கள் என்பது சரியாகத் தெரியவில்லை" - ரக்ஷஸ் கூறியது.

"அதை எப்படித் தெரிந்து கொள்வது?" ஜயந்தன் விசாரித்தார்.

"அதை பிரஸ்னத்தின் மூலம்தான் பார்க்க முடியும்!"

பிரஸ்னம் என்று கேட்டபோது ஜயந்தன் ஒருகணம் நடுங்கினார். அது உடனடியாக நடக்கக் கூடிய காரியமல்ல. ராசிப் பலகை பறந்து போய் விட்டது. நங்கேமா எதிராக இருக்கிறாள். எனவே, நடப்பது நடக்கட்டும் என்று நினைத்தவராக, தொங்கிக் கொண்டிருந்த சாவிக் கொத்தை எடுத்து அறையைத் திறந்தார். விளக்கைப் பற்ற வைத்து அதன் அருகில் வைத்தார்.

பழையபடி வெளிச்ச வட்டம் பெரியதானது. தெளிந்து வந்தபோது, ஜயந்தன் கவனமாக அதையே பார்த்துக் கொண்டிருந்தார். பேரழகியும், தேவதையைப் போன்றவளுமான ஒரு பெண்



சர்வாலங்கார பூஷிதையாய், நிர்வாண உடலுடன் தெரிந்தாள். கறுத்து நீண்ட கூந்தல், அலைகள் போல் பின்புறம் படர்ந்திருந்தது. இடதுகை தொப்பூழ்க் கொடிப் பகுதியின் அருகில் இருந்தது. வலது கை, வலப்புறக் கன்னத்தின் கீழ் பதிந்திருந்தது. நல்ல உறக்கத்திலிருநதாள். அருகில் வேறு யாரும் தென்படவில்லை. சிற்ப வேலைப்பாடுகள் செய்த ஒரு கட்டிலில் சித்திரத் தையல் போட்ட விரிப்பில், பஞ்சணை மெத்தையில் அவள் படுத்திருந்தாள்.

ஜயந்தன் ஒரு விநாடி உடல் சிலிர்த்தார். அந்தக் காட்சி அவரைப் பரவசப்படுத்தியது. சற்று நேரத்திற்குப் பிறகு அழகான ஓர் இளைஞன் அவளை நெருங்கி, தன்னுடைய இடக்கையால் அவளது தலையைத் தாங்கியபடியே, அவளழகைப் பருகிக் கொண்டிருந்தான். பிறகு வலக் கையால் அவளது தலைமுடியை ஒதுக்கினான். அமுதக் கலசங்கள்போல் தெரிந்த அவளது மார்பை மூடியிருந்த மேலாடை விலகியது. ஒரு மெழுகுப் பொம்மைபோல் படுத்திருந்த அந்த அழகியை, அவன் தன்னுடைய மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டபோது, ஜயந்தன் தன்னுடைய முகத்தைத் திருப்பிக் கொண்டார். அதைப் பார்க்க விரும்பாததால் அல்ல, அந்தக் காட்சியைப் பார்க்கும் மனோதிடம் அவருக்கு இல்லாததால்..

'யார் இந்த அழகு இளைஞன்? தேவனா, மனிதனா? தன்னுடைய தாத்தா குறிப்பிட்டது இந்த இளைஞனைத்தானா? இவன்தான் என்றால் நங்கேமா நம்மிடம் சிக்கியது போல்தான். ஒரு நங்கேமா என்ன, இவனைப் போன்ற இளைஞர்களின் துணையால் ஆயிரம் நங்கேமாக்களை வென்று அடக்கிவிடலாம்! அப்சரஸ்களை அழகில் தோற்றுவிடக் கூடிய ஒரு தேவகன்னிகை போன்றவளை மார்பில் சாய்த்தபடி அவன் படுத்திருந்தான். இவன் மட்டும் நமக்குக் கிடைத்து விட்டால் நிச்சயமாக நங்கேமா திருப்தியடைந்து விடுவாள். அதன் பிறகு அவள், தான் கிழிக்கும் கோட்டைத் தாண்டமுடியாது. அது சந்தேகமே இல்லாத விஷயம்!

ஆனால், கண்ணாடியில் தெரியும் அந்த இளைஞன் எங்கே இருக்கிறான்? அவனை எப்படி கண்டுபிடிப்பது? கண்டுபிடித்தாலும், அவனை எப்படி இங்கு வரவழைப்பது? இதையெல்லாம் தெரிந்து

கொண்டால் விஷயமே முடிந்த மாதிரிதான் என்று தோன்றியது. கண்ணாடியில் அசைந்து கொண்டிருக்கும் அந்த காட்சியில் வேறு எந்த அடையாளத்தையும் காணமுடியவில்லை. இது வெளியிடமாக இருந்தால் ஏதாவது அடையாளத்தைக் கண்டிருக்கலாம். ஆனால், அவனது உருவம் ஜயந்தனின் மனதிலேயே சிற்பம்போல் பதிந்தது. கண்ணாடியிலிருந்த காட்சிகள் மறைந்தன.

அறையைப் பூட்டிக்கொண்டு கிளம்பிய ஜயந்தன் மீண்டும் சமாதியை அடைந்தார். "அப்படிப்பட்ட அழகு இளைஞன் யார் என்பதைத் தெரிந்து கொண்டேன். ஆனால், அவனது இருப்பிடம் தெரியவில்லை" - ஜயந்தன் தன்னுடைய தாத்தாவிடம் கேட்டார்.

"நீ தேடும் மனிதன் உன்னைத் தேடி வந்துள்ள நபரின் ஊரைச் சேர்ந்தவன். நீ பார்த்த அடையாளங்களை அவரிடம் சொல்லிப் பார். ஆள் யாரென்று அவர் கூறிவிடுவார்..."

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஜயந்தன் ஓரளவு ஆறுதலடைந்தார். அங்கிருந்து தமது இல்லத்தை அடைந்தபோது முன்னறையில் இருவர் பேசும் குரல் கேட்டது. ஜயந்தன் உட்புறம் சென்று தன்னுடைய அறையில் படுத்துக் கொண்டார்.

மறுநாள் காலைச் சிற்றுண்டி சாப்பிட்டு, வெற்றிலை போட்டுக் கொண்டிருந்த தானவேதனிடம் தான் பார்த்த அடையாளங்களை ஜயந்தன் கூறினார்.

"நீங்கள் கூறிய அடையாளங்கள் உள்ள ஒருவன் நம்பூதிரிப் பையனாக இருந்தால்,அவன் என் வீட்டிற்கு அருகில்தான் இருக்கிறான். ஆனால்,நீங்கள் கூறுவது அவனைத்தானா என்பது எனக்கு உறுதியாகத் தெரியவில்லை."

"நம்பூதிரிதான் என்பதில் சந்தேகமே இல்லை. பூணூலைப் பார்த்தேன்."

"அவனுடன் நீங்கள் பார்த்த பெண் எப்படி இருந்தாள்?"

"அவளும் சாதாரண அழகியல்ல. அழகு என்றால் அப்படி ஒரு அழகு. ஊர்வசி, மேனகை, ரம்பை, திலோத்தமை ஆகிய நான்கு பேரும் ஒன்றாகச் சேர்ந்து பிறந்தது போன்ற உருவம். காமனின் மலரம்பு தைத்த உடல்!"



"அப்படியானால் அது நூற்றுக்கு நூறு நான் சொன்ன நபரேதான். அதில் சந்தேகமே இல்லை."

"அப்படியானால் அவனைக் கொண்டுவர என்ன வழி? எப்படியும் கொண்டு வந்துவிட வேண்டும்."

"உங்கள் விருப்பப்படியே செய்யலாம்..."

தானவேதனும் வாசு நம்பூதிரியும் புறப்பட்டுச் சென்ற இரண்டு நாட்களுக்குப் பிறகு ஓமல்லூர் கோயிலில் தினசரி பூஜை தொடங்கியது. பக்கத்து சிவன் கோயிலில் பூஜை செய்து கொண்டிருந்த சூரியமித்ரன் நம்பூதிரியை ஊர்ப்பிரமுகரும், அரசாங்க அதிகாரியுமான மாதவன் குட்டி மேனன் ஓமல்லூர்க் கோயிலுக்கு அனுப்பி வைத்தார்.

பிரஸ்னம் பார்ப்பதில் நிபுணரும், மந்திரதந்திரங்களில் தேர்ந்தவருமான சூரியமித்ரன் நம்பூதிரி ஓமல்லூர்க் கோயிலை அடைந்தார். கோயிலில் பூஜை நிற்காமல் நடக்கட்டும் என்று நினைத்த மாதவன் குட்டி மேனன் தானே சென்னாங்கேரி வீட்டிற்குச் சென்று கோயிலின் சாவியை வாங்கிவந்தார். நம்பூதிரியும் சாவியைப் பெற்றுக்கொண்டார்.

கோயில் பலிக்கல்லுக்கு அடுத்து, கர்ப்பக்கிரகத்திற்குச் செல்லும் முதல் படியில் வலது காலை வைத்த போதே அவருக்கு ஏதோ சந்தேகம் தோன்றியது. அப்படியே நின்றார்.

மனதிற்குள்ளேயே ராசிப்பலகையை வரைந்து அதில் சோழி களைப் பரவவிட்டு, எண்ணிக்கையைக் கணக்கிட்டுக் கணிக்க முடிந்த அவர், அந்த சுற்றுப்புறத்தைத் தனது கண்களால் ஒரு முறை சந்தேகத்துடன் பார்த்தார்.

கோயிலுக்கு முன்புறத்தில் வயதான ஒரு ஏழிலம்பாலை (கப்பல் அலரி) மரம் நின்று கொண்டிருந்தது. அதற்குச் சற்றுத்தள்ளி, செதில்கள் போல் பாசம் பிடித்துக்கிடக்கும், ஒரே கல்லில் செதுக்கிய சிற்பங்கள் நிறைய இருந்த அறை. அதைச் சுற்றிலும் பலவிதச் செடிகள் முளைத்திருந்தன.

சூரியமித்ரன் சாவியை எடுத்து அடுத்தபடியில் கால் வைத்தார். கருவறை வாசலை நெருங்கி அந்த கதவின் பூட்டில் சாவியைப்

பொருத்தித் திருக முயன்றபோது, யாரோ அழைத்துக் கூறியது போல் ஒரு குரல் அவரது காதில் ஒலித்தது.

"எதற்காகக் கதவைத் திறக்கிறீர்கள்?"



## 15

மிக அருகில், அவரது காதில் யாரோ மந்திரிப்பது போல் அந்த குரல் கேட்டது. நல்ல தெளிவான குரல் !

சூரியமித்ரன் நம்பூதிரிப்பாடு கேரளத்தின் வடபகுதியான மலபாரில் உள்ள புகழ்பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது இல்லம் குறித்துப் பலவித ஐதீகங்கள் உண்டு.

வெகு நாளைக்கு முன்பு ஏதோ ஒரு தேவதை மனித ஜன்மம் எடுத்துப் பிறந்தாளாம். அவளது பெயர் தாத்திரிக்குட்டி. மிகச் சிறு வயதிலிருந்தே அந்தப் பெண் சூரிய பகவானுடன் ஒருவிதமான ஆத்மப் பிணைப்பு கொண்டிருந்தாள். ஐந்து வயதிலிருந்தே அந்த இல்லத்திலிருந்த குளத்தில் கழுத்தளவு நீரில் நின்றபடி, சூரிய உதயத்திற்கு முன்பிருந்தே அவள் சூரியனைக் கைக்கூப்பித் தொழுவது வழக்கமாம். இப்படியே பிள்ளைப் பருவமும், மடந்தைப் பருவமும் கடந்து தாத்திரிக்குட்டி வயதுக்குவந்து மங்கைப்பருவத்தை எட்டினாள்.

ஒரு தடவை, ஞாயிற்றுக்கிழமையன்று வழக்கம் போல் தாத்திரிக்குட்டி சூரிய நமஸ்காரம் செய்துகொண்டிருந்தபோது எங்கிருந்தோ ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தாள். எதிரே தங்கம்போல் தகதகக்கும் உடம்புடன் எல்லாவித லட்சணங்களும் பொருந்திய ஓர் இளவரசன் நின்றிருந்தான்.

தாத்திரிக்குட்டியின் மனதில் நிறைந்திருந்த சாட்க்ஷாத் சூரியபகவான் தான் அவர். அவர் இப்படிக் கூறுவது போல் அவளுக்குத் தோன்றியது. "உனக்கு நான் அருள் புரிந்திருக்கிறேன்.



இனிமேல் உன்னிலிருந்து பிறக்கும் தலைமுறைகள் எல்லா வகையிலும் எல்லா குணங்களிலும் மேன்மையுடன் விளங்குவார்கள்!"

தாத்திரிக்குட்டியின் திருமணம் நடைபெற்றது. ஆனால், ஓர் உண்மை அவளுக்கு மட்டும்தான் தெரியும். அதாவது, அவள் திருமணத்தின்போதே கர்ப்பிணியாக இருந்தாள். சில நாட்களில் அவளுக்கு ஒரு குழந்தை பிறந்தது. குழந்தையைக் கண்ட எல்லோரும் வியப்படைந்தார்கள். அந்தக் குழந்தை சூரியனைப் போன்ற ஒளியுடன் பிறந்தது. அதன் பிறகு தாத்திரிக்குட்டி குழந்தை பெறவே இல்லை. அந்தக் குழந்தையிலிருந்து அங்கு ஒரு புதிய வம்சம் தோன்றியது. அதிலிருந்து அந்த இல்லத்திற்கு சூரியமனை என்ற பெயர் ஏற்பட்டது.

சூரியமனையைச் சேர்ந்த நம்பூதிரிகள் பிறவியிலேயே கெட்டிக்காரர்களாக இருந்தனர். மந்திரதந்திரங்களில் தேர்ந்து விளங்கினார்கள். அவர்களது திறமை, வல்லமை குறித்துப் பலவித கதைகள் பரவத் தொடங்கின.

அப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்த புகழ்பெற்ற நாலைந்து பேரில் ஒருவர் தான் சூரியமித்ரன் நம்பூதிரிப்பாடு.

அவர் இளைஞராவதற்குள்ளேயே எல்லா மந்திரங்களையும் கற்றுத்தேர்ந்திருந்தார். நன்மந்திரவாதம், துர்மந்திரவாதம் இரண்டையுமே கற்றுவிட்டிருந்தார். யார் பார்த்தாலும் ஒரு கணம் நின்று கவனிக்கும் உடலமைப்பு அவருடையது. நல்ல உயரம், விசாலமான நெற்றிப் பகுதி, கட்டளையிடும் கண்கள், பரந்த மார்புப்பகுதி, ஒடுங்கிய வயிற்றுப் பகுதி, கழுத்தில் தங்கக்கம்பியால் கட்டிய ருத்திராக்ஷ மாலை, புரளும் பூணூல், மோதிர விரலில் வைடூரியம் பதித்த மோதிரம் இதெல்லாம் சேர்ந்தால், அவர்தான் சூரியமித்ரன் நம்பூதிரி.

"என்ன திருமேனி, அப்படியே சமைந்துவிட்டீர்கள்?" அவருக்குப் பின்னால் நெருங்கி நின்றிருந்த அப்புண்ணி மாரார் கேட்டார். சூரிய மித்ரன் வந்திருப்பதை அறிந்துதான் அவரும் வந்திருந்தார்.

மாரார் ஓமல்லூர் கோயிலைப் பற்றி நன்கு தெரிந்தவர். ஒரு காலத்தில் ஓமல்லூர்க் கோயிலின் சக்தி கொடிகட்டிப் பறந்தபோது அப்புண்ணி மாராரின் முன்னோர்கள்தான் செண்டை (ஒருவகையான மத்தளம் போன்றது) இசைக்கவும், புஷ்ப கைங்கரியத்தையும் செய்து வந்தனர். கோயில் இப்பொழுது மிகவும் பரிதாபகரமான நிலையை அடைந்துவிட்டதால் அதையெல்லாம் நிறுத்தி விட்டிருந்தனர்.

சமீப காலத்தில் இந்தக் கோயிலைப் பற்றிப் பரவி இருந்த சில கதைகளை அவரும் கேள்விப்பட்டிருந்தார். உண்மையில் நடந்தது என்ன என்பதைத் தெரிந்தகொள்ளத்தான் அவர் வந்திருந்தார்.

"நீங்கள் யார் என்று தெரியவில்லையே?" - திருமேனி திரும்பி நின்று மாராரிடம் கேட்டார்.

"அப்புண்ணி மாரார் என்று என்னைக் கூப்பிடுவார்கள். திருமேனி வந்திருப்பதை அறிந்து பார்த்துப் போகலாம் என்று வந்திருக்கிறேன்."

"அப்படியானால் நீங்கள் இந்த இடத்தைச் சேர்ந்தவர்தான், இல்லையா?"

"ஆமாம்."

வேறு எதையோ பேசமுயன்ற திருமேனி சற்று நேரம் பேசாமல் மௌனமாகவே, "திருமேனி, ஏன் என்னமோ போல் இருக்கிறீர்கள்?" மாரார் பொறுமை இழந்தவராகக் கேட்டார்.

சூரியமித்ரன் நம்பூதிரிப்பாடு எதுவும் பேசாமல் மௌனமாகத் திரும்பினார். தன்னை அழைத்துக் கொண்டு வந்தவரை ஒருமுறை நோக்கிவிட்டு, மாராரை மட்டும் விழுந்து கிடக்கும் கல்தூண் பக்கமாக அழைத்துச் சென்றார். பிறகு மெதுவாகப் பேசினார்: "இங்கு ஏராளமான சிக்கல்கள் இருப்பதுபோல் தெரிகிறதே?"

"அப்படியா சொல்கிறீர்கள்?" மாரார் கேட்டார்.

"இங்குள்ள தேவிக்குக் காவல் நிற்கும் மோகினியின் கால் சிலம்பு (தண்டை) காணாமல் போய்விட்டது என்றும், அதைப் பற்றிய விவரத்தை அறிந்து வருவதற்காக தானவேதன் போயிருக்கிறார் என்றும் கேள்விப்பட்டேன்."

"அதெல்லாம் உண்மைதான்!" - மாரார் கூறினார்.



"அவர் எங்கே போயிருக்கிறார் என்று தெரியுமா?"

"தெரியவில்லை! வடபகுதிக்குப் போயிருப்பதாகத் தான் தகவல். உங்களுக்குத் தெரியாத இடமா என்ன?"

"ஒன்று, அவர் சூரியமனைக்கு வந்திருக்க வேண்டும். வரவில்லை. அப்படியானால் விஸ்வமங்கலம் மனைக்குச் சென்றிருக்க வேண்டும்."

"அந்த மனை எங்குள்ளது?"

"அதுவும் வடக்குப் பகுதிதான்..."

"நீங்கள் இப்பொழுது என்னவோ சொல்ல முயன்றீர்கள் போலிருந்ததே" - மாரார் கேட்டார்.

"கருவறையைத் திறக்கச் சென்றபோது என்னுடைய காதில் யாரோ மந்திரிப்பது போல் தோன்றியது. சொன்னது யாரென்று முதலில் தெரியவில்லை. இப்பொழுது புரிந்துவிட்டது. என்னுடைய பரதேவதைதான்."

30233
466159

"என்ன சொன்னார்கள் திருமேனி?"

"கதவைத் திறந்து பிரயோஜனமில்லையென்று!"

"ஐயோ.... என்ன இப்படிச் சொல்லியிருக்கிறார்?"

"ஒன்றுமில்லாமல் இப்படிச் சொல்ல மாட்டார்களே?"

"அதன் அர்த்தம் என்னவென்று உங்களுக்குப் புரிந்ததா?"

"அதிலென்ன சந்தேகம்?"

"எனக்கு ஒன்றும் புரியவில்லையே..."

"கருவறைக்குள் தேவி இல்லையென்பதுதான்!"

"திருமேனி, நீங்கள் என்ன சொல்கிறீர்கள் உக்கிரமான மூர்த்தியல்லவா இங்கு இருப்பது? இன்றுவரை இந்தக் கோயிலின் மேற்பகுதியில் பறவைகள் கூடப் பறப்பது கிடையாதே..."

சூரியமித்ரன் நம்பூதிரிப்பாடு ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்தார். பிறகு கருவறையை ஒரு தடவை சுற்றி வந்தார். மீண்டும் கருவறை வாயிலருகே நின்று தியானித்தார். மனக்கண்ணைத் திறந்து கோயிலுக்குள் பார்த்தார். பீடம் சூனியமாக இருந்தது. வாசலின் இருபுறமும் பார்த்தார். துவாரபாலிகையர் இருவர் இரண்டு புறமும் இருந்தனர். வலது புறமிருந்த மோகினியின் வலது காலில்

தண்டையைக் காணவில்லை. தண்டையைக் கழற்றிய அடையாளம் பளிச்சென்று தெரிந்தது!

சூரியமித்ரன் வெகுநேரம் அந்தச் சிலையையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார். சட்டென்று அவரது கண்களில் ஒரு வலி தோன்றியது. பார்வையிலிருந்து பின் வாங்கச் செய்யும் வேதனை அது.

ஓமல்லூர் கோயிலில் நடந்த விஷயங்களை அன்று மாலையிலேயே விஷ்ணுதேவன் அறிந்தான். செய்தியைத் தெரிவித்தவர் அவனது காரியஸ்தர் ராமன் நாயர்தான். கேள்விப்பட்டவுடன் விஷ்ணுதேவன் ஒரு கணம் நடுங்கினான்.

சூரியன் அஸ்தமனமானான். பகல் நேரம் குறைவாக இருந்த மாதமானதால் சட்டென்று இருள் கவிந்தது.

"அங்கு என்னதான் நடந்தது? கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்கள்." - விஷ்ணுதேவன் கேட்டான்.

ஒன்றுவிடாமல் நடந்ததை நடந்தபடி ராமன் நாயர் அப்படியே அவனிடம் ஒப்பித்தார். தேவப்ரியாவும் இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள். மாலை நேரமாகி விட்டதால் அவள் தன்னுடைய மோகினி உருவத்தை அடைந்து விட்டிருந்தாள்.

"இன்னும் விளக்கேற்றவில்லையா தேவப்ரியா?" - சரஸ்வதி அந்தர்ஜனம் உள்ளிருந்தபடியே கேட்டார்.

அம்மாவின் குரலைக் கேட்டு விஷ்ணுதேவன் திரும்பியபோது தேவப்ரியா வாசற்படியருகே நின்றிருப்பதைக் கவனித்தான்.

"அம்மா சொன்னது கேட்டதா தேவப்ரியா?" - விஷ்ணுதேவன் கேட்டான்.

"கேட்டேன்..." என்றபடி அவள் ராமன் நாயரைப் பார்த்தாள். அதன் பொருள் என்னவென்று விஷ்ணுதேவனுக்குப் புரியவில்லை.

"காரியஸ்தர் இன்று அவரது வீட்டிற்குப் போகப் போவதில்லையா?" - அவள் கேட்டாள்.

இதைக் கேட்ட ராமன்நாயர் ஒரு வினாடி தேவப்ரியாவைப் பார்த்தார். "என்னம்மா அப்படிச் சொல்கிறாய்?"

"இதையெல்லாம் உங்களுக்கு நான் சொல்லித்தர வேண்டுமா என்ன? நீங்களெல்லாம் பழைய காலத்து மனிதர்கள். விளக்கு வைத்த



பிறகு, இங்கிருந்து வெளியேறுவது நல்லதல்ல என்பது உங்களுக்குத் தெரியாதா?" - சொல்லியபடியே தேவப்ரியா வீட்டிற்குள் சென்றாள்.

"தம்புரானே, தம்புராட்டி மிகவும் கெட்டிக்காரர். உங்களது தாயாரை விட புத்திக் கூர்மை உள்ளவர். நான்தான் தவறு செய்தவன். நான் வெளியேறுவதற்காகவே அவர் விளக்கு ஏற்றாமல் காத்திருந்தார். இனிமேலாவது ஐஸ்வர்யம் வெளியேறாமல் இருக்கட்டுமே என்பதுதான் அவரது ஆசை. இதோ நான் புறப்படுகிறேன்."

ராமன் நாயர் வெளிவாசலைக் கடந்த பிறகு தேவப்ரியா கையில் விளக்குடன் வெளியே வந்தாள். துளசி மாடத்தில் விளக்கேற்றி மூன்று தடவை வலம் வந்தாள். அந்த நேரம் சரஸ்வதி அந்தர்ஜனம் வாசற்படியருகிலேயே நின்றிருந்தார்.

தேவப்ரியா விளக்கேற்றி, திரும்ப வந்து வெளித்திண்ணையில் உட்காருவது வரை சரஸ்வதி அந்தர்ஜனம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். அதன்பிறகுதான் அவர் வீட்டிற்குள் சென்றார்.

"நான் சொன்னது ஒருவேளை காரியஸ்தருக்கு மனவருத்தத்தை ஏற்படுத்தியிருக்குமோ, என்னவோ" - அவள் விஷ்ணுதேவனிடம் கேட்டாள்.

"அப்படியெல்லாமில்லை. இந்த ஐஸ்வர்யத்திற்கெல்லாம் காரணம் நீதான் என்பது அவருக்கும் தெரியும்."

"அதெப்படி அவருக்குத் தெரியும்?"

"பயப்படாதே. நீ இந்த வீட்டிற்கு வந்த பிறகுதான் இந்தச் செல்வம் அத்தனையும் வந்து சேர்ந்தது என்று அவர் நினைக்கிறார். சில பெண்கள் காலெடுத்து வைத்த வேளை நல்லதென்று சொல்வதில்லையா? அதுதான் அவரது நம்பிக்கைக்குக் காரணம்."

"அவ்வளவுதானா,அப்படியானால் பரவாயில்லை!"

அதே சமயம் சரஸ்வதி அந்தர்ஜனம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தார். அதாவது தேவப்ரியா துளசி மாடத்தில் விளக்கேற்றியபோது, தான் பார்த்த அற்புதக் காட்சியை நினைத்து!

## 16

'தான் பார்த்தது உண்மைதானா? அல்லது வெறும் மனப் பிரமையா?' சரஸ்வதி யோசித்தார். அது உண்மையாக இருப்பதற்கு வழியில்லை என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டார். இருந்தாலும் அந்தக் காட்சியை அவரால் மறக்க முடியவில்லை!

தேவப்ரியா விளக்குடன் துளசி மாடத்தை நெருங்கி விளக்கை வைத்தபிறகு மூன்று முறை வலம் வந்தாள். ஆனால், தேவப்ரியா விளக்கைக் கடக்கும்போது ஒவ்வொரு முறையும் ஒளி அவள் உடலை ஊடுருவித் தெரிந்தது. ஒரு தடவை, இரண்டு தடவையல்ல மூன்று முறையும் தெரிந்தது! விளக்கைச் சுற்றி வரும்போது அவள் உடல் விளக்கை மறைக்க வேண்டுமே. ஆனால், மறைக்கவில்லை. இப்படி நடப்பதற்கு எந்த விதமான காரணமும் இல்லை. ஒரு மனித உடம்பைக் கடந்து வர தீபவெளிச்சத்திற்கு வல்லமை கிடையாது.

"என்னம்மா, ஏதோ தீவிர யோசனையில் இருக்கிறாற்போல் தெரிகிறதே?" தேவப்ரியா, அவளுக்கு முன்பாக வந்து நின்று கேட்டாள். தேவப்ரியா அவரை அம்மா என்றுதான் அழைப்பது வழக்கம். உறவு முறைப்படி அப்படி அழைக்கக் கூடாதுதான். என்னவோ அப்படி ஒரு பழக்கத்தை அவள் வந்ததிலிருந்தே கைக்கொண்டு விட்டாள்.

"ஒன்றுமில்லை. சும்மா உட்கார்ந்திருந்து எதையெல்லாமோ யோசித்துக் கொண்டிருந்தேன்" - சரஸ்வதி அந்தர்ஜனம் கூறினார்.

"நீங்கள் இவ்வளவு தீவிரமாக யோசிக்கும் அளவிற்கு அப்படி என்னதான் நடந்திருக்கிறது? இந்த வீட்டில் இப்பொழுது என்ன குறை?"

"அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது மனதுக்கு எவ்வளவு நிம்மதியாக இருக்கிறது தெரியுமா?"- சட்டென்று அவர் பேச்சை மாற்றினார்.

நிலவிளக்கின் முன்புறம் சப்பணமிட்டு உட்கார்ந்த தேவப்ரியா,



தேவி ஸ்தோத்திரத்தை உச்சரிக்கத் தொடங்கினாள்.

தேவப்ரியா உச்சரித்த ஸ்தோத்திரத்தின் மனம் மயக்கும் ஸ்வரலயம், அந்த வீட்டின் மரச்சுவர்களில் மோதி எதிரொலித்தது. அங்கு வந்ததிலிருந்து இப்பொழுதுதான் முதன்முறையாக அவள் ஸ்தோத்திரம் சொன்னாள். அவளது வேகத்தையும் தங்கு தடையற்ற உச்சரிப்பையும் கண்டு சரஸ்வதி அந்தர்ஜனமும், விஷ்ணுதேவனும் மலைத்துப் போனார்கள்!

குறிப்பாகச் சொல்லப்போனால் தேவப்ரியாவின் இந்த மந்திர உச்சரிப்பு சரஸ்வதி அந்தர்ஜனத்தைத்தான் அதிகம் வியப்பிற்குள்ளாக்கியது. காரணம், புள்ளி தவறாத அட்சர சுத்தமான, தெளிவான உச்சரிப்பு. சாதாரணமாக இதெல்லாம் ஒரு பெண்ணுக்கு முடியக் கூடியதல்ல. நல்ல மொழிப்பயிற்சியும், புலமையும் உள்ளவர்களால் மட்டும்தான் முடியும்.

தன்னுடைய மருமகள் அசாதாரணமான சக்திகள் நிறைந்த ஒரு பெண் என்பது உறுதியாகத் தெரிந்தது. அத்துடன் சற்று முன்பு, தான் கண்ட காட்சியும் சேர்ந்து அவரை வியப்பின் உச்சிக்கே செலுத்தியது. அவர் வெளியே வந்தார். தேவப்ரியா அப்பொழுதும் ஸ்தோத்திரம் சொல்லிக் கொண்டிருந்தாள். எந்த விதமான தடுமாற்றமும் இல்லாமல் அவளது கண்டத்திலிருந்து வார்த்தைகள் இனிமையாகப் பிரவகித்துக் கொண்டிருந்தன. அவர் அதைக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அன்று பௌர்ணமி நாள். பூரண சந்திரன் பஞ்சலோகத்தால் செய்த ஒரு பெரிய தட்டுபோல் ஆகாயத்தில் கிழக்குத் திசையில் உயர்ந்து வந்தான்.

மகரந்தத்தூளை வாரி இறைத்தது போல் பாலொளி மலை முகடுகளிலும், புல் பரப்புகளிலும், மரங்களின் மேற்பகுதிகளிலும் பரவியிருந்தது. தேவப்ரியா நிலவையே பார்த்துக்கொண்டிருந்தாள். வெளிமுற்றத்தில் நிலவொளி குளுமையாகப் படர்ந்திருந்தது. துளசிச் செடியின் நிழல் தரையில் படம் வரைந்து கொண்டிருந்தது. குளிர்ந்த காற்று அந்தப் படத்திற்கு உயிரூட்டிக் கொண்டிருந்தது.

சரஸ்வதி அந்தர்ஜனத்தின் கண்ணிமைகளில் கனம் தோன்றியது. இப்பொழுது பழையது போல் அல்ல; இடைவிடாத வேலை. அதே போல் நல்ல சாப்பாடு. முன்பெல்லாம் பசி, உறக்கத்தைக் கொன்று விடுவது வழக்கம்.

"உனக்கு உறக்கம் வரவில்லையா, தேவப்ரியா?"

"இந்த நிலாவைப் பார்க்கும்போது எனக்கு உறக்கம் வரவில்லை!" - தேவப்ரியா பதிலளித்தாள்.

"சரி, நான் போய் படுத்துக் கொள்கிறேன்" என்றபடி எழுந்து நடந்தார் சரஸ்வதி அந்தர்ஜனம்.

தேவப்ரியா அங்கேயே உட்கார்ந்திருந்தாள். சற்று நேரத்திற்குப் பிறகு விஷ்ணுதேவன் அங்கு வந்தான்.

"என்ன அப்படியே உட்கார்ந்திருக்கிறாய்?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை..."

"அதெல்லாமில்லை. என்னவோ இருக்கிறது. மறைக்காமல் சொல்!"

"சொல்கிறேன். இதோ, இன்னும் ஒரு பௌர்ணமி..."

அந்த வார்த்தையைக் கேட்டதும் விஷ்ணு மெல்லியதாக ஒரு முறை நடுங்கினான். "ஆமாம் இது இரண்டாவது பௌர்ணமி!" அவன் முணுமுணுத்தான்.

"எவ்வளவு விரைவில் நாள்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. நான் நேற்றுதான் வந்ததுபோல் உள்ளது இல்லையா?" அவள் கேட்டாள்.

"உண்மைதான் உன்னுடைய அழகிற்கு எந்தவிதமான குறைவும் ஏற்படவில்லை. என் மனம் என்ன சொல்கிறது தெரியுமா? நீ நாளுக்கு நாள் மேலும் மேலும் அழகியாகிக் கொண்டே இருக்கிறாயாம்!"

அவள், விஷ்ணு தேவனின் மடியில் தலை வைத்துப்படுத்தாள். அப்பொழுது அவளது முகத்தில் நிலவொளி தன் கதிர்களால் வருடியது. நீண்டு சுருண்ட கடலலை போன்ற தலைமுடி திண்ணையில் பரவிக் கிடந்தது. அவளுடைய முகத்தின் ஒருபுறம் தெளிந்தும் மறுபுறம் நிழல் படிந்தும் கிட ந்தது. ஒரு தேவதையின் சிலை விழுந்து கிடப்பது போல் அவள் கிடந்தாள்.



"இன்னும் பத்து பௌர்ணமிகள்தான் இருக்கிறது. இல்லையா?" - அவள் கேட்டாள்.

"ஆமாம்."

"அப்படியானால் இன்னும் பத்தே மாதங்கள்."

"உண்மைதான். இது என்ன திடீரென்று...?"

"ஒன்றுமில்லை. சட்டென்று ஞாபகம் வந்தது..."

அவளுடைய மார்பிலிருந்த உத்தரீயத் துணி விலகிக் கிடந்தது. காமனது வில்லிலிருந்து புறப்பட்டு வந்த மலரம்புகள் அவளது மார்பகங்களில் மோதி விஷ்ணு தேவனின் இதயத்தில் ஆழ்ந்து இறங்கின.

அவளில் அக்கினி எரிந்து கொண்டிருந்தது. எந்த ஓர் ஆடவனின் ரத்தத் தமனிகளின் ஊடாகவும் பாய்ந்து செல்லக்கூடிய அக்கினி நதியாக இருந்தது அது.

"அம்மாவிற்கு ஏதோ சந்தேகம் ஏற்பட்டிருப்பது போல் தோன்றுகிறது" - அவள் கூறினாள்.

"ஏன், திடுமென்று உனக்கு அப்படித் தோன்றுகிறது?"

"என்னவோ தெரியவில்லை. அம்மாவின் கண்களில் சந்தேகத்தின் நிழல் தட்டுப்படுகிறது!"

"அதெல்லாம் இருக்காது. உனக்கு அப்படித் தோன்றியிருக்கலாம்."

"இல்லை... என்னுடைய சந்தேகங்கள் வீணானவதே இல்லை!"

"ஆனால், எனக்கு அப்படித் தெரியவில்லை. அம்மாவிற்குச் சந்தேகம் ஏற்பட்டிருந்தால் என்னிடம் அதைப் பற்றிப் பேசியிருப்பார்."

"இல்லை. ஒரு போதும் உங்களிடம் இதைப் பற்றி அம்மா பேசமாட்டார். நீங்கள் பயந்து விடுவீர்கள் என்று அவர் நினைக்கலாம்!"

"போகட்டும். உனக்கு அப்படியொரு சந்தேகம் தோன்றினால் அம்மா அதை அறிந்து கொள்ளும்படி நீ நடந்து கொண்டிருக்கக் கூடாது. எந்த ஒரு தாயும் சட்டென்று ஒப்புக்கொள்ளக் கூடிய விஷயமல்லவே இது. ஒரு மோகினி தன் மகனுடைய மனைவியாக

இருப்பதை எந்தத் தாய்தான் சகித்துக் கொள்வாள்?"

"ஒரு மோகினியைப் பற்றிய ஒவ்வொருவரின் கருத்தும் ஒவ்வொரு விதமாக இருக்கும். மோகினி எந்த ஆடவனையாவது அழைத்துச் சென்றால், அவளுடைய காம தாகத்தைத் தீர்த்துக்கொண்ட பிறகு அவனது நகங்களையும், தலைமுடியையும் மட்டும் பனைமரத்திற்குக் கீழே போட்டு விடுமென்றும், வயதான மாட்டு வண்டிக்காரனிடம்கூடச் சுண்ணாம்பு கேட்டு, அவன் சுண்ணாம்பு தரும் விரலைப் பிடித்து பாலை மரத்திற்குக் (கப்பல் அலரி) கொண்டு போய் விடும் என்றும் தவறாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்!"

"அப்படியானால், அந்தக் கதையெல்லாம் உண்மை இல்லையென்று சொல்கிறாயா?"

"உண்மையல்ல என்பது மட்டுமல்ல, முழுக்க முழுக்கத் தவறான கருத்துக்கள். மோகினியும், கந்தர்வர்களும் தேவஅம்சம் உள்ளவர்கள். அவர்கள் ஒரு போதும் லட்சணங்கள் பொருந்திய தேவகணத்தில் பிறந்த ஆண்களையல்லாமல் வேறு யாரையும் திருமணம் புரிய மாட்டார்கள். தேவ கணத்தில் பிறக்காத எந்த ஆடவனுடனும் அவர்கள் தங்களது படுக்கையைப் பகிர்ந்து கொள்ள மாட்டார்கள். அதுதான் உண்மை!"

இதுவரை கேள்விப்படாத விஷயங்களாக இருந்தன தேவப்ரியா சொன்னவை. விஷ்ணு அதுவரை மோகினிகளைப் பற்றி நினைத்திருந்த எண்ணமே வேறு வகையானது உண்மையிலேயே, மனதிற்குள் அவன் தேவப்ரியாவை நினைத்து நினைத்து பயந்து கொண்டிருந்தான். இவ்வளவு தூரம் நடந்த பிறகு, எது வந்தாலும் வரட்டும் என்று ஒரு தீர்மானம் தோன்றியதாலேயே, அவன் அவளுடன் வாழ்ந்து வந்தான்.

மோகினிகளையும், கந்தர்வப் பெண்களையும் ஒரு மனிதன் மணந்து கொள்வதும், அவர்களுடன் உடலுறவு கொள்வதும் அபூர்வமான விஷயம். கோடியில் ஒருவருக்கு மட்டுமே முடிகிற காரியம். அதுவும் நட்சத்திரப் பொருத்தம் உட்பட எல்லா வகையான பொருத்தமும் இணைந்து வந்தால் மட்டுமே சாத்தியம்.

"நீ சொல்வது உண்மையானால் நம்முடைய உறவு



எப்படிப்பட்டது?" விஷ்ணு சந்தேகத்துடன் கேட்டான்.

"என்னுடைய பிறவியில் எனக்கு ஏற்ற ஆடவர் நீங்கள் மட்டும்தான். இப்படிப்பட்ட ஒரு கந்தர்வன் கூட இன்னும் பிறக்கவில்லை!"

நிலவு உயர்ந்து கொண்டிருந்தது. தேவப்ரியாவின் முகத்தில் படிந்திருந்த நிலவொளி கீழ்ப்புறமாக மெதுவாக இறங்கிக் கொண்டிருந்தது. தூரத்தில் எங்கோ ஒரு ஜாமக் கோழி கூவியது. குளிர்காற்று வீசியது. துளசிச் செடியின் தளிர் இலைகளுக்கு ஊடாக நுழைந்து வரும் காற்று அவளது உடலைத் தழுவியபோது உடம்பின் ஒவ்வொரு அணுவும் உயிர்த்தெழுந்தது.

"இன்று சர்வ ஜீவராசிகளின் உயிர்ச் சக்தியும் மலர்ந்து விரியும் நாள். பௌர்ணமி என்பது எல்லா மனிதர்களின் மீதும் ஒளியை வாரி இறைக்கும் நாள்" - சொல்லியபடியே தேவப்ரியா எழுந்தாள். விஷ்ணுதேவனும் அவளும் படுக்கையறைக்குச் சென்றார்கள். தேவப்ரியா ஓர் ஆகாய கங்கையாக மாறினாள். அவள் ஒரு நதியாகி அவனுள் பாய்ந்தாள்.

அவளுடைய பெருமூச்சுகள், வெப்பமான ஊது காற்றாக விஷ்ணுவின் கழுத்திலும், உடலிலும் சுகந்தத்தைப் பரப்பியது. சௌகந்திகப் பூக்கள் மலர்ந்து நிற்கும் தெய்வீகத் தடாகத்தில் மூழ்கியெழுந்த தேவப்ரியாவின் உடலில் தேவலோகப் பூக்களின் மணம் கமழ்ந்தது.

மாதவன் குட்டி மேனோனின் மாளிகையில் அவருடைய நண்பர்களின் ஆலோசனைப்படி, சூரியமித்ரன் நம்பூதிரிப்பாடின் உதவியுடன் ஓமல்லூர்க் கோயிலில் தேவப்பிரஸ்னம் நடத்துவது என்று தீர்மானித்தனர்.

அவர் உறுதியாகவே கூறினார்: "தேவி கருவறைக்குள் இல்லவே இல்லை!" - இந்த வார்த்தையைக் கேட்ட ஒவ்வொருவரும் வியப்படைந்தனர். அவர்கள் பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொண்டதை ஊரே அறிந்தது. இப்படியாகச் செய்தி பரவியதால், கேள்விப்பட்டவர்கள் அனைவரும் கோயிலுக்கு வந்து சேர்ந்தனர்.

ஆனால், சென்னாங்கேரி மனையைச் சேர்ந்த அந்தர்ஜனம்

மட்டும் அதை நம்பவே இல்லை. வழக்கமாக நடைபெறும் விடியற்கால நிர்மால்ய பூஜையின்போது தேவியைத் தொழுது வணங்க வருகிற அவருக்கு அந்தக் கருவறை வாசலில் தினமும் ஒரு செண்பகப் பூ கிடைப்பது வழக்கம். அது வழக்கம்போல் அப்பொழுதும் கிடைத்துக் கொண்டிருந்தது. எனவே, அவர் மட்டும் கோயிலில் தேவி இருப்பதாகவே நினைத்தார். தேவி வேறு எங்குமே செல்லவில்லை. அவரிடம் இந்தச் செய்தியைச் சொன்னவர்களிடமெல்லாம் அவர் அதை உறுதியுடன் மறுக்கவும் செய்தார்.

"தேவி எங்கும் செல்லவில்லை. இங்கேயேதான் இருக்கிறார். எனக்கு அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. நான் தொழுவதற்குச் செல்லும் போதெல்லாம் தேவி கோயிலில் இருக்கிறார்!"

சாவித்ரி அந்தர்ஜனம் கூறியது மிகவும் சரிதான். அவர் வணங்கச் செல்லும்போது கருவறை திறந்திருக்கும். அதற்குள் தேவியின் வடிவமும் இருக்கும். அவர் அதை அனுதினமும் பார்த்துக் கொண்டுதான் வருகிறார்.

சூரியமித்ரன் நம்பூதிரிப்பாடு தேவப் பிரஸ்னத்திற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து, ஜோதிடரையும் வரவழைத்தார். ஓமல்லூர்க் கோயிலின் தென்மேற்கு மூலையில் வளர்ந்து பிரமாண்டமாக நிழல் பரப்பி நிற்கும் வில்வ மரத்தடியில் எல்லாமே தயாராக இருந்தன.

முதல் மந்திரம் சொல்லி, விநாயகப் பெருமானை மனதில் நினைத்து பிரஸ்னத்தைத் தொடங்கினர். துவங்கியபோதே ஏதோ ஒரு தடை இருப்பதை நம்பூதிரி உணர்ந்தார். ஆனால், பிரஸ்னத்தில் எதுவுமே தெளிவாகத் தெரியவில்லை. உடனிருந்த ஜோதிடர் நாராயண கணகன் சாமானியமானவரல்ல. அவர் ஒரு தேர்ந்த மந்திரவாதியும் கூட. எப்படிப்பட்ட தேவதைகளையும் வரவழைத்து, மன்னிப்புக் கேட்கச் செய்துவிடுவார். கள்ளியங்காட்டு நீலிக்குச் சமமான மற்றொரு மோகினியை வெகு சுலபமாகப் பிடித்து ஆணி அடித்து நிறுத்தியவர் என்ற பெருமையும் அவருக்கு உண்டு.



"என்ன நாராயணன், நிலைமை மிகவும் மோசமாக உள்ளது போல் தோன்றுகிறதே" - நம்பூதிரி மெதுவாக அவருக்கு மட்டுமே கேட்கும்படி பேசினார்.

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது." - நாராயணனும் அதை ஒப்புக்கொண்டார்.

"அப்படியானால் விஷயம் கடுமையானதுதான், இல்லையா?" - சூரியமித்ரன் நம்பூதிரியின் குரல் இன்னும் தாழ்ந்தது.

அதே சமயம் கோயிலுக்குப் பின்புறமிருந்த ஆலமரத்தின் மிகப் பெரிய கிளையொன்று, பெருத்த ஓசையுடன் முறிந்து நிலத்தில் விழுந்தது.



## 17

ஆலமரத்தின் பெருங்கிளையொன்று உடைந்து விழுந்ததை ஓர் அபசகுனமாகவே சூரியமித்ரன் நம்பூதிரிப்பாடு நினைத்தார். ஆனால், இது ஏன் நிகழ்ந்தது, எப்படி நிகழ்ந்தது என்பதற்கான காரணத்தை எவ்வளவு முயன்றும் அவரால் கண்டுபிடிக்கவே முடியவில்லை!

"என்ன ஆசானே, மறுபடியும் ஒரு தடவை பார்த்து விடலாமா?" -சூரியமித்ரன், பிரஸ்னக்காரரான நாராயண கணகனிடம் கூறினார்.

அவர் மீண்டும் சோழிகளைப் பரப்பினார்.

கூட்டினார், குறைத்தார், வகுத்தார், எப்படியெல்லாமோ கணித்தார். ஆனால், அப்போதும் இறுதியில் கிடைத்த விடை சூனியம்தான்.

நாராயணனும் மனதால் மிகவும் தளர்ந்து போயிருந்தார். வாழ்க்கையில் முதன் முறையாக அவருக்கு இப்படியொரு தோல்வி ஏற்பட்டிருக்கிறது. எத்தனையோ தலைமுறைகளாக அந்தக் குடும்பத்திற்குத் தொடர்ந்து கிடைத்துவந்த அனுக்கிரகம்

இப்பொழுது கைவிட்டுப் போய்விட்டதா? இன்றுவரை ராசிப் பலகையில் அவர் தோல்வி அடைந்ததே இல்லை.

"தம்புரானே, இது மொத்தமும் ஒரே குழப்பமாகத் தெரிகிறதே" -அவர் ரகசியமாக சூரியமித்ரனின் காதில் கிசுகிசுத்தார்.

"உண்மைதான். எங்கோ தவறு நேர்ந்திருக்கிறது. இதெல்லாம் தேவியின் திருவிளையாடலாகத்தான் இருக்க வேண்டும்" என்றார் நம்பூதிரி.

"என்னுடைய சந்தேகம் என்னவென்றால், தேவி இந்த இடத்திலேயே இருக்கிறார் என்பதுதான்."

"ஆனால், கருவறையில் அவரைக் காணவில்லையே?"

"கருவறையில் அவர் இருப்பதற்கு எந்தவிதமான சாத்தியமும் இல்லை. காரணம், மத்தியப் பகுதி சூனியமாக உள்ளது."

"ஒருவேளை இடம் மாறியிருப்பாரோ?"

"அவர் வேறு எங்கே மாறமுடியும்? எதற்கும் நீங்கள் ஒரு தடவை முயன்று பாருங்களேன்."

நாராயண கணகன் மறுபடியும் சோழிகளைப் பரப்பினார். அவரது முகத்தில் பலவிதமான உணர்வுகள் வெளிப்பட்டன. இறுதியில் அவர் கூறினார் - "தேவி இங்குதான் உள்ளார்."

நம்பூதிரிக்குச் சலிப்பு தோன்றியது. "இன்று இதெல்லாம் போதும். மிச்சத்தைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று தற்காலிகமாக அந்தச் சூழ்நிலைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தார்.

அன்று இரவு மாதவன் குட்டி மேனோனின் மாளிகையில் அவர் நம்பூதிரியிடம் கேட்டார் "கோயில் விஷயங்கள் எதுவரை தெரிந்திருக்கிறது?"

"எதையும் உறுதியாகச் சொல்ல முடியாத நிலை. குழப்பங்களுக்குக் குறைவில்லை. தேவி கோயிலில் இருக்கிறாரா என்றால், இருக்கிறார். ஆனால், பிரஸ்னத்தில் பார்த்தால், அந்த இடத்தில் அவர் இல்லை."

"இது விசித்தரமான ஒரு விஷயமாயிற்றே?"

"ஆமாம். எதற்கும் நாளைக்கும் ஒரு முறை பார்த்து விடலாம். எனக்கொரு சிறிய சந்தேகம் உள்ளது. ஆனால், நான் இப்பொழுது



அதைப் பற்றிப் பேச முடியாது!"

அதன் பிறகு மூன்று நாள்கள் கடந்து போனாலும் தேவியின் நிலையைப் பற்றி யாருக்கும் எதுவும் தெரியவில்லை. எப்படி இருந்தாலும் இதன் முடிவைத் தெரிந்து கொள்ளாமல் விடுவதில்லையென்று நம்பூதிரி தீர்மானித்தார்.

குருகேஷத்ரமனை நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்து வருவதைக் கண்டதால், அதுவரை விலகியிருந்த அவர்களது உறவினர்கள் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி வரத் தொடங்கினர்.

அன்று, விஷ்ணுதேவனின் அம்மா சரஸ்வதி அந்தர்ஜனத்தின் பிறந்தநாள். விடியற்காலையிலிருந்தே பிறந்தநாள் விருந்திற்கான ஏற்பாடுகள் தொடங்கி விட்டன. காரியஸ்தர் ராமன் நாயரின் மனைவி பாறுக் குட்டியம்மா துணைக்கென்று மேலும் இரண்டு பெண்களை அழைத்து வந்திருந்தாள். அந்தக் குடும்பம் பழைய காலத்தில் எப்படிப் பிறந்தநாளைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடியதோ, அதைப் போலவே இன்றும் கொண்டாட ஏற்பாடானது.

மதிய வேளையில் இந்துவும், அவளது அம்மாவும் வந்தார்கள். இந்து எத்தனையோ காலங்களுக்குப் பிறகு இப்பொழுதுதான் மறுபடியும் வருகிறாள். இந்துவின் அம்மாவோ, அவளது திருமணத்திற்கு பிறகு வருவது இது இரண்டாவது முறை. காரணம், அவளது திருமணம் நடைபெற்றபோதே இந்த மனை சீரழியத் தொடங்கியிருந்தது.

விஷ்ணுதேவனுடைய அம்மா சரஸ்வது அந்தர்ஜனத்தின் அண்ணிதான் பவானிக்குட்டி அந்தர்ஜனம். இந்துவிற்கோ, தான் படித்தவள் என்கிற கர்வம். பவானிக்குட்டி, கணவனை விட பணத்திலும், உறவு ஜனங்களிலும் சற்று மேம்பட்ட வலுவுள்ளவள்.

ஆனால், இப்பொழுதைய நிலையில் அவர்களைவிட குருகேஷத்ரமனை எவ்வளவோ மாறி உயர்ந்துவிட்டிருக்கிறது. அது மட்டுமா? விஷ்ணுதேவன் அந்த ஊரிலேயே ஓர் இளவரசனைப் போல் மதிக்கப்பட்டான்.

ஏதோ ஊர்பேர் தெரியாத ஒரு பெண்ணை அழைத்து வந்து விஷ்ணுதேவன் குடும்பம் நடத்துகிறான் என்று யாராரோ சொல்லி

பவானிக்குட்டி கேள்விப்பட்டிருந்தாள். அந்தப் பெண் அந்த வீட்டிற்குள் காலடி வைத்த பிறகுதான் அந்தக் குடும்பமே இப்படித் தழைக்கத் தொடங்கியது என்பதையும் அவள் அறிந்திருந்தாள். இந்த இரண்டாவது விஷயத்தை அவள் அவ்வளவாகப் பொருட் படுத்தவில்லை.

காரணம் என்னவென்றால், இப்படிப்பட்ட நம்பூதிரி வீடுகளில் அவ்வப்போதைய வசதி, சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி வேலைக் காரிகளை வைத்துக் கொள்வது வழக்கம். அந்தக் குடும்பத்திலுள்ள ஆண்கள் அப்படிப்பட்ட பெண்களுடன் சில நேரம் பொழுது போக்குவதும் உண்டு. இதெல்லாம் சகஜமான விஷயங்கள். இதை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. பவானிக்குட்டிக்கும் இதெல்லாம் நன்றாகத் தெரியும். அது மட்டுமல்ல, விஷ்ணுதேவன் இன்று வரை யாருக்கும் புடவைக் கொடை கொடுத்ததாக (திருமணத்தை புடவைக் கொடை என்பது கேரள வழக்கம்) தெரியவில்லை. அப்படி ஏதாவது இருந்தால் சொந்த மாமிக்குக் கூடவா தெரியாமல் நடந்திருக்கும்?

அது எப்படி இருந்தாலும் இப்பொழுதைய சூழ்நிலையில் இந்துவை அந்தக் குடும்பத்தின் மருமகளாக அனுப்பி விட்டால் நல்லதென்று பவானிக்குட்டி தீர்மானித்தாள். இப்படியெல்லாம் மனதிற்குள் திட்டமிட்டபடிதான் மகளுடன் விஷ்ணுவின் வீட்டிற்கு வந்தாள். வந்த பிறகுதான் அன்று சரஸ்வதி அந்தர்ஜனத்தின் பிறந்தநாள் என்பது தெரிந்தது.

அண்ணியும், அவரது மகளும் வந்ததைக் கண்டவுடன் சரஸ்வதி அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். தேவப்ரியா மிகவும் சுறுசுறுப்பாக வேலையில் மூழ்கியிருந்தாள். அன்றைய சமையல் பொறுப்பை ஏற்று அவள்தான் எல்லோரையும் வேலை வாங்கிக் கொண்டிருந்தாள்.

சாம்பார், அவியல், கறி, காளன், பச்சடி, கிச்சடி (இதுவும் ஒருவகை கறிதான்) போன்றவை சமையலறையில் கமகமவென்று உருவாகிக் கொண்டிருந்தன. ஒவ்வொரு கறியின் பக்குவத்தையும், செய்முறைகளையும் தேவப்ரியா நிதானமாகச் சொல்லிக் கொடுத்து,



ருசி பார்த்து இறக்கிய பாங்கு, சமையலில் தேர்ந்த வயதான பெண்களையே பிரமிப்பில் ஆழ்த்தியது. இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட சிவன் கோயில் பூசாரிக்கும், கோயில் பண்டாரகரான பத்ரன் நம்பூதிரிப் பாடிற்கும் வியப்பான வியப்பு. இந்தச் சிறிய பெண் எப்படிச் சமையல் கலையில் இவ்வளவு தேர்ச்சி பெற்றிருக்கிறாள்?

அது மட்டுமின்றி பால்பாயசம், பிரதமன் (பருப்புப் பாயசம்) போன்றவற்றிற்கான கணக்குகளையும் துல்லியமாகச் சொல்லித் தந்தாள். "என்னய்யா இது, இந்தப் பெண் இப்படிப் பொரிந்து தள்ளுகிறதே" - என்பதைத் தாண்டிய திருமேனி வாய் பிளந்தபடி வேடிக்கை பார்த்து நின்றார்.

இவ்வளவு அரிசிக்கு இவ்வளவு பால், இவ்வளவு சர்க்கரை, இத்தனை ஏலக்காய், இவ்வளவு முந்திரிப்பருப்பு என்று பொன் எடைபோடுவது போல் கூறிக் கொண்டிருந்தாள்.

"புதியதாக யாரோ ஒரு பெண் இங்கு வேலைக்காரியாக வந்திருக்கிறாள் என்று கேள்விப்பட்டேன். யாரது?" - பவானிக்குட்டி அந்தர்ஜனம் தனது நாத்தனார் சரஸ்வதி அந்தர்ஜனத்திடம் கேட்டார்.

வேலைக்காரி என்ற வார்த்தையைக் கேட்டதும் சரஸ்வதி அந்தர் ஜனத்தின் முகம் கொஞ்சம் கோணியது. தேவப்ரியாவை இப்படிக் குறிப்பிட்டது அவருக்குப் பிடிக்கவில்லை. இருப்பினும் அத்தனைபேர் மத்தியில் எதுவும் பேச முடியாததால் அவர் மௌனமாக இருந்தார். பிறகு விருட்டென்று உரல்களைப் போட்டு வைத்திருந்த நெல்குத்தும் அறைக்குச் சென்றார்.

அங்கிருந்த பெண்கள் விருந்திற்காக வாழை இலைகளை நீர்விட்டுத் துடைத்துக் கொண்டிருந்தார்கள். வாசலையொட்டிப் போட்டிருந்த பந்தலில் உறவுக்காரர்களும், விருந்துக்கு வந்தவர்களுமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். பெரும்பாலும் எல்லோரும் பேசிக் கொண்டிருந்த ஒரே விஷயம் தேவப்ரியாதான். விஷ்ணுதேவன் அழைத்து வந்திருக்கிற ஊர்பேர் தெரியாத அந்தப் பெண்ணைப் பற்றித்தான் பலர் பலவிதமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"சும்மா சொல்லக்கூடாது. அந்தப் பெண் கால் பதித்த நேரம்

இந்த வீட்டிற்கு வந்தது யோகம்."

"எது எப்படி இருந்தாலும், அவள் கோயிலையும் தெய்வத்தையும் சிந்தாதவள்." - ஒரு பெண் கூறினாள்.

"என்ன லீலா, அப்படிச் சொல்கிறாய்?"

"அவள் இங்கு வந்து, விஷ்ணுவுடன் வசிக்கத் தொடங்கி மாதம் இரண்டாகிறது. இன்றுவரை அவள் கோயிலுக்குச் சென்று நான் பார்த்தது இல்லை. குறைந்தபட்சம் நிர்மால்ய பூஜைக்குக் கூட எட்டிப் பார்த்ததில்லை."

"பழகாத ஊர் என்பதால் அப்படி இருக்கலாம்."

"விஷ்ணுவின் அம்மாதான் கோயிலுக்கு வருகிறார்களே?"

"அப்படியானால் அந்தப் பெண் யாரென்று நீ சொல்கிறாய்?"

"நம்பூதிரி வீட்டைச் சேர்ந்தவளாக எனக்குத் தோன்றவில்லை!"

"பின், வேறு யார் என்று நினைக்கிறாய்?"

"கிறிஸ்தவப் பெண்ணாகவோ, முஸ்லிமாகவோ இருக்கலாம்!"

"அதைப்பற்றி நம்மில் யாருக்குமே உறுதியாகத் தெரியாதே!"

"எப்படி இருந்தாலும் ஒன்றை மட்டும் நான் உறுதியாகச் சொல்லுவேன். அந்த மாதிரி இருந்தால், சரஸ்வதிச் சித்தி அந்தப்பெண்ணை வீட்டிற்குள்ளேயே விட்டிருக்க மாட்டார்கள். அதனால் அவள் நம்பூதிரிப் பெண்தான். அது சந்தேகமில்லாத விஷயம். கருக்கலில் விளக்கு வைக்கும்போதும், ஸ்தோத்திரம் சொல்லும் போதும் நீங்கள் யாராவது கவனித்திருந்தால் அதைத் தெரிந்து கொண்டிருக்கலாம்" - அதுவரை மௌனமாக இருந்த ஒரு பெண் பேசினாள்.

அதற்குப் பிறகு யாரும் எதுவும் பேசவில்லை.

விருந்து தொடங்கியது. இலை போட்டுப் பரிமாறினார்கள். ஒவ்வொரு கறியாக இலையில் விழுவதற்கு முன்பே அதன் மணம் அங்கிருந்தவர்களின் மூக்கைத் துளைத்தது. ஒருவரை ஒருவர் வியப்புடன் பார்த்துக் கொண்டனர். சாப்பிடத் தொடங்கிய பிறகோ ருசி அவர்களை மயங்கச் செய்தது. ருசி என்கிற வார்த்தையின் உண்மையான அர்த்தம் இதுதான் என்றெல்லாம் சிலாகித்தார்கள்.

வயிறு நிறைந்து கொண்டிருந்ததை விருந்து சாப்பிட்டவர்கள்



பொருட்படுத்தவே இல்லை. ஒன்று மட்டும் உண்மை. எந்த விருந்திலும் யாரும் இந்த அளவு சாப்பிட்டதே இல்லை!

பால்பாயசம், பருப்பு, அரிசிப் பாயசங்களைப் பரிமாறியபோது வயதான பெரியவர்கள் கண்களை அகல விரித்தார்கள். தங்களுடைய வாழ்நாளில் இப்படி ஒரு பாயசத்தை ருசித்ததே இல்லை என்று அடித்துக் கூறினார்கள்.

விருந்து முடிந்து வெற்றிலை போடும் படலம் ஆரம்பமானபோது, சமையலை மேற்பார்வையிட்ட நபரைப் பார்த்துப் பாராட்ட வேண்டு மென்று, ஆண்கள் தங்கள் மனைவியரிடம் ரகசியமாகக் கூறினர்.

சரஸ்வதி அந்தர்ஜனத்திடம் கேட்ட போது, காரியஸ்தர் ராமன் நாயரின் மனைவி பாறுக்குட்டியம்மா கொண்டுவந்த இரண்டு பெண்கள்தான் சமையலை மேற்பார்வையிட்டுக் கவனித்தனர் என்றாள். அப்படியானால் அவர்களை நாங்கள் பார்க்க வேண்டுமே என்றனர் ஆண்கள்.

இறுதியில் அவர்களின் வற்புறுத்தலுக்கு இணங்கி, நடுத்தர வயதுள்ள இரண்டு பெண்களைப் பந்தலுக்கு வரவழைத்தனர். அவர்களை அங்கிருந்தவர்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

"விருந்து மிக அருமை!" - அவர்களைப் பார்த்தவுடன் பத்ரன் திருமேனி கூறினார்.

எல்லோரும் தங்களைப் புகழ்ந்ததைக் கேட்டு அவர்கள் ஒரு கணம் தடுமாறினார்கள். "இந்த பாராட்டெல்லாம் எங்களுக்கு உரியதல்ல. பக்குவம் சொன்னதும், வேண்டிய பொருள்களை எடுத்துத் தந்ததும் இந்த வீட்டுப் பெண்மணிதான்" என்றார்கள்.

வெளியே இப்படியெல்லாம் இருக்க, வீட்டிற்குள் இருந்த பவானிக்குட்டி அந்தர்ஜனம் தேவப்ரியாவைப் பார்க்கத் துடித்துக் கொண்டிருந்தாள். ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் சரஸ்வதி அந்தர்ஜனம் சாதுரியமாகத் தவிர்த்துக்கொண்டே இருந்தாள். சமையல்கட்டில் ஏராளமான பெண்கள் பெரியவர்களும், சிறியவர்களுமாக இருந்ததால் சட்டென்று அவளைக்கண்டு பிடிக்கவும் முடியவில்லை. கடைசியில் விசாரித்தே பார்த்து விடுவது

பிடிக்கவும் முடியவில்லை. கடைசியில் விசாரித்தே பார்த்து விடுவது என்கிற முடிவுடன் அவள் விரைந்தாள்.

ஒரு புறம் ஆண்கள் இருந்தனர். மறுபுறம் சில பெண்கள் உட்கார்ந்து சமையல் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தனர். அதையும் தாண்டி விருந்து நடைபெறும் கூடத்தை அடைந்தபோது விருந்திற்காக வேலை செய்த பெண்கள் எல்லோரையும் வரிசையாக உட்கார வைத்து ஒரு பெண் பரிமாறிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

அவளது முழங்காலைத் தாண்டித் தலைமுடி நீண்டிருந்தது. வாழைத்தண்டைக் கட்டி வைத்திருப்பது போல் அடர்த்தியாக, கருமையாகக் காட்சியளித்தது முடிக்கற்றை. அதைப் பார்த்த உடனேயே பவானிக்குட்டி தன்னையுமறியாமல் வாய்விட்டே கூறினார். "இவள் பெண்தானா, இல்லை, மோகினியா?"

இந்த வார்த்தையைக் கேட்டதாலோ என்னவோ, தேவப்ரியா சட்டென்று அவரை நோக்கித் தலையைத் திருப்பினாள்.



## 18

தேவப்ரியாவின் பார்வை பவானி அந்தர் ஜனத்தின் இதயத்தில் அம்புபோல் ஊடுருவிப் பாய்ந்தது. ஒரு கணம் அந்தர்ஜனத்தின் மனம் திடுக்கிட்டது. ஆனால், தனது கருத்தை யாரிடம் கூறுவது? மற்றொருவரிடம் அதை எப்படி உண்மையென்று நிரூபிப்பது? எனவே, சட்டென்று அவள் திரும்பிப் பார்த்தாள். அங்கே இந்து நின்றிருந்தாள். அவளும் தேவப்ரியாவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கல்லூரி மாணவியான இந்து எத்தனையோ அழகிகளைக் கண்டிருக்கிறாள். அவளுடன் படிக்கும் கல்லூரி மாணவிகளிலேயே அழகான பெண்ணை விடவும், ஏன், உலக அழகி என்று தேர்ந்தெடுக்கப் பட்டவளை விடவும் தேவப்ரியா பேரழகியாக



விளங்கினாள். இத்தனைக்கும் அவள் சாதாரண உடையில்தான் இருந்தாள்.

இவ்வளவு நீண்ட தலைமுடி அவளுக்கு எப்படித்தான் வந்ததோ? அந்தக் கண்களின் ஒளி கடைசியாக எங்கு வந்து நின்றது?

"விஷ்ணுவின் மனைவி ரொம்ப அழகாக இருக்கிறாள் இல்லையா அம்மா?" - இந்து தனது அம்மாவிடம் கூறினாள்.

"அதையேதான் நானும் நினைத்தேன். இப்படிப்பட்ட ஓர் அழகு ஒரு பெண்ணுக்கு எப்படிக் கிடைக்கும்?" - மூக்கில் விரலை வைத்தபடி வியந்து பேசினார் பவானிக்குட்டி அந்தர்ஜனம்.

விருந்து முடிந்து எல்லோரும் கிளம்பிச் சென்றபோது சூரியன் மறைந்து விட்டிருந்தான். இருந்தாலும், கிழக்குப் பகுதி மலைமீது ஒளிந்து கொண்ட சூரியனின் வெளிச்சக் கீற்றுகளின் பிரதிபலிப்பு மறையவில்லை.

அங்கு வந்த விருந்தினர்கள் எல்லோரும் வெகுநாள் கழித்து இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் மீண்டும் சந்தித்துக் கொண்டனர். அதனால் ஒருவரைப்பற்றி ஒருவர் அறிந்து கொள்ளவும், குசலம் விசாரித்து வழியனுப்பவும் நெடுநேரமானது. நாள்பட்ட இந்தச் சந்திப்பு வந்தவர்களுக்கும் மகிழ்ச்சியளித்ததால் விருந்தினர்களும் நேரத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தனர்.

அன்று வெள்ளிக்கிழமையாக இருந்ததால் இரண்டு நாள் தங்கிவிட்டுச் செல்லலாம் என்பது பவானிக்குட்டி அந்தர்ஜனத்தின் எண்ணம். சரஸ்வதியம்மாவும் அதையே விரும்பினார். ஆனால், இந்துவின் மனோநிலை வேறுவிதமாக இருந்தது. தேவப்ரியாவின் அழகால் ஏற்பட்ட பொறாமைதான் காரணம். தேவப்ரியாவைப் பார்த்தது முதல் அவள் மனதில் நிமதியில்லாமல் போனது.

விருந்துக்கு வந்த உறவுக்காரர்களில் வேறு யாரும் அங்கு இரவு தங்குவதற்கு முற்படவில்லை. வீட்டு வேலைக்கு வந்திருந்த பெண்கள் சமையலின் மிச்சம் மீதிகளைப் புதிய புதிய கூடைகளில் வைத்து எடுத்துச் சென்றனர். இனிமேல் அந்த வீட்டிலிருந்து வெளியேறக் கூடியவர்கள் யாருமில்லை என்று தோன்றிய பிறகு தேவப்ரியா தீபத்துடன் வெளித் திண்ணைக்கு வந்தாள். இருட்டி

விட்டதால் அவள் தன்னுடைய சுயஉருவை அடைந்து விட்டிருந்தாள். "தீபம்... தீபம்... தீபம்..." என்று கூறியபடியே அவள் வெளிவாசல் வரை சென்று திரும்பினாள். பிறகு துளசி மாடத்தை மூன்ற முறை வலம் வந்து, மாடத்தில் விளக்கை வைத்தாள்.

"அஸ்தி மாடத்தில் விளக்கு வைக்கவில்லையா?" - பவானியம்மாள் கேட்டார். (அஸ்திமாடம் என்பது இறந்து போன வீட்டுப் பெரியவரின் வெந்த எலும்பின் ஒரு பகுதியைக் கலசத்தில் போட்டுப் புதைத்து, அதன் மேல் எழுப்பப்படும் சிறிய மாடம்)

"நானே விளக்கேற்றுகிறேன்" - சரஸ்வதியம்மாள் படியிறங்கி வந்தார்.

பவானியம்மாள் அதைக் கவனித்தார். அவரது மருமகள் ஏன் அஸ்திமாடத்திற்குப் போகக்கூடாது ? புதிதாக வீட்டிற்கு வந்த பெண் என்பதால் மாமியாரே செய்கிறாற்போல் இருக்கிறது என்று தன்னைச் சமாதானம் செய்து கொண்டாள்.

வெகு நாட்களுக்குப் பிறகு எல்லோரும் சந்தித்துக் கொள்வதால், பேசுவதற்குச் சௌகரியமாக வராந்தாவில் உட்கார்ந்தார்கள்.

"என்னதான் இருந்தாலும் நீங்கள் எங்களை இப்படி அன்னியராக நினைத்தது சரியில்லை..." - வெற்றிலையில் சுண்ணாம்பு தடவியபடியே பவானியம்மாள் கேட்டார்.

"என்ன ... திடீரென்று இப்படிப் பேசுகிறீர்கள்? இப்பொழுது அப்படி என்ன நடந்துவிட்டது?" - சரஸ்வதி அந்தர்ஜனம் தலையை உயர்த்திக் கேட்டார்.

"இல்லை... விஷ்ணு எனக்கு அன்னியனா என்ன?"

"ஓகோ... அதைப்பற்றிக் கேட்கிறீர்களா?" என்றபடியே உட்புறம் பார்த்தார் சரஸ்வதி அந்தர்ஜனம்.

"அவர்கள் பேசத் தொடங்கியதும் தேவப்ரியா மெதுவாக எழுந்து படுக்கையறையை நோக்கி நடந்தாள். இங்கு உட்கார்ந்திருந்தால் பேச்சு தன்னை மையமாக்கித் திரும்பும் என்பது அவளுக்குத் தெரியும். எனவேதான் எழுந்து போனாள். அது மட்டுமின்றி, இப்போது அவள் மனிதப் பெண்ணாகவும் இருக்கவில்லை.

பகல் நேரத்தை விட இப்பொழுது தேவப்ரியாவின் உடம்பின்



ஒளி அதிகரித்திருந்தது. அவள் உடம்பிலிருந்து பாலைப் பூவின் (மனோரஞ் சிதப் பூவின் மணம் போன்ற) மணம் வீசத் தொடங்கியிருந்தது. அந்தப் பகுதியில் எங்குமே பாலை மரம் கிடையாது. எனவே, சட்டென்று அவர்கள் எதையாவது கண்டுபிடிக்கலாம். யூகிக்கலாம் அல்லது சந்தேகப்படலாம். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் நிச்சயம் அது நல்லதற்கல்ல!

தேவப்ரியா படுக்கையறைக்குள் நுழைந்தாலும், வெளியே வராந்தாவிலிருந்தபடி அவர்கள் பேசுவது தெளிவாகவே கேட்டது. பவானியம்மாளை முதல் தடவையாகப் பார்த்தபோதே ஒருவித சந்தேகமும் அவள் மனதில் முளைத்தது. பவானியம்மாவின் மனம் அவ்வளவு நல்லதல்ல என்பதும் சுலபத்தில் புரிந்து போனது. அவரால் ஏதாவது பிரச்சனை ஏற்படலாம் என்று பயந்தாள்.

"என்னதான் இருந்தாலும் நீங்கள் எங்களுக்கு ஒரு வார்த்தை சொல்லியனுப்பியிருக்காலம்" - பவானியம்மாள் தொடர்ந்தாள்.

"என்ன நடந்தது என்பதை நான் கூறுகிறேன். ஒரு நாள்..." என்று தொடங்கிய சரஸ்வதி அந்தர்ஜனம், அருகிலேயே விஷ்ணு உட்கார்ந்திருப்பதால் வார்த்தையை முடிக்காமல் நிறுத்தினாள். விஷயத்தைப் புரிந்து கொண்ட விஷ்ணுதேவன் எழுந்து வீட்டிற்குள் சென்றான். பெண்கள் கூடி எதை வேண்டுமானாலும் பேசிக் கொள்ளட்டும் என்று நினைத்தபடி நடந்தான்.

தேவப்ரியாவும், விஷ்ணுதேவனும் எழுந்து சென்றுவிட்டதால் பவானியம்மாள் இனிமேல் தாராளமாகப் பேசலாமே என்று நினைத்தாள். எனவே தன் மகளைப் பார்த்து - "இந்து, உனக்குத் தூக்கம் வந்தால் போய்ப் படுத்துக் கொள்!" என்றார்.

"தூக்கம் வரவில்லையம்மா. அதுவரையில் உங்களுடனேயே இருந்து, உங்கள் பேச்சைக் கேட்கிறேனே" - இந்துவின் குரல் தாழ்ந்து ஒலித்தது.

சொத்தும், சௌகரியங்களும் விஷ்ணுதேவனிடம் அதிகரித்தபோது இந்துவிற்கு அவன் மீது மதிப்புடன் காதலும் பிறந்தது. ஆனால், இதற்கு முன்பாக அவள் அவனைப் பற்றி ஒரு கணம் கூட நினைத்ததில்லை.

"விஷ்ணுவிற்கு வேறு எங்கும் பெண்ணே கிடைக்காததால்தான் ஊரும் பேரும் தெரியாத இடத்திலிருந்து இந்தப் பெண்ணைக் கொண்டு வந்தீர்களா, என்ன?" - பவானியம்மாள் பேச்சைத் தொடர்ந்தாள்.

சரஸ்வதி அந்தர்ஜனம் அதற்குப் பதில் பேசவில்லை. என்ன பதில் கூறுவதென்று அவருக்குப் புரியவில்லை. இதே விஷயத்தைக் குறித்து இன்று ஒரு நாளிலேயே பலரும் பலவிதமாகப் பேசிவிட்டார்கள். "மருமகளின் வீட்டிலிருந்து யாரெல்லாம் வந்திருக்கிறார்கள்? மருமகள் எந்த ஊர்?" என்றெல்லாம் கேட்டார்கள்.

இதற்கெல்லாம் பதில் சொல்ல சரஸ்வதியம்மாவால் முடியவில்லை. தெரிந்தால்தானே சொல்வதற்கு? சொல்ல முடியாததாலேயே குற்ற உணர்ச்சியும் தோன்றியது.

சில நாள்களுக்கு முன்பு இந்த மாதிரிப் பிரச்சனை எதுவும் இல்லை. இப்படியொரு இல்லம் இருப்பதாகவோ, அதில் மனிதர்கள் இருக்கி றார்கள் என்றோ யாருமே கவனித்ததாகத் தெரியவில்லை. ஆனால், இன்றைய நிலை அப்படி அல்ல. குடும்பத்தின் பழைய பெருமை மீண்டும் உயர ஆரம்பித்திருக்கிறது. எந்தக் காலத்திலோ கைவிட்டுப் போயிருந்த நெல்வயலும், தென்னந்தோப்பும் மறுபடியும் கைக்கு வந்திருக்கிறது. பழைய காலம் போல் மரியாதை தரவும், ஒதுங்கி வழிவிடவும் முன்வருகிறார்கள்.

நேரில் போய் அழைக்காமலேயே வலிய வந்து உதவுகிறார்கள். குசலம் விசாரிக்கிறார்கள். குலவுகிறார்கள். சென்ற வாரம் நடந்த ஒரு நிகழ்ச்சியை அவர் ஒரு நாளைக்கு ஒருமுறையாவது நினைக்காமல் இருப்பதில்லை.

குருக்ஷேத்ர மனையின் மேற்குப் பகுதியில் ஐந்து ஏக்கர் பரப்பளவுள்ள தோப்பு ஒன்று இருந்தது. எல்லாமே குலை குலையாகக் காய்க்கும் மரங்கள். தவிர, நான்கு பெரிய தேக்கு மரங்களும் உண்டு. இந்தத் தேக்கு மரங்கள் மட்டும் இன்றைய மதிப்பில் இரண்டு லட்ச ரூபாய் விலை பெறும். அதுவும் ஒரு காலத்தில் இந்த மனையைச் சேர்ந்ததுதான்.



எழுபத்தைந்து வருடங்களுக்கு முன்பு அது சங்குண்ணி வாரியாரின் பாட்டனார் ஒத்திக்கு வாங்கியிருந்தார். அன்று இருந்த தென்னைகள் ஒன்றும் இன்றைக்கு இல்லவிடினும், அதற்குப் பதிலாக வேறு மரங்களை நட்டிருந்தனர்.

ஒருநாள் காலையில் சரஸ்வதி அந்தர்ஜனம் வாரியாரின் முகத்தில்தான் முதன் முதலாக விழிக்க நேர்ந்தது. வந்ததும் வராததுமாக அவர் ஒரு ஓலைத்துண்டை வராந்தாவில் வைத்துவிட்டு, பவ்வியமாக ஒதுங்கி நின்றார்.

"அது என்ன?" என்று விஷ்ணு கேட்டபோது, "மேற்குப்புற தென்னந்தோப்பிற்காக எழுதிக் கொடுத்த பத்திரம்" என்றார். அதைத் திருப்பித் தருவதற்காகவே வந்திருப்பதாகவும் கூறினார்.

"பணத்தை வாங்கிக் கொண்டுதானே அதை எழுதிக் கொடுத்திருந்தார்கள்?" என்று விஷ்ணு கேட்டபோது, அதிலிருந்து நூறு மடங்குக்கு மேல் இதுவரை சம்பாதித்து விட்டதாகவும், இனிமேல் எந்தக் காரணத்தை முன்னிட்டும் தான் அந்தச் சொத்தை வைத்துக் கொள்ள முடியாதென்றும் வாரியார் திட்டவட்டமாகச் சொல்லி விட்டார்.

அதை அவர் கூறியபோது, முந்தின நாள் தன்னுடைய வீட்டின் முற்றத்தில் அவர் கண்ட காட்சி ஒருமுறை அவரது மனதிற்குள் வர, திடுக்கிட்டார்.

யாரோ தம்மை அழைப்பது போல் ஒரு குரல் கேட்டது. அதுவும் நள்ளிரவில். படியிறங்கி முன்புறமிருந்த துளசி மாடத்தின் அருகே வந்தார். அங்கு யாரோ நிற்பது போல் தோன்றியது. கவனித்தார். மறுமுறை அடையாளம் காணமுடியாத தோற்றத்தில் தெரிந்த ஒரு பெண் உருவம். கண் மூடித் திறப்பதற்குள் அது வளர்ந்து பெரிதாயிற்று.

சங்குண்ணி வாரியார் தலையை உயர்த்திப் பார்த்தார். சட்டென்று ஒரு பெரிய கை அவரது கழுத்தில் பதிந்தது. வாரியார் தரையிலிருந்து உயர்ந்து கொண்டிருந்தார். வாரியாரின் கை கால்கள் பயத்தால் தந்தியடிக்கத் தொடங்கின. உடம்பு நடுங்கத் தொடங்கியது.

தன்னை மேற்புறமாக உயர்த்திக் கொண்டுபோய்த் தன்னுடைய

காதில் கூறியதாகத்தான் வாரியாருக்குத் தோன்றியது. ஏற்கெனவே ஒருமுறை விஷ்ணுதேவன் தங்கப் பாக்கைக் கொடுத்தபோது ஏற்பட்ட அனுபவத்தை அவர் மனம் மீண்டும் ஞாபகப்படுத்தியது.

"மேற்கொண்டும் ஒரு விஷயத்தை உங்களிடம் கேட்க வேண்டுமென்று நினைத்தேன்..."

"என்ன...?" சரஸ்வதி அந்தர்ஜனம் கேட்டார்.

"இந்தப் பெண் நமது வர்க்கம் தானா?"

"அப்படியென்றுதான் அவன் சொன்னான்!"

"அவளுடைய இல்லத்தின் பெயர் என்னவாம்? நமக்குத் தெரியாத இல்லம் ஏதாவது இருக்கிறா, என்ன?"

"அதையெல்லாம் நான் துருவித்துருவிக் கேட்கவில்லை."

"இருப்பது ஒரே பையன் என்பதால் எதையும் கேட்காமல் இருக்கிறீர்கள் போல் இருக்கிறது."

"அப்படியெல்லாம் இல்லை."

"இப்படிச் சொன்னால் போதுமா? எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டாமா? வேண்டுமானால் நான் விசாரிக்கிறேன்." - பவானியம்மாள் கேட்டார்.

"இனிமேல் அதையெல்லாம் தெரிந்து கொண்டுதான் என்ன பிரயோஜனம்?"

"என்ன பிரயோஜனமா? சரியாகப் பதில் சொல்லாவிட்டால் வீட்டைவிட்டு விரட்ட வேண்டியதுதான். பிறகு வீட்டில் சுத்திகலசம் செய்ய வேண்டும். நம்முடைய வீட்டில் பரதேவதைகள் பலர் குடியிருக்கிறார்களே..."

இரவு முழுக்க அவர்கள் இதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர்.

"இப்பொழுது நான் என்ன செய்வது?" - இதையெல்லாம் ஒன்றுவிடாமல் கேட்டுக் கொண்டிருந்த தேவப்ரியா, விஷ்ணுதேவனிடம் கேட்டாள்.

"நீ எதுவும் பேசவேண்டாம். இதையெல்லாம் கேட்டதாகவே காட்டிக் கொள்ளாதே."

"நாளைக்கு என்னிடம் எதையாவது கேட்டால் நான் என்ன பதில் சொல்வது?"



"அதையெல்லாம் என்னிடம் விட்டு விடு. நான் பார்த்துக் கொள்கிறேன்."

"அது எப்படி முடியும்? எந்த நேரமும் நீங்கள் என்னுடனேயே இருக்க முடியுமா?" - இந்த வார்த்தையைக் கேட்டதும் விஷ்ணு அவளைப் பார்த்தான்.

"நான் அம்மாவிடம் சொல்லி வைக்கட்டுமா?"

"நாமாகக் கூறினால் அவர் என்ன நினைப்பார்?"

"வேறு என்னதான் செய்வது?"

"பொழுது விடியட்டும். நான் இதற்கு ஒரு வழி கண்டுபிடிக்கிறேன்" என்ற தேவப்ரியா, விஷ்ணுவின் நெஞ்சில் சாய்ந்தபடி பேசினாள்.

மறுநாள் காலையில் குளித்துவிட்டு வந்த தேவப்ரியாவை, பவானியம்மா ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தாள். அவளது கண்கள் சிறுத்தன.



## 19

தேவப்பியாவின் அழகு, பவானிக்குட்டியையும், இந்துவையும் ஒரே போல் பொறாமை கொள்ள வைத்தது. எனவே எப்படியாவது அவளை அங்கிருந்து விரட்டிவிட வேண்டுமென்று இருவருமே நினைத்தார்கள். எப்படி யோசித்தாலும் அதற்கான வழி உடனே புலப்படவில்லை. கடைசியாக அவளுடைய குலம், கோத்திரம் பற்றியெல்லாம் விசாரித்து, அவள் ஒரு நம்பூதிரிப் பெண்ணாக இல்லாதிருந்தால், அந்த ஒரு காரணத்தைக் கூறியே அவளை விரட்டிவிடலாம் என்றும் திட்டமிட்டார்கள். இதற்கு ஒரு முடிவு தெரியாமல் இந்த வீட்டிலிருந்து கிளம்புவதில்லை என்றும் தீர்மானித்துக் கொண்டார்கள்.

ஊராருக்கு முன்னால் விஷ்ணு அவளை முறைப்படித் திருமணம்

செய்யவில்லையே. எனவே அவளை விரட்டி விடுவதில் எந்தவிதமான சிக்லும் இருக்காதென்று கணக்குப் போட்டார்கள்.

மதிய உணவு முடிந்ததும், பவானிக்குட்டியும் அவளுடைய மகளும், விஷ்ணுவின் அம்மாவும் பேசுவதற்காக நெல்குத்தும் அறையில் அமர்ந்தனர். எத்தனையோ வருடங்களின் கதைகளை அவர்கள் பேசவேண்டி இருந்தது. ஆனால், அவர்கள் அதைப் பற்றியெல்லாம் எதுவும் பேசவில்லை. அவர்களுடைய ஒரே குறி தேவப்ரியாதான்!

"அந்தப் பெண்ணின் வீட்டுப் பெயர் என்னவென்று சொன்னீர்கள்?" - பவானிக்குட்டி பேச்சை ஆரம்பித்தாள்.

"வடக்குப் பகுதியில் ஏதோ ஒரு பெயர் சொன்னதாக ஞாபகம்."

"அது உண்மையாக இருந்தால், விஷ்ணு கொஞ்ச நாட்களாவது அவளது வீட்டில் வசித்திருக்கு வேண்டுமே?"

இதைப் பற்றி சரஸ்வதி அந்தர்ஜனம் ஒருபோதும் யோசித்துப் பார்த்ததே இல்லை. உண்மைதான். விஷ்ணு வெகுநாட்களாக எந்த வெளியூருக்கும் போனதாகவே தெரியவில்லை. அவன் இங்கு வருவதற்கு முந்தைய மாதங்களில் கூட அவன் எங்கும் சென்ற தில்லை. ஒரே ஒரு நாள் சட்டென்று அவளுடன் வந்தான். அவன் சொன்னதையெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு நம்பி விட்டோம்.

"உங்கள் மருமகளைக் கொஞ்சம் கூப்பிடுங்களேன். நானே விசாரிக்கிறேன்" என்றாள் பவானிக்குட்டி.

உடனே சரஸ்வதி அந்தர்ஜனம் தன்னுடைய மருமகளை அழைத்தார். அவளும் உடனே பவ்வியமாக வந்து நின்றாள்.

"இப்படி உட்காரம்மா!"

தேவப்ரியா தரையில் சப்பணமிட்டு உட்கார்ந்தாள்.

"உங்கள் வீடு எங்கே உள்ளது? அதன் பெயர் என்ன?" - பவானிக் குட்டி கேட்டாள்.

"கொஞ்ச தூரத்தில் இருக்கிறது!"

"அப்படிச் சொன்னால் எப்படி?"

"வடக்கில்.... கொஞ்ச தூரத்தில்..."

"வடக்கில் என்று சொன்னால் மட்டும் போதுமா? ஊரின் பெயர் என்ன?"



"அந்த இடத்திற்குப் பெயர் எதுவும் இல்லை."

"நன்றாக இருக்கிறதே! ஊர் எது என்று கேட்டால் இப்படியா பதில் சொல்வது? சரி, போகட்டும். நான் சில ஊர்களின் பெயரைச் சொல்கிறேன். அதில் உன் ஊர் எதுவென்று சொல். பாலக்காடா?"

"ஆமாம்.... அதே ஊர்தான்."

"பாலக்காட்டில் எந்த இடம்?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. என்னை என் பாட்டிதான் வளர்த்தார். எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது."

"அப்படியானால் அட்சரசுத்தமாக உன்னால் எப்படி ஸ்தோத்திரம் சொல்லமுடிகிறது?" - சரஸ்வதி அம்மாள் குறுக்கிட்டாள்.

"பாட்டியிடம் வந்து சிலர் ஸ்தோத்திரம் ஒப்பிப்பார்கள். அதைக் கேட்டுக்கேட்டு எனக்கு மனப்பாடமாகிவிட்டது. நான் வீட்டைவிட்டு இதுவரை வெளியே வந்ததே இல்லை. இப்பொழுது இங்கே வந்திருப்பதுதான் முதல் தடவை."

"சரி, விஷ்ணுவை எங்கே எப்படிப் பார்த்தாய்?"

"அவர் கதகளி பார்க்க வந்திருந்தபோது பார்த்தேன்."

"அதற்கெல்லாம் வெளியே போவதுண்டா?"

"எங்கள் வீட்டு வாசலில் நின்றாலே கதகளி மேடை நன்றாகத் தெரியும்."

"இவ்வளவெல்லாம் சொல்லும் உனக்கு, உன்னுடைய வீட்டின் பெயர் தெரியாதா?"

"வீடு சிறியதுதான். 'சிறியமனை' என்று சொல்வார்கள் என்று நினைக்கிறேன்."

"ஆனாலும், நம்பூதிரிப் பெண்தான் இல்லையா?"

தேவப்ரியா தலையாட்டினாள். அவள் தலையசைத்தது ஆமாம் என்றோ, இல்லையென்றோ எப்படி வேண்டுமானாலும் பொருள் கொள்ளலாம்போல் இருந்தது. அவள் அங்கு உட்கார்ந்திருந்த நேரம் முழுவதும், அவளை அடி முதல் முடிவரை பவானியம்மாள் ஆராய்ந்தபடியே பார்த்தாள். ஓர் அங்கம் விடாமல் ஆராய்ந்தாள்...

தேவப்ரியாவின் கைவிரல்களைப் பார்த்தவுடன், பவானியம் மாவின் நெற்றி சுருங்கியது. அழகான நீண்ட விரல்கள். அடிக்கடி விரல்கள் மேற்புறமாக வளைந்தன. நடனபாவங்களைத் துல்லியமாக

வெளிப்படுத்த உதவும் விரல்கள். விரல்களின் மேற்பகுதியில் நகங்களை அழகாக வெட்டி விட்டிருந்தாள். சாதாரணப்பெண்களின் கைவிரல்கள் இவ்வளவு அழகாக இருப்பதில்லை. ஒரு தேர்ந்த நடனமணியின் கைகள் மட்டுமே இப்படி இருக்க முடியும்!

ஒரு வேளை இவள் நடனப் பெண்ணாக இருப்பாளோ? கதகளி நாட்டியப் பைத்தியமான விஷ்ணுதேவன் ஏதோ மோகினியாட்டம் (பரத நாட்டியம் போல் இது ஒரு வகை கேரள நடனம்) ஆடும் பெண்ணைப் பிடித்துக் கொண்டு வந்துவிட்டானோ, என்னவோ?

அப்பொழுது விஷ்ணுதேவன் அங்கு வந்தான். தேவப்ரியா அவனைப் பார்த்ததும் எழுந்தாள்.

"இங்கேவந்து உட்கார்ந்திருக்கிறாயா? வெளியில் எல்லாம் ஒரே குப்பையாகக் கிடக்கிறதே. வேலைக்காரிகளை விட்டு முதலில் அதையெல்லாம் சுத்தம் செய்யச் சொல்" - விஷ்ணு கூறினான்.

இந்தச் சந்தர்ப்பத்தை வீணாக்காமல் அவள் எழுந்து போனாள்.

"சரி விஷ்ணு, நீ இப்படி உட்கார். நாம் ஒரே ஒரு தடவை அதுவும் கொஞ்சம் நேரம்தானே பேசியிருக்கிறோம்" - அவனது மாமி கூறினாள். அவன் உட்கார்ந்தான்.

"என்ன இருந்தாலும் தேவப்ரியா கெட்டிக்காரிதான். ஆமாம், அவளது குலம், பற்றி ஏதாவது தெரியுமா?" - மாமி அவனிடம் தன் விசாரணையைத் தொடங்கினாள்.

"அதையெல்லாம் நான் நீர விசாரித்து விட்டேன் மாமி. அதன் பிறகுதான் அவளை இங்கு அழைத்து வந்தேன். நீங்கள் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அவள் இங்கு வந்த பிறகுதான் இந்த வீட்டிற்கே முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது. அம்மாவுக்கு அதெல்லாம் நன்றாகத் தெரியுமே" - என்றபடி அம்மாவைப் பார்த்தான்.

"அவள் வருவதற்கு முன்பே இந்தச் செல்வமெல்லாம் வந்து விட்டதே!"

"சரி, நான் ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். நான் வேண்டாத எதையும் செய்யவில்லை. அவள் இங்கு இருப்பதில் உங்களுக்கு விருப்பமில்லையென்றால் நான் அவளுடன் வேறு இடத்திற்குக்



குடிபோகிறேன். நான் ஆரம்பத்திலிருந்தே எதுவும் இல்லாதவன் தான்."

"என்ன விஷ்ணு இப்படிப் பேசுகிறாய்" - அம்மா அதிர்ந்து போய்க் கேட்டார்.

"பின் என்ன, பணம் வந்தபிறகு எல்லோரும் வருகிறார்கள். இல்லாதபோது ஒருவருமே நம்மைக் கண்டுகொள்வது இல்லை!" என்றான் விஷ்ணு. பவானி அந்தர்ஜனத்தை ஒரு பார்வை பார்த்தபடி.

"நான் ஒன்று சொல்லட்டுமா? சொத்தும் பணமும் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நம்பூதிரிகள் நம்பூதிரிகள்தான். ஒரு நம்பூதிரியின் இல்லத்தில் நம்பூதிரியல்லாத ஒருவர் இரவு தங்குவதென்பது சரியில்லை" என்றாள் பவானி அந்தர்ஜனம்.

"அப்படியானால் நான் சொல்வதையும் நீங்கள் கேட்டுக் கொள்ளுங்கள். அவள் நீங்கள் சொன்னபடியெல்லாம் இருப்பவள் தான்!" என்று சொல்லிவிட்டு, விருட்டென்று தெக்குத்தும் தானிய அறையிலிருந்து வெளியேறினான் விஷ்ணு.

"கேட்டீர்களா சரஸ்வதி அந்தர்ஜனம். இதில் ஏதோ சிக்கல் இருக்கிறது. இல்லாவிட்டால் இவன் ஏன் இவ்வளவு கோபப்பட வேண்டும்? இன்னும் ஒரு விஷயத்தையும் நான் உங்களிடம் சொல்லி விடுகிறேன் இந்து, நீ கொஞ்சம் வெளியே போய் இரும்மா..."

இந்து உடனே எழுந்து வெளியே போனாள்.

"நான் சொல்வதை ரகசியமாக வைத்துக்கொள்ளுங்கள்" - பவானிக்குட்டி எழுந்து ஒரு முறை சுற்று முற்றும் பார்த்துவிட்டுத் திரும்பி வந்து சொன்னாள்:

"அவள் பகலில் இருப்பதைப் போலவே ராத்திரியிலும் இருக்கிறாளா என்பதைக் கவனியுங்கள்!"

இந்த வார்த்தையைக் கேட்டதும் சரஸ்வதி அந்தர்ஜனத்தின் உடம்பு ஒரு கணம் நடுங்கியது. "என்ன இப்படிச் சொல்கிறீர்கள்?" என்றாள்.

துளசி மாடத்தில் தேவப்ரியா விளக்கேற்றும்போது, தான் பார்த்த காட்சி உடனே அவர் மனத்தில் வந்தது.

"ஒன்றுமில்லை. நான் சொன்னதை ஞாபகத்தில் வைத்திருப்பது

நல்லது. ஒருவேளை... சே... சே... நான் அதை என் வாயால் எப்படிச் சொல்ல...” - என்றபடி நெஞ்சில் கை வைத்தாள் பவானி. “பழங்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் வெகு சாதாரணம். அதெல்லாம் இப்பொழுதும் நடக்காது என்று சொல்வதற்கில்லை.”

“எனக்குப் பயம் தோன்றுகிறது பவானி. ஒருவேளை விபரீதமாக ஏதேனும் நடந்துவிடுமோ?” - சாஸ்வதி அந்தர்ஜனம் பயந்தபடி கேட்டார்.

“வீணாகப் பயப்படாமல் நான் சொல்வதை மனதில் போட்டு வையுங்கள். யாரிடமும் எதுவும் சொல்லவேண்டாம். நமக்கு விஷயம் தெரிந்து விட்டது என்பது விரைவிலேயே அவளுக்கும் தெரிந்துவிடும். அப்படித் தெரிந்து விட்டால், அவள் எதையாவது செய்து விடலாம்...”

“அந்தப் பொல்லாப்பெல்லாம் நமக்கு எதற்கு? இதோ, நான் இப்பொழுதே அதை மறந்து விடுகிறேன்!”

“சரி, நான் இன்றே புறப்படுகிறேன். இந்து ... இந்து...” என்று அழைத்தபடியே பவானிக்குட்டி அறையை விட்டு வெளியேறினாள்.

சந்தேகங்கள் வலுவடைந்ததுடன் பேச்சு எதிர்பாராத நிலையில் திசை மாறியதும் பவானிக்குட்டி அந்தர்ஜனத்திற்கும் உள்ளுக்குள் பயம் பிறந்தது. அதனால் இருட்டுவதற்கு முன்பே, மகளுடன் கிளம்பி விடுவது நல்லதென்று நினைத்தாள். அங்கேயே தங்கியிருந்தால் தனக்கோ, தன் மகளுக்கோ ஏதாவது ஆபத்து நிகழலாம் என்றும் அவளது உள்ளுணர்வு எச்சரித்தது. காபி சாப்பிடுவதற்குக்கூட நிற்காமல் சட்டென்று அங்கிருந்து விடைபெற்றாள்.

“என்னம்மா, மாமியும் அவர் மகளும் இவ்வளவு சீக்கிரம் புறப்பட்டு விட்டார்கள்?” - விஷ்ணுதேவன் தன் அம்மாவிடம் கேட்டான்.

“என்னவோ, அவர்களுக்கு அவசர வேலை இருக்கிறதாம். பெரிய வீடு இல்லையா? எவ்வளவோ வேலை இருக்கும்!”

மாலைநேரமானதும் தேவப்ரியாவின் உருவத்தில் மாற்றம் ஏற்பட்டது. பகலை விட அவள் உடம்பு பிரகாசமாகத் தோன்றியது. அவளது உடல் வெளிச்சம், உடுத்தியிருந்த உடையை மீறி வெளிப்பட்டது.



அம்மா இரவுச் சாப்பாட்டிற்கு உட்கார்ந்தபோது தேவப்ரியா அவரருகே சென்று உட்கார்ந்தாள். விளக்கின் திரியை அவள் வேண்டுமென்றே கூட்டியிருந்தாள். சமையலறையே ஒளிமயமாக ஜொலித்தது. அந்த வெளிச்சத்தின் முன்பாக தேவப்ரியாவின் உடல் பிரகாசம், சரஸ்வதி அந்தர்ஜனத்திற்கு ஒரு பெரிய வித்தியாசத்தை உணர்த்தவில்லை. அதுவுமின்றி தேவப்ரியா அருகில் இருந்தபோது பவானிக்குட்டி கூறிய விஷயங்கள் எதுவும் அவரது மனதில் மேலெழும்பி வரவில்லை.

‘என்ன அதிசயம்? பவானிக்குட்டி சொல்வது உண்மையானால் அப்படிப்பட்ட ஒன்று தனக்கு உணவு பரிமாறுமா? இவ்வளவு விவரத்துடன் பேசுமா? எவ்வளவு சுத்தம்! ஸ்தோத்திரங்களையும், கீர்த்தனங்களையும் எவ்வளவு கவனமாக ஒப்பிக்கிறாள்? இந்தக் கிராமத்திலேயே இப்படி ஒரு பெண்ணைப் பார்க்கவே முடியாது. பவானிக்குட்டி சொன்னது உண்மையாக இருந்தால், இதெல்லாம் சாத்தியமா? எனவே அப்படியெல்லாம் இருக்காது!”

“சரி, நீ போம்மா, நானே பார்த்துக் கொள்கிறேன்.”

தேவப்ரியா புறப்பட்டாள். அவள் புறப்பட்டுச் சென்ற பின்னர் சரஸ்வதி அந்தர்ஜனத்தின் மனத்தில் மீண்டும் சந்தேகம் தோன்றியது. ‘எங்கிருந்து இந்தப் பாலைப் பூவின் மணம் வருகிறது?’

இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு கூடத்துக்கு வந்த சரஸ்வதி அந்தர்ஜனம், விஷ்ணு அந்தப் பக்கமாகச் செல்வதைப் பார்த்தார்.

“விஷ்ணு, ஒரு நிமிடம் வந்துவிட்டுப் போயேன்.”

வந்தான்.

“நம்முடைய வீட்டிற்கு அருகே எங்காவது பாலை மரம் பூத்திருக்கிறதா?”

“ஓ... பூத்திருக்கிறதே... அந்தக் கோடி மூலையில் புதர்களுக்குள் மறைந்திருக்கிற பாலை மரம் ஏகமாகப் பூத்திருக்கிறது.”

“ஓகோ... அப்படியானால் அதுதான் அந்த வாசனை!”

விஷ்ணுவின் பதிலைக் கேட்டதும் சரஸ்வதியம்மாவிற்குக் கொஞ்சம் ஆறுதல் தோன்றியது.

பவானிக்குட்டி அந்தர்ஜனம் தன்னுடைய இல்லத்தை அடைந்த வுடன், கோணி மூட்டையை அவிழ்த்து உதறுவது போல் குருக்ஷேத்ர மனையின் விசேஷங்களைத் தனக்கு வேண்டியவர்களிடமெல்லாம் கொட்டிக் கவிழ்த்தாள்.

"ஓகோ, இதுதான் அந்த ரகசியமா? நானும் இதைப் பற்றிக் கொஞ்சம் கேள்விப்பட்டிருக்கிறேன். என்னடா இது, இவ்வளவு சீக்கிரம் இவர்கள் எப்படி இந்த அளவிற்கு வளர்ந்தார்கள் என்றெல்லாம் யோசித்தேன். அதை முழுவதுமாகவே தெரிந்துகொள்ள வேண்டியது தான்" - பவானிக்குட்டியின் கணவர் கேட்டார்.

"என்ன இருந்தாலும், உங்கள் தங்கை வீடல்லவா?"

"பரம்பரைப் பொருள்கள் திரும்பக் கிடைத்தால் அதில் எனக்கும் பங்கு உண்டு. எல்லாமே அந்தக் கதகளிப் பைத்தியத்திற்கு மட்டும் சொந்தமாகி விடுமா, என்ன?"

"நீங்கள் இப்படிப் பேசிக்கொண்டு நேராக அங்கே போய் நின்றால் ஒன்றும் பிரயோஜனமில்லை. அங்கு இருப்பது சரியான ஓர் உருவம். சந்தேகமே இல்லாமல் அது... அதுதான்! எதற்கும் நீங்கள் விஸ்வ மங்கலம் வீட்டிற்குச் சென்று ஜயந்தன் நம்பூதிரியைப் பாருங்கள். அவரிடம் எதையாவது ஜபித்து வாங்கிக் கொண்டு பிறகு உங்கள் தங்கை வீட்டிற்குப் போகலாம்."

"சரி. நீ சொன்னபடியே செய்துவிட்டால் போகிறது!"



## 20

பவானிக்குட்டி அந்தர்ஜனத்தின் கணவர் கோபாலன் நம்பூதிரி மாலை நேரத்தில் விஸ்வ மங்கலம் வீட்டை அடைந்தார். அங்கு ஏதோ பூஜை நடந்து கொண்டிருந்தது. வெளித் திண்ணையருகே வந்து நின்ற கோபாலனிடம் முதலில் ஒரு வேலையாள் வந்தான்.



"எங்கேயிருந்து வருகிறீர்கள்?"

"தெற்குப் பக்கத்திலிருந்து வருகிறேன். எங்கள் வீட்டுப் பெயர் பெருமண்மனை. இந்த வீட்டின் திருமேனி ஏதோ பூஜையில் ஈடுபடப் போகிறார் போலத் தெரிகிறதே. அவரைச் சந்திக்க நேரமாகுமோ?"

"கொஞ்சம் தாமதமாகும்..."

"குறைந்தது...?"

"அரை நாழிகைப் போதாகும்!"

"அப்படியானால் நான் காத்திருக்கிறேன்..."

"உட்கார்ந்திருங்கள். இவ்வளவு தூரம் வந்தபிறகு அவரைப் பார்த்து விட்டுப் போவதுதானே நல்லது!"

"தாக சாந்தி செய்துகொள்ள ஏதாவது தரட்டுமா என்று கேள்" - உள்ளிருந்து ஒரு பெண் குரல் கேட்டது.

"வேண்டாம். பரவாயில்லை" கோபாலன் பதிலளித்தார்.

உட்புறமிருந்து குரல் கொடுத்தது தேவகி அந்தர்ஜனம்தான். ஒரு போதும் வீட்டிற்கு வெளியே வராத, ஆண்களுடன் பேசிப் பழக்கமில்லாத தேவகி அந்தர்ஜனம். சென்னாங்கேரி மனையின் தானவேதன் நம்பூதிரிப்பாடின் வரவிற்குப் பிறகு அவளுக்குச் சுதந்திரம் கிடைத்து விட்டிருக்கிறது. இனிமேல் யாரிடம் பேசினாலும் நடப்பதற்கு என்ன இருக்கிறது என்கிற நினைப்பு தோன்றிவிட்டி ருக்கிறது. மேற்கொண்டு எதிர்ப்புத் தெரிவிக்காத வகையில் சகோதரனும் மாறிவிட்டிருக்கிறார்.

அதன் அடையாளம், தானவேதன் உறங்கிக் கொண்டிருந்த அறைக்கு ஜயந்தன்தானே அவளை அனுப்பி வைத்தார். எனவே இப்படிப்பட்ட காரியங்களில் இனிமேல் தனக்குள்ள கட்டுப்பாடுகளை விலக்கிக்கொள்ள அவளாகவே ஒரு தீர்மானம் செய்து விட்டாள்.

நடந்து களைத்து வந்த கோபாலன் நம்பூதிரிக்கு தேவகி அந்தர்ஜனம் ஒரு வெண்கல டம்ளர் நிறைய காய்ச்சிய பசும்பாலைக் கொண்டுவந்து கொடுத்தாள். வெளிப்புறம் திறந்து கிடந்த திட்டி வாசல் கதவின் வழியாக தேவகி அந்தர்ஜனம், கோபாலன் நம்பூதிரியின் உடலழகை ரசித்துக் கொண்டிருந்தாள்.

நாற்பத்தைந்தைத் தாண்டிய கோபாலன் பார்வைக்கு மிகவும் வசீகரமாக இருந்தார். குடுமியில்லாமல் படிய வாரிய தலைமுடி. சலவை செய்த தூய வெள்ளை உடை. சரிகை போட்ட வேட்டி . கையில் தங்கச் சங்கிலி போட்ட கைக்கடிகாரம். விரலில் வெள்ளைக் கல் மோதிரம். சுருட்டி வைத்துள்ள சட்டையின் கைப் பகுதிகளுக்குக் கீழே தெரிந்த சதைப்பிடிப்பான கைப்பகுதி.

கோபாலன் ஒருமுறை நிமிர்ந்து பார்த்தார். அந்த முதல் பார்வையிலேயே அவர் கிறங்கிப் போனார். தன்னுடைய மனைவி பவானிக்குட்டியைவிட, சதைப்பிடிப்புள்ள உடம்பு. இவ்வளவு சுதந்திரத்துடன் வெளியே வந்து உபசரித்த நடைமுறை, அவருக்கு வியப்பூட்டவும் தவறவில்லை.

"பாலில் இனிப்பு சரியாக உள்ளதா?" - புதியதாக மலர்ந்த புன்னகையுடனும் கண்ணில் ஒருவித வெட்கத்துடனும் கேட்டாள். கோபாலன் நம்பூதிரி ஒருவிதத் தவிப்புடன் இதையெல்லாம் கவனிக்கவும் செய்தார்.

"நன்றாக உள்ளது" - நம்பூதிரி கூறினார். பொடி வைத்துப் பேசுகிறார் என்பதைத் தேவகியும் புரிந்துகொண்டாள்.

"இருந்து அண்ணாவைப் பார்த்துவிட்டுத்தானே போகப் போகிறீர்கள்?" அவள் கேட்டாள்.

"இந்த நிலைமையில் அப்படித்தானே செய்ய முடியும்?" மீண்டும் இரு பொருளில் பேசினார் கோபாலன். அதைப் புரிந்து கொண்டவளைப் போல் தேவகி அந்தர்ஜனம் புன்னகைத்தவாறே வீட்டிற்குள் சென்றாள்.

பூஜை முடிந்தபோது மணி எட்டரையாகி விட்டிருந்தது. ஜயந்தனும், தானவேதனும் ஒன்றாகவே வெளியே வந்தனர். வெளித்திண்ணையில் உட்கார்ந்திருந்த முன்பின் அறிமுகமில்லாத நபரைக் கண்டதும் ஜயந்தன் ஒரு கணம் தயங்கினார். 'யார் இவர்?' - மனதிற்குள் ஒரு கோடு, கேள்விக் குறியாக வளைந்தது.

அருகே நெருங்கியவுடன் கோபாலன் எழுந்து வணக்கம் செய்தார். ஜயந்தனும் பதிலுக்கு வணக்கம் செய்தார்.

"நீங்கள் வந்து வெகு நேரமாகிவிட்டதா?" - ஜயந்தன் கேட்டார்.



"அப்படியெல்லாம் இல்லை!"

"ஜலபானம் ஏதாவது சாப்பிட்டீர்களா?"

"ஆகிவிட்டது!"

"ஏதாவது விசேஷம் உண்டா?"

"அதற்குத்தான் வந்திருக்கிறேன்" - கோபாலன் தானவேதனைப் பார்த்தபடியே பேசினார்.

"அப்படியானால் ஒரு நிமிஷம் இருங்கள்" என்றபடி உட்புறம் பார்த்து, "கொச்சு உண்ணி, பெரியவரை அழைத்துக்கொண்டு ஆற்றங்கரைக்குப் போ. அவர் குளிக்கும் நேரமாகிவிட்டது."

வந்த வேலைக்காரன் தானவேதனுடன் கிளம்பினான்.

"சரி, வாருங்கள் பேசலாம்." - ஜயந்தன், கோபாலனை அழைத்தார்.

"நான் தெற்குப் பகுதியிலிருந்து வருகிறேன். பெருமண்மனையென்பது எங்கள் வீட்டின் பெயர். என் பெயர் கோபாலன்."

"வந்த காரணம்?"

"கொஞ்சம் சிக்கலான பிரச்சனை. அதாவது சொன்னால் யாரும் நம்ப முடியாத விஷயம்."

"அப்படியானால் நிறையப் பேச வேண்டியிருக்கும் இல்லையா."

"ஆமாம்"

"உங்களது நேரடியான அனுபவமா அல்லது கேட்டுத் தெரிந்த செய்தியா?"

"கேள்விப்பட்டதுதான். ஆனால், உண்மையான செய்தி."

"சுவாரஸ்யம். சொல்லுங்கள்..."

"விஷயம் என்னுடைய சொந்த இல்லத்தைப் பற்றியதுதான். ஆனால், அற்புதமான விஷயம். நான் இப்பொழுது எங்கள் வீட்டிலிருந்து வெளியேறி என் மனைவி வீட்டில் வசிக்கிறேன். நான் திருமணம் செய்து கொண்ட வீடு கொஞ்சம் வசதியானது. எனவே கல்யாணத்திற்குப் பிறகு அங்கேயே தங்கிவிட்டேன். சமீப காலமாக என்னுடைய பழைய குடும்ப வீட்டில் ஏராளமான மாற்றம். அதாவது நல்ல முன்னேற்றம். உண்மையைச் சொல்வதானால் ஒவ்வொரு

வேளைச் சமையலுக்கே கஷ்டப்பட்டிருந்த வீடு. இப்பொழுது என்னவென்றால் ராஜபோகம்தான்!"

"இது நல்லதுதானே" - ஜயந்தன் கேட்டார்.

"நல்லதுதான். அதைப் பற்றிச் சொல்வதற்காக நான் வரவில்லை."

"வேறு என்ன விஷயம்?"

"அந்த விட்டில் வேறு ஏதோ பிரச்னை உள்ளதாகத் தோன்றுகிறது."

"பிரச்சனையா? நீங்கள் சொல்வது எனக்கொன்றும் விளங்க வில்லை. புரியும்படி சொல்லுங்களேன்."

"சொல்கிறேன். என்னுடைய மருமகன் ஒரு கதகளிப் பைத்தியம். எந்த வேலையும் செய்வதில்லை. படிப்பும் குறைவு. ஆனால், பார்க்க அழகானவன். எந்தப் பெண் பார்த்தாலும் ஒரு விநாடி மனதில் சலனம் ஏற்படவே செய்யும். சமீபகாலமாக அவனுடன் ஒரு பெண் வசித்து வருகிறாள். அவளை இதுவரை நான் பார்த்ததே இல்லை. அவளும் நல்ல அழகியாம். அந்த வீட்டின் முன்னேற்றத்தில் அவளுக்கும் பங்கு இருக்கிறது என்பதுதான் என்னுடைய சந்தேகம்."

ஜயந்தன் சற்று நேரம் எதையோ யோசித்தபடி இருந்தார். "சரி, அதற்கு நான் என்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்?"

"அந்தப் பெண் இந்திர ஜாலக்காரியா அல்லது ஏதாவது ரக்ஷஸா (ரக்ஷஸ் - அகாலத்தில் மரணமடைந்து ஆவியாக உலவிச் சுற்றிக் கொண்டிருக்கும் ரத்தம் குடிக்கும் வலிமையான பேய் என்பது பொருள்) அல்லது வேறு ஏதாவதா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். மருமகனைக் காப்பாற்ற வேண்டியது என்னுடைய கடமையல்லவா?"

"உண்மைதான். இன்று இந்த நேரத்திற்குமேல் எதுவும் செய்ய முடியாது. நாளைக்குப் பார்க்கலாம். ஏற்கெனவே வந்திருப்பவர் மற்றொரு காரியத்திற்காக வந்துள்ளார். நீங்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாமல் இருப்பது நல்லது. இந்த வீட்டில் அப்படி ஒரு நடைமுறை உண்டு. இங்கு வருபவர்கள் தாங்கள் எதற்காக வந்திருக்கிறோம் என்பதைப் பரஸ்பரம் பேசிக்கொள்ள மாட்டார்கள்."



"அதற்கென்ன, அப்படியே செய்கிறேன்" கோபாபலன் நம்பூதிரி சம்மதித்தார்.

அன்று மூன்று பேரும் ஒன்றாக அமர்ந்து இரவுச் சாப்பாடு சாப்பிட்டனர். பரிமாறியது தேவகி அந்தர்ஜனம். அன்று அவள், தானவேதன் நம்பூதிரியைக் கண்டுகொள்ளவே இல்லை. அவளது பார்வை முழுவதும் கட்டுமஸ்தான உடலுடன் இருந்த கோபாலன் மீதே லயித்திருந்தது. அடிக்கடி அவளது பார்வை கோபாலனின் பரந்த மார்பிலேயே வந்து பதிந்தது.

உணவிற்குப் பிறகு மூன்று பேரும் வெளித்திண்ணையில் பேசுவதற்காக உட்கார்ந்தார்கள். சட்டென்று ஜயந்தனின் மனதில் ஒரு வெளிச்சம் தோன்றியது. இருவரையும் இன்று ஒரே அறையில் தங்க வைப்பது நல்லதல்ல. இப்படி அவர் நினைக்க வேறு ஒரு காரணமும் இருந்தது.

சென்னாங்கேரி மனையைச் சேர்ந்த தானவேதன் நம்பூதிரி வந்தபிறகு ஜயந்தனுக்கு ஒரு சிறு சரிவு தோன்றியுள்ளது. இதற்கு முன்பு இங்கு வந்த யாருமே ஓர் இரவுக்கு மேல் அங்கே தங்கியதில்லை. இப்பொழுது முதன் முறையாக வந்திருக்கிற ஒருவரின் காரியம் முடியாததால் இங்கேயே தங்க நேர்ந்திருக்கிறது. விஷயம் என்னவோ சாதாரணமானதுதான். ஆனால், தன்னால் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மற்றொரு விதத்தில் கூறுவதானால் அதற்காகச் செய்த முயற்சிகள் எல்லாம் தோல்வியிலேயே முடிந்திருக்கிறது. உயிருள்ள மனிதனைக் கூட அதற்காகப் பலி கொடுத்தாகிவிட்டது. பிரஸ்னப் பலகை பறந்தே போய்விட்டது. இதையெல்லாம் தானவேதன், வந்திருக்கிற புதிய நபரிடம் வெளியிட்டுவிட்டால், அது தன்னுடைய பெயருக்கு ஏற்படும் ஒரு களங்கமாகவே அவர் கருதினார்.

எனவே, பேச்சின் நடுவே ஜயந்தன் ஒருமுறை வீட்டுக்குள் சென்றார். தேவகியை அழைத்தார். பதில் கிடைக்கவில்லை. உற்றுக் கவனித்தார். பாத்ரூமிலிருந்து தண்ணீர் கொட்டும் சத்தம் கேட்டது. எனவே ஜயந்தன் திரும்பி வந்தார்.

"படுக்கும் நேரமாகிவிட்டதா?" ஜயந்தன் கேட்டார்.

"வெறுமனே விழித்திருப்பதை விடக் காலாகாலத்தில் படுப்பது நல்லதல்லவா?" - தானவேதன் கூறினார்.

"அப்படியானால் நீங்கள் போய்ப் படுத்துக் கொள்ளுங்கள், நாங்கள் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்கிறோம்."

"அப்படியானால் ஆகட்டும். இவர் பேசுவதற்கும் நிறைய விஷயமிருக்கும். நான் வருகிறேன்." எழுந்த தானவேதன் வழக்கமாகப் படுக்கும் அறையை நோக்கி நடந்தார்.

"சரி, சொல்ல வேண்டியதையெல்லாம் இப்பொழுதே சொல்லி விடுங்கள். இந்த விஷயத்தை எதற்காக நீடித்துக் கொண்டே போக வேண்டும்?" - ஜயந்தன் கூறினார்.

"என்னுடைய சகோதரிக்கு ஒரு மகன் இருக்கிறான். எங்கிருந்தோ அவன் ஒரு பெண்ணை அழைத்து வந்திருக்கிறான். திருமணம் செய்ததாகத்தான் அவன் சொன்னானாம். ஆனால், அது உண்மையாகத் தெரியவில்லை." - கோபாலன் நம்பூதிரி கூறினார்.

"அந்தப் பெண்ணுக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்?" - ஜயந்தன் கேட்டார்.

"அவள்தான் எல்லாவற்றுக்கும் மூலகாரணம். அவள் காலடி எடுத்து வைத்தபிறகுதான் இவ்வளவு முன்னேற்றமும்."

"இதில் எதுவும் அற்புதம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. சில பெண்களுக்கு அப்படிப்பட்ட அதிர்ஷ்டம் இருக்கலாம்."

"அது எப்படியும் இருந்துவிட்டுப் போகட்டும். அவள் ஒரு சாதாரணப் பெண் அல்ல. கேள்விப்பட்டவரையில் அவள் வேறு யாரோ என்றுதான் தோன்றுகிறது."

"புரியவில்லை?"

"அவள் ஒரு மனிதப் பிறவியே இல்லை என்று கூறுகிறேன்!"

இந்த வார்த்தையைக் கேட்டதும் ஜயந்தன் ஒருகணம் யோசனையில் ஆழ்ந்தார். தன்னுடைய வாழ்நாளில் இதுவரை அவர் இப்படியொரு சம்பவத்தைப் பற்றிக் கேள்விப்பட்டதே இல்லை. பழங்காலத்தில் இப்படியெல்லாம் நடந்திருக்கலாம். அப்படிப்பட்ட கதைகளை அவரும் கேட்டிருந்தார்.

"நீங்கள் குறிப்பிடும் இல்லம் எங்குள்ளது? இதுவரை அதைப் பற்றி எதுவும் சொல்லவில்லையே?"



"தென்பகுதியில் உள்ளது!"

"இன்னும் தெளிவாக..."

"ஒமல்லூர் கோயில் தெரியுமா உங்களுக்கு? அதற்கு அருகில்தான் குருக்ஷேத்ரமனை. அதாவது என்னுடைய பரம்பரை வீடு."

"அதிசயம்தான். இவ்வளவு நேரமும் நம்முடன் பேசிக் கொண்டிருந்த பெரியவர்தான் சென்னாங்கேரி மனையின் தானவேதன் நம்பூதிரி, அவர்தான் ஒமல்லூர்க் கோயிலின் சொந்தக்காரர்." - ஜயந்தன் தெரிவித்தார்.

கோபாலனது முகம் ஒருகணம் வியப்பை வெளிக்காட்டியது. தன்னுடைய பரம்பரை வீட்டிலிருந்து அவர் வெளியேறி இருபது வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அதன்பிறகு அவர் அந்த ஊர்ப்பக்கமே வந்ததில்லை. இருந்தாலும் தானவேதனை எங்கோ பார்த்த ஞாபகமாக இருக்கிறதே என்று தோன்றவே செய்தது. அதை வாய்விட்டுச் சொல்லவில்லை அவ்வளவுதான். அங்கு அவர் முன்னால், தன்னுடைய குடும்ப விஷயங்களை எதற்காகக் கூறவேண்டும் என்று பேசாமல் இருந்துவிட்டார். ஜயந்தன் எடுத்துக் கூறியவுடன் எல்லாமே நினைவுக்கு வந்தன.

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால் இரண்டு பேரும் ஒரே இடத்திலிருந்துதான் வந்திருக்கிறீர்கள். அதேபோல் வந்திருக்கிற விஷயமும் ஒன்றேதானோ என்றும் நினைக்கிறேன்."

கோபாலனின் முகம் கேள்விக் குறியை வரைந்தது. அவர் என்ன சொல்ல வருகிறார்?

"அவர் சொன்ன செய்தியைக் கேட்டால் இதைவிட அதிசயமாக உள்ளது. உங்களுடையது ஒரு சந்தேகம் மட்டும்தான். ஆனால், அவருடையது அப்படிப்பட்டதல்ல. பகவதியின் காவல்காரியாக உள்ள ஒரு சிலையில் இருந்த தண்டையைக் காணோம். அதாவது கற்சிலையில் பொறிக்கப்பட்டிருந்த தண்டை!"

ஜயந்தனிடம் குறுக்கிட்டு எதையும் பேசவேண்டாம் என்பதால் கோபாலன் மௌனமாக இருந்தார்.

ஜயந்தன் தொடர்ந்தார்: "ஆனால், விஷயம் சற்றுச்

சிக்கலானதுதான். இருக்கட்டும். நாளைக்கு நான் அதற்கு ஒரு வழி செய்கிறேன். கவலையே படவேண்டாம். நீங்கள் போய்ப் படுத்துக் கொள்ளுங்கள். (உட்புறம் திரும்பி) தேவகீ... இவருக்குப் படுக்கை போட்டுக் கொடுத்து விடு."

"சரி அண்ணா!" - உள்ளிருந்து குரல் கேட்டது.



## 21

கோபாலன் நம்பூதிரி படுக்கை அறைக்குள் நுழைந்தபோது அங்கே தேவகி அந்தர்ஜனம் நிற்பதைப் பார்த்தார். பார்க்கும்படி இருந்தாள். முதல் தடவை பார்த்தபோது தோன்றிய உணர்வுகள் மீண்டும் கிளர்ந்தெழுந்தன.

"இதற்கு முன்பு நீங்கள் இங்கெல்லாம் வந்ததில்லையென்று நினைக்கிறேன்." - அந்தர்ஜனம் கேட்டாள்.

"ஆமாம்... இதுதான் முதல் தடவை." - அவளது உடலிலிருந்து கண்களை அகற்றாமலே கோபாலன் பதில் அளித்தார்.

"பெயரைத் தெரிந்து கொள்ளலாமா?"

"தேவகி..."

"கல்யாணமாகவில்லையென்று நினைக்கிறேன்..."

"ஆமாம். இதுவரை இல்லை. இனிமேலும் இருக்காது."

அவளை முதல்தடவை பார்த்தபோதே கோபாலன் உணர்ச்சிச் சுழலில் சிக்கித் தவித்திருந்தார். இப்பொழுது அதுவும் தனிமையில், நெருக்கத்தில் பார்த்தபோது நிலை தடுமாறிப் போனார்.

"எதற்கு நின்றபடியே ... உட்காரலாமே!"

இந்த வார்த்தையைக் கேட்பதற்காகவே காத்திருந்தவள் மாதிரி சட்டென்று கட்டிலில் உட்கார்ந்தாள். எப்படிப்பட்ட முனிவரையும் தவத்திலிருந்து விலக்கித் தடுமாறச் செய்யும் இளமை பொருந்திய கட்டுடல் கொண்ட தேவகி அந்தர்ஜனம், அவரருகில் உட்கார்ந்தாள்.



"இப்படி ஒரு நபர் இங்கு இருக்கக் கூடுமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை" - இளஞ்சிரிப்புடன் நம்பூதிரி பேசினார்.

"ஒருவிதத்தில் சொன்னால் எல்லாம் அதிர்ஷ்டம் தான்!"

கோபாலன் ஏகபத்தினி விரதம் கொண்டிருப்பவரென்று சொல்ல முடியாது. குருக்ஷேத்ர மனையைச் சேர்ந்த பழைய நம்பூதிரிகளைப் போலவே இவரும் ஓர் உல்லாசப் பேர்வழிதான். எத்தனையோ வீடுகளுடன் அவருக்குத் தொடர்புகள் இருந்தன. ஆனால், எதையும் ரகசியமாக வைத்துக் கொள்வது கோபாலனின் கெட்டிக்காரத்தனம்.

மனைவிக்கு வயதாகிவிட்டதால் கோபாலன் அடிக்கடி தனது தேவைகளுக்காக அப்படிப்பட்டவர்களை அணுகுவதுண்டு. இருப்பினும் ஒரு நம்பூதிரியின் வீட்டில் இப்படி ஒரு நிகழ்ச்சி ஏற்படுவது இதுவே முதல் தடவை. தேவகி அந்தர்ஜனத்தின் உருண்டு திரண்ட உடலும், பித்துப் பிடிக்கவைக்கும் மார்பகங்களும் அவரை வினாடிக்கு வினாடி நிம்மதியிழக்க வைத்துக் கொண்டிருந்தன.

"விளக்கு இருக்கலாமில்லையா?" அவன் கேட்டாள்.

"விளக்கை அணைப்பதெல்லாம் அழகில்லாதவர்களிடம் மட்டும் தான். தேவகியைப் போன்ற அழகு ராணிகள் ஏன் இருட்டில் கிடந்து உழல வேண்டும்?"

தேவகியின் மனதிற்குள் இந்த வார்த்தைகள் பனிமழையாகப் பொழிந்தன. இதற்கு முன் அவள் எந்த ஆடவனிடமிருந்தும் இப்படிப்பட்ட புகழ்ச்சியைக் கேட்டதே இல்லை. அதனால் கோபாலனின் வார்த்தைகள், அதன் சரியான இலக்கை எட்டவே செய்தன.

"மார்பை மறைத்திருந்த மேல் முண்டு-ஐ (வேட்டியை) இழுத்து மூட முயன்றபோது, அது விபரீதமாக உருவிக் கீழ்ப்புறமாக விழுந்தது. 'கனவுகள் கூடுகட்டியிருப்பது இங்குதான்'- எப்பொழுதோ படித்த கவிதையின் வரிகள் கோபாலன் நம்பூதிரியின் ஞாபகத்தில் மிதந்து வந்தன.

தேவகி அந்தர்ஜனம் வெகுநாள் பழக்கமான ஒரு மனிதனிடம் நடந்து கொள்வது போலவே கோபாலனிடம் நடந்து கொண்டாள். விடியற்கருக்கலில் சேவல் கூவியெழுப்பியபோது அவள் கேட்டாள்

"இன்றைக்கே போய் விடுவீர்களா?"

அவளை அணைத்தபடியே கோபாலன் சொன்னார்: "இந்த முறை திரும்பிப் போனாலும் நான் அடிக்கடி வரவேண்டியிருக்கும்" - சொல்லியபடியே சட்டையின் கைப்பகுதியில் சுருட்டி வைத்திருந்த மடிப்பை அவிழ்த்து அதிலிருந்து இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளை தேவகியின் வலது கையில் வைத்து அழுத்தினார்.

"ஐயய்யோ ... இதெல்லாம் எதற்கு?" - அவள் வியப்புடன் கேட்டாள். "என்னுடைய பரிசாக ஒரு செட் துணி இங்கு இருக்கட்டுமே. வேலைக்காரியிடம் கொடுத்தனுப்பினால் வாங்கி வந்து தருவாள்!"

"அப்படியானால் நீங்கள் புறப்படுவதற்கு முன் என்னிடம் சொல்லிவிட்டுத்தான் போகவேண்டும்" - அவரது காதில் அவள் கிசுகிசுத்தாள்.

"கண்டிப்பாக! ஆனால், பகல் நேரத்தில் நாம் எப்படிச் சந்திக்க முடியும்?"

"அதற்கெல்லாம் நான் வழி செய்கிறேன்..."

காலையில் சூடான இட்லியும், ஆவிபறக்கும் காபியையும் ஆற்றி கோபாலனின் முன் பரிமாறியபோது முழுக்க அறிமுகமில்லாத ஒருத்தியைப் போலவே நடந்துகொண்டாள். தானவேதன் நம்பூதிரியும் அவளை அடிக்கடி பார்த்துக் கொண்டே இருந்தார். ஆனால், தேவகியோ அப்படி ஒருவர் அங்கு இருப்பதையே மறந்து விட்டிருந்தாள்!

முந்தைய இரவில் கூறியதையொட்டி காலையிலேயே ஜயந்தன் பிரஸ்னம் வைத்தார்.

விஷ்ணுதேவனின் நட்சத்திரத்தையும் கோபாலன் மறக்காமல் குறிப்பிட்டார். பிரஸ்னம் விரைவாக முன்னேறியது. சோழிகளை மூன்று முறை பரப்பினார் ஜயந்தன். எண்ணிக்கையைக் கூட்டினார். வகுத்தார். பின்பு கணித்தார். அதிலிருந்து அவர் எதையோ கண்டு பிடிக்க முயன்றார். இறுதியில் நெற்றியைச் சுளித்தபடி ஒரு சிலைபோல் உட்கார்ந்தார். இதில் தெரிகிறதை வைத்துப் பார்த்தால், உங்கள் மருமகன் திருமணம் செய்துள்ள பெண்ணின் பிறந்த



நட்சத்திரம் கிடைக்கவில்லையே?"

"ஒருவருக்குப் பிறந்த நாள் நட்சத்திரம் இல்லாமல் போய்விடுமா என்ன?"

"நானும் அதைப் பற்றித்தான் யோசித்தேன்."

"நட்சத்திரமில்லாத மனித ஜன்மமா?" - கோபாலன் வியப்புடன் கேட்டார்.

ஜயந்தன் மீண்டும் சோழிகளைப் பரப்பினார். ஒருகணம் எல்லாவற்றையும் மறந்துவிட்டது போல் ஒரு குழப்பம். ஜயந்தன் செயலிழந்து உட்கார்ந்தார். எப்படிக் கணக்கிட்டாலும் விடை வரவில்லை!

இதுவரை இந்த மாதிரியான ஒரு பிரஸ்னத் திணறல் இந்த விஸ்வமங்கலம் வீட்டிற்கு ஏற்பட்டதே இல்லை. சமீப காலமாகத்தான் எல்லாமே தாறுமாறாக நடக்கத் தொடங்கியுள்ளது. சட்டென்று ஒரு மின்னல் வெட்டுப் போல் மாந்திரீகக் கண்ணாடியில் பார்த்த காட்சி அவர் மனதில் எட்டிப் பாய்ந்தது.

நங்கேமாவைத் திருப்திப்படுத்த முயன்று அதற்காக சர்வலட்சணங்களும் பொருந்திய ஓர் இளைஞனைக் கண்டுபிடிக்க விழைந்த போதுதான் அதைப் பார்த்த ஞாபகம். அவனுடன் தேவலோகப் பெண்போல் ஒருத்தியும் இருந்தாளே, அவளது அழகைப் பற்றி நினைத்தபோது ஜயந்தனின் உடம்பு ஒரு முறை புல்லரித்தது. 'அவள் யார்? மோகினியா, தேவதையா?'

"உங்களது மருமகன் தோற்றத்தில் எப்படி இருப்பார் என்பதைச் சொல்லுங்களேன்" - ஜயந்தன் கேட்டார்.

"யார் பார்த்தாலும் ஆசைப்படும்படியான அழகு அவனுடையது. நல்ல உடம்பு!"

"அவரது மனைவி எப்படி?"

"நான் பார்த்ததில்லை. இருந்தாலும் பேரழகி என்றுதான் சொன்னார்கள்."

"அப்படியானால் ஒரு காரியம் செய்கிறேன். நான் மந்திரம் ஜபித்த ஒரு சரடைத் தருகிறேன். அதை எடுத்துக்கொண்டு போய் உங்களுடைய மருமகனது படுக்கையறையில், அவன் படுக்கும்

மெத்தையின் கீழ் வைத்து விடுங்கள். விஷயம் அவர்களுக்குத் தெரியவே கூடாது. ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கொடூரமான விஷமுள்ள ஒரு பாம்பை ஆவாஹனம் செய்த சரடைத்தான் உங்களிடம் கொடுத்தனுப்பப் போகிறேன். எனவே, எச்சரிக்கையைக் கவனத்தில் கொள்ள வேண்டும்."

"அப்படியானால் நான் இன்றே புறப்படலாமா?"

"கண்டிப்பாக! நீங்கள் இன்று இரவு உறங்க வேண்டியது உங்களது சகோதரி வீட்டில்தான்."

"இந்தச் சரடின் பலனைச் சொல்ல நான் மறுபடியும் இங்கு வரவேண்டுமில்லையா?"

"வரவேண்டும். உங்களுடைய மருமகனும், அந்தப் பெண்ணும் படுக்கையறைக்குள் நுழைந்து கதவைத் தாழிட்ட பிறகு இந்தச் சரடு பாம்பாக மாறிவிடும். அவள் சாதாரண மனிதப் பெண்ணாக இருந்தால் கடிபட்டு, விஷமேறிச் சாகவேண்டியதுதான். மாறாக, அவள் மனிதப் பெண் அல்லவென்றால் வேறு வழியைத்தான் பார்க்க வேண்டும்!"

"இதே சந்தேகத்தைத்தான் என் மனைவி என்னிடமும் கூறினாள்."

"அவரது சந்தேகம் என்ன?"

"அவள் மனிதப் பெண்ணே இல்லை என்பதுதான்!"

"நீங்கள் நினைப்பது மாதிரி இருக்க வழியில்லை. அப்படியே இருந்தாலும் கூட, இந்தப் பாம்பு அவளைச் சும்மா விடாது. அதற்கும் இந்தச்சரடில் பலம் சேர்த்து விடுகிறேனே" - சொல்லி விட்டு ஜயந்தன் தன்னுடைய பழைய குடும்ப வீட்டிற்குச் சென்றார்.

அதன் தெற்குப் புறமிருந்த பாம்புக் கோயிலுக்குள் ஜயந்தன் புகுந்தார். அங்கிருந்த மிகவும் கொடிய விஷமுள்ள ஒரு பாம்பை மந்திரத்தின் மூலம் சரடில் ஆவாஹம் செய்து எடுத்துக் கொண்டார். அந்தச் சரடை மரப்பட்டையால் மூடி, அதை ஒரு சிறிய செப்பிற்குள் போட்டு அடைத்தார்.

"இதற்குள் எல்லாவற்றையும் சரிசெய்து வைத்திருக்கிறேன். எந்தக் காரணம் கொண்டும் இந்தச் செப்பிற்குள் இருப்பதைக் கையால் தொடக்கூடாது. செப்புடன் அப்படியே அவர்களின் படுக்கைக்கு



அடியில் வைத்தால் போதும்" - என்றபடி ஒரு சதுரமான பொடி டப்பாவை வெற்றிலையில் வைத்து கோபாலனிடம் கொடுத்தார் ஜயந்தன். "அவசரம் ஒன்றுமில்லை. மதியச் சாப்பாட்டிற்குப் பிறகு புறப்பட்டாலே போதும். ராத்திரிக்குள் போய்ச் சேர்ந்து விடலாம்" - சொல்லிவிட்டு வெளியே போனார்.

தானவேதன் அப்பொழுது குளிக்கப் போயிருந்தார். ஜயந்தன் வெளியேறியதும் தேவகி அந்தர்ஜனம் அங்கு வந்தாள்.

"சாப்பாடு தயாராகிவிட்டது. உடனே வரலாம்." - தேவகி அழைப்பு விடுத்தாள்.

"இதோ வந்துவிட்டேன்" என்று எழுந்தார் கோபாலன்.

சாப்பிட்டு முடித்தபிறகு தேவகி கூறினாள்: "அண்ணா சொன்னதையெல்லாம் நானும் கேட்டேன். அதனால் அந்த வேலை முடியும் வரை நீங்கள் அசுத்தமாக வேண்டாம்."

'அதுவும் சரிதான்' என்று கோபாலனுக்கும் தோன்றியது. "அங்கு போன பிறகு விஷயமெல்லாம் நல்லபடியாக நடந்து விட்டால், விவரத்தைத் தெரியப்படுத்த நான் திரும்பி வருவேன். விவரம் சொல்ல வேண்டுமே. அதுதானே முறை."

"மறக்காமல் வரவேண்டும்!"

ஏறத்தாழ அதே சமயத்தில் மாதவன் குட்டி மேனோனின் வீட்டில் சூரியமித்ரன் நம்பூதிரி தேவப்பிரஸ்னம் நடத்திக் கொண்டிருந்தார். இந்த வேலையில் அவருக்கு உதவுவதற்காக இரண்டு மூன்று ஜோதிடர்களும் வந்திருந்தனர். ஓமல்லூர்க் கோயிலுக்கு அருகே இதையெல்லாம் செய்தால் வேடிக்கை பார்க்கும் நோக்கத்தில் ஆட்கள் கூடிவிடுவார்கள் என்பதால், இது மாதவன் குட்டி மேனோனின் வீட்டிலேயே நடந்தது. மட்டுமன்றி 'கோயிலில் தேவி இல்லை என்பதைப் பொதுமக்களுக்கு தெரியப்படுத்த வேண்டாமே' என்பதும் மாதவன் குட்டி மேனோனின் எண்ணம்.

காரியஸ்தர் ராமன்நாயர், வீட்டிற்குள் நுழைந்தவுடன் ஒன்று விடாமல் எல்லா விவரங்களையும் தெரியப்படுத்தினார். செய்தியைக் கேள்விப்பட்டவுடன், விஷ்ணு என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தான்.

சூரியமித்ரன் நம்பூதிரி மந்திரதந்திர வித்தைகளில் கெட்டிக்காரர் என்பதை விஷ்ணுவும் கேள்விப்பட்டிருந்தான். பிரஸ்னம் பார்த்துப் பார்த்து, கடைசியில் அது தன் வீட்டைக் காட்டிக் கொடுத்து விடுமோ என்று பயந்தான் விஷ்ணு.

"ராமன் நாயரே இங்கு வாருங்கள்."

அவரும் வந்தார். விஷ்ணு இப்பொழுது பழைய மாதிரியெல்லாம் இல்லை. பேச்சிலும், பழக்க வழக்கங்களிலும் அதிகாரமேறியிருந்தது. கதகளிப் பைத்தியமாக இருந்த பழைய இளைஞனுக்குப் பதிலாக, முகத்தில் புதிய பொலிவும், ஒளியும் கூடியிருந்தது. அது மட்டுமின்றி அந்தப் பகுதியிலேயே எல்லோரையும் விட விஷ்ணுதான் செல்வச் செழிப்பில் முதலிடம் பெற்றிருந்தான்.

"என்ன திருமேனி?" - காரியஸ்தர் ராமன் நாயர் கேட்டார்.

"மாதவன் குட்டி மேனோனின் மாளிகையில் நடக்கும் தேவப்பிரஸ்னத்தை நான் பார்க்க வருவதாகச் சொல்லுங்கள்" - விஷ்ணுதேவன் கூறினான்.

இதைக் கேட்டு வியப்படைந்த ராமன் நாயர் அவனிடம் கேட்டார்: "நீங்கள் ஏன் அங்கே போக வேண்டும்? வேண்டுமானால் தேவப் பிரஸ்தனத்தை இங்கேயே வரவழைத்து விடலாமே?"

"வேண்டாம்.... வேண்டாம். அது அங்கேயே நடக்கட்டும். நான் வருவதை மட்டும் அங்கு சென்று சொன்னால் போதும்."

"சரி, சொல்லி விடுகிறேன்!"

உடனே ராமன் நாயர் புறப்பட்டார். அங்கு பிரஸ்னம் வெகு மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. நாயர், தான் வந்த காரியத்தை மேனோனிடம் தெரியப்படுத்தினார்.

"என்ன ... திருமேனி இங்கு வரப் போகிறாரா? அது இந்த வீட்டின் நல்ல காலம்தான்" - மாதவன் குட்டி மேனோன் கூறினார்.

"ஒரு விண்ணப்பம். ஒரு காரியத்தை என்னிடம் அறிந்து வரச் சொன்னார்."

"கேளுங்கள்."

"எதுவரை தெரிந்திருக்கிறதென்று கேட்டு வரச் சொன்னார்."



"தேவி கோயிலை விட்டு எங்கும் செல்லவில்லை. ஏறத்தாழ எல்லாமே தெரிந்த மாதிரிதான்."

கேட்ட விவரத்தை ராமன் நாயர் உடனே ஓடி வந்து விஷ்ணுவிடம் தெரிவித்தார்.

"அப்படியானால் நாம் உடனே அங்கு போக வேண்டியதுதான்" - ராமன்நாயரிடம் பேசிவிட்டு விஷ்ணுதேவன் வீட்டிற்குள் நுழைந்தான்.

உடை மாற்றி, சரிகை போட்ட உத்தரீயத்தை மார்பில் போட்டபடி விஷ்ணு புறப்பட்டபோது, தேவப்ரியா எதிரில் வந்து நின்றாள்.

"எல்லாவற்றையும் நானும் கேட்டேன். இந்தாருங்கள், இதைக் கையில் வைத்திருங்கள்." - அவள் எதையோ அவனது கையில் வைத்தாள்.



## 22

அவள் தந்தது ஒரு மோதிரம். அதை விஷ்ணு தன் கை விரலில் போட்டுக் கொண்டான். வெள்ளைக்கல் பதித்த அந்த மோதிரம் பழங்காலப் பாணியில் இருந்தது. மேற்புறமாக ஒரு சிங்கமுகம் செதுக்கப்பட்டிருந்தது. அதன் வாய்ப்பகுதியில் அந்த வெள்ளைக்கல் அழகாகப் பொருத்தி இருந்தது.

"இது எதற்காக?" - விஷ்ணு கேட்டான்.

"அங்கு சென்ற பிறகு அது உங்களுக்குப் புரியும். நல்லதற்குத்தான். ஒரு விஷயம் இந்த மோதிரத்தை மற்றவர்கள் கவனிக்காதபடி வைத்திருங்கள்" - தேவப்ரியா நினைவூட்டினாள்.

அதன் காரணத்தை விஷ்ணுதேவன் கேட்கவில்லை. பிறகு காரியஸ்தர் ராமன் நாயருடன் படி இறங்கினான். மாதவன் குட்டி மேனோனின் வீட்டை நெருங்கியபோது, அவர் ஓடி வந்து

வரவேற்றார். விஷ்ணுதேவனின் மதிப்பு இப்பொழுது உயர்ந்து விட்டிருந்ததால், இதெல்லாம் சாதாரண விஷயமாகி விட்டிருந்தன.

"நீங்கள் இங்கு வருவீர்கள் என்று நான் எதிர் பார்க்கவே இல்லை!" மேனோன் மகிழ்ச்சியுடன் கூறினார்.

தனக்கு முன்பாக நின்று கொண்டிருக்கும் விஷ்ணுதேவன், பழைய, சாதாரண ஆளல்ல. கதகளி... கதகளி என்று அலைந்த இளைஞன் அல்ல. இப்போது அவன் ஒரு கௌரவமான மனிதன்.

"வர வேண்டிய இடத்திற்கு வராமல் இருக்க முடியுமா?" - கேட்டபடியே தனக்காகப் போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான்.

"யார் இவர்?" - சற்று நேரம் கழித்து அங்கு வந்து சேர்ந்த சூரியமித்ரன் நம்பூதிரிப்பாடு, விஷ்ணுவைப் பார்த்தபடியே கேட்டார். விஷ்ணு அவரைப் பார்த்தவுடன் எழுந்து நின்று வணக்கம் செலுத்தினான்.

"இவர் குருக்ஷேத்ர மனையின் திருமேனி" - மாதவன் குட்டி மேனோன் அறிமுகப்படுத்தினார்.

"பெயர்...?"

"விஷ்ணுதேவன்" - விஷ்ணுவே பதிலளித்தான்.

"உங்கள் மனைவியைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். தேவப்பிரஸ்னத்தைப் பார்க்க வந்திருக்கிறீர்களா?"

"ஆமாம். என்னதான் நடக்கிறதென்று பார்க்கலாமே என்றுதான்" - விஷ்ணு சிரித்தபடியே கூறினான்.

தேவப்பிரஸ்னத்தின்போது சூரியமித்ரன் நம்பூதிரிக்கு உதவுவதற்காக நாராயணன் நம்பூதிரியும் வந்திருந்தார். அவருக்கும் விஷ்ணுவின் வயதுதான்.

"ஆரம்பிக்கலாமா?" - சூரியமித்ரன் கேட்டதும் பிரஸ்னம் ஆரம்பமானது. சுலோகங்களைச் சொல்லி, மந்திரங்களை உச்சரித்தனர். எல்லோரும் பிரஸ்னத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தனர். நேரம் கடந்துபோனது. சூரியமித்ரன் நம்பூதிரியின் நெற்றியில் சுளிவுகள் பிறந்தன. கண்கள் ஒடுங்கிச் சுருங்கின. அவரது கழுத்தில் வியர்வை முத்துக்கள் பூத்தன.



"தேவி இங்கு இருக்கிறார் என்பதில் சந்தேகமே இல்லை" - அவர் கூறினார்.

"எங்கே இருக்கிறார் என்பதைத் துல்லியமாகக் கூற முடியுமா?" - மாதவன் குட்டி கேட்டார்.

"அதுதான் இதிலுள்ள குழப்பம். தேவி இங்கு இருக்கிறாரா என்றால் இருக்கிறார். ஆனால், கருவறையில் இல்லை. இந்தக் கோயிலுக்குள் வேறு எங்கோ இருக்கிறார்!"

"தேவி கருவறைக்குள்தானே இருப்பார்?" - அது வரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களில் ஒருவரான கோவிந்தன் ஆசான் கேட்டார். கோவிந்தன் ஆசான் மந்திர தந்திரங்களில் தேர்ந்தவர். ஆனால், நம்பூதிரி அல்ல. வேதங்களையும், புராணங்களையும் கரைத்துக் குடித்தவர். நம்பூதிரியாக இல்லாததால், அவரைப் பெரும்பாலும் இப்படிப்பட்ட பிரஸ்னங்களுக்கு அழைப்பதில்லை.

"உங்கள் பெயர்?" - சூரியமித்ரன் கேட்டார்.

"கோவிந்தன்."

"உங்களைக் கோயிலில் முதல் நாளன்று பார்த்த ஞாபகம், இல்லையா?"

"ஆமாம். நான் அன்றும் வந்திருந்தேன்."

"கோவிந்தன், கேளுங்கள். ஒரே குழப்பமாகத் தெரிகிறது. சாதாரணமாக என் மனதில் எல்லாமே தெளிவாகப் புலப்படும். இங்கு வந்ததிலிருந்து தென்பட்ட விஷயங்களை வைத்துப் பார்த்தால், தேவியின் சக்தி இங்கு உள்ளதாகவே தெரிகிறது. ஆனால், நெருங்க நெருங்கப் பிடி கிடைக்காமல், எங்கோ நழுவிக் கொண்டே இருப்பது போல் உள்ளது."

"அடியேனுக்குத் தோன்றுவதைச் சொல்லலாமா?" - கோவிந்தனாசான் கேட்டார்.

"தாராளமாகச் சொல்லுங்கள். வெற்றியா - தோல்வியா, நீயா - நானா என்பதெல்லாம் இதில் கிடையவே கிடையாது!"

"இந்த லட்சணங்களை வைத்துக் கொண்டு நானும் கொஞ்சம் முயற்சி செய்தேன்..."

"என்ன தெரிந்தது?"

அதே சமயம் விஷ்ணுவிற்குத் தெரியாமலேயே அவன் அணிந்திருந்த மோதிரத்தின் மீதிருந்த இடது கை சற்று விலகி மாறியது. அதன் சன்னமான ஒளி கோவிந்தனாசானின் மார்பில் ஒரு கணம் பட்டுப் பதிந்து மறைந்தது.

தொண்டை வரை வந்த விஷயத்தை, சட்டென்று அப்படியே மனதிற்குள் யாரோ அழித்துவிட்டது போல் தோன்றியது. கோவிந்தன் தடுமாறினார். பின்னர், ஓமல்லூர் கோயிலின் தேவியைத் தன் மனதிற்குள் கொண்டுவர முயன்றார். ஆனால், அது மீண்டும் மீண்டும் பனிமூட்டதிற்குள் சிக்கியது போல் தெளிவற்றுப் போனது.

மாந்திரீகத்தில் தேர்ந்த சூரியமித்ரன் நம்பூதிரிப்பாடு தன்னுடைய குலதெய்வமான சூரியதேவனை மனதில் தியானித்தார்.

'என்னுடைய பரதெய்வங்களே! இதில் நான் தோல்வியடைந்தால் என்னுடைய தலையை ஹோமாக்கினியில் ஹோமித்து விடுவேன். இதைச் சரியாக விளக்கிச் சொல்லாமல், நான் எப்படி இங்கிருந்து திரும்பிச் செல்வது?' - அவர் மனமுருகிப் பிரார்த்தித்தார். கண்களை மூடி, ஆதித்யனைத் தியானித்தார்.

நிமிடங்களுக்குள் சூரியமித்ரனின் குலதெய்வமான ஆதித்ய பகவான், அவருக்கு முன்பாகத் தோன்றினார். அந்த நேரத்தில் சூரியமித்ரன் நம்பூதிரிப்பாடின் முகத்தில் பிரத்தியேகமான சோபை ஒன்று படர்வதையும் அங்கிருந்தவர்கள் கண்டனர். சூரியபகவானிடமிருந்து திருமேனிக்கு அருள் கிடைத்ததும், அது ஒரு நினைப்பாக, கணிப்பாக அவர் மனதில் பதிந்தது.

'நீ தேடும் நபர் இங்கேயே இருக்கிறார். ஆனால், அவர் இருக்க வேண்டிய இடத்தில் இல்லை. அப்படி இடம் மாறி நிற்பதற்கும் ஒரு காரணம் உள்ளது. அதைக் கவனித்தால் உடனே புரியும்' - சட்டென்று அந்த உருவம் மறைந்தது.

தியானத்திலிருந்து விழித்த சூரியமித்ரன் நம்பூதிரி கூறினார். "தேவி இங்கேயேதான் இருக்கிறார். எங்கும் போய்விடவில்லை. ஆனால், அவர் இருக்கவேண்டிய இடத்தில் இல்லை. அவ்வளவுதான். இதற்கு வேறு சில காரணங்களும் உண்டு என்பது தான் விஷயம்."

"என்ன திருமேனி, இப்படிச் சொல்கிறீர்கள்?" - மாதவன் குட்டி



30233
A66157

மேனோன் கேட்டார்.

"இனி இதற்குமேல் இன்றைக்கு வேண்டாம். என்னால் முடியாது."

எல்லோரும் எழுந்து கலைந்தார்கள்.

"இன்றைக்கு நமது திருமேனிக்கான உணவு குருக்ஷேத்ரமனையினுடையதாக இருக்கலாமில்லையா?" - மாதவன் குட்டி மேனோன் கேட்டார்.

"அதற்கென்ன தடை? அப்படியே செய்துவிட்டால் போகிறது." விஷ்ணு பதிலளித்தான்.

சூரியமித்ரன் நம்பூதிரிப்பாடும் விஷ்ணுதேவனும் ஒன்றாக இல்லத்தை நோக்கி நடந்தனர். காரியஸ்தர் ராமன்நாயர் பின்புறமாகத் தொடர்ந்தார். வழியில் அவர்கள் யாரும் எதுவும் பேசவில்லை. வீட்டை அடைந்தபோது உணவு தயாராக இருந்தது.

விஷ்ணுதேவனுடன் தனக்கு முன்பின் பழக்கமில்லாத ஒருவரும் தெருவாசலைத் தாண்டி வருவதை தேவப்ரியா பார்த்தாள். அந்த முதல் பார்வையிலேயே அவளுக்கு சூரியமித்ரன் நம்பூதிரிப்பாடின் திறமை புலப்பட்டது. ஒரு மெல்லிய நடுக்கம் அவளுள் பரவவும் செய்தது.

"வீட்டில் யாரெல்லாம் இருக்கிறார்கள்?" - வெளித்திண்ணையில் உட்கார்ந்தபடி சூரியமித்ரன் கேட்டார்.

"அம்மாவும், மனைவியும்..."

"உங்களது கல்யாணம் எங்கு நடந்தது?"

"வடக்குப் பகுதியில்."

"அப்பாவின் வீடு?"

"அவரும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்தான்."

"அம்மா இங்குதானே இருக்கிறார்?"

"இருக்கிறாரே... கூப்பிடட்டுமா? அம்மா... அம்மா..." - விஷ்ணு தேவன் கூப்பிட்டான்.

சூரியமித்ரன் நம்பூதிரிப்பாட்டைத் தெரிந்துவைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் அவர் வந்தார். நிலை வாசற்படியருகே வந்து உட்புறமாக ஒதுங்கி நின்றார்.

"உங்கள் மனை எதுவென்று தெரிந்துகொள்ளலாமா?" - அம்மா கேட்டடார்.

"சூரியமனை என்பார்கள். வடபகுதியில்..."

"ரொம்பவும் ஆசாரமான மனையென்று கேள்விப்பட்டிருக்கிறேன்."

"உண்மைதான்!"

"அப்படியானால் இந்த இடத்தில் உள்ள விஷயங்களையெல்லாம் தெரிந்துகொள்வதில் சிக்கல் எதுவும் இருக்காது."

"ஏதோ கொஞ்சம் தெரிந்தது. இன்னும் கொஞ்சம் தெரிய வேண்டி உள்ளது."

"தேவி, கோயிலில் இல்லையென்று கேள்விப்பட்டேன்!"

"அப்படியொன்றுமில்லை. தேவி இருக்கிறார். அவரது இருப்பிடம் மட்டும் மாறியுள்ளது."

"இருப்பிடம் மாறுவதா? அது எப்படி?"

"அதற்கு என்னென்னவோ காரணங்கள் இருப்பதாகத் தோன்றுகிறது. எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள முடியும் என்றுதான் நினைக்கிறேன்."

உணவிற்குப் பிறகு திருமேனி ஓய்வெடுத்தார். கண் விழித்தபோது மாலை நேரமாகி விட்டிருந்தது.

"நாம் ஒரு தடவை கோயில் வரை போய்விட்டு வரலாமா?"

"தாராளமாக" - விஷ்ணு பதில் அளித்தான்.

இருவரும் கிளம்பினர். வழியில் உள்ள குளத்திலேயே குளித்துவிட்டு, பின்னர் கோயிலை அடைந்தனர்.

கருவறையின் இருபுறமும் உள்ள கற்சிலைகளை திருமேனி ஆர்வத்துடன் பார்த்தார்.

"இதைப் போன்ற புராதனமான கோயில்களில் மட்டும்தான் இப்படிப்பட்ட சிலைகளைப் பார்க்க முடியும். சிலதெல்லாம் சுயம்பு என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஒருவேளை இதெல்லாம்கூட அப்படி இருக்கலாம்." - பேச்சிற்கு நடுவே யதேச்சையாக வலது புறமிருந்த சிலையின் காலைத் திருமேனி பார்த்தார். அதிலிருந்த தண்டை காணாமல் போயிருந்தது!

"இதென்ன அதிசயம்! அப்படியானால் நான் கேள்விப்பட்டது



சரிதான்" திருமேனி வியப்புடன் கூவினார்.

விஷ்ணு மௌனமாக இருந்தான்.

"நாம் புறப்படலாமா?" - திருமேனி கோயிலின் பக்கமாகத் திரும்பி நின்று தொழுதபோது, வலது புறமிருந்த சிலைக்கு நேராக, தான் நின்று கொண்டிருப்பதை உணர்ந்தார்.

"தேவி" - திருமேனி தம்மையும் மறந்து கூவினார்.

பரமபக்தனும், பிரம்மச்சாரியுமான சூரியமித்ரன் நம்பூதிரியின் முன்னால், துவாரபாலிகையின் வேடத்தில் நின்று கொண்டிருக்க தேவியால் முடியவில்லை!



## 23

'என்னது! - ஒரு விநாடி தம் கண்களில் தட்டுப்பட்டது உண்மையா?' - சூரியமித்ரன் நம்பூதிரி ஆச்சரியப்பட்டார். 'பிரமையா, உண்மையா?'

தனக்கு ஒருபோதும் தவறு நேர்ந்ததில்லை. இதுவரை தான் யாருக்கும் கெடுதல் செய்ததில்லை. ஆனால், அதர்மத்தை சில சமயம் அதர்மத்தாலேயே அழிக்க நேர்ந்துள்ளது. அதுவும் கீதையில் சொல்லியிருப்பதுதானே அப்படிப்பட்ட தனக்கு முன்பாக மாயாஜாலம் நடந்ததா என்ன? இல்லை. நிச்சயம் அது தேவியேதான். அதில் சந்தேகமே இல்லை!

உடனே, மற்றொரு வலுவான சந்தேகமும் தோன்றியது. இருப்பினும், அதை மனதின் ஒருபுறமாக ஒதுக்கி வைத்துவிட்டு குருக்ஷேத்ர மனையை நோக்கி விஷ்ணுவுடன் நடந்தார். அவர் மௌனமாக நடந்து கொண்டிருப்பதைப் பார்த்த விஷ்ணு கேட்டான்: "என்ன திருமேனி, ஏதோ யோசனையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறதே?"

"உண்மைதான். நானும் அதையேதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்" - திருமேனி சாதுரியமாகப் பதிலளித்தார்.

"மனத்தை அலைக்கழிக்கும் விஷயம் ஏதாவதா?"

"சற்று முன்பு சட்டென்று ஒன்று தோன்றியது. ஆனால், வெறும் தோற்றம் மட்டுமல்ல..." - வார்த்தையை முடிக்காமல் சூனியவெளியையே உற்றுப் பார்த்தார். அவரையே பார்த்துக் கொண்டிருந்த விஷ்ணு, அவர் வாயிலிருந்தே மீதமுள்ள வார்த்தைகளும் வெளிவரட்டும் என்று கருதினான்.

"கோயிலில் துவாரபாலிகைகள் இருக்கிறார்களே... அதில் ஒன்று தேவி என்பதுதான் என்னுடைய சந்தேகம். சந்தேகம் என்று கூடச் சொல்ல முடியாது. உறுதியாக அதுதான் தேவி. என்னுடைய கணிப்புகள் ஒருபோதும் தவறுவதே இல்லை" - சூரியமித்ரன் கூறினார்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விஷ்ணு மௌனமாக அவருடன் நடந்தான்.

"கருவறையில் தேவி இல்லை. அது தெளிவான விஷயம். என்ன காரணத்திற்காகத் தேவி கருவறையிலிருந்து இடம் மாறினார்? நினைத்துப் பார்த்தால் வேடிக்கையாகத் தோன்றும் இல்லையா?" - பேசியபடி அவர் விஷ்ணுவின் முகத்தை ஊன்றிக் கவனித்தார்.

விஷ்ணு அப்பொழுதும் மௌனமாகவே இருந்தான்.

அவர்களுடைய பேச்சை உட்புறமிருந்த ஜன்னலின் அருகில் நின்றபடி தேவப்ரியா கேட்டாள். அவளது இதயத்துடிப்பின் வேகம் சட்டென்று கூடியது. அதற்கும் ஒரு காரணமிருந்தது.

வெகுநாட்களுக்கு முன், மலபாரைச் சேர்ந்த சின்னஞ்சிறிய கிராமம் ஒன்றில் ஒரு சம்பவம் நடைபெற்றது. அங்கும் ஒரு தேவி கோயில். அபரிமிதமான சக்தியுள்ள கோயில் அது. அங்கும் தேவியின் காவல்காரர்களாக இரண்டு மோகினிகளும், இரண்டு சிங்கங்களும் இருந்தனர். கோயிலுக்கு வெளியே பரந்து விரிந்திருக்கும் ஆலமரத் தடியில் நாகதேவதைகள் பிரதிஷ்டையாகி இருந்தனர். காட்டுயானைகள்கூட பௌர்ணமி இரவுகளில் அந்தக் கோயிலுக்கு வந்து தேவியை வணங்கிச் செல்வதுண்டு.

ஒருநாள் தேவி நீராடச் சென்றபோது துணையாக ஒரு மோகினியும் போனாள். மற்றொருத்தி கோயிலிலேயே காவல்



இருந்தாள். அப்பொழுது அந்த வழியாக வந்த ஓர் இளைஞனை, அவன் எப்படிப் பட்டவன் என்பது தெரியாமல் வசீகரிக்க முற்பட்டாள். எனவே, மிகவும் அழகான பெண்ணாக வடிவமெடுத்து, அவனுக்கு முன்பாகக் காட்சியளித்தாள். அவனிடம் காதல் வசனங்களைப் பேசினாள்.

ஆனால், அந்த இளைஞன் வல்லமை வாய்ந்த ஒரு மாந்திரீகனாக இருந்தான். அந்த உருவத்தைப் பார்த்ததுமே அது ஒரு மோகினி என்பதைப் புரிந்துகொண்டான். தன்னை வசீகரித்து உடலுறவு கொண்டு, கொன்றுவிடுவதற்காகத்தான் அது வழியில் நிற்கிறதென்ற தவறான முடிவுக்கு வந்தான். எனவே, அவன் அந்த மோகினியை ஒரு சிமிழுக்குள் ஆவாஹம் செய்து அடக்கி, அந்தச் செப்பைக் கோயில் குளத்திற்குள் வீசியெறிந்து விட்டுச் சென்று விட்டான்.

குளித்துவிட்டு வந்த தேவி தன்னுடைய காவல்காரியைக் காணாததால், ஒரு விநாடி யோசித்து, இறுதியில் நடந்தது என்னவென்று தெரிந்துகொண்டார்.

தன் மனம் போனபடி நடந்து அடைபட்ட அவளுக்கு தேவி விமோசனமே தரவில்லை. இன்றுகூட அந்த மோகினி இடிந்துபோன கோயில் குளத்தின், அடியில் ஏதோ ஒரு மூலையில்தான் கிடக்கிறாள். இது தேவப்ரியாவுக்கு நன்றாகவே தெரியும். அவளது மனம் துணுக்குற்றது. எனவே, மந்திர தந்திரங்களில் தேர்ந்த சூரியமித்ரன் நம்பூதிரி தன்னை அடையாளம் தெரிந்துகொண்டால் என்ன செய்வாரோ, எப்படி நடந்து கொள்வாரோ என்று பயந்தாள்.

விஸ்வமங்கலத்து ஜயந்தன் நம்பூதிரி துர்மந்திரவாதியாக இருந்ததால், தேவப்ரியாவால் அவரை எதிர்த்து நின்று செயல்பட முடிந்தது. அவரது பிரஸ்னப் பலகையைப் பிடுங்கி வீசியெறிவது அவளுக்குச் சுலபமாக இருந்தது!

ஆனால், சூரியமித்ரன் நம்பூதிரிப்பாடு அப்படிப்பட்டவரல்ல. அவரை எதிர்த்து நிற்பதென்பது முடியாத காரியம். இதை தேவியிடம் முறையிட்டும் எந்தவிதப் பயனுமில்லை. தேவி, சூரியமித்ரன் நம்பூதிரிக்கு எதிராக எதையும் செய்யமாட்டார். பக்தர்களைக் கைவிடாதவராயிற்றே தேவி. போதாக்குறைக்கு அவர் சூரிய

அம்சத்தில் பிறந்தவரும் கூட.

தன்னைவிட எவ்வளவோ உயர்ந்தவர் சூரியமித்ரன். தேவ அம்சத்துடன் பிறந்தவர். எனவே தேவியிடம் அபயம் கேட்பதில் அர்த்தமில்லை. தான் செய்திருக்கும் தவறு தன்னுடைய சுயநலத்தினால் நேர்ந்துள்ளது. இதனால், கோயிலின் ஒழுங்கு முறைகள் தாறுமாறாகக் குழம்பி விட்டிருக்கின்றன. இதையெல்லாம் கண்டுபிடித்து வருவதற்காகப் புறப்பட்ட தானவேதன் நம்பூதிரியும் இன்னும் திரும்பி வந்து சேரவில்லை.

"கொஞ்சம் உள்ளே வருகிறீர்களா?" - தேவப்ரியா, விஷ்ணு தேவனை உள்ளிருந்தபடியே அழைத்தாள்.

"இதோ வருகிறேன்!" என்றபடி தனது வெற்றிலைப் பெட்டியை திருமேனியை நோக்கி நகர்த்தி வைத்துவிட்டு உட்புறம் சென்றான் விஷ்ணு.

சூரியமித்ரன் பொறுமையாக உட்கார்ந்து வெற்றிலை பாக்குப் போடட்டும் என்று நினைத்துத்தான் வெற்றிலைச் செல்லத்தை அவர் பக்கமாகத் தள்ளி வைத்துவிட்டுப் போனான். எவ்வளவுக்கு எவ்வளவு காலம் நீண்டு கிடைக்கிறதோ, அவ்வளவுக்கு அவரைக் காக்க வைக்கலாம். அவரும் அதைத் திறந்து துளிரான துளசி வெற்றிலையைக் கையிலெடுத்துக் கிள்ளிப் போடத் தொடங்கினார். திருமேனி வெற்றிலை போடுவதில் கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டார் என்பதை அறிந்த தேவப்ரியா, விஷ்ணுவைப் படுக்கையறைக்கு அழைத்துச் சென்றாள்.

"திருமேனி சொன்னதைக் கவனித்தீர்களா?" - கேட்டாள்.

"கவனித்தேன். புரிந்தது" - விஷ்ணு பதில் பேசினான்.

"அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?"

"இதுவரை ஒன்றும் புலப்படவில்லை!"

"அப்படியானால் நான் ஒன்று சொல்லட்டுமா?" - அவள் அவனுடைய கையின் மீது தன் கையை வைத்தபடியே பேசினாள். "இவர் சாதாரணமானவரல்ல. எல்லா வகையிலும் கெட்டிக்காரர். அதனால் உண்மை என்ன என்பதைச் சட்டென்று கண்டுபிடித்து விடுவார். எனவே, எச்சரிக்கையாக இருக்க வேண்டும்."

"உண்மைதான்..."



"அப்படியானால் நான் சொல்கிறபடி நடந்து கொள்ளுங்கள்" - தேவப்ரியா அவனுக்கு எதிரில் உட்கார்ந்தபடி பேசினாள்.

"அவர் அங்கே தனியே உட்கார்ந்து அலுப்படைய மாட்டாரா? நான் போகிறேன். இதையெல்லாம் நாம் இரவில் பேசிக் கொள்ளலாம்."

"கூடாது. அவர் ஒரு முடிவெடுப்பதற்குள் நீங்கள் அவரிடம் இதைப் பற்றிப் பேச வேண்டும்!"

"சரி. சீக்கிரம் சொல்..."

சூரியமித்ரன் நம்பூதிரி தனியாக உட்கார்ந்திருப்பதைக் கண்ட சரஸ்வதி அந்தர்ஜனம் வாசற்படியின் உட்புறம் வந்து நின்று, "பேச்சுத் துணைக்குக் கூட ஆளில்லை போல் தோன்றுகிறதே!" என்றார்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நிதானமாக உட்கார்ந்து வெற்றிலை போடலாமே என்றுதான்..."

"வேறு வெற்றிலை தரட்டுமா?"

"இதுவே போதும். இது இங்கேயே விளைவதா?"

"ஆமாம். அதோ அந்தக் கொடியின் வெற்றிலைதான்" - சற்றுத் தூரத்தில் முருங்கை மரத்தின் மேல் படர்ந்திருந்த கொடியைச் சுட்டிக் காட்டினார்.

பற்களால் நன்கு அரைபட்ட வெற்றிலைச் சாந்துடன், இனிப்பு கலந்த வாசனைப் புகையிலையை இரண்டு விரல்களால் எடுத்து வாயில் போட்டார். வெற்றிலை போடுவதில் நம்பூதிரி படிப்படியாக முன்னேறிக் கொண்டிருந்தார்.

"நீங்கள் இந்த ஊருக்கு வந்ததில் ஏதாவது விசேஷம் உண்டா? தவறாக நினைக்கவில்லையென்றால் சொல்லுங்கள்!"

"அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். என்னுடைய வாழ்க்கையிலேயே இதுவரை இப்படியொரு சம்பவத்தை நான் சந்திக்க நேர்ந்ததில்லை. உண்மையாகச் சொல்வதனால் நான் மிகவும் குழம்பியிருக்கிறேன்" - திருமேனி வாயைச் சரித்து பதில் சொல்லத் தொடங்கினார்.

"என்னென்னமோ சொல்கிறீர்கள். இந்த ஊரிலேயே இருக்கும் எனக்கும் எதுவுமே புரியவில்லை. என் பையன் இதையெல்லாம் என்னிடம் வந்து சொல்வதுமில்லை."

திருமேனி தனக்குத் தெரிந்த விவரங்களை விளக்கிச் சொன்னார்.

"கடவுளே, இதெல்லாம் உண்மையா? என்னால் நம்பவே முடியவில்லை. வெகு காலத்திற்கு முன்பெல்லாம் இப்படி நடப்பது உண்டு என்று என் பாட்டி சொல்லிக் கேட்டிருக்கிறேன்."

"அதெல்லாம் இப்பொழுதும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. நமக்கெல்லாம் அது தெரியாமல் இருக்கிறது. அதுதான் விஷயம்."

"நீங்கள் சொல்வதுதான் உண்மையாக இருக்கும். அப்படியானால் அங்கிருந்த துவாரபாலிகை எங்கே போய்விட்டது?" சரஸ்வதி அந்தர்ஜனம் யோசித்தபடியே பேசினார்.

"அதுதான், இங்கே மறைந்திருக்கிற ரகசியம். தேவி எப்படி துவாரபாலிகையானார்?"

"நிஜமாகவே அற்புதமான விஷயம்தா."

"ஆனால், நான் ஒரு விஷயத்தைக் கண்டுபிடித்துவிட்டேன்!"

"சொல்லுங்கள்."

"இந்த நிகழ்ச்சி தேவியின் சம்மதத்துடன்தான் நடந்துள்ளது."

"என்ன.... தேவியே இதற்கெல்லாம் உடன்படுவாரா என்ன?"

"இங்கு நடந்திருக்கிறதே!"

"அது சரி. அப்படியானால் அந்தத் துவாரபாலிகை எங்கே போயிருப்பாள்?"

"அதைப் பிரஸ்னத்தில்தான் கண்டுபிடிக்க வேண்டும். அது முடியக்கூடிய விஷயம்தான்."

திருமேனியும், சரஸ்வதி அந்தர்ஜனமும் பேசிக் கொண்டிருந்ததைத் தேவப்ரியா சிரத்தையுடன் கவனித்துக் கொண்டிருந்தாள். சூரியமித்ரன் நம்பூதிரியின் இறுதி வார்த்தைகள் அவளைத் திக்பிரமையடைய வைத்தன.

"எல்லாமே ஏகக் குழப்பத்தில் வந்து முடியும்போல் தோன்றுகிறது. அவர் தன்னுடைய பிரஸ்னத்தின் மூலம் என்னுடைய இருப்பிடத்தைக் கண்டுபிடிக்கப் போகிறாராம்" - தேவப்ரியா கூறினாள்.

"அதை எப்படித் தடுப்பது?"

"நீங்கள் நினைத்தால் அதைச் செய்ய முடியும்!"



"விஷயத்தைச் சொன்னால்தானே, செய்வதற்கு?"

"நீங்கள் என்ன சொன்னாலும் திருமேனி கேட்டுக் கொள்வார். எனவே, முதலில் அவரை விஸ்வமங்கலம் வீட்டிற்குச் சென்றிருக்கிற தானவேதனையும், வாசு நம்பூதிரியையும் பற்றிக் கண்டுபிடிக்கச் சொல்லுங்கள். என் நினைப்பு சரியானதாக இருந்தால், அவர்களுக்கு ஏதோ விபரீதம் நேர்ந்திருக்கிறது!"

"என்ன விபரீதம்?"

"வாசு நம்பூதிரி கொலை செய்யப்பட்டிருக்கிறார்!"

"உண்மையாகவா... அது எப்படி நடந்தது?"

"அங்குள்ள முள் முருங்கை மரத்தில் குடியிருக்கும் நங்கேமா என்கிற பிரமரக்ஷஸ் வாசுவை பதம் பார்த்து விட்டது."

"இது உண்மைதானா?"

"ஆமாம். இதைப் பற்றி அவரிடம் பேசி, அவரது கவனத்தைத் திருப்ப வேண்டும்."

"முயற்சி செய்கிறேன்."

சொல்லியபடியே விஷ்ணுதேவன் வெளித் திண்ணைக்கு வந்தான். அதே சமயத்தில் விஷ்ணுதேவனின் தாய்மாமன் கோபாலன் நம்பூதிரி வாசற்கதவைத் தாண்டி வந்துகொண்டிருந்தார்.



## 24

கோபாலன் நம்பூதிரி வெளிவாசலைக் கடந்து வருவதை விஷ்ணுதேவன் கவனித்தான்.

"இவர்தான் என் தாய்மாமா. வெகுநாள் கழித்து இப்பொழுதுதான் வருகிறார்." - சூரியமித்ரன் நம்பூதிரியிடம் அவன் கூறினான்.

"அப்படியானால் உங்கள் மாமா இங்கு உங்களுடன் வசிப்பதில்லையா?"

"இல்லை. அவர் மாமியின் வீட்டிலேயே வசிக்கிறார். அங்கு

தான் அவரது குழந்தைகளும் உள்ளனர்."

சூரியமித்ரன் நம்பூதிரிப்பாட்டைப் பார்த்த உடனேயே, கோபாலனுக்கு அவர் கெட்டிகாரர் என்பது தெரிந்து விட்டது. வந்தவர் முன்புற வராந்தாவிலிருந்த தடுக்கை விரித்து அதன் மேல் உட்கார்ந்தார். பிறகுதான் தனது சகோதரி சரஸ்வதி அந்தர்ஜனத்தை அழைத்தார்.

குரலைக் கேட்டதுமே சரஸ்வதி அந்தர்ஜனம் வெளியே ஓடிவந்தார். வெகுநாள் கழித்து வந்திருக்கிறார். "என்னண்ணா, ரொம்பநாளா உங்களைப் பார்க்கவே முடியவில்லையே எங்களையெல்லாம் மறந்து விட்டீர்களோ, என்னவோ?"

"என்னம்மா அப்படிச் சொல்லிவிட்டாய்? நேரம் கிடைக்க வேண்டாமா? போகட்டும் தாகத்திற்கு ஏதாவது கொடு!"

உள்ளே சென்று, ஒரு வெண்கலச் செம்பில் மோருடன் வந்தாள். விஷ்ணுதேவன், சூரியமித்ரன் நம்பூதிரியை மாமாவுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

"நீங்கள் இந்த ஊருக்கு வந்திருப்பதால் ஏதோ விசேஷம் இருக்குமென்று நினைக்கிறேன்" - வெற்றிலை போட்டபடியே கோபாலன் கூறினார்.

"உண்மைதான். இந்த ஊர்க் கோயிலில் ஒரு தேவப்பிரஸ்னம் பார்க்க வேண்டி இருந்தது. அதற்காகத்தான் வந்திருக்கிறேன்."

அதன்பிறகு அவர்கள் பல விஷயங்களைக் குறித்துப் பேசினார்கள். பின்னர் விஷ்ணுதேவனும், சூரியமித்ரன் நம்பூதிரியும் ஓமல்லூர்க் கோயிலுக்குப் போனார்கள். அவர்கள் போனபிறகு சரஸ்வதி அந்தர்ஜனம் அண்ணனின் அருகில் வந்து உட்கார்ந்தாள். குசலம் விசாரிப்பு, குடும்ப விஷயங்களைப் பற்றிப் பேசியபிறகு கோபாலன், தான் வந்த நோக்கத்தை வெளியிட்டார். "உன் வீட்டிற்கு இந்த மாதிரி ஒரு நல்ல காலம் பிறந்ததில் எனக்குச் சந்தோஷம் தான். வீட்டில் அவன் வந்து சொன்னபோது என்னால் நம்ப முடியவில்லை, உண்மைதானா என்று..."

"உண்மைதான். சட்டென்று யாரும் நம்ப முடியாதபடி திடீரென்று வந்த அதிர்ஷ்டம்!"



"நமது குடும்பத்திலிருந்து என்றோ தொலைந்து போனதாக நினைத்த சொத்துக்களெல்லாம் திரும்பக் கிடைத்திருக்கிறதாமே?"

"எனக்கு முகம் தெரியாத, முன்பின் பழக்கமில்லாதவர்கள் கூட இது உங்களுடையது, வைத்துக் கொள்ளுங்கள் என்று வலிய வந்து கொடுத்துவிட்டுப் போனார்கள். சிலதையெல்லாம் மிகவும் குறைவான பணத்திற்கு நமது குடும்பத்தினர் அன்றைக்குக் கொடுத்திருக்கிறார்கள்"

"இப்படியெல்லாம் நடக்க என்ன காரணம்?"

"அதெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆனால், குடும்பத்தின் பழைய கௌரவமும், பெருமையும் திரும்பக் கிடைத்திருக்கிறது. இந்த ஊரில் நல்லது - கெட்டது எது நடந்தாலும் விஷ்ணுவைத்தான் கூப்பிடுகிறார்கள். இப்படிப்பட்ட நேரத்தில்தான் ஊரில் ஒரு பிரச்சனை..."

"என்ன பிரச்சனை?"

"கோயிலுக்குள் தேவி இல்லையாம்!"

"இது ஒரு சாதாரணமான விஷயமா என்ன?"

"அது மட்டுமா? அதைவிட அற்புதமான மற்றொரு விஷயமும் உண்டு."

"அது என்ன அப்படிப்பட்ட விஷயம்?"

"தேவியின் காவல்காரப் பெண்களில் ஒருத்தியான மோகினி சிலையின் காலிலிருந்த தண்டையும் காணாமல் போயிருக்கிறது."

"மோகினி சிலையின் கால்தண்டை காணாமல் போவதா! என்னம்மா இது? ஒருவேளை வேடிக்கைக்காகச் சொல்லியிருப்பார்களோ என்னவோ?"

"அப்படியெல்லாம் இல்லை அண்ணா. விஷயம் உண்மைதான்! இதன் ரகசியத்தைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் கோயில்கார தானவேதன் நம்பூதிரி விஸ்வமங்கலம் வரை போயிருக்கிறார்."

விஸ்வமங்கலமென்று கேட்டபோது கோபாலன் நம்பூதிரியின் முகத்தில் சட்டென்று ஒரு நிழலடித்தது. 'சதைப்பிடிப்புடன் உருண்டு திரண்ட வடிவத்துடன் விளங்கிய தேவகி அந்தர்ஜனம் ஒரு கணம் அவரது மனதில் தோன்றினாள். தொடர்ந்து தானவேதனும் தெரிந்தார்.

தன்னை அவருக்குத் தெரிந்திருக்கும். இருந்தாலும் தன்னை அடையாளம் காட்டிக்கொள்ள வேண்டாமென்று பேசாமல் இருந்திருப்பார் போலும்' என்று கோபாலன் நினைத்தார்.

"ஏதாவது விஷயம் தெரிந்ததாமா?"

"அதற்காகத்தான் சூரியமித்ரன் நம்பூதிரியையும் வர வழைத்திருக்கிறார்கள்!"

"சரி, அதெல்லாம் போகட்டும். இந்த வீட்டில் ஒரு பெண் புதியதாக வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவள் யார்? எந்த ஊர்? ஏதாவது விவரம் தெரியுமா?"

"மெதுவாகப் பேசுங்கள், அண்ணா. அவள் காது ரொம்பவும் கூர்மையானது. அவளுக்குக் கேட்டுவிடப் போகிறது."

"அதனால் பயப்பட வேண்டுமா என்ன? நமது குடும்பம் என்ன, பெண்களுக்குப் பயப்பட்டு அடங்கிப் போகிற குடும்பமா? காரணவர்கள் இந்த வீட்டை நிர்வாகம் செய்தபோது எந்தப் பெண்ணாவது நெல் குத்தும் அறையைத் தாண்டி வீட்டிற்கு வெளியே வந்து பார்த்திருக்கிறோமா? நீ இந்தப் பெண்ணுக்குப் பயப்படுவது என்ன புதுக்கதை?"

பேசாமலிருக்கும்படி சரஸ்வதி அவரிடம் சைகை காட்டிவிட்டு, வீட்டிற்குள் நுழைந்தார். பக்கத்தில் எங்கேயாவது நின்றுகொண்டு தாங்கள் பேசுவதை தேவப்ரியா கவனிக்கிறாளா என்று பார்ப்பதற்குத்தான் அவர் உள்ளே வந்தார். ஆனால், தேவப்ரியா அந்தப் பக்கத்தில் எங்கும் இருப்பதாகவே தெரியவில்லை. நெல்குத்தும் அறையிலிருந்து சத்தம் வந்ததால் அங்கே போனார். காரியஸ்தர் ராமன் நாயரின் மனைவி பாறுக்குட்டி பச்சை நெல்லைக் குத்திக் கொண்டிருந்தாள். தேவப்ரியா, பாறுக்குட்டியிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

பாறுக்குட்டிக்கு, தேவப்ரியாவிடம் மிகுந்த அன்பு இருந்தது. தேவப்ரியாவின் வருகைக்குப் பிறகுதான் இந்தக் குடும்பத்திற்கு ஐஸ்வர்யம் வரத் தொடங்கியது என்பது அவளுடைய அழுத்தமான நம்பிக்கை. அது மட்டுமல்ல தேவப்ரியா அடிக்கடி பாறுக்குட்டிக்கு சின்னச் சின்ன அன்பளிப்புகளைத் தருவதும் உண்டு.



"இவ்வளவெல்லாம் இருந்தாலும், நீங்கள் இங்கு வந்த பிறகு உங்களுக்கு எந்த மாற்றமும் ஏற்படவில்லையே?"

"பாறுக்குட்டி கேட்பது எனக்கு விளங்கவில்லை!"

"நீங்கள் வந்து இரண்டு மாசத்திற்கு மேலாகிறது. உங்கள் வயிற்றைப் பார்த்தால் எதுவும் சாப்பிடாதவருடைய வயிறு போல் தெரிகிறதே..."

"ஓகோ... பாறுக்குட்டியின் சந்தேகம் புரிந்து விட்டது" - சொல்லியபடி தேவப்ரியா சிரித்தாள்.

"புரிந்து கொண்டால் மட்டும் போதுமா? இங்குள்ள சொத்துக்களைக் கட்டியாள ஒரு வாரிசு வேண்டாமா? எனக்குத் தெரிந்து ஒன்று இரண்டு குழந்தைகள் மட்டும் போதாது. இப்போதைய நிலையை வைத்துப் பார்த்தால், குறைந்தது ஆறு குழந்தைகளாவது இருக்க வேண்டும்!"

"நீ சொல்வதைப் பார்த்தால், இனிமேல் என்னுடைய வேலையே அதுதான் என்பது மாதிரியல்லவா இருக்கிறது. அப்படியெல்லாம் குழந்தைகளைப் பெற்றெடுக்க என்னால் ஆகாதம்மா!"

"குழந்தை பெற்றுக் கொள்வதைப் பற்றி நீங்கள் கவலையே பட வேண்டாம். நான் நன்றாகப் பிரசவம் பார்ப்பேன். குறைந்தது நாற்பது குழந்தைகளாவது என் கையால் இந்த உலகத்தைப் பார்த்து முதல் அழுகை அழுதிருக்கும். இந்த வீட்டிலும் அதே போல் பிரசவம் பார்க்க வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை!"

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் தேவப்ரியாவிற்குச் சன்னமான கவலை தோன்றவே செய்தது. கர்ப்பத்தைத் தாங்கவும், பிரசவிக்கவும் தேவி அனுமதி தரவில்லை. மோகினிகள் யாரும் பிரசவிப்பதில்லை. தேவலோக நடன மணியான மேனகை, ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் பெற்றிருப்பினும் அவளது கன்னித் தன்மைக்கு எந்தவிதமான களங்கமும் ஏற்படவில்லை. ஒவ்வொரு லட்சிய நோக்கத்திற்காகவும் தேவர்களே அவளை பூலோகத்திற்கு அனுப்பி இதையெல்லாம் செய்ய வைத்ததால் அவளை நித்ய கன்னியாகவே இருக்க அருள் செய்திருந்தனர்.

விஷ்ணுவுடன் குடும்பம் நடத்தத்தான் அவளுக்கு தேவி அனுமதி

அளித்திருந்தார். குழந்தை பிறந்து விட்டால், அவன் தேவியின் சன்னிதானத்தை மீண்டும் அடைய முடியாது. குழந்தைகள் பிறந்தால் தேவியை எப்படிக் கவனிக்க முடியும்?

"நான் ஒரு விஷயம் சொல்லட்டுமா? உங்களிடம் உள்ள அன்பினால்தான் இதைச் சொல்கிறேன்."

"சொல் பாறுக்குட்டி!"

"உங்களுக்குக் குழந்தை பிறக்காமல் போனால், பெரிய தம்புராட்டி, சின்னத் தம்புரானுக்கு உடனே வேறொரு கல்யாணத்தைச் செய்து வைப்பார். என்னால் அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா, சொல்லுங்கள்?"

"அப்படியெல்லாம் நடக்காது, பாறுக்குட்டி!"

"அது உங்கள் நினைப்பு. பெரிய தம்புராட்டியைப் பற்றி உங்களை விட எனக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் வந்த பிறகுதான் இந்தச் செல்வங்கள் எல்லாம் வந்து சேர்ந்தன என்பது எனக்குத் தெரியும். ஆனால், பெரிய தம்புராட்டி அதையெல்லாம் யோசித்துப் பார்ப்பார் என்று தோன்றவில்லை!"

"சரி, அதற்கு நான் என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறாய்?"

"நீங்கள் உடனே குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும்!"

"அது என்னால் முடியாது!"

"அப்படியானால் நான் நினைத்தது சரிதான்..."

இந்த வார்த்தையைக் கேட்டதும் தேவப்ரியாவின் மனதில் சட்டென்று ஒரு பயம் தோன்றியது. ஒருவேளை இவள் தன்னைப் பற்றிய உண்மை எதையாவது தெரிந்துகொண்டாளா? அதற்கு வழியில்லை. இருந்தாலும், விஷயம் என்னவென்று தெரிய வேண்டுமே?

"என்ன நினைத்தாய்?"

"நீங்கள் தவறாக நினைக்கவில்லையென்றால் சொல்கிறேன்..."

"பயப்படாமல் சொல், பாறுக்குட்டி. நீ தவறாக ஒன்றும் சொல்ல மாட்டாய் என்று எனக்குத் தெரியும்."

பாறுக்குட்டி வெட்கத்துடன் சிரித்தபடி பேசத் தொடங்கினாள்: "சின்னத் தம்புரான் அந்த நாளிலேயே அப்படித்தான். பெண்கள்



என்றாலே திரும்பிக்கூட பார்க்க மாட்டார். மாமா பெண் வந்தால்கூட அவர் கண்டுகொள்ள மாட்டார். எப்படிப்பட்ட பெண்ணையும், எப்பொழுதும் திரும்பியே பார்ப்பதில்லை. நீங்களும் அவரை மாதிரியே தானோ என்று தோன்றுகிறது."

தேவப்ரியா அதிர்ந்து சிரித்தாள். "பாறுக்குட்டி சொன்னது உண்மைதான். ஆரம்பத்தில் அவர் அப்படித்தான் இருந்தார். நான் தான் அவரை அதிலிருந்தெல்லாம் திருத்தியிருக்கிறேன். இப்பொழுது அவர் அப்படியெல்லாமில்லை!"

"பிறகும் ஏன் அது அப்படியே இருக்கிறது?" - பாறுக்குட்டி, தேவப்ரியாவின் வயிற்றைப் பார்த்தபடியே பேசினாள்.

"குழந்தை பிறப்பதெல்லாம் ஒவ்வொருவருடைய ஜாதகத்தைப் பொறுத்தது. அதன்படிதானே எல்லாம் நடக்கும்?"

"நீங்கள் சொல்வதும் சரிதான். ஆனால்,பெரிய தம்புராட்டி அப்படியெல்லாம் நினைப்பார் என்று தோன்றவில்லையே?"

தேவப்ரியாவும் பாறுக்குட்டியும் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் சரஸ்வதி அந்தர்ஜனம் வந்தவழியே திரும்பினார்.

"அவள் பாறுக்குட்டியோடு கதை பேசிக்கொண்டிருக்கிறாள். நீங்கள் சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்..."

"ஏன் சுற்றி வளைத்துப் பேசவேண்டும்? நேரடியாகவே விஷயத்திற்கு 'வருகிறேன். இந்துவும், அவளது அம்மாவும் இவளைப் பற்றிக் கூறியதெல்லாம் நல்லதாக இல்லை. இன்னும் தெளிவாகச் சொல்வதானால் அவளுடைய குலம், கோத்திரம் யாருக்காவது தெரியுமா? அவள் நம்பூதிரிப் பெண்தான் என்பதை நாம் எப்படி ஒப்புக் கொள்வது?" என்று கேட்டார் கோபாலன்.

"ஒரு விஷயத்தைச் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஸ்தோத்திரங்களையும், பாட்டுக்களையும் அவள் எப்படி ஒப்பிக்கிறாள் தெரியுமா? வேதமெல்லாம் அவளுக்கு அத்துப்படி. அதையெல்லாம் அவள் வாய்விட்டுச் சொல்வதைக் கேட்டால் யாரும் வாயடைத்துப் போய் அப்படியே நின்று கேட்பார்கள்!"

கோபாலன் நம்பூதிரி சற்றுநேரம் எதையோ யோசித்தபடி இருந்தார்.

"சரஸ்வதி, என்னுடைய சந்தேகம் என்ன என்பதைச் சொல்லிவிடுகிறேன். வேண்டாம், நான் அதை உடனே சொல்லப் போவதில்லை. ஒரு தடவை அதை சோதித்தே பார்த்து விடலாம்!" என்றபடி கோபாலன், ஜயந்தன் நம்பூதிரி கொடுத்து அனுப்பியிருந்த பொடி டப்பா போன்ற சிமிழைத் தன் தங்கையிடம் கொடுத்தார்.

"சரஸ்வதி இந்தச் சிமிழை அவன் படுத்து உறங்கும் படுக்கையின் அடியில் வைத்து விடவேண்டும். விஷயம் அவனுக்குத் தெரியக்கூடாது. இது என்ன வேலை செய்யுமென்று அப்புறம் உனக்குத் தெரியும்."

சரஸ்வதி அந்தர்ஜனம் அந்தச் சிமிழை வாங்கித் தன்னுடைய முந்தானையில் முடிந்து கொண்டார்.

அன்று இரவு விஷ்ணுதேவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, யாருக்கும் தெரியாமல சரஸ்வதி அந்தர்ஜனம் அந்தச் சிமிழை விஷ்ணுவின் படுக்கைக்குக் கீழே பத்திரமாக மறைத்து வைத்தார்!



## 25

நள்ளிரவு நேரம்! விஷ்ணுதேவனும் தேவப்ரியாவும் இன்னும் உறங்கியிருக்கவில்லை. தேவப்ரியாவைப் பொறுத்தவரை அவளுடைய முழுச் சக்தியும் துலங்கும் சமயம் அது. நள்ளிரவு மூன்று மணிக்குப் பிறகே தேவப்ரியா உறங்குவது வழக்கம். சரியாக ஐந்து மணிக்குப் படுக்கையிலிருந்து எழுந்து விடவும் செய்வாள்.

"உங்கள் மாமா எதற்காக வந்திருக்கிறாராம்?" அவள் விஷ்ணு தேவனிடம் கேட்டாள்.

"எனக்கும் அது சந்தேகமாகத்தான் இருக்கிறது. இவர் இங்கு வருவதே இல்லை. இப்படி வெகுநாள் கழித்து வந்திருப்பவர் என்னிடமோ உன்னிடமோ அதிகம் பேசவே இல்லை!"

"உங்கள் அம்மாவிடம்தான் வெகு நேரமாக ரகசியம் பேசிக்



கொண்டிருந்தார். பேச்சிற்கு நடுவே ஒவ்வொரு தடவையும் நான் கவனிக்கிறேனா என்பதை அறிய அடிக்கடி என்னை வந்து வந்து பார்த்துக் கொண்டிருந்தார் உங்கள் அம்மா! ண"

"அப்படியானால் மாமா இங்கு வந்திருப்பது நல்ல நோக்கத்திற்கு அல்ல என்று தெரிகிறது."

"சாதாரண மந்திரவாதிகளால் என்னை ஒன்றும் செய்ய முடியாது. ஆனால், வஞ்சமாக ஏதாவது செய்தால் வேறு வழியில்லை."

"வஞ்சகமாக ஏதாவது என்றால் என்ன அர்த்தம்?"

"அதாவது நமக்குத் தெரியாமலே நம்மைத் தொல்லைப் படுத்துவது. இதில் எப்படிப்பட்டவர்களும் விழுந்து விடுவார்கள்."

"சரி, அப்படி ஏதாவது இருந்தால் என்ன செய்வது?"

"நாம் செய்வது உங்களது அம்மாவிற்குத் தெரியாமல் இருப்பது நல்லது. மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்."

விஷ்ணுதேவனின் கண்ணிமைகளுக்குக் கனம் கூடிக்கொண்டே வந்தது. தலையணையைச் சரியாகப் போட்டு, மல்லாந்து படுத்தான். தேவப்ரியா அவனையே பார்த்தபடி படுத்திருந்தாள். அவளைப் பொறுத்தவரை இரவு உறக்கம் என்பது ஒரு பொருட்டல்ல.

பகல் நேரத்தில் மதிய உணவிற்குப் பிறகு அவள் சற்று நேரம் ஓய்வெடுப்பதுண்டு. ஒரு மனிதப் பெண் என்ற நிலையில் வீட்டு வேலைகளைச் செய்வதால், அவளுக்குக் களைப்புத் தோன்றுவதுண்டு. சரஸ்வதி அந்தர்ஜனம் ஓய்விற்காகச் சற்று நேரம் படுத்துக் கண்ணை மூடும்போது, தேவப்ரியாவும் தனது அறையில் படுத்துத் தூங்குவதுண்டு. அந்த மயக்கத்தில் அவள் கனவு காண்பதும் உண்டு. அவளது கனவுகளில் கந்தர்வ உலகமும், மோகினி கோயில்களும் இடம் பெற்றிருக்கும்.

உறங்கிவிட்ட விஷ்ணுதேவனின் மார்பில் இடது புறக் கன்னத்தைப் பதித்து வலது கையால் அவனைத் தழுவினாள். பிறகு கண்களை மூடினாள். ஆனால், சற்று நேரத்திற்குள் ஏதோ சந்தேகம் தோன்றவே சட்டென்று விழித்துப் படுக்கையிலிருந்து திடுக்கிட்டு எழுந்தாள். விஷ்ணுதேவனின் இடது கையின் அடிப்புறத்தில் மின்னலாய் ஏதோ நெளிவதைக் கவனித்தாள்.

கோபாலன் நம்பூதிரி, சரஸ்வதி அந்தர்ஜனத்திடம் கொடுத்தனுப்பியிருந்த மாந்திரீகச் சிமிழுக்கு உயிர் வந்து விட்டிருந்தது. அது ஒரு தங்கநிற நாகமாக உருவெடுத்து அந்தப் படுக்கையிலிருந்து வெளியே வந்தது. வெகுகவனமாக அது விஷ்ணுதேவனின் கையின் மேற்புறத்தில் ஊர்ந்து நகரவும் தொடங்கியது.

தேவப்ரியாவிற்கு உடனே விஷயம் விளங்கிவிட்டது. ஒரு கணத்தில் அவளுக்கே இயல்பான ஞானதிருஷ்டியால் அது விஸ்வ மங்கலம் வீட்டிலிருந்து ஜயந்தன் நம்பூதிரியால் கோபாலனிடம் கொடுத்தனுப்பப்பட்டது என்பதையும் உணர்ந்து கொண்டாள். ஜயந்தன் நம்பூதிரி மிகவும் கொடிய விஷமுள்ள பாம்பு ஒன்றை அந்தச் சிமிழுக்குள் அடைத்துக் கொடுத்திருக்கிறார் என்பதும் அவளுக்குப் புரிந்துவிட்டது.

அது தன்னைத் தீண்டினால் தன்னுடைய நிறம் மாறிவிடும் என்பது அவளுக்குத் தெரியும். தீயின் நிறமுள்ள தன்னை அடையாளம் காட்டி எப்படியாவது அந்த வீட்டிலிருந்து விரட்டுவதுடன், எங்காவது ஆணியடித்துப் பதித்து விடுவதும் அவருடைய நோக்கமாக இருக்க வேண்டும்!

தேவப்ரியா யோசித்தாள். தன்னுடைய மாயாஜால வித்தையை இப்போது பயன்படுத்தியே ஆகவேண்டும்.

பக்கத்திலிருந்த மேஜை மீது வெற்றிலைப் பெட்டி இருந்தது. அதிலிருந்து ஒரு சிறிய வெற்றிலையை எடுத்து, அதில் விரல் நகத்தினால் ஒரு கீரியின் படம் வரைந்து, அதைப் படுக்கை மீது எறிந்தாள். ஒரு விநாடிக்குள் அந்த வெற்றிலை ஒரு பெரிய கீரியாக வடிவமெடுத்தது. அங்கிருந்தபடியே அந்த நாகத்தைக் கீழே தட்டிவிட்டதுடன், அதனுடன் தரையில் குதித்துச் சண்டையிடத் தொடங்கியது. ஜயந்தன் கொடுத்தனுப்பிய பாம்புடன், தேவப்ரியா படைத்த கீரி கடுமையாகப் போராடியது.

வளைந்தும்,திரும்பியும் பாம்பு கீரியைக் கொத்த முயன்றபோதெல்லாம் கீரி பகடைக்காய்களைப் போல் உருண்டு புரண்டு தந்திரமாக விலகியது. இந்த இரண்டும் போராடுவதால் ஏற்பட்ட ஓசையைக் கேட்டு விஷ்ணு விழித்துக் கொண்டான். கட்டிலுக்குக் கீழே



அவன் பார்த்த காட்சி அவனை வியப்படைய வைத்தது.

தங்க நிறமுள்ள பாம்பும், கீரி ஒன்றும் போராடுகிறது. எதுவுமே தோற்கத் தயாராக இல்லாதது போன்ற மூர்க்கத்தனமான போராட்டம்.

"தேவப்ரியா இதெல்லாம் என்ன?"

அவள் பாம்பைச் சுட்டிக் காட்டியபடியே கூறினாள். "வில்வ மங்கலத்து ஜயந்தன் உங்கள் மாமாவிடம் கொடுத்தனுப்பியிருக்கிற பரிசு, அந்தப் பாம்பு. கீரி, வெற்றிலையிலிருந்து நான் படைத்த உயிர்."

"நீ சொல்வது உண்மையா?"

"இவ்வளவுதானா! இன்னும் உள்ளது. பார்த்துக்கொண்டே இருங்கள்." - சொல்லியபடியே அவள் கையை நீட்டிக் கீரியை ஒரு முறை தொட்டாள். கண் மூடித் திறப்பதற்குள் கீரியின் உருவம் இரண்டு மடங்கு பெரிதாக வளர்ந்தது. சட்டென்று பாய்ந்து அந்தப் பாம்பின் தலைப் பகுதியைத் தன் வாய்க்குள் கவ்வியது.

"யார் அதை இங்கே கொண்டு வந்தாரோ, அவரிடமே அதைக் கொண்டுபோய் விடு!" என்று உத்தரவிட்டாள் தேவப்ரியா. அடுத்தகணம், கீரி பாம்பை இழுத்துக் கொண்டு வெளியே சென்றது.

தேவப்ரியாவின் கட்டளையை ஏற்ற கீரி, பாம்பைத் தூக்கிக் கொண்டு நேராகக் கோபாலனின் படுக்கையறையை அடைந்து, அதன் மேல் வீசி எறிந்தது. இவ்வளவு நேரமும் கீரியின் வாய்க்குள் அடைபட்டிருந்த பாம்பு விடுதலையடைந்தவுடன் எதிரில் தட்டுப்பட்ட கோபாலனை ஓங்கிக் கொத்திற்று.

"ஐயோ அம்மா!" - என்று அலறியபடி கோபாலன் திடுக்கிட்டுக் கண்விழித்தார். விளக்கைக் கொளுத்தினார். கொத்திய பாம்பு தளர்ந்து போய் அங்கேயே படுத்திருந்தது.

கோபாலனின் அலறலைக் கேட்டவுடன் சரஸ்வதி அந்தர்ஜனம் விழித்துவிட்டார். விஷ்ணுதேவனும் ஓடிவந்தான். நெல்குத்தும் அறையில் படுத்திருந்த பாறுக்குட்டியும் எழுந்து வந்தாள். இவர்கள் எல்லோரையும் பார்த்த பாம்பு, ஒரு கணத்தில் சட்டென்று மறைந்து போயிற்று.

"என்ன? என்ன ஆச்சு?" - சரஸ்வதி அந்தர்ஜனம் பதறியபடி கேட்டார்.

"பாம்பு கொத்திவிட்டது."

"எங்கே கொத்தியது?" - விஷ்ணுதேவன் விளக்கின் திரியை நீட்டியபடி கேட்டான்.

"இதோ இங்கே..." - கோபாலன் தன்னுடைய கால் பகுதியைச் சுட்டிக் காட்டினார். உள்ளங்காலில் ஒரு வெள்ளி நாணய அளவிற்கு நீலம் பாரித்திருந்தது.

"ஐயய்யோ, இதற்கு என்னசெய்வது?" - சரஸ்வதி அந்தர்ஜனம் அலறினார்.

யாரும் எதுவும் பதில் பேசவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் ஒவ்வொருவரும் விழித்தபடியே நின்றிருந்தனர்.

"விஷ்ணு, நீ உடனே ராமன் நாயருடன் சென்று, வைத்தியரை அழைத்துவா" என்று மகனிடம் கூறினார் சரஸ்வதி அந்தர்ஜனம்.

அப்பொழுது தேவப்ரியா அங்கு வந்தாள். "தேவப்ரியா, இதையெல்லாம் நீ கேட்கவில்லையா?"

"இல்லையம்மா. நான் அசதியில் அப்படியே படுத்துத் தூங்கிவிட்டேன்." என்றாள் தேவப்ரியா.

"பார், அண்ணாவைப் பாம்பு கொத்திவிட்டது!"

அதற்குள் விஷ்ணு வெளியே போய்விட்டிருந்தான்.

தேவப்ரியா, தான் அணிந்திருந்த மேல்முண்டின் (தாவணியின்) கரைப் பகுதியைக் கிழித்தாள். மயக்கமடைந்து படுத்திருந்த கோபாலன் நம்பூதிரியின் கணுக்காலிற்கு மேல் கட்டுப்போட்டாள். அத்துடன் காயத்தின் பக்கமாக நின்று, கையால் வருடி, மற்றவர்களுக்குத் தெரியாமல் விஷத்தையும், ரத்தத்தையும் வெளியேற்றினாள்.

சற்று நேரத்தில் விஷ்ணுதேவன், ராமன்நாயருடன் வைத்தியரையும் அழைத்து வந்தான். விஷக்கடி வைத்தியத்துடன் மந்திரவித்தை களையும் கற்றிருந்த வைத்தியர் கடிவாயைப் பரிசோதித்தார். அதைச் சுற்றி வட்டம் கட்டியிருந்த நீல நிறத்தையும் கவனித்தார். நாடியைப் பரிசோதித்தார். பிறகு கண்ணிமைகளை விலக்கிப் பார்த்தார். சற்று விலகி நின்று கோபாலன் நம்பூதிரியின் உடம்பைத் தலை முதல் கால்வரை ஆராய்வது போல் பார்த்தார்.



"என்ன வைத்தியரே, வெறுமனே பார்த்துக் கொண்டிருக் கிறீர்கள்? பாம்பு கடித்திருக்கிறதே" - சரஸ்வதி அந்தர்ஜனம் கேம்டார்.

வைத்தியர் அதற்கு எந்தவிதமான பதிலையும் கூறாமல் அங்கிருந்த ஒவ்வொருவரையும் உற்றுக் கவனித்தார். இதையெல்லாம் கவனித்த சரஸ்வதி அந்தர்ஜனத்திற்கு மனவருத்தம் அதிகமானது. சகோதரன் தன்னுடைய வீட்டிற்கு வந்து ஆபத்தில் சிக்கிக் கொண்டாரே என்று பதைபதைத்தார்.

"யாராவது இவருக்கு வைத்தியம் செய்தார்களா?" என்று கேட்டார் வைத்தியர்.

"இதுவரை யாரும் எதுவும் செய்யவில்லை" - சரஸ்வதி அந்தர்ஜனம் சொன்னார்.

"பிறகு எப்படி இவரது உடம்பிலிருந்து விஷம் இறங்கியது?"

"விஷம் இறங்கியிருக்கிறதா! நன்றாகக் கவனியுங்கள் வைத் தியரே... யாரும் எந்த மருந்தும் கொடுக்கவில்லை."

"கொடுத்திருந்தால்கூட அதிசயப்படுவதற்கு ஒன்றுமில்லை. அதிசயமான ஏதோ ஒன்று இங்கு நடந்திருக்கிறது. இல்லாவிட்டால் நீலநிறமுள்ள இந்த விஷம் வெளியேறுவது அவ்வளவு சுலபத்தில் நடக்கக்கூடியதல்ல!"

"என் மருமகள் அந்தத் துணித்துண்டை அவரது காலில் கட்டினாள். அவ்வளவுதான்."

வைத்தியர், தேவப்ரியாவின் முகத்தை உற்றுப் பார்த்தார். அவரது கண்கள் ஒளியடைந்தன. ஒருவித பயமும் அதில் தெரிந்தது. தேவப்ரி யாவின் கண்களைச் சந்திக்க அவரது கண்களால் முடியவில்லை. அவர் அவளைப் பார்ப்பதை உணர்ந்தவுடன் தேவப்ரியா மெதுவாக எழுந்தாள்.

"பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. நான் வரட்டுமா?" வைத்தியர் அந்தர்ஜனத்திடம் கேட்டார்.

"வைத்தியரே, அவர் கண்விழிக்காமல் படுத்திருக்கிறாரே, கவனிக்கவில்லையா நீங்கள்?"

"அவசரப்படாதீர்கள். இவர் மயக்கம் தெளிந்து கண்

விழித்தபிறகு போகலாமே"- தேவப்ரியா குறுக்கிட்டுச் சொன்னாள். அது ஒரு கட்டளை போலவே இருந்தது.

வைத்தியர் தன்னுடைய தோளிலிருந்த பையிலிருந்து ஒரு சிறிய வெள்ளிப் பெட்டியை வெளியில் எடுத்தார். அதற்குள்ளிருந்து ஒரு குளிகையை எடுத்தார்.

"கொஞ்சம் துளசித் தண்ணீர் வேண்டும்..." என்றார்.

"எடுத்து வருகிறேன்" என்றபடி தேவப்ரியா எழுந்தாள்.

அவள் வெளியே போனதும் வைத்தியர் கேட்டார்: "யார் இந்தத் தம்புராட்டி?"

"என்னுடைய மருமகள்தான்!" என்றாள் சீரஸ்வதி அந்தராஜனம்.

"நிஜமாகவா!" வைத்தியர் குரலில் பயம் தெரிந்தது.

தேவப்ரியா, துளசி இலை போட்ட தண்ணீருடன் வந்தாள். சரஸ்வதி அந்தர்ஜனம் காட்டிய பாத்திரத்தில் துளசி இலையை ஒதுக்கியபடி நீரை ஊற்றினாள். கையில்பட்ட துளசி இலைகளை தேவப்ரியா வெளியிலெறிந்தபோது, துளசி இலைகள் உலர்ந்து போயிருந்தன. அந்தக் குளிகையை உரைத்து, மயங்கிப் படுத்திருந்த கோபாலனின் உதட்டில் தேய்த்து நனைத்தபோது அவர் கண்திறந்தார்.

"இனிமேல் பயப்பட ஒன்றுமில்லை. நான் வரட்டுமா?" வைத்தியர் அவசரப்பட்டார்.

மறுநாள் காலையில் கோபாலன் நம்பூதிரி வழக்கம்போல் கண் விழித்து எழுந்தார். எந்தவிதமான மாற்றமும் அவருக்குத் தெரியவில்லை. அங்கு நடந்த விவரங்களை உடனே விஸ்வ மங்கலத்து ஜயந்தனிடம் தெரிவிக்கக் கோபாலன் விரைந்தார்.

ஜயந்தனைப் பார்த்த கோபாலன் ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் கூறினார்.

"ஓகோ... விஷயம் அப்படியாகிவிட்டதா? அப்படியானால் நான் சந்தேகப்பட்டது சரிதான். இந்த நிலைமையில் நாம் அதற்கான எதிர்நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியதுதான். இல்லாவிட்டால் நிலைமை விபரீதமாகிவிடும்" என்றார் ஜயந்தன் தீர்மானமான குரலில்.



26

குருக்ஷேத்ர மனையில் ஒரு மோகினி புகுந்திருக்கிறாள் என்கிற விஷயம் தெரிந்தவுடன் மந்திரவாதியான ஜயந்தன், அவள் தொடர்பான நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்த்தார்.

'அவள் மோகினி என்பது உண்மையானால் எங்கிருந்து வந்தாள்? எப்படி அந்த வீட்டிற்குள் புகுந்திருப்பாள்? அவள் அங்கு வந்திருப்பதற்கான காரணம் என்னவாக இருக்கும்? அந்த மோகினி என்ன வடிவத்துடன் அந்த மனையில் காலம் கழிக்கிறாள்?' எல்லாமே கேள்விகளாகவே நின்றன. இதற்கெல்லாம் பதில்களைக் கண்டுபிடிக்க வேண்டும்!

அதேசமயம் மற்றொரு சிந்தனையும் அவரது மனதில் எழாமல் இல்லை. ஓமல்லூர் கோயிலின் நிர்வாகியான தானவேதன் நம்பூதிரிப்பாடு தேவியின் துவாரபாரலிகை(காவல்காரி)யைக் குறித்துப் பேசியிருந்ததும், அவளுடைய கால் தண்டை காணாமற்போனதும், அதைக் கண்டுபிடிப்பதற்காக முயன்றபோது ராசிப் பலகை விருட்டென்று மேற்புறம் பறந்து போனதும் அவருக்கு ஞாபகம் வந்தன.

சமாதியிலிருக்கும் தாத்தா சொல்லித் தந்தது போல் மந்திரக் கண்ணாடியில் பார்த்தபோது தெரிந்த காட்சி ஓ... அவள் என்ன சாதாரணமான அழகியா? அவளுடன் இருந்தவன் குருக்ஷேத்ரமனையைச் சேர்ந்த வாரிசு என்பதும் தெரிந்துவிட்டது. அப்படியானால் அவனுடன் நாம் பார்த்த அந்தப் பெண் யார்?

"சரி. நான் ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் கண்டுபிடித்து உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன் கோபாலன் நம்பூதிரி. இது சற்றுக் கடினமான விளையாட்டாகவே தோன்றுகிறது. காரியம் அவ்வளவு சுலபமில்லை. இருந்தாலும் நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் புறப்படுங்கள்" - ஜயந்தன் கூறினார்.

கோபாலன் நம்பூதிரி விடைபெற்றார்.

இரவில் பிரஸ்னம் பார்ப்பது முறையல்லதான். இருப்பினும் ஜயந்தன் அதைச் செய்யத் தீர்மானித்தார். காணாமல் போன பிரஸ்னப் பலகை அந்தக் குடும்பத்திற்குச் சொந்தமான குளத்தில்தான் உள்ளது என்று சமாதித் தாத்தா கனவில் சொல்லித் தந்திருந்தார். அதை எடுக்கலாம் என்று நினைப்பதற்குள் ஒரு புதிய ராசிப் பலகையும் தயாராகிவிட்டது.

வெள்ளைத் தேவதாரு மரப்பலகையைப் பயன்படுத்திச் செய்தது தான் புதிய ராசிப் பலகை. வடிவத்தில் காணாமற் போன பலகை மாதிரியே, அதன் நகலாகவே அமைந்திருந்தது இந்தப் புதிய பலகை. பழைய ராசிப் பலகையை உருவாக்கிய அதே குடும்பத்தைச் சேர்ந்தவர்தான் இதையும் செய்திருந்தார்.

தானவேதன் சாப்பாட்டை முடித்துக்கொண்டு தேவகி அந்தர்ஜனத்திடம் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருப்பதை ஜயந்தன் பார்த்தார். அவர்களுக்கு இடையே எழுந்திருந்த உறவைத் தெரிந்து கொள்ளாதவர் மாதிரியே ஜயந்தன் நடந்துகொண்டார். அப்படி ஒரு உறவு அவர்களுக்குள் இருந்தால் அதில் என்ன தவறு? நாற்பது வயதைத் தாண்டிய சகோதரி, அடக்கியாளும் ஆணைப் பற்றிய கனவுடன் வெகு காலமாகக் காத்திருக்கிறாள். அவளது ஆசைகள் கட்டுமீறி உடைவதற்கு முன்பே ஒரு நம்பூதிரி அவளுடன் தொடர்பு கொள்வதில் எந்தவிதத் தவறும் இருப்பதாக ஜயந்தனுக்குத் தோன்றவில்லை.

அவர்கள் பேசிக் கொண்டிருந்த தென்புற அறையின் விளக்கு அணைந்தது. ஜயந்தன் வீட்டிற்கு முன்புறமிருந்த சவுக்கத்தை நோக்கி நடந்தார். சவுக்கத்தின் மையத்தில் ராசிப்பலகையை வைத்து அதற்கு முன்னால் நிலவிளக்கை வைத்து, அதில் ஏழு திரிகளை ஏற்றினார். நவக்கிரகங்களையும், அஸ்வினி தேவதைகள், அஷ்டதிக்குப் பாலகர்கள் எல்லோரையும் மனதில் நினைத்தபடி சோழியை எடுத்துப் பலகை மேல் பரப்பினார். எண்ணிக்கையைப் பார்த்தார். வகுத்தார், கூட்டினார், பெருக்கினார், கழித்தார்... பூஜ்யம் மீதமாக வந்தது. அப்படியானால் சூனிய கிரகம். பிரஸ்னத்தில் எதுவும் தெளிவடையாது என்பதும் புலப்பட்டது.



சட்டென்று மனதில் பழைய ஞாபகம் எழவே, ஒரு முறை சுற்றுமுற்றும் பார்த்தார். கதவுகள் எல்லாம் திறந்தே கிடந்தன. நிலவொளியில் துளசிச் செடியின் இலைகள் பளபளப்பாக மின்னின. எல்லாம் துளிர் இலைகள். ஆனால், காற்று கொஞ்சம் கூட இல்லை சுற்றுப்புறம் அமைதியாக இருந்தது.

ஏனோ ஜயந்தனின் பார்வை திடுமென்று துளசி இலைகளின் மீது பதிந்து நின்றது. காற்றே இல்லாமல் துளசி இலைகள் வேகமாக அசைவது போல் தோன்றின. இது என்ன விசித்திரம் என்று யோசித்தார். சட்டென்று நிலவிளக்கைக் கவனித்தார். அதிலிருந்த ஜுவாலைகள் அசையாமல் எரிந்து கொண்டிருந்தன. துளசிச் செடிக்குப் பின்னால் யாரோ நிற்கிறார்கள். அப்படித் தோன்றியதற்கும் காரணமிருந்தது.

வடக்குப் பகுதியில் கிணறு இருந்தது. வீட்டின் கன்னி மூலைப் பக்கமிருந்த கிணற்றின் மேல் பளபளக்கும் பித்தளையாலான கப்பி நிலவொளியில் மின்னிக் கொண்டிருந்தது. ஆனால், இப்பொழுது அந்தப் பளபளப்பு தெரியவில்லை. எதையோ குறுக்கே வைத்துத் தடுத்திருப்பது போல் தோன்றியது.

ஜயந்தன் கை நிறைய விபூதியை எடுத்துக்கொண்டு அந்தப் பக்கமாகப் பாய்ந்தார். ஆனால், அங்கு யாரும் இல்லை. தரையில் ஒரு ஆம்பல் பூ கிடந்தது. மிகப் பெரிய வெண்ணாம்பல் பூ. அதிசயம், அந்த ஆம்பலிலிருந்து பாலைப்பூவின் மணம் வீசியது. ஜயந்தனின் மூளை ஒரு கணத்தில் விஷயத்தை ஊகித்து விட்டது. 'அந்த ஆம்பல் பூவைச் சூடிய யாரோ அங்கு நின்றிருக்கிறார்கள். அந்தப் பூதான் பித்தளைக் கப்பியின் பளபளப்பை மறைத்திருக்க வேண்டும். வந்தது யார்? எதற்காக வந்தார்கள்?'

அங்கு நின்றிருந்தவள் மனிதப் பெண்ணல்ல என்பது நிச்சயம். மகாமந்திரவாதியான ஜயந்தனுக்கு எதுவும் புலப்படவில்லை!

திரும்பி சவுக்கத்திற்கு வந்த ஜயந்தன், கதவை மூடிவிட்டு பிரஸ்னப் பலகைக்கு முன்பாக அமர்ந்தார். மீண்டும் சோழிகளைப் பரப்பினார். மறுவிநாடி சோழிகள் ஒன்றுடன் ஒன்று நெருங்கி மோதி நொறுங்குவது போன்ற சத்தம் கேட்டது. ஜயந்தன் கவனித்தார்.

ராசிப்பலகை மெதுவாக அசைந்தது. உடனே மொத்தமாகக் குவிந்திருந்த சோழிகள் பரவலாய்ச் சரியத் தொடங்கின. அந்தச சரியல் ஒரு வட்டமான வடிவத்தில் அமைந்தது. ஜயந்தன் கண்ணிமைக்காமல் அதையே பார்த்துக் கொண்டிருந்தார்!

அசைந்த ராசிப்பலகை அப்படியே மெதுவாக உயரத் தொடங்கியது. உண்மைதான்... ராசிப்பலகை அந்தரத்தில் உயர்ந்து உயர்ந்து, ஜயந்தனின் மூக்குப் பகுதி வரை வந்தது. ராசிப் பலகை தலைக்கு மேல் உயரத் தொடங்கியபோது ஜயந்தன் அதை இரண்டு கைகளாலும் பிடித்தார். இருப்பினும் ஜயந்தனின் பிடியால் எந்தவிதப் பாதிப்புமின்றி அந்தப் பலகை மேலே மேலே உயர்ந்து கொண்டே இருந்தது.

சவுக்கத்தின் உயரமான மேல்தளத்தில் ராசிப்பலகை பதிந்து நின்றபோது, ஜயந்தன் சப்பணமிட்டு உட்கார்ந்தபடியே பலகையிலிருந்து தொங்கிக் கொண்டிருந்தார். ஜயந்தன் ஒரு முறை கீழ்ப்புறம் பார்த்தார். ஏழு திரியிட்டு அவர் ஏற்றிவைத்திருந்த விளக்கு அவருக்கு நேர்கீழே இருந்தது. ராசிப்பலகையிலிருந்து தன்னுடைய பிடியை விட்டால் விளக்கின் கூர்மையான பகுதியில் தன் உடலின் கீழ்ப்புறம் அழுந்தி இறங்கும்.

ஜயந்தன் ஒரு கணம் நடுங்கினார். பிடி நழுவாமல் இருப்பதற்காக முன்பைவிட வலுவாகப் பிடித்தார். பிறகு கீழ்ப்புறம் பார்க்கப் பயந்தவராக மேற்புறம் பார்த்தார். அந்த ராசிப் பலகையின் பரப்பளவுள்ள ஒரு கை, பலகையைக் கீழப் புறமிருந்து தாங்கிக் கொண்டிருந்தது. அந்தக் கையின் முன்பகுதி மட்டுமே தெரிந்தது. மற்ற பகுதிகள் எதுவுமே புலப்படவில்லை. ஒரு மனிதக் கை. அதுவும் பெண்ணின் கை என்பது மட்டும் அவருக்குத் தெரிந்தது.

சற்று நேரம் கழித்துப் பலகை மெதுவாகக் கீழே இறங்கத் தொடங்கியத்து. நேராக விளக்கின் மேற்புறம் நெருங்கி நின்றது. விளக்கின் தீச் சுடர்களைத் தொட்டும் தொடாமலும் ஜயந்தன் அந்தரத்தில் தவித்தார். ஜுவாலையின் வெப்பம் அவர் உடலில் பட்டுத் தகித்தது. இன்னும் சற்றுத் தாழ்ந்தால் உடுத்தியிருக்கும் வேட்டி நெருப்பில் எரியத் தொடங்கும். ஜயந்தன் தாங்கமுடியாமல்



தவித்தார். இறுதியாக, " தாத்தா காப்பாற்றுங்கள்" - என்றபடியே அலறினார்.

அந்தக் குரலின் சத்தம் பழைய குடும்ப வீட்டின் நிலவறையில் மோதி எதிரொலித்தது. சமாதியிலாழ்ந்திருந்த விஸ்வமங்கலக் குடும்பத்தின், மூர்க்கமான மந்திரவாதி சூரியநாராயணன் அந்தக் குரலைக் கேட்டார்.

நிலவறைக்குள் இருந்து அந்த மகாமந்திரவாதியின் ஆத்மா வெளியே வந்தது. அப்பொழுது அந்த ஆத்மா கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தை மூலமாகச் சாம்பிராணியிட்டு மூடி வைத்திருந்த பழைய உடம்பிலேயே புகுந்து கொண்டிருந்தது.

பார்வைக்கு அதி பயங்கரத்தை ஏற்படுத்தும் உருவம். உடலின் எல்லா அங்கங்களும் உளுத்துப் போகத் தொடங்கிய ஓர் உடம்பு நடந்தால் எப்படி இருக்குமோ, அப்படி இருந்தது அதன் தோற்றம்.

நிலவறையிலிருந்து வெளியே வந்து அறையின் சுவர்களைக் கடந்து கதவை அடைந்தபோது, பயந்து நடுங்குவது போல் வாசல் கதவுகள் உட்புறமாக இழுத்துத் திறந்துகொண்டன. தாழ்ப்பாள்கள் தானே விலகின. சூறாவளியில் அகப்பட்டது போல் கதவுகள் அதிர்ந்து சுழன்று படீரென்று விலகித் திறந்தன. அப்படித் திறந்தபோது ஏற்பட்ட கிறீச்சொலி பழைய வீட்டின் மரச்சுவர்களிலும் மேற்புற மாடியிலும் மோதி மோதி எதிரொலித்தது.

அவர் திண்ணையில் காலெடுத்து வைத்தபோது, சுவர்களில் ஒட்டியபடி பதுங்கியிருந்த பல்லிகள் அவசர அவசரமாக இடம் பெயர்ந்தன. அந்த உருவம் முற்றத்தை அடைந்தது. உண்மையிலேயே அவரது வருகை ஒரு புயல் போலவே இருந்தது. எத்தனையோ காலமாகத் தான் வடிவமைத்துக் கட்டிய ஒரு பெரிய மண் புற்றை உடைத்துக் கொண்டு சூறாவளியாக அவர் புறப்பட்டிருந்தார்.

முற்றத்திற்கு வந்தவர் ஒருமுறை மேற்புறமாகச் சுற்றிலும் பார்த்தார். கூடுகளில் நிம்மதியாக ஓய்வெடுத்திருந்த பெரிய பெரிய வெளவால்கள் விபரீத ஒலியுடன் சிறகடித்துப் பறந்தன. காணக் கூடாத எதையோ கண்டு பயந்ததுபோல், அவை தங்களுடைய அசிங்கமான தோல் இறக்கைகளால் காற்றைக் கீறிக் கொண்டு உயிர் தப்பிக்கப்

பறந்தன. ஆந்தைகள் ஓலமிட்டு அழுதன.

மதம் பிடித்த காட்டு யானையைப் பார்த்து மிரண்டது போல், குள்ளநரிகள் ஊளையிட்டன. இயற்கையே ஒரு கணம் பயந்து நடுங்கியது போல் தோன்றியது. யாரது?

புராதனமான விஸ்வமங்கலக் குடும்ப வீட்டின் முற்றத்தில் பயப்படுத்தும் தோற்றத்தில் நின்று கொண்டிருப்பது யார்?

ஒரு காலத்தில் அந்தக் குடும்பத்தையும், அந்தப் பகுதியிலிருந்த சகல ஜீவராசிகளையும் நடுநடுங்க வைத்த சாட்சாத் சூரிய நாராயண நம்பூதிரிதான் அங்கு நின்றிருந்தார்.

பொம்மை ஒன்று காலெடுத்து வைத்து நடப்பது போல் அந்த உருவம் மெதுவாக நகர்ந்தது.

"தாத்தா..." - என்கிற பயம் நிறைந்த ஜயந்தனின் குரல் மீண்டும் உச்சத்தில் கேட்டது.

"இதோ வந்துவிட்டேன்!" - சூரியநாராயணன் நம்பூதிரி உரத்த குரலில் பதிலளித்தார்.

அந்தக் குரல், சவுக்கத்தில் திரிசங்கு சொர்க்கத்தில் தத்தளிப்பது போல் தவித்த ஜயந்தனுக்கும் கேட்க, அவர் சற்று ஆறுதலடைந்தார்.

"உன்னுடைய விளையாட்டு இன்றுடன் தீர்ந்து விடும்" - ஜயந்தன் யாரையோ மனதில் வைத்துப் பேசினார்.

சவுக்கத்திற்கு வெளியே புயலடிக்கும் ஓசை கேட்டது. அந்த வீட்டைச் சுற்றி வளர்ந்திருந்த மரங்கள் அந்தக் காற்றில் பேயாட்டம் ஆடின. மகாமந்திரவாதியான நம்பூதிரியின் வரவை இந்தச் சீற்றம் புலப்படுத்தியது.

முற்றத்தை அடைந்த சூரியநாராயணன் தன்னுடைய தலையிலிருந்து ஒரு ரோமத்தைப் பிடுங்கி மந்திரம் ஜெபித்து, எறிந்தார்.

கண் மூடித் திறப்பதற்குள் ஒரு பெரிய பனை ஓலையொன்று முழுத் தண்டுடன் யாரோ பறித்து வீசியது போல் அவருக்கு முன்பாக வந்து விழுந்தது. சூரியநாராயணன் அதன் மீது ஏறி உட்கார்ந்தார். அதற்காகவே காத்திருந்தது போல் அந்தப் பனை ஓலை ஒரு புஷ்பக விமானம் போல் ஆகாயத்தில் உயர்ந்து, புதிய வீட்டை அடைந்து மெதுவாகக் கீழே இறங்கியது.



அதே சமயத்தில் ஜயந்தன் மீண்டும் ராசிப் பலகையுடன் மாடியின் மேல்தளம் வரை உயர்ந்து விட்டிருந்தார். ஜயந்தன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, ராசிப் பலகையைத் தாங்கிக் கொண்டிருந்த பெரிய கை தளர்வதைப் பார்த்தார். அவருக்கு நேர் கீழாக நிலவிளக்கு கூரான குமிழுடன் சிரசு எரிந்து கொண்டிருந்தது. பலகையை இதுவரையில் தாங்கிக் கொண்டிருக்கும் கை சட்டென்று விலகினால் தனது நிலை அதோகதிதான் என்பது ஜயந்தனுக்குப் புரிந்தது!

"ஐயோ..." - ஜயந்தன் தன்னையும் அறியாமல் அலறினார்.

அந்தக் குரல் சூரியநாராயணனின் காதுகளில் விசையுடன் வந்து விழவே செய்தது. அவர் தனது வலது கையை உயர்த்தி, வாசல் பக்கமாக நீட்டினார்.



## 27

சூரியநாராயணன் நம்பூதிரியின் நீட்டிய கைப் பகுதியிலிருந்து நிழல் போல் மற்றொரு கை நீண்டு சவுக்கத்தின் கதவை விரியத் திறந்தது.

பிறகு அவர் உள்ளே நுழைந்து தனது கையை விளக்கின் கூம்புப் பகுதிக்கு மேலாகப் பிடித்தார். ஜயந்தன் தவறி விழுந்தாலும் தாங்கும் நோக்கத்தில் அந்தக் கை வலுவுடன் நின்றது. ஜயந்தன் இந்தக் காட்சியைப் பார்த்தார்.

அது தன்னுடைய தாத்தாவின் கைதான் என்பது அவருக்குப் புரிந்தது. தன்னுடைய அபாயமான நிலையை உணர்ந்து தனக்காக அவர் சமாதியிலிருந்து எழுந்து வந்திருக்கிறார் என்பதை நினைத்தபோது ஜயந்தனின் மனதிலிருந்த பயம் மொத்தமும் சட்டென்று விலகி புதிய தைரியம் பிறந்தது!

அதுவரையில் ராசிப் பலகையைத் தாங்கிக் கொண்டிருந்த கை, யாரோ பிடித்து இழுத்தது போல் விலகியது. ஜயந்தன் கீழ்ப்புறமாக இறங்கிக் கொண்டிருந்தார். இருப்பினும் எதுவும் நேரவில்லை.

வலுவான சமாதிக் கை அவரைத் தாங்கி, மெதுவாக அங்கிருந்த தடுக்கில் உட்கார வைத்தது. ராசிப் பலகையும் அவரது கைப்பிடியில்தான் இருந்தது. தான் அதை மேற்புறமாகப் பிடித்துக் கொண்டிருக்கிறோம் என்பது அப்பொழுதுதான் அவருக்கு நினைவு வந்தது.

"ஜயந்தா, என்ன நடந்தது?" வெளிப்புறமிருந்து தாத்தாவின் குரல் கேட்டது.

ஜயந்தன் நடந்ததை விளக்கினார்.

"அப்படியானால் அவள் விளையாடுகிறாள் என்றுதானே அர்த்தம்?"

"ஆமாம். இந்த விளையாட்டு இன்றுடன் இரண்டாவது தடவை!"

"இதுதான் நிலைமை என்றால், இனிமேலும் சும்மா இருப்பதில் அர்த்தமில்லை. என்னுடைய மனைக்குள் புகுந்து எனக்கெதிராகச் செயல்படும் அவளை இப்படியே விட்டு வைப்பது நல்லதல்ல!"

"உண்மை. விஸ்வமங்கலக் குடும்பத்திற்கு இதுதான் முதல் களங்கம்."

"இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்துப் பார்க்கிறேன். எப்படியும் வழியில்லாமல் போகாது..." சொல்லியபடியே மகா மாந்திரிகனான சூரிய நாராயணன் மௌனமாக யோசனையில் ஆழ்ந்தார்.

"ஒரே வழிதான் உள்ளது. உன்னுடைய எதிரி அந்த மோகினிதான். அவளை அழிக்க தூமாவதியால் மட்டுமே முடியும். எப்படித் தியானிப்பது என்பதை நான் சொல்லித் தருகிறேன். எழுத்தாணியை எடுத்துக் குறித்துக் கொள்..."

வீட்டிற்கு வெளியே நின்றபடியே சூரிய நாராயணன் தியானத்தையும் , மந்திரத்தையும் சொல்லித் தந்தார்.

ஓர் எழுத்தையும் விடாமல் ஜயந்தன் அதையெல்லாம் எழுதி எடுத்தார். சூரிய நாராயணன் மேலும் சொல்லித் தந்தார்.

"தூம் தூம் தூமாவதி ஸ்வாஹா என்கிற மந்திரத்தை மயானத்தில் நிர்வாணமாக உட்கார்ந்து ஜபிக்க வேண்டும். பத்தாயிரம் முறை



ஹோமாக்கினியில் என்னை ஹோமிக்க வேண்டும். மந்திர உச்சரிப்பில் தவறோ, எண்ணிக்கையில் பிழையோ ஏற்படக் கூடாது. ஹோமத்தின் கடைசியில் தூமாவதி தோன்றி என்ன விஷயம் என்று கேட்டால், உன்னுடன் மோதிக் கொண்டிருக்கும் மோகினி எங்கிருந்தாலும் அவளைப் பிடித்துக்கொண்டு வரும்படி கூறு. அவள் உன் கைக்குக் கிடைத்து விட்டால், உடனே அவளை நீ உன் படுக்கையறைக்கு இழுத்துக்கொண்டு போய் அவளுடன் உடலுறவு கொண்டு, அவளை அடிமைப்படுத்த வேண்டும். அதன் பின்பு, அவள் உன் சொற்களுக்குக் கட்டுப்படுவாள். அது மட்டுமல்ல, அவள் இப்போது யாருடன் சேர்ந்துள்ளாளோ, அவர்களுக்கு எதிராகச் செயல்படவும் தொடங் குவாள். அதற்குத் தேவையான வித்தையை நான் உனக்கு அப்போது சொல்லித் தருகிறேன்."

சூரியநாராயணன் தன்னுடைய சமாதிக்குத் திரும்பிச் சென்றார். ஜயந்தன் அன்றிரவு நிம்மதியாகப் படுத்து உறங்கினார்.

மறுநாள், கோபாலன் நம்பூதிரியிடம் எல்லா விஷயங்களையும் கேட்டறிந்தார். பிறகு சொன்னார்.

"குருக்ஷேத்ர மனையில் எப்படிப்பட்ட மோகினி இருந்தாலும் அவள் உங்கள் மருமகனுக்கு எப்படிப்பட்ட துணையாக இருந்தாலும் இந்த இடத்திற்கு அவளை வரவழைத்து என்னுடைய அடிமையாக மாற்றி விடுகிறேன். இதில் உங்களுக்குச் சந்தேகமே வேண்டாம்!"

அவரது வாயிலிருந்து புறப்பட்ட இந்த வார்த்தைகளைக் கேட்டதும் கோபாலன் நம்பூதிரிக்கு நிம்மதியும், மகிழ்ச்சியும் தோன்றியது. அந்த மோகினி அங்கிருந்து அகன்றுவிட்டால் குருக்ஷேத்ர மனையின் செல்வச் செழிப்பும் அழியத் தொடங்கிவிடும். அத்துடன் தன் சகோதரி மற்றும் மருமகனின் கர்வம் தொலைந்து கொட்டம் அடங்கி விடும்!

"அப்படியானால் கோபாலன் நம்பூதிரி இன்றைக்குப் புறப்பட வேண்டாம். காரணம் என்னவென்றால், இன்றிரவு நான் சில காரியங்கள் செய்ய வேண்டியுள்ளன. அதற்காக நான் பகல் முழுவதும் வெளியே அலைய வேண்டும். யாராவது இங்கு என்னைத் தேடி வந்தால், நான் இல்லையென்பதைச் சொல்வதற்காகவாவது யாராவது

இங்கு இருக்க வேண்டாமா?"

அதற்குள் தானவேதன் குளியலை முடித்துக்கொண்டு திரும்பியிருந்தார். ஜயந்தன் அவரிடம் பக்குவமாகக் கூறினார்: "உங்களது காரியமெல்லாம் ஏறத்தாழ முடிந்த மாதிரிதான். எனவே நீங்கள் ஓமல்லூருக்குப் புறப்படலாம்."

தானவேதன் திகைத்தார். நான் எப்படித் தனியாக ஊருக்குப் போவது? வாசுவைப்பற்றி ஊரில் கேட்பார்களே?"

"அதற்கெல்லாம் நான் வழி சொல்லித் தருகிறேன். நான் சொல்வதை அப்படியே உங்கள் ஊராரிடம் ஒப்பியுங்கள். போன விஷயமெல்லாம் ஏறத்தாழ முடிந்த மாதிரிதான். வாசு காணாமல் போன கால் தண்டையுடன்தான் வருவேன் என்று அடம் பிடித்து அங்கேயே தங்கிவிட்டிருக்கிறார். அதற்குச் சில ஹோமங்களைச் செய்ய வேண்டியுள்ளது. எல்லாம் முடிந்த பிறகு வாசு வருவார் என்று சொல்லுங்கள். புரிந்ததா?"

காலைப் பலகாரம் சாப்பிட்டவுடன் தானவேதன் புறப்பட்டார். ஜயந்தனும் அவருடன் புறப்பட்டார். போகும்போது ஜயந்தன் தேவகி அந்தர்ஜனத்தை அழைத்துக் கூறினார். "நான் கொஞ்ச தூரம் போக வேண்டி உள்ளது. ஒருவேளை சாயங்காலம்தான் வருவேன். வந்திருக்கிற விருந்தினரை நல்லபடியாகக் கவனித்துக் கொள். நான் வரட்டுமா?" என்றவர், அதற்கான பதிலுக்குக் கூட காத்திராமல் புறப்பட்டார்.

மதிய உணவிற்குப் பிறகு கோபாலன் நம்பூதிரி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். வெளிப்புறத் திண்ணையில் உட்கார்ந்திருந்தார்.

தேவகி அந்தர்ஜனம் வந்து அவரை அழைத்தாள். "தெற்குப் புற அறையில் வந்து உட்காரலாமே. அங்கு நல்ல காற்று" - அவளது இதழின் கடைக்கோடியில் வரலாமா வேண்டாமா என்று தயங்கும் புன்னகை. மயக்கும் மந்தகாசம்.

கோபாலன் அறைக்குள் நுழைந்ததும் கதவை அடைத்தது தேவகி அந்தர்ஜனம்தான். விரித்திருந்த படுக்கையின் மேற்புறத் தலைய ணையில் சாய்ந்தபடி கோபாலன் பார்த்தபோது தேவகி அந்தர்ஜனம் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.



இதற்கு முன்பு நிலவிளக்கின் சன்னமான வெளிச்சத்தில்தான் அவளைப் பார்த்திருந்தார். அழகையும், உடம்பையும் கடவுள் வஞ்சனையின்றி அவளுக்குக் கொடுத்திருந்தார். அவளது உடம்பைப் பார்த்தால் எலும்புகள் எங்கேயோ ஆழத்தில் புதைந்திருப்பது போல் தோன்றியது. நல்ல 'சதைப்பிடிப்பான உடம்பு. அத்துடன் ஆண்மையில் லயிக்கும் ஆவேசமும் அவளிடமிருந்தது.

தன்னுடைய சொந்த மனைவியிடம்கூடக் காணாத அந்த ஆவேசம் தான் அவரைக் கவர்ந்தது எனலாம். அவள் நிறைய சாஸ்திரங்களை மனப்பாடமாக்கியிருப்பவள் என்பதும் அவருக்குத் தெரிந்தது.

"உங்களை விட்டுப் பிரிந்திருக்க எனக்கு மனமே வரவில்லை" - கோபாலன் நம்பூதிரி மனம்திறந்து அவளிடம் கூறினார்.

"எனக்கும் அப்படியேதான்" - வெட்கத்துடன் அவள் பதிலளித்தாள்.

தேவகி அந்தர்ஜனத்தைப் பொறுத்தவரையில் வெகுகாலமாகத் தனிமையில் கன்னித்தவமிருந்து அவளைச் சுற்றியும் புற்றுகள் உயர்ந்து விட்டிருந்தன. கடைசியில் அந்தப் புற்றுகளை உடைத்துக் கொண்டு அவள் வெளியே வந்தபோது, எப்படிப்பட்ட பாறையையும் உடைத்துத் தகர்க்கும் வல்லமை அவளுக்கு ஏற்பட்டிருந்தது. வலிமையான உணர்ச்சிகளும், அழகும் சேமித்து வைத்திருந்த இளமையும் அடங்கிக் கிடந்த கோபாலன் நம்பூதிரியின் மோகங்களுக்குச் சிறகுகளைப் பொருத்தின. அவை நெருப்பு இறக்கைகளாக மாறிக் கொண்டிருந்தன.

ஜயந்தன் வெளியே இருமுவதைக் கேட்டுத் தேவகி திடுக்கிட்டு எழுந்து, உடையணிந்துகொண்டு, அறைக்கு வெளியே வந்தாள்.

"எங்கே கோபாலன் நம்பூதிரி?"

"மத்தியானம் சாப்பாடு முடிந்ததும் அறைக்குள் போனவர்தான் எழுப்ப வேண்டாமென்று விட்டு விட்டேன்."

"அவரை அந்நியராக நினைக்க வேண்டாம் தேவகி" என்றார் ஜயந்தன்.

ஜயந்தன் சென்று கோபாலன் நம்பூதிரியை எழுப்பினார்.

கோபாலன் நம்பூதிரி உண்மையில் நல்ல உறக்கத்திலிருந்தார்.

"எப்போ வந்தீங்க?" - என்கிற விசாரிப்புடன்தான் கோபாலன் எழுந்தார்.

"எல்லாவற்றையும் விவரமாகப் பேசலாம். முதலில் சாப்பிட்டு விடலாம்."

"உடம்பெல்லாம் வியர்வையில் நனைந்து போயிருக்கிறது. முதலில் நான் குளித்துவிட்டு வந்து விடுகிறேனே..."

"அப்ப வாங்க, ரெண்டு பேருமே புறப்படலாம்."

குளித்துவிட்டு வந்து இருவரும் சாப்பிட்டார்கள். பின்பு உடையணிந்து கொண்டு புறப்பட்டார்கள்.

தேவகிக்கு ஒன்றும் புரியவில்லை. 'எங்கே போகிறார்கள்?' என்று யோசித்தாள்.



## 28

ஜயந்தனும் கோபாலன் நம்பூதிரியும் நேராகச் சென்றது, அங்கிருந்து இரண்டு மைல் தொலைவிலிருந்த மயானத்திற்குத் தான். அது அந்தக் கிராமத்தின் பொதுமயானம். தூரத்திலிருந்து பார்த்தபோதே மயானத்திலிருந்து நெருப்புக் கொழுந்துகள் ஆகாயத்தை நோக்கி எழும்பிக் கொண்டிருந்தன.

"ஏதோ உடம்பை எரிக்கிறார்கள் போலிருக்கிறது" - கோபாலன் நம்பூதிரி கூறினார். அதைக் கூறும்போது அவருடைய முகத்தில் ஒருவிதமான அருவருப்பு தெரிந்தது. இப்படிப்பட்ட இடங்களுக்கெல்லாம் சென்று அவருக்குப் பழக்கமில்லை. இதுதான் முதல்முறை. இப்பொழுதைய நிலையில் போகாமல் இருக்கவும் முடியாது.

இரண்டு விதத்தில் விஸ்வமங்கலம் வீட்டுடன் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. முதல் விஷயம் சகோதரியின்



ஆணவத்தை அழிப்பது. இரண்டாவது, தேவகியின் சதைப் பிடிப்பான திமிர்ப்புள்ள உடம்பின் சூட்டை ஏற்றுக் கொள்வது.

முதல் விஷயத்தைவிட இரண்டாவது நோக்கம்தான் அவருக்கு மிகவும் பிடித்தமானது. காரணம், வெகு நாளாக அவரது மனம் உறங்கிக்கிடந்திருந்தது. அதை வலுவேற்றி விழிப்படையச் செய்யும் வல்லமை அவரது வீட்டில் இல்லை. மனைவியின் கவனம் முழுவதும் குடும்பக் காரியங்களை நிர்வகிப்பதில் ஆழ்ந்திருந்தது. ஒருவகையில் கூறினால், எல்லாவற்றையும் அவரது மனைவி மறந்துபோன மாதிரியான ஒரு நிலை!

ஒரு நீண்ட இடைவேளைக்குப் பிறகு,புத்துணர்ச்சியுடன் செயல்படத் தொடங்கியபோது நிலைமை மாறிவிட்டிருந்தது. கையிலிருந்த நூல் உருண்டையில், சுற்றியதைவிட அதிகமாக அவிழ்ந்து சிக்கலாகிவிட்டிருக்கிறது. சொந்த மைத்துனனுடன் துணையாகச் செல்வதுபோல்தான் கோபாலன் நம்பூதிரி நடந்து கொண்டிருந்தார்.

"என்ன, மௌனமாக வருகிறீர்கள்?" - ஜயந்தன் விசாரித்தார்.

"ஓ... ஒன்றுமில்லை."

"இந்த மாதிரி இடங்களுக்கெல்லாம் இதுவரை வந்து பழக்கமிருக்காது, இல்லையா?"

"உண்மைதான்!"

"என்னுடைய அனுபவம் அதற்குத் தலைகீழ். குழந்தைப் பருவத்திலிருந்தே இதுதான் வேலை. அதாவது ஐந்து வயது முதல் அப்பாவுடன் இதற்கெல்லாம் பழக்கப்பட்டு விட்டேன். அதனால்தான் பயமில்லாமல் போய்விட்டது."

ஜயந்தன் பேசுவதைக் கேட்டபடியே கோபாலன் நம்பூதிரி நடந்து கொண்டிருந்தார்.

"ஒரு தடவை நானும் அப்பாவும் ஒரு பேயை விரட்டச் சென்றோம். வடக்குத் திசையில் சற்று தூரத்தில் ஒரு இடம். என்னுடைய அப்பா என்னைவிடத் திறமைசாலி. ஒரு பெண்ணின் உடம்பில் ஒரு ரக்ஷஸ் புகுந்து கொண்டது. அது குடியேறி வெகுநாளாகிவிட்டது. ராத்திரி நேரங்களில்தான் அட்டகாசம். என்ன

பண்ண முடியும்? கேளுங்கள்... சுவாரஸ்யமான விஷயம்." ஜயந்தன் சம்பவத்தை நேரில் பார்த்துக் கொண்டிருப்பதைப் போல் சொல்லிக் கொண்டிருந்தார்.

"எனக்கு அப்பொழுது பதினெட்டு வயது. போய்ப் பார்த்த பிறகுதான் தெரிந்தது. பெண் அழகி என்றால் அப்படியொரு அழகி. உண்ணியார்ச்ச(காவியநாயகி)யின் வர்ணனை அவளுக்கும் பொருந்தும். இழுங்கு மஞ்சளை வெட்டி வைத்ததுபோல் இருந்தாள்!" - ஜயந்தன் நிறுத்தினார்.

ஜயந்தன் அவள் உருவைக் கற்பனையில் கண்டு கொண்டிருக்கிறார் என்பது கோபாலனுக்குப் புரிந்தது.

"பிரச்னை என்ன தெரியுமா?"

"சொல்லுங்கள்..."

"ராத்திரியாகிவிட்டால் கணவனை விடமாட்டாள். போதும் என்கிற மனசோ, திருப்தியோ அவளுக்குக் கிடையாது. அபரிமிதமான வெறி. வேறு ஒன்றுமே கிடையாது. அவள் உடம்பில் ஒரு மாதிரி வாசனை அடித்தபோதுதான் விஷயம் வெளியே வந்தது. ஆரம்பத்தில் அவர்களுக்கு எதுவும் புரியவில்லை."

கோபாலன் நம்பூதிரி உம் கொட்டிக் கொண்டிருந்தார்.

"வாசனை என்றால் மனோரஞ்சிதம் மாதிரி இருக்கிற பாலைப்பூ வாசனை. அப்பொழுதுதான் முதல் தடவையாகச் சந்தேகம் வந்தது. பிறகுதான் நாங்கள் அங்கே போனோம். உண்மையைச் சொன்னால் என் மனதிலும் ஓர் ஆசை. கூட இருப்பது அப்பாவாயிற்றே? எப்படிச் சொல்வது இருந்தாலும் நான் விடவில்லை" - ஜயந்தன் சிரித்தார்.

"ஏழுநாள் ஹோமம் நடக்கப்போகிறது என்பது தெரிந்தவுடன் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. அப்பாவுடன் இருக்கும்போது எனக்கு ஒன்றுமே தோன்றுவதில்லை. அவரை விட்டு நகர்ந்தால், பிறகு ஒரே தடுமாற்றம்தான். மூன்றாவது நாளன்று அவளது கணவனை எங்களுடன் படுக்க வைத்துக் கொண்டோம், அவள் அவனைத் தேடி வருகிறாளா என்று பார்ப்பதற்காக..."

"பிறகு?" - கோபாலனுக்கு சுவாரஸ்யம் பிறந்தது.

"வந்தாள்" - ஜயந்தன் கண்ணையச் சிமிட்டியபடி கூறினார்.



"நல்ல அனுபவம்" - என்ற பதிலை கோபாலன் எதிர்பார்த்தார்.

"ஆனால், அவளைப் பிடித்திருந்த பிரமரக்ஷஸ் ஒரு நம்பூதிரிப் பெண்ணினுடையது. அது எல்லாம் படித்துத் தேர்ந்த கள்ளி!"

"ஓஹோ... பிறகு?"

"ஏழாவது நாளன்று அந்த ரக்ஷஸைப் பிடித்து மரத்தில் ஆணியடித்தோம். எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது."

அவர்கள் சுடுகாட்டை அடைந்து விட்டிருந்தனர். சுடுகாட்டின் நடுவில் ஒரு சிதை எரிந்து கொண்டிருந்தது. பாதி எரிந்திருந்த அது அநாதைப் பிணமென்று தெரிந்தது. அருகில் யாரையும் காணோம்.

"நமக்கு வெற்றிதான்." - ஜயந்தன் கூறினார்.

கோபாலன் நம்பூதிரிக்குக் காரணம் புரியவில்லை.

"இப்படிப்பட்ட நேரங்களில் சுடுகாட்டுடன் தொடர்புள்ள எல்லா தேவதைகளும் வந்து சேர்வார்கள். அதனால் நம்முடைய லட்சியம் சுலபமாக நிறைவேறிவிடும்" என்றார் ஜயந்தன்.

ஜயந்தன் எல்லா ஏற்பாடுகளையும் செய்தார்.

"கோபாலன், நீங்கள் அதோ அந்த விழுந்து கிடக்கும் மரத்தின் மீது உட்கார்ந்து கொள்ளுங்கள். ஒரு வேடிக்கையை உங்களுக்குக் காட்டுகிறேன். பயப்படாமல் இருங்கள்.... இதோ இதை நீங்கள் வைத்திருங்கள்." - என்றபடி ஜயந்தன் கழுத்தில் போட்டிருந்த ருத்ராக்ஷத்தைக் கழற்றிக் கோபாலனிடம் கொடுத்தார்.

கோபாலன் அதை வாங்கித் தன் கழுத்தில் போட்டுக்கொண்டு துணிகளை அவிழ்த்து தாழ்வாக இருந்த மரக்கிளையில் போட்டார். முழு நிர்வாணமான ஜயந்தன் தரையில் சப்பணமிட்டு உட்கார்ந்தார்.

பையிலிருந்து மூன்று விரல்களால் எள்ளை எடுத்து ஹோமாக்னியில் ஹோமிடித்தபடியே மந்திரம் சொன்னார்.

"தும்... தும்... தூமாவதி ஸ்வாஹா..."

மந்திரம் அப்படியே தொடர்ந்தது. கோபாலன் இதையெல்லாம் உட்கார்ந்தபடியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். நேரம் போய்க் கொண்டே இருந்தது.

இரவின் மூன்றாவது ஜாமம் முடிய இன்னும் ஒரு நாழிகைதான் இருந்தது (இருபத்து நான்கு நிமிடம்- ஒரு நாழிகை). அப்பொழுது

ஒரு பயங்கரச் சத்தம் கேட்டது. ஏதோ புயற்காற்று விசையுடன் நெருங்கி வந்தது போலிருந்தது. ஜயந்தன் அப்பொழுதும் எள்ளை ஹோமித்த படியே மந்திரம் உச்சரித்துக் கொண்டிருந்தார். தெற்குத் திசையிலிருந்து கேட்ட அந்தச் சத்தம் வரவர நெருங்கிக் கொண்டிருந்தது. அடர்த்தியான வெண்புகை சூழ்ந்து கொண்டிருந்தது.

அந்தரத்தில் ஒரு தூணை நிறுவியது போல் புகை படிந்து கொண்டே இருந்தது. வழியிலிருந்த மரக்கிளைகள் பட்பட்டென்று உடைந்து விழுந்தன.

மறுபடியும் பயங்கரமான சத்தம்.

ஜயந்தனின் வாயிலிருந்து பத்தாயிரமாவது தடவையாக மந்திரம் வெளிப்பட்டு முடிந்தபோது உருவம் தெளிவடையத் தொடங்கியது. தூணின் மேற்பகுதியில் இரண்டு கண்கள் தெரிந்தன. படிப்படியாகப் பைசாசிகமான, கோர முகம் ஒன்று தெரிந்தது. ஜயந்தனின் கண்களுக்கு இந்தக் காட்சி நன்றாகத் தெரிந்தது. ஆனால், அங்கிருந்த கோபாலனின் கண்களுக்குப் புகையாலான ஒரு தூண் மட்டுமே தெரிந்தது. அவர் ருத்ராக்ஷத்தை இறுகப் பிடித்தபடி தேவி மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஜயந்தனின் காதில் தேவி ரகசியமாகச் சொன்னாள்: "அங்கிருப்பது மோகினியேதான். ஆனால், சாதாரணமானவளல்ல சக்தி நிறைந்தவள். சாட்சாத் துர்க்காதேவியின் நெருங்கிய ஊழியக்காரி!"

மெல்லிய மணியோசைபோல் ஒலித்த அந்த வார்த்தைகளை ஜயந்தன் கவனமாகக் கேட்டார்.

"ஆனால், அவளுடைய சக்தியைக் குறைப்பதற்கு வழி உள்ளது. நான் சொல்லித் தருவது போல் செய்தால் பலனுண்டாகும்."

"தேவி, சொல்லியருளுங்கள்!"

"அவனை இங்கே கொண்டு வரவேண்டும். நான் யாரைச் சொல்கிறேன் என்பது புரிந்ததல்லவா? இங்கு வந்த பிறகு, நங்கமோ வசிக்கும் மரத்தில் அவனை விட்டு விட்டால் எல்லாம் சரியாகிவிடும்."

"இங்கு அவனை எப்படி வரவழைப்பது தேவி?"



"நீ உன்னுடன் கொண்டு வந்திருக்கிறவர் மூலம் தந்திரமாக வரதவழைக்க வேண்டியதுதான்."

"புரியவில்லை, தேவி..."

"முதலில் அவனுடைய அம்மாளை இங்கு வரவழைத்துக் கொள். அவள் அந்த மோகினிக்கு எதிராக உள்ளாள். அவளுக்கு மருமகள் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது. மோகினியை ஒடுக்குவதற்காகத்தான் என்றால் அவளது அம்மா ஒப்புக்கொள்வாள்."

"பிறகு?"

"அம்மாவைப் பார்க்க மகனை இங்கே வரவழைக்க வேண்டியதுதான். அது சுலபம்."

"அதற்குப் பிறகு நான் என்ன செய்யவேண்டும், தேவி?"

"அம்மாவிற்காக முள் முருங்கை மரத்தின் கீழ் நள்ளிரவில் ஹோமம் நடத்த வேண்டுமென்று கூறு. நிச்சயம் செய்வான். அப்போது நங்கேமா அவனுடன் கூட வருவாள்."

"இது போதும், தேவி!" - ஜயந்தன் மகிழ்ச்சியில் கூவினார்.

"அது மட்டுமல்ல, என்னை நீ திருப்திப்படுத்தியிருக்கிற நிலையில், அந்த மோகினியை உன்னுடைய வீட்டு வேலைகளுக்கு வைத்துக் கொள்ளும்படியும் நான் செய்ய முடியும்!"

இதைவிட மகிழ்ச்சிகரமான செய்தி ஜயந்தனுக்கு உண்டா என்ன? அன்றொரு நாள் மாந்திரீகக் கண்ணாடியில் தான் பார்த்த மோகினி தனக்குக் கிடைக்கப் போகிறாள் . அதற்குப் பிறகுள்ள தினங்கள் எப்படிப்பட்ட சந்தோஷமானவை! ஜயந்தன் மனமெல்லாம் கற்பனையிலும், மகிழ்ச்சியிலும் நிறைந்தது.

தூமாவதி வந்த வழியே திரும்பினாள். சத்தம் வந்தது போலவே அகன்று கொண்டே இருந்தது.



## 29

கோபாலன் நம்பூதிரி மரத்தின் மீதிருந்து எழுந்து வந்தார். "காரியம் வெற்றிதானென்று தோன்றுகிறதே?" - ஜயந்தனிடம் கேட்டார்.

"சந்தேகமில்லாமல்! ஆனால், அதற்கு உங்களது ஒத்துழைப்பும் தேவை. கிடைத்தால் எல்லாமே சுபம்தான்."

"நான் என்ன செய்ய வேண்டும்?"

"நீங்கள் உடனே உங்கள் சகோதரியை நமது விஸ்வமங்கலம் வீட்டிற்கு அழைத்து வரவேண்டும். மருமகளாக வந்திருக்கிற மோகினியைத் தொலைக்கும் விஷயமாக என்று சொன்னால் நிச்சயம் வருவார்."

தன்னுடைய சகோதரியை இங்கு கொண்டுவந்து சேர்ப்பதில் சிரமம் எதுவும் இல்லையென்றே கோபாலனுக்கு தோன்றியது.

"புறப்படலாமா?" - ஜயந்தன் எழுந்தார்.

அவர்கள் விஸ்வமங்கலம் வீட்டை அடைந்தபோது விடிந்து விட்டிருந்தது.

"நான் கொஞ்ச நேரம் தூங்க வேண்டும்" - சொல்லியபடியே கோபாலன் படுக்கை அறைக்குள் புகுந்து கதவை மூடிக் கொண்டார். பிறகு வெகு நேரம் கழித்துத்தான் அவர் கண் விழித்தார். மதிய உணவிற்குப் பிறகு கோபாலன் சகோதரியின் குருக்ஷேத்ர மனையை அடைந்தார்.

தங்கையைக் கண்டவுடன் நடந்த விவரங்களை ஒன்று விடாமல் கூறினார்.

"நான் விஸ்வமங்கலம் மனையிலிருந்து வருகிறேன். எல்லாம் நாம் நினைத்தபடிதான் நடந்திருக்கிறது. விஸ்வமங்கலத்து ஜயந்தன் நம்பூதிரி கெட்டிக்கார மந்திரவாதி. அவர் எல்லா விவரத்தையும் என்னிடம் சொல்லிவிட்டார்."



"என்ன, உண்மையாகவா?" - சரஸ்வதி அந்தர்ஜனம் வியப்புடன் கேட்டார்.

"நாம் பேசுவதில் கூட வெகு கவனமாக இருக்க வேண்டும். இந்த வீட்டின் சுவர்களுக்குக் கூடக் கண்ணும், காதும் இருப்பதுபோல் தெரிகிறது" என்றார் கோபாலன்.

"அப்படித்தான் எனக்கும் தோன்றுகிறது. ஆனால், ஒரு விஷயத்தை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அந்தப் பெண் இந்த வீட்டில் காலடி எடுத்து வைத்த பிறகுதான் இந்த வீட்டிற்கு இப்படிப்பட்ட ஐஸ்வர்யம் ஏற்பட்டது. விஷ்ணுவைப் பற்றித்தான் உங்களுக்குத் தெரியுமே? சதா கதகளி மீது பைத்தியம் கொண்டு அலைந்து கொண்டிருந்தவன் இப்பொழுது அவனுக்கு என்ன மரியாதை. இதையும் பார்க்க வேண்டும்."

"சரஸ்வதி, நீ சொல்வதெல்லாம் சரிதான். நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், இதையெல்லாம் அவளுடைய தேவைக்காக உங்களுக்குச் செய்து கொண்டிருக்கிறாள் என்றே தோன்றுகிறது. இதெல்லாம் இப்படியே நிரந்தரமாக இருக்கும் என்று சொல்ல முடியாது."

"என்ன சொல்கிறீர்கள்?"

"இப்படிப்பட்ட சம்பவங்கள் சிலவற்றை நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். பைசாசிக சக்தியுள்ள சில பெண்கள் சிலநேரம் இப்படிச் சில நன்மைகளைச் செய்யலாம். ஒவ்வொன்றுக்குப் பின்னாலும் அது அதற்கென்று சில நோக்கங்களும் இருக்கும். அவளது தேவைகள் எல்லாம் நிறைவேறிவிட்டால், பிறகு என்ன மிச்சமிருக்குமென்று உறுதியாகச் சொல்ல முடியாது!"

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் சரஸ்வதி அந்தர்ஜனம் உண்மையில் பயந்தே போனார். தனக்கும், தன் மகனுக்கும் ஏதாவது விபரீதம் நிகழ்ந்து விட்டால் என்ன செய்வது என்று யோசித்தார்.

"சரி அண்ணா, இதற்கு என்ன செய்யலாம் என்று சொல்கிறீர்கள்?"

"அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். அதற்காகத்தான் நான் வேலை வெட்டியை விட்டுவிட்டு வந்திருக்கிறேன். சரஸ்வதி, நீ மனம் வைத்தால் எல்லாம் நல்லபடியாக நடக்கும்."

"நானா? நான் என்ன செய்ய வேண்டும்?"

"நாளைக்கு என்னுடன் புறப்பட வேண்டும்..."

"எங்கே போகிறோம்?"

"விஸ்வமங்கலம் வீட்டிற்கு" - கோபாலன் நம்பூதிரி மெதுவாகப் பேசினார்.

"ஐயோ அங்கேயெல்லாம் ... நான் எதற்கு?"

"உஸ். மெதுவாகப் பேசு. அந்தப் பெண்ணுக்குப் பாம்புக் காது."

"விஷ்ணு கேட்பானே, எங்கே போகிறீர்கள் என்று?"

"அதற்குத்தானா வழியில்லை? என் வீட்டிற்கு வருவதாகச் சொல். மறுத்துப் பேசமாட்டான்."

அந்தர்ஜனம் யோசனையில் மூழ்கினார். இதற்கு முன் ஒருமுறை கூட அங்கு போனதே இல்லை. இந்திரா இங்கு வந்து தங்கும் போதெல்லாம் அழைத்திருக்கிறாள். அப்பொழுதெல்லாம் போயிருந் தால்கூடப் பரவாயில்லை. ஆனால், இன்றைய நிலை அப்படியல்ல. ஒரு நிமிடம் கூட இங்கிருந்து நகர முடியாது.

"என்ன, இதற்குப் போய் இவ்வளவு பெரிய யோசனை?" - கோபாலன் நம்பூதிரி தங்கையை இந்த உலகத்திற்கு இழுத்து வந்தார்.

"நான் வந்துவிட்டால் இதையெல்லம் யார் கவனிப்பார்கள் என்று தான் யோசிக்கிறேன்."

"நீ பேசுவதைப் பார்த்தால் இப்பொழுது கட்டியாள்வதெல்லாம் நிரந்தரம் என்று நினைப்பது போல் தெரிகிறது. மாயாஜாலத்தினால் உண்டாகிற பொருள்கள் நிரந்தரமாகாது. எல்லாம் கண்கட்டு வித்தை மாதிரி. வித்தை முடிந்தால் காலி மைதானம்தான்!"

இதைக் கேட்டவுடன் சரஸ்வதி அம்மாவின் மனம் ஒரு கணம் துணுக்குற்றது. அண்ணன் சொல்வது உண்மையாக இருக்குமோ? இதெல்லாம் கிடைத்திருப்பது அப்படித் தானே! ஒரு வேளை, வந்தது போலவே போய்விடுமோ?

"இப்போதைய நிலையில் இருக்கிறபடியே எல்லாம் நிலைத்திருக்க வேண்டுமென்றால், நான் சொல்கிறபடி செய். விஸ்வமங்கலம் வீட்டுக் காரர்கள் அசாதாரணத் திறமை வாய்ந்தவர்கள். எங்கேயிருந்தாலும், அது யாராக இருந்தாலும்



அடக்கி விடுவார்கள். ஆணியறைந்து விடுவார்கள். அதன் பிறகு யாருக்கும் எந்தவித பயமோ, பிரச்சனையோ இருக்காது. நீ யோசனை செய்து முடிவெடுத்தால் போதும்."

"நாளைக்குச் சொல்கிறேனே..."

"இப்படிச் சொன்னால் எப்படி? நாளைக்குக் காலையில் வெயிலுக்கு முன்னால் நாம் புறப்பட வேண்டும்."

"இப்படி அவசரப்படுத்தினால் எப்படி? எல்லாவற்றையும் அப்படியப்படியே போட்டுவிட்டு வர முடியுமா?"

"சரி. இனிமேல் எல்லாவற்றையும் உன் விருப்பப்படியே செய்து கொள். நான் நல்லது சொல்லவில்லையே என்று நாளைக்கு என் மீது குற்றம் சொல்லக்கூடாது."

சரஸ்வதி அந்தர்ஜனம் மீண்டும் யோசித்தார். அண்ணன் இவ்வளவு தூரம் சொல்வதில் விஷயமில்லாமலா இருக்கும்? இருந்தாலும் விஷ்ணுவிடம் ஒரு வார்த்தை கேட்காமல் எப்படிப் புறப்படுவது என்றும் நினைத்தார். "விஷ்ணு காலையில் எழுந்திருக்கும்போது விடிந்துவிடும். பிறகு கேட்டால் போதுமில்லையா?"

தங்கையை அதிகமாக வற்புறுத்த வேண்டாம் என்பதற்காகச் சரி என்றார் கோபாலன். பிடிவாதமாக இருந்தால் தங்கை வர மறுத்து விட்டால் தன்னுடைய திட்டங்கள் எல்லாம் குழப்பத்தில் முடியும். எனவே விஷ்ணுவிடம் எப்படிச் சொல்லவேண்டும் என்பதையும் கோபாலனே சொல்லித் தந்தார்.

"கேளம்மா சரஸ்வதி, அவனுடைய மாமிக்கு உடம்பு சரியில்லை. அதனால் போய்த் தலையைக் காட்டிவிட்டு வருகிறேன். என்று சொன்னால் போதும், அதிமாக எதையும் பேசவேண்டாம். போக வேண்டாம் என்று விஷ்ணு மறுத்தால், போய்விட்டு உடனே வருகிறேன் என்பதில் நீ உறுதியாக இருக்க வேண்டும்."

அண்ணன் தன்னுடைய நன்மைக்குத்தானே சொல்கிறார் என்று அவருக்குத் தோன்றியது. எனவே சம்மதித்தார். மறுநாள் காலையில் விஷ்ணு வழக்கத்தை விட சீக்கிரமாகவே எழுந்து விட்டான். அதற்குள் தேவப்ரியா எழுந்து ஆற்றுக்குப் போய், குளியலை முடித்துக்கொண்டு

சமையல்கட்டுக்குள் புகுந்து விட்டிருந்தாள்.

சூரியோதயத்திற்கு முன்பாகவே எழுந்துவிடுவது அவளுடைய வழக்கம். அவளுடைய மோகினி உடல், மனித உடலாக மாறுவதற்கு முன்பே குளித்து, கோயிலுக்குச் சென்று, வணங்கி வருவாள். தேவியிடம் ஒரு ரகசியத்தையும் அவள் மறைத்ததில்லை.

அன்று தேவி அவளிடம் கூறினார்: "நீ கவனமாக இருக்க வேண்டும். நீ ஆர்வக் கோளாறினால் சில அசட்டுத் தனங்களைச் செய்துவிட்டிருக்கிறாய். என்னவோ, இன்னும் அவர்கள் அதைப் புரிந்துகொள்ளாதது உன் அதிர்ஷ்டம்தான்!"

தேவி சொன்ன வார்த்தையின் பொருள் அவளுக்கு விளங்க வில்லை. சொல்வதைக் கேட்டுக் கொள்வதைத் தவிர மறுப்போ, சந்தேகமோ கேட்டுவிட முடியுமா என்ன? இருப்பினும் தேவி சொன்ன வார்த்தை அவள் மனதை அலட்டிக் கொண்டிருந்தது. அதைப் பற்றி யோசித்தபடியே சமையலை மேற்கொண்டிருந்தாள்.

விஷ்ணுவும், அவனது மாமாவும் ஒன்றாகவே காலைப் பலகாரம் சாப்பிட உட்கார்ந்தார்கள். தேவப்ரியா இட்லியைப் பரிமாறினாள். கோபாலன் நம்பூதிரி அவளது ஒவ்வோர் அசைவையும் கவனித்துக் கொண்டிருந்தார். தேவப்ரியா அங்கு வந்து மூன்று மாதங்கள் ஆகி விட்டிருந்தன.

கோபாலன் நம்பூதிரியின் பார்வை தேவப்ரியாவின் வயிற்றிலேயே பதிந்திருந்தது. சாதாரண நிலையில் ஏதாவது ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும். தொப்புள் கொடி இப்பொழுதும் வயிற்றின் உட்புறமாகத் தாழ்ந்தே இருந்தது. வயிற்றில் எந்த மாற்றமும் இல்லை. தேவப்ரி யாவின் உடல் நிலையை வைத்துக் கணக்கிட்டால், அவள் அம்மாவாக வேண்டிய தருணம் இது. ஆனால், அப்படி எதுவும் தெரியவில்லை. கோபாலனது சந்தேகம் வலுத்தது. வேண்டுமென்றே இரண்டாவது முறை இட்லி கேட்டார்.

"இட்லி மல்லிகைப்பூ மாதிரி இருக்கிறது. நல்ல பக்குவம். இதெல்லாம் யாருடைய கைவேலை?"

"எல்லாம் அவளுடைய கைப்பக்குவம்தான்" - சரஸ்வதி அந்தர்ஜனம் கூறினார்.



"சரஸ்வதி, நான் சும்மா சொல்கிறேன் என்று நினைக்கக் கூடாது. இந்த வீட்டுச் சமையலே ஒரு தனி விதம். நளபாகம் என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். இந்த வீட்டிற்கு வந்தால்தான் அதை அனுபவிக்க முடிகிறது."

அண்ணனின் வார்த்தையைக் கேட்டதும் சரஸ்வதிக்கு அது உண்மைதான் என்றே பட்டது. தேவப்ரியா அரைக்க உட்கார்ந்தால் சட்டென்று வேலை முடியும். அரைத்த மாவை எடுத்து ஊதினால் பறக்கும். இட்லியாக மாறிவிட்டாலோ, வெண்ணெயை வழித்துப் பிடித்து வைத்திருப்பதாகத் தோன்றும். ஒவ்வொன்றும் அவ்வளவு நேர்த்தி!

"விஷ்ணு, நான் மாமாவுடன் அவரது வீடுவரை போய்விட்டு வந்து விடுகிறேன்" - கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் சரஸ்வதி பேசினார்.

இதைக் கேட்டவுடன் தேவப்ரியாவின் முகபாவம் மாறியது. அவள் விஷ்ணுவையே கவனித்தாள்.

"என்னம்மா, திடீரென்று?"

"சாவித்ரி அந்தஜனத்திற்கு உடம்பு சரியில்லையாம். நான் போய்த் தலையைக் காட்டிவிட்டு வந்து விடுகிறேன்."

விஷ்ணு ஒருகணம் சங்கடத்தில் ஆழ்ந்தான்.

"நாளைக்கே நான் வந்து விடுகிறேன்" - அம்மா மகனிடம் உறுதியளித்தார்.

விஷ்ணு எழுந்து கை கழுவினான். நேராகத் தனது அறைக்குள் போனான். தேவப்ரியாவும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

"சரஸ்வதி, ஒரு நிமிடம் யோசித்துப்பார்... உன் மருமகளின் வயிற்றை இதுவரை கவனித்திருக்கிறாயா? ஒரு வித்தியாசமுமில்லை. நான் இன்னும் ஒரு விஷயத்தைக் கேட்கட்டுமா? இந்தப் பெண் இங்கு வந்த மூன்றுமாத காலத்தில் தூரமாகி உட்கார்ந்திருந்தாளா?"

சரஸ்வதி அந்தர்ஜனம் ஒரு கணம் யோசித்தார்.

"உண்மைதான்!" - இடி விழுந்தது போல் நடுங்கினார் சரஸ்வதி அந்தர்ஜனம்.



## 30

"நன்றாக யோசனை செய்து பார். நான் சொன்னது உண்மையா, இல்லையா?" - கோபாலன் நம்பூதிரி சகோதரியின் முகத்தைப் பார்த்தபடியே பேசினார்.

சரஸ்வதி அந்தர்ஜனமும் அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தார். தேவப்ரியா இந்த வீட்டிற்கு வந்து மூன்று மாதங்களாகிவிட்டன. ஒருநாள் கூட அவள் ஒதுங்கியிருந்து பார்த்ததே இல்லை. அவளுக்கு மட்டும் ஏன் இப்படி? நான் தனியாகப் படுத்துக் கொள்கிறேன் என்று அவள் ஒருபோதும் சொன்னதே இல்லை. உண்டாகி இருக்கிறாள் என்பதற்கான அடையாளமும் இதுவரை புலப்படவில்லை. குமட்டலோ, புளிப்புப் பதார்த்தங்களில் ஈடுபாடோ இதுவரை அவளுக்கு ஏற்பட்டதில்லை. இப்படியும் ஒரு பெண் பூவுலகில் இருப்பாளா? இந்த வீட்டில் என்னவெல்லாமோ குழப்பங்களும் விபரீதங்களும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், எதுவும் பிடிபட மாட்டேன் என்கிறது.

"இன்னும் ஒரு விஷயத்தையும் சொல்ல வேண்டும். என்னைப் பாம்பு கடித்தபோது அவள் தனது கையால் தொட மட்டுமே செய்தாள். ஆனால்,விஷம் இறங்கிட்டதைப் பார்த்து வைத்தியரே வியந்து போனார். ஒன்று, அவள் பெரிய மந்திரவாதியாக இருக்க வேண்டும். அல்லது மோகினியாக இருக்க வேண்டும்" - கோபாலன் நம்பூதிரி தூண்டிக் கொண்டே இருந்தார்.

"நீங்கள் சொல்வதையெல்லாம் என்னால் மறுத்துப் பேசவும் முடியவில்லை. அதே சமயம் பயமாகவும் இருக்கிறது. தயவு செய்து இதைப் பற்றியே பேசுவதை நிறுத்துங்கள்."

"இல்லை சரஸ்வதி, நீயும் உண்மை என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டாமா? அதற்காகத்தான் இதையெல்லாம் ஞாபகப் படுத்தினேன்."

"நீங்கள் என்ன சொன்னாலும் நான் செய்கிறேன். என்



விஷ்ணுவிற்கு எந்த ஆபத்தும் வராதிருந்தால் போதும்..."

"அதற்காகத்தான் நான் இவ்வளவு பாடுபடுகிறேன். எனக்கென்று வேலை வெட்டி எதுவும் இல்லையா என்ன?"

"அதெல்லாம் கிடக்கட்டும். இதற்கு என்ன பரிகாரம்?"

"அதுதான் சொன்னேனே. நாம் ஒரு தடவை விஸ்வமங்கலம் வீடுவரை போகவேண்டும்."

"அப்படியானால் இருங்கள், இதோ வந்துவிடுகிறேன்." சரஸ்வதி வீட்டிற்குள் போனார்.

தேவப்ரியா, விஷ்ணுவுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

"தேவையில்லாமல் பிரச்சனைகளைக் கிளப்பி விடுவதற்குத்தான் உங்கள் மாமா வந்திருக்கிறார்." என்றாள் தேவப்ரியா.

"போய்த்தான் தீர வேண்டுமென்று அம்மாவும் பிடிவாதம் பிடிக்கிறாரே... இப்பொழுது என்ன செய்யலாம்?"

"அவங்களைப் போக விடுங்க. தடுக்காதீங்க!"

"இந்தப் பயணம் உனக்கு ஏதாவது விபரீதத்தை வரவழைத்து விட்டால் என்ன செய்வது என்பது தான் என்னுடைய பயம்."

"என்ன செய்வது? இப்படிப் புதிது புதிதாக ஒவ்வொன்றாக முளைத்துக் கொண்டிருந்தால் நாம் என்னதான் செய்ய முடியும்? இந்த மாதிரியெல்லாம் ஏற்படுமென்று நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவே இல்லை. போகட்டும். ஒன்றைமட்டும் செய்யுங்கள். அம்மா புறப்படும்போது இந்த நகையைக் கழுத்தில் போட்டுக் கொள்ளச் சொல்லுங்கள். அம்மாவுக்கு எந்த விதமான தொந்தரவும் ஏற்படாமல் இருக்கட்டும்." சொல்லியபடியே அவள் கழுத்திலிருந்த காசு மாலையைக் கழற்றி விஷ்ணுவிடம் கொடுத்தாள்.

"விஷ்ணு" - அம்மா வெளியிலிருந்தபடியே அழைத்தார். அவன் வெளியே வந்து பார்த்தபோது, அம்மா பயணத்திற்குத் தயாராக நின்று கொண்டிருந்தார்.

"அம்மா, இதைக் கழுத்தில் போட்டுக் கொள்ளுங்கள்."

"இதெல்லாம் வேண்டாம் விஷ்ணு. எனக்கு ஏன் இதெல்லாம்? உன் அப்பா காலமான பிறகு நான் எந்த நகையையும் போட்டுக் கொள்வதில்லையே?"

"அது நம்மிடம் இல்லாததனால்தானே. இருந்தால் நீங்கள் போடுவதை யார் தடுக்க முடியும்? என்ன இருந்தாலும் இப்பொழுது வெறும் கழுத்துடன் போகாதீர்கள்!"

விஷ்ணுவின் வற்புறுத்தலை, மறுக்க முடியாமல் சரஸ்வதி அதை வாங்கித் தன் கழுத்தில் போட்டுக் கொண்டார்.

"அவள் எங்கே?"

"இதோ இருக்கிறேன்" என்றபடி வெளியே வந்தாள் தேவப்ரியா.

"சீக்கிரம் வந்துவிடுங்கள் அம்மா..."

"அங்கு எனக்கென்ன வேலை? பார்த்து விசாரித்துவிட்டு உடனே கிளம்ப வேண்டியதுதான்."

சரஸ்வதியும், கோபாலனும் வெளிவாசலைக் கடப்பதைப் பார்த்துக் கொண்டே நின்றனர் விஷ்ணுவும், தேவப்ரியாவும்.

விளக்கு வைப்பதற்கு முன்பாகவே அவர்கள் விஸ்வமங்கலம் வீட்டை அடைந்தார்கள். கோபாலன் நம்பூதிரி கொஞ்சம் அதிகாரக் குரலில் தேவகியை அழைத்து, சகோதரியை அறிமுகப் படுத்தினார். "இதுதான் என்னுடைய சகோதரி.!"

"வாங்க... வாங்க..."- தேவகி அவரை வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள்.

ஜயந்தன் அப்பொழுது வீட்டில் இல்லை. நேரம் கழித்து தான் வந்து சேர்ந்தார். விஷ்ணுவின் அம்மா வந்து விட்டார் என்பதை அறிந்தபோது ஜயந்தனுக்கு மகிழ்ச்சி தோன்றியது. இனிமேல் தன்னுடைய நோக்கம் படிப்படியாக வெற்றியடைந்துவிடும் என்பதில் சந்தேகமே இல்லை. தன்னைப் பயமுறுத்தி, ஆபத்திற்குள்ளாகக் முயலும் மோகினியை என்றென்றைக்குமாக இல்லாமலாக்கி விடுவதற்கான தன்னுடைய முயற்சிகள் பலிப்பதாகவே நினைத்தார்.

இருவரும் சேர்ந்து குளிக்கப் போனார்கள். போகிற வழியில் கோபாலனிடம் பல விஷயங்கள் குறித்தும் மனம் விட்டுப் பேசினார் ஜயந்தன். ஆனால், விஷ்ணுதேவனைப் பற்றியும், நங்கேமா பிரம்ம ரக்ஷஸ் பற்றியும் எச்சரிக்கையுடன் பேசாமலிருந்தார். விஷ்ணுவை நங்கேமாவிற்குப் பலியாக்கினால், அவள் தன்னுடைய நீண்ட நாள்



மோகத்தைத் தணித்துக்கொண்டு அவனைக் கொன்று விடுவாள் என்றும், அதன்பிறகு தேவப்ரியா என்கிற மோகினி தன்னுடைய சொற்படி நடக்கும் ஒரு பாவையாகி விடுவாள் என்றும் ஜயந்தன் கனவு கண்டார்.

சாப்பாட்டை முடித்துக் கொண்ட பிறகு பெண்களும் கூடத்துக்கு வந்தனர். பேச்சு தேவப்ரியாவைப் பற்றித் திரும்பியது.

"கேட்டீர்களா மாமி...?" - குதப்பிய வெற்றிலை பாக்கு எச்சிலை இரண்டு விரல்களுக்கு இடையில் உதடுகளை அழுத்தி வெளியே துப்பியபடி ஜயந்தன், சரஸ்வதியிடம் பேசத் தொடங்கினார். "அந்தப் பெண்,மனித ஜாதியே இல்லை. சுத்தமான மோகினி ஜாதி. அதற்கான ஆதாரமெல்லாம் எனக்குக் கிடைத்திருக்கிறது."

சரஸ்வதி கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"நான் கொடுத்தனுப்பிய சிமிழில் இருந்தது மாற்று மருந்தே இல்லாத கடுமையான பாம்பு விஷம். விஷ்ணுவுடன் அவள் படுத்து உறங்கும்போது அவளைக் கொத்த வேண்டுமென்பதற்காகவே நான் கொடுத்து அனுப்பியிருந்தேன். அப்படி நான் ஜபித்து அனுப்பிய பாம்பை எந்த மனிதப் பெண்ணாலும் ஒன்றும் செய்ய முடியாது! அந்த ஒரு விஷயத்திலிருந்தே அவள் மோகினிதான் என்பது சந்தேகமின்றி நிரூபணமாகி விட்டது!"

இதைக் கேட்டவுடன் சரஸ்வதியின் முகம் வெளுத்தது. 'விஷ்ணு எப்படி அவளுடன் குடும்பம் நடத்துகிறான்?' என்று யோசித்தார்.

"உங்கள் மகனைப் பற்றித்தானே யோசிக்கிறீர்கள்?" ஜயந்தன் கேட்டார்.

"ஆமாம்!"

"இப்படிப்பட்ட சம்பவங்கள் இதற்கு முன்பும் நடந்துள்ளன. எட்டி மரத்திலும், வேறு பல மரங்களிலும் ஆணியறையப்பட்ட மோகினிகள், எதேச்சையாக அவற்றிலிருந்து விடுபட்டு சிலருடன் குடும்பம் நடத்தி வாழ்ந்த கதையை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட மோகினிகள் கடைசியில் தங்களது இயல்பைக் காட்டவே செய்வார்கள்."

சரஸ்வதியின் முகத்தில் பயத்தின் படிவங்கள் மேலும் மேலும் படிந்தன.

"அது எப்படியெல்லாம் நடந்துகொள்ளுமென்று நேரடியாகவே சொல்லி விடுகிறேனே. இதை நீங்கள் தெரிந்து வைத்திருப்பதும் நல்லதுதான். பொதுவாக மோகினிகள் காமவெறி பிடித்தவர்கள். எந்த ஒரு மனித உடலும் அவர்களைத் தொடர்ந்து திருப்திப்படுத்தும் என்று கூற முடியாது. புருஷன் பலவீனமடைவான். அப்படிப்பட்ட நிலைமையில் மோகினிகளுக்குப் புருஷனுடன் சலிப்பு தோன்றி, சலிப்பு வெறுப்பாகி, வெறுப்பு வைராக்கியமாகி, கடைசியில் விபரீதத்தில் வந்து முடியும்." - ஜயந்தன் மூச்சு விடாமல் பேசினார்.

"நீங்கள் இவ்வளவு சொன்ன பிறகு, நான் ஒரு கேள்வி கேட்கலாமா?" - ஜயந்தனின் முகத்தைப் பார்த்தபடி சரஸ்வதி கேட்டார்.

"தாராளமாகக் கேளுங்கள்..."

"அவள் ஒரு மோகினியாக இருந்தால் பகல் நேரத்தில் எப்படி அவளால் சாதாரணமாக உலவ முடிகிறது? இப்படிப்பட்ட மோகினிகள் சில நேரங்களில் மட்டும் தான் இப்படி வடிவம் மாற முடியும் என்று என்னுடைய பாட்டி சொல்லியிருக்கிறாரே?"

"அவர்கள் சொன்னது சரிதான். ஆனால், ஒரு விஷயம். பகலில் அவள் மனிதப் பெண்ணாக உலவுவதற்கு வேறு யாரோ அவளுக்கு உதவியிருக்கிறார்கள். என்னைப் போன்ற மந்திரவாதிகளால் கூட அதைச் செய்ய முடியும். அந்தக் காலத்தில் எங்கள் தாத்தா சூரியநாராயணன் மந்திரவாதியாக இருந்தபோது ஒரு மோகினியைத்தான் எங்கள் வீட்டு வேலைகளுக்குப் பயன்படுத்தியிருந்தார். நாங்கள் எல்லோரும் அப்போ சின்னக் குழந்தைகள். எங்களைக் குளிப்பாட்டியதும், கவனித்துக் கொண்டதும், எங்களுக்குக் கதைகளைச் சொன்னதும் கூட அந்த மோகினிதான். பிறகு திடீரென்று ஒருநாள் அதைக் காணவில்லை. பக்கத்து வீட்டு வேலைக்காரியின் பையனைக் காணவில்லையென்கிற செய்தி வந்தவுடனேயே, தாத்தா அந்த மோகினியைப் பிடித்து, மறுபடியும் எட்டி மரத்தில் ஆணியறைந்தார்."

ஐயோ... ஓமல்லூர் கோயில் பகவதியே..." - சரஸ்வதி அந்தர்ஜனம் திகைப்புடன் நெஞ்சில் கை வைத்துப் போசினார்.

"ஆனால், நீங்கள் கொஞ்சம்கூடப் பயப்படவேண்டாம்.



எல்லாவற்றையும் நான் சரியாக்கிவிடுகிறேன். அந்த மோகினி என்ன, அதைவிடப் பெரிய பெரிய மோகினிகளையெல்லாம் நான் ஆணியறைந்து அடக்கியிருக்கிறேன். ஆனால், இவள் விஷயத்தில் வேறு எங்கேயோ ஒரு தடை இருக்கிறது. அதாவது எங்கிருந்தோ அவளுக்கு நல்லாதரவு இருந்து கொண்டே இருக்கிறது. அதுதான் உடனடியாக அவளை நான் நெருங்க முடியாமல் தடுக்கிறது."

சரஸ்வதி நிம்மதியிழந்தார். ஜயந்தன் தொடர்ந்தார்:

"பரவாயில்லை. அந்த மோகினிக்கு உதவும் பலவான் யார் என்று பார்த்துவிடலாம். இதையெல்லாம் தெரிந்துகொள்ள இரவில்தான் பிரஸ்னம் பார்க்க வேண்டும்."

ஜயந்தன் பிரஸ்னப் பலகையையும், ராசிக்கட்டத்தையும் எடுத்து வந்தார். குத்துவிளக்கைத் தள்ளிவைத்தார். விளக்கில் மேலும் இரண்டு திரிகளைக் கொளுத்தினார். பிரகாசம் சட்டென்று அதிகமானது.

ஜயந்தன் துணிப் பையிலிருந்து ஒரு கை நிறையச் சோழிகளை வாரி ராசிப் பலகையின் மீது வைத்தார்.

அப்பொழுது சரஸ்வதி அந்தர்ஜனத்தின் கழுத்தில் கிடந்த காக மாலையிலிருந்து புறப்பட்ட ஓர் ஒளி ராசிப் பலகையின் மீது பிரதிபலித்தது.

திடுமென்று ஜயந்தனின் முகம் இருண்டது. திடுக்கிட்ட அவர் பின்புறமாக நகர்ந்தார்!

30233
4666159

## 31



ஜயந்தன் கண்ட காட்சி எவரையும் நடுநடுங்க வைக்கக் கூடியதாக இருந்தது. தங்கத்தினாலான ஒரு பாம்பு படம் உயர்த்தியபடி கேள்விக்குறி போல் நின்றிருந்தது. ஆனால், அது மற்றவர்களின் கண்களுக்குத் தெரியவே இல்லை.

"ஓகோ, அப்படியா சங்கதி!" ஜயந்தன் முணுமுணுத்தார். பிறகு

சோழியை வாரிப் பலகையில் வைக்க முயன்றபோது, அந்த பாம்பு அசைந்தது. சட்டென்று கையைப் பின்னுக்கு இழுத்தார்.

தன்னுடைய மூதாதையரும் மகாமாந்திரீகனுமான சூரிய நாராயணன் நம்பூதிரியை மனதில் நினைத்துத் தியானித்தவாறு மீண்டும் சோழியை எடுக்க முயன்றபோதும் நிலைமை மாறவில்லை.

'அப்படியானால் போராடிப் பார்த்துவிட வேண்டியது தான்!' என்று நினைத்தபடி தன்னுடைய கழுத்தில் கிடந்த ருத்ராக்ஷமாலையைக் கழற்றி, பிரஸ்னப் பலகையின் மீது வைக்க முயன்றபோது, சரஸ்வதி அந்தர்ஜனம் தன் கழுத்தில் நீண்டு தொங்கிக் கொண்டிருந்த மாலையை இயல்பாக எடுத்து ரவிக்கைக்குள் போட்டார். பலகையில் இருந்த பாம்பு சட்டென்று மறைந்தது.

தான் ருத்ராக்ஷ மாலையை எடுத்து வைத்ததால்தான் பாம்பு மறைந்து போனதென்று ஜயந்தன் நினைத்தார். இந்த எண்ணமே அவருக்கு ஒரு புதுத் தைரியத்தை வழங்கியது. மறுபடியும் ருத்ராக்ஷத்தைக் கழுத்தில் போட்டுக்கொண்டு சோழியை வாரி வைத்தார். மலர்ந்தும் புரண்டும் சோழிகள் விழுந்தன. அதிலிருந்து எண்ணிக்கையைக் கூட்டி, கணக்கிடத் தொடங்கும்போது திடுமென்று ஒரு சம்பவம் நடந்தது.

அறையின் மேற்புற மாடியில் ஊர்ந்து கொண்டிருந்த மிகப் பெரிய பல்லி ஒன்று சட்டென்று சுவரிலிருந்து தன் பிடிப்பைவிட்டு நேராக விளக்கின் மீது விழுந்தது. விளக்கின் மூன்று திரிகளும் சட்டென்று அணைந்தன.

"என்ன இது" -ஜயந்தன் அலறினார்.

நிலவிளக்கு அணைந்தவுடன் தேவகி அந்தர்ஜனம் மற்றொரு வெண்கல விளக்கை எடுத்து வந்தாள். அணைந்துபோன விளக்கின் திரிகளைக் கொளுத்துவிட்டு, சரஸ்வதி அந்தர்ஜனத்தை அழைத்துக் கொண்டு வீட்டிற்குள் சென்றாள்.

"மொத்தத்தில் எல்லாமே அபசகுனங்களாகவே தெரிகிறதே"- ஜயந்தன் கூறினார்.

"அப்படியானால் என்னதான் செய்வது?" -கோபாலன் கேட்டார்.

"பயப்படும்படி எதுவுமில்லை. இதெல்லாம் மிகவும் சாதாரண



விஷயங்கள். இன்றுவரை விஸ்வமங்கலக் குடும்பத்திற்கு தோல்வி நேர்ந்ததில்லை. இனிமேலும் ஏற்படுவதற்குச் சாத்தியமில்லை."

கோபாலன் ஜயந்தனையே பார்த்துக் கொண்டிருந்தார். "இதற்கெல்லாம் என்ன தான் பரிகாரம்?"

"இப்பொழுது நமக்குத் தெரிய வேண்டியது அவளைப் பற்றித்தான். அவள் மனிதப் பெண்தானா அல்லது வேறு ஏதாவதா என்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும்."

"அவள் மனிதப் பெண்ணே அல்ல என்பதுதான் தெளிவா விட்டிருக்கிறதே..."

"சொல்ல முடியாது. சில நேரம் உபாசனை இருக்கலாம்."

"அதை மாற்றிவிட முடியாதா?"

"செய்யலாம். அதற்கென்று ஒரு சிறிய வேலை செய்ய வேண்டும்."

"நம்மால் முடியாத விஷயமா என்ன?"

"முடியாதது என்று ஒன்றுமில்லை. விஷயம் மிகவும் ரகசியமாக இருக்க வேண்டும். அதை உங்களிடம் எப்படிச் சொல்வது என்பது புரியாமல்தான் குழம்புகிறேன்" - ஜயந்தன் மென்று விழுங்கியபடி பேசினார்.

விஷயம் என்னவென்று தெரிந்துகொள்ளும் வேட்கை கோபாலனுக்கு ஏற்பட்டது. அது மட்டுமின்றி, இந்த விஷயத்தில் எந்தவிதமான பிரச்சனைகள் ஏற்பட்டாலும் ஒரு கை பார்த்து விடுவது என்றே தீர்மானித்திருந்தார். 'மருமகனின் ஆணவத்தையும், அவனது மனைவியின் செல்வாக்கையும் அடக்கிவிட்டுத்தான் மறு வேலை' என்று மனதிற்குள் சபதமே செய்துவிட்டிருந்தார்.

"என்ன வேண்டுமோ சொல்லுங்கள். எல்லாவற்றையும் தீர்மானித்த பிறகுதான் இந்தத் தடவை வந்திருக்கிறேன். என்ன வந்தாலும் நான் பின்வாங்கப் போவதில்லை. அது உறுதி."

"அப்படியானால் சொல்கிறேன். எங்களுடைய குடும்பத்தில் ஒரு பிரம்மரக்ஷஸ் உள்ளது. எத்தனையோ வருடங்களுக்கு முன்னால் ஒரு காரணவரின் கோபத்தால் நிகழ்ந்த சம்பவம் அது. நங்கேமா, அழகியென்றால் அப்படி ஒரு அழகி. ஒரே ஒருமுறை எப்படியோ

ஏற்பட்டுவிட்ட தொடர்பில் அவள் கர்ப்பவதியானாள். அதன் காரணமாகவே அந்த மரணம் நிகழ்ந்தது."

"அதற்கும் இதற்கும் என்ன தொடர்பு?"

"அழகானவனும், ஆரோக்கியம் நிறைந்தவனுமான ஒரு நம்பூதிரி இளைஞன், நங்கேமாவைத் திருப்தி செய்துவிட்டால், அவளுடைய கருணை நமக்குக் கிடைக்கும்."

நங்கேமா, தங்கள் குடும்பத்திற்கு எதிராகச் செயல்படுகிறாள் என்பதை கோபாலனிடம் மறைத்தார் ஜயந்தன். அவருடைய லட்சியமே வேறு. விஷ்ணுதேவனை விஸ்வமங்கலம் குடும்பத்திற்கு வர வழைப்பதும், அவனை நங்கேமாவிற்கு வழங்கி விடுவதும்தான் நோக்கம். வாசு நம்பூதிரிக்கு நேர்ந்தது போல் விஷ்ணுவிற்கும் நேர்ந்துவிடும். அத்துடன் நங்கேமா இந்தக் குடும்பத்தின் மீது இட்ட சாபமும் விலகிவிடும். விஷ்ணுவின் வீட்டிலுள்ள மோகினி தனிமைப்படுத்தப்படுவாள். பிறகு அவளை ஆட்டி வைப்பது ஒரு பிரச்சனையே அல்ல. இப்படி ஒரே அம்பில் இரண்டு பறவைகளை வீழ்த்திவிடலாம் என்பது அவருடைய திட்டம்.

"நீங்கள் சொல்வது உண்மையானால் அதற்குத் தகுந்தவன் என் மருமகன் விஷ்ணுதான்!"

"நீங்கள் இதை மட்டும் செய்துவிட்டால், பிறகு வெற்றிக்கு நான் பொறுப்பு" - ஜயந்தன் உறுதியளித்தார்.

"எதற்கும் அவனை இங்கே வரவழைத்து விடலாமா?" -கோபாலன் ஜயந்தனிடம் கருத்துக் கேட்டார்.

"மிகவும் நல்லது. அவனுடைய அம்மாதான் இங்கே இருக்கிறார்களே. அம்மாவிற்கு உடம்பு சரியில்லையென்று இங்கு அழைத்துக்கொண்டு வந்துவிடுங்கள். மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன்."

'இது நல்ல திட்ட'மென்று கோபாலனுக்குத் தோன்றியது. "அப்படியானால் நான் நாளைக்கே புறப்படுகிறேன்" என்றார் கோபாலன்.

இரவுச் சாப்பாடு முடிந்து • தேவகியுடன் கட்டிலில் படுத்திருக்கும்போது கோபாலன் நம்பூதிரியின் யோசனை குருக்ஷேத்ர



மனையைச் சுற்றியே வட்டமடித்தது.

தேவப்ரியாவின் மீது கோபாலனின் சந்தேக வளையங்கள் இறுகத் தொடங்கின. அன்றைய பாம்புக்கடி சம்பவத்திற்குப் பிறகு ஏதோ ஒரு அற்புதமான சக்தி அவளிடம் உள்ளது என்று தோன்றியது. அதனால் அங்கே சென்றாலும்ட அவளை மீறி விஷ்ணுவை அழைத்துக் கொண்டு வர முடியுமா என்பதும் சந்தேகமாகவே இருந்தது.

"என்ன, உறக்கம் வரவில்லையா?" தேவகி கேட்டாள்.

"இல்லை."

"எதைப்பற்றி யோசிக்கிறீர்கள்?"

மறுநாள் குருக்ஷேத்ரமனைக்குப் போவதைக் குறித்தும், அங்கிருந்து விஷ்ணுதேவனை இங்கு அழைத்து வருவது குறித்தும் யோசிப்பதாக கோபாலன் கூறினார்.

"உங்கள் மருமகனைப்பற்றிப் பேசினீர்களே, ஆள் எப்படிப்பட்டவர்?"

"கெட்டிக்காரன்."

"அப்படியென்றால்?"

"எல்லா விஷயத்திலும் கெட்டிக்காரன்.!"

"நான் அழகைப் பற்றிக் கேட்கவில்லை. ஆரோக்கிய நிலை எப்படிப்பட்டது என்று கேட்கிறேன்."

"என்ன, இப்படியொரு கேள்வி?"

"எந்தக் காரணமுமில்லை. ஒரு பேச்சுக்காக கேட்டேன்."

தேவகி அந்தர்ஜனத்தின் மனம் ஒரு குறிப்பிட்ட பாதையில் இறங்கியது. நாற்பது வயது வரை புருஷக்காற்று படாமல், வீட்டிற்குள்ளேயே வளர்ந்து வந்த அவளைப் பொறுத்தவரை, முதன் முதலில் அவள் புருஷனை உணர்ந்தது தானவேநம்பூதிரி மூலமாகத்தான். தானவேதனால் கிளறப்பட்ட அவளது உணர்வுகள் ஓரளவு ஆறுதலடைந்து அடங்கியது. பிறகு பழக்கமேற்பட்டது கோபாலன் நம்பூதிரியால். இதற்குப் பிறகு அவளது மனம் வெவ்வேறு வகையிலான ஆண்களைப் பற்றி நினைக்கத் தொடங்கியது. ஒவ்வொருவரிடமிருந்து பெறும் வேறுபாடான அனுபவத்திற்காகப்

பறந்தது. உணர்வுகள் அவளுக்குள் அக்கினியாக ஜொலித்துக் கொண்டிருந்தன.

விஷ்ணுதேவன் என்கிற பெயரை முதன்முறையாகக் கேள்விப் பட்டபோதே அவனைச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டுமென்று தேவகி தீர்மானித்திருந்தாள். அவனது உருவம் எப்படி இருக்கக்கூடும் என்பதைக் கூடக் கற்பனை செய்து விட்டாள்.!

கோபாலன் நம்பூதிரியின் வலது கை அவளது வயிற்றின் மேற்புறமாக ஊர்ந்தபோது, அவள் சட்டென்று திரும்பிப் படுத்தாள். என்ன காரணத்தினாலோ அந்தக் கையின் ஸ்பரிசம் அவளுக்குள் வெறுப்பைத் தோற்றுவித்தது. !

"ஏன், என்ன ஆகிவிட்டது உனக்கு?" - கோபாலன் பரபரப்புடன் கேட்டார்.

"ஒன்றுமில்லை. தூக்கம் வருகிறது" - சொல்லியபடியே, கையை மேற்கொண்டு அனுமதிக்காமல் தட்டி விட்டாள்.

வெயிலேறுவதற்குள் கோபாலன் நம்பூதிரி தன் பயணத்தைத் தொடங்கினார். குருக்ஷேத்ரமனையை அடைந்தபோது துளசி மாடத்தில் விளக்கு வைத்தாகி விட்டது. வந்தவர் நேராகக் கிணற்றடிக்குச் சென்று கை கால், முகம் அலம்பித் திண்ணைக்கு வந்தார். தேவப்ரியா நிலவிளக்கிற்கு அருகில் உட்கார்ந்து சந்தியா நாமம் ஜபித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு அருகிலேயே விஷ்ணுவும் உட்கார்ந்திருந்தான்.

"என்ன மாமா இந்த நேரத்தில்?" விஷ்ணு அவரிடம் கேட்டான்.

"ஒன்றுமில்லை. நீங்கள் நாமம் ஜபியுங்கள்" - சொல்லியபடியே திண்ணையின் ஓர் ஓரமாகத் தள்ளி உட்கார்ந்தார்.

தேவப்ரியா ஸ்தோத்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்தாள். சற்றும் தடுமாறாமல், சுத்தமான உச்சரிப்புடன் அவள் நாமம் சொல்வதை அவர் வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தார். 'இவள் சாதாரண மானவளல்ல!' - அவர் மனம் மந்திரித்தது.

நாமம் ஜபித்து முடித்தவுடன் விஷ்ணுதேவன் கேட்டான்: "என்ன மாமா, இவ்வளவு சீக்கிரமே வந்து விட்டீர்கள். ஆமாம், அம்மா எங்கே?"



"ஒன்றுமில்லை. அங்கு போய்ச் சேர்ந்த உடனே உன் அம்மாவிற்கு உடம்பு சரியில்லாமல் போய்விட்டது."

"என்ன, அம்மாவிற்கு உடம்பு சரியில்லையா? இங்கிருந்து போகும் போது எந்தவிதமான பிரச்சனையும் இல்லாமல் அவர்கள் உடம்பு நன்றாகத்தானே இருந்தது?"

"ஏற்கெனவே அவர்களுக்கு முடியாமல்தான் இருந்திருக்கிறது. வீட்டிற்குப் போனவுடன் சட்டென்று வெளிப்பட்டு விட்டது. வைத்தியரின் வீட்டில்தான் அம்மாவைத் தங்க வைத்திருக்கிறேன்."

"ஓகோ... அப்படியா? அப்படியானால் உடனே புறப்பட்டு விடலாமில்லையா?" - விஷ்ணுதேவன் சொல்லியபடியே தேவ ப்ரியாவைப் பார்த்தான்.



## 32

தேவப்ரியா, விஷ்ணுதேவனைச் சற்று நேரம் உற்றுக் கவனித்துவிட்டு வீட்டிற்குள் போனாள். 'கோபாலன் நம்பூதிரி ஏதோ மோசமான திட்டத்துடன்தான் வந்திருக்கிறார்!' என்பது அவளுக்கு விளங்கிவிட்டது. அவள் மனம் எச்சரித்தது.

அவள் தன்னுடைய சுயஉருவிற்கு மாறி விட்டிருந்தாள். அவள் நினைத்தால் இப்போது கோபாலனுக்குத் தொல்லை கொடுக்க முடியும். தன்னையும், தன் காதலனையும் ஏமாற்றி வஞ்சகம் புரிய வந்திருக்கிற அவருக்குச் சரியான தண்டனை கொடுக்க முடியும். அன்று இரவு கோபாலன் அங்குதான் தங்கப் போகிறார். படுத்திருக்கும்போது தன்னுடைய மற்றொரு வடிவத்தைக் காண்பித்தால், அதற்குப் பிறகு அவரால் படுக்கையை விட்டு எழுந்திருக்கவே முடியாது.!

அதர்மத்தை அதர்மத்தினால் சந்திப்பதில் எந்த ஒரு தவறும் இல்லையென்று அவளுக்குத் தெரியும். ஆனால், விஷயம்

எப்படியாவது வெளியாகிவிட்டால் அது தனக்கும் விஷ்ணுவிற்கும் பின்னால் வேறு வகையான விபரீதங்களைக் கொண்டுவந்து சேர்க்கும் என்பதாலேயே அந்த யோசனையையே ஒதுக்கினாள்.

"என்ன செய்யலாம் விஷ்ணு? நாம் உடனே புறப்பட்டு விடலாமா?" மாமா கேட்டார்.

"அம்மாவிற்கு உடம்பு சரியில்லையென்னு கேள்விப்பட்ட பிறகு போகாதிருக்கவும் முடியாது. இருந்தாலும், இவளை இங்கு தனிமையில் விட்டு விட்டு வரவேண்டியிருப்பதை நினைக்கும்போது அதற்கும் மனம் ஒப்பவில்லை" - விஷ்ணு தாழ்ந்த குரலில் கூறினான்.

"நல்ல யோசனை! அம்மாவிற்கு உடம்பு சரியில்லை என்று தெரிந்து கொண்ட பிறகும், பயமெல்லாம் உன் சம்சாரத்தைப் பற்றித்தான் இல்லையா, வேடிக்கைதான்!"

"அம்மாவிற்கு அந்த அளவிற்கா மோசமாக உள்ளது?"

"நீ இந்த மாதிரி கேள்வி கேட்பதே சரியில்லை. அம்மாவிற்கு உடம்பு சரியில்லை என்று கேள்விப்பட்டவுடன் வாரிச் சுருட்டிக் கொண்டு புறப்பட வேண்டாமா? அதற்குப் பிறகு உன் இஷ்டம்..."

விஷ்ணு தர்மசங்கடத்தில் ஆழ்ந்தான். இறுதியாக, தேவப்ரியாவிடம் ஆலோசனை கேட்பது என்று தீர்மானித்தான்.

விஷ்ணுதேவன் சமையலறைக்குச் சென்றான். தேவப்ரியா சமையல் வேலைகளில் தீவிரமாக இருந்தாள். அவியல், சாம்பார் எல்லாம் இறக்கி வைக்கப்பட்டிருந்தன. அப்பளம் பொரிக்கும் பணியில் முனைந் திருந்தாள்.

"என்ன செய்வது என்று ஒன்றுமே புரியவில்லை."

"உங்க அம்மா எப்படி இருக்கிறார்கள் என்கிற செய்தி கிடைத்தால் போதுமா?"

"தற்சமயத்திற்கு அது தெரிந்தாலும் போதும்."

"அப்படியானால் அதற்காகக் கவலைப்படாதீர்கள். சாப்பிட்டு விட்டு உங்கள் மாமாவிடம், இன்று இங்கேயே படுத்துக் கொள்ளச் சொல்லுங்கள். மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன். வருகிறேன் என்றோ, வர மாட்டேன் என்றோ அவரிடம் எதையும் கூறவேண்டாம். என்னை நீங்கள் நம்புகிறீர்கள், இல்லையா?"



"என்ன தேவப்ரியா இப்படிக் கேட்கிறாய்? உன்னை நம்பாமல்...?"

புறப்பட வேண்டும் என்கிற வேட்கையுடன், மாமா திண்ணையிலேயே பரபரப்புடன் இருந்தார்.

"வாருங்கள் மாமா, குளித்துவிட்டு வரலாம்" - விஷ்ணு அவரை அழைத்தான்.

சாப்பிட வேண்டிய வேலை ஒன்று இருந்ததால் கோபாலன் மறுத்து எதுவும் பேசாமல் புறப்பட்டார். இருவரும் ஆற்றை நோக்கி நடந்தனர்.

இன்று கோபாலன் குளிப்பதற்கு அதிக நேரம் எடுத்துக் கொள்ளவில்லை. சட்டென்று குளித்துக் கரையேறிவிட்டார்.

வீட்டிற்கு வந்தபோது சாப்பாடு தயாராக இருந்தது. இலையில் மல்லிகைப் பூப் போன்ற சாதம். அவியல், சாம்பார், வடுமாங்காய், அம்பழங்காய் ஊறுகாய், அப்பளம் எல்லாம் ஆசையைக் கிளப்பின.

இவ்வளவு வாசனையுள்ள பதார்த்த வகைகளை அவர் இங்கு மட்டுமே சாப்பிட்டிருக்கிறார்.

"இதெல்லாம் தேவப்ரியாவின் கைப்பக்குவம் தான் இல்லையா?" - மாமா கேட்டார்.

"ஆமாம் மாமா, அவளது சமையலே ஒரு தனி ரகம். மறக்க முடியாத சமையல்" விஷ்ணு கூறினான்.

"உண்மைதான். நளபாகம் என்பது இதுதான்" - மாமா வார்த்தைகளை நீட்டி இழுத்தார்.

"சாப்பாட்டையே இப்படிச் சொல்லிவிட்ட நீங்கள் பாயசம் சாப்பிட்டால் என்ன சொல்லப் போகிறீர்களோ?" தேவப்ரியா சிரித்தபடியே பேசினாள்.

"ஓகோ பாயசமும் தயாராகிவிட்டதா? அதுவும் இவ்வளவு சீக்கிரமாகவா?" கோபாலன் ஆச்சரியப்பட்டார்.

"சாப்பாடு முடிந்ததும் தரலாம் என்று காத்திருக்கிறேன்."

"பரவாயில்லை. எடுத்து வாம்மா" - கோபாலன் கேட்டார்.

தேவப்ரியா சமையலறைக்குச் சென்று சற்று நேரத்தில் திரும்பி வந்தாள். அவளது கையில் பளபளப்பாகத் தேய்த்த பாத்திரத்தில் ஆவி

பறக்கும் பால் பாயசமிருந்தது. பாத்திரம் போலவே தேய்த்துப் பளபளப்பாக்கிய இரண்டு வெண்கல டம்ளர்களை வைத்துப் பாயசத்தை ஊற்றினாள்.

பாயசத்தின் வாசனை மூக்கில் பட்டதுமே, சாப்பாடு முடிவதற்கு முன்பாகவே அதைப் பருக வேண்டுமென்று கோபாலனுக்குத் தோன்றியது. அடிக்கடி அவர் பாத்திரத்தையே பார்ப்பதைக் கவனித்த தேவப்ரியா, டம்ளர்களை அவர் பக்கமாகத் தள்ளி வைத்தாள்.

கோபாலன் பாயசத்தை எடுத்து ஒரு மிடறு விழுங்கினார். அருமையாக இருந்தது. அமிர்தம் என்ற வார்த்தையைத்தான் கோபாலன் இதுவரை கேட்டிருந்தார். அது இதுதானோ?

ஒரு வகையில் பார்த்தால் விஷ்ணுதேவன் அதிர்ஷ்டசாலி என்று தோன்றவும் செய்தது. மறுபுறம் அதற்காகவே அவன்மீது காரணமற்ற வெறுப்பும், வைராக்கியமும் உயர்ந்தது. 'கூட்டவே கூடாது. இந்தக் குடும்பத்தை எந்தக் காரணம் கொண்டும் விட்டு வைக்கவே கூடாது' என்கிற பிடிவாதமும் மேலோங்கியது.

சாப்பாட்டிலிருந்து எழுந்திருக்க நேரம் அதிகமானது. மாமனும், மருமகனும் சாப்பாட்டிற்குப் பிறகு வெளித்திண்ணையில் வந்து உட்கார்ந்தனர்.

"சரி, புறப்பட வேண்டியதுதானே?" கோபாலன் கேட்டார்.

விஷ்ணுதேவன் மறுபடியும் தர்மசங்கடத்தில் ஆழ்ந்தான். அப் பொழுது தேவப்ரியா வெற்றிலைப் பெட்டியுடன் வெளியே வந்தாள்.

"இந்தாங்க மாமா, நல்ல களிப்பாக்கும், துளிர் வெற்றிலையும், சர்க்கரையில் ஊறவைத்த பன்னீர்ப் புகையிலையும் இருக்கு!" பெட்டியை அவர் எதிரே வைத்தபடி கூறினாள்.

வெற்றிலைபாக்குப் போடுவது, அதுவும் இரவுச் சாப்பாட்டிற்குப் பிறகு போடுவது ஒரு வகையில் அவருக்கு நிர்ப்பந்தமும்கூட. வெற்றிலை போட்டார். புகையிலை போட்டு இரண்டு தடவை எழுந்து எச்சில் துப்பிய பிறகு கொஞ்சம் தலை சாய்த்தால் தேவலை போல் தோன்றியது. "சரி, விடியற் கருக்கில் புறப்படலாம்" என்றபடி படுக்கப் போனார்.

தேவப்ரியா உள்ளறையில் அவருக்குப் பாய் போட்டுக்



கொடுத்தாள். படுத்த வேகத்தில் கோபாலன் சுகமாய் குறட்டைவிடத் தொடங்கினார்.

இரவில் அவள் சாப்பிடாததால், உடனே படுக்கை அறைக்கு விரைந்தாள். தேவியின் அருளால் தேவப்ரியா தினமும் விஷ்ணுதேவனின் முன்னால் நித்ய கன்னிகையாகவே தென்பட்டாள். அவள் அவனுடன் தொடர்பு கொண்டிருந்தாலும் அவளது கன்னித் தன்மைக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படுவதில்லை. விஷ்ணு தேவனைப் பொறுத்தவரை ஒவ்வொரு நாளும் புத்தம் புது இரவாகவும், அவள் புதியவளாகவும் தோன்றினாள். அதனால் விஷ்ணுதேவனுக்கு அவளிடம் ஒருபோதும் சலிப்பு ஏற்பட்டதே இல்லை. அவளுடைய இரவுகளும் அப்படியேதான் இருந்தன!

"நாளைக்குக் காலையில் மாமாவுடன் போகத் தீர்மானித்து விட்டீர்களா?"

"போகாமல் என்ன செய்வது?"

"நான் ஒரு விஷயம் சொல்லட்டுமா? நீங்கள் சற்று நேரம் பொறுமையாக இருங்கள். நான் சில நாழிகைகளுக்குள் திரும்பி வந்துவிடுகிறேன். அதுவரையில் நீங்கள் தனிமையில் இருங்கள். நான் விஸ்வமங்கலம் வீடு வரை போய்விட்டு வருகிறேன்."

விஷ்ணு மறுக்காமல், சம்மதித்தான். தேவப்ரியா எழுந்து வெளியே போனாள். ஆகாய மார்க்கமாக அந்தரத்தில் பறந்து உயர்ந்த அவள் விஸ்வமங்கலம் வீட்டின் வெளி வாசலை அடைந்தாள். அங்கிருந் தபடியே உட்புறம் பார்த்தாள். வாசலை ஒட்டியபடி உட்புறத்தில் ஒரு ஹோமம் நடந்துகொண்டிருந்தது. சரஸ்வதி அந்தர்ஜனம் வராந்தாவில் உட்கார்ந்தபடி ஹோமகுண்டத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்!



## 33

சரஸ்வதி அந்தர்ஜனம் நிலைப்படியின் இடதுபுறமிருந்த சுவரில் சாய்ந்திருப்பதைப் பார்த்தவுடன் தேவப்ரியாவிடம் பரபரப்புத் தோன்றியது. விஷ்ணுவின் அம்மாவிற்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் அது தன்னையும் பாதிக்கும் என்பதை அவள் அறிவாள்.

குருக்ஷேத்ர மனைக்குள் அவள் காலடி எடுத்து வைத்தது முதல் இன்று வரையில் எந்தவிதமான சிக்கலும் ஏற்படவில்லை. இந்த நிலைமையில் அம்மாவிற்கு ஏதாவது நேர்ந்துவிட்டால், இதுவரை அவளுக்குக் கிடைத்த எல்லா நல்ல பெயரும், மதிப்பும் அத்துடன் நாசமாகி விடும். எனவே, அம்மாவிற்கு என்னதான் நேர்ந்துள்ளது என்பதைத் தெரிந்துகொள்ள தேவப்ரியா விரும்பினாள்.

சட்டென்று வௌவாலின் உருவத்திற்கு மாறி விஸ்வமங்கலம் வீட்டின் மேற்கூரையை அடைந்தாள். ஓட்டு இடுக்கின் வழியாக உட்புகுந்து வீட்டின் முன்பகுதியை அடைந்தாள். கவனமாகச் சத்தம் செய்யாமல் கவனித்தாள்.

சரஸ்வதி அந்தர்ஜனம் சுயநினைவற்ற உறக்கத்திலிருந்தார். அதனால், உட்கார்ந்தபடியே உறங்கினார். ஜயந்தன் ஏதோ மந்திரத்தைப் பயன்படுத்தி சரஸ்வதியை உறங்க வைத்திருக்கிறார் என்பது புரிந்தது.

அந்த உறக்கத்திலிருந்து அவரை எழுப்ப தேவப்ரியா ஒரு வேலை செய்தாள். அவள் இருந்த மாடியின் மேல்பகுதியில் ஏராளமான ஓலைச்சுவடிகள் இருந்தன. தேவப்ரியா தன்னுடைய உருவத்திற்கு மாறினாள். அருகிலேயே பதப்படுத்தப்பட்ட எழுதாத ஓலைகளும் இருந்தன. ஒரு ஓலையை உருவினாள். கழுத்தில் அணிந்திருந்த சங்கு வடிவத்தினாலான லாக்கெட்டின் உதவியால் அந்த ஓலையில் 'மிருத சஞ்சீவினி' மந்திரத்தை எழுதினாள்.

எண்கோணத்தின் மத்தியில் பிரணவத்தையும், அம்ருநமச்சிவாய என்கிற சப்த அக்ஷரத்தில் அ என்கிற அகரத்தையும், மீதமுள்ள



எழுத்துகளை ஒவ்வொரு கோணத்திலும் எழுதினாள். அஷ்ட தளத்திலுள்ள நான்கு பகுதிகளில் ஆறு எழுத்துகள் வீதமும், மூலைகளில் ஐந்து எழுத்துகள் வீதமும் மிருத சஞ்சீவினி மந்திரத்தை எழுதிப் பூர்த்தி செய்தாள்.

பிறகு, பரமசிவனைப் பிரார்த்தனை செய்தபடியே அந்த ஓலையை ஒரு தங்கத் தகடாகக் கருதி, சரஸ்வதி அந்தர்ஜனத்தின் தலைமீது படும்படி இயல்பாகப் போட்டாள்.

ஓலை அவரது தலைமுடியில் பட்டவுடனேயே அவர் தூக்கத்திலிருந்து விழித்தார். கண்ணைத் திறந்து பார்த்தால் எதிரே புகைந்து கொண்டிருக்கும் ஹோமகுண்டம்! திடுக்கிட்டெழுந்த அவர் சட்டென்று சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு வீட்டிற்குள் போனார். அங்கே தேவகி நின்று கொண்டிருந்தாள். உண்மையிலேயே இதன் அர்த்தமும், நோக்கமும் விளங்காத தேவகி அவரை அழைத்துக் கொண்டு படுக்கையறைக்குப் போனாள்.

ஜயந்தன் வியப்புடன் எதிரே பார்த்தபோது ஹோம குண்டத்திலிருந்து உயர்ந்துகொண்டிருந்த புகை மெதுவாகக் கீழ்ப்புறம் இறங்கித் தேங்கியதுடன் கனிந்து கொண்டிருந்த நெருப்பு சட்டென்று அணையவும் செய்தது. இதைப் பார்த்த ஜயந்தனின் வியப்பு இருமடங்கானது.

"இதெப்படி நடந்தது?" - ஜயந்தன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டார். பிறகு தன்னுடைய சகோதரியை உரத்த குரலில் அழைத் தார்.

சரஸ்வதி அந்தர்ஜனத்தை அறையிலேயே இருக்கும்படி கூறிவிட்டு, தேவகி வெளியே வந்தாள்.

"அந்தம்மா எப்படி இருக்கிறார்கள்?" ஜயந்தன் கேட்டார்.

"என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? அவருக்கு எந்தவிதமான தொந்தரவும் இல்லை. நன்றாகவே இருக்கிறார்."

"தலை சுற்றுகிறது என்று இங்கே உட்கார்ந்திருந்தார். இப்பொழுதுதான் உள்ளே வந்தார். அதனால் தான்..."

"இப்பொழுது நன்றாக இருக்கிறார்."

"இன்னும் கோபாலனைக் காணவில்லையே?"

"இன்றே திரும்பி விடுவதாகத்தான் சொல்லிவிட்டுப் போனார்..." தேவகி பதிலளித்தாள்.

"சரி தேவகி, நீ போகலாம்!"

பிறகு ஜயந்தன், தனது இருப்பிடத்திலிருந்து எழுந்து பழைய குடும்ப வீட்டை நோக்கி நடந்தார். சில நாள்களாகவே எதைத் தொட்டாலும் ஒரு தடுமாற்றமும், மந்தமும் தென்படுகிறது. இதில் ஏதோ விஷயம் இருக்கலாம் என்கிற சந்தேகம் தோன்றியது.

என்ன செய்தாலும் அது தோல்வியிலேயே முடிகிறது. நோக்கம் நிறைவேற வழியில்லாமல் போகிறது. யார் நம் வழியில் தடையாக நிற்பது? யாரென்று தெரிந்தே தீர வேண்டும். அந்த மோகினிக்குத் தன்னைவிட சக்தி அதிகம் என்றே தோன்றுகிறது. ஆனால், அப்படி இருப்பது நல்லதற்கல்ல!

ஜெயம் என்பது ஜயந்தனுக்கு மட்டுமே ஏற்பட வேண்டும். அதற்குத் தடையாக எது இருந்தாலும் அதைத் தகர்த்து எறிந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் மாந்திரீக வித்தையில் மங்காப்புகழ் பெற்று உயர்ந்து நிற்கும் விஸ்வமங்கலத்தின் குடிப் பெருமை தன்னால் அழிந்து போய்விடும்.

ஜயந்தன் பழைய வீட்டின் முன்னால் வந்து நின்றார்.

சமாதியருகே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அங்கு விளக்கு ஏற்றும் பொறுப்பைத் தாத்தாவின் நம்பிக்கைக்குகந்த யோகினிகள் (சிட்கோடிகளான ஆவிகள்) ஏற்றுக் கொண்டிருந்தன. அது மட்டுமல்ல, அறையைச் சுத்தம் செய்வதுகூட அவர்களேதான். விளக்கிற்கு அருகிலேயே ஒரு கருநாகம் படமுயர்த்தி நின்று கொண்டிருந்தது.

"தாத்தா... தாத்தா..." - ஜயந்தன் குரல் கொடுத்தார்.

"என்ன ஜயந்தா?" - உள்ளிருந்து குரல் கேட்டது.

"உதவ வேண்டும்!"

"புரிந்தது." - தாத்தாவின் குரல் மிக அருகில் கேட்டது.

நிலவறைச்சமாதியிலிருந்து தாத்தா எழுந்து விட்டிருந்தார். அவர் வருவது பின்புற வழியாகத்தான். ஒருபோதும் அவர் வீட்டையொட்டி வந்ததில்லை. அதற்கும் ஏதாவது காரணம் இருக்கக்கூடும்.



"இனிமேல் நான் என்ன செய்யவேண்டும்?" ஜயந்தன் குழந்தைபோல் கேட்டார்.

"ஒரே ஒரு வழிதான் இருக்கிறது..."

"சொல்லுங்கள்?!"

"நங்கேமாவைத் திருப்திப்படுத்துவதுதான். நங்கேமா சக்தி மிக்கவள். அவள் நமக்கு எதிராக இருக்கிறாள். காரணம் உனக்குத் தெரியும். எனவே நங்கேமாவைத் திருப்திப்படுத்துவதைத் தவிர, வேறு வழி கிடையாது.!"

"அதற்காகத்தான் இதுவரை முயற்சி செய்தேன். ஆனால் வழக்கம் போல் தோல்விதான்."

"அதற்குக் காரணம் அந்த மோகினிதான். ஓமல்லூர் கோயிலைச் சேர்ந்த மோகினி ... அவளை ஆணியறைந்து விட்டால் பிறகு பயப்பட வேண்டியதே இல்லை."

"நீங்கள் குறிப்பிடுகிற அந்த மோகினிக்குச் சக்தி அதிகம்தான்!"

"தெரியும். அதனால்தான் சொல்கிறேன். அவளை எதிர்க்க ஒரே வழி, நங்கேமாவைத் துணைக்கு வைத்துக்கொண்டு அவளோடு மோதுவதுதான்" தாத்தா உபதேசித்தார்.

"அது எப்படி முடியும் தாத்தா?"

"குருக்ஷேத்ர மனையிலுள்ள பையனை நங்கேமைக்குக் கொடுத்து விட்டால், பிறகு நங்கேமா அவனைத் தன் பிடியிலிருந்து விடமாட்டாள். எனவே அவளே நம்முடைய எதிரியை அழிக்கும் வேலையைச் செய்து கொள்வாள். முதலில் நான் சொன்னதைச் செய்."

ஜயந்தன் திரும்பி நடந்தார்.

தாத்தா சொல்வது சரிதான் என்று ஜயந்தனுக்குத் தோன்றியது. நங்கேமாவும், மோகினியும் ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்வார்கள். இந்தப் போராட்டத்திற்கு நடுவே நாம் நமது காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம். அதற்குள்ள வழி சரஸ்வதி அந்தர்ஜனத்தைக் காண விஷ்ணுதேவன் வரவேண்டும்.

ஜயந்தன் இரவு முழுவதும் யோசித்தபடியே படுத்திருந்தார். 'விடியற்காலையில் எழுந்திருக்க வேண்டும்!' என்கிற தீர்மானத்துடன் படுத்தார்.

தேவப்ரியா விஷ்ணுதேவனிடம் விரைந்தாள்.

"என்ன விஷயம்? அம்மா எப்படி இருக்கிறார்?" ஆவலுடன் கேட்டான் விஷ்ணு.

"நான் சென்றபோது அம்மா மயக்கத்தில் இருந்தார். அதிலிருந்து அவரை விடுவித்து விட்டேன். அவர் பழைய நிலைக்குத் திரும்பியதும் நான் வந்துவிட்டேன்."

"அம்மாவிற்குத் திடீரென்று அப்படி ஏற்படக் காரணம் என்ன? அப்படியானால் மாமா சொன்னது உண்மைதான், இல்லையா?"

"இந்த மயக்கம் வரவழைக்கப்பட்ட மயக்கம். இதன் பின்னால் ஏதோ ஒரு திட்டம் ஒளிந்திருக்கிறது. இல்லா விட்டால் இப்படி நிகழச் சாத்தியமே இல்லை."

"நான் நேராகப் போய்ப் பார்த்து விட்டு வரட்டுமா?."

"அந்த அளவிற்கு ஒன்றும் இல்லை. பயப்படாதீர்கள்!"

"இருந்தாலும் மாமாவுடன் நான் நாளைக்குச் சென்று பார்க்கிறேன். தேவப்ரியா, நீயும் வாயேன்."

"ஐயோ... நானா...? ஒருபோதும் அது முடியாது. பகலில் நான் வெறும் ஒரு சாதாரணப் பெண் மட்டும் தான். எனக்கு ஏதாவது நேர்ந்து விட்டால் பிறகு வழியே கிடையாது. அப்புறம் ஓமல்லூர் கோயில் தேவியால் கூட எனக்கு உதவ முடியாது!"

"அப்படியானால் வேண்டாம். நானே போய்விட்டு வருகிறேன். வரும்போது அம்மாவையும் அழைத்துக் கொண்டு வருகிறேன்" -விஷ்ணுதேவன் கூறினான்.

"உங்கள் விருப்பப்படியே செய்யுங்கள்..." - அவனை அணைத்தவாறே சொன்னாள் மோகினி

விடியற்காலையிலேயே தேவப்ரியா வழக்கம் போல் எழுந்து பெருக்கித் தெளித்து, குளித்துவிட்டுச் சமையலறைக்குள் புகுந்து கொண்டாள்.

மாமனும் மருமகனும் குளித்துவிட்டு வருவதற்குள் காலைப் பலகாரம் தயார் செய்து விட்டாள்.

இருவரும் சாப்பிட்டனர்.

"நாங்கள் புறப்படுகிறோம்!" விஷ்ணுதேவனின் அனுமதிக்குக்



காத்திருக்காமல் கோபாலன் நம்பூதிரி கூறினார்.

விஷ்ணு, தேவப்ரியாவைப் பார்த்தான்.

மனதில் சதித்திட்டம் வைத்துக் கொண்டு வெகு இயல்பாகப் பேசும் கோபாலன் நம்பூதிரியையே அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பிறகு இருவரும் உடைமாற்றச் சென்றனர்.

அதே நேரத்தில் கிணற்றடியிலிருந்து வந்த பாறுக்குட்டியம்மா சமையலறை வாசலில் நின்று தேவப்ரியாவை பதற்றத்துடன் அழைத்தாள்.

"என்ன பாறுக்குட்டி?" மோகினி கேட்டாள்.

"தம்புராட்டி... யாரோ பின்புற முற்றத்தில் வந்து நிற்கிறார்கள். அந்த முகத்தைப் பார்க்கவே பயமாக இருக்கிறது..."

பாறுக்குட்டியின் குரல் நடுங்கியது.



## 34

வந்திருப்பது யார் என்று தெரிந்துகொள்ளும் ஆர்வத்துடன் தேவப்ரியா வராந்தாவிற்குச் சென்றாள். பின்புற முற்றத்தில் ஒரு வயதான பெண்மணி நின்று கொண்டிருந்தாள்.

"நீங்கள் யாரென்று தெரியவில்லையே?" தேவப்ரியா கேட்டாள்.

"நான் இங்கே பக்கத்திலேயே இருப்பவள்தான்..." பேசியபடியே திண்ணைமீது ஏறிவந்தாள் அவள்.

பார்வைக்கு நாற்பது வயதுக்கு மேல் இருக்கும் என்று தோன்றியது. தலைமுடி அங்கிங்கு நரைத்திருந்தது. இடுப்பில் முண்டு (வேட்டி) கட்டியிருந்தாள். மேலே ரவிக்கை. தோளில் ஒரு துண்டு முந்தானையாகக் கிடந்தது. முகத்தில் சன்னமான சுருக்கங்கள். கண்களில் பீதி ஏற்படுத்தும் பார்வை.

"உங்களுக்கு என்ன வேண்டும்?" தேவப்ரியா கேட்டாள்.

"உங்களிடம் ஒரு ரகசியம் பேச வேண்டும். அதை வேறு யாரும் தெரிந்து கொள்ளக்கூடாது!"

தேவப்ரியா உட்புறம் பார்த்தாள். விஷ்ணுதேவனும், மாமாவும் எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம். ரகசியம் பேசவேண்டும் என்று சொன்ன நிலைமையில், திடுமென்று அவர்கள் வந்தால் சரியாகாது. வந்திருப்பவள் எதைப்பற்றிப் பேசப் போகிறாளோ? தேவப்ரியா யோசித்தாள்.

எதற்கும் வந்திருப்பவளை மற்றவர்களின் கண்களிலிருந்து மறைத்து வைக்க விரும்பினாள்.

"ஒன்று செய்யுங்கள். அந்தப் பக்கமாக வந்தால் சமையற்கட்டு தெரியும். பாறுக்குட்டி காபி, பலகாரம் தருவாள். சாப்பிட்ட பிறகு நாம் உட்கார்ந்து பேசலாம்."

அந்தப் பெண்மணி வடக்குப்புறம் சென்றார். தேவப்ரியா உட்புறம் பார்த்துக் குரல் கொடுத்தாள்: "பாறுக்குட்டி... வருபவருக்குக் சாப்பிடக் கொடும்மா."

அந்தப் பெண்மணியைப் பார்த்ததும், பாறுக்குட்டி சட்டென்று சமையற்கட்டிற்குள் தலையை இழுத்துக் கொண்டாள்.

"என்ன பாறுக்குட்டி, என்னைப் பார்த்ததும் தலையை உள்ளுக்கு இழுத்துக் கொள்கிறீர்கள்? என்னை உங்களுக்கு அடையாளம் தெரியவில்லையா?" - வந்தவள் கேட்டாள்.

அதற்கும் பாறுக்குட்டி பதில் பேசவில்லை. முகத்தில் எந்தவிதமான மாற்றத்தையும் காட்டாமல் அப்படியே நின்று விட்டாள்.

"ஒருவேளை மறந்து போயிருக்கலாம். நான் வெகுநாளாக இந்த ஊரில் இல்லாமல் இருந்தேன். ஒரு தூரப் பிரயாணம் செய்தேன். காசியையும் தாண்டி வடக்குப் பக்கமாகப் போனேன். பத்ரிநாத்தைப் பார்த்து அப்படியே மலையேறி..." - பேசியபடியே அந்தப் பெண்மணி நெல்குத்தும் அறையில் உட்கார்ந்தாள். "எனக்குத் தெரியும் நீ தெரிந்தும் தெரியாத மாதிரி நடிக்கிறாய். இந்த உண்ணிச் சிருதேயி அம்மாவைச் சட்டென்று யாரும் மறந்து விடமுடியாது. ஒன்று சொல்லட்டுமா, நான் நல்ல விஷயத்திற்காகத்தான் வந்திருக்கிறேன்.



யாருக்கும் துரோகம் செய்வதற்கு அல்ல" - தன்னுடைய கழுத்தில் கிடந்த ருத்ராக்ஷ மாலையைத் தடவியபடியே பேசினாள் அந்தப் பெண்மணி.

இந்த வார்த்தைகளைக் கேட்ட பிறகு பாறுக்குட்டிக்கு ஓரளவு ஆறுதல் தோன்றியது.

அந்தப் பெண்மணியைப் பார்க்கிற யாருக்கும் சட்டென்று பயமும், அருவருப்பும்தான் தோன்றும். சூனியக்காரி என்றுதான் அவளைப் பலரும் கூறியுள்ளனர். இருந்தாலும் அந்த வார்த்தையை அவள் காதுபட மற்றவர்கள் பேசியதில்லை.

வாரிசு அற்றுப்போன ஒரு நாயர் குடும்பத்தின் கடைசி உறுப்பினர்தான் உண்ணிச் சிருதேயி அம்மா. வயது நாற்பதைக் கடந்து விட்டது. மெலிந்த உடல். முகத்தில் மட்டுமின்றி விரல், கைத்தண்டை போன்ற பகுதிகளிலும் தோல் சற்றுச் சுருக்கங்களுடன் காட்சியளித்தது. நெற்றியில் எப்பொழுதும் சந்தனக் கீற்றும், அதற்குக் கீழே குங்குமப் பொட்டும் இருக்கும். கழுத்தில் ஒரு ருத்ராக்ஷ மாலை. வலது கைத்தண்டில் ஒற்றை ருத்ராக்ஷம் வெள்ளிக் கம்பியினாலேயே கட்டப்பட்டிருந்தது. வலது கையின் மோதிர விரலில் பாம்பு உருவத்தில் ஒரு மோதிரம் இருந்தது.

உண்ணிச் சிருதேயியின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வெகு காலத்திற்கு முன்பிருந்தே துர்மந்திர வாதத்தில் தேர்ந்தவர்கள். அந்தக் குடும்பத்தினர் இதுவரை நல்ல விஷயத்திற்காக மந்திரத்தைப் பயன்படுத்தியுள்ளதாகச் சரித்திரமே இல்லை. இந்தச் சூனிய மந்திரவாத சக்தியினால் அவர்கள் பல குடும்பங்களை அழித்துள்ளனர். அதனால் அவர்கள் குடும்பத்திற்கும் அதுவே நேர்ந்தது.!

விபத்து மற்றும் துர்மரணங்களில்தான் அந்தக் குடும்பத்திலிருந்த ஆண்கள் அனைவரும் இறந்தார்கள். மொத்தத்தில் அந்த வம்சத்திலேயே மீதமிருப்பது உண்ணிச் சிருதேயி அம்மா ஒருவர்தான். அந்தக் குடும்பத்தில் ஒற்றையாகவே அவர் வாழ்க்கையை நடத்துகிறார். பல இடங்களிலிருந்தும் அவரைத் தேடி அந்த வீட்டிற்குப் பலர் வருவார்கள். வருபவர்களில் எவரும்

மறந்துகூட நல்ல காரியத்திற்காக வருபவர்கள் இல்லை.

கடைசியாக அந்தக் குடும்பத்தின் இந்தப் பெண்மணியைப் பார்க்க வந்தவர்களை ஊராரே ஒன்று சேர்ந்து திருப்பி விரட்டியடித்து விட்டார்கள். இந்தச் சம்பவத்திற்குப் பிறகு உண்ணிச் சிருதேயி அம்மாவின் பாடு மிகவும் கஷ்டமாகி விட்டது. சாப்பாட்டிற்கே வழியில்லாமல் போனது. இந்தப் பெண்மணியை யாரும் திருமணம் செய்துகொள்ளவில்லை. யாருடனாவது இவருக்குத் தொடர்பு இருந்ததாகவும் தெரியவில்லை. சிறு வயதில் கூட அவர் பார்வைக்கு மிகவும் அழகு என்று சொல்ல முடியாது. வேண்டுமானால், அவரை ஒரு முதிர்கன்னி என்று சொல்லலாம். பிழைப்பதற்கு வழி இல்லாமல் போனபோது, பத்து வருடத்திற்கு முன்பு ஊரை விட்டே போனார். அதற்குப் பிறகு வந்திருப்பது இப்பொழுதுதான்.

நல்ல வேளையாக அவர் யாருக்கும் எந்தவிதத் தீங்கும் செய்ய வரவில்லையென்று சொன்னது பாறுக்குட்டிக்கு நிம்மதியைத் தந்தது. இப்பொழுதைய நிலையில் குருக்ஷேத்ர மனை நல்ல முன்னேற்றத்தில் இருப்பதால், இதற்கு அவர் ஏதாவது ஊறு செய்துவிட்டால் என்ன செய்வது என்கிற பயம்தான் ஆரம்பத்தில் பாறுக்குட்டிக்குத் தோன்றியது.

எஜமானியம்மாள் சொன்னதை வைத்து பாறுக்குட்டி அவருக்குத் தோசையும், காபியும் கொடுத்தாள்.

கையைக் கழுவிவிட்டு தோசைக்கு முன்னால் உட்கார்ந்த சிருதேயி அம்மாள் தோசையிலிருந்து பிய்த்து எடுத்து சிறிய சிறிய துண்டுகளாக முதலில் காற்றில் எறிந்தார். அந்தத் துண்டுகள் எதுவும் தரையில் விழாமல் காற்றில் கரைந்து மறைந்தே போயின. அதேபோல் காபி சாப்பிடுவதற்கு முன்பும் நாலைந்து துளிகளை அந்தரத்தில் கண்டினார். நல்லவேளையாக பாறுக்குட்டி இதையெல்லாம் கவனிக்கவில்லை.

ஏறத்தாழ அதே நேரம் கோபாலன் நம்பூதிரியும், விஷ்ணுதேவனும் வெளி வாசலைக் கடந்து போய்விட்டார்கள். அவர்கள் பார்வை யிலிருந்து மறைந்ததும் தேவப்ரியா சமையலறைக்கு வந்தாள்.



"வந்திருப்பது யார்?"

"அது மோசமான ஒரு சூனியக்காரக் கிழவி. நீங்கள் அதனிடம் போய்ப் பேசிக் கொண்டிருக்காதீர்கள்!" பாறுக்குட்டி தாழ்ந்த குரலில் கூறினாள்.

"இருந்தாலும் அது முறையாகுமா? நமது வீட்டைத் தேடி வந்திருப்பவரிடம் எப்படி முகம் கொடுத்துப் பேசாமல் இருப்பது?"-சொல்லியபடியே தேவப்ரியா நெல்குத்தும் அறைப் பக்கம் திரும்பினாள்.

"சொன்னால் கேளுங்கள். நீங்கள் அங்கே போக வேண்டாம்" - பாறுக்குட்டி தடுத்தாள்.

"விஷயத்தைச் சொன்னால்தானே? வெறுமனே போக வேண்டாம், போக வேண்டாம் என்று தடுத்தால் எப்படி?"

"அவள் ஒரு சாதாரணப் பெண்மணியல்ல. மோசமானவள். அப்படிப்பட்டவர்களின் முன்னால் உங்களைப் போன்றவர்கள் போகவே கூடாது. உங்கள் மனமே மாறி விடும். பொல்லாதது அது!"

தேவப்ரியா வாய்விட்டுச் சிரித்தாள். பாறுக்குட்டிக்குத் தன் மீதிருந்த அன்பைப் பற்றி நினைத்தபோது அவள் நெஞ்சு நெகிழ்ந்தது.

"பாறுக்குட்டியம்மா, பயப்பட வேண்டாம். என்னை அவர் எதுவும் செய்துவிட முடியாது. என்னை யாரும் ஏமாற்றவோ, வஞ்சிக்கவோ முடியாது. என்னுடன் என் தாய் எப்பொழுதும் துணையிருக்கிறாள். அதனால் ஓர் எட்டு போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்."

தேவப்ரியா நெல் குத்தும் அறையை நோக்கி நடந்தாள். தேவப்ரியாவைப் பார்த்தவுடன் உண்ணிச் சிருதேயி சட்டென்று எழுந்து நின்றாள். அவரது கண்களில் பயம் நிறைந்தது.

"பயப்பட வேண்டாம் சாப்பிடுங்கள்" - தேவப்ரியா ஆறுதலாய்ப் பேசினாள்.

அவள் அப்படிச் சொல்லிவிட்டாலும், தயங்கித் தயங்கித்தான் உண்ணிச் சிருதேயி உட்கார்ந்தாள்.

"நீங்கள் யாரென்று எனக்கு நிஜமாகவே தெரியவில்லை" தேவப்ரியா கூறினாள்.

"நானும் இதே ஊர்தான். கொஞ்ச நாட்களாக இந்த ஊரில் இல்லை."

'ரகசியம் பேசவேண்டி உள்ளது!' என்கிற அர்த்தத்தில் அவர் பாறுக்குட்டி அம்மாவைப் பார்த்தார். அதைப் புரிந்துகொண்ட தேவப்ரியா பாறுக்குட்டியிடம், நீங்கள் பயப்படாமல் உங்கள் வேலையைச் செய்யுங்கள். நான் இவரிடம் பேசிவிட்டு வருகிறேன். பசுவை, அவிழ்த்துக் கொண்டுபோய் வேலி ஓரமாகக் கட்டிப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் கூப்பிடும் போது வந்தால் போதும்" என்றாள்.

அப்பொழுதும் தீராத சந்தேகத்துடன் அவர்களைப் பார்த்தவாறே பாறுக்குட்டி தயங்கித் தயங்கிப் புறப்பட்டாள்.

"இப்பொழுது சொல்லுங்கள்..."

"என்னுடைய பெயர் உண்ணிச் சிருதேயி. ஓமல்லூர் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் குடியிருக்கும் குடும்பங்களில் எங்கள் குடும்பமும் ஒன்று. என்னுடைய குடும்பத்திலிருந்தவர்கள் எல்லோரும் ஒருவகையில் மண்ணோடு மண்ணாகிவிட்டார்கள். எல்லாம் செய்த வினையின் பலன் என்றே வைத்துக் கொளளுங்கள். இப்பொழுது கடைசியாக நான் மட்டுமே இருக்கிறேன். நானும் பத்து வருடத்திற்கு முன்னால் ஊரை விட்டுப் போனேன். வடக்கே ஸ்ரீபரமேஸ்வரன் குடியிருக்கும் இடம்வரை போனேன். இதுவரை செய்த தவறுகளுக் கெல்லாம் பிராயச்சித்தம் தேட வேண்டாமா?"

"தவறுகளா? யாருக்குச் செய்தீர்கள்?"

"எங்கள் குடும்ப முன்னோர்களும், நானும் செய்தவை தான். வேறு என்ன சொல்ல?"

"அப்படி என்ன தவறு செய்தீர்கள்?"

"சூனிய மந்திவாதம்தான்!"

"பிறகு ஏன் திரும்பி வந்து விட்டீர்கள்?"

"அங்கு ஒரு சன்னியாசியைப் பார்த்தேன். அவர் சமாதியடையப் போகும் நேரம் தனக்குத் தெரிந்ததை எல்லாம் கடைசியாக எனக்குச் சொல்லித் தந்தார். அதனால் அத்துடன் திரும்பி விட்டேன்."

"அப்படியென்றால்..."



"மந்திரவாதத்தில் எல்லாமே தெரிந்துவிட்டது. இனி மேல் யாரும் சட்டென்று என்னை எதிர்த்துப் போராட முடியாது. எதிர்த்தால் எப்படி பதிலடி தரவேண்டும் என்பது புரிந்து விட்டது."

"இந்தக் குடும்பத்துடன் உங்களுக்கு ஏற்கெனவே பழக்கம் உண்டா?"

"கிடையாது."

"பிறகு ஏன் நேராக இங்கு வந்தீர்கள்?"

"விடியற்காலையில் கோயிலில் சாமி கும்பிடப் போனேன். அங்கு போனபோது ஏதோ ஒரு குறை இருப்பதுபோல் தோன்றியது. சன்னியாசி சொல்லித் தந்த வித்தையைப் பிரயோகித்துப் பார்த்தேன். விஷயம் பிடிபட்டுவிட்டது. நீங்கள் இங்கேதான் இருக்கிறீர்கள்.. உடனே புறப்பட்டு விட்டேன்."

"உண்ணிச் சிருதேயி அம்மாள் சொன்னது புரியவில்லை என்பதுபோல் தேவப்ரியா மீண்டும் கேட்டாள்: "என்ன சொல்கிறீர்கள்?"

"இரண்டு பேரையும் பார்த்தேன். அப்பொழுது ஒருவரைக் காணவில்லை. பிறகுதான் புரிந்தது. இங்கு வரவேண்டுமென்று!"

உண்ணிச் சிருதேயி அம்மாவை ஊன்றிக் கவனித்தாள் தேவப்ரியா.



## 35

உண்ணிச் சிருதேயி அம்மா, தேவப்ரியாவை வியப்புடன் உற்றுப் பார்த்துக்கொண்டே இருந்தாள். அவளது கண்களில் பல்வேறுபட்ட உணர்வுகள் மாறிமாறித் தோன்றிக் கொண்டிருந்தன. அவளுடைய இத்தனை வருடகால அனுபவத்தில் இப்படியொரு அனுபவம் இதுவரை ஏற்பட்டதே இல்லை.

பரம்பரை பரம்பரையாக மாந்திரீக வித்தையைக் கைக்கொண்டு

வரும் பெண்மணி அவள். அவளுடைய தாத்தா சமைத்த கோழியைப் பறக்க வைப்பவர் என்று பிரசித்தி பெற்றவர். குஞ்ஞுக்குட்டி நாயருக்குக் (அவருடைய தாத்தாவிற்கு) கூடுவிட்டு கூடு பாயவும், தூரத்தில் இருந்தபடியே எதிராளிகளின் மனத்தை வசியப்படுத்தவும் தெரிந்திருந்ததாம்.

குஞ்ஞுக்குட்டி நாயரின் கடைசிக் காலத்தில் உண்ணிச் சிருதேயிக்குப் பத்து அல்லது பன்னிரண்டு வயதிருக்கும். அதுவரை வயதுக்கு வராமல் இருந்ததால் தாத்தா அவளைத் தன்னுடன் எல்லா இடங்களுக்கும் அழைத்துச் செல்வது வழக்கம். அவளும் ஹோமாதி காரியங்களில் தாத்தாவுக்கு உதவியாக இருந்தாள். அந்தக் காலத்தில் நடைபெற்றுள்ள பல அற்புதமான காட்சிகளைத் தாத்தா தன்னுடைய மந்திர சக்தியால் நிகழ்த்தியவற்றைச் சிறுமி சிருதேயி மிக அருகிலிருந்து நேரடியாகவே கண்டிருக்கிறாள்.

ஒரு தடவை ஒமல்லூர் கோயிலுடன் தொடர்பு கொண்ட ஒரு சம்பவம் நடைபெற்றது. அது அவளுடைய மனத்தைவிட்டு அகலாதபடி ஆழமாகப் பதிந்து போயிற்று.

ஒரு துர்க்கா அஷ்டமி தினத்தன்று கோயில் குளத்தில் குளிப்பதற்காக தேவி புறப்பட்டாள். அன்று கோயிலின் முன்புறம் ஒரு குளமிருந்தது. ஒருபோதும் வற்றாத ஊற்றுக்கள் உள்ள குளம் அது. ஓர் அளவைத் தாண்டினால் கரை உடைந்து போகாதிருப்பதற்காக வாய்க்கால்களையும் வெட்டிவிட்டிருந்தனர். இதனால் குளத்தின் தண்ணீர் எப்பொழுதும் தெளிவாக இருந்தது.

குஞ்ஞுக்குட்டி நாயரும், பேத்தியும் ஓர் இடத்தில் ஹோமம் செய்து முடித்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தனர். நள்ளிரவு நேரம். தாத்தா குளிக்க விரும்பினார்.

கோயில் குளத்தின் வடக்குப் புறமுள்ள ஆலமரத்தடியில் உண்ணிச் சிருதேயியை உட்கார வைத்து விட்டு, குஞ்ஞுக்குட்டி நாயர் மறைவாகச் சென்றார். ஹோமம் முடிந்த பிறகு கொஞ்சம் மது அருந்தியிருந்தார். அது வயிற்றை என்னவோ செய்ய, ஒதுங்குவதற்கு இடம் தேடிப் புறப் பட்டார்.

உண்ணிச் சிருதேயி உட்கார்ந்த ஆலமரத்தடியில், சுற்றிலும்



கல்லாலான பாம்பு உருவங்கள் நிறைய இருந்தன. கிழக்கு வானத்தில் தங்கத் தட்டு போல் நிலவு உயர்ந்து கொண்டிருந்தது. சந்தனத்தை அரைத்து ஊற்றி விட்டதுபோல் நிலவொளி பரவியிருந்தது. கோயில் கருவறையின் தென்புறமாகத் தென்பட்ட நிலா வெளிச்சம் ஆல மரத்தடியைப் பிரகாசமாக்கியிருந்தது. ஒரே கல்லில் செதுக்கியிருந்த பாம்புப் பிரதிஷ்டைகளில் அந்த ஒளி பளபளத்துப் பிரதிபலித்தது. சில பிரதிஷ்டைகள் பாசம் பிடித்துக் கிடந்தன.. கல்லின்மேல் பிடித்த இந்தப் பாசம் செதில்களைப்போல் தெரிந்தன.

இதையெல்லாம் பார்க்கும்போது பாம்புகள் உயிருடன் சுற்றிலும் உலாவுவது போல் தோன்றினாலும், உண்ணிச் சிருதேயி பயப் பட்டவளாகத் தெரியவில்லை. தாத்தாவுடன் இதுவரை சென்றுள்ள சந்தர்ப்பங்களில் பலவித அற்புதங்களைப் பார்த்து விட்டிருந்தாள். மோகினிகளையும், பிசாசுகளையும் தன் தாத்தா வரவழைத்து மன்னிப்பு கேட்க வைத்திருப்பதை அவள் எத்தனையோ முறை பார்த்திருக்கிறாள்.

அதனாலேயே, ஆளரவமற்ற அந்த இடத்தில், நள்ளிரவில், கோயில் மட்டுமே உள்ள அந்தப் பகுதியில் தனியாக உட்காருவதற்கு அவள் கொஞ்சமும் பயப்படவே இல்லை.

அப்படி உடகார்ந்திருக்கும்போதுதான் தேவலோகப் பெண்மணி போன்ற ஒருத்தி சிறுமி சிருதேயியின் அருகே வந்தாள்.

"என்னம்மா குழந்தை, இங்கே உட்கார்ந்திருக்கிறாய்?"

"ஒன்றுமில்லை... சும்மாதான்..."

"இங்கே உட்கார்ந்திருக்க உனக்குப் பயமாய் இல்லையா?"

"நான் எதற்குப் பயப்பட வேண்டும்?"

"என்னைப் பார்த்துக் கூடவா பயம் தோன்றவில்லை?" என்று குழந்தைக்கு நேராக நின்று கொண்டு கேட்டாள் அந்த இளம்பெண்.

நிலவொளியில் அந்த இளம்பெண்ணின் முகம் தெளிவாகத் தெரிந்தது.

"எதற்காக பயப்பட வேண்டும்? நீங்கள்தான் மிகவும் அழகாக இருக்கிறீர்களே!"

"இருக்கட்டும். நடுராத்திரியில் பார்த்தால் பயம் தோன்றாதா?"

“எனக்கு மோகினிகளையோ, பிசாசுகளையோ கண்டால் கூட பயம் ஏற்படாது.!”

இந்த வார்த்தைகளைக் கேட்ட அந்த இளம்பெண்ணுக்கு மேலும் ஆச்சரியமேற்பட்டது. அவள் அந்தக் குழந்தையின் அருகே உட்கார்ந்தாள்.

அவளது உடம்பிலிருந்து ஒருவிதமான மணம் வீசியது. தாமரைப் பூவின் உட்புறம் வாசனையடிக்குமே, அதுபோல் இருந்தது. நிறையப் பூக்களுக்கு நடுவே உட்கார்ந்திருப்பது போல் குழந்தைக்குத் தோன்றியது.

“நான் மோகினிகளையோ, பிசாசுகளையோ பார்த்தால் கூட பயப்படவே மாட்டேன்” என்று சிறுமி திரும்பவும் கூறினாள்.

“ஏன் அப்படி?”

“எங்க தாத்தா அதையெல்லாம் அடக்கி நிறுத்தி ஆணி யறைகிறவர்.”

இந்த வார்த்தையைக் கேட்டதும் அந்தப் பெண் வாய்விட்டுச் சிரித்தாள். அந்தச் சிரிப்பிற்கு ஒரு பிரத்தியேகத்தன்மை இருந்தது. கண்ணாடி வளையல்களைக் குலுக்கியது போலவோ, சலங்கைகள் ஒருசேர ஒலிப்பது போலவோ தோன்றியது.

சிறுமி அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

“நான் ஒரு மோகினி.”

“ஓகோ... அப்படியா?”

“நான் தேவிக்குத் துணையாக வந்தவள். இன்று துர்க்கா அஷ்டமி நாள் அல்லவா? தேவி குளிக்கப் போயிருக்கிறார். அவர் குளித்துக் கரையேறி வர மூன்றாவது யாமம் முடிந்து விடும்.”

“ஓகோ... அப்படியா?”

இவ்வளவிற்குப் பிறகும் குழந்தையின் மனதில் எந்த விதமான வித்தியாசமும் தெரியவில்லை. குழந்தை கேட்டாள்: “உங்கள் பெயர் என்ன?”

“தேவப்ரியா!”

“அப்படியா?”

“குழந்தை, நீ மட்டும் தனியாகவா இருக்கிறாய்?”



“நான் முதலிலேயே சொன்னேனே... என் தாத்தாவும் வந்திருக்கிறார். வயிறு சரியில்லை என்று மறைவாகப் போயிருக்கிறார்.”

“அப்படியானால் நான் உன்னைப் பார்த்தது நல்லதற்குத்தான். தேவி குளிப்பதால் குளத்தில் இறங்க வேண்டாமென்று தாத்தாவிடம் சொல்லவேண்டும். அதோ தெரிகிறதே, அங்கே ஓர் ஊற்று இருக்கிறதே” - கையால் சுட்டிக் காட்டியபடி பேசினாள்.

“குளத்தில் இறங்க வேண்டாமென்று தாத்தாவிடம் சொன்னால் போதும், இல்லையா?” - குழந்தை வெளிப்படையாகவே கேட்டாள்.

“அது போதும். அதோ உங்கள் தாத்தா வருகிறார். நான் வரட்டுமா?”தேவப்ரியா மறைந்தாள்.

குஞ்ஞுக்குட்டி நாயர் வந்தபோது குழந்தை விவரத்தைக் கூறினாள். அவர் ஊற்றுப் பக்கம் போகவும் செய்தார். திரும்பி வந்தபோது தாத்தா கேட்டார்.

“உண்ணி, அந்த அம்மாவை நீ நன்றாகப் பார்த்தாயா?”

“நல்லாப் பார்த்தேன். என் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தார்கள். எவ்வளவு அழகாக இருந்தார்கள் தெரியுமா? இப்படி ஒரு அழகை நான் இதுவரைக்கும் பார்த்ததே இல்லை.”

“சரி வா போகலாம்.”

நடக்கத் தொடங்கிய போது உண்ணிச் சிருதேவி திரும்பிப் பார்த்தாள். தேவப்ரியா அங்கேயே நின்று கொண்டிருப்பது தெரிந்தது. தாத்தாவிடம் அதைச் சொல்லவில்லை. ஒருவேளை தாத்தா தங்களுடன் தேவப்ரியாவை அழைத்து வந்தாலும் வந்துவிடுவார்.

அந்த தேவப்ரியாவின் முகம் உண்ணிச் சிருதேவியின் மனத்திலிருந்து மறையாமலேயே இருந்தது. எத்தனையோ வருடங்கள் கடந்துவிட்ட போதும் மனதில் அப்படியே தங்கி நின்றுவிட்டது.

“என்ன, பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?” தேவப்ரியா கேட்டாள்.

“ஒன்றுமில்லை. நான் ஒரு விஷயத்தைக் கேட்கலாமா? உண்மையைச் சொல்ல வேண்டும்” - தேவப்ரியாவின் முகத்திலிருந்து பார்வையை அகற்றாமலே கேட்டாள் உண்ணிச் சிருதேவி.

“கேளுங்கள்.”

"உங்கள் பெயர் தேவப்ரியாதானே?"

தேவப்ரியா ஒரு கணம் திடுக்கிட்டாள். முன்பின் பழக்கமில்லாத ஒரு பெண்மணி தனது சரியான பெயரை உச்சரிக்கிறாள். மிகவும் குறைவானவர்களுக்கு மட்டுமே தன்னுடைய பெயர் தெரியும். அதுவும், தான் சொல்லியதால் தெரிந்து கொண்டவர்கள். யாரும் இதுவரை தன்னிடம் இப்படிக் கேட்டதுமில்லை. கேள்வி கேட்ட பெண்மணியோ பார்ப்பதற்கு பயங்கரமாக இருக்கிறாள்.

"என் பெயரை உங்களுக்கு யார் சொன்னது?"

"நீங்களேதான்! ஒரு தடவை என்னிடம் சொல்லியிருக்கிறீர்கள். நான் சொல்கிறேன். ஞாபகப்படுத்திப் பாருங்கள். ஒரு தடவை நானும் என் தாத்தாவும் ஒரு ஹோமத்தை முடித்துவிட்டு..."

உண்ணிச் சிருதேயி அம்மாவின் வார்த்தைகளைக் கேட்டு தேவப்ரியா விதிர்விதிர்த்துப் போனாள்.

"நான் சொன்னதெல்லாம் சரிதானா?"

"இப்பொழுது ஏன் அதையெல்லாம் சொல்கிறீர்கள்? நான் ஒரு சந்தேகம் கேட்கலாமா?"

"என்ன வேண்டுமானாலும் கேட்கலாம்..."

"நான் இங்கு இருப்பதை எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?"

"அதை நான் இன்னும் சொல்லவே இல்லையே. அது ஒரு சுவாரஸ்யமான கதை. இன்று காலை கருக்கிருட்டில் கோயிலுக்குப் போனேன். ரொம்ப நாளாகவே நான் இந்த ஊரில் இல்லை. நேற்று இரவுதான் வந்தேன். கோயிலுக்குப் போய் சாமி கும்பிட்டேன். மனதில் ஏதோ ஒரு குழப்பம். பயம். உற்றுப் பார்த்தேன். தேவி கருவறையில் இல்லையென்று புரிந்தது. அப்படியானால் தேவி எங்கே இருக்கிறார் என்று மனதிலேயே பிரஸ்னம் வரைந்து பார்த்தேன். வலதுபுறத்தில் காவல்காரியாக நிற்கிறார் என்பது பிடிபட்டது. அப்படியானால் காவல்காரி எங்கே என்பது என்னுடைய அடுத்த கேள்வி. அதையும் பிரஸ்னம் பார்த்தே தெரிந்து கொள்வது என்று தீர்மானித்தேன். இடது புறமுள்ள நபர் யாரென்று புரிந்தது. எனக்குத் தெரிந்தவர். சரி, அவர் தற்பொழுது எங்கிருக்கிறார் என்பதை அறிய மறுபடி ஒரு பிரஸ்னம். விடை கிடைத்தது. நேராக இங்கு வந்துவிட்டேன்."



தன்னைக் குறித்து எல்லா விவரங்களையும் தெரிந்து வைத்திருக்கிற உண்ணிச் சிருதேயி இனிமேல் இதை வைத்துக் கொண்டு புதியதாகப் பிரச்சனைகளைக் கிளப்புவாளோ என்கிற பயம் தேவப்ரியாவிற்குத் தோன்றியது. இருப்பினும் இந்த உருவத்தைப் பார்த்தால் அந்த அளவிற்கு பயப்பட வேண்டியதில்லை என்றும் ஓர் ஆறுதல் ஏற்பட்டது.

"இத்தனைக்கும் நடுவில் இன்னும் ஒரு விஷயமும் உள்ளது. இது பல பேருடைய சந்தேகம். இது தான் கேள்விப்பட்ட விஷயம்" -உண்ணிச்சிருதேயி மீண்டும் துவக்கினார்.

"அது என்ன விஷயம்?"

"கோயிலிலிருக்கும் துவாரபாலிகையின் கால் சிலம்பு (தண்டை) காணவில்லையென்றும், அதைக் கண்டுபிடிப்பதற்காகக் கோயிலின் உரிமையாளர் எங்கேயோ சென்றிப்பதாகவும் தகவல். கால் தண்டை இல்லாமல் எப்படிக் கோயிலுக்குத் திரும்பிச் செல்வது?"

தேவப்ரியாவால் பதில் பேச முடியவில்லை. தான் இதுவரையில் யோசிக்காதிருந்த பல சிக்கல்களையும் இந்தப் பெண்மணி கைகளில் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறாள் என்பது சட்டென்று அவளுக்குப் புலப்பட்டது.

"இதெல்லாம் அப்படியே இருக்கட்டும். இந்த வீட்டிற்கு ஒரு வாரிசைக் கொடுக்காமலேயே இங்கிருந்து போகப் போகிறீர்களா? நீங்கள் அப்படிப் போய்விட்டால் இந்தச் சொத்துக்களையெல்லாம் யார் கட்டியாள்வது? வந்து சேர்ந்த நிலைமையில் தனியே போவதும் சரியல்ல. ஒரு பெண் குழந்தையாவது பிறக்கத்தான் வேண்டும். பிறகு கால் தண்டை இல்லாமல் போவதும் சிக்கல். இந்த வீட்டில் அதிக நாட்கள் நீங்கள் தங்கியிருப்பதும் ஆபத்து!" உண்ணிச் சிருதேயி பேச்சை இந்தக் கட்டத்தில் நிறுத்தினாள்.

என்ன செய்வது என்று புரியாமல் தேவப்ரியா தடுமாறி நின்றாள். ஏகப்பட்ட குழப்பம், சிக்கல். இந்தப் பெண்மணி ஒரு ஒழுங்கும் மரியாதையுமில்லாமல் இஷ்டத்திற்கு பேசிக் கொண்டே போகிறாள்.

"நீங்கள் இனிமேல் கோவிலுக்குத் திரும்பிப் போவதில்லை என்று முடிவு செய்திருந்தால், எனக்கு உங்கள் அடுத்த காலில்

இருக்கும் கால் தண்டையைத் தர வேண்டும்" என்றாள் உண்ணிச் சிருதேயி.



## 36

"அப்படியானால் என்னைப் பற்றிய எல்லா விவரங்களும் உங்களுக்கு அத்துப்படி. அப்படித்தானே?" தேவப்ரியா கேட்டாள்.

"என்ன தம்புராட்டி இப்படிக் கேட்கிறீர்கள்.?"

"அதாவது என்னைப் பற்றி முழுவதும் தெரிந்துகொண்ட ஒருவரை இப்பொழுதுதான் நேரடியாகப் பார்க்கிறேன். அதனால் தான்..." தேவப்ரியா தாழ்ந்த குரலில் பேசினாள். அந்தக் குரலில் ஏதோ விபரீதம் இருப்பதாக உண்ணிச் சிருதேயிக்குத் தோன்றியது.

"யாரும் உங்களை இந்த வீட்டிற்குப் போகும்படிச் சொல்லியனுப்பவில்லை என்பது நிச்சயம்தானே?"

"நிச்சயமாக! என்னை யாரும் இங்கு வருமாறு சொல்லியனுப்பவில்லை. நான்தான் ஆரம்பத்திலேயே அதைக் கோடி காட்டிவிட்டேனே. கோயிலில் கும்பிடப் போனேன். நிலைமை புரிந்தது. மனதால் பிரச்னையை உணர்ந்தேன் வந்தேன்."

வந்திருப்பதன் நோக்கம்?

"நீங்கள் ஏதோ உள்ளர்த்தம் வைத்துக் கேட்பதாகத் தோன்றுகிறது. என்னைப் பொறுத்தவரை, வேறு எந்த உள்நோக்கமும் கிடையாது."

"கால் தண்டையைக் கேட்டீர்களே?"

"நான் கேட்டது பகல்போல் வெட்ட வெளிச்சமாயிற்றே! தம்புராட்டியின் இடது காலில் மட்டுமே தண்டை உள்ளது. அதனால் வலது கால் தண்டையை யாருக்கோ கொடுத்திருக்கிறீர்கள். அதனால் நானும் ஒன்று கேட்டேன்."

அப்பொழுதுதான் தேவப்ரியாவிற்கு இப்படி ஒரு வழி இருப்பது



புலப்பட்டது. வலது கால் தண்டையை விஷ்ணுதேவனுக்குக் கொடுத்த போதே இடது கால் தண்டையைக் கழற்றி வைத்திருந்தால் இப்படி யொரு பிரச்சனை ஏற்பட்டிருக்காது!

"உங்களுக்குக் கால் தண்டைதான் வேண்டுமென்று ஏதாவது நிர்பந்தமா என்ன?"

"நிர்பந்தம் எதுவுமில்லை. எனக்கு ஏதாவதொரு அன்பளிப்பு தந்தாலும் போதும்."

"கால் சிலம்பு கிடைத்தால் அதை மற்றவர்களிடம் நீங்கள் காண்பிக்கலாம் இல்லையா?" - தேவப்ரியா கேட்டாள்.

"பரிசாகக் கிடைத்தால் யாரிடம் வேண்டுமானாலும் காட்டலாமே...?"

"ஓகோ... அப்படியானால் எல்லோருக்கும் அதைக் காண்பித்து, என்னை வெளிப்படுத்தி விடலாம் என்று நினைக்கிறீர்கள். நீங்கள் இங்கு வந்ததன் நோக்கம் அதுதான், இல்லையா? என்னைக் கொஞ்சம் பாருங்கள்!" - தேவப்ரியா நிமிர்ந்து நின்றபடி பேசினாள்.

உண்ணிச் சிருதேயி கீழே உட்கார்ந்தபடியே நிமிர்ந்து பார்த்தாள். தனக்கு முன்பாகப் பேரழகியாக நின்று கொண்டிருந்த தேவப்ரியா மேற்புறமாக உயர்ந்து வளர்ந்து கொண்டிருந்தாள். அவளது உயரம் மேல் தளத்தை அடைந்தபோது தளம் மறைந்து போயிருந்தது. உருவம் மேலும் உயர்ந்து கொண்டே இருந்தது. புட்டம் வரையிலான நீண்ட கூந்தலும், எரிந்து சாம்பலாக்கும் தீட்சண்ணியமான பார்வையையும் கண்டு உண்ணிச் சிருதேயி நடுங்கினாள்.

"நான் யாரென்று தெரிந்து கொள்வதற்காக நீ வந்திருக்கிறாய், இல்லையா? என்னுடைய கால் தண்டையை வாங்கி நீ ஊராரிடம் காண்பித்து அதன் மூலம் என்னை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட வேண்டும் என்று எண்ணுகிறாய்" - தேவப்ரியாவின் இடது கரம் உண்ணிச் சிருதேயியின் தலைமுடியைக் கொத்தாகப் பிடித்தது. ஏறத்தாழத் தரையிலிருந்து அவளை இரண்டு ஆள் உயரம் வரை மேற்புறமாக உயர்த்திய பிறகு பொத்தென்று கீழே போட்டாள். உண்ணிச் சிருதேயி எலும்புகள் நொறுங்கியது போல் அலறினாள்.

"ஐயோ... என்னைக் கொல்லாதீர்கள். நான் இனிமேல்

உங்களிடம் எதையும் கேட்க மாட்டேன்.!"

"உன்னுடைய உபாசனா மூர்த்தி யாரென்று சொல்.!"

"மாயா மோகினி!"

"ஓகோ... மாயா மோகினியிடமிருந்து தான்என்னைப் பற்றிய விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டாயா?"

"ஆமாம், தம்புராட்டி!"

"அப்படியானால் உடனே மாயா மோகினியின் சக்கரம் வரைந்து, சீக்கிரம் மந்திரம் எழுது. நான் சொல்லித் தருகிறேன்..."

தேவப்ரியா சொல்லச் சொல்ல உண்ணிச் சிருதேயி அம்மாள் பஞ்சகோணம் வரைந்து அஷ்டதளம், வீதி விருத்தம், பூபுரம் என்று சக்கரத்தைப் பூர்த்தி செய்தாள்.

"ம்...சக்கரத்தைத் தொட்டுச் சத்தியம் செய், இனிமேல் யாரிடமும் என்னைப்பற்றிப் பேசமாட்டேன் என்று" - தேவப்ரியா ஆணை யிட்டாள்.

உண்ணிச்சிருதேயி அப்படியே செய்தாள்.

"இன்று முதல் நான் இங்கிருந்து போவது வரை நீ என்னுடைய ஊழியக்காரி. நான் சொன்னபடி நடக்க வேண்டும். தற்சமயம் நீ இங்கேயே தங்கிக் கொள்ளலாம். அவருடைய அம்மா வரும்போது உன்னை ஒரு வேலைக்காரியாக அவருக்கு அறிமுகப்படுத்தி வைப்பேன்.

"இங்குள்ள பெரிய தம்புராட்டிக்கு என்னை நன்றாகத் தெரியுமே?"

"தெரிந்திருந்தால் என்ன? ஏற்கெனவே பாறுக்குட்டி அம்மா விற்குக் கூட உன்னை தெரிந்திருக்கிறதே. நான் இப்பொழுது உன்னிடம் ஒரு வேலையை ஒப்படைக்கப் போகிறேன். நீ உடனடியாக விஸ்வமங்கலம் வீடுவரை செல்லவேண்டும். அங்கு ஜயந்தன் என்கிற மந்திரவாதி இருக்கிறார். என்னுடைய கணவரும், மாமியாரும் கூட அங்குதான் உள்ளனர். அவரது தாய்மாமன்தான் இவர்களை அங்கு அழைத்துக் கொண்டு போயிருக்கிறார். ஏதோ விபரீதம் நிகழப் போகிறதென்று என் உள்ளுணர்வு எச்சரிக்கிறது."

"நான் அங்கே போய் என்ன செய்யவேண்டும்?"



"சொல்கிறேன். நீ கேட்பது போல் உன்னிடம் ஒரு கால் தண்டையைத் தருகிறேன். அதை எடுத்துச் செல். இந்தத் தண்டை நீ குளத்தில் குளிக்கும்போது அகப்பட்டதென்றும் இது யாருடையதென்று தெரியவில்லையென்றும் அவர்களிடம் சொல்!"

"இதெல்லாம் எதற்கு தம்புராட்டி?"

"செய்யும் போது எல்லாம் விளங்கும்...!"

"தேவப்ரியா தன்னுடைய கால் தண்டையைக் கழற்றி உண்ணிச் சிருதேயியின் கையில் கொடுத்தாள்."

"இந்த வீட்டின் பெரிய தம்புராட்டி அங்கே இருப்பதாகச் சொன்னீர்களே... ஒருவேளை அவர் என்னை அடையாளம் தெரிந்து கொண்டால்...?"

"நீங்கள் நேராக அங்கே போகப் போகிறீர்கள். எனவே, அவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை."

"சரி, நீங்கள் சொன்னபடியே செய்கிறேன்."

சரியாக அதே சமயத்தில் விஷ்ணுதேவனும் சரஸ்வதி அந்தர்ஜனமும் விஸ்வமங்கலம் வீட்டில் இருந்தனர். ஜயந்தன் தன்னுடைய புதிய ராசிப் பலகையை எடுத்து வைத்து, அதில் சோழிகளைப் பரப்பிப் பிரஸ்னம் பார்க்க முயற்சி செய்து கொண்டிருந்தார்.

"விஷ்ணுதேவனின் நட்சத்திரம் சாட்சாத் விஷ்ணு பகவானின் நட்சத்திரமேதான். பதினெட்டரையில் ராகு தொடங்கியிருந்தது. இப்பொழுது வயது முப்பத்தொன்று. முப்பத்திரண்டரை வயது வரைதான் ராகு. என்ன, நான் சொன்னது சரிதானா?"

"எல்லாம் சரிதான். இவனுடைய நட்சத்திரம் திருவோணம் தான். இவனுடைய பதினெட்டரை வயதில் இவனுடைய அப்பா இறந்தார்" - சரஸ்வதி அந்தர்ஜனம் ஒப்புக்கொண்டார்.

"இனிமேல் முப்பத்தாறாவது வயதில் ஒரு கர்மம் மீதி உள்ளது. இனிமேல் கர்மத்திற்கு யார் இருக்கிறார்கள்?"

இந்த வார்த்தையைக் கேட்டவுடன் சரஸ்வதி அந்தர்ஜனத்திற்குப் பயம் தோன்றியது. ஜயந்தன் சொன்னது உண்மையாக இருந்தால் அந்தக் குடும்பத்திலுள்ள ஒரே மூத்த உறுப்பினர் அவர்தான்.!

"ஆனால், இங்கு இப்பொழுது வேறொரு விஷயமும் தெரிகிறது. விஷ்ணுவுடன் மற்றொரு அசுர அம்சம் துணை சேர்ந்திருக்கிறது. அதாவது, ஒரு மோகினி என்று பொருள். ஆனாலும், இதுவரையில் எந்தவிதமான விபரீதமும் நிகழாதிருப்பதற்குக் காரணம், விஷ்ணுவின் நட்சத்திரம், உலக சிருஷ்டிகர்த்தாவின் நட்சத்திரமாக இருப்பதால் தான். இல்லையென்றால் இதற்கு முன்பே கண்டம் ஏற்பட்டிருக்கும். அதேசமயம் நிலைமை இப்படியே தொடர்வதும் சாத்தியமில்லை.!"

"நீங்கள் சொல்வது சரியல்ல, தவறு!" என்றான் விஷ்ணு குறுக்கிட்டு.

"அதென்ன விஷ்ணு இப்படிப் பேசுகிறாய்? நான் சொல்வது சரியில்லையா? நீ ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த விஸ்வமங்கலம் குடும்பத்தில் இதுவரையில் ஜோதிடத்திலோ, மந்திரவாதத்திலோ யாரும் இதுவரை சோடை போனதில்லை! அதனால் தோல்வியே ஏற்பட்டதில்லை. இனியும் ஏற்படப் போவதில்லை. நான் சொல்வது உண்மையல்ல என்று இந்த ராசிப் பலகைக்கு நடுவிலுள்ள சூலத்தைத் தொட்டு உன்னால் சத்தியம் செய்ய முடியுமா?"

பொறியில் சிக்க வைக்கும் கேள்வியை ஜயந்தன் தன்னை நோக்கி வீசியிருக்கிறார் என்பது விஷ்ணுவிற்குப் புரிந்தது. ஆனால், ஜயந்தன் கேட்டுக் கொண்டபடி சத்தியம் செய்வதும் இயலாத காரியம். ஸ்ரீசுப்ரமண்ய சுவாமியின் ஆயுதம் சூலம். ஜோதிட சாத்திரத்தின் கர்த்தாவும் அவர்தான். வேலைத் தொட்டு சத்தியம் செய்தால் அது முருகனையே தொட்டு சத்தியம் செய்வது போன்றது. எனவே, இதற்கு மாற்றாக எதையாவது செய்து ஜயந்தனை முறியடிக்க வேண்டுமென்று விஷ்ணு திட்டமிட்டான். ஒரு கணம் யோசித்தான். பளிச்சென்று ஒரு யோசனை உதித்தது. தெளிந்த முகத்துடன் பேசத் தொடங்கினான்:

"விஸ்வமங்கலம் குடும்பத்தைச் சேர்ந்த திருமேனிகள் மகா மாந்திரீகர்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். சத்தியத்திற்கு மாறாக அவர்கள் எதையும் செய்ய மாட்டார்கள் என்பதையும் நான் அறிவேன். அதன்படி பார்த்தால், நான் எப்படி உங்கள் ராசிப் பலகையைத் தொட்டுச் சத்தியம் செய்ய முடியும்?"



விஷ்ணுவின் இந்தக் கேள்விக்கு எப்படிப் பதிலளிப்பது என்று தெரியாமல் ஜயந்தன் விழித்தார். பிறகு சொன்னார்: "அப்படியானால் ஒரு காரியம் செய். இதோ உட்கார்ந்திருப்பது உன் தாயார்தானே? அவர் மீது கை வைத்துச் சத்தியம் செய்!

அவர் இப்படிச் சொன்னதும், விஷ்ணுதேவனின் முகத்தில் கோபம் வெடித்தது.

"சே... அம்மாவைத் தொட்டுச் சத்தியம் செய்வதா? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? இதுவும் போதாதென்று என்னை மோகினி பிடித்திருப்பதாகவும் கூறுகிறீர்கள். முட்டாள்தனமாகப் பேசுவதற்கும் ஒரு எல்லை இல்லையா? இதற்காகத்தானா இங்கு வந்தது?" என்று சீறினான்.

"பொறுமை தேவை விஷ்ணு. பைசாசிகமான சக்திகள் ஒருபோதும் உனக்கு நன்மை செய்யாது. ஆரம்பத்தில் சிலதெல்லாம் நல்லதாகத் தோன்றும்..." - மேற்கொண்டு என்ன சொல்வது என்று தெரியாமல் ஜயந்தன் நிறுத்தினார். எப்படியாவது விஷ்ணுதேவனை மடக்கிப் பிடிக்க வேண்டுமென்பது ஜயந்தனின் திட்டம். விஷ்ணு ஏதோ உறுதியான ஒரு தீர்மானத்தில் இருப்பதாகவும் அவருக்குப் புரிந்தது. எனவே மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று யோசித்தார். இறுதியில் அதற்கும் ஒரு வழி கண்டுபிடித்தார்.

"அப்படியானால் ஒரு விஷயத்தில் என்னை நம்பு. உனக்கு எந்த ஆபத்தும் வராமலிருப்பதற்காக, உனக்கு மட்டுமின்றி உன் அம்மாவிற்கும் எந்த ஆபத்தும் நேரிடாமல் இருப்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்."

"சொல்லுங்கள்!" என்றார் அம்மா.

"ஒரு ஹோமம் நடத்தினால் போதும். அதன் பிறகு உங்கள் குடும்பத்திற்கு எந்த ஆபத்தும் ஏற்படாது."

"விஷ்ணு! " இவர் சொல்வதைச் செய்வதில் என்ன தவறு இருக்கிறது? நம்முடைய நன்மைக்காகத்தானே சொல்கிறார்?"

"அதற்கான வழியையும் நான் சொல்லித் தருகிறேன்." - ஜயந்தன் இந்தச் சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

"வேறு எதுவும் வேண்டாம். ஒரே ஒரு ஹோமம் மட்டும்

நடத்தினால் போதும். அதையும் நள்ளிரவில் செய்ய வேண்டும். வேறு யாரும் உங்கள் பக்கத்தில் இருக்கக் கூடாது. அந்த ஹோமத்தை இங்கு தான் செய்ய வேண்டும் என்பதில்லை."

அம்மாவிற்கு ஆறுதலாக இருக்கட்டும் என்பதற்காக விஷ்ணு அதற்கு ஒப்புக் கொண்டான்.

"சம்மதம் தானே? அப்படியென்றால் இன்றிரவே அந்த ஹோமத்தை நடத்தி விடலாம். எங்களுடைய பழைய வீடு பக்கத்திலேயே இருக்கிறது. அங்கேயே நடத்திவிடலாம். அத்துடன் எல்லாப் பிரச்சனைகளும் தீர்ந்து விடும்."

மாலை நேரம் ஆவதற்குள் கோபாலன் நம்பூதிரி ஹோமத்திற்குத் தேவையான பொருள்களை வாங்கிக்கொண்டு வந்தார். கோபாலன் நம்பூதிரி, ஜயந்தன் நம்பூதிரி இருவரும் ஒன்றாகவே செயல் பட்டாலும் இருவாது நோக்கங்களும் வெவ்வேறாக இருந்தன.

கோபாலன் நம்பூதிரியின் லட்சியம் தேவப்ரியா என்கிற மோகினியை அழிக்க வேண்டும் என்பது. ஜயந்தனின் நோக்கம், விஷ்ணுவை நங்கேமாவுக்குக் கொடுத்துக் காலம் காலமாகத் தொடர்ந்து வரும் அவளது பகைமைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்துத் தன்னுடைய காரியத்தைச் சாதித்துக் கொள்வது.

அன்று நள்ளிரவானபோது விஸ்வமங்கலத்தின் பழைய வீட்டின் அருகே ஹோமம் நடத்துவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப் பட்டன. விஷ்ணுதேவன் ஹோமம் செய்யத் தொடங்கினான்.

சற்று நேரம் ஆவதற்குள்ளாகவே ஹோமாக்கினியைத் தாண்டிச் சற்று தூரத்தில் ஓர் உருவம் தெளிவடைந்து கொண்டிருப்பதை விஷ்ணுதேவன் கவனித்தான்.

## 37

தனக்கு முன்பாக எரிந்துகொண்டிருக்கும் ஹோமகுண்ட நெருப்பின் பின்புறத்தில் தெளிவற்றுத் தெரிந்த அந்த உருவம் படிப்படியாகத் தெளிவடைந்து வந்ததை விஷ்ணு கவனித்தான். கடைசியில் அந்த உருவம் ஒரு பேரழகியாக வடிவம் பெற்றது. தேவப்ரியாவுடன் வசிக்கும் விஷ்ணுதேவனுக்கு இவளைப் பார்த்து எந்த விதமான பரவச உணர்வும் ஏற்படவில்லை. இயல்பாகவே இருந்தான்.

இதைக் கண்டு அவனுக்கே ஆச்சரியம் உண்டாயிற்று.

"என்னைப் பார்த்து உங்களுக்கு எதுவும் தோன்ற வில்லையா?"-அவள் கேட்டாள்.

"இல்லையே!" என்றான் விஷ்ணு.

"ஏன்? நான் அழகாக இல்லையா?" - அவள் விடவில்லை.

"நான் அப்படிச் சொல்லவில்லையே... நீங்கள் பேரழகி தான். அதில் சந்தேகமில்லை."

"என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லையா?"

"பிடிக்காமல் இருப்பதற்குரிய காரணம் எதுவும் இல்லையே." ஆடை மறைக்காத அவளது மார்புப் பகுதிகளை நோக்கியபடியே விஷ்ணு சொன்னான்.

சன்னமான சரிகை வேலைப்பாடமைந்த ஒரு முண்டு உடுத்தியிருந்தாள். அதுவும் தொப்புளுக்குக் கீழே. தலை முடி தாராளமாகப் பரவியிருந்தது.

"நான் யாரென்றாவது உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது."

"என்னுடைய பெயர் நங்கேமா. நான் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவள்."

"பிறகு ஏன் ஹோமாக்கினிக்குப் பின்னால் நிற்கிறாய்? இந்தப் பக்கமாக வந்து இப்படி உட்கார்."

"அதற்கென்ன, உட்கார்ந்தால் போகிறது" - அவள் இடம் மாறி அவனருகில் வந்து உட்கார்ந்தாள்.

"தங்கேமா, நீ ஏன் இப்படி ஆகிப் போனாய்?"

"உங்கள் பெயரைச் சொல்லவில்லையே?"

"விஷ்ணுதேவன் .

"நீங்கள் இங்கே வந்தது என்னைப் பார்ப்பதற்காகவா?"

"இல்லை. அப்படி ஒரு நினைப்பே என்னிடம் இல்லை.!"

"நான் சந்தேகப்பட்டது சரியாகி விட்டது. இதற்கு முன்பும் ஒருவர் இங்கே வந்திருந்தார். அவருடைய பார்வையும், நடவடிக்கைகளும் எனக்குப் பிடிக்கவில்லை. நான் அவரை அழைத்துக் கொண்டு போய், அதோ தெரிகிறதே, அந்த அபூர்வமான முள் முருங்கையின் மீது வீசியடித்துக் கொன்றுவிட்டேன். இப்பொழுது அப்படிச் செய்திருக்க வேண்டாமே என்று தோன்றுகிறது."

"ஏன் அப்படிச் செய்தாய்?"

"என்னைச் சோதித்துப் பார்ப்பதற்காக அனுப்பியவர்களுக்குப் புரியட்டுமே என்றுதான் செய்தேன். நான் ஆண் பிள்ளைகளுக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறேன் என்று அவர்கள் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்."

"அது உண்மை இல்லையா? அப்படியே இருந்தாலும் நீ செய்தது சரியில்லை. அவர்கள் அவரை ஒரு கருவியாக மட்டுமே பயன்படுத்தியிருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால் என்னையும் அதற்காகத்தான் அனுப்பியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்."

"நானே சொல்கிறேன். எந்த ஆண் மகனுக்காகவும் நான் காத்திருக்கவில்லை. உண்மை வேறு. நான் ஒருவரை நேசித்தேன். அதனால் கர்ப்பமானேன். நேசிக்கக் காரணம், என்னை யாரும் திருமணம் செய்து கொள்ளமாட்டார்கள் என்பதுதான். இந்தக் குடும்பத்தின் வழக்கம் அதுதான். ஒன்றுக்கு மேற்பட்ட பெண்கள் ஒரு குடும்பத்தில் இருந்தால், மூத்த பெண்ணுக்குக் கணவனாக ஒருவர் வருவார். மற்ற பெண்களும் அவருக்கு உடன்பட்டுப் போக வேண்டும். என்னுடைய அக்காவைத் திருமணம் செய்தவர் குதிரை முகமுள்ள ஒருவர். அவரது சாயல்தான் இந்த ஜயந்தனுக்கு. மூக்கு முட்டக் குடித்துவிட்டு, என்னை ஒரு நாள் அவர் பலாத்காரம் செய்ய



வந்தார். நான் உடன்படவில்லை. என்னுடைய எதிர்ப்பு அவருக்குப் பிடிக்கவில்லை.!"

விஷ்ணுதேவன் அவளுடைய கதையைக் கேட்டுக் கொண்டிருந்தான். ஒரு பிரம்ம ரக்ஷஸியிடமிருந்து எதிர்பார்க்க முடியாத இயல்பான கதையாக இருந்தது அவள் சொன்னது.

"...அதன்பின், நான் வேறொருவர் மூலமாகக் கர்ப்பமானேன் என்பதை அறிந்த பலசாலியான தாய்மாமன் என்னைக் காலால் உதைத்து இந்த முள் முருங்கை மரத்தின் மீது வீசியெறிந்து கொன்றார். அதன் பிறகு எத்தனையோ வருடங்களாக நான் இங்குதான் வசிக்கிறேன்."

"எதற்காக நீங்கள் இப்படி ஒரு ரக்ஷஸாக அலைகிறீர்கள்? உங்களுக்கு எப்படித்தான் மோட்சம் கிடைக்கும்?"

"உண்மையைச் சொல்லட்டுமா? ஒரு சக்தி வாய்ந்த ஆடவனால் மட்டுமே எனக்கு மோட்சம் கிடைக்கும். ஆனால், அந்த ஆடவன் நான் விரும்புபவனாக இருக்க வேண்டும்."

"எனக்குத் தெரியும். உங்களுக்கு என்னை நிச்சயமாகப் பிடிக்கும். ஆனால், எனக்காக எந்தவிதமான தியாகத்தையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒருத்தி இருக்கிறாள். அவளுக்குத் துரோகம் செய்ய என் மனம் இடம் தரவில்லை. மற்றபடி நான் ஒன்றும் ஏகபத்தினி விரதனல்ல!"

"உங்களுடைய இந்தக் குணம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. உண்மையை ஒளிக்காமல் மனம் திறந்து கூறுகிறீர்களே... நான் உங்களுடன் வருவதில் உங்களுக்கு ஏதாவது ஆட்சேபணை உண்டா?"

"இதற்குப் பதில் சொல்வது கடினம். நான் இப்பொழுது மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறேன். நான் சொன்னேனே, ஒரு பெண்ணைப் பற்றி - அவளது பெயர் தேவப்ரியா. நான் உன்னை என்னுடன் அழைத்துச் சென்றால் அவள் என்ன நினைப்பாளோ?"

"யாருக்கும் தெரியாமல் உங்களுடன் வருகிறேன். இனிமேல் இங்கிருக்க விரும்பவில்லை. நான் உங்களுடன் வருவது உங்களுக்கு உதவியாக இருக்கும். ஒரு வேலைக்காரி போல் உங்களிடம் இருந்து கொள்வேன்."

"உன்னால் உருவம் மாற முடியுமா? அதாவது ஒரு மனிதப் பெண்

போல் நடந்து கொள்ள முடியுமா?"

"தாராளமாக முடியும்!"

"ஆனால், ஒரு நிபந்தனை! எந்தக் காரணம் கொண்டும் தேவப்ரியாவிற்குச் சந்தேகம் ஏற்படக் கூடாது."

"ஏற்படாது. அதில் நான் கவனமாக இருப்பேன்."

"சரி, அப்படியானால் நான் கிளம்பட்டுமா?"

"போவதற்கு முன்னால் என்னுடைய இருப்பிடத்தைத் தெரிந்து கொள்ளவேண்டாமா? வாருங்கள், பார்க்கலாம். என் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள்!" நங்கேமா கையை நீட்டினாள்.

விஷ்ணுதேவன் அவளது கையைப் பற்றிக்கொண்டான். திடுமென்று அவன் மேற்புறம் உயர்ந்தான். விஷ்ணுதேவனைப் பிடித்தபடி அவள் பறந்தாள். முள் முருங்கை மரத்தின் மேற்புறத்தை அடைந்தார்கள். அந்த முள்களின் மீது காலை அழுத்தி நடந்த போதும் அவனுக்கு வலி தெரியவில்லை.

"இந்த இடத்தில்தான் அவனை நசுக்கிக் கொன்றேன். இந்த முள்களின் மீது ஒருவரை வீசியெறிந்தால் அவரது நிலைமை என்னவென்று யோசித்துப் பாருங்கள். நான் எவ்வளவு வேதனையை அனுபவித்திருப்பேன்?"

அவள் விஷ்ணுதேவனை அழைத்துக் கொண்டு முள் முருங்கையின் அடிப்பகுதியை அடைந்தாள்.

"நான் உங்களுடன் வரப் போவதால் இனி இந்த மரம் எனக்குத் தேவையில்லை"- சொல்லியபடியே நங்கேமா அந்த முள் முருங்கையைத் தன் கையால் தள்ளினாள்.

பார்வைக்கு படுபயங்கரமாகத் தோன்றிய அந்த மரம் ஒருபுறமாகச் சரிந்தபோது சுற்றிலுமிருந்த மண்ணில் வெடிப்புகள் தோன்றின. வேர்ப் பகுதி பூமியைத் துளைத்துக் கொண்டு மேற்புறம் பாய்ந்தது. ஒரு பயங்கரச் சத்தத்துடன் அந்த மரம் சாய்ந்தது.

"இனி நீங்கள் போகலாம்."

விஷ்ணுதேவன் அங்கிருந்து ஜயந்தன் வசிக்கும் புதிய வீட்டை அடைந்தான்.

விஷ்ணுவைப் பார்த்து ஜயந்தன் வியப்புற்றார். 'விஷ்ணு இனி



திரும்பி வரமாட்டான் என்றுதான் அவர் நினைத்திருந்தார். ஆனால், திரும்பி வந்துவிட்டானே? அது மட்டுமா, எந்தவித மாற்றமுமில்லாமல் முழுசாக வந்து சேர்ந்திருக்கிறான், ஒன்றுமே நடக்காதது போல். இதெல்லாம் என்ன? எப்படி நடந்தது? அங்கே என்னதான் நடந்தது?' ஜயந்தனால் அவனிடம் எதையும் விசாரிக்கவும் முடியவில்லை.

"எனக்குத் தூக்கம் வருகிறது. நான் படுத்துக் கொள்ளலாமா?" என்றபடி விஷ்ணு முன்புற அறைக்கு விரைந்தான்.

நள்ளிரவுக்குப் பிறகு இரண்டு நாழிகைகள் கழிந்து விட்டிருந்தன. ஜயந்தனைத் தவிர மற்ற எல்லோரும் தூங்கிவிட்டார்கள்.

ஜயந்தன் தனிமையில் யோசித்தார். 'மீண்டும் மீண்டும் தோல்வி எதிர்ப்பட்டுக் கொண்டே இருக்கிறது. எதிரானியான மோகினி உயிருடன் இருப்பது வரை தன்னால் தன் தொழிலில் முன்னேற முடியாது என்கிற உண்மை புலப்பட்டது. எனவே, அதற்கு என்னதான் தீர்வு? அவளைத் தொலைக்காவிட்டால் தனக்கு நிம்மதி இல்லை.

அடிக்கடி தாத்தாவைத் தொல்லைப்படுத்தக் கூடாது என்று தெரிந்தும், இப்போதைய நிலையில் வேறு வழியில்லாததால் சமாதியை நோக்கி நடந்தார்.

கடும் இருட்டு. ஜயந்தன் நிதானமாக நடந்து புதிய வீட்டின் வடக்குப் புறமாகத் திரும்பிப் பழைய வீட்டை அடைந்தார். சமாதியை நெருங்கி நின்று "தாத்தா... தாத்தா..." என்று அழைத்தார்.

"என்ன இது! இதுவரையில் இல்லாத தொந்தரவு" -நிலவறைக்குள்ளிருந்து அலுத்துக் கொள்வது துல்லியமாகக் கேட்டது.

"மன்னிக்க வேண்டும் தாத்தா, நான் ஏகமாகக் குழம்பிப் போயிருக்கிறேன். என்ன செய்வது என்றே தெரியவில்லை. நிலைமை இப்படியே தொடர்ந்தால் குடும்பத்தின் பெயரே அழிந்து போய்விடும்."

"சரி, நங்கேமா விஷயம் என்னவாயிற்று?"

"அனுப்பி வைத்தேன். திரும்பி வந்திருக்கிறான் முழுசாக.!"

"அப்படியானால் அங்கு என்னமோ நடந்திருக்கிறது.

ஒருவேளை அவனுடைய வலையில் அவள் விழுந்திருக்கலாம்" - தாத்தா கூறினார்.

"தற்சமயம் அப்படி நினைத்துக் கொள்வதைத் தவிர, வேறு வழி இல்லை."

"அப்படியானால் ஒரு காரியம் செய். இதற்கெல்லாம் காரண கர்த்தாவான மூலம் எது என்று கண்டுபிடித்து முதலில் அதை அழி!"

ஜயந்தன் யோசித்தபடியே திரும்பி நடந்தார். என்ன யோசித்தும் ஒருவழியும் புலப்படவில்லை. 'மூலம் யார்? எது? ஒருவேளை அந்த மோகினி தேவப்ரியாதானோ? அவளை நாம் என்ன செய்ய முடியும்? எந்த வகையிலும் அவளை நெருங்குவதே பிரம்மப் பிரயத்தனமாக உள்ளதே. இதுவரையில் தான் வெற்றி பெற்றுள்ள மோகினிகள் துர்த்தேவதைகள் எல்லாம் இவளுக்கு முன்னால் வெறும் தூசாகத் தெரிகிறார்களே!

"எத்தனையோ ஆவிகள், ரக்ஷஸ"களை நான் சந்தித்திருக்கிறேன். எல்லோரையும் மண்ணைக் கவ்வ வைத்திருக்கிறேன். இவளை மட்டும் நெருங்க முடியாமல் இருக்கிறதே!'

திடுமென்று ஜயந்தனின் மனதில் மற்றொரு யோசனை தோன்றியது. 'இப்போதைய சூழ்நிலையில் இவை எல்லா வற்றுக்குமான காரண கர்த்தா விஷ்ணுதேவன்தானே? எனவே, அவனையே ஒழித்துவிட்டால்? அதன் பிறகு மற்றவை எல்லாம் சரியாகி விடும். அவளது கொட்டமும் அடங்கிவிடும்.'

ஒரு தீர்மானத்திற்கு வந்தவராக ஜயந்தன் நம்பூதிரி சூலம் ஒன்றை எடுத்துக் கொண்டு விஷ்ணுதேவன் படுத்திருந்த அறையின் கதவைத் திறந்தார்.



38

கையில் பிடித்த சூலத்துடன் ஜயந்தன் கோபாவேசமாக விஷ்ணு படுத்திருந்த அறையைத் திறந்து நுழைந்தார்.

உட்புறத்தில் விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் அவன் மல்லாந்து படுத்திருப்பது நன்றாகத் தெரிந்தது.

தான் வந்திருப்பதை விஷ்ணு தெரிந்து கொள்ளவில்லையென்பது, அவன் படுத்திருப்பதிலிருந்தே தெரிந்தது. அவன் விழிக்கவில்லை என்பது உறுதியானவுடன் விளக்கின் திரியைச் சற்றுத் தூண்டிவிட்டார். விளக்கு சற்றுப் பிரகாசமாக எரிய, விஷ்ணு பளிச்செனத் தெரிந்தான்.

தான் செய்யப்போகும் வேலையில் சிறிதும் தவறே ஏற்படக்கூடாது என்று ஜயந்தன் விரும்பினார். கண் மூடித் திறப்பதற்குள் காரியம் முடிந்து விடவேண்டும். சூலத்தை இரண்டு கைகளிலும் தயாராகப் பிடித்தபடி விஷ்ணுவின் தலைமாட்டில் வந்து நின்றார்.

விஷ்ணுவின் அழகான கழுத்துதான் ஜயந்தனின் குறி. சூலத்தின் முனைகளை மீண்டும் ஒரு தடவை விரல்களால் தடவிச் சரி பார்த்தார். பிறகு, கண்ணை மூடிக் கொண்டு சூலத்தை உயர்த்தித் தன் லட்சியக் குறியின் மீது பாய்ச்சினார்.

சூலம் விஷ்ணுவின் கழுத்தில் சரியாகப் பாய்ந்தது. ஆனால், அவன் அசையவோ, துடிக்கவோ இல்லை. பழையபடி அவன் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் கழுத்திலிருந்து ரத்தம் பீறிடவில்லை.

ஜயந்தன் ஒரு கணம் தடுமாறினார்.

'என்ன இது இப்படிக் கூடவா நடக்கும்? இதுவரை கேள்விப்பட்டிராத அதிசயமல்லவா இது!' ஒரு வேளை தனக்குத் தவறு நேர்ந்திருக்கலாம் என்று நினைத்தவராக இம்முறை கண்ணைத் திறந்தபடி விஷ்ணுவின் கழுத்தில் சூலத்தை ஓங்கிக் குத்தினார்.

அப்போதும் எதுவும் நடக்காதது போல் விஷ்ணு நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான். அசையக்கூட இல்லை.!

'இனி என்ன செய்யலாம்?' என்று அவர் யோசித்துக் கொண்டிருந்த போது, அவருக்கு எதிரே ஒரு பெண் உருவம் நிற்பது தெரிந்தது. மனங்கவரும் பேரழகி. அழகிப் போட்டிக்கு வந்தது போல் எல்லா ஆபரணங்களையும் அணிந்து நின்றிருந்தாள். சரிகைக் கரை வேட்டி உடுத்தியிருந்தாள். அதுவும் தொப்புளுக்குக் கீழே இறங்கியிருந்தது. அவளை எங்கேயோ பார்த்த ஞாபகம்... சட்டென்று... 'ஆமாம், மாயக் கண்ணாடியில் பார்த்த அதே உருவம்தான்!'

அவர் பழி தீர்க்க வேண்டிய மோகினி தான் இவள். இப்பொழுது அவளை நேருக்கு நேராகப் பார்க்கும் சந்தர்ப்பம்.

அவள் மொத்த அழகையும் தன்னிடம் வாரிக் குவித்து வைத்திருந்தாள்.

அவளுடைய அரை நிர்வாண உடம்பைப் பார்த்த ஜயந்தன் சிலிர்த்துப் போனார். அற்புதமான மோகினிதான்! மோகினிகளைப் பொறுத்தவரை பெரிய வேறுபாடு எதுவும் அவளிடம் தென்படவில்லை.

ஜயந்தன் சூலத்தைச் சுவரில் சாய்த்துவிட்டு மெதுவாக அவளை நெருங்க முற்பட்டார். அவர் நெருங்க நெருங்க அவள் அகன்று கொண்டே இருந்தாள். அவரும் விடாமல் தொடர்ந்தார். அவள் வாசற்படியைத் தாண்டி வெளியே இறங்கினாள். ஜயந்தனும் தொடர்ந்தார்.

வாசற்படியைத் தாண்டிய மோகினி மேற்புறமாக உயர்ந்து வளர்வதை ஜயந்தன் பார்த்தார். ஏறத்தாழ மூன்று ஆள் உயரம் வளர்ந்து விட்டிருந்தாள். தொடர்ந்து அங்கு நிற்பதோ, அவளைப் பிடிக்க நினைப்பதோ உசிதமல்ல என்று தோன்றியதால் சட்டென்று வீட்டிற்குள் பின்வாங்கினார். உட்புறம் வைத்திருந்த சூலத்தை எடுத்து வந்து மோகினியின் நெஞ்சைக் குறிபார்த்து வீசினார்.

பாய்ந்துவரும் சூலம் ஆபத்தானது என்பதை உணர்ந்த மோகினி தனது உருவத்தைச் சட்டென்று சிறியதாக்கினாள். சூலம் அவளது



தலைக்கு மேற்புறமாகப் பாய்ந்தது.

விஸ்வமங்கலத்து வீட்டாருடன் விளையாட விரும்பினால், அதன் விளைவு எப்படி இருக்கும் என்பதை உணர்த்துகிறேன் என்று கர்ஜித்தபடி ஜயந்தன் முன்புறமாகக் கையை நீட்டினார். கிழக்குப் புறமாகப் பாய்ந்து சென்ற சூலம், திரும்பவும் அவர் கைக்கு வந்தது. மறுபடியும் அதை தேவப்ரியாவை நோக்கி வீச முயன்ற போது, அவள் மறைந்துவிட்டாள்.

"இனிமேல் இந்த வீட்டு வாசற்படியைத் தாண்டி உள்ளே வந்தால் உன்னை எட்டிமரத்தில் ஆணியறைந்து விடுகிறேன் பார். புரிந்ததா?" -ஜயந்தன் உரத்த குரலில் எச்சரித்தார்.

ஜயந்தன் மீண்டும் விஷ்ணுவின் அறையை அடைந்தபோது விஷ்ணு கட்டிலில் உட்கார்ந்திருந்தான்.

"விழித்து விட்டீர்களா?" ஜயந்தன் கேட்டார்.

"தூக்கத்திற்கு நடுவே சட்டென்று விழிப்பு வந்தது. தூக்கம் வரவில்லை. சற்றுநேரம் நிலா வெளிச்சத்தில் நிற்கலாமே என்று தோன்றியது. அப்படியே நின்றதில் நேரம் போனதே தெரியவில்லை!"

"அப்படியானால் நீங்கள் படுக்கையிலேயே இல்லை என்று சொல்லுங்கள்!" - சற்று முன்பு நடந்த சம்பவத்தை மனத்தில் நினைத்தபடி கேட்டார்.

"இல்லை. வெளியில்தான் நின்றிருந்தேன். ஏன்? என்னைத் தேடினீர்களா?"

"அதெல்லாமில்லை. அறைக்குள் சத்தம் கேட்டது. என்னவென்று தெரிந்து கொள்வதற்காக எட்டிப் பார்த்தேன்."

"நீங்களுமா இன்னும் தூங்கவில்லை?"

"தூக்கம் வரமாட்டேனென்கிறது."

"அம்மாவின் உடம்புதான் சரியாகிவிட்டதே... நாங்கள் நாளைக்கே கிளம்பிவிடலாம் என்று நினைக்கிறேன்."

விஷ்ணுவின் வார்த்தைகளைக் கேட்ட ஜயந்தன் ஒருகணம் தடுமாறினார். இவர்கள் இருவரும் திரும்பிச் சென்றுவிட்டால் தன்னுடைய திட்டங்கள் எல்லாம் தவிடுபொடியாடகிவிடும் என்பதை உணர்ந்தார். கோபாலன் நம்பூதிரியின் ஆசையை -

கோரிக்கையை நிறைவேற்றவில்லையென்றால், தான் இதுவரை செய்துள்ள மற்ற எல்லா ஏற்பாடுகளும் வியர்த்தமாகி விடும். எனவே, எப்படியாவது இவர்களை இங்கு தங்க வைத்துக்கொண்டே, தேவப்ரியாவை நிர்மூலம் செய்ய வேண்டுமென்று ஜயந்தன் திட்டம் தீட்டினார்.

இரவு படுக்கையில் படுத்தபிறகும் அவருக்கு உறக்கம் வரவில்லை. விஷ்ணுவையும், அவனது அம்மாவையும் இந்த வீட்டில் தங்க வைத்துவிட்டு, தான் அவர்களது வீட்டிற்குச் சென்று விட வேண்டுமென்று இறுதியாகத் தீர்மானித்தார். அப்படிப் போகும் போது ஓமல்லூர் கோயில் பகவதியையும் தரிசிக்கலாமே!

சரஸ்வதி அந்தர்ஜனத்திற்கு மறுநாள் உடம்பு சரியல்லாமல் போனால், அவர்களது பயணம் தடைப்படும். எனவே, அதற்கு என்ன செய்யலாம் என்று தெரிந்து கொள்வதற்காகப் பழைய வீட்டிற்குச் சென்றார்.

நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது.

நிலா வெளிச்சம் குன்றிப்போய் வீட்டைச் சுற்றிலும் கனமான இருள் அப்பிக் கிடந்தது. மயான அமைதி.

சமாதியை நெருங்கி அழைத்தார். "தாத்தா... தாத்தா..."

"ஜயந்தா கொஞ்ச நேரம் கூட என்னை நிம்மதியாக இருக்க விடமாட்டாயா?" சமாதிக் குரல் சலிப்புடன் பேசியது. அதில் எரிச்சலும் தென்பட்டது.

"தாத்தா ஒரு முக்கியமான விஷயம். நான் சொல்வதைத் தயவு செய்து கேளுங்கள். நமது வீட்டின் பெருமை அழியும் காலம் வந்துவிட்டது.!"

"இப்படியொரு நிலை இதுவரை ஏற்பட்டதில்லையே... விஷயம் என்ன? சீக்கிரம் சொல்.!"

"ஓமல்லூர் கோயில் பகவதியிடமோ, அல்லது அந்தக் கோயில் மோகினியிடமோ நாம் தோற்றுவிட்ட மாதிரித் தான் தெரிகிறது. நமது இடத்திற்கே வந்து மாயாஜாலம் காட்டுகிறார்கள். என்னால் நம்பவே முடியவில்லை. இதுவரை நான் கூடச் செய்யாத மாயாஜாலம்!"



"அப்படியானால், அதெல்லாம் உன்னுடைய திறமைக் குறைவினால் ஏற்பட்டதுதான். செய்ய வேண்டியதை எல்லாம் நீ முறைப்படி செய்யாததால் வந்த வினை!" சமாதிக் குரலில் கோபம் தெரிந்தது.

"நான் எதைச் செய்யவில்லையென்று சொல்கிறீர்கள்?"

"தாத்தா! உங்கள் காலில் விழுந்து கேட்கிறேன். தயவு செய்து இந்த ஒரு தடவை மட்டும் எப்படியாவது என்னைக் கரையேற்றி விடுங்கள். இல்லாவிட்டால் குடும்பப் பெருமையும், கீர்த்தியும் மண்ணோடு மண்ணாகிவிடும்."

"உன்னைச் சபிக்கத்தான் தோன்றுகிறது. ஆனால், சபிக்க மாட்டேன். நங்கேமா இப்பொழுது எங்கே யாருடன் இருக்கிறாள் என்று தெரியுமா?"

"தெரியாது தாத்தா. எதையும் தெரிந்துகொள்ளப் போதிய அவகாசம் கிடைப்பதில்லை. தொடர்ந்து அடிமேல் அடி விழுந்து கொண்டே இருக்கிறது."

"அப்படியானால் கேட்டுக் கொள். நீ நங்கேமாவின் உதவியுடன் அந்தப் பையனை அழிக்க நினைத்தாய். ஆனால், கதையே மாறிவிட்டது. நங்கேமா இப்பொழுது அவனுடன் சேர்ந்து விட்டாள்."

"ஐய்யய்யோ... அப்படியானால் அதற்கு என்ன வழி?"

"ஒரே ஒரு வழிதான் உள்ளது. முள் முருங்கை மரப் பொந்தில் ஒரு ஆந்தை உள்ளது. முள் முருங்கை மரத்தை எண்ணெய் ஊற்றி எரித்துவிடு. அந்த ஆந்தை யாரென்று உனக்குத் தெரியுமில்லையா?"

"தெரியும். நீங்கள் சொன்னபடியே செய்கிறேன். உடனே செய்ய வேண்டுமா?"

"ஏன் சோம்பல்படுகிறாய்? உடனே செய்! இப்பொழுதே எண்ணெய் ஊற்றித் தீ வைத்தால் மரம் எரியாமல் போய் விடுமா என்ன?"

உடனே அங்கிருந்து கிளம்பிய ஜயந்தன் தான் வசிக்கும் புதிய வீட்டிற்கு வந்து எண்ணெய்ப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு முள் முருங்கை மரத்தை நெருங்கினார்.

அப்பொழுது ஜயந்தனின் தலைக்கு மேற்புறம் ஏதோ ஒன்று சிறகடித்துப் பறந்து கொண்டே வட்டமடித்தது. பிறகு அது கிழக்குத் திசை நோக்கிப் பறக்க ஆரம்பித்தது. நங்கேமாதான் அது!

விஷ்ணுதேவன் படுத்துக் கிடந்த அறையின் வாசற்படியை அடைந்த நங்கேமா, உட்புறம் எட்டிப் பார்த்தாள். விளக்கு வெளிச்சத்தில் விஷ்ணு மல்லாந்து படுத்திருப்பது தெரிந்தது. அந்த நிலையில் அவனைப் பார்த்ததும் அவளுக்குள் பருவ உணர்ச்சிகள் அரும்பின. விஷ்ணுவை அவள் அணுகிய விதமே வேறுதான். ஆனாலும், இந்த நேரத்தில் அவளுக்கு அதெல்லாம் மறந்தே போயிற்று. எத்தனையோ வருடங்களாகப் படிந்து கிடக்கும் உணர்வுகளின் களத்தில் வெடிப்புகள் தோன்றின.

நங்கேமா விஷ்ணுவின் படுக்கையில் சென்று அமர்ந்தாள். பிறகு அவனைப் பார்த்தபடியே அவனது மார்பு ரோமங்களின் ஊடாக விரல்களால் அளைந்தாள். அவன் விழித்துக் கொண்டு, தன்னை அடையாளம் தெரிந்து கொள்ளக் கூடுமென்று தோன்றியதும் சட்டென்று அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது.

விஷ்ணுதேவன் கண் திறந்து பார்த்தபோது தேவப்ரியா அவனருகே உட்கார்ந்திருந்தாள். அவள் அவனது மார்பின் மீது சாய்ந்தாள்.

"இங்கே எப்படி வந்தாய்?" விஷ்ணு கேட்டான்.

"பறந்து வந்தேன்!" அவள் முழுவதுமாக அவன் மீது சரிந்து விட்டிருந்தாள்.

எதிர்பாராத விதமாக அந்த நேரத்தில் ஜயந்தன், அறை வாசலில் தோன்றினார். முதல் பார்வையிலேயே அவருக்கு மொத்த விஷயமும் விளங்கி விட்டது. ஜயந்தன் முன்புறமாக முன்னேறினார்.!



## 39

ஜயந்தன் இன்னும் சற்று முன்னால் வந்தார். விஷ்ணுதேவனுடன் இருப்பவள் உருவம் மாறியிருந்தாலும் நங்கேமாதான் என்பது அவருக்குப் புரிந்துவிட்டது.

நங்கேமாவை என்ன செய்வது என்பது புரியாமல் சற்று நேரம் அப்படியே நின்றார். பிறகு ஏதோ யோசனை செய்தவராக வெளியே வந்து பார்த்தார். சூலம் கண்ணில்பட்டது.

அன்று அந்த சூலத்தைப் பயன்படுத்தி விஷ்ணுதேவனைக் கொல்ல அவர் முயன்றாலும், தேவப்ரியாவால் அது தடைப்பட்டது. தேவப்ரியாவுக்குள்ள சக்தி நங்கேமாவிற்கு இருக்காது என்பதும் ஜயந்தனுக்கு உறுதியாகத் தெரியும். சூலத்தைக் கையில் எடுத்துக் கொண்டு மீண்டும் அறைக்குள் நுழைந்தார். தேவப்ரியாவின் உருவத்தில் படுத்திருந்த நங்கேமாவை நெருங்கினார்.

நங்கேமா, விஷ்ணுவைச் சுற்றிப் போட்டிருந்த கையை எடுத்து மல்லாந்து படுத்தாள். அவள் மல்லாந்த அதே சமயம் ஜயந்தன் அவள் மார்பில் சூலத்தால் குத்தினார். யாரையும் நடுநடுங்க வைக்கும் ஓலம் அந்த அறையில் எழுந்தது. அறையே ஒரு முறை குலுங்கியது!

விஷ்ணுதேவன் துள்ளி எழுந்தான். கட்டிலைப் பார்த்தான். நெஞ்சில் பதிந்த சூலத்துடன் ஒரு பைசாசிக வடிவம் துடிதுடித்துக் கொண்டிருந்தது. நங்கேமாவின் வடிவமே மாறிவிட்டிருந்தது.

அவிழ்த்துப் போட்ட தலைமுடி. கறுப்பு நிற உடம்பு. வாயின் இருபுறமும் நீண்டு வளர்ந்த கோரைப் பற்கள். அவள் தோற்றமே பயத்தை ஏற்படுத்தியது.

"என்ன இது?" விஷ்ணு பதறினான்.

"உங்களுக்குப் புரியவில்லையா, உங்களுடன் யார் படுத்திருந்தது என்று? பார்த்துக் கொள்ளுங்கள். இதுதான் மோகினி, ரக்ஷஸ‍ுகளின் உண்மையான வடிவம்!" வேண்டுமென்றே ஜயந்தன் உள்ளர்த் தத்துடன் அதைக் கூறினார்.

அவர்கள் இரண்டு பேரும் பார்த்துக் கொண்டிருந்த போதே நங்கேமாவின் வடிவம் மெதுவாகக் காற்றில் கரைந்து கடைசியில் மறைந்தே போனது. ஜயந்தன் வெளியே போனார்.

சூலத்தை எடுத்த இடத்திலேயே வைத்துவிட்டு, உடனே தாத்தாவின் சமாதியை நெருங்கினார்.

"தாத்தா, நங்கேமா தொலைந்தாள்!" சற்று உரக்கவே பேசினார் ஜயந்தன்.

"அது எதனால் என்று உனக்குத் தெரிகிறதா?"

"தெரியவில்லை.!"

"நங்கேமா இதுவரை ரக்ஷஸாக இருந்தாள். மனிதர்களுடன் அவள் தொடர்பு கொண்டவுடன் அவளிடமிருந்த சக்தி விடை பெற்றுக் கொண்டது. அதனால்தான் மிகச் சுலபமாக உன்னால் அவளைத் தொலைக்க முடிந்தது.!

"அடுத்ததாக நான் என்ன செய்ய வேண்டும். சொல்லுங்கள், தாத்தா?"

"ஒவ்வொன்றையும் படிப்படியாகச் சொல்லித் தருகிறேன். அந்த மோகினியை நீ முதலில் வெற்றிகொள்ள வேண்டும். அவள் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வரை உனக்குச் சக்தி கிடையாது!"

"சரி, அதற்கு என்ன செய்ய வேண்டும்?"

சமாதி சற்றுநேரம் மௌனத்திலாழ்ந்தது. பிறகு பேசியது: "அதே ஊரைச் சேர்ந்த ஒருத்தி உன்னைத் தேடி வந்து கொண்டிருக்கிறாள். அவளை நீ வசியப்படுத்திவிட்டால் அவளைக் கொண்டே அந்த மோகினியைச் சுலபமாக எதிர்க்க முடியும்?"

"அது எப்படித் தாத்தா?"

"அதை நான் உன்னிடம் எப்படிச் சொல்வது?"

இந்தப் பதிலைக் கேட்டதும் விஷயம் கொஞ்சம் விபரீதமானது என்று ஜயந்தனுக்குத் தோன்றியது.

"அப்படியானால் எழுதித் தெரிவியுங்கள். நான் படித்துக் கொள்கிறேன்."

"ஓலையும் எழுத்தாணியும் கொண்டு வா!"- சமாதி கட்டளையிட்டது.



30233
466159

ஜயந்தன் ஓடிப் போய் எடுத்து வந்தார்.

"அதை அந்த வாசற்படியில் வை."

அந்தப் பகுதி மொத்தமும் இருளடைந்து கிடந்தது. வீட்டைச் சுற்றி வளர்ந்திருந்த மரங்களின் நிழல், அந்தப் பகுதி முழுவதையும் வியாபித்திருந்தது.

ஜயந்தன் சற்று நகர்ந்து ஓலையையும் எழுத்தாணியையும், வாசற்படியில் வைத்தார்.

சற்று நேரத்திற்குப் பிறகு குரல் எழும்பியது: "இந்தா, இதில் இருக்கிறது நீ கேட்டது."

ஜயந்தன் அதைக் கையில் எடுத்துக் கொண்டாலும் இருட்டு காரணமாக அதில் உள்ளதை அவரால் படிக்க முடியவில்லை. எனவே அதை எடுத்துக் கொண்டு புதிய வீட்டை அடைந்தார்.

குத்துவிளக்கின் வெளிச்சத்தில் தாத்தாவின் ஓலையைப் பேரன் வாசித்தார்.

"சே...! இதையா எழுதிவைத்திருக்கிறார்?" ஜயந்தனின் குரல் பிசிறடித்தது.

ஜயந்தன் ஒரு பிரமசாரி. அதற்குக் காரணம் பிரமசரியத்தோடு அவருக்கு இருந்த பற்றல்ல. அழகு என்கிற விஷயத்திற்கும் அவருக்கும் ரொம்ப தூரம். எந்த ஒரு பெண்ணும் அவரை விரும்பியதில்லை. எனவே அவரும் பெண்ணைப் பிடிக்காதவராக மாறிப் போய்விட்டார்!

இப்பொழுது தாத்தா எழுதியிருப்பது இங்கு வரப்போகிற ஒரு பெண் மந்திரவாதினியைப் பற்றி. அவள் இவ்வளவு காலமும் ஆண்வாசனை படாமல் வாழ்ந்தவளாம். ஆண்கள் என்றாலே வெறுப்பவளாம். இளமையில் அழகு இல்லாத காரணத்தாலேயே புறக்கணிக்கப்பட்டவளாம்.

வயதாகிவிட்டிருந்தாலும் உண்ணிச் சிருதேயியின் உள்மனத்தில் ஒருபோதும் அடங்காத உணர்வுகள் உறங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, அவளது உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்தால், அதைக் கொண்டு என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று தாத்தா கணக்கிட்டிருந்தார். எனவேதான், அதைப் பேரனிடம் கூறாமல் எழுதியே கொடுத்தார்.

காரியசித்திக்காக வேறு வழியின்றி தாத்தா சொல்லித் தந்த உபாயத்தைக் கடைப்பிடிப்பதென்று தீர்மானித்தார் ஜயந்தன்.

மறுநாள் காலையில் நித்ய பூஜைக் கர்மங்களை முடித்துக் கொண்டு, கோபாலன் நம்பூதிரியுடன் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தபோது, வெளிப்புற வாசலில் உண்ணிச் சிருதேயி வெளிப்பட்டாள்.

அந்த நேரம் விஷ்ணுதேவன் அங்கு இல்லை. பக்கத்திலிருந்த சிவன் கோயிலுக்குச் சென்றிருந்தான்.

பார்த்தவுடனேயே ஜயந்தனுக்குப் புரிந்துவிட்டது. எனவே, உட்கார்ந்த இடத்தைவிட்டு அசையாமல் அப்படியே உட்கார்ந்தார்.

உண்ணிச் சிருதேயி நேராகத் துளசி மாடத்தின் அருகே வந்து நின்றாள்.

“ஏன் அங்கேயே நின்றுவிட்டீர்கள்?” ஜயந்தன் கேட்டார்.

“ஒன்றுமில்லை. அனுமதி இல்லாமல் எப்படி வருவது என்பதால்தான் தயங்கி நிற்கிறேன்.”

“அனுமதியெல்லாம் தேவையில்லை. அதோ அப்படி உட்காருங்கள்” என்று சுட்டிக் காட்டிவிட்டு உட்புறம் திரும்பி, “தேவகீ...” என்று அழைத்தார்.

தேவகி வெளியே வந்தாள்.

“இதோ இவர்களை உள்ளே கூட்டிக் கொண்டு போய், உபசரித்துப் பேசிக் கொண்டிரு.”

தேவகி, உண்ணிச் சிருதேயியை உள்ளே அழைத்துக் கொண்டு போனாள்.

“இந்தப்பெண்மணியைப் பற்றியா தாத்தா சொல்லியிருக்கிறார்? -ஜயந்தன் யோசித்தார். கூடவே, தாத்தா சொன்னால் அதில் தவறே இருக்காது என்றும் சமாதானம் செய்துகொண்டார்.

மதிய உணவு முடிந்தவுடன் புறப்படலாமென்று அம்மாவை வற்புறுத்தத் தொடங்கினான் விஷ்ணு. முதல் நாளிரவு நடந்த சம்பவத்தைப் பற்றி விஷ்ணு யாரிடமும் எதுவும் பேசவில்லை. அம்மாவிற்குத் தெரிந்தால் ரொம்பவும் பயந்து விடுவார் என்பதால் சொல்லவில்லை. இருப்பினும் அதற்குப் பிறகு ஒரு விநாடி கூட அங்கு



தங்கியிருக்க அவன் விரும்பவில்லை.

“இப்படியே இங்கே உட்கார்ந்திருந்தால் என்னம்மா ஆவது? அங்கே எல்லாவற்றையும் அப்படியப்படியே போட்டுவிட்டு வந்திருக்கிறோம். வாருங்கள், சீக்கிரம் புறப்படலாம்” - விஷ்ணு அம்மாவை வற்புறுத்தினான்.

புறப்படுவதைப் பற்றிக் கோபாலன் நம்பூதிரியிடம் சரஸ்வதி அந்தர்ஜனம் கேட்டாள். என்ன காரணத்தைச் சொல்லி அவர்களை அங்கு தங்கவைப்பது என்று அவருக்கும் புரியவில்லை.

‘எதற்காக அவர்களை இங்கே நிறுத்தி வைக்க வேண்டும்? இப்படிப்பட்ட நிலையில் அவர்களை இங்கு வைத்திருப்பதால் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. முதலில் தாத்தா சொன்ன விஷயத்தை முடிப்போம். அதிலேயே எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு பிறந்துவிடும் என்று ஜயந்தன் நினைத்தார்.

“அப்படியானால் புறப்படுங்கள்... கோபாலன், உங்களுக்கு அவசர வேலை எதுவுமில்லையே?”

அந்தக் கேள்வியின் அர்த்தம் கோபாலனுக்குப் புரிந்தது.

“இல்லை. நான் இப்பொழுது புறப்படவில்லை” என்றார்.

“என்னதான் இருந்தாலும் அது ஒரு பயங்கரமான இடம்தான். அப்பப்பா...” - பயணப்படும் வழியில் சரஸ்வதி அந்தர்ஜனம் கூறினார்.

“நீங்கள் இப்படிச் சொல்லக் காரணம்?”

“அங்கே மனிதர்களுடன் வேறு என்னவெல்லாமோ குடியிருப்பதாகத் தோன்றுகிறது.”

“நீங்கள் எதையாவது பார்த்தீர்களா?”

“பார்த்தேன், கர்மத்தை!”

“அப்படி என்னதான் பார்த்தீர்கள்?”

“ஒருநாள் ராத்திரி சட்டென்று கண் விழித்தேன். அப்போது உள்புற ஹாலில், ஒரு முற்றத்தின் பக்கமாகக் காலை நீட்டியபடி இரண்டு பெண்கள் தலை துவட்டிக் கொண்டிருந்தார்கள். அவை மனிதப் பெண்களே இல்லை மோகினிகள்!”

விஷ்ணு பதில் பேசவில்லை.

"சே... அது ஒரு மோசமான இடம்..." என்று முணுமுணுத்தார் சரஸ்வதி அந்தர்ஜனம்.

**மா**லை நேரமானதும், தாத்தா எழுதியிருந்த விஷயத்தைக் குறித்து யோசித்தார் ஜயந்தன். உண்ணிச் சிருதேயி அம்மாவை வலையில் வீழ்த்த வேண்டும். இந்த விஷயத்திற்கு அப்பாவின் பாணிதான் நல்லது.

"தேவகி" - ஜயந்தன் கூப்பிட்டார்.

"என்னண்ணா?"

"அந்தம்மா எங்கே?"

"உள்ளே வெற்றிலை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்."

"ஒரு காரியம் செய்ய வேண்டும். நீங்கள் இரண்டு பேரும் கோயில் குளத்திற்குப் போய்க் குளித்துவிட்டு வாருங்கள். காய்ச்சிய எண்ணெயையும், இஞ்சக் காயையும் (அழுக்கு மற்றும் எண்ணெய்ப் பசையைப் போக்க இஞ்சக்காயின் தோலை சோப்பு போல் உடம்பில் தேய்த்துக் குளிப்பது அந்தக் கால வழக்கம்) எடுத்துக் கொடு."

ஜயந்தன் சொன்ன வார்த்தைகளின் பொருள் முதலில் தேவகி அந்தர்ஜனத்திற்குப் புரியவே இல்லை. காரணம் இப்படிப்பட்ட உபசரிப்பை இதுவரை அவள் யாருக்குமே செய்ததில்லை.

"இன்னும் ஒரு விஷயம் சந்தனசோப்பு இருக்கிறதல்லவா, அதையும் எடுத்துக்கொண்டு போங்கள்!" ஜயந்தன் மறந்து போனதை நினைவுபடுத்திச் சொல்வது போல் சொன்னார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டபோது அவளுக்கு ஏதோ புரிந்தது மாதிரித் தோன்றியது. கீழுதட்டைக் கடித்தபடி உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள்.

ஜயந்தன் அதையெல்லாம் கவனிக்கவில்லை!

அதற்குப் பிறகு கோபாலனும், ஜயந்தனும் தங்கள் எதிர்கால நடவடிக்கைகள் குறித்துப் பேசினார்கள்.

"புதியதாக வந்திருக்கிற பெண்மணி சாதாரணமானவள் இல்லை. அவளை வைத்துக் கொண்டுதான் நம்முடைய காரியங்களைச் சாதிக்க வேண்டும். பார்த்துக் கொண்டே இருங்கள்."

"அது எப்படி?"



"கவனியுங்கள். விளங்கும். நாளைக்கு விடியும்போதே விஷயம் தெரியத் தொடங்கும்."

தேவகி அந்தர்ஜனமும், உண்ணிச் சிருதேயியும் குளித்துவிட்டு வந்தார்கள். ஜயந்தன் புதிய பெண்மணியை ஒரு கணம் மேலும் கீழும் பார்த்தார். தாத்தா எழுதித் தெரிவித்த காரியத்தை நினைத்து மெல்லச் சிரித்தார்.



## 40

**சா**ப்பிடுவதற்கு உட்கார்ந்தபோது நெல் குத்தும் அறையின் ஓரமாக நின்றிருந்த உண்ணிச் சிருதேயி அம்மாவை ஜயந்தன் கவனித்துக் கொண்டிருந்தார்.

வயது நாற்பதைத் தாண்டியிருந்தாலும் குளித்துச் சந்தனம் தீட்டி, தலைமுடியைப் பின்புறம் தழைய விட்டு, பருத்த மார்பகங்களுக்கு மேல் (இரண்டாம் முண்டு எனப்படும்) முந்தானையைப் போர்த்தியபடி நின்றிருந்த உண்ணிச் சிருதேயியிடமும் பெண்மை சற்று தெரியவே செய்தது!

ஜயந்தன் மனத்திற்குள் விஷ்ணு மாயா சக்கரம் வரைந்து, அதன் மந்திரத்தை உண்ணிச் சிருதேயியிடம் செலுத்திக் கொண்டிருந்தார். விஷ்ணு மாயா சக்கரமும், மந்திரமும் பெண்களை வசியப்படுத்தும் ஆற்றல் பெற்றவை. அதன் பிரதிபலிப்பு சிருதேயியிடம் தெரிந்தது. அவளது பார்வை ஜயந்தனை வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

ஜயந்தனின் பார்வையில் ஏதோ வித்தியாசமிருப்பதை தேவகியும் கவனிக்கத் தவறவில்லை. கோபாலன் நம்பூதிரியிடம் தான் தொடர்பு கொள்வதை ஒருவகையில் அனுமதித்து அங்கீகரித்திருக்கிற காரணத்தினால், தேவகிக்கும் இந்த விஷயத்தில் மகிழ்ச்சியே தோன்றியது.

சாப்பாட்டிற்குப் பிறகு கோபாலன் நம்பூதிரியும், ஜயந்தனும்

வராந்தாவில் வந்து உட்கார்ந்தனர்.

"எதிர்பார்த்து வந்ததெல்லாம் திசைமாறிப் போவது போல் தோன்றுகிறதே" - கோபாலன், ஜயந்தனைப் பார்த்துக் கூறினார்.

"இப்படிப் பேசுவதில் அர்த்தமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இது மனிதர்களோடு நடத்தும் போராட்டமல்ல. முதலில் அதைத் தெரிந்துகொள்ளுங்கள். மனிதர்களுடனோ, பிசாசுகளுடனோ போராடுவது சுலபம். இங்கே எதிராளி ஒரு மோகினி. மோகினி என்றால் சாதாரண மோகினியா? ஓமல்லூர் கோயில் பகவதியினுடைய துவாரபாலிகையரில் ஒருத்தி!"

கோபாலன் நம்பூதிரி குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் சொல்வது உண்மைதான் என்று அவருக்கும் தோன்றியது. பொதுவாக மந்திரவாத விஷயங்களில் விஸ்வமங்கலத்தார் பெயர் போனவர்கள். சுலபத்தில் தோற்காதவர்கள். போராடி வெற்றி பெறாமல் போனது கிடையாது. இருந்தாலும் இந்த விஷயம் சற்றுக் கடினமானதுதான் என்பதும் கோபாலனுக்குப் புரியவே செய்தது.

"அப்படியானால் இது சாத்தியமா?" - கோபாலன் கேட்டார்.

"எல்லாவற்றிற்கும் ஏதாவது ஒரு வழி இருக்கும். இந்தக் காரியத்திற்கும் அது உண்டு. அப்படித்தான் போகவேண்டும்."

அது என்ன வழி என்று கோபாலன் கேட்கவில்லை. அப்படிக் கேட்பதும் சரியில்லையே

இரண்டு பெண்களும் சாப்பிட்டு முடித்து என்னென்னவோ கதை பேசிக் கொண்டிருந்தார்கள்.

"நீங்கள் கலியாணம் செய்து கொள்ளவில்லையா?" - உண்ணிச் சிருதேயி, தேவகியிடம் கேட்டாள்..

"இது மந்திரவாதிகளின் வீடாக இருந்ததால், ஒரு வேளை பயந்து வராமலிருந்து விட்டார்களோ என்னவோ?"

"எனக்கும் அதுதான் நடந்தது. எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த காரணவர்களுக்கும் (காரணவர் - தாய்மாமன். வாரிசுரிமைகூட மருமகனுக்குத் தான் என்றிருந்த காலம் அது) மாந்திரீகத்தில் ஏகப்பட்ட சிரத்தை. சிறு வயதில் மூர்த்திகளைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு எனக்கு இருந்தது. வயதுக்கு வந்தபோது



ஒதுங்கியிருந்த நாட்களைத் தவிர, மற்ற நாட்களிலும் நானேதான் செய்தேன். ஆண் குழந்தைகள் இல்லாமல் வீடு வெறிச்சோடிப் போனது. இருப்பவர்களைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு எனக்கு வாய்த்தது. அதன் பிறகு குடும்பப் பழியும், பெயரும் எனக்குக் கிடைத்தது. 'துர்மந்திரவாதினி' என்றார்கள். சிலர் 'சூனியக்காரி' என்று குறிப்பிட்டார்கள்."

"அப்படியானால் இதுவரையில்...?"

"எந்தப் புருஷனும் என்னைத் தொட்டதில்லை. புருஷ சுகம் தெரியாமல் (இங்கு புருஷன் என்கிற வார்த்தை, ஆண் என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது) வாழ்ந்து கொண்டிருக்கிறேன்."

"ஒருவகையில், நானும் அப்படித்தான் வாழ்ந்து வந்தேன்!" என்றாள் தேவகி அந்தர்ஜனம்.

"என்ன தேவகி, இன்னும் படுத்துக் கொள்ள நேரமாகவில்லையா?" - ஜயந்தனின் குரல் கேட்டு அவள் எழுந்தாள்.

"இவரை எங்கே படுக்க வைப்பது? வடக்குப் புற அறையில் அவருக்குப் பாய் போடட்டுமா?"

"எங்கே வேண்டுமானாலும் போடு. நான் இந்த ஹாலிலேயே படுத்துக் கொள்கிறேன். ஒரு பாயை இப்படிக் கொடு!"

தேவகி அந்தர்ஜனம் வடக்குப் புற அறையில் நுழைந்து மேற்புறத்தில் சுருட்டி வைத்திருந்த பாயையும், தலையணையையும் உதறி விரித்துவிட்டு, அண்ணனிடம் ஒரு பாய், தலையணையைக் கொடுத்து விட்டுப் போனாள்.

உண்ணிச் சிருதேயி தூங்காமல் படுத்திருந்தாள். தூக்கம் வர மறுத்தது. அப்போது யாரோ ஒருவர் தேவகி அந்தர்ஜனத்தின் அறைக்குள் நுழைவதைப் பார்த்தாள். அந்த அறைக்குள் நுழையக்கூடியவர் யாராக இருக்குமென்பதும் அவளுக்குப் புரிந்தது. யோசனையிலிருந்து விடுபட்டபோது, வராந்தாவிலிருந்து அவளை யாரோ அழைப்பது போல் தோன்றியது.

"உண்ணிச் சிருதேயி, இங்கு வாருங்களேன்..."

இந்த வார்த்தைகளைக் கேட்பதற்காகவே காத்திருந்தது போல் இருந்தது அவளுடைய மனம். எழுந்து வெளியே வந்தாள்.

"இங்கு ஒரே புழுக்கமாக இல்லையா? முன்னறையில் போய்ப் படுக்கலாமே?" - ஜயந்தன் பேசினார்.

உண்ணிச் சிருதேயி அவருடன் முன்னறைக்கு நடந்தாள்.

ஓர் ஆடவனின் முதல் ஸ்பரிசம்.

உண்ணிச் சிருதேயிக்கு உடல் சிலிர்த்தது!

அவளுடைய ஒவ்வொரு ரோமக் கால்களிலும் மின் மினிப் பூச்சிகள் வெடித்துச் சிதறின. இதயத்தில் ஆயிரமாயிரம் மத்தாப்புக்கள் விரிந்து மலர்ந்தன.

அந்தக் காலத்தில் அவள் பெண்ணாக மலர்ந்தபோது அழகியாகத்தான் இருந்தாள். கோயிலில் பூஜை செய்யும் அந்த நாள் பூசாரியான தானவேதன் நம்பூதிரி கூட, அதிகாலைப் பூஜையின் போது சாமி கும்பிட வரும் அவளைப் பார்த்து சாமியையே மறந்து போனதுண்டு.

அவளை விரும்பாதவர்கள் என அன்று யாருமே இருந்திருக்க முடியாது. ஆனால், சரியான பருவம் கடந்தபோது ஆசைகளும் தாகங்களும் உள்ளுக்குள்ளேயே புதைந்துபோய், அழகும் அவளிடமிருந்து விடை பெற்றுக் கொண்டது.

நள்ளிரவு தாண்டியபோது அவள் பூரணமாகவே ஜயந்தனிடம் சரணாகதி அடைந்து விட்டிருந்தாள்!

"எங்கிருந்து வருகிறீர்கள்?" ஜயந்தன் கேட்டார்.

"குருக்ஷேத்ர மனையிலிருந்து..."

"அப்படியானால் நோயாளி விரும்பியதும் பால்; மருத்துவர் வழங்கியதும் பால் என்கிற கதைதான்!"

"இப்படிச் சொல்லக் காரணம்?"

"அந்த மனையைப் பற்றி நான் சிலதெல்லாம் சொல்ல வேண்டியுள்ளது" - உண்ணிச் சிருதேயியின் உடலை வருடியபடி ஜயந்தன் போதையில் குழறினார்.

"சொல்லுங்கள்...!"

"அங்கும் ஒரு அந்தர்ஜனமிருக்கிறாரில்லையா? அவளைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"பிறப்பும், இறப்பும் இல்லாத ஒருவரைப் பற்றித் தானே கேட்கிறீர்கள்?"



"அடடே... நான் விளக்கமாகச் சொல்லாமலே விளங்கி விட்டதே!"

"புரியாதா? நானும் மந்திரம் கற்றவள்தானே? சிலதெல்லாம் புரிந்து கொண்டதால்தான் இங்கு வந்தேன். வந்த பிறகு என்னுடைய அபிப்பிராயமே மாறிவிட்டது."

"அப்படியென்றால்?"

உண்ணிச் சிருதேயி வேகமாக எழுந்தாள். அந்த முன்னறையின் மூலையில் மாராப்புத் துணியில் பத்திரமாக முடிந்து வைத்திருந்த ஒரு சிறு மூட்டையை எடுத்து வந்து அவிழ்த்தாள்.

ஜயந்தன் வியப்பில் வாயடைத்துப் போனார். 'இது எப்படி உண்ணிச் சிருதேயியின் கைக்குக் கிடைத்தது?' என்ற யோசித்தார்.

"அந்த மோகினி எனக்குத் தந்தது. நான் சண்டை போட்டு வாங்கினேன்."

"எதற்காக?"

"புத்திசாலித்தனமாக நான் செய்த வேலை. என்னிடமும் ஒரு பிடி மானம் இருக்கட்டுமே என்பதற்காகத்தான்."

"புரியவில்லையே?"

"ஒருதண்டை ஏற்கெனவே காலிலிருந்து போய்விட்டது. அதனுடைய ஜதை இது. இந்த இரண்டும் இல்லாமல் எப்படி அவளால் திரும்பிப் போக முடியும்?"

"இது அந்த மோகினியின் கால் தண்டைதானா?"

"ஆமாம் அதிலென்ன சந்தேகம்?"

ஜயந்தன் அதைக் கையில் வாங்கி விளக்கை நெருங்கி அதன் வெளிச்சத்தில் நன்றாகப் பார்த்தார். கண்ணைக் கூசச் செய்யும் ஒளி அதிலிருந்து பிரதிபலித்தது. கூடவே, மற்றொன்றையும் ஜயந்தன் கவனித்தார்.

தேவநாகரி மொழியில் அதில் என்னவெல்லாமோ செதுக்கப்பட்டிருந்தது. வெகு பழங்காலத்திய எழுத்து. என்ன முயன்றும் ஒன்றும் பிடிபடவில்லை!

"இது இல்லாமல் அவளால் திரும்பிச் செல்ல முடியாதென்றால், அவளுடைய குடுமி நம் கையில் தான் என்பது உண்மை தான்" என்றார் ஜயந்தன் மகிழ்ச்சிக் களிப்பில்.

"என்ன உத்தேசத்தில் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"உங்களுக்கு இன்னும் இது புரியவில்லையென்று நினைக்கிறேன்."

"சொல்லுங்கள்!"

"அதாவது இந்த மோகினி வர்க்கத்தினருக்குச் சில வரைமுறைகள் உள்ளன. அவர்கள் யாரிடம் இருக்கிறார்களோ, அவர்கள் சொல்வதைக் கேட்பார்கள். மற்றொரு விஷயம், இந்தக் கால்தண்டை. இதிலெல்லாம் சில விஷயங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் மோகினிகள் இழக்கக்கூடாது!"

"அப்படியானால் இதுவும் ஒரு வகை பலம் (சக்தி) என்கிறீர்களா?" என்று கேட்டார் சிருதேயி.

"சந்தேகமில்லாமல்!"

"மேற்கொண்டு, நான் என்ன செய்ய வேண்டும்?"

"அவசரப்படாதீர்கள். நான் சொல்கிறபடியே மெதுவாகப் படிப்படியாகச் செயல்பட்டால் போதும்..."

"முன்பே சொல்லி விட்டேனே, நீங்கள் என்ன சொன்னாலும், அதைச் செய்ய நான் தயார்...!"

உண்ணிச் சிருதேயி, முழுவதுமாகவே ஜயந்தனுக்கு ஆட்பட்டிருந்தாள். வாழ்க்கையில் அன்றுவரை அனுபவிக்காத ஒரு புதிய அனுபவம். அவளை வாரியெடுத்த ஜயந்தன் இறுக அணைத்ததால் ஏற்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்பில் ஜயந்தனுக்காக எது செய்யவும் அவள் தயாரர்கிவிட்டிருந்தாள்!

"நாம் இரண்டு பேரும் சேர்ந்து ஒற்றுமையாகச் செயல்பட்டால் அந்த மோகினியைப் பிடிப்பது மட்டுமல்ல, குருக்ஷேத்ர மனையையே வெற்றிகொண்டு விடலாம். நம்முடைய இப்பொழுதைய தேவை, இதன் ஜதையான மற்றொரு தண்டை. அது எங்கே இருக்கிறதென்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்."

"அதை எப்படித் தெரிந்து கொள்வது?"

"நாளைக்கே நீங்கள் குருக்ஷேத்ர மனைக்குச் செல்லவேண்டும். எப்படியாவது அந்த மோகினியைக் கைக்குள் போட்டுக்கொண்டு, அவளிடமிருந்தே அதைக் கேட்டறிய வேண்டும். அது எங்கே



இருக்கிறது என்பதை மட்டும் தெரிந்து கொண்டுவிட்டால் அதன் பிறகு நடக்க வேண்டியதை நான் பார்த்துக் கொள்கிறேன்."

உண்ணிச்சிருதேயி மறுநாள் காலையிலேயே குருக்ஷேத்ர மனையை நோக்கிப் புறப்பட்டாள்.

அன்று காலைப் பலகாரம் முடிந்த பிறகு கோபாலன் நம்பூதிரி கேட்டார். "எங்கே அந்தப் புதிய பெண்மணியைக் காணோம்?"

"குருக்ஷேத்ர மனைக்கு அனுப்பி வைத்திருக்கிறேன்."

மதிய வேளையில் தேவப்ரியா குளத்திற்குப் போனாள். துணிகளைத் துவைத்துக் கல்லின் மீது வைத்தாள். குளத்தில் மூழ்கி எழுந்த போது, குளத்தின் கருங்கல் படிக்கட்டில் உண்ணிச் சிருதேயி நின்று கொண்டிருந்தாள்.



41

"என்ன உண்ணிச் சிருதேயி அம்மா, திரும்பிவிட்டீர்களா?"- தேவப்ரியா திரும்பி நின்று கேட்டாள்.

மார்பை மறைக்காமல் ஈரத்துடன் நீருக்குள் நின்றிருக்கும் தேவப்ரியாவையே உண்ணிச் சிருதேயி ஒருகணம் ஊன்றிக் கவனித்தாள்.

"என்ன யோசிக்கிறீர்கள்?"

"ஓ... ஒன்றுமில்லை!"

"போன காரியம் என்ன ஆயிற்று?"

இதைக் கேட்டதும் உண்ணிச் சிருதேயியின் முகம் சுருங்கியது. இருப்பினும் மனத்திற்குள் இருக்கும் திட்டத்தை வெளிக்காட்டாமல் நடிக்கத் தொடங்கினாள். அத்துடன் உண்மை நிலையை தேவப்ரியா அறிந்து கொள்ளாமல் இருக்கவும், தன்னுடைய மனோநிலையை அவள் படித்தறிந்துவிடக் கூடாது என்பதற்காகவும், மனதிற்குள் ஒரு

மந்திரத்தை உருவிட்டாள்.

அந்த மந்திரசக்தியின் வலிமையால் தேவப்ரியாவால் அவளுடைய மனோநிலையைப் புரிந்துகொள்ள முடியவில்லை!

"உட்கார்ந்திருங்கள். இதோ ஒருமுறை மூழ்கியெழுந்து விட்டு வருகிறேன்."

முழங்கால் அளவு நீரில் தேவப்ரியா அப்போது நின்றிருந்தாள்.

"இன்னும் சற்றுப் பின்னால் போகலாமே?" என்றாள் உண்ணிச் சிருதேயி.

"நல்ல தெளிவான தண்ணீர்தானே, போகலாம்!" தேவப்ரியா பின் புறமாக இன்னும் இரண்டு எட்டு வைத்து மூழ்கினாள்.

உண்ணிச் சிருதேயி உடனே தன்னுடைய தலைமுடிக்குள்ளிருந்து ஜயந்தன் கொடுத்தனுப்பிய தாயத்து ஒன்றைக் கையில் எடுத்துத் தயாராய் வைத்துக் கொண்டாள்.

அந்தத் தாயத்திற்குள் எட்டிக்காய் விதைத் தூள் மந்திரம் ஜபித்து நிரப்பப்பட்டிருந்தது. அந்தத் தூள்பட்ட தண்ணீர் கண்ணில் பட்டாலே பார்வை போய் விடும். மோகினிகளாகவோ, கந்தர்வர்களாகவோ இருந்தாலும் கூட அவர்கள் பார்வையைப் பாதிக்கும் விதத்தில் மந்திரம் கடுமையாக்கப்பட்டிருந்தது அத்தூளில்.

இப்படிப்பட்ட மந்திரங்களை ஜயந்தன் இதற்கு முன்பு செய்ததில்லை. சமாதியிலிருந்த தாத்தாதான் அதையும் சொல்லிக் கொடுத்திருந்தார். ஆனால், இதைப்பற்றியெல்லாம் ஜயந்தன் உண்ணிச் சிருதேயியிடம் விவரித்திருக்கவில்லை. தூளைத் தண்ணீரில் கலந்து விட்டால் போதுமென்று மட்டும் சொல்லியிருந்தார்.

உண்ணிச் சிருதேயி அதன் மூடியைத் திறந்து தூளைத் தண்ணீரில் வீசினாள். அந்தத் தூள் தெளிந்த தண்ணீரில் அமிழ்வதையும், நாலாபுறமும் பரவுவதையும் பார்த்துக் கொண்டே இருந்தாள். அதற்குள் தேவப்ரியா மூழ்கி எழுந்தாள்.

உண்ணிச் சிருதேயி பரபரப்புடன் படிக்கட்டையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

தேவப்ரியா மறுபடியும் ஒரு தடவை மூழ்கி எழுந்தாள்.

இம்முறை அவள் உயர்ந்தபோது கண்ணைப் பொத்திப் பிடித்தி



ருந்தாள். "கண்ணில் எதுவோ புகுந்து விட்டது போல் தோன்றுகிறது!" என்று முணுமுணுத்தாள். உடனே தலையைத் துவட்டிக் கரையேறினாள்.

ஜயந்தன் சொல்லியனுப்பியது போலவே செய்தாகி விட்டது. அவர் சொல்லியனுப்பியதும் இதையே தான்!

'சூரியன் மறைந்துவிட்டால் தேவப்ரியா மோகினியாகி விடுவாள். அந்தச் சமயத்தில் என்ன செய்தாலும் அது அவளைப் பாதிக்காது. எனவே, அதற்கு முன்பாகவே இதைச் செய்து விட வேண்டும். எக்காரணம் கொண்டும் அவள் இதை உடனடியாக உணரவும் கூடாது!'

அவர் சொல்லியனுப்பிய எச்சரிக்கையின்படியே எல்லாம் சரிவரச் செய்தாகிவிட்டது.

தேவப்ரியா குளியலை முடித்துக்கொண்டு கருங்கல் படிகளில் ஏறி மேலே வந்தாள். அவளுக்கு எதுவோ நேர்ந்துவிட்டது போல் தோன்றியது. கண்களில் மெல்லிய திரை விழுந்தது போல் தோன்றியது. பார்வையில் ஏதோ மாற்றம்.

"உண்ணிச் சிருதேயி அம்மா, புறப்படலாமா?"

"சரி" - என்றபடி தனக்கு முன்பாக நடக்கத் தொடங்கிய உண்ணிச் சிருதேயியை மட்டுமே தேவப்ரியாவால் பார்க்க முடிந்தது. அதைத் தாண்டி ஏதோ புகை மூட்டம்போல் தெரிந்தது. தனக்கு ஏதோ விபரீதம் நிகழ்ந்து விட்டது என்பதை அவள் உணர்ந்தாள்.

அதற்குள் சூரியன் அஸ்தமித்துவிட்டிருந்தான். அவளுடைய மனித வடிவம் மோகினியாக மாறியது. உருவத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படாமல் அவள் தேவப்ரியாவாகவே இருந்தாள். பார்வையிலிருந்த கோளாறு விலகவும் செய்தது.

ஆனால், உண்ணிச் சிருதேயிக்கு இதெல்லாம் தெரியாததால், இயல்பாக ஒன்றுமே நடக்காததுபோல் நடந்து கொண்டாள். இருப்பினும் ஜயந்தன் கொடுத்து அனுப்பியிருந்த தாயத்திற்குள் ஏதோ மாந்திரீக வித்தை செய்யப்பட்டிருந்தது என்பதை மட்டும் உணர்ந்திருந்தாள்.

"இது யாரம்மா... உன்னுடன் வந்திருப்பது?" சரஸ்வதி

அந்தர்ஜனம் கேட்டார். அப்பொழுதுதான் அவர் உண்ணிச் சிருதேயியைப் பார்த்தார்.

"நான் வடக்கிலிருந்து வருகிறேன். இல்லக்காரியம் தான்!"

"உள்ளே வாருங்கள்."

இருவரும் உள்ளே போனார்கள்.

தேவப்பரியா துளசி மாடத்தில் விளக்கேற்றினாள். அப்பொழுதும் அவளது கண்களில் எதுவோ விழுந்து விட்டதுபோல் உறுத்திக் கொண்டே இருந்தது. ஒன்றிரண்டு தடவை கண்களைக் கசக்கியும் பார்த்தாள்.

இரவு உணவு முடிந்தது.

சரஸ்வதி அந்தர்ஜனமும் உண்ணிச் சிருதேயியும் வெற்றிலை போட்டபடியே உள்புற ஹாலில் உட்கார்ந்திருந்தனர்.

"நானும் மறந்துவிட்டேன். இவ்வளவு நேரமாகியும் நீங்கள் உங்கள் பெயரையே சொல்லவில்லையே?" சரஸ்வதி அந்தர்ஜனம் கேட்டார்.

"தாத்ரிக்குட்டி என்று அழைப்பார்கள்."

"மனையின் பெயர் என்ன என்று சொன்னீர்கள்?"

"வடக்கில் சற்றுப் போகவேண்டும். பாலூழி இல்லம் என்று சொல்வார்கள்."

"இந்தப் பக்கம் வந்ததற்கு ஏதாவது காரணம் உண்டா?"

"அது ஒரு கதை. இந்த ஊரில் எனக்கு ஒரு சிறிய தொடர்பு உள்ளது. ஆனால், அது யாருக்குமே தெரியாது!"

"வீட்டின் பெயர்?"

"சென்னாங்கேரி மனைக்கல் (தானவேதன் நம்பூதிரியின் வீடு)" - பொருத்தமான ஒரு பொய்யைச் சொன்னாள் சிருதேயி. அதை சரஸ்வதி அந்தர்ஜனம் நம்பவும் செய்தார்.

"அப்படியானால் தானவேதன் மாமாவின்..."

"நான்தான் சொன்னேனே, ஒரு நீண்ட உறவு இருப்பதாக. ஒருவேளை என்னைப் பார்த்தால் அவருக்கு அடையாளம் தெரியுமோ, என்னவோ... அது கூடப் புரியவில்லை."

"அப்படியானால் அங்கே இன்னும் போகவே இல்லையா?



நேராக இங்கேதான் வருகிறீர்களா?"

"ஆமாம். நான் இங்கு வந்தபோது மாலை நேரம் தாண்டிவிட்டிருந்தது. அப்பொழுது வழியில் தென்பட்ட ஒருவர் இதுவும் ஒரு நம்பூதிரியின் இல்லம்தான் என்றார். அப்படியே வந்துவிட்டேன்."

"அப்படி வந்ததும் ஒருவகையில் நல்லதற்குத் தான். எனக்கு உண்மையிலேயே சந்தோஷம்தான்."

"ரொம்பக் களைப்பாக இருக்கிறது. படுக்க வேண்டும் போல் தோன்றுகிறது. இப்படியே படுத்துக் கொள்ளலாமில்லையா?" கேட்டபடி சுவரோரம் வைத்திருந்த தலையணையையும், பாயையும் எடுத்து விரித்துப் போட்டுப் படுத்தாள்.

"நானும் இங்கேயே படுத்துக் கொள்கிறேன். இன்று ஒரே புழுக்கமாக இருக்கிறதே" என்ற சரஸ்வதி அந்தர்ஜனம் எழுந்து வடக்குப்புற அறையிலிருந்த பாய், தலையணையை எடுத்து வந்து அவளருகிலேயே விரித்துப் படுத்தார்.

தேவப்ரியாவும், விஷ்ணுவும் படுக்கையில் இருந்தனர்.

"அந்தப் பெண்மணி யார்?" என்று கேட்டான் விஷ்ணு.

"இந்த ஊரில் யாருடனோ அவர்களுக்குத் தூரத்து உறவு இருக்கிறாம். அப்படித்தான் அவர் சொன்னார்."

"இதற்கு முன்பு அவரை உனக்குத் தெரியுமா?"

"தெரியும்!"

"அது எப்படி?"

"அவருடைய பதினோராவது வயதில் அவரைப் பார்த்திருக்கிறேன்?"

"என்ன தேவப்ரியா நீ என்ன சொல்கிறாய்? என்னால் இதை நம்ப முடியவில்லையே?"

"நான் சொல்வது உண்மைதான். உங்களிடம் நான் எதற்காகப் பொய் சொல்ல வேண்டும்? எனக்கு இளமை, மூப்பு என்பதெல்லாம் தான் கிடையாதே..."

"உண்மைதான்! நான் ஒரு கணம் மறந்தே போனேன். என்னுடைய தேவப்ரியா என்றும் இளமை மாறாத நித்யகன்னி கைதானே? அப்படியானால், எனக்கு வயதாகி விட்டால் நீ என்னை

விட்டுப் போய்விடுவாயா?"

ஒருகணம் அவள் நெகிழ்ந்தாள். அவளது கண்கள் நிறைந்தன. "உண்மைதான் நான் புறப்பட வேண்டி வரும்!"

"அப்படியானால் நான் தனிமைப்பட்டு விடுவேன் இல்லையா?"

"இப்போது எதற்காக நாம் தேவையில்லாத விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டும்? பேசாமல் படுங்கள்!" அவள் விஷ்ணுவைத் தன் மார்புடன் சேர்த்து இறுக அணைத்துக் கொண்டாள்.

சேவல் கூவுவதற்கு முன்பு அவள் எழுந்தாள். கண்களில் ஏதோ ஒரு குறுகுறுப்பு. நமைச்சல்.

வேகமாக எழுந்து சூரியன் உதிப்பதற்கு முன்பாகவே குளியலை முடித்து, பகவதியின் முன்னால் நின்று வணங்க அவள் பரபரத்தாள்.

குளத்தில் இறங்கி மூழ்கியெழுந்த பிறகு தேவப்ரியா ஓமல்லூர் கோயிலுக்குள் ஓட்டமாக ஓடினாள்.

கண்ணிமைகளைத் திறந்தபோது தெளிவற்ற வடிவில் மெல்லிய பனிமூட்டம் போல் தென்பட்டாள் தேவி.

"என்னுடைய பகவதீ..." - தேவப்ரியா முறையிட்டாள்.



## 42

"எனக்குப் புரியும், உனக்கு என்ன நேர்ந்திருக்கிறதென்று?" - தேவி பேசுவதாக அவளுக்குத் தோன்றியது.

"என் கண்களால் எதையும் சரியாகப் பார்க்க முடியவில்லை தேவி!" - அவள் மனமுருகிச் சொன்னாள்.

"அதுவும் புரிந்தது. இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. உன்னிடமிருக்கும் அமானுஷ்ய சக்திகள் படிப்படியாக வலுவிழந்து வருவதாகவே எனக்குத் தோன்றுகிறது."



"உண்மைதான் தாயே இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?"

"இதிலிருந்து விடுபடுவதற்கு நான் இப்போது உனக்குச் சக்தியை வழங்குகிறேன். அது என்னுடைய சக்தியின் மிகமிகக் குறைவான ஓர் அம்சம்தான். ஆனால், நிலைமை இப்படியே நீடிப்பது சரியல்ல. காரணம், என்னுடைய சக்தியில் நான் மாற்றத்தை ஏற்படுத்துவதென்பது இயலாது" - சொல்லியபடியே தேவி வலது கையை உயர்த்தி, அதிலிருந்து ஓர் ஒளிக்கீற்றைத் தேவப்ரியாவின் கண்களை நோக்கிச் செலுத்தினார். அது மெதுவாக, மிக மெதுவாகப் பாய்ந்து வந்தது.

சில நிமிடங்களுக்குள் தேவப்ரியா, தேவியைத் தெளிவாகக் காண முடிந்தது. மகிழ்ச்சியினால் அவளது மனம் ஒரு பூவின் இதழ்களைப் போல் மலர்ந்தது.

"என்னுடைய பகவதீ... எனக்கு இந்த விபத்து எப்படி நிகழ்ந்தது என்பதைத் தெரியப்படுத்துவீர்களா? நான் உங்களிடம் ஏதேனும் அபச்சாரமாக நடந்து கொண்டுவிட்டேனோ என்றும் அச்சமாக இருக்கிறது."

"இல்லை. ஒரு போதும் நீ அப்படி நடந்து கொண்டதே இல்லை. அந்த விஷயத்தில் உன்மீது எனக்கு முழுத் திருப்தியும், சந்தோஷமும் உண்டு. ஆனால், இதன் காரணத்தை நான் கூறமுடியாது. அதை நீ தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமும் இல்லை!"

உண்ணிச் சிருதேயி மூலமாகத்தான் இது நிகழ்ந்தது என்பதை, தேவி அவளிடம் சொல்லாமல் இருந்ததற்குக் காரணமிருந்தது. மிகச் சிறிய வயதிலிருந்தே உண்ணிச் சிருதேயி ஓமல்லூர் பகவதியின் பக்தை. தேவியை மகிழ்ச்சியடைய வைத்து அவர் பல சித்திகளை கைவரப் பெற்றிருந்தார். தன்னை வணங்குகின்ற எல்லோரையும் சமமாகவே நினைத்தார் தேவி. அதனால்தான் சொல்லவில்லை. அதே நேரம் அவளால் ஏற்பட்ட பார்வைக் குறையையும் அகற்றித் தந்தார்.

"நான் புறப்படட்டுமா, தேவி?"

"ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள். நீ அதிக நாள் வெளியில் இருக்க முடியாது. இதை மனதில் வைத்துக்கொண்டே ஒவ்வொன்றையும் செய். இனிமேலாவது உன் வாழ்க்கைக் காலத்தை கவனமுடன் நடத்து!"

மோகினி இல்லத்திற்கு திரும்பினாள்.

வழக்கம் போலவே தேவப்ரியா சமையலறை வேலைகளில் ஈடுபட்டதும் உண்ணிச் சிருதேயிக்குச் சந்தேகம் தோன்றியது. 'நான் செய்தது பலிக்கவில்லையா?'

பலிக்காமலிருக்க எந்த வழியுமில்லை. மகாமாந்திரீகனான ஜயந்தனுக்குத் தவறு ஏற்படுமா? ஒருவேளை தாமதமாகப் பலன் ஏற்படலாம் தனக்குத்தானே ஆறுதல் சொல்லிக் கொண்டாள் உண்ணிச் சிருதேயி. அத்துடன் அவளுக்கு வேறொரு சிந்தனையும் தோன்றியது.

சரஸ்வதி அந்தர்ஜனத்திற்குத் தேவப்ரியாவைப் பற்றிய ரகசியம் தெரிந்திருக்க வழியில்லை. தெரிந்திருந்தால் ஒரு கணம்கூட இந்த வீட்டிற்குள் அவர் தேவப்ரியாவை அனுமதித்திருக்கமாட்டார். அதனால் தேவப்ரியாவைப் பற்றிய ரகசியத்தை அவரிடம் சொன்னால் என்ன? அதற்கு உகந்த நேரத்திற்காகக் காத்திருக்கவும் செய்தாள்.

அன்று மதிய உணவு முடிந்தவுடன் விஷ்ணுதேவன் வழக்கம் போல் சற்றுக் கண்ணயர வந்தான். தேவப்ரியா அவனருகில் வந்து உட்கார்ந்தாள். பிறகு தாழ்ந்த குரலில் பேசத் தொடங்கினாள்: "எனக்கு எதிராக என்னவெல்லாமோ நடக்கிறது. ஆனால், அதெல்லாம் என்னவென்று எனக்குப் பிடிபடவும் இல்லை."

தேவப்ரியாவின் முகத்திலிருந்த கலக்கத்தையும் அவளது சந்தேகத்தையும் கேள்விப்பட்டவுடன் விஷ்ணு பதறியெழுந்து கட்டிலில் உட்கார்ந்தான்.

"என்ன தேவப்ரியா, திடீரென்று?" என்று பரபரப்புடன் கேட்டான்.

"ஒரு சின்னச் சந்தேகம். நான் நேற்று மாலையில் குளிப்பதற்காகக் குளத்தில் இறங்கினேன். குளித்துக் கரை ஏறியபோது கண் பார்வையில் குறைவு ஏற்பட்டது. யாரோ எனக்கு எதிராகச் செயல்படத் தொடங்கியிருக்கின்றனர். நான் யார் என்பதை அவர்கள் கண்டுபிடிப்பதற்கு முன்பு நான் புறப்பட்டே தீர வேண்டும்!"

"இப்படித் தோன்றக் காரணம்...?"

"தேவியும் அதைக் கோடி காட்டினார். எனக்காக தேவி



அனுமதித்திருக்கிற நாட்கள் மிகவும் குறைவு என்பதும் உங்களுக்குத் தெரியும்."

"அது ஒரு பொருட்டே அல்ல. தேவி நினைத்தால் நடக்காத காரியமா? நீ விரும்பினால் தவணையை நீட்டித்துத் தருவார். அப்படியும் முடியாமற் போனால்கூட நீ ஒரு மனிதப் பெண்ணாகவே என்னுடன் வாழக் கூடாதா?"

"என்ன இப்படி அசட்டுத்தனமாகப் பேசுகிறீர்கள்? அதெல்லாம் நடக்கிற காரியங்களா? கடவுள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதமாகப் படைத்திருக்கிறார். தேவர்கள், அசுரர்கள், மோகினிகள், கந்தர்வர்கள், மனிதர்கள், ஆவிகள், பிசாசுகள் என்று வகைவகையாகப் படைத்திருக்கிறார். இவை எதுவும் தன் இயல்பிலிருந்து மாறக் கூடியவை அல்ல!"

"அப்படியானால், நீ திரும்பிப் போய்த்தான் தீர வேண்டுமா?"

"சரி, அதை விடுங்கள். இன்னும் அதற்கான கால அவகாசம் ஏராளமாக இருக்கிறது."

"உன்னைக் காலங்காலமாக நினைத்துக் கொள்ளும்படி ஏதாவது தேவை" - அவன் அவளை நெஞ்சோடு இறுகத் தழுவியபடி பேசினான்.

"இந்த நினைவுகள் போதாதா?" - கேட்டபடியே அவள் அவனை மேலும் இறுக்கினாள்.

மனோரஞ்சிதப்பூவின் மணம் கொண்ட அவளது வியர்வை அவனது உடம்பில் ஊடுருவிக் கலந்தது. அவளது வெப்பமான மூச்சுக் காற்று அவனது கன்னங்களில் படிந்தபோது, எத்தனையோ முறை அதை உணர்ந்திருந்தாலும் இன்று அதன் இன்பம் மறக்க முடியாததாகத் தோன்றியது!

இப்படி ஒரு புதிய கனவின் தாளலயங்களில் அவர்கள் ஒன்றிக் கலந்திருந்தபோது நெல் குத்தும் அறையில் சரஸ்வதி அந்தர்ஜனமும், உண்ணிச் சிருதேயியும் தங்களுடைய பழங்கால மலரும் நினைவுகள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

"உண்ணிச் சிருதேயி அம்மா, இதுவரையில் நீங்கள் நிறைய இடங்களுக்குப் போய் வந்திருப்பதாகச் சொன்னீர்கள். காசி,

ராமேஸ்வரம், பத்ரிநாத் மாதிரி இடங்களுக்கெல்லாம் போயிருக்கிறீர்களா?"

"போயிருக்கிறேனே... நான் போகாத புண்ணியத் தலங்களே இல்லையென்று சொல்லலாம்!"

"இப்படியெல்லாம் தரிசனம் செய்து என்னவெல்லாம் கற்றுக் கொண்டீர்கள்?"

"அதையெல்லாம் நான் சொன்னால் ஒருவேளை என்னையே உங்களுக்குப் பிடிக்காமல் போகலாம்."

"என்ன இப்படிச் சொல்கிறீர்கள்?"

"பத்ரிநாத்தைத் தாண்டி மலைச்சரிவில் ஒரு குகையில் சன்னியாசி ஒருவரைச் சந்தித்தேன். அவரிடமிருந்து சில அசாதாரணமான மந்திர வித்தைகளைக் கற்றுக் கொண்டேன்."

"உண்மையாகவா? என்னவெல்லாம் கற்றீர்கள்?" சரஸ்வதி அந்தர்ஜனம் வியப்பில் வாய் பிளந்தபடி கேட்டார்.

"வலுமிக்க மந்திரப் பிரயோகங்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்."

"அப்படியானால், உங்களுக்கு மந்திர தந்திரமெல்லாம் நன்றாகத் தெரியுமென்று சொல்லுங்கள். இது எனக்கு இவ்வளவு நேரமாகத் தெரியாமல் போனதே!"

"மன்னிக்க வேண்டும். கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்ததால் கற்றுக்கொண்டேன் . அதற்கான வசதிகளும் வாய்த்தன."

"அப்படியானால் நான் சில விஷயங்களைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்."

"அதற்கென்ன? தாராளமாகக் கேளுங்கள். எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன்" - சொல்லியபடியே உண்ணிச் சிருதேயி ஒரு வெற்றிலையை எடுத்து இரண்டாகக் கிறிப் புரட்டிப் போட்டாள்.

"இப்பொழுது நீங்கள் ஏதோ செய்தீர்களே, இதன் அர்த்தம் என்ன?"

"அதோ அங்கே பாருங்கள், புரியும்." எதிரே வெளிப்புறம் சுட்டிக்காட்டினாள் சிருதேயி.



சரஸ்வதி அந்தர்ஜனம் கவனித்தார். வீட்டிற்கு வெளியே உயர்ந்து வளர்ந்திருந்த ஒரு கமுகு (பாக்குமரம்) மிகச் சீராக இரண்டாகப் பிளந்து சத்தமில்லாமல் தரையில் விழுந்தது.

"எதற்காக வெற்றிலையைத் திருப்பிப் போட்டீர்கள்?" அந்தர்ஜனம் கேட்டார்.

"அதற்கும் காரணம் உண்டு. வேறு யாரும் அந்த மரத்தை பழையபடி மாற்றாமல் இருக்கத்தான்."

"வேறு யாரும் என்றால்... இங்கு மந்திரவாதிகள் யாராவது இருக்கிறார்களா என்ன?"

"இருக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லையே. ஆனால், எனக்குச் சில சந்தேகங்கள் உண்டு." உண்ணிச் சிருதேயி உள் நோக்கத்துடன் வார்த்தைகளை சிந்தினாள்.

"சந்தேகத்திற்கும் காரணம் இருக்க வேண்டுமல்லவா?"

"நான் சொன்னால் நீங்கள் கோபிக்காமல் இருப்பீர்களா?"

"எதற்காகக் கோபிக்க வேண்டும். எனக்கு அதில் என்ன வருத்தம்?"

"உங்களது மருமகளைப் பற்றித்தான் எனக்குச் சந்தேகம். விளக்கமாகச் சொல்வது நல்லது அல்ல என்பதால் சொல்லாமல் விடுகிறேன்."

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சரஸ்வதி அந்தர்ஜனம் தனக்கு ஏற்பட்ட ஒரு பழைய அனுபவத்தை நினைத்துப் பார்த்தார். தேவப்ரியா ஒரு தடவை விளக்கேற்றுவதற்காகத் துளசி மாடத்தை நெருங்கினாள். அவளுடைய உடம்பைத் துளைத்துக் கொண்டு தீப ஒளி தெரிந்ததையும், அதேபோல் கோபாலன் நம்பூதிரியை மரணத்திலிருந்து காப்பாற்றியதையும் நினைத்துப் பார்த்தார்.

"விஷ்ணுவின் மனைவியைப் பற்றி நீங்கள் என்ன சொல்ல நினைக்கிறீர்கள்? உண்மையில் அவள் யாரென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?" - சரஸ்வதி அந்தர்ஜனம் பரபரப்புடன் கேட்டார்.

"என்னுடைய கணிப்பு, அந்தப் பெண் மனித ஜாதியே இல்லை என்பதுதான்."

"மனித ஜாதியே இல்லையா?" தன்னுடைய மன உணர்வை

வெளிக்காட்டாமல் இயல்பாகவே கேட்டார் சரஸ்வதி அந்தர்ஜனம்.

உண்ணிச் சிருதேயி அம்மா வெளிப்படையாகப் பேசிவிடத் தீர்மானித்தாள். மிகச் சிறிய வயதில் கோயிலருகே தேவப்ரியாவைப் பார்த்த விஷயம், அவளுக்கு மட்டும் தெரிந்த ரகசியம். அதையே கூறினால் சரஸ்வதி நம்பிவிடுவார். அது மட்டுமின்றி, தனக்கு இப்பொழுது மாந்திரீக சக்தி இருப்பதாகவும் அவருக்குத் தெளிவுபடுத்தியாகிவிட்டது.

புரட்டிப் போட்ட வெற்றிலைத் துண்டுகளை ஒன்றன் மீது ஒன்றாக வைத்து, அதை வெற்றிலைப் பெட்டிக்குக் கீழே வைத்த உண்ணிச் சிருதேயி கூறினாள்: "இதை மென்று விடாதீர்கள். அப்படியே இருக்கட்டும்."

"என் மருமகள் யாரென்று சொன்னீர்கள்?" சரஸ்வதி அந்தர்ஜனம் சிருதேயியை ஞாபகமூட்டினார்.

"அவள் ஒரு மோகினி!"

"நி... நிஜமாகவா சொல்கிறீர்கள்?! உண்மைதானா?"

"நான் எதற்காக உங்களிடம் பொய் சொல்லவேண்டும்? நம்பவில்லையென்றால், அவளை இனிமேலாவது கவனியுங்கள்."

இதற்கு முன்பு பல தடவை நிகழ்ந்துள்ள செயல்களைப் பார்த்து, சரஸ்வதி அந்தர்ஜனத்திற்கே உள்ளூற ஒரு சந்தேகம் ஏற்பட்டிருந்தது. இப்பொழுது அது உண்மைதான் என்பது தெளிவாகிவிட்டது. இருந்தாலும் அதைச் சோதித்தே பார்த்துவிடுவது என்று தீர்மானித்தார்.

வழக்கத்தைவிடச் சற்றுத் தாமதமாகத்தான் அன்று தேவப்ரியா மதிய உறக்கத்திலிருந்து எழுந்தாள். குளித்துவிட்டு, கோயிலுக்குச் சென்று தீபாராதனை முடித்துத் திரும்பி வந்தாள்.

அன்று இரவு பால் நிலவு காய்ந்து கொண்டிருந்தது. தொழுவத்திலிருந்து பசு ஓயாமல் அலறியதைக் கேட்டு வெளியே வந்தான் விஷ்ணு. அப்பொழுது பாக்கு மரம் இரண்டாகப் பிளந்து இருபுறமும் விழுந்து கிடப்பதைக் கண்டான். மனவருத்தத்துடன் அதை தேவப்ரியாவிடம் கூறினான் விஷ்ணு.

அவள் அதைப் பார்ப்பதற்காக வெளியே வந்தாள்.



"நல்ல மரம் நிறையக் காய்க்கக் கூடியது. அநியாயமாகப் போய்விட்டதே!" விஷ்ணுவின் ஏமாற்றம் அவனது பேச்சில் தெரிந்தது.

"ஒன்றும் ஆகவில்லை. அப்படியேதான் இருக்கிறது பாருங்கள்!" என்றபடி அருகே நின்றிருந்த வில்வமரத்தடியிலிருந்து ஒரு பிடி மண்ணை வாரி, மந்திரம் ஜபித்துப் பாக்கு மரத்தடியில் வீசினாள்.

இரண்டு துண்டுகளாக இருபுறமும் விழுந்து கிடந்த மரம் சட்டென்று எழுந்து ஒன்றாக இணைந்து சிறிய அடையாளமின்றி நிமிர்ந்து ஒட்டிக்கொண்டு நின்றது.



## 43

சம்பவம் நடந்து முடிந்தவுடன் விஷ்ணுற்கு ஒரு புறம் மகிழ்ச்சியும் மறுபுறமும் சந்தேகமும் ஏற்பட்டது. பாக்கு மரத்தைப் பிளந்து போட்டது யார் என்பது விஷ்ணுவிற்குப் புரிந்து போனது. இது உண்ணிச் சிருதேயியின் வேலைதான் என்பதைக் கண்டுகொண்டான்.

காலையில் அவர்கள் எழுந்து பார்த்தால் பாக்கு மரம் பழையபடி கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும். உடனே வீட்டிலுள்ளவர்களுக்கு விவரம் புரிந்து விடும். அது அம்மாவை உடனே எட்டி விடவும் செய்யும்.

"தேவப்ரியா, நாளைக் காலையில் இது உண்ணிச் சிருதேயிக்குத் தெரியவரும். அவர் இதை அம்மாவிற்கு நிச்சயமாகக் காட்டுவார்."

"காண்பிக்கட்டுமே!"

"உன் மீது சந்தேகம் தோன்றிவிடுமே?"

"என்னை அவளால் தோற்கடித்துவிட முடியுமென்று நினைக்கிறீர்களா? நல்ல விளையாட்டு. நான் யாரென்பது விஷ்ணுவிற்குத் தெரியாதா?"

"தெரியும்!"

"அவளுடைய சிறு வயதிலும் நான் இப்படியேதான் இருந்தேன்.

உண்ணிச் சிருதேயியின் அடுத்த ஜென்மத்திலும் நான் இப்படியே தான் இருப்பேன். அடுத்த ஜென்மத்தில் அவள் ஒரு வௌவாலாகப் பிறப்பாள். இந்த ஜென்மத்தில் அவள் செய்யும் பிசாசுத்தனமான காரியங்களுக்கு அதுதான் அவளுக்குக் கிடைக்கும் பரிகாரம்" - தேவப்ரியா கூறினாள்.

"நாம் படுக்கப் போகலாம், வா. நடப்பது நடக்கட்டும்" விஷ்ணு அவளுடன் படுக்கையறைக்குள் நுழைந்தான்.

உண்ணிச் சிருதேயி வழக்கம் போல் விடியற்காலையிலேயே எழுந்து விட்டாள். நெல் குத்தும் அறையிலிருந்து மேற்குப் புறமாகப் பார்த்தாள். பாக்குமரம் கம்பீரமாக நிமிர்ந்து நின்று கொண்டிருந்தது. அதன் உச்சியில் மஞ்சள் நிறமான வெளிச்சம் தெரிந்தது. கிழக்குத் திசையில் சூரியன் தலையுயர்த்திக் கொண்டிருந்தான்.

"சரஸ்வதீ... சரஸ்வதீ" - உண்ணிச் சிருதேயி அழைத்தாள். அவளுடைய குரலில் தென்பட்ட அலறல் சரஸ்வதி அம்மாவை வெளியே இழுத்து வந்தது.

"என்ன... என்ன ஆச்சு?"

"இப்பொழுது தெரிகிறதா? நான் சொன்னது உண்மையென்று புரிந்ததா?" - உண்ணிச் சிருதேயி கேட்டாள்.

"ஒன்றும் புரியவில்லையே!"

"அதோ பாருங்கள். பாக்கு மரம் உயர்ந்து நிற்கிறதே, அதுதான் இன்றைய விசேஷம்."

"காலையில் விளையாடுகிறாயா சிருதேயி? விளையாட்டிற்கு இதுதானா நேரம்?"

"விளையாடுகிறேனா? நெடுநெடுவென நிமிர்ந்து நிற்கும் பாக்கு மரம் உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா? நேற்று பிளந்தபடி விழுந்து கிடந்தது. இப்பொழுது இரண்டும் சேர்ந்து ஒட்டி நிமிர்ந்து நிற்கிறது. நான் சொல்லவில்லையா, இங்கு வேறொருவர் இருக்கிறார் என்று?"

"நீங்கள் எந்த மற்றொருவரைச் சொல்கிறீர்களோ புரியவில்லை! பாக்கு மரம் இரண்டாகப் பிளந்தது பிளந்தபடி தான் கிடக்கிறது. எந்த மாற்றமும் எனக்குத் தெரியவில்லை. என்னவோ போம்மா!"



"ஓகோ, உங்கள் கண்களுக்கு அப்படித் தெரிகிறது. இதுதான் விளையாட்டா?" - உண்ணிச் சிருதேயி அம்மா கேட்டாள்.

"அது என்ன விளையாட்டு? சொல்லுங்களேன். நானும்தான் தெரிந்து கொள்கிறேன்" - சொல்லியபடி சரஸ்வதி அந்தர்ஜனம் வீட்டிற்குள் போனார்.

உண்ணிச் சிருதேயிக்கு விஷயம் விளங்கி விட்டது. தேவப்ரியா கச்சிதமாக விளையாடியிருக்கிறாள். பாக்கு மரத்தைப் பழையபடி சரி செய்து விட்டாள். அதற்குப் பிறகு சரஸ்வதி அந்தர்ஜனத்தின் பார்வைக்கு மாற்றித் தெரியும்படிச் செய்திருக்கிறாள். அதாவது உண்மையில் பாக்குமரம் ஒட்டி உயர்ந்தே நிற்கிறது. ஆனால், சரஸ்வதி அந்தர் ஜனத்தின் கண்களுக்கு மட்டும் அது இரண்டாகப் பிளந்திருப்பதாகத் தெரிகிறது!

உண்ணிச் சிருதேயியின் வித்தை இங்கு பலிக்கவில்லை. தேவப்ரியா வழக்கம் போல் குளியலை முடித்துக் கோவிலுக்குப் போயிருந்தாள். அப்பொழுதுதான் மூன்றாவது யாமம் முடிவடைந்திருந்தது. இருள் மெதுவாகக் கலையத் தொடங்கியிருந்தது.

தேவப்ரியா தேவியைத் தொழுது விட்டுத் திரும்ப முயலும் போது, "தேவப்ரியா நில்" - தேவியின் குரல் கேட்டு அப்படியே நின்றாள்.

"இன்னும் முப்பத்தேழு நாள்களே உள்ளன. இந்தக் கெடு முடிந்தால் நீ மறுபடியும் உன்னுடைய பழைய பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்" - தேவி கூறினாள்.

எதிர்பாராமல் அந்தக் குரலைக் கேட்டதும் தேவப்ரியா திடுக்கிடவே செய்தாள். எத்தனை விரைவில் நாள்கள் பறந்து போயிருக்கின்றன? யோசிப்பதற்கு முன்பாகவே திரும்பி வருவதற்கான நாளாகிவிட்டிருந்தது!

"நீ வருத்தப்படாதே! உன்னைப் போன்ற ஒருத்திக்கு முதன் முதலாகக் கிடைக்கும் ஒரு மாபெரும் பாக்கியம் இது. அதாவது விரும்பிய கணவனை அடைவது. நீ விரும்பியது நிறைவேறிவிட்டது. அத்துடன் மனத் திருப்தியடைந்து கொள். நீ போகலாம்!"

"அவள் நடப்பதற்காகக் காலை எடுத்தபோது தேவி மறுபடியும்

கூப்பிட்டார். ஒரு விஷயத்தைக் கவனத்தில் வைத்துக் கொள். நாள்கள் குறைவாக இருப்பதால் எந்தப் பொறியிலும் சிக்கிவிடாமல் எச்சரிக்கையாக இரு. இப்பொழுதுதான் அதிகக் கவனம் தேவை."

தேவி சொன்ன வார்த்தையின் பொருள் அவளுக்குப் புரிந்தது. எங்காவது வசமாகச் சிக்கிக் கொண்டால் மீண்டு வருவது சிரமமாகி விடலாம். அதன் பிறகு வேறு எந்த மோகினியையாவது தேவி தன்னுடைய இடத்திற்குப் பதிலாக நியமித்து விட்டால், தான் ஏதாவது ஒரு மரத்தில் மற்ற மோகினிகளைப் போல் குடியிருக்க நேர்ந்து விடும். - தேவி சொன்ன வார்த்தைகளை நினைவுபடுத்தியபடியே நடந்தாள்.

வழக்கமான நேரத்தில் அவள் சமையற் கட்டிற்குள் நுழைந்து வேலைகளைத் தொடர்ந்தாள்.

உண்ணிச் சிருதேயியை உற்றுப் பார்த்துவிட்டுச் சிறியதாய்ப் புன்னகைத்தாள்.

அவளுக்கு விஷயம் விளங்கி விட்டது. 'வீணாக எதையும் செய்ய வேண்டாம்!' என்பதுதான் அந்தப் பார்வையின் பொருள் என்பதும் புரிந்தது. விஷயம் இப்படி இருந்தாலும் உண்ணிச் சிருதேயிக்கு, ஜயந்தனிடம் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

எனவே, எந்த வழியிலாவது தேவப்ரியாவைச் சிக்க வைக்க வேண்டுமென்று அவள் விரும்பினாள்.

அன்று மாலையில் கோயிலுக்குப் போவதாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்ட உண்ணிச்சிருதேயி, வந்து சேர்ந்த இடம் விஸ்வமங்கலத்து வீடு.

வாசற்படியைத் தாண்டும் முன்பாகவே ஜயந்தனைப் பார்த்தாள். ஏதோ ஏமாற்றத்திற்குள்ளானது போல் இருந்தது அவரது முகத்தோற்றம். உண்மையும் அதுதான். அன்றுவரை சந்தித்திராத மிகப்பெரிய தோல்வி ஒன்றை அவர் சந்திக்க நேரிட்டது. இதுவரை இப்படி நடைபெற்றதே இல்லை. தன்னுடைய வாழ்க்கையில் எத்தனையோ மந்திர வித்தைகளை அவர் செய்திருக்கிறார். இன்னும் ஆழ்ந்து பார்த்தால் இதுவரையில் அந்தக் குடும்பத்தின் எந்தப் பரம்பரையும் தோல்வியையே சந்தித்ததில்லை. இதோ முதன்



முறையாக ஒரு சாதாரண மோகினி தன்னைத் தோற்கடிக்கப் புறப்பட்டிருக்கிறாள்!

உக்கிரமான மூர்த்திகளில் தொடங்கி ரத்தசாமுண்டி வரை எல்லோரும் விஸ்வமங்கலத்து மாந்திரீகர்களின் முன்னால் வெறும் பூனைகளாக இருந்தனர். அவர்கள் அந்தக் குடும்பத்தினர் சொல்வதைத் தலைமேல் ஏற்றுச் செயல்பட்டனர். ஆனால், இப்போதைய, இந்த இடத்தின் நிலை வித்தியாசமாக இருந்தது. எது செய்தாலும் அது அவளைப் பாதிக்கவே இல்லை. எந்தப் பெரிய மந்திரத்திலும் சோடைபோகாத சமாதித் தாத்தாகூட மண்ணைக் கவ்வியிருக்கிறார்!

'மேற்கொண்டு என்னதான் செய்வது?' என்று ஜயந்தன் யோசித்துக் கொண்டிருந்த போதுதான் உண்ணிச் சிருதேயி வந்தாள். அவரைப் பார்த்தவுடன் தன்னுடைய ஏமாற்றங்களுக்குப் பரிகாரமான செய்தி ஏதாவது கிடைக்கலாம் என்று நினைத்தார்.

"உண்ணிச் சிருதேயி, விஷயம் பழமா?"

"இல்லை. எதுவுமே நடக்கவில்லை!"

"அப்படியானால் என்ன செய்வது?"

"அதைத் தெரிந்து கொண்டு போகலாம் என்றுதான் வந்தேன்."

ஜயந்தன் யோசித்துப் பார்த்தார். எதுவுமே புலப்படவில்லை.

அன்று இரவு ஜயந்தன் நம்பூதிரியின் உடம்புச் சூட்டை உணர்ந்தபடி படுத்திருந்த உண்ணிச் சிருதேயி கூறினாள்: "அவள் என்னையும் அடையாளம் தெரிந்து கொண்டுவிட்டாள்."

"விஷயம் அந்த அளவிற்குப் போய்விட்டதா?"

"ஆனால், பயப்படுவதற்கு ஒன்றுமில்லை."

"அந்த வீட்டுக்கார அம்மாவிற்கு இன்னுமா உண்மை புரியவில்லை?"

"நான் நேற்றுக்கூட ஒரு வலை விரித்தேன். ஆனால், மாமியாரின் கண்ணைக் கட்டி விட்டாள் அந்தக் கெட்டிக்கார மருமகள். விஷயத்தைப் புரிந்து உடனே அவளை அடித்து விரட்டி விடுவார் என்று எதிர்பார்த்தேன். அது இனிமேல் நடக்குமென்று எனக்குத் தோன்றவில்லை."

"அவள் அசாதாரணமானவள். மோகினி ஹோம மந்திரத்தில் கூட அவள் அகப்படவில்லை. இனிமேல் ஒரே ஒரு வழிதான் உள்ளது. வெகு சாதாரணமான வேலை. ஒரு கரும்பூனையில் அவளைப் பிரயோகம் செய்வது. இந்த முயற்சியுடன் அவள் தொலைந்து விடுவாள் என்பது திண்ணம். வேறு வழியில்லாவிட்டால் செய்யும் கடைசி வேலை! யாரை நோக்கி அனுப்புகிறோமோ அவளை அது ஒன்றும் செய்யவில்லையானால், ஏவியவனையே திரும்பி வந்து அடிக்கும் வித்தை அது!"

"அப்படி ஒன்று இருக்கிறதா? அதை நான் கேள்விப்பட்டதே இல்லையே?"

"பொழுது விடியட்டும். நான் காண்பித்துத் தருகிறேன்" என்றார் ஜயந்தன்.

மறுநாள் பொழுது புலரும் முன்பாகத் தன் பழைய வீட்டை அடைந்து கரும்பூனைக்காகக் காத்திருந்தார். ஆள்கள் யாரும் குடியிருக்காததால் இருளடைந்து கிடந்த அந்தக் கட்டடத்தில் ஒரு கரும்பூனை வழக்கமாக வருவதுண்டு. அதைப் பிடிப்பதுதான் ஜயந்தனின் நோக்கம்.

மதியம் வரை காத்திருந்தார். எலிப் பெட்டியில் போட்டு அடைத்த உயிருள்ள ஓர் எலியும் அவருடன் காத்திருந்தது. மதிய உணவை முடித்துக் கொண்டு திரும்பவும் போனார். எலி அப்படியே இருந்தது. பூனை வரவே இல்லை!

அன்று இரவானபோது ஜயந்தன் மீண்டும் உணவை முடித்துக் கொண்டு புறப்பட்டார். இப்பொழுதாவது பூனை வராதா என்கிற எதிர்பார்ப்பு அவரிடம் இருந்தது.

இரவு மணி பத்து இருக்கலாம். அன்று அமாவாசையானதால் எங்கும் இருள் வியாபித்திருந்தது. ஜயந்தனிடம் ஒரு குத்துவிளக்கும், ஒரு பாட்டில் எண்ணெயுமிருந்தது. குத்து விளக்கை இடிந்துபோன வராந்தாவில் வைத்தார்.

பூனையின் குரல் இருளிலிருந்து கேட்டது. இருட்டில் மின்னும் இரண்டு கண்கள் தெரிந்தன. ஜயந்தன் அதைப் பார்த்தார். கண்கள் அவரை நெருங்கி வந்து கொண்டிருந்தன!



## 44

மின்னும் கண்கள் நெருங்கி வந்துகொண்டிருந்தன. ஜயந்தன் தயாராக வைத்திருந்த வலையின் அருகே பூனை வந்து நின்றது. பூனையைப் பார்த்த மிரட்சியில் எலி பரபரப்புடன் எலிப்பெட்டிக்குள் அங்கும் இங்கும் ஓடியது.

திடுமென்று பூனை பயங்கரமாகக் கத்தத் தொடங்கியது. அதன் குரலைக் கேட்ட ஜயந்தன் ஒரு கணம் நடுநடுங்கிப் போனார். அந்தப் பழைய வீட்டின் மரச் சுவர்களில் பூனையின் கதறல் மோதிப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. அது சரியான இடத்தில்தான் நிற்கிறதென்று தோன்றியவுடன் ஜயந்தன் மேற்புற மரப்பலகையின் குமிழைத் திரும்பினார். பூனை வசமாக வலையில் சிக்கிக் கொண்டது. வலையை நன்றாக முறுக்கி எடுத்துக் கொண்டு ஜந்தன் புறப்பட்டார்.

எதிர்பார்ப்பது போலவே மார்ஜார (பூனை) ஹோமம் வெற்றி பெற்றுவிட்டால், யாரை நினைத்து அந்த ஹோமத்தைச் செய்கிறார்களோ அந்த நபருக்கு, அந்தப் பூனைக்கு என்ன கதி ஏற்படுமோ அது ஏற்பட்டுவிடும்.

பயன்படுத்தப்படாமலிருக்கும் தானியப் பெட்டிக்குள் பூனையைப் பத்திரப்படுத்தினார்.

மறுநாள் காலையில் பொழுது விடிந்தபோது பழைய ஓலைச் சுவடிகளைத் தேடிப் பிடித்து கவனமாக விபரங்களைச் சேகரித்தார். ஊன்றிப் படித்தார்.

இப்படிப்பட்ட கடுமையான ஹோமத்திற்கு நள்ளிரவு பன்னிரண்டு மணிதான் உகந்தது என்பதை அறிந்தார். ஹோமத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

அன்ற மாலையில் சூரியன் அஸ்தமித்தபோது தேவப்ரியா விஷ்ணுவிடம் கூறினாள்: "எனக்கு ஏதோ ஆபத்து ஏற்படப் போவது போல் தோன்றுகிறது. நான் துளசி மாடத்தில் விளக்கேற்றியபோது என்னுடைய தலைமுடி சிறிது கரிந்துபோனது.!"

"அது எதேச்சையாகவும் ஏற்பட்டிருக்கலாம். இல்லையா?"

"இல்லை. எனக்கு அப்படி ஏற்படவே கூடாது.!"

"இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?"

"மாந்திரீகனான எதிராளியுடன் மோத வேண்டி வந்தால், அவரைப் போலவே திறமை வாய்ந்த மற்றொருவர் தேவை. குறிப்பாகப் பகல் நேரங்களில் எனக்கு ஏதாவது நேர்ந்தால் அதை எதிர்த்து நிற்கும் வல்லமை கிடையாது. அதேபோல் மற்றொரு ரகசியமும் உண்டு. இரவு நாம் ஒன்றாகப் படுத்திருக்கும் போது என் மீது ஏதாவது கொடிய மந்திரங்களைப் பிரயோகித்தால் அது என்னை மட்டுமின்றி உங்களையும் தாக்கும்."

"சரி, நான் என்ன செய்யவேண்டும் தேவப்ரியா?"

"ஒரு மந்திரவாதியைக் குறிப்பிட்டேனே..."

"சூரியமித்ரன் நம்பூதிரிப்பாட்டை அணுகலாமா?"

"நல்லது! நானும் அவரையேதான் உங்களிடம் சொல்ல நினைத்தேன். என்னை அவருக்கு நன்றாகத் தெரியும். இருந்தும், அவர் அதை வெளிப்படுத்தவில்லை."

விஷ்ணுவின் மனம் பழையதை நினைத்துப் பார்த்தது. ஓமல்லூர் கோயிலின் பகவதியைக் குறித்துத் தேவப்பிரஸ்னம் நடத்துவதற்காக வந்திருந்த சூரியமித்ரன் நம்பூதிரி, இந்த வீட்டிற்கு வந்ததும், அவருக்குச் சந்தேகம் தோன்றியதும் எல்லாம் அவனுக்கு நினைவு வந்தன.

"உடனேயே நான் அவரைப் போய்ப் பார்க்கட்டுமா? நீ என்ன சொல்கிறாய் தேவப்ரியா?"

"ஆமாம். உடனே பாருங்கள். நான் உங்களை அங்கு கொண்டு போய்ச் சேர்க்கிறேன்" - உடனே அவள் விஷ்ணுவை அழைத்துக் கொண்டு ஆகாயமார்க்கமாகப் பயணம் செய்து சூரியமனையின் வெளிவாசலருகே இறக்கிவிட்டாள்.

பிறகு, "நான் அந்தப் பாலை (கப்பல் அலரி) மரத்தடியில் நின்று கொண்டிருப்பேன். நீங்கள் உடனே அவரை சந்தியுங்கள்" என்று சொல்லிவிட்டுப் பாலை மரத்தை நோக்கி நகர்ந்தாள்.

விஷ்ணு அவள் போவதையே சற்று நேரம் பார்த்திருந்துவிட்டு,



சூரியமனையின் வெளிவாசலைக் கடந்து உள்ளே நுழைந்தான். சூரியமித்ரன் வெளி வராந்தாவிலேயே உட்கார்ந்திருந்தார். அவர் தனியாக இல்லை. அவரருகே மற்றொரு பெண்மணி உட்கார்ந்திருந்தாள்.

"யாரது விஷ்ணுவா!" - சூரியமித்ரன் வியப்புடன் பார்த்துவிட்டு, "வாருங்கள், வாருங்கள்..." என்றார்.

"விஷ்ணுவேதான்... வணக்கம்.!"

விஷ்ணு சொல்லி முடிப்பதற்குள் அங்கு உட்கார்ந்திருந்த பெண்மணி மறைந்தே போனாள். ஒரு விநாடி நேரத்திற்குள் எப்படி அவள் மறைந்துபோனாள் என்று விஷ்ணு ஆச்சரியப்பட்டான்.

"உங்களுடன் வந்தவர் எங்கே?" - சூரியமித்ரன் கேட்டார்.

"வெளியே பாலை மரத்தடியில் நிற்கிறாள்."

"இவ்வளவு நேரம் இங்கே உட்கார்ந்திருந்ததும் அப்படிப்பட்ட ஒருத்திதான்."

"உண்மையாகவா!" - விஷ்ணு வாய் பிளந்தபடி கேட்டான்.

"அது போகட்டும்... என்ன விசேஷம்? திடீரென்று வந்திருக்கிறீர்கள்?"

"வலுமிக்க ஒரு எதிராளி எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறார். இதுவரை எதிர்த்து நின்றோம்...."

"தேவிதான் உங்களுக்குத் துணையிருக்கிறாரே, பிறகு எதற்காகப் பயப்பட வேண்டும்?"

"எல்லா நேரமும் தன்னுடைய துவாரபாலிகையைக் குறித்தே தேவி யோசிக்க முடியுமா?" விஷ்ணு கேட்டான்.

"நீங்கள் சொல்வதும் சரிதான். தீபாராதனை மற்றும் பூஜையின் போது தேவி பக்தர்களின் கோரிக்கைகளையும் கேட்க வேண்டுமே" - சூரியமித்ரன் நம்பூதிரி தம் கருத்தைத் தெரிவித்தார்.

"அப்படிப்பட்ட சமயங்களில் ஏதாவது நிகழ்ந்துவிட்டால் என்கிற பயம் தான் எங்களுக்கு!"

"இப்பொழுது திடுமென்று பயம் வரக் காரணம்?"

"சட்டென்று ஒரு சந்தேகம் ஏற்பட்டது. தேவப்ரியாவின் ஒரு தலைமுடி கருகியது."

"ஓகோ அப்படியா?" - என்றபடி சூரியமித்ரன் நம்பூதிரி சற்று நேரம் தியானத்தில் ஆழ்ந்தார். "எதிர்ப்புறம் ஒரு பெரிய ஹோமம் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. நீங்கள் உடனே வந்ததும் நல்லதற்குத்தான்!" கண்ணைத் திறந்து பேசினார்.

சூரியமித்ரன் திருமேனி அதன் பிறகும் ஏதோ கட்டங்களைப் போட்டுக் கணக்கு கூட்டிக் கொண்டிருந்தார்.

"மிகவும் திட்டமிட்டுத்தான் எதிராளிகள் இன்றைய தினத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்!" - திருமேனி பேசினார்.

"அப்படிக்கூட ஒன்று உண்டா திருமேனி?!" - விஷ்ணு கேட்டான்.

"ஆமாம் இன்று துர்கா அஷ்டமி நாள். மிக அதிக நேரம் தேவி கோயிலில் இருக்க மாட்டார். அந்த நேரம் பார்த்துத்தான் ஹோமம் நடக்கப் போகிறது."

"நாங்கள் என்ன செய்யலாம், திருமேனி?"

"பதற்றப்படாதீர்கள். தைரியமாக இருங்கள்... எல்லாவற்றையும் நான் சொல்லித் தருகிறேன்."

சூரியமித்ரன் நம்பூதிரிப்பாடு ராசிப்பலகையை எடுத்து முன்னால் வைத்தார். பரம்பரை பரம்பரையாகப் பயன்படுத்தி வரும் சோழிகள் நிறைந்த பையை எடுத்து வணங்கினார். பிறகு அதில் கையைவிட்டு ஒரு பிடிச் சோழியை வாரி ராசிப் பலகைமேல் பரப்பினார். கணக்கு கூட்டினார். மீண்டும் சோழிகளை எண்ணினார். கழித்தார். பெருக்கினார். வகுத்தார்.

கடைசியாகக் கூறினார்: "மிகவும் பயங்கரமான ஒரு ருத்ரஹோமம் நடத்துவதற்கு உங்கள் எதிராளி தயார் செய்து கொண்டிருக்கிறார். இதிலிருந்து தப்பிப்பது என்பது கடவுள் சித்தம் தான்!"

"உண்மையாகவா நம்பூதிரி! அப்படியானால் நாங்கள் நினைத்தது சரிதான்" விஷ்ணு வெளிப்புறமாகப் பார்த்தபடி பேசினான்.

"உண்மைதான். எதற்கும் நான் இன்னொரு தடவையும் பார்த்துவிடுகிறேன்." - திருமேனி மீண்டும் கவனமாகக் கணக்



கிட்டார். பத்ம வியூகம் தென்படுகிறது." உண்மை நிலை என்ன வென்றால், யாரும் அதற்குள் நுழைய முடியாதபடி எல்லா வழிகளையும் அடைத்து விட்டிருக்கிறார்கள். கடுமையான அரண் அமைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து மீள்வது என்பது மிகவும் கடினமானதுதான்.!"

சூரியமித்ரன் நம்பூதிரி எதிலும் பட்டுக் கொள்ளாதவராகப் பதிலளித்தார்.

விஷ்ணு பிரமைபிடித்துப் போய் உட்கார்ந்தான்.

உக்கிரமான பிரதாபசாலியான சூரியமித்ரன் நம்பூதிரியே கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் போது விஷ்ணுவால் என்ன செய்ய முடியும்?

"விஷ்ணு இதற்கெல்லாம் காரணம் என்னவென்று தெரியுமா? தேவப்ரியாவின் நட்சத்திரம் உத்திரம். பதினேழு வயதிலிருந்து முப்பத்தாறு வயது வரை அவளுக்குச் சனிதசை. இப்பொழுது அவளுக்கு வயது இருபத்தொன்று - அதாவது நமது மனிதக் கணக்கின் படி. அதுதான் காரணம்."

"நாம் என்ன செய்தால் தற்காத்துக் கொள்ளலாம் என்று பாருங்களேன் திருமேனி" - விஷ்ணு கேட்டான்.

திருமேனி மீண்டும் யோசனையில் ஆழ்ந்தார். சூரியமித்ரன் நம்பூதிரிப்பாட்டின் கண்கள் மூடியிருந்தாலும் கண்களுக்குள் கண்மணிகள் அடிக்கடி உருள்வது தெளிவாகவே தெரிந்தன.

வெகு நேரத்திற்குப் பிறகு, திருமேனி கண்களைத் திறந்தார்.

"அதற்கு எதிராகச் செயல்பட எந்த வழியும் எனக்குப் புலப்படவில்லை" என்று உதடுகளைப் பிதுக்கினார்.



45

எந்த ஒரு வழியும் இல்லையென்று சூரியமித்ரன் நம்பூதிரிப்பாடு சொன்னபோது, விஷ்ணுதேவன் இடிந்தே போனான்!

"எந்த வழியுமே இல்லையா திருமேனி?" என்று மீண்டும் கேட்டான்.

"உங்களுக்கு விஷயம் புரியவில்லையென்று நினைக்கிறேன். இப்பொழுது அங்கு என்ன நடக்கிறதென்று நான் உங்களுக்கு விளக்கமாகவே சொல்லிவிடுகிறேன். ஒரு கறுப்புப் பூனையைப் பிடித்து தேவப்ரியாவின் இடத்தில் வைத்து ருத்ர மந்திரம் சொல்லி அதை நெருப்பிலிட்டுப் பொசுக்கப் போகிறார்கள். இதிலிருந்து தப்புவதென்பது மிகமிகக் கடினமான காரியம். ஆனால், ஒரு சிறிய மாற்றத்தை ஏற்படுத்தினால் தப்பிக்கலாம்" திருமேனி கூறினார்.

"நீங்கள் சொல்வது உண்மையிலேயே எனக்குப் புரியவில்லை, திருமேனி!"

"அதாவது தேவப்ரியா இப்பொழுது இருக்கிற நிலையிலேயே இருந்தால் ஆபத்தை கடக்க முடியாது. இந்த நிலைக்கு ஒரு மாற்றத்தை ஏற்படுத்தினால் தப்பிக்க வழியுண்டு!"

"மாற்றம் என்பது...?"

"தற்சமயத்திற்குப் பழைய இடத்திலேயே போய் இருப்பது நல்லது."

"புரியவில்லை திருமேனி..."

"அதாவது கோயிலில் தேவியின் துவார ப்ாலிகையாகவே நின்றுகொள்ள வேண்டும். ஓரிரு நாட்கள் இருந்தாலே போதுமானது. கோயிலின் எல்லைக்குள் எப்படிப்பட்ட மந்திரப் பிரயோகமும் நுழைய முடியாது. எது வந்தாலும் தேவியின் முன்னால் பஸ்பமாகிவிடும்."

விஷ்ணு யோசித்துப் பார்த்தான். நிலைமை மிகவும் சிக்கலான கட்டத்தை அடைந்துள்ளது. எப்படிப் பார்த்தாலும் தப்பிக்க வேறு வழியே கிடையாது! வேறு எந்த முறையில் காப்பாற்ற



வாய்ப்பிருந்தாலும் சூரியமித்ரன் நம்பூதிரி நிச்சயம் அதைத் தவற விடமாட்டார் என்பதும் புரிந்தது.

"விஷ்ணு மறுபடியும் உங்களைப் பார்க்க நேர்ந்ததில் எனக்கு மகிழ்ச்சியே. ஒரு விதத்தில், நீங்கள் அதிர்ஷ்டசாலி எனலாம். மோகினி என்று சொல்லப்படுகிற ஒன்றின் வடிவத்தையே நீங்கள் மாற்றி விட்டீர்கள். சாதாரணமாக இந்தப் பெயரைக் கேட்டவுடன் எல்லோரும் பீதியடைவதுதான் வழக்கம்."

"திருமேனி, உங்களிடம் உண்மையைச் சொல்வதில் எனக்கு எந்தவிதத் தயக்கமும் இல்லை. இதில் உங்களுக்குத் தெரியாத சில விஷயங்களும் இருக்கலாம். என்னையும் என் குடும்பத்தையும் பொறுத்தவரையில் நாங்கள் மிகவும் மோசமான ஒரு வீழ்ச்சிக் கட்டத்தில்- வாழ்க்கைக்கு வேறு வழியே தெரியாத நிலையில் சிக்கியருந்தபோதுதான் அவள் எனக்குச் சொந்தமானாள். அவளது வருகைக்குப் பிறகு எனக்கு எல்லா வகையிலும் அபரிமிதமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எதையென்று உங்களிடம் பட்டியல் போட்டுச் சொல்வது? ஒரு காலத்தில் என்னைப் பற்றி இளக்காரமாகப் பேசியவர்கள், இன்று என்னைக் கண்டவுடன் எழுந்து நிற்கிறார்கள். இதையெல்லாம் நினைத்தால் எனக்கே சில சமயம் நான் பழைய விஷ்ணுதானா என்கிற சந்தேகம் தோன்றும்" - விஷ்ணுவின் கண்களில் நீர் சுரந்தது.

"ஐந்து லட்சம் பேரில் ஒருவருக்கு, அதுவும் எப்பொழுதாவது ஒரு முறை சம்பவிப்பது இப்பொழுது உங்களுக்குச் சம்பவித்திருக்கிறது. அதுவும் உங்களுக்குச் செய்திருக்கிற அளவிற்கு வேறு எவருக்கும் நிகழ்ந்திருக்கிறதா என்பதும் புரியவில்லை. இது ஓர் அதிர்ஷ்டம் தான். நீங்கள் கொடுத்து வைத்தவர், விஷ்ணு!" திருமேனி சிலாகித்தார்.

"நீங்கள் சொன்னபடியே உடனடியாகச் செய்து விடவா, திருமேனி?"

"உடனே செய்யுங்கள். தேவப்ரியாவை கோயிலிலுள்ள அவளது பழைய இடத்திலேயே இருக்கச் சொல்லுங்கள். தற்சமயத்திற்கு அது போதும். அதன் பிறகு ஆகவேண்டியதை நான் பார்த்துக்

கொள்கிறேன்" - சூரியமித்ரன் உறுதியளித்தார்.

விஷ்ணுதேவன் உடனே தேவப்ரியாவிடம் வந்தான், விவரங்களை எல்லாம் சொன்னான்.

தேவப்ரியா, விஷ்ணுதேவனுடன் அங்கிருந்து புறப்பட்டாள். ஓமல்லூர் கோயிலின் கருவறைக்கு முன்பாக அவர்கள் வந்து நின்றனர்.

"விஷ்ணு, நீங்கள் அந்த வில்வ மரத்தடியில் போய் நின்று கொள்ளுங்கள்."

அவன் அப்படியே செய்தான். அவள் கருவறையைப் பார்த்த போது அங்கு தேவி இல்லை. அவளது இடத்திலும் தேவியைக் காணவில்லை!

"மந்தாகினி, தேவி எங்கே போயிருக்கிறார்?" - தேவநாகரி மொழியில் தேவப்ரியா கேட்டாள்.

"இன்று துர்க்கா அஷ்டமி நாளல்லவா? தேவி நீராடப் போயிருக்கிறார்."

"நீ ஏன் அவருடன் போகவில்லை, மந்தாகினி?"

"யாராவது இங்கே இருக்க வேண்டாமா? அதனால் என்னை இங்கேயே இருக்கச் சொல்லி விட்டுப் போனார்."

நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. அதே நேரம் வடக்குத் திசையிலிருந்து ஒரு சிவப்பு நிறப் பிரகாசம் பாய்ந்து வருவதை தேவப்ரியா கவனித்தாள் அதனுடைய வேகத்தை ஒரு நொடியில் அவள் கணக்கிட்டாள் அதை அனுப்பியது யார், அது எங்கிருந்து வருகிறது என்பதையும் விரைவிலேயே உணர்ந்து கொண்டாள். ஜயந்தன் அனுப்பிய அக்கினி அஸ்திரம். அது நேராகக் கோயிலை நோக்கிப் பாய்ந்து கொண்டிருப்பது புரிந்தவுடன், அவள் சட்டென்று கருவறைக்குள் நுழைந்தாள்.

விஷ்ணுதேவனும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். மிகச் சக்தி வாய்ந்த ஏதோ ஒன்று ஹூங்காரம் செய்தபடி நெருங்குவதை விஷ்ணுவும் கவனித்தான்.

சூரியமித்ரன் எச்சரித்தது எத்தனை துல்லியமான உண்மை என்பது அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது. அங்கு ஏதோ பயங்கரம்



நிகழப் போகிறது என்பது உறுதியாகத் தெரிந்ததால், அதை அறிந்து கொள்வதற்காக அவன் வில்வ மரத்தடியிலேயே நின்றிருந்தான்.

சீறிப் பாய்ந்து வரும் அஸ்திர வடிவிலிருந்த அந்த சிவப்பு நிற வெளிச்சம், கோயிலுக்கு முன்பிருந்த ஆலமரத்தின் ஒரு பெரிய கிளையைத் தீய்த்துக் கொண்டு முன்புறமாகப் பாய்ந்தது. பலத்த ஓசையுடன் அந்தக் கிளை உடைந்து கீழே விழுந்தது. பிறகு அந்த அஸ்திரம் கருவறையின் வாசலுக்கு மேற்புறம் நிலையாக நின்றது. அதைப் பார்த்த விஷ்ணு ஒரு விநாடி திகைத்தான்.

இந்த முறை ஜயந்தன் எல்லாவித சம்ஹார முறைகளையும் ஒன்றாகச் சேர்த்து அனுப்பியிருந்தார். 'இதிலிருந்து தப்ப முடியுமா?' என்று விஷ்ணு கவலைப்பட்டான்.

மிகவும் சக்தி வாய்ந்த அந்த நெருப்பு அம்பு உறுமியபடியே அசையாமல் அங்கேயே நின்றிருந்தது. சரியான சமயத்தில் நல்ல உபாயம் கூறித் தேவப்ரியாவைக் காப்பாற்ற உதவிய சூரியமித்ரன் நம்பூதிரியை விஷ்ணு நன்றியுடன் நினைவு கூர்ந்தான். அவர் மட்டும் இதைச் சொல்லி எச்சரிக்காமல் இருந்தால் தேவப்ரியா இந்நேரம் எரிந்து சாம்பலாகிவிட் டிருப்பாள்!

சக்தி வாய்ந்த மந்திரவாதிகள் ஹோமாக்கினியில் பைசாச சக்திகளையும், மோகினி - கந்தர்வர்கள் உள்பட எல்லோரையும் தங்கள் மந்திர சக்தியைப் பயன்படுத்தி ஆவாஹம் செய்து எரித்து விடும் சம்பவங்களை அவன் அறிந்திருந்தான். அதன் நேரடிக் காட்சிதான் எதிரே தெரிவது.

ஹோமாக்கினியின் சக்திகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஒரு பிரம்மாண்ட அஸ்திரமாக வடிவமைத்து தேவப்ரியாவை அழிக்க ஜயந்தன் அனுப்பியுள்ளார். இதையெல்லாம் தேவப்ரியாவும் பார்த்துக் கொண்டே இருக்கக் கூடும் என்று விஷ்ணுவிற்குத் தோன்றியது.

தேவப்ரியா கருவறைக்குள் நின்றபடி தன்னை அழிக்கக் காத்திருக்கும் அஸ்திரத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அங்கிருந்து வெளியேற முடியாத ஒரு நிலையில் இருந்தாள் தேவப்ரியா. அயர்ந்து போய் உறங்கி விட்டால் கூட என்ன நேருமோ

என்கிற பயம் தோன்றியது. மூன்றாவது யாமம் நெருங்கிக் கொண்டிருந்தது.

துர்க்கா அஷ்டமி நாளாக இருப்பதால் தேவி திரும்பி வர இன்னும் நேரமாகலாம். தேவி வந்து விட்டால், இதற்கு ஒரு பரிகாரம் ஏற்பட்டுவிடும் என்று தேவப்ரியா உறுதியாக நம்பினாள்.

நேரம் கடந்து கொண்டிருந்தது.

சற்று நேரத்திற்குப் பிறகு கோயிலின் வலப்புறம் வழியே பிரகாசம் நிறைந்த திவ்ய ஜோதி வடிவில் தேவி வருவதை விஷ்ணு கவனித்தான். கருவறை வாசலை நெருங்கியவுடன் தேவி சற்று நேரம் நின்றார். மேற்புறம் எரிந்தபடி சுழன்று கொண்டிருக்கும் அஸ்திரத்தையும் பார்த்தார்.

பின்பு வெற்றிடமாக இருந்த தேவப்ரியாவின் இடத்தில் தேவி ஏறி நின்றார். 'சக்தி வடிவமான தேவி ஏன் ஒன்றும் செய்யாமல் இருக்கிறார்?' என்று விஷ்ணு யோசித்தான். ஆனால், உண்மை நிலை வேறாக இருந்தது.

மாந்திரீகனான ஜயந்தன் எந்த இடத்தையெல்லாம் மந்திர வித்தையால் பந்தனப்படுத்த முடியுமோ அதை எல்லாம் பந்தனப் படுத்தியிருந்தார்.

இன்றுவரை யாருமே செய்யாத அளவில் ஜயந்தன் ஏராளமான மந்திர வித்தைகளை இந்தப் போராட்டத்திற்காகக் கையாண்டிருந்தார். முதலில் தன்னுடைய தலைமுடி ஒன்றைப் பிடுங்கி ஹோம குண்டத்தில் போட்டார். சக்தி வடிவமான துர்க்காவைத்தான் அவரும் பிரார்த்தித்தார். இதனால் எல்லாம் காரியம் கைகூடாது என்றறிந்த ஜயந்தன், தன்னுடைய வலது கைக் கட்டைவிரலின் முனையில் காயம் செய்து ரத்தத்தை ஹோமாக்கினியில் சிந்தினார். அப்படியும் வழியில்லை என்று தோன்றியபோது தன்னையே சுயமாக ஹோம குண்டத்தில் ஹோமித்துக் கொள்ளத் தயாரானார்.

பூஜை அறையில் பத்திரப்படுத்தி வைத்திருந்த கனமான வீச்சுவாளை எடுத்துத் தீட்டிக் கூர்மையாக்கினார். தலையின் மேற்புறத்தைச் சரடு ஒன்றால் கட்டி அந்தச் சரடின் முனையை ஹோமாக்கினியின் ஜுவாலையில் எரித்தார்.



ஜயந்தனின் தலைப் பகுதிக்கு நெருப்பு நெருங்கி வந்தபோது தேவி தன்னுடைய கைத்தலத்தால் அதைத் தடுத்தார். நல்லவனாக இருந்தாலும், கெட்டவனாக இருந்தாலும் பக்தியால் சுயமழிந்து அணுகும்போது கடவுள்கள் கைவிட மாட்டார்கள் என்பது ஜயந்தனுக்குத் தெரியும்.

உடனே விஷ்ணுதேவன் அந்த நள்ளிரவிலேயே சூரியமித்ரன் நம்பூதிரியின் வீட்டை நோக்கி வேகமாக நடக்கத் தொடங்கினான். இரவின் மூன்றாவது யாமம் முடிவதற்குள்ளேயே விஷ்ணு அவரது வீட்டை அடைந்து விட்டான். அவர் அப்பொழுதும் உறங்காமல் வராந்தாவிலேயே உட்கார்ந்திருந்தார்.

வெளிவாசலைத் தாண்டி மூச்சிரைக்க நடந்து வரும் விஷ்ணுவை அவர் பார்த்தார்.

"என்ன விஷ்ணு... எல்லாம் நான் சொன்னபடிதான் நடந்தது இல்லையா?"

"ஒரு புள்ளிகூட வித்தியாசமில்லாமல் அப்படியே நடந்தது திருமேனி."

"அங்கு வேறு என்ன நடந்தது?"

ஜயந்தன் ஏவி விட்ட அஸ்திரம் கருவறை வாசலின் மேற் பகுதியிலேயே நிலையாக நிற்கிறது. அது தேவப்ரியாவை எதிர்பார்த்து நிற்பதாகத்தான் தோன்றுகிறது.

சூரியமித்ரன் திருமேனி சற்று நேரம் கண்களை மூடித் தியானத்தில் ஆழ்ந்தார்.

அவருடைய நெற்றியில் பலவிதமான அசைவுகளும், சுளிவுகளும் ஏற்படுவதை விஷ்ணு கவனித்தான்.

கடைசியாக அவர் கண்களைத் திறந்தார்.

"அவளுக்கு இப்போது மோசமான நேரம். அவளுடைய ஜென்மத்திலேயே மிகவும் பயங்கரமான கட்டம் இது. தேவியைத் தவிர வேறு யாரும் தேவப்ரியாவைக் காப்பாற்ற முடியாது!"

"அடுத்தபடியாக நான் என்ன செய்ய வேண்டும் திருமேனி?" விஷ்ணு கேட்டான்.

அந்தக் கேள்விக்குப் பதிலளிக்காமல் சூரியமித்ரன் நம்பூதிரி கண்களை மூடியபடி உட்கார்ந்திருந்தார்.



## 46

சூரியமித்ரன் நம்பூதிரிப்பாடு மனதிற்குள் உருப்போட்ட மந்திரச் சொற்கள், தேவியின் முன்பாகப் பூக்களாக விழுந்துகொண்டிருந்தன. தன்னுடைய பாதத்தில் முத்துக்களைப் போல் வந்து விழும் குங்குமப் பூக்களைக் கண்ட தேவி, தன் ஞானதிருஷ்டியால் சூரியமித்திரனைப் பார்த்தார்.

அவர் வேண்டுவது தன்னுடைய ஊழியக்காரியைக் காப்பாற்றுவதற்காக என்று தெரிந்தது. என்றாலும், மற்றொருவர் பிரார்த்திக்காமல் தேவப்ரியாவிற்கு உதவ முடியாத நிலையிலிருந்தார் ஓமல்லூர் கோயில் பகவதி.

தேவியின் சக்தி வடிவம் ஒரு ஜோதியாக மாறி அங்கிருந்து உயர்ந்து கருவறைக்குமேல் எழும்பியது. அப்பொழுதும் ஜயந்தன் அனுப்பி யிருந்த நெருப்பு அஸ்திரம் தன்னுடைய இலக்கின் மீதே கண்ணாக இருந்தது.

தேவி ஒரு அக்கினி ஜுவாலையாக முன்புறம் நகர்ந்து அஸ்திரம் நின்று கொண்டிருந்த பகுதிக்குச் செல்ல, அவரது ஜுவாலை அஸ்திரத்தை ஆவாஹம் செய்தது. அஸ்திரம் சாம்பலாய் விழுந்து நொறுங்கியது. அதன்பிறகு தேவி தன்னுடைய பழைய இடத்திலேயே சென்று நின்றுகொண்டார்.

தேவப்ரியா கருவறையிலிருந்து வெளிப்பட்டு விஷ்ணுவை நெருங்கினாள்.

"வாருங்கள். நான் உயிர் பிழைத்து விட்டேன். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இங்கிருந்து போய்விட வேண்டும்." - விஷ்ணுவை வற்புறுத்தினாள் தேவப்ரியா.

இருவரும் வேகமாகக் குருக்ஷேத்ர மனையை அடைந்தனர்.

"இங்கு யாரும் வரமாட்டார்கள்.!" - விஷ்ணு உறுதியளித்தான்.

"உண்மைதான். கடவுள் பக்தி நிறைந்திருக்கும் இங்கு துர்மந்திரவாதிகளின் பிரயோகம் எதுவும் பலிக்காது. இந்த இடத்தில் இனிமேல் அவர்கள் என்னை ஒன்றும் செய்யமுடியாது. ஆனால்..."



"என்ன ஆனால்...?"

"இந்த இல்லத்தை அசுத்தப்படுத்தி விட்டால் அதன் பிறகு அவர்களது மந்திரசக்தி வேலை செய்யத் தொடங்கும்."

"நாம்தமான் பூஜைகளை விடாமல் நடத்திக் கொண்டிருக்கிறோமே?"

"உண்மைதான். நாம் கவனமாக இல்லாவிட்டால் அபாயம் நேரிடலாம்."

"வீட்டிற்குள் யார், எதை, எப்படி அசுத்தப்படுத்த முடியும்?"

"சுடுகாட்டுச் சாம்பலை வீசினால் வீடு அசுத்தமாகி விடும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்."

"அப்படியானால் சாட்சாத் மகேஸ்வரன் கடலை திருநீறைத்தானே உடம்பெங்கும் பூசியிருக்கிறார்?" என்று விஷ்ணு மடக்கினான்.

"சம்ஹாரமூர்த்தியான மகேஸ்வரன் என்ன செய்தால் என்ன? அவர் எதைத் தொட்டாலும் அது சுத்தமாகி விடாதா? கடவுள் யாருடைய சாம்பலைத் தொடுகிறாரோ அந்த மனிதனுக்கு மோட்சம் கிடைத்துவிடாதா? ஆனால், நான் குறிப்பிட்டது வேறு. நம்மைத் தொல்லைப்படுத்துவதற்காகவே யாராவது கொண்டு வந்து போட்டு விட்டால்?"

"உண்மைதான். நான் எச்சரிக்கையுடன் இருக்கிறேன்."

அதே சமயம் ஜயந்தன் ஹோம குண்டத்திற்கு அருகே உட்கார்ந்து மந்திரம் ஜபித்துக் கொண்டிருந்தார். நினைத்த காரியம் நிறைவேறுவது வரை மந்திர உச்சாடனத்தை நிறுத்துவது சரியல்ல என்று தெரிந்ததால் ஜயந்தன் விடாமல் மந்திர உச்சரிப்பில் மூழ்கியிருந்தார்.

சட்டென்று ஹோம குண்டத்திலிருந்து சிவப்பு நிறமான ஒரு பிரகாசம் மேற்புறமாக எழும்பியது. அது அவர் அனுப்பிவைத்த சம்ஹார அஸ்திரமேதான்!

"என்ன இதுவும் இங்கே திரும்பி வந்துவிட்டதா? இது எப்படிச் சாத்தியம்?" - சற்று உரக்கவே கேட்டார் ஜயந்தன்.

அவரது கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லை. அந்த அஸ்திரம்

அந்திரத்தில் சென்று மறையவும் செய்தது.

எங்கேயோ என்னமோ விபரீதம் நடந்திருக்கிறது என்பது அவருக்குப் புரிந்தது. உடனே அந்த விவரத்தைத் தெரிந்துகொள்ள விரும்பினார்.

குடும்ப வீட்டின் தென்பகுதியில் குடியிருத்தியிருந்த ஓர் உக்கிர மூர்த்தியைத் தனக்கு முன்பாக வரவழைத்தார்.

ஜயந்தனின் கட்டளைக்காகக் காத்து நின்ற அந்தப் பைசாசிக உருவத்திடம் ஜயந்தன் கூறினார்: "எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் என்னை ஓமல்லூர் கோயிலுக்குக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும்."

தனக்கு முன்பாகக் குனிந்தபடி கறுத்த பனைமரத்தின் நிறத்துடன் இருந்த பயங்கர வடிவத்தின் மீது ஜயந்தன் ஏறி உட்கார்ந்தார். ஒரு கறுத்த மழைமேகம் போல் அது வானத்தில் விரைந்தது. விநாடிகளுக்குள் அவர் கோயிலை அடைந்துவிட்டார்.

ஜயந்தன் கோயில் சுற்றுப்புறத்தை ஒருமுறை பார்த்தார். இப்பொழுதுதான் அவர் அந்தக் கோயிலுக்கு முதல் தடவையாக வந்திருக்கிறார். பலமுறை இங்கு வரவேண்டுமென்று அவர் நினைத்திருந்தார். கால் தண்டை காணாமல் போனதை அறிந்த அன்றே இங்கு வர எண்ணினார். ஆனால், பயத்தினாலேயே வராமலிருந்தார்.

கோயிலும் சுற்றுப்புறமும் அமைதியில் மூழ்கி இருந்தன. நிலவொளி பாலைக் கொட்டியதுபோல் பரவியிருந்தது. எங்கும் எந்தவிதமான அசைவும் தென்படவில்லை.

ஜயந்தன் கருவறைக்கு முன்னால் வந்துநின்று உட்புறம் பார்த்தார். முதல் பார்வையிலேயே மாந்திரீகனான அவருக்கு உள்ளே தேவி இல்லை என்பது புரிந்தது.

அவர் அங்கிருந்து நகராமலே சத்தமில்லாமல் மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்தார். அவை தேவியை மகிழ்ச்சிப்படுத்தும் மந்திரங்கள். இப்படி வெகுநேரம் சென்றும் கோயிலுக்குள்ளிருந்து எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. தேவி அதற்குள் இல்லையென்பது புரிந்தது. உடனே கருவறை வாசலின் இரண்டு புறமும் நிற்கும் துவாரபாலிகையரைப் பார்த்தார்.



நிலவு மேற்குப் புறமிருந்து சாய்வாக வீசிக் கொண்டிருந்ததால் இரண்டு சிலைகளும் தெளிவாகத் தெரிந்தன. ஒவ்வொன்றையும் உற்றுக் கவனித்தார்.

இரண்டு சிலைகளும் ஒரே போல் தோற்றமளித்தாலும் வலது புறமுள்ள சிலையில் வலது கையில் காணப்பட வேண்டிய வாளுக்குப் பதிலாகத் திரிசூலம் தென்பட்டது.

'ஓகோ, அப்படியா கதை!' - அவர் மனதிற்குள் முனகிக் கொண்டார்.

'மகாமாயா இங்கு காவல்காரியாக நின்று கொண்டிருக்கிறாள். கருவறை சூனியமாகக் காணப்படுகிறது. அதற்குள் யாருமே இல்லை. அப்படியானால் துவாரபாலிகையின் சிலை எங்கே போனது?' ஒருவேளை அது கருவறைக்குள் இருக்கிறதா?

'சென்னாங்கேரிமனை தானவேதன் நம்பூதிரிப்பாடின் சொந்தம் தானே இந்தக் கோயில்? அவர்தானே அன்று நம் வீட்டிற்கு வந்திருந்தார்?' இவ்வளவு தூரம் வந்த நிலையில் அங்கும் சென்று தலையைக் காட்ட எண்ணினார் ஜயந்தன்.

அங்கிருந்தபடியே தானவேதனின் வீடு எது என்பதைக் கணக்கிட்டுக் கண்டுபிடித்தார். பிறகு அந்தத் திசையில் நடந்தார். சற்றுத் தூரம் சென்றபோது, இடது புறமாக ஓர் ஒற்றையடிப்பாதை தென்பட்டது. சற்றுத் தூரம் சென்றதும் வழி முடிவடைந்தது.

ஒரு பழைய வெளிவாசலின் முன்புறம் ஜயந்தன் நின்று கொண்டிருந்தார். தைரியமாக வாசலைக் கடந்தார். முற்றத்தை அடைந்து சத்தமாகக் கேட்டார்:

"இந்த வீட்டில் எல்லோரும் தூங்கி விட்டீர்களா?"

"யாரது?" - உள்ளேயிருந்து ஒரு குரல் கேட்டது.

"விஸ்வமங்கலம் வீட்டிலிருந்து வருகிறேன்."

அந்த வார்த்தையைக் கேட்டதும் தானவேதனுக்குப் புரிந்து விட்டது. தாழ்த்தி வைத்திருந்த விளக்கின் திரியை உயர்த்தினார். விளக்கைக் கையில் எடுத்துக்கொண்டு கதவைத் திறந்தார்.

"யார்? விஸ்வமங்கலத்தாரேதான் வந்திருக்கிறாரா?"

"நானேதான். நான் மட்டுமேதான் வந்திருக்கிறேன்." - ஜயந்தன் பதிலளித்தார்.

"ரொம்பச் சந்தோஷம். வந்து உட்காருங்கள். நாணிக்குட்டி, எழுந்து டீ போடும்மா" என்று அவர் தன்னுடைய வளர்ப்பு மகளிடம் கூறினார்.

குழந்தை இல்லாததால் மனைவியின் தங்கை குழந்தையைக் கொண்டுவந்து வளர்க்கிறார்.

நாணிக்குட்டி உடனே எழுந்து சமையலறைக்குள் புகுந்தாள்.

"என்ன, எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் திடுமென்று வந்து நிற்கிறீர்கள்?"

"எல்லாம் நல்லதற்குத்தான்! இங்கு வந்த பிறகுதான் நான் வந்ததே நல்லதற்குத்தான் என்று தோன்றுகிறது."

"குளிப்பதற்கு ஏற்பாடு செய்யட்டுமா?"

"வேண்டாம், வேண்டாம்! பூஜை நடத்திக் கொண்டிருந்த இடத்திலிருந்து எழுந்து வருகிறேன். அதனால் குளியல், ஜபம் எதுவும் தேவையில்லை. முதலில் உங்களிடம் கொஞ்சம் பேசவேண்டும். மற்றதெல்லாம் பிறகுதான்!"

"சொல்லுங்கள். காணாமல் போன வாசுவைப்பற்றி ஏதாவது தகவல் தெரிந்ததா?"

"இப்பொழுதும் தேடிக் கொண்டுதான் இருக்கிறேன்... என்றாவது ஒருநாள் வராமல் இருக்கமாட்டார்!" - ஜயந்தன் தானவேதனுக்கு ஆறுதல் கூறினார்.

நாணிக்குட்டி பால் இல்லாத டீயைக் கொண்டுவந்து வைத்தாள். ஜயந்தன் அதை எடுத்து ஊதிக் குடித்தார். பிறகு சுவரில் நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்துகொண்டு பேசத் தொடங்கினார்:

"வந்த விஷயத்தைச் சொல்லட்டுமா? எல்லாவற்றையும் ஒரு தடவை நேரில் பார்க்கலாம் என்றுதான். இங்கு வந்த பிறகு யாரும் மனதால் கூட நினைக்காத, இதுவரையில் எங்கும் நடைபெறாத ஒரு சம்பவத்தை உணர்ந்தேன்."

"அப்படி... எங்கே, என்ன... பார்த்தீர்கள்?" - தானவேதன் குறுக்கிட்டார்.

"விளக்கமாகவே சொல்கிறேன். நான் வந்தபோது கருவறையில் தேவி இல்லை."



"நீங்கள் சொன்னது உண்மைதான் ஜயந்தா. இப்பொழுது தேவி எங்கெங்கோ இடம் மாறி நிற்கிறார். யாருக்கும் ஒன்றும் புலப்படமாட்டேன் என்கிறது. இதெல்லாம் யாருக்கு உதவுவதற்காகச் செய்கிறாரோ என்னவோ? அது ஒன்றும் புரியவில்லை."

"தேவியின் சொந்த ஆளைக் காப்பாற்றுவதற்காகவும் இருக்கலாம்."

"சொந்த ஆள் என்றால்?"

"சொந்த ஊழியக்காரியைத்தான். வேறு யாரை? பகலெல்லாம் மனித ஜன்மம். இரவில் சுய உருவமாகவும் உள்ள ஊழியக்காரியைத்தான்."

"நீங்கள் யாரைப் பற்றிக் கூறுகிறீர்கள்?"

"யாரைப்பற்றி நான் பேசுகிறேன் என்பதைச் சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். அதனால் சொல்லவில்லை. ஆனால், நான் நினைத்தால் அதை நிரூபிக்க முடியும். பிறகு விமோசனம் இல்லாமல் அலைய வேண்டியதுதான் பலன்!"

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?"

"நீங்கள் எதுவும் செய்யவேண்டாம். நான் கேட்பதைத் தர முடியுமா?"

"என்னவென்று சொல்லுங்கள்!"

"ஓமல்லூர் கோயில் உங்களுடையதுதானே?"

"அந்த விஷயத்தில் உங்களுக்குச் சந்தேகமே வேண்டாம். என்னுடையதுதான்."

"அப்படியானால் நீங்கள் ஒன்று செய்ய வேண்டும். முடியுமா?"

"நீங்கள் இன்னும் விஷயத்திற்கே வரவில்லையே?"

"காரியம் வெகு சாதாரணமானதுதான். நீங்கள் நினைத்தால்தான் அது நடக்கும்."

"சரி. சொல்லுங்கள்."

"கருவறைக்கு முன்புறம் வலதுபுறத்தில் ஒரு சிலை இருக்கிறதே - ஒரு துவாரபாலிகையின் சிலை. அதை ஒரு சில நாள்கள் நான் கொண்டு போய் வைத்திருக்கலாமல்லவா? அது மட்டும் கிடைத்து

விட்டால் வாசுவையும் கண்டுபிடிக்க முடியும்!"

"அப்படியானால் எடுத்துக்கொண்டு போங்கள். எனக்கு அதில் எந்தவிதமான ஆட்சேபணையுமில்லை. நான் சம்மதம் தருகிறேன்."

ஜயந்தனின் திட்டம் நிறைவேறி விட்டது. துவாரபாலிகையின் உருவில் உள்ள சாக்ஷாத் தேவியைத்தான் அவர் தானவேதனிடம் இப்போது கேட்டுப் பெற்றிருக்கிறார்.



## 47

சென்னாங்கேரி மனையின் தானவேதன் நம்பூதிரிப்பாட்டின் அனுமதி கிடைத்தவுடன் தன்னுடைய எல்லா லட்சியங்களும் பலிக்கப் போகிறதென்று ஜயந்தன் நினைத்தார்.

தேவியின் சிலையையே பெயர்த்து எடுத்துக்கொண்டு போய் விட்டால் தேவிக்கு இருப்பிடம் கூட இல்லாமல் போய்விடும். பிறகு, ஓமல்லூர் கோயில் பகவதியை அங்கிருந்து ஆவாஹம் செய்து தன்னுடைய பகுதிக்குக் கொண்டுபோய் விடலாம். தேவிக்குத் தேவையான பூஜைகள், ஹோமங்கள், பலிகளை முறைப்படி நடத்திவிட்டால் தேவி திருப்தியடைந்து தனக்கு அருள் புரிவாரென்று ஜயந்தன் கணக்கிட்டார்.

இந்தக் கோயிலிலும் வெகு நாளாக முறையான பூஜைகளும், கர்மங்களும் சரியாக நடைபெறுவதில்லை. மிகுந்த கஷ்டத்திற்கிடையில் எப்பொழுதாவதுதான் அவையெல்லாம் நடைபெறுகின்றன. எனவே தேவியை மகிழ்ச்சிப் படுத்தும் அளவிற்குத் தன்னால் எந்த பூஜையையும் மேற்கொண்டு முறைப்படிச் செய்ய முடியும்.

ஜயந்தன் மீண்டும் கோயிலை அடைந்தார். 'முதலில் துவாரபாலிகையின் சிலையை எப்படிப் பெயர்த்தெடுப்பது என்று யோசித்தார். பெயர்த்தெடுத்தாலும் எப்படி அதை எடுத்துச் செல்வது?' சட்டென்று ஒரு யோசனை தோன்றியது.



அந்தச் சிலையை எதற்காக எடுத்துச் செல்லவேண்டும்? தேவியின் சிலை அல்லவே அது. ஒரு துவாரபாலிகையின் சிலைதானே? அதனால் அதைப் பெயர்த்தெடுத்துக் குளத்தில் போட்டு விடுவது என்று தீர்மானித்தார்.

மீண்டும் அவர் தானவேதனின் வீட்டை அடைந்தார். சிலையைப் பெயர்த்தெடுக்கச் சில உபகரணங்கள் வேண்டும் என்று கேட்டார்.

"வாருங்கள். பின்புறமுள்ளது. எடுத்துத் தருகிறேன்."

இருவரும் மேற்குப்புறமாக நடந்தார்கள். அந்த வீட்டின் மேல்திசை வராந்தாவில் மண்வெட்டி, கடப்பரை, கூந்தாலம் (கோடாலி போன்ற கூர்மையான முனையுடையது) எல்லாமே கிடந்தன.

"உங்களுக்கு எதுவெல்லாம் தேவையோ எடுத்துக் கொள்ளுங்கள்!" தானவேதன் கூறினார்.

ஜயந்தன் ஒரு கடப்பாரையையும், கூந்தாலத்தையும் எடுத்துக் கொண்டார். கோயிலை நோக்கி நடந்தார்.

நேரம் மதியம் தாண்டியிருந்தது. அந்தச் சமயத்தில் பொதுவாக யாரும் கோயில் பக்கம் வருவதில்லையாதலால் ஆள்கள் யாரையும் அங்கே காணவில்லை.

ஜயந்தன் கருவறையின் படியை மிதிக்காமல் சுவரையொட்டி மேலேறி நின்றுகொண்டு கடப்பரையால் சிலையைப் பெயர்த்தெடுக்கத் தொடங்கினார். இறுதியில் சிலை பெயர்ந்து முன்புறமாக விழுந்தது.

நடுவே ஒரு கல்லைக் கொடுத்து, சிலையைக் கடப்பாரையின் உதவியால் குளத்தின் கரை வரை கொண்டு வந்து சேர்ந்தார். ஒரு தடவை சுற்றும் முற்றும் பார்த்தார். யாரும் தென்படவில்லை. அதுதான் சந்தர்ப்பமென்று தன்னுடைய முழு பலத்தையும் உபயோகித்துச் சிலையை உயர்த்திக் கீழ்ப்புறமாகத் தள்ளினார்.

பயங்கரச் சத்தத்துடன் சிலை குளத்து நீரில் விழுந்தது. சிலை விழுந்த வேகத்தில் தண்ணீர் வெகு உயரத்திற்கு எழும்பியது. குளத்தில் படர்ந்திருந்த பாசி நான்கு புறமும் ஒதுங்கியது. சிலை குளத்தின் அடிப்பரப்பை அடைந்தபோது, நீரின் மேல்பரப்பில் அலைகள் எழும்பின.

சற்று நேரத்திற்குள் அகன்று விலகிய பாசம் மீண்டும் வந்து பழையபடியே மூடிக்கொண்டது. நீர்ப்பரப்பு பழையபடி அமைதி யாயிற்று. இப்போதைய நிலையில் அங்கு எதுவும் நடந்ததாக யாரும் சந்தேகப்பட முடியாது. ஜயந்தன திரும்பி நடந்தார்.

தான் சிலையைப் பெயர்த்தெடுத்து விட்டதால், தேவி கருவறைக்குள் இருக்கிறார் என்பதில் ஜயந்தனுக்குச் சந்தேகமே தோன்றவில்லை. இனி தேவியை எதிலாவது ஆவாஹம் செய்து எடுக்க வேண்டியதுதான் பாக்கி. எனவே அதற்காக ஏதாவது சிறிய சிலை கிடைக்குமா என்று தேடினார்.

தேவியை ஆவாஹம் செய்ய வேண்டியிருப்பதால் பஞ்சலோகத்தில் ஒரு சிறிய சிலை கிடைத்தால் மிகவும் விசேஷம் என்று நினைத்தார். அதன்பிறகு தன்னிடமிருந்து களவு போகாமல் பார்த்துக் கொண்டால் போதும்.

ஜயந்தன் மீண்டும் தானவேதனின் இல்லத்தை அடைந்தார்.

"இன்னும் ஏதாவது உதவி தேவைப்படுகிறதா?" - தானவேதன் கேட்டார்.

"ஒவ்வொன்றையும் செய்து முடிக்கும்போது மற்றொன்று தலைதூக்குகிறது" - ஜயந்தன் கூறினார். "பஞ்சலோகத்தினாலான ஒரு சிறிய சிலை தேவை!"

"சிலையா? எதற்கு?"

"தேவியை ஆவாஹம் செய்து எடுத்துச் செல்வதற்கு."

"மேற்படி விஷயம் என்ன ஆனது?"

"அதுவா, சொல்கிறேன். வலதுபுறமிருந்த துவாரபாலிகையின் சிலையைப் பெயர்த்தெடுத்துக் குளத்தில் போட்டுவிட்டேன். அது அங்கேயே கிடக்கட்டும். அவள்தானே இத்தனைக்கும் காரணம்? இனி திரும்பி வந்தாலும் அவள் கோயிலுக்குள் நுழைந்து குடியிருக்க முடியாது."

"அப்படியானால் அவளுடைய கதி?"

"இனிமேல் அவள் ஒரு வேளை திரும்பி வந்தாலும் குடியிருக்க இடம் கிடையாது. ஏதாவது பாலை மரத்திலோ, பனை மரத்திலோ ஏறி வசிக்க வேண்டியதுதான். அதன் பிறகு அவளைப் பிடித்து



ஆணியடிப்பது ஒன்றும் பிரமாதமான காரியமில்லை. அவளுடைய திமிர் அத்துடன் அழிந்து விடும்."

"இந்த நிலையில் தேவி இங்கு இருப்பது தானே நல்லது?" - தானவேதன் கேட்டார்.

"அதிலிருக்கும் ரகசியம் உங்களுக்குத் தெரியாது. தேவி இந்த இடத்திலேயே இருந்தால், யார் வேண்டுமானாலும் தேவியின் கருணையைப் பெற முடியும். யார் வேண்டுமானாலும் என்று நான் குறிப்பிடுவது உங்களுக்குப் புரிந்ததா?"

"புரியவில்லை!"

"அந்த மோகினி இப்பொழுது குருக்ஷேத்ர மனையில் இருக்கிறாள்!"

"என்ன, நீங்கள் சொல்வது உண்மையா?" - இந்த விஷயம் இதுவரை தானவேதனுக்குத் தெரியாது. எனவே அவரது வியப்பும், கோபமும் குரலில் வெளிப்பட்டன.

"என்னுடைய குடும்பச் சொத்தான மோகினி குருக்ஷேத்ர மனையில் இருக்கிறாளா? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"அதெல்லாம் உங்கள் குடும்பச்சொத்து என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதுதான். குருக்ஷேத்ர மனை எப்படிக் கிடந்த வீடு? இப்பொழுது அதன் நிலைமை என்ன? உங்களுக்கு வித்தியாசம் தெரிகிறதா?" - ஜயந்தன் கேட்டார்.

தானவேதன் யோசிக்கத் தொடங்கினார்: 'உண்மைதான். ஒரு வேளைக் கஞ்சிக்குக்கூட குந்துமணி அரிசி கிடையாது என்றவர்கள் இன்று எப்படி இருக்கிறார்கள்?'

சரஸ்வதி அந்தர்ஜனம், எத்தனை தடவை அரிசி கேட்டு பாறுக்குட்டி அம்மாவை நமது வீட்டிற்கு அனுப்பி வைத்திருக்கிறார்! அந்தப் பையன் விஷ்ணுவோ உருப்படியில்லாமல் ஊர் சுற்றிக் கொண்டிருந்தவன். எங்காவது விருந்து கிடைக்கிறதா என்று நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு அலைந்து கொண்டிருந்தவன். தம்பி டிக்குப் பிரயோஜனமில்லாமல், சாப்பாட்டிற்கே வழியில்லாமல் கதகளி நாட்டியப் பைத்தியம் பிடித்து அலைந்தவன். முட்டாள்! தத்தி!

ஆனால், இப்பொழுது அவனுடைய நிலைமை என்ன? இன்று

குருக்ஷேத்ர மனை என்கிற அவனது வீட்டின் பெயரைக் கேட்டால் ஊரே காலில் விழுந்து கும்பிடுகிறது. மாய்ந்து மாய்ந்து அளந்தாலும் அளக்க முடியாத நெல் அந்த வீட்டின் தானிய அறைக்குள்! ‘எத்தனை அடியாள்கள்! காரியஸ்தன் ராமன் நாயர் இப்பொழுது ஒரு திவான் மாதிரியல்லவா நடந்து கொள்கிறார். விஷ்ணு இப்போது பஞ்சாயத்துத் தலைவரும் கூட!’

இதையெல்லாம் நினைத்துப் பார்த்த தானவேதன் மனம் பொறுக்க மாட்டாமல் கேட்டார்: “அப்படியானால் அவனது மனைவி - அதாவது அழகான அந்தப் பெண் நமது கோயிலில் இருந்த காவல்காரி என்றா சொல்கிறீர்கள்!”

“பிறகு யார்?”

“என்னால் இதை நம்ப முடியவில்லையே!”

“வரிசையாக யோசித்துப் பாருங்கள். முதலில் துவாரபாலிகையின் காலிலிருந்த கால் தண்டை காணாமல் போயிருக்கிறதென்று நீங்கள் [illegible]வில்லையா? அதைக் கழற்றி அவள் அவனிடம்தான் கொடுத்திருக்கிறாள். அதைத் தவிர கோயிலுக்குள் அதே மாதிரி எவ்வளவு தங்கம் இருந்திருக்கும்! அதன் கணக்கெல்லாம் உங்களுக்குத் தெரியுமா? அதையெல்லாம் அவள் அவனிடம் வாரிக் கொண்டுத்திருக்கிறாள். இல்லாவிட்டால் அவனுக்கு ஏது இந்த வாழ்வு! நல்ல வேடிக்கை.”

“ஓகோ! இதற்குத்தான் இவ்வளவு கண்ணாமூச்சி விளையாட்டுக்களுமா?”

“ஆமாம்! தேவி இதையெல்லாம் பார்த்துக்கொண்டே ஒரு சாட்சியாக நின்றிருக்கிறாள். இத்தனைக்கும் தேவி இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அதாவது சென்னாங்கேரி மனைக்குச் சொந்தமானவர்! அப்படிப்பட்ட தேவி இனி மேல் உங்களுக்குத் தேவைதானா?”

ஜயந்தனின் கேள்வி சரியான இடத்தில் தைத்தது.

‘உண்மைதான்! தனக்கு உதவி செய்வதற்குப் பதில் இந்தக் கோயிலுடன் எந்த ஒரு தொடர்புமில்லாத ஒரு பரதேசிப் பயலுக்கு உதவியிருக்கிறாள் தேவி. இந்த நிலையில், இதுவரை இதை நிர்வகிக்கும் ஜயந்தனே தான் மேற்கொண்ட முயற்சியைத் தொடர்ந்து நடத்தி முடிக்கட்டும்!’ என்று எண்ணினார் தானவேதன்.



“நேரடியாகவே சொல்லிவிடுகிறேனே, தேவியை நான் எடுத்துக் கொண்டு போக விரும்புகிறேன். சம்மதமா உங்களுக்கு? நான் இன்னும் விளக்கமாகச் சொல்லிவிட்டால் உங்களுக்கு விஷயம் விளங்கும். உண்மை என்னவென்றால் தேவி இங்கேயே தொடர்ந்து இருந்தால் நான் இதுவரையில் செய்ததெல்லாம் வியர்த்தமாகிவிடும். மாபெரும் தோல்வியில் வந்து முடியும். தேவியின் அருள் முழுவதும் குருக்ஷேத்ர மனையின் பக்கம்தான். காரணம் தேவியின் தோழி அந்த மோகினி அங்குதானே இருக்கிறாள்!” - ஜயந்தன் மேலும் தூபம் போட்டார்.

தானவேதன் யோசித்தார். ‘ஜயந்தன் சொல்வதிலும் நியாயம் உள்ளது. தேவி அவர்களுக்கு உதவிக் கொண்டே இருப்பார். அதை வைத்துப் பார்த்தால் அப்படிப்பட்ட தேவி இனிமேல் இங்கு இருந்துதான் என்ன உபயோகம்?’

தானவேதன் அறைக்குள் நுழைந்தார். ஒரு சாவிக் கொத்தை எடுத்து வந்து அதிலிருந்து ஒரு பெரிய சாவியைத் தேர்ந்தெடுத்து மற்றொரு அறையைத் திறந்தார்.

உள்ளே இருட்டாக இருந்தது.

ஜயந்தன் அதற்குள் நுழைந்தார்.

30233
4666159



# 48

சென்னாங்கேரி மனையின் எத்தனையோ நூற்றாண்டுப் பழமை வாய்ந்த அறைக்குள் ஜயந்தன் நுழைந்தபோது அந்த அறையில் சன்னமாக ஏதோ ஓர் அசைவு தெரிந்தது.

ஜயந்தன் ஒரு விநாடி யாரோ பிடித்து நிறுத்தியது போல் நின்றார். மனதில் ஒரு சந்தேகம் தோன்றவே, பின்புறமாய்த் திரும்பி நடக்கத் தொடங்கினார்.

“ஏன், என்ன நடந்தது?” - ஓரமாக ஒதுங்கி நின்றிருந்த தானவேதன் கேட்டார்.

"ஒன்றுமில்லை, ஏதோ ஓர் அசைவு தெரிந்தது. ஒரு விளக்கு கிடைத்தால் நல்லது."

"ஏதாவது எலியாக இருக்கும்."

"எதுவாக இருந்தாலும் சந்தேகப்பட வேண்டும். ஒரு விளக்கைக் கொளுத்தித் தாருங்கள்."

உடனேயே ஒரு விளக்கில் திரியை ஏற்றி ஜயந்தனிடம் கொடுத்தார்.

ஜயந்தன் விளக்குடன் உள்ளே நுழைந்தார். அப்பொழுது அவருக்கு ஒரு காட்சி தெரிந்தது. தங்க நிறத்தினாலான ஒரு பாம்பு, அங்கு வைக்கப்பட்டிருந்த விக்கிரகங்களுக்கு நடுவே படமெடுத்தபடி நின்று கொண்டிருந்தது. அதன் தலை மெதுவாக அசைந்து கொண்டிருந்தது. ஆனால், ஜயந்தன் அதைக் கண்டு பயப்படவில்லை. மாறாக அவர் கேட்டார்: "இது ஒரு பரிசோதனையா?"

அதைக் கேட்டுக் கொண்டதுபோல் பாம்பு தலையாட்டியது.

உடனே ஜயந்தன் கருட மந்திரம் ஜபித்தார். மகத்தான சக்தி வாய்ந்த அந்த மந்திரத்திற்கு முன்னால் அந்தப் பாம்பு தாக்குப் பிடிக்க முடியவில்லை. அது தனது படத்தைத் தாழ்த்தியது.

உடனே ஜயந்தன் தனது கையை நீட்டி அங்கிருந்த பஞ்சலோகத்தினாலான தேவி விக்கிரகத்தை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

"வேலை முடிந்து விட்டதா?" தானவேதன் கேட்டார்.

"முடியாமல் போகுமா என்ன? சின்னதாகத் தடுத்துப் பார்த்தார்கள். பயனில்லை என்றதும் விட்டு விட்டார்கள்."

"உள்ளேயும் போராட்டம் தானா?"

"அறைக்குள் ஒரு பாம்பு இருக்கிறது. காவலாக இருக்குமென்று நினைக்கிறேன்."

"நான் பார்த்ததில்லை: கேள்விப்பட்டிருக்கிறேன். கதவை நன்றாக மூடி விடுங்கள்" - தானவேதன் நினைவூட்டினார்.

ஜயந்தன் கதவை இழுத்து மூடித் தாழ்ப்பாளிட்டுப் பூட்டையும் பூட்டினார்.

"அடுத்த நடவடிக்கை."

"தேவியை இதில் ஆவாஹிக்க வேண்டும். பிறகு கொண்டு போக



வேண்டியதுதான். அப்புறம் பாருங்கள். நான் என்னுடைய வேலையைக் காட்டுகிறேன்."

ஜயந்தன் நேராகக் கோயிலுக்கு வந்தார்.

நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது.

விஷ்ணுவின் மார்பில் தேவப்ரியா தலைசாய்த்துப் படுத்திருந்தாள். அறையில் குத்துவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. விஷ்ணுவின் கண்கள் மேல்மச்சில் செதுக்கியிருந்த சித்திர வேலைப்பாடுகளில் லயித்திருந்தன. கண் அந்த இடத்தையே பார்த்துக் கொண்டிருந்தாலும், மனம் வேறு எங்கோ அலைந்து கொண்டிருந்தது.

தேவப்ரியா குருக்ஷேத்ர மனையில் காலெடுத்து வைத்துப் பதினோரு மாதங்கள் ஆகிவிட்டிருந்தன. இன்னும் ஒரே ஒரு மாதம் தான் உள்ளது. சரியாகச் சொன்னால், இருபத்தெட்டு நாள்கள்தான் உள்ளன. தேவி அவளுக்குத் தந்திருந்த சிறப்புச் சலுகையின் கால அவகாசம் முடிவடைகிறது.

அவள் திரும்பிச் செல்லவேண்டும். திரும்பிப் போகாமல் இருக்க முடியாது. அதன் பிறகு எந்தச் சக்தியாலும் அவளை நெருங்கவே முடியாமல் போய்விடும்!

"என்ன யோசிக்கிறீர்கள்?" - விஷ்ணுதேவனின் மார்பிலுள்ள ரோமங்களினூடாக விரல்களை அளைந்தபடியே தேவப்ரியா கேட்டாள்.

"ஒன்றுமில்லை."

"பொய்! நான் திரும்பிப் போகவேண்டியதைப் பற்றி யோசிக்கிறீர்கள், இல்லையா?"

"ஆமாம்! எப்படி இவ்வளவு துல்லியமாகச் சொல்கிறாய்?"

"இதைத் தவிர வேறு எதைப் பற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது? நீங்கள் கவலைப்படுமளவிற்கு வேறு எதுவும் கிடையாதே!"

"உண்மைதான் தேவப்ரியா! என் யோசனை முழுவதிலும் நீதான் நிறைந்திருக்கிறாய்."

"நாம் யோசித்து என்ன செய்வது? நடக்க வேண்டியது நடந்தே தீரும்!"

"நீ போய்விட்டால் அதன் பிறகு நான் வாழ முடியுமென்று நீ நினைக்கிறாயா, தேவப்ரியா?"

"நாம் இதுவரையில் வாழ்வதே உலகத்தில் எப்பொழுதோ ஒருமுறை மட்டும் நடக்கும் ஒரு சம்பவம் தான்!"

"தேவப்ரியா, நீ போய்விட்ட பிறகு நான் நினைத்துக்கொள்ள உன் நினைவாக நீ எனக்கு என்ன தரப் போகிறாய்?"

"என்ன வேண்டும்?"

"இந்தக் குடும்பத்தில் சந்ததி ஏற்பட உன்னைப் போன்று ஒரு அழகான பெண் வேண்டும். அதாவது உனக்கும் எனக்கும் பிறந்த ஒரு மகள்!"

"கடவுளே, என்ன வார்த்தை பேசுகிறீர்கள்! இனி வெறும் இருபத்தெட்டு நாள்கள்தான் உள்ளன. அதைப் புரிந்து கொண்டு தான் கேட்கிறீர்களா?"

"உனக்குத் தெரியவில்லை என்றால் சொல்கிறேன், கேள். கேரளத்தின் வெகு புராதனமான ஓர் இல்லத்திற்கு உன்னைப் போன்ற அழகான மோகினி ஒருத்தியை ஒரு நம்பூதிரி அழைத்து வந்தார் - வடக்குநாதன் கோவிலிலிருந்து! பிறகு ஒரு திருமேனி அவளை அழைத்துக் கொண்டுபோய் அவளுடன் குடும்பம் நடத்தியிருக்கிறார். எத்தனையோ வருடங்கள் கழித்து அவள் விடைபெறுவதற்கு முன் அவருக்கு ஒரு குழந்தையைப் பெற்றுக் கொடுத்து விட்டுச் சென்றாள். அந்தக் குழந்தை இன்னும் அந்த வீட்டில் இருப்பதாகத்தான் ஐதிகம். அந்த வீட்டில் இன்னும் அவளுக்காகப் பூஜைகள் நடைபெறுகின்றனவாம்."

"அந்தச் சம்பவம் நிகழ்ந்த சூழ்நிலையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக எந்த வேலையுமற்ற ஒரு மோகினி அது. ஆனால், நான் அப்படியல்ல: தேவியின் காவல்காரிகளில் ஒருத்தி. தேவி எங்கிருந்தாலும் நான் அவரிடம் சென்று சேர்ந்தே ஆக வேண்டும்."

"அப்படியானால் நீ போக வேண்டும் என்பதை உறுதி செய்து விட்டாய், இல்லையா தேவப்ரியா?"

"மேற்கொண்டு நாம் அதைப் பற்றிப் பேசாமல் இருப்போமே!"



என்றபடி அவள் அவனுடைய இதழ்களில் முத்திரை பதித்தாள்.

அவளது கைவிரல்கள் விஷ்ணுவின் உடம்பில் பரவின. அவனது சிந்தனையை தேவப்ரியா தன் வழிக்குத் திருப்பினாள். வெகு நேரத்திற்கு விஷ்ணு வேறு ஓர் உலகத்துள் மூழ்கிவிட்டிருந்தான். தளிர் போன்ற அவள் உடல், அவனது உடலின் ஒவ்வொரு சதைப் பகுதியையும் தழுவியது. அவளுடைய சதைப் பிடிப்பான இடுப்புப் பகுதியும், கணுக்கால்களும் அவனுடைய தமனிகளில் புதிய ரத்தம் பாய்ச்சின.

மூன்றாவது யாமம் முடிவதற்கு ஒன்றரை நாழிகை மீதமிருந்தபோது தேவப்ரியா திடுமென்று எழுந்தாள்.

"என்ன தேவப்ரியா, எங்கே போகிறாய்?" - படுக்கையிலிருந்து திடுக்கிட்டெழுந்த விஷ்ணு அவளிடம் கேட்டான்.

"கோயில் வரை போய்விட்டு வருகிறேன்!"

"என்ன திடீரென்று?"

"குறிப்பாக எதுவுமில்லை. ஏனோ என் மனதிற்குப் போய் வரவேண்டுமென்று தோன்றுகிறது."

"நானும் உன்னுடன் வரட்டுமா?"

"வேண்டாம். நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள். நான் போய் விட்டு உடனே திரும்பி வந்து விடுவேன்!"

உடனேயே அவள் அங்கிருந்து மறைந்தாள்.

கோயிலுக்கு முன்புறமிருந்த ஆலமரத்தின் மேல்பகுதியை அடைந்த அவள் கோயிலைப் பார்த்ததும் திடுக்கிட்டாள்.

கருவறை வாசலில் வலது புறம் இருந்த அவளது சிலையைக் காணவில்லை. அவளது வடிவத்தைச் செதுக்கியிருந்த கற்சிலை அது. அந்தச் சிலை இல்லாவிட்டால் அவள் வசிக்க இடமில்லை. கண்டபடி அலைந்து திரிய வேண்டியதுதான்!

அப்படிப்பட்ட சூழ்நிலையில் யாராவது ஒரு கொடிய மந்திரவாதியின் பார்வையில் பட்டால் பிறகு மீள வழியே இல்லை. ஒருவேளை அந்த மந்திரவாதியின் அடிமையாகவே காலத்தைக் கழிக்க நேரிடலாம். அல்லது ஒரு போதும் மீளவே முடியாதபடி ஏதாவது ஒரு எட்டி மரத்தில் ஆணியறையப்பட்டு நிரந்தரமான சிறைவாசத்திற்கு ஆட்பட நேரிடலாம்.

பார்வையை ஓட்ட முடிந்த இடத்திலெல்லாம் தன்னுடைய சிலை கிடக்கிறதா என்று பார்வையால் ஆராய்ந்தாள் தேவப்ரியா. ஆனால், அது எங்குமே தட்டுப்படவில்லை.

அவ்வளவு கனமான சிலையை ஒருவர் சாதாரணமாக வெகுதூரம் கொண்டு செல்வதென்பது முடியாத காரியம். எனவே கோயில் பகுதியையும் குளத்தையும் ஊடுருவிப் பார்த்தாள். பச்சையான பாசம் பிடித்துக் கிடக்கும் குளத்து நீர்ப் பரப்பைக் கவனித்தாள். அதையும் ஊடுருவி அவள் பார்வை குளத்து நீருள் புகுந்தது. அதோ, குளத்தின் ஆழத்தில் சேற்றுக்கு நடுவில் அமிழ்ந்திருந்தது அவளுடைய சிலை!

அதை வெளியே எடுப்பது என்பது தன்னுடைய சக்திக்கு மீறிய செயல் என்பது அவளுக்குப் புரிந்தது.

உடனே விஷ்ணுதேவனிடம் இதைக் கூறி சிலையை வெளியே எடுக்கச் சொல்ல வேண்டுமென்று நினைத்தவள், அங்கிருந்து புறப்பட யத்தனித்தாள். அப்போது யாரோ கோயிலை நோக்கி நடந்து வருவது தெரிந்தது.

வேறு யாருமில்லை... அது ஜயந்தன் தான் என்பது அவளுக்குப் புரிந்தது. இந்நிலையில், தான் இங்கிருப்பது ஜயந்தனுக்குத் தெரிந்தால் தலை தப்பாது என்பதைப் புரிந்து கொண்ட தேவப்ரியா வெகு கவனத்துடன், சத்தமெழுப்பாமல் ஆலமரத்தின் பின் புறம் நகர்ந்தாள்.

ஜயந்தன் தன் கைவசமிருந்த பஞ்ச லோகத்தினாலான தேவி விக்கிரகத்தைக் கருவறையின் வாசலில் வைத்தார். அருகிலேயே ஒரு விளக்கையும் ஏற்றி வைத்தார். பிறகு ராசிக் கட்டம் வரைந்தார்.

இதுவரை யாருமே செய்யாத வேலை அது!

ராசிக் கட்டத்தில் தேவ ஸ்தானத்தில் தேவியின் விக்கிரகத்தை வைத்த பிறகு, கருவறைக்குள் மாயா உருவிலிருக்கும் தேவியை விக்கிரகத்திற்குள் ஆவாஹம் செய்வதற்கான மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கினார்.

மந்திர உச்சாடனத்தின் இறுதியில், கருவறையின் வாசலில் தேவியின் பாதம் பதிவதை தேவப்ரியா பார்த்தாள்.

அவள் உடல் நடுங்கியது!



# 49

"என் பகவதியே... இது என்ன சோதனை! இந்த மனிதர் என்ன செய்கிறார்!" - தேவப்ரியா தன்னையும் மறந்து அலறிவிட்டாள்.

'துஷ்டனான ஜயந்தனின் பிடியில் தேவி அகப்படுவதா?' என்று பதறினாள்.

ஜயந்தன் தேவியை ஆவாஹம் செய்வதற்கான மந்திரத்தை உச்சரித்துக் கொண்டேயிருந்தார். இன்னும் அரை நாழிகை நேரம் அதே மந்திரத்தை உருவிட்டால் ஓமல்லூர் கோயில் பகவதி, ஜயந்தன் கொண்டு வந்திருந்த பஞ்ச உலோக விக்கிரகத்தில் ஆவேசித்துவிட வேண்டியதுதான்.

ஆவாஹம் முடிந்துவிட்டால் ஜயந்தன் அந்த விக்கிரகத்தை எடுத்துச் சென்று விடுவார். அதை அவருடைய வீட்டில் பிரதிஷ்டை செய்து பூஜை நடத்துவார். தன்னுடைய காரியசித்திக்காகத் தேவியை மகிழ்ச்சிப் படுத்தும் எல்லா வித்தைகளையும் மேற்கொள்வார்.

சில சந்தர்ப்பங்களில் தவசக்தியின் வலிமையால் ராக்ஷசர்கள் கூட மும்மூர்த்திகளை வரவழைத்து வரம் கேட்டிருக்கிறார்கள். அப்படிக் கேட்கும்போது வரம் கொடுக்காமல் இருக்கவும் முடியாது. கொடுத்தே தீர வேண்டிய நிலை பல முறை பல கடவுள்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

அதனால் ஜயந்தனின் விருப்பத்தை தேவியும் அங்கீகரிக்க நேரிடலாம். உடனடியாக ஏதாவது செய்தே தீரவேண்டும்!

சூரியமித்ரன் நம்பூதிரியின் முகம் சட்டென்று அவள் மனத்தில் தோன்றியது. இந்தச் சூழ்நிலையில் அவரால் மட்டுமே இதற்குப் பரிகாரம் செய்யமுடியும். வேறு யாரும் இதற்குப் பொருத்தமானவர் இல்லை. ஜயந்தனுடன் போராடச் சூரியமித்ரனே ஏற்றவர்.

தேவப்ரியா அடுத்த கணம் சூரியமனையை நோக்கிப் பறக்கத் தொடங்கினாள். மனையின் வெளிப்புற வாசலில் நின்றபடி உட்புறம் பார்த்தாள். வராந்தாவில் யாரோ ஒரு பெண்மணி உட்கார்ந்திருந்தாள்.

திருமேனி வராந்தாவை ஒட்டியுள்ள தென்புற அறையில், சிற்ப

வேலைப்பாடு நிறைந்த தேக்கு மரக் கட்டிலில் நல்ல தூக்கத்திலிருந்தார். வெளியே இருப்பவள் காவல்காரி என்பது விளங்கியது. யாரோ ஒரு மோகினி!

தேவப்ரியா வாசலைத் தாண்டி இறங்கினாள்.

அவளைக் கண்டவுடன் காவல்காரி எழுந்தாள். அவளது கையில் இருபுறமும் கூர்மையான நீண்ட வாள் ஒன்று பளபளத்தது.

"யார் நீ?" - குரல் அதிகாரத்துடன் ஒலித்தது.

"நான் திருமேனியின் சிஷ்யை. பெயர் தேவப்ரியா. உடனே அவரை எழுப்ப வேண்டும். இல்லாவிட்டால் ஆபத்து நேரும் என்று தோன்றுகிறது."

"எழுப்பினால் சபிப்பார்!"

"வேறு வழியில்லை. சபித்தாலும் விஷயத்தைத் தெரியப்படுத்தி விட வேண்டியது அவசியம்."

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் விஷயம் மிகவும் சிக்கலானதாகவும் முக்கியமானதாகவும் இருக்குமென்று காவல்காரிக்குத் தோன்றியது. அத்தோடு தனக்கு முன்னால் நின்றுகொண்டிருப்பதும் தன்னைப் போன்ற ஒரு மோகினிதானென்றும் அவளுக்குத் தெரிந்தது.

"சாபத்தை உன்னால் தாங்கிக்கொள்ள முடியுமென்றால் நீயே அவரை எழுப்பிக் கொள்." - காவல்காரி, தேவப்ரியாவிடம் கூறினாள்.

"நான் ஒமல்லூர் கோயில் பகவதியின் காவல்காரி. பெயர் தேவப்ரியா. அங்கே தேவியை ஜயந்தன் என்கிற மந்திரவாதி ஆவாஹம் செய்துகொண்டு போக முயல்கிறார்."

"இதே விஷயத்தைச் சொல்லி அவரை எழுப்பிக் கொள்."

தேவப்ரியா, திருமேனியை நெருங்குவதற்குள் அவராகவே எழுந்துவிட்டார். உட்கார்ந்து கொண்டே கேட்டார்:

"யார்? தேவப்ரியாவா? என்ன திடீரென்று இந்தப் பக்கம்? விஷ்ணு எதையாவது சொல்லியனுப்பினானா?"

"இல்லை திருமேனி. நான் இங்கு வந்திருப்பதே அவருக்குத் தெரியாது. கோயிலிலிருந்து தேவியைக் கொண்டுபோக ஜயந்தன் முயற்சி செய்கிறார். தேவியை ஆவாஹம் செய்வதற்கான மந்திரத்தை உச்சாடனம் செய்து கொண்டிருக்கிறார்."



"உண்மையாகவா? புரிகிறது. தேவி அங்கிருந்து அகன்று விட்டால் எல்லாமே சிக்கலாகிவிடும் இல்லையா? விஷ்ணு மிகவும் நல்லவன். சரி, நான் எப்படி உடனே கோயிலை அடைவது?"

"நீங்கள் விரும்பினால் என்னுடைய விரலைப் பிடித்துக் கொள்ளுங்கள். நான் உங்களைக் கொண்டு போய்ச் சேர்க்கிறேன்."

"ஓ... அதற்கென்ன? அதில் எந்தவிதத் தவறும் இல்லை. சரி, நான் வருகிறேன்." - திருமேனி எழுந்தார்.

பூணூலில் இணைத்துக்கட்டியிருந்த சிறிய சாவியினால் அங்கிருந்த அறை வாசல் பூட்டைத் திறந்து உள்ளே நுழைந்தார். உள்ளே நீல நிறத்தில் அணையாவிளக்கு எரிந்து கொண்டிருப்பதை தேவப்ரியா பார்த்தாள். அந்த அறையிலிருந்து எதையோ எடுத்துக் கொண்ட பிறகு அவர் வெளியே வந்தார். மீண்டும் கதவைப் பூட்டினார்.

"இங்கேயே காவலிரு. நான் போய்விட்டு வருகிறேன்." - காவல்காரியிடம் சொல்லிவிட்டுத் திருமேனி முற்றத்திற்கு வந்தார். தேவப்ரியா வலது கையை நீட்டினாள். சூரியமித்ரன் அவளது விரல்களைப் பிடித்துக்கொண்டார். அவள் அவருடன் ஆகாயத்தில் பறந்தாள்.

"உடனடியாக என்ன செய்யலாம் என்பதையே அவரது மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது."

பதினாறு நிமிடங்கள்! திருமேனியும் தேவப்ரியாவும் ஒமல்லூர் கோயிலின் முன்புறமிருந்த ஆலமரத்தின் உச்சியை அடைந்தனர்.

"அதோ உட்கார்ந்திருக்கிறார் ஜயந்தன்." - தேவப்ரியா சுட்டிக்காட்டினாள்.

தேவி கருவறையின் வாசலில் நின்று கொண்டிருப்பதையும் அவள் பார்த்தாள்.

சூரியமித்ரன் திருமேனி தன் மடியிலிருந்து, தான் கொண்டு வந்திருந்த பொருளை வெளியே எடுத்தார். அப்பொழுதான் தேவப்ரியா அந்தப் பொருளைப் பார்த்தாள்.

அதுவும் ஒரு தேவி விக்கிரகம். அதைக் கையில் வைத்தபடி

சூரியமித்ரன் நம்பூதிரி அங்கிருந்தபடியே மந்திரம் உச்சரிக்கத் தொடங்கினார். வலுவான மந்திரம்!

ஜயந்தன் சொல்லி முடித்த எண்ணிக்கையை சூரியமித்ரன் ஐந்து வினாடிகளுக்குள் சொல்லிமுடித்தார். மீண்டும் மந்திரத்தைத் தொடந்தார். ஜயந்தனது உச்சாடனத்தை எண்ணிக்கையில் முந்திக் கொண்டு சூரியமித்ரனின் உச்சாடனம் ஒலித்தது.

திடுமென்று ஜயந்தனுக்கு ஏதோ சந்தேகம் தோன்றியது. தாம் உச்சரிக்கும் மந்திரங்கள் எங்கேயோ மோதித் திரும்புகின்றனவே! அதே மந்திரங்களை வேறு யாரோ அதே சமயத்தில் உச்சரிக்கிறார்களா?

ஜயந்தன் அங்கு உட்கார்ந்தபடியே தன்னுடைய தாத்தா சூரியநாராயணன் நம்பூதிரியை அழைத்தார்.

ஜயந்தன் மந்திரம் சொல்வதற்கு நடுவே கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையைப் பயன்படுத்தி, பழைய வீட்டின் சமாதியில் உறங்கும் தாத்தாவிடம் விஷயத்தைத் தெரியப்படுத்தினார். மரணமற்றவரும், பயங்கர மந்திரவாதியுமான சூரியநாராயணன் அதைக் காதுகொடுத்துக்கேட்டார்.

“இங்கு நான் ஓமல்லூர் கோயிலின் பகவதியை என்னுடைய கையிலுள்ள பஞ்ச உலோகத்தினாலான விக்கிரகத்தில் ஆவாஹம் செய்து எடுக்க முயற்சிக்கிறேன். அதேசமயம் வேறொருவர் இதே மந்திரத்தை உச்சரித்துத் தேவியைக் கைப்பற்ற முயல்கிறார். இப்பொழுதைய நிலையை வைத்துக் கணக்கிட்டால் நான் தோல்வியடைய நேரும் என்றே தோன்றகிறது. எனவே, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் விரைந்து வந்து என்னைக் காப்பாற்றுங்கள்!”

நிலவறைக்குள் படுத்திருந்த சூரிய நாராயணன் எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டார்.

தன்னுடைய பரம்பரையில் வந்த எவரையும் இது வரையில் தோல்வி தீண்டியதே இல்லை. ஆனால், வம்சத்தின் கடைசிக் கொழுந்தான தன்னுடைய பேரனின் காலத்துடன் அந்தப் பெருமை அழியப் போகிறது என்று அவருக்குத் தோன்றியது.



ஜயந்தனுக்குக் குழந்தைகள் இல்லை. உண்ணிச் சிருதேவி அம்மாள் வந்ததையும், ஜயந்தன் அவருடன் தொடர்பு கொண் டதையும் சூரியநாரா யணன் அறிந்திருந்தார். இவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தால், விஸ்வமங்கலப் பரம்பரை தழைத்துவிடும் என்றெல்லாம் அவர் நினைத்திருந்தார். அதற்கு ஆசைப்பட்டிருந்தார்.

எனவே, ஜயந்தன் இதில் தோல்வியடையக் கூடாது! சூரியநாராயணன் பக்ஷிதுர்க்கா மந்திரம் சொல்லத் தொடங்கினார். அப்பொழுது சமாதிக்கு வெளியே சிறகடிக்கும் ஓசை கேட்டது.

பக்ஷிதுர்கா தன்னுடைய பிரம்மாண்டமான சிறகுகளை விரித்துக் காற்றைப் பிளந்தபடி, விரைவாகப் பறந்து நடு முற்றத்தில் வந்து நின்றது.

சூரியநாராயணன் நிலவறையிலிருந்து எழுந்து வெளியே வந்தார். ஒரு நிமிடம் கூட ஆகவில்லை. தன்னை எதிர் நோக்கி பக்ஷிதுர்கா காத்திருப்பதைக் கண்டார்.

“நான் உடனே ஓமல்லூர் பகவதி கோயிலை அடைய வேண்டும்!”

பக்ஷி துர்கா அவர் உட்காருவதற்குச் சௌகரியமாக இறக்கைகளை விரித்து இடம் தந்தது.

சூரியநாராயணன் அதன் மீது ஏறி உட்கார்ந்தார். உடனே அந்த மாயப்பறவை பறக்கத் தொடங்கியது. கண் மூடித் திறப்பதற்குள் அது ஓமல்லூர் கோயிலை அடைந்து விட்டது.

அந்தரத்தில் சிறகடி ஓசையையும், புயல் போன்ற காற்றின் வேகத்தால் ஆலமரம் ஒருமுறை அசைவதையும் உணர்ந்த தேவப்ரியாவும், சூரியமித்ரனும் மேற்புறம் பார்த்தனர்.

அங்கே -

“பக்ஷிதுர்காதான் அது!” - தேவப்ரியா மந்திரிப்பது போல் முணுமுணுத்தாள்.



50

‘ஓஹோ! அவரும் வந்துவிட்டாரா? தாத்தாவும் பேரனும் சேர்ந்து விளையாட வந்திருக்கிறார்களா?’ சூரியமித்ரன் நம்பூதிரிப் பாடு மனதிற்குள் சொல்லிக் கொண்டார்.

"சின்னவருக்கு உதவுவதற்காகப் பெரியவர் வந்திருக்கிறார். இல்லையா திருமேனி?"

"உண்மைதான் தேவப்ரியா! யார் வெற்றி பெறுவது என்பதைப் பார்த்துவிட வேண்டியதுதான்" - சொல்லிவிட்டுச் சூரியமித்ரன் மந்திர உச்சரிப்பில் கவனம் செலுத்தினார்.

பக்ஷிதுர்கா வாகனத்திலிருந்து இறங்கிய சூரியநாராயணன் முன்புறமாக நடந்து ஜயந்தனின் கையிலிருந்து தேவி விக்கிரகத்தை வாங்கிக் கொண்டார்.

உடனே சூரியமித்ரன் மந்திர உச்சரிப்பின் வேகத்தைத் துரிதப்படுத்தி, எண்ணிக்கையை அதிகரித்தார். அத்துடன் அவர் தன்னுடைய பூணூலிலிருந்து ஒரு தாயத்தை உடைத்து எடுத்து மேற்புறம் வீசியெறிந்தார்.

வீசிய வேகத்தில் அந்தரத்திற்குச் சென்ற தாயத்து, திறந்து கொண்டது. அதற்குள்ளிருந்து நூல் போன்ற ஒரு பாம்பு வெளிவந்து, நீளவாக்கில் வளர்ந்து கொண்டே இருந்தது. கண் மூடித் திறப்பதற்குள் அது நாகபாசமாக மாறியது. சட்டென்று அது தாழ்ந்து சூரியநாராயணனின் கையிலிருந்த பஞ்ச உலோக விக்கிரகத்தின் மீது பிணைந்து விழுந்து அதை மேற்புறமாக இழுத்தது. அவரது கையிலிருந்து விக்கிரகம் பிடி நழுவியது.

அதே விநாடியில் தேவி சூரியமித்ரனின் கையிலிருந்த விக்கிரகத்திற்கு ஆவேசித்தார்.

ஜயந்தனுக்கு இன்னும் விஷயம் புலப்படவில்லை. தங்களது பிடியிலிருந்து விக்கிரகம் நழுவியது மட்டுமே அவருக்குத் தெரிந்தது.

"என்ன தாத்தா இது?" - ஜயந்தன் பின்னால் திரும்பித் தாத்தாவிடம் பதற்றத்துடன் கேட்டார்.

"விக்கிரகம் எங்கே?" தாத்தா திரும்பிக் கேட்டார்.

ஜயந்தன் கைகளைப் பிசைந்தார்.

"யாரோ திருடி விட்டார்கள். நான் கண்டுபிடிக்கிறேன்" - சூரியநாராயணன் தியானித்துத் திரும்பியபோது தேவப்ரியாவும், சூரியமித்ரனும் ஆலமரத்தின் மேல் இருப்பதைக் கவனித்தார்.

"ஓகோ, அங்கிருந்துதான் உங்கள் வேடிக்கையா? நானும் கொஞ்சம் விளையாடுகிறேன் பாருங்கள்" - சொல்லியபடியே



சூரியநாராயணன் வலது கையை உயர்த்தினார். 'சத்ரு மாரண' மந்திரத்தை உச்சரித்த போது கையில் ஒரு கோடரி தோன்றியது. உடனே அதை அவர்கள் நின்று கொண்டிருக்கும் ஆலமரத்துக் கிளையைக் குறியாக வைத்து வீசியெறிந்தார்!

அதை எதிர்பார்த்திருந்த தேவப்ரியா சற்றும் தயங்காமல் அதைப் பிடித்துக் குளத்திற்குள் எறிந்தாள். பாசம் பிடித்துக் கிடந்த குளத்திற்குள் அது விழுந்தவுடன் நெருப்புக் கட்டை விழுந்தது போல் 'ஸ்ஸ்' என்னும் தீயின் சீறல் சத்தம் பெரியதாகக் கேட்டது. அதிலிருந்து புகையும் மேலெழும்பியது. சற்று நேரத்திற்கு அதிலிருந்து குமிழிகளும் கிளம்பிக் கொண்டிருந்தன.

தனக்கு எதிராக தன்னைப் போலவே வலுவுள்ள ஓர் எதிராளி இருக்கிறார் என்கிற உண்மை சூரியநாராயணனுக்குப் புலப்பட்டது. யாரென்று தெரிந்துகொள்ள முயன்றார்.

கடைசியில் புரிந்தது... அந்த மோகினி... அவளே தான்!

இப்பொழுதைய நிலைமையில், மோகினி ஹோம மந்திரம் சொல்லி அவளை அழிப்பது முடியாத விஷயம் என்று அவருக்குத் தோன்றியது. எனவே, வேறு ஏதாவது உக்கிர மூர்த்தியை அனுப்புவது தான் நல்லதென்று தீர்மானித்தார்.

அதையொட்டி காளராத்ரி என்கிற பிசாசைத் தியானம் செய்து முன்னால் வரவழைத்தார்.

அதிபயங்கரமான உருவத்துடன் தோற்றமளித்த அந்தப் பிசாசு, சூரியநாராயணனுக்கு முன்னால் வந்து நின்று வணங்கியது.

"என்ன செய்ய வேண்டும்?"

"அதோ அந்த ஆலமரக்கிளையில் இருக்கிற மோகினியை இல்லாமல் செய்துவிட்டு, அதன் பிறகு அவளுக்கு அருகில் நிற்கும் மந்திரவாதியையும் தீர்த்துவிடு. அது போதும்!" - திருமேனி கட்டளையிட்டார்.

காளராத்ரி என்கிற அந்தப் பிசாசு மேற்புறமாக உயர்ந்து ஆலமரச் சிகரத்தை நெருங்கியது. பிறகு அந்த மரத்தின் நடுப்பகுதியைப் பிடித்து ஒரு செடியை ஆட்டுவது போல் ஆட்டியது.

படர்த்து பந்தல் போல் பரவியிருந்த அந்தப் பிரம்மாண்ட ஆலமரத்தின் வேர்கள் மண்ணின் அடியிலிருந்து உடைந்து விடுபடும் சத்தம் கேட்டது. இந்தச் சத்தத்தைக் கேட்டதும் சூரியநாராயணனும்,

ஜயந்தனும் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆலமரத்தின் மேற்பகுதியில் மழை மேகம் கவிந்திருப்பதுபோல் பூதம் இடம் பிடித்திருந்தது. மறுபடியும் அது மரத்தை உலுக்கியது.

"இதன் நோக்கம் என்ன தெரியுமா?" சூரியமித்ரன் அருகே நின்றிருந்த தேவப்ரியாவிடம் கேட்டார்.

"இந்த ஆலமரத்தை வேருடன் பிடுங்கியெறிய நினைப்பது போல் தெரிகிறது" - தேவப்ரியா பதிலளித்தாள்.

"அதுதான் நோக்கமென்றால் அடிமரத்தைப் பிடித்து உலுக்குவது தானே நல்லது..."

"அது வேண்டுமென்று செய்வது தான். நாம் இங்கே இருப்பதால் நமக்குக் கீழே மரத்தின் அடிப்பகுதிக்கு வர அதற்குப் பயம்."

"சரி, இப்போது நாம் என்ன செய்யலாம்?" - நம்பூதிரி மிகவும் சாவகாசமாகவே கேட்டார்.

"முதலில் இதன் வலுவைப் பார்த்து விடலாம்."

ஆலமரம் அசைந்து கொண்டிருந்தது. அதன் வேர் மண்ணிலிருந்து விடுபட்டுக் கொண்டிருக்கும் சத்தம் தெளிவாகவே கேட்டது.

"திருமேனி, நான் உங்களை இங்கிருந்து அகற்றி நிறுத்துகிறேன் என் விரலைப் பிடித்துக் கொள்ளுங்கள்" - தேவப்ரியா கூறினாள்.

அவர் அவளது வலது கையைப் பிடித்துக் கொண்டார். தேவப்ரியா சூரியமித்ரன் நம்பூதிரியுடன் குருக்ஷேத்ர மனையின் முற்றத்தில் வந்து இறங்கினாள்.

விஷ்ணுவை அழைத்தாள். அவன் வெளியே வந்தான்.

"யாரென்று தெரிகிறதல்லவா? இவர் இங்கு இருக்கட்டும். நான் இதோ வந்து விடுகிறேன்!" தேவப்ரியா சட்டென்று பறந்தாள்.

சூரியமித்ரன் நடந்த சம்பவங்கள் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் விஷ்ணுவிடம் கூறினார். அதற்குப் பிறகு தன்னுடைய மேல் துண்டில் மறைத்து வைத்திருந்த தேவி விக்கிரகத்தை வெளியே எடுத்தார்.

"சீக்கிரம் கதவைத் திறங்கள்!" - நம்பூதிரி அவசரப்பட்டார். விஷ்ணுவிற்கு விஷயம் விளங்கிவிட்டது.

உடனே அறைக்கதவைத் திறந்தான்.

"தேவி இதில் இருக்கிறார். நான் இங்கு எடுத்து வர வேண்டியதாகி விட்டது. வேறு வழியில்லை.!" சொல்லியபடியே



தேவி விக்கிரகத்தை அறைக்குள் வைத்த பிறகு அவர் வெளியே வந்தார்.

'ஓமல்லூர் கோயிலின் பகவதி தன்னுடைய வீட்டிற்குள் தற்சமயம் இருக்கிறார்' என்கிற நினைவே அவனுக்கு மகிழ்ச்சியை அளித்தது. தன்னுடைய எல்லாச் செல்வங்களுக்கும் காரணமான தேவி இந்த எளியவனின் வீட்டிற்கு வருகை புரிந்திருக்கிறார்!

இதைவிட வேறு என்ன பேறு வேண்டும்? இப்படியொரு சம்பவத்தை அவன் கனவில்கூட எதிர்பார்த்ததில்லை. இனிமேல் தேவி நினைத்தால் என்னதான் நடக்காது?

"திருமேனி, நான் ஒரு சந்தேகம் கேட்கலாமா?" - விஷ்ணு திருமேனியிடம் கேட்டான்.

"என்ன வேண்டும் விஷ்ணு?"

"தேவியுடன் நீங்களும் சட்டென்று மறைந்து போனதை உணர்ந்தால், அவர்கள் அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ள மாட்டார்களா திருமேனி?"

"உண்மைதான்! அதைச் சமாளிக்க நாம் தயாராக வேண்டும். தற்சமயம் அவர்களால் எதுவும் செய்ய முடியாது. இந்த இடத்திற்கு அவர்களுடைய எத்தனை சக்தி வாய்ந்த மூர்த்திகளையும் அனுப்ப முடியாது. காரணம் உன்னுடைய வீடு இப்பொழுது ஒரு கோயில் மாதிரி. தேவி இங்கே இருப்பதால், தேவியின் சக்தி இந்த இடத்தைச் சூழ்ந்திருக்கிறது."

"அப்படியானால் ஆலமரத்தை அவர்கள் வீழ்த்த நினைத் தார்களே!" - விஷ்ணுவிற்குச் சந்தேகம் தோன்றியது.

"அங்கு தேவி என் கைவசமிருந்தார். நான் இருந்த இடமோ ஆலமரத்தின் மேற்பகுதி. அதை வேருடன் பிடுங்கத்தானே அவர்கள் முயன்றது! ஆனால், அஷ்ட மூலைகளிலும் காவலுள்ள இல்லத்திற்குள் அவர்கள் யாரும் நுழைய முடியாது. இங்கு மீறி வருவதானால் நாம் எதிர்க்கவும் முடியும்..." - திருமேனி விளக்கினார்.

பிறகு சூரியமித்ரன் நம்பூதிரி எழுந்து ஒரு தடவை குருக்ஷேத்ர மனையைச் சுற்றி வந்தார். வீட்டின் நிலையும் பாதுகாப்பும் அவருக்குத் திருப்தியளித்தன.

"இந்தப் பாதுகாப்பே தேவிக்குப் போதும். இவ்வளவையும் கடந்து, நான் நிற்க வைத்துள்ளவர்களைத் தாண்டி யாரும் உள்ளே வர முடியாது."

"தேவப்ரியாவை இன்னும் காணவில்லையே திருமேனி?" - விஷ்ணு தன் கவலையைத் தெரிவித்தான்.

அதே நேரம் தேவப்ரியா குளத்தின் அருகே இருந்தபடி ஆலமரத்தையே கவனித்துக் கொண்டிருந்தாள். ஆலமரம் அப்பொழுதும் ஆடிக் கொண்டிருந்தது.

குளத்திற்குள் பார்த்தாள்.

இருள் நிரம்பியிருந்த குளத்துநீரின் ஆழப்பரப்பில் தன்னுடைய உருவச் சிலை கிடப்பதைக் கண்டாள்.

தன்னுடைய கண்களுக்கு முன்பாகவே தன்னுடைய சிலை விழுந்து கிடப்பதைக் காண நேரிட்டதே என்கிற வருத்தம் அவளை அலைக்கழித்தது.



51

தேவப்ரியா தனது விக்கிரகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். கோயில் குளத்தின் அடியில் சேற்றில் புதைந்தபடி அது படுத்திருந்தது.

அவள் வலது கையை நீட்டினாள்.

அவளது கைகள் பெரியதாக வளர்ந்து நீண்டன. அந்தக் கைகள் நீருக்குள் அமிழ்ந்து, சிலையின் கீழ்ப்பாகத்தில் புகுந்து சிலையை மேற்புறம் உயர்த்தியது. சிலை படிப்படியாக மேலெழும்பி வந்தது. சிலையுடன் நனைந்த தந்தச் சிலையாக தேவப்ரியாவும் உயர்ந்தாள். நீர்ப் பரப்பைத் தாண்டியதும் அவளது உருவம் பெரியதாக வளர்ந்தது. அந்தச் சிலையை இடது கையில் பிடித்தபடி தேவப்ரியா தனது கால்களைக் குளக்கரையில் பதித்தாள்.

உயர்ந்து நிற்கும் ஆலமரத்தை விட உயர்ந்து வளர்ந்த தேவப்ரியா மரத்தைத் திரும்பிப் பார்த்தாள். அப்பொழுதும் அந்த ஆலமரத்தை வேருடன் பிடுங்கும் முயற்சியில் காளராத்ரி பிசாசு ஈடுபட்டிருந்தது. தேவப்ரியாவின் வலது கை நீண்டு அந்தப் பிசாசின் தலைமுடியைக் கொத்தாகப் பிடித்து மேற்புறமாக உயர்த்தியது.

காளராத்ரியை இரண்டு மூன்று தடவை முடியைப் பிடித்தபடியே அந்தரத்தில் ஆட்டிச் சுழல விட்டபிறகு, தூரத்தில் வீசியெறிந்தாள்.



ஆகாயத்திற்குள் போய்ச் செருகிக் கொள்வது போல் விசையாக
மேற்புறம் பாய்ந்த காளராத்ரி சட்டென்று கோயிலின் மேற்கூரை மீது
வந்து பொத்தென்று விழுந்தது. காளராத்ரி மாயாரூபினி வகையைச்
சேர்ந்ததாக இருப்பினும் காலங்காலமாக மந்திரங்கள் ஒலித்துப் புனித
மேறியிருந்த கோயில் பகுதியின் புண்ணிய சக்தி அந்த உடம்பைக்
கற்பூரம் போல் எரித்துத் தகித்தது. சாம்பல் கூட மீதமில்லாமல்
காளராத்ரி எரிந்து காற்றில் கரைந்தது.

சூரியநாராயணன் நம்பூதிரியும், ஜயந்தனும் இந்தக் காட்சியைப்
பார்த்துக் கொண்டிருந்தனர். இருவரது உடம்பிலும் முதன் முறையாக
நடுக்கம் தோன்றியது. வேறு என்ன செய்யலாம் என்பதைக்கூட
யோசிக்கச் சக்தியற்றவர்களாகக் கல்லாய்ச் சமைந்து நின்றார்கள்.
வியப்பு அவர்கள் இருவரையும் வாயடைக்கச் செய்திருந்தது.

தேவப்ரியா தன்னுடைய சிலையைப் பழைய இடத்திலேயே
வைத்தாள். அதே சமயம் சூரியமித்ரன் நம்பூதிரியும், விஷ்ணுவும்
அங்கு வந்து சேர்ந்தனர்.

"என்ன ஜயந்தா, இனியும் ஏதாவது செய்து நிற்பதற்கு மிச்சம்
இருக்கிறதா?" - சூரியமித்ரன் கேட்டார்.

ஜயந்தன் தன்னுடைய வலது கையை உயர்த்த முயன்றபோது
சற்றும் தாமதிக்காமல் சூரியமித்ரன் நம்பூதிரி தன்னுடைய தலையி
லிருந்து ஒரு முடியை உருவி எடுத்து நாகபாச மந்திரம் ஜபித்து
ஜயந்தன் மேல் எறிந்தார்.

அது ஒரு பாம்பு வடிவம் தாங்கி ஜயந்தனை நெருங்கியது.
ஜயந்தன் என்ன ஏதென்று உணர்ந்து பதில் நடவடிக்கை
எடுப்பதற்குள்ளாகவே, அந்தப் பாம்பு ஜயந்தனின் கைகளில்
முறுக்கியபடி சுற்றிக் கொண்டது. அதன் பிடி விரைவிலேயே
ஜயந்தனின் உடலை முழுவதுமாக ஆக்கிரமித்தது.

ஜயந்தன் மீதிருந்து கண்களை அகற்றாமல் பார்த்துக்
கொண்டிருந்த சூரியநாராயணன் உடனே தன்னுடைய முடியிலிருந்து
ஒன்றை உருவி வாசுகி மந்திரம் ஜபித்து சூரியமித்ரன் நம்பூதிரி மீது
எறிந்தார். அது ஒரு பெரும் பாம்பாக வடிவமெடுத்தது.

உடனே சூரியமித்ரன் கருட மந்திரம் ஜபித்தார். மந்திரம்
சொல்லிக் கொண்டிருந்தபோதே அவரது உடல் மேற்புறமாக
உயர்ந்தது. தேவப்ரியாவும், விஷ்ணுவும் பார்த்துக் கொண்டே

இருக்கையில் சூரியமித்ரன் சட்டென்று அந்தரத்தில் மறைந்தார். இருவரது வியப்பும் எல்லை மீறியது.

சற்று நேரத்திற்குப் பிறகு ஆகாயத்தில் பெரிய சிறகடி ஓசை கேட்டது. மிகப் பெரிய கருடன். அதன் கால் விரலில் சூரியமித்ரன் உட்கார்ந்திருந்தார். பறந்தபடியே வந்த கருடன் வாககியைத் தனது கழுத்தில் போட்டுக்கொண்டு தென்புறமாகப் பறந்து போனது!வு

எல்லோரும் அந்தத் திசையையே பார்த்துக் கொண்டிருந்தனர். நேரம் நகர்ந்தது.

சூரியநாராயணனும் ஜயந்தனும் இனி என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது, மீண்டும் சூரியமித்ரன் அங்கு தோன்றினார்.

"இங்கே பார் சூரியநாராயணன், நீ இதுவரை அழியவில்லை. நூறு வருடங்களுக்கு மேலான பிறகும் இப்பொழுதும் உன்னுடைய மோசமான மந்திரங்களின் துணையால் உடலை அழிய விடாமல் காப்பாற்றிக் கொண்டிருக்கிறாய். இன்றுதான் உன் வாழ்வின் கடைசி நாள். உன்னுடைய முடிவை நான் தீர்மானித்து விட்டேன். தயாராக இரு!"என்றபடி சூரியமித்ரன் ஆக்னேய மந்திரம் ஜபித்தார்.

ஆகாயத்திலிருந்து தீ ஜுவாலைகள் இறங்கி வந்தன. தரைப் பகுதியை நெருங்க நெருங்க அவை மெல்லிய கம்பிகள் போல் பிரிந்து சூரியநாராயணனைச் சுற்றிச் சூழ்ந்து தரையைத் தொட்டன. கண் மூடித் திறப்பதற்குள் அந்த உடல் வெந்து சாம்பலாகிப் போனது.

"இனி நீ ஒருவன் மீதமிருக்கிறாய், இல்லையா?" சூரியமித்ரன் ஜயந்தனைப் பார்த்தபடி பேசினார்.

ஜயந்தன் திடுக்கிட்டார்!

தாத்தா எரிந்து சாம்பலானதும் ஜயந்தனின் நம்பிக்கைகள் தகர்ந்து போயின. தான் இனிமேல் எது செய்தாலும் அது பலிக்காது என்பதும் புரிந்தது.

ஜயந்தன் கை கூப்பியபடி சூரியமித்ரனின் முன்னால் வந்து நின்றார். "இனிமேல் என் வாழ்க்கையில் எந்தக் கெடுதலையும் செய்ய மாட்டேன்! இது சத்தியம்!"

"இங்கே பார், இவள் தேவியின் காவல்காரி தேவப்ரியா. தேவியின் சம்மதத்துடன் தான் இவள் விஷ்ணுவிற்கு மனைவி யானாள். அவனை அழிப்பதற்காக அல்ல. நல்வழிப்படுத்துவதற்காக! இவள் இதுவரையில் யாருக்கும் எந்தத் தீங்கும் செய்ததில்லை. பிறகு



நீ ஏன் இவளை அழிப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறாய்?" - சூரியமித்ரன் கேட்டார்.

"உண்மையாகவே இப்பொழுது நீங்கள் குறிப்பிட்ட விவரம் எதுவுமே எனக்குத் தெரியாது. அரை குறை விஷயங்களை அறிந்து கொண்டு செயல்பட்டதுதான் என்னுடைய தவறு. இனிமேல் சத்தியமாக நான் இதைப்பற்றி நினைத்துக்கூடப் பார்க்க மாட்டேன்." - ஜயந்தன் மறுபடியும் சத்தியம் செய்தார்.

"அப்படியானால் நீ போகலாம்" - சூரியமித்ரன் அனுமதியளித்தார். ஜயந்தன் அங்கிருந்து புறப்பட்டார்.

"இன்னும் ஒரு முக்கியமான வேலை உள்ளது" - சூரியமித்ரன் கூறினார்.

தேவப்ரியாவிற்கும் விஷ்ணுவிற்கும் எதுவும் புரியவில்லை.

"முதலில் தேவியைக் கோயிலில் பிரதிஷ்டை செய்துவிட்டால் நல்லதல்லவா திருமேனி?" - தேவப்ரியா கேட்டாள்.

"அதையேதான் நானும் சொல்ல வந்தேன். நானே அதையும் செய்து விடுகிறேன்."

சூரியமித்ரன் உடனே குருக்ஷேத்ர மனையை நோக்கி நடந்தார். தேவி விக்கிரகத்தைத் தனது கையில் ஏந்தி எடுத்து வந்தார்.

மந்திரம் உச்சரித்து தேவியைப் பிரதிஷ்டை செய்தார்.

"இன்னும் ஒரு வேண்டுகோள் உண்டு" - பேசியபடியே தேவப்ரியா விஷ்ணுதேவனையும், சூரியமித்ரனையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"என்ன வேண்டுகோள்?" - சூரியமித்ரன் கேட்டார்.

"மூன்றாவது யாமம் முடிவடைய இன்னும் சில விநாடிகள் மட்டுமே உள்ளன. எனக்கு அனுமதிக்கப்பட்டிருந்த நேரம் அத்துடன் முடிவடைகிறது. நானும் உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொள்கிறேன்." - நீர் நிறைந்த கண்களுடன் மோகினி விஷ்ணுவைப் பார்த்தாள்.

விஷ்ணுவின் முகம் துக்கத்தால் வாடி விம்மியது. இப்படித் திடுதிப்பென்று தேவப்ரியா விடைபெறுவாளென்று அவன் ஒருபோதும் எண்ணியதில்லை!

தனக்கு, தான் எதிர்பார்க்காத அத்தனை செல்வங்களையும் தந்த, தன்னுடன் ஒரு மனித வாழ்க்கையையும் அனுபவித்த அவள், இறுதி

வரையில் தன்னுடனே இருப்பாள் என்றுதான் அவன் நினைத்திருந்தான். விஷ்ணுவிற்குத் துக்கத்தில் தொண்டை அடைத்தது.

தேவப்ரியா விஷ்ணுவை நெருங்கினாள். அவர்கள் எதையாவது பேசிக்கொள்ளட்டும் என்று கருதிய சூரியமித்ரன் ஆலமரத்தடியை நோக்கி நடந்தார்.

விஷ்ணுவை நெருங்கிய தேவப்ரியா, அவனுடைய மார்பில் சாய்ந்தாள். குரல் இடறியபடி பேசினாள்: "என்னை ஒரு தடவை முத்தமிடுங்கள். இனிமேல் நாம் இந்த ஜென்மத்தில் இந்த உருவங்களில் ஒருபோதும் சந்திக்க முடியாது!" - அவளது விழிகளில் நீர் சுரந்து கொண்டே இருந்தது.

நிலவு அவளது கண்களில் பிரதிபலித்தது. அவனும் அவளது கண்களில் தெரிந்தான்.

அவன், அவளுடைய இதழ்களில் தன்னுடைய முரட்டு இதழ்களைப் பதித்தான். அவளது உடையற்ற தோளிலும், முதுகிலும் அவனது கைகள் நிம்மதியின்றி அலைந்தன. கடலில் விழுந்தவன் தப்பிக்க ஒரு சிறு துரும்பாவது கிடைக்காதா என்று தேடுவது போல் அவனது கைகள் எதையோ தேடிப் பிடிக்க முயன்றன.

நீண்ட நேரம் இதழ்களைப் பதித்தபடியே இருந்த அந்த ஒரு முத்தத்தில் அவர்கள் இருவருமே வேறுபாடு இல்லாமல் ஒன்றிவிட்டிருந்தார்கள்.

அவள் அவனிடமிருந்து பிரிந்ததை உணராமலே விஷ்ணு பிரமை பிடித்தவன் போல் நின்றிருந்தான். அவள் மெதுவாக நடக்கத் தொடங்கினாள். கடைசி முறையாக அவனைப் பார்த்தபடி அந்தச் சிலையருகே நின்றாள்.

விஷ்ணு இமைக்காமல் பார்த்துக்கொண்டே இருந்தான். தேவப்ரியா ஒரு கணத்தில் கற்சிலையுடன் கற்சிலையாய்க் கலந்து காட்சியிலிருந்து மறைந்தே போனாள்!

அந்தத் துவாரபாலிகை சிலையின் கருங்கல் கண்களில் ஈரம் பளபளப்பது போல் தோன்றியது.

விஷ்ணு அங்கேயே நின்றிருந்தான் - அவனால் அசைய முடியவில்லை!

30233

முற்றும்

4666159